# பொருளியல்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—644

# பொருளியல்

(புகுமுக வகுப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

**எஸ். சபாநாயகம்,** எம்.ஏ.,

துணைப் பேராசிரியர்,

பொருளாதாரத்துறை,

மாநிலக் கல்லூரி, சென்னை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition--September, 1975

T.N.T.B.S. (C.P.) No. 644

© Government of Tamilnadu

# ECONOMICS

S. SABHANAYAGAM

**Price Rs. 7-25**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally sponsored scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

*Printed by*
**Nathan & Company,**
**Main Road, Velacheri,**
**Madras—600042**

# அணிந்துரை

## நிரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

நமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன **'பொருளியல்'** என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **644**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **679** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ், எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்

பக்கம்

1. பொருளாதார இயலின் இலக்கணம் ... 1

முன்னுரை — பொருளாதார இயலின் வளர்ச்சி — பொருளியலின் இலக்கணம் — (அ) 'செல்வ' இலக்கணம் — (ஆ) 'பொருள் சார் நல' இலக்கணம்—(இ) 'கிடைப்பருமை' இலக்கணம்.

2. பொருளியலும் பிற சமூக இயல்களும் ... 16

சமூக அறிவியல் - ஒரு விளக்கம் —(அ) பொருளியலும் சமூக வாழ்வியலும் — (ஆ) பொருளியலும் வரலாறும் — (இ) பொருளியலும் அரசியலும் — (ஈ) பொருளியலும் அறநெறியியலும் — (உ) பொருளியலும் சட்டவியலும் — (ஊ) பொருளியலும் உளவியலும் — (எ) பொருளியலும் புவியியலும் — (ஏ) பொருளியலும் புள்ளியியலும் — (ஐ) பொருளியலும் வாணிகவியலும் — (ஒ) பொருளியலும் கணிதவியலும்.

3. பொருளியலின் முக்கியப் பிரிவுகள் ... 25

4. பொருளியலைப் பயில்வதன் பயன்கள் ... 30

5. பொருளியல் விதிகள் ... 34

பொருளியல் விதிகளின் தன்மைகள் — பொருளியல் விதிகளும் மற்ற விதிகளும் — பொருளியல் விதிகளின் முக்கியத்துவம்.

6. பொருளாதார வளர்ச்சி நிலைகள் ... 41

7. பொருளியல் கலைச்சொற்கள் ... 49

பக்கம்

8. நுகர்வு ... 63

I. விளக்கமும் முக்கியத்துவமும் — II. விருப் பங்கள்—III. வாழ்க்கைத் தரம்—IV. எங்கெலின் நுகர்வு விதி.

9. நுகர்வு விதிகள் ... 81

I. பயன்பாடு — II. குறைந்துசெல் பயன் பாட்டு விதி—III. சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி — IV. நுகர்வோர் உபரிக் கோட்பாடு.

10. தேவை ... 104

I. தேவையின் வகைகள்—II. தேவை விதி— III. தேவைப் பட்டியல்—IV. தேவை வளைகோடு — V. விதிவிலக்குத் தேவை வளைகோடுகள் — VI. தேவை மாற்றங்கள்.

11. தேவை நெகிழ்ச்சி ... 118

12. உற்பத்தி ... 134

13. நிலமும் விளைவு விதிகளும் ... 140

I. நிலத்தின் சிறப்பியல்புகள் — II. விளைவு விதிகள் — III. விளைவு விதிகளின் பொதுவான விளக்கம் — IV. விளைவு விதிகளும் செலவு விதிகளும்.

14. உழைப்பு ... 154

I. விளக்கம் — II. மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாடு — III. உத்தம அளவு மக்கள் தொகைக் கோட்பாடு—IV. இந்தியாவின் மக்கள் தொகைப் பிரச்சினை.

15. மூலதனம் ... 176

I. விளக்கம்—II. மூலதனத்தின் வகைகள் — III. மூலதனத்தின் முக்கியத்துவமும் பணிகளும்— IV. மூலதனத் திரட்சி—V. இந்தியாவில் மூல தனத் திரட்சி.

பக்கம்

16. அமைப்பு ... 185

I. தொழில் அமைப்பும் தொழில் முயல்வோரும்—II. வாணிக (தொழில்) அமைப்புகளின் வகைகள்—(i) தனி உரிமைத் தொழில் முறை—(ii) கூட்டாளித் தொழில் முறை — (iii) கூட்டுப் பங்கு நிறுவனம்— (iv) கூட்டுறவு அமைப்பு — (v) அரசு நிறுவனம்.

17. தொழில் பிரச்சினைகள் ... 205

I. வேலைப் பகுப்பு—II. உற்பத்தியில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது — III. தொழில்களின் இடச்செறிவு — IV. பேரளவு உற்பத்தியும் சிற்றளவு உற்பத்தியும்—V. கூட்டுறவுப் பண்ணை.

18. மதிப்பு ... 231

I. மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகள் — II. நிறைவுப் போட்டி — III. முற்றுரிமை — IV. நிறைகுறைப் போட்டி—V. கூட்டுத்தேவை — VI. கூட்டு அளிப்பு—VII. கலவைத் தேவை — VIII. கலவை அளிப்பு.

19. பணம் ... 262

I. பண்டமாற்று முறை—II. பணத்தின் பணிகள்—III. பணத்தின் வகைகள்—IV. நல்ல பணத்தின் இயல்புகள்.

20. பணத் திட்டங்கள் ... 274

I. ஓர் உலோக முறை — II. இரு உலோக முறை—III. காகிதப் பணமுறை — IV. கிரஷாம் விதி.

21. பொன் திட்டம் ... 282

22. பணத்தின் மதிப்பு ... 291

I. விளக்கம் — II. குறியீட்டு எண்கள் — III. பண அளவுக் கோட்பாடு—IV. பண வீக்கம் V. பணவாட்டம் — VI. விலைமாற்றத்தின் விளைவுகள்.

பக்கம்

23. கடனும் கடன் கருவிகளும் ... 308

24. வங்கியியல் ... 313

I. வங்கிகளின் வகைகள்—II. வாணிக வங்கியின் பணிகள்—III. மத்திய வங்கி—IV. இந்திய ரிசர்வ் வங்கி—V. பண வெளியீட்டு முறைகள்.

25. பன்னூட்டு வாணிகம் ... 327

26. ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு ... 337

27. வாணிகக் கொள்கை ... 344

I. தடையிலா வாணிகமும் தொழில் பாதுகாப்பும்—II. வெளிநாட்டுச் செலுத்துநிலை—III. இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம்.

28. பொது நிதி ... 363

I. பொது வருவாய்—II. பொதுச் செலவு—III. இந்திய அரசின் பொது நிதி—IV. இந்தியாவிலுள்ள மாநில அரசுகளின் பொது நிதி.

29. வரி விதிப்பு ... 373

I. வரி விதிகள்—II. நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும்—III. வீதாச்சார வரிகளும் வளர்வீத வரிகளும்.

30. தேசிய வருமானம் ... 387

31. பகிர்வு ... 400

32. வாரம் ... 406

I. விளக்கம்—II. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு—III. வாரத்தின் புதுமைக் கோட்பாடு—IV. போலி வாரம்.

33. கூலிகள் ... 416

I. விளக்கம்—II. கூலியின் வகைகள்—III. உண்மைக் கூலியை நிர்ணயிக்கும் காரணிகள் IV. கூலிக் கோட்பாடுகள்—V. கூலி வேறுபாடு

பக்கம்

களுக்கான காரணங்கள்—VI. பெண்டிர் உழைப்புக்குக் குறைந்த கூலி.

**34. வட்டி** ... 433

I. விளக்கம்—II. மொத்த வட்டியும் நிகர வட்டியும்—III. வட்டிக் கோட்பாடுகள்—IV. வட்டி வீதங்களில் வேறுபாடு.

**35. இலாபம்** ... 452

I. விளக்கம்—II. மொத்த இலாபமும் நிகர இலாபமும்—III. இலாபக் கோட்பாடுகள்.

**36. பொருளாதார அமைப்பு முறைகள்** ... 462

I. விளக்கம்—II. முதலாளித்துவம்—III. சமதர்மம்—IV. கலப்புப் பொருளாதாரம்—V. பொதுவுடைமை—VI. நலம் காக்கும் அரசு.

**37. பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல்** ... 476

I. விளக்கம்—II. திட்டமிடுதலின் நோக்கங்கள்—III. திட்டமிடுதலின் இன்றியமையாமை—IV. பின்தங்கிய நாடுகளில் திட்டமிடுதலில் உள்ள சிக்கல்கள்—V. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள்—VI. நிறைவுரை.

**கலைச்சொற்கள்** ... 494

# 1. பொருளாதார இயலின் இலக்கணம்

**முன்னுரை**

மனித விருப்பங்களைப் பற்றியும், அவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது பற்றியும் சமூக அறிவியலான (Social Science) பொருளாதாரம் விளக்குகிறது. அது மக்கள் எவ்வாறு வருவாயை ஈட்டிச் செலவுசெய்கிறார்கள் என்பது பற்றிக் குறிப்பிடுகிறது; வாழ்க்கையை நடத்த அவர்கள் எவ்வித முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது என்பது பற்றியும் கூறுகிறது. தேவைகளுடனே மனிதன் பிறக்கிறான்; வாழ்கிறான். உணவு, உடை, உறையுள் ஆகியவை வாழ்விற்கு இன்றியமையாத தேவைகள். ஆனால், இம் மூன்று தேவைகளோடு மனித விருப்பங்கள் முடிவடைந்துவிடுவதில்லை.

வாழ்க்கைக்கான அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்துகொண்ட மனிதனுக்கு மேலும் பல புதிய விருப்பங்கள் தோன்றுகின்றன. அவன் வசதிப்பொருள்களையும். ஆடம்பரப் பொருள்களையும் நாடுகின்றான். மனித விருப்பங்கள் எண்ணில் அடங்காதவை. நாகரிகம் வளரும்போது விருப்பங்களும் பெருகுகின்றன. ஆசைகளும் விருப்பங்களும் பலவிதம்; அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். 'மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை' ஆகியவற்றை உலகில் வென்றவர் எவருமிலர் என்பது பன்னெடுங்காலமாக நிலவி வருகின்ற ஓர் உண்மை.

பண்டங்களும், பணிகளும் விருப்பங்களைப் பூர்த்திசெய்கின்றன. பசியைத் தீர்க்க உணவு தேவை; அறிவுப் பசிக்கு நூல்கள் தேவை; நோயுற்றோர் பிணியைத் துடைக்க மருத்துவர் பணி தேவை. பொழுதுபோக்கிற்கு விளையாட்டுகளும், திரைப்படங்களும், வானொலியும், தொலைநோக்கியும் (television), இசையும்,

நாட்டிய - நாடகங்களும் தேவைகளாகின்றன. போக்குவரத்து, செய்தித்தொடர்புகளின் தேவை வெவ்வேறு இடங்களில் இருப்போரிடையே தொடர்பை ஏற்படுத்துவதிலும், வாணிகத்தை மேற்கொள்வதிலும் உணரப்படுகிறது.


அரிசி, கோதுமை, நூல்கள், உடைகள், சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், கார்கள், பஸ்கள், விமானங்கள் போன்ற பொருள்களைப்போன்று ஆசிரியர்கள், பொறியாளர்கள், வழக்குரைஞர்கள், மருத்துவர்கள் ஆகியோருடைய பணிகளும் மனித விருப்பங்களைப் பூர்த்திசெய்யக்கூடியவை. எண்ணற்ற விருப்பங்கள் இருப்பதால், அவை எல்லாவற்றையும் நிறைவுசெய்ய முடிவதில்லை. கதையில் வரும் அலாவுதீனின் அற்புதவிளக்கு நம்மிடம் இருந்தால்தான், நம்முடைய எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்துகொள்ளமுடியும்.

உலகில் நாம் பெறக்கூடிய பண்டங்களும், பணிகளும் 'கிடைப்பருமை' (scarcity) நிலையைக் கொண்டுள்ளன. உற்பத்தி செய்யப்படுகின்ற இவை பற்றாக்குறையாக உள்ளன. பண்டங்களும், பணிகளும் மனித நடவடிக்கைகளால் உற்பத்தியாகின்றன. நிலத்தைச் சாகுபடி செய்வதன்மூலம் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. உடைக்கான பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, நூலாக்கப்பட்டுத் துணியாக நெய்யப்படுகிறது. மனித விருப்பங்களை நிறைவுசெய்யும் பண்டங்களையும், பணிகளையும் 'செல்வம்' (wealth) எனலாம்.

செல்வத்தின் ஆக்கத்திற்கு நிலம், உழைப்பு (labour), மூலதனம் (capital), தொழிலமைப்பு (organisation) ஆகிய காரணிகள் உதவுகின்றன. இவற்றை, உற்பத்தி செய்ய உதவும் ஆக்கக் காரணிகள் என்று கூறலாம். நிலம், கச்சாப் பொருள்களை அளிக்கிறது; அவற்றை உழைப்பு விளைமுடிந்த பொருள்களாக (finished products) மாற்றுகிறது. மூலதனப் பொருள்களும் (capital goods), தொழிலமைப்பும்கூட உற்பத்தி இடைநிலைகளில் பங்கேற்கின்றன. பருத்தியைத் துணியாக்க இயந்திரச் சாதனங்களும், பிற கருவிகளும் தேவை. இவையே மூலதனப் பொருள்களாகும். தொழிலமைப்பு என்ற காரணியின்மூலம் மற்ற மூன்று உற்பத்திக் காரணிகளும் தக்க விகிதத்தில் இணைக்கப்பெற்றுப் பொருள்கள் ஆக்கப்படுகின்றன. எனவே, செல்வத்தை உற்பத்தி செய்வதில் இந் நான்கு ஆக்கக் காரணிகளும் கூட்டாகச் செயல்படுகின்றன.

பொருள்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியளவு பற்றாக் குறை நிலையில் உள்ளமைக்கு உற்பத்திச் சாதனங்களின் கிடைப் பருமையும் முக்கியக் காரணமாகும். நம் வருமானம் ஒரு வரை யறைக்கு உட்பட்டிருப்பதால் நம்மால் எல்லா விருப்பங்களையும் நிறைவு செய்துகொள்ள முடிவதில்லை. மிக அவசரமானதும், அவசியமானதுமான விருப்பங்களை மட்டுமே பலராலும் பூர்த்தி செய்துகொள்ள முடிகிறது.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு மனித விருப்பங்களே ஆதாரமாகின்றன. பணத்தை ஈட்டவே நாம் எல்லோரும் பணியாற்றுகிறோம்; பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம். விருப்பங்களைப் பூர்த்திசெய்யப் பணம் உதவு கிறது. விஞ்ஞான வளர்ச்சி விருப்பங்களை நிறைவு செய்வதற் கான பல வழிவகைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. எனினும், நாகரிக மேம்பாட்டின் காரணமாக நம் தேவைகளும் பெருகி யுள்ளன. தேவைகளோடு ஒப்பிடும்போது ஆக்கக் காரணிகளின் உற்பத்தித் திறன் குறைவாகவும், ஓர் எல்லைக்குட்பட்டதாகவும் இருக்கிறது.




படம் 1.

எல்லாப் பொருள்களும் கிடைப்பருமை நிலையில் உள்ளன என்று கூறவியலாது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீர், காற்று, சூரிய ஒளி ஆகியவை இலவசப்பொருள்களாக (free goods) ஏராளமான அளவில் கிடைக்கின்றன. பொருளா தார இயலில் இவ்வகை இலவசப் பொருள்கள் முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால், நமக்குத் தேவையான பல பொருள்கள்

கிடைப்பருமை நிலையில் உள்ளதால், அவற்றிற்கு விலையளித்துப் பெறுகின்றோம்.

நம் முயற்சிகள் யாவும் பொருள்-பணத்தை-செல்வத்தைத் தேடுவதாக உள்ளன. பொருள்தேடும் நோக்கத்திற்கு அடிப்படையாக இருப்பவை விருப்பங்களே (wants). விருப்பங்களைப் பூர்த்திசெய்ய முயற்சிகள் (efforts) மேற்கொள்ளப்படுகின்றன. முயற்சிகள் உழைப்பாக உருவெடுத்து, அதன்மூலம் கிடைக்கும் வருமானம் நம் தேவைகளைப் பூர்த்திசெய்து, 'மன நிறைவை' (satisfaction) அளிக்கின்றன. ஆகவே, விருப்பம், முயற்சி, மனநிறைவு ஆகிய மூன்றும் முடிவற்ற ஒரு சங்கிலித் தொடர்போல வட்டமாக இணைந்து அமைகின்றன (படம் 1).

## பொருளாதார இயலின் வளர்ச்சி

பன்னெடுங் காலமாகவே மனித வாழ்க்கையில் பொருளுக்குரிய சிறப்பிடம் உணரப்பட்டு வருகின்றது. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி; 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது வள்ளுவர் வாக்கு. அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்ற கிரேக்க அறிஞர்கள் அரசியலோடும், அறிவியலோடும், பொருளியலையும் எண்ணிப்பார்த்தனர். பொருளியலைக் குறிக்கின்ற ஆங்கிலச் சொல்லான 'இகனமிக்ஸ்' (Economics) 'ஐக்கோனேமியா' (Oikonomia) என்னும் கிரேக்கச் சொல்லினின்று தோன்றியது. இக் கிரேக்கச் சொல் 'குடும்ப நிர்வாகத்தைக்' குறிக்கும். ஆனால், கிரேக்கர்கள் குடும்ப நிர்வாகத்தை மட்டும் உணர்த்தும் குறுகிய பொருளில் இச் சொல்லைப் பயன்படுத்தாமல், நாட்டு நிர்வாகத்தையும் உள்ளடக்கும் பரந்த பொருளில் உபயோகித்தனர். இதன் காரணமாகவே பொருளாதாரம் நீண்டகாலமாக 'அரசியல் பொருளாதாரம்' (political economy) என அழைக்கப்பட்டு வந்தது. சமீப காலத்தில்தான் பொருளாதாரம் அரசியலினின்றும் பிரிக்கப்பட்டுத் தனியானதோர் இயலாக ஆக்கப் பெற்றது.

ஆரம்ப காலங்களில் அரசியலோடும், பின்பு மற்ற இயல்களோடும் இணைத்துப் பொருளாதார இயல் எண்ணப்பட்டது. வள்ளுவரின் 'திருக்குறளிலும்', சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திரத்திலும்' பொருளாதாரக் கருத்துகள் காணப்படுவது கருதத் தக்கதாகும். 18ஆம் நூற்றாண்டிலிருந்து பொருளாதாரம் தனி

இயலாகப் பிரிந்து விரைவான வளர்ச்சியைப் பெற்றுவருகிறது. அறிவியலுக்குரிய சிறப்புத் தகுதிகளைப் பொருளியல் பெற்று, அது விரைந்து வளரக் காரணமாக இருந்தவர் 'பொருளியலின் தந்தை' எனப் புகழப்படும் ஆடம் ஸ்மித் ஆவார். 20ஆம் நூற் றாண்டில் ஜான் மேனர்ட் கெயின்ஸ் (John Maynard Keynes) பொருளியல் செம்மையுறவும், பேரியல் பொருளாதாரம் (Macro Economics) வளரவும் பல சீரிய கருத்துகளையும், கோட்பாடுகளையும் புதிதாகத் தந்தார். இன்றைய பொருளியல் கணக்கியலோடு நெருங்கிய தொடர்புகொண்டு பல சிக்கல்களைத் தவிர்க்கவும், தீர்க்கவும் உதவுகிறது.

## பொருளியலின் இலக்கணம் (Definition)

மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளை எளிதில் இனங் காணலாம். ஆனால், பொருளியலுக்கு இலக்கணம் வகுப்பது எளிதன்று. பல பொருளியலாளர்கள் அவர்களுடைய போக்கிலும், நோக்கிலும் பொருளியலுக்கான இலக்கணத்தை வரையறுத் துள்ளனர். பல ஆண்டுகளாகப் பொருளியல் இலக்கணம் பற்றிய வெவ்வேறு விளக்கங்கள் இருந்துவருகின்றன. வேறு எந்த இயலிலும் பொருளியலில் இருப்பதைப்போன்று எண்ணிறந்த இலக்கணங்களும், விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஜான் மேனர்ட் கெயின்ஸ், 'அரசியல் பொருளாதாரம் இலக் கணங்களால் அதன் குரல்வளையை அதுவே நெரித்துக்கொள்வ தாகக்' குறிப்பிடுகின்றார். எனவே, சில பொருளியலாளர்களின் கருத்துப்படி, 'பொருளியலுக்கு இலக்கணம் வகுப்பது தேவை யற்ற வீண் முயற்சியாகும்.'

ஆனால், பொருளியல் எவை பற்றியது என்பதை அதன் இலக்கணங்கள் உணர்த்துகின்றன. பொருளியலின் தன்மையை அறிய இவ் விலக்கணங்கள் உதவுகின்றன. பொருளியலைப் பற்றிய ஒரு விரிந்து பரந்த சிறப்புக் கண்ணோட்டத்தைப்பெற இவை வழிசெய்கின்றன. பேராசிரியர்கள் மிர்டால் (Myrdal), மாரிஸ் டாப் (Maurice Dobb) போன்றோர் பொருளியலுக்கான இலக்கணங்கள் விரும்பத்தகாதவை, தேவையற்றவை என்று கருதி னாலும், அவற்றின் தேவையை ராபின்ஸ் (Robbins) போன்றவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பொருளியலுக்கான இலக்கணங்கள் பல தரப்பட்டிருப் பினும், அவற்றில் முக்கியமான மூன்று விளக்கங்கள் கருதத் தக்கவை. அவையாவன: (அ) ஆடம் ஸ்மித் (Adam Smith),

செல்வத்தை (wealth) அடிப்படையாகக்கொண்டு தந்த விளக்கம்; (ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல் (Alfred Marshall) பொருள் சார்நலத்தை (material welfare) அடிப்படையாகக்கொண்டு தந்த விளக்கம்; (இ) லயனல் ராபின்ஸ் (Lionel Robbins) கிடைப்பருமையை (scarcity) அடிப்படையாகக்கொண்டு தந்த விளக்கம்.

**(அ) செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கணம்** (Wealth Definition): பொருளியல் செல்வத்தைப் பற்றி ஆய்கின்ற இயலென்று தொன்மைப் பொருளியலாளர்கள் (classical economists) கருதினர். பொருளாதார இயலின் தந்தை எனப் போற்றப்படும் ஆடம்ஸ்மித் (1723–1790) 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்னும் நூலை 1776-ல் வெளியிட்டார். அந் நூலின் முழுத் தலைப்பு 'நாடுகளின் செல்வத்தின் தன்மையையும் காரணங்களையும் பற்றிய ஒரு விசாரணை' (An Enquiry into the Nature and Causes of the Wealth of Nations) என்பதாகும். அதில் அவர் 'பொருளாதாரம் செல்வத்தைப் பற்றிய அறிவியல்' எனக் குறிப்பிட்டுள்ளார். இக் கருத்தையே ஜே. பி. சே, ஜே. எஸ். மில், ரிக்கார்டோ, மாக்குல்லாக் (McCulloch), நாசோ சீனியர் (Nassau Senior) போன்றோரும் கொண்டிருந்தனர்.

செல்வச் சேமிப்பிற்கும், பகிர்வுக்கும் தொன்மைப் பொருளியலாளர்கள் முதல் முக்கியத்துவம் அளித்தனர். பணத்திற்கு முதலிடம் தந்து, தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக மனிதன் தன்னலத்தோடு செயல்படுகிறான் என்று குறிப்பிட்டனர். செல்வத்தை ஈட்டி, அதைச் செலவழிக்கும் முறைகளைப் பற்றியதே பொருளாதாரம் என்றனர். செல்வமே மனித வாழ்வின் முதலும் முடிவும் என்று கருதினர். ஜே. இ. கெயிர்ன்ஸ் (J. E. Cairnes), அமெரிக்கப் பொருளியலறிஞர் வாக்கர் (Walker) போன்றவர்களும் இவ்விதக் கருத்துகளையே குறிப்பிட்டனர். மற்றவர்கள் நலத்தையோ, தன்னலத்தையோ கருதாமல் செல்வத்தைச் சேர்ப்பதே பொருளியலின் நோக்கம் எனக் கருதப்பட்டது.

**திறனாய்வு :** செல்வத்தை அடிப்படையாகக்கொண்ட இவ்விலக்கணம் கடுந் தாக்குதல்களுக்கு இலக்காகியது. இவ் விலக்கணத்தைத் தந்தவர்கள் 'செல்வம்' என்னும் சொல்லைக் குறுகிய பொருளில் விளக்கினர். அதிக அளவு பணத்தை ஈட்டுவதே செல்வச் சேமிப்பு என்ற எண்ணம் நிலவியது. இவற்றால் பொருளாதார இயலைப் பற்றித் தவறான கருத்துகள் உருவாயின.

எனவே, பொருளாதாரம் செல்வத்தைப் பற்றிய இயல் என்ற கருத்துத் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டது.

1. செல்வம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டது பொருளியல் என்ற கருத்துக்குப் பண்டைக் காலத்திலேயே எதிர்ப்பு எழுந்தது. கடவுள் நம்பிக்கையும், நேர்வழி வாழ்வும் நிறைந்திருந்த அக் காலத்தில் செல்வம் ஈட்டுவதை மிகைப் படுத்திக்கூறும் பொருளியல் மனிதனின் சீரிய பண்புகளை மாற்றி விடும் என்று அஞ்சப்பட்டது. குறிப்பாகக் கார்லில் (Carlyle), ரஸ்கின் (Ruskin), ஆர்னல்ட் (Arnold) ஆகியவர்கள் பொருளாதாரத்தைக் கீழ்த்தரமான இயலாகக் கணித்தனர். 'பணத்தைப் பூஜிக்கும் இயல்', 'சிறப்பானவர்கள் படிக்கத் தகுதியற்ற இயல்', 'இருளார்ந்த இயல்', 'சுயநலத்தையும் பணமோகத்தையும் கற்பிக்கும் இயல்' என்றெல்லாம் பொருளியல் வர்ணனை செய்யப்பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் மதப்பற்றுள்ள இலக்கிய அறிஞர்கள் பொருளியலுக்கு மாசு கற்பித்தனர். பொருளாதாரம் மனித மனத்தில் கடவுளுக்குரிய இடத்தைச் செல்வத்திற்குத் தந்துவிடும் என்ற தவறான கருத்தே இதற்குக் காரணமாகும்.

2. செல்வத்தை அடிப்படையாகக்கொண்ட இவ் விலக்கணம் பொருளாதார இயலின் பல்வேறு பிரிவுகளில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகின்றது. நுகர்வின் முக்கியத்துவமும், மாற்று, பகிர்வு ஆகியவற்றின் அவசிய நிலைகளும் மறக்கப்பட்டன. 'நுகர்வே உற்பத்தியின் அடிப்படை' என்பது சிறப்பாக அறியப்படவில்லை.

3. தொன்மைப் பொருளியலாளர்கள் செல்வத்திற்கு முதலிடம் அளித்து மனித நலனை மறந்துவிட்டனர். 'பணம் பத்தும் செய்யும்' என்பதை எவரும் மறுக்க இயலாது. எனினும், பணத்தை ஈட்டுவது, தேவைகளை நிறைவுசெய்து மனித நலனைப் பெருக்குவதற்கே என்பதை அறிவது அவசியம். மனிதநலனைப் பெருக்க உதவும் ஒரு கருவியே செல்வம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

4. செல்வத்தைச் சேர்க்கும் தனியார் நடவடிக்கைகளுக்கு அரசு தடைகளை விதிக்கக்கூடாது என்று தொன்மைப் பொருளியலானர்கள் குறிப்பிட்டனர். ஆனால், வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை முறையில் உள்ள குறைபாடுகளைக் களையவேண்டியது அரசின் கடமையாகும். இன்றைய நிலையில் நாடுகளின்

பொருளாதார முன்னேற்றத்தில் அரசின் பங்கைக் குறைவாக மதிப்பிடுவது தவறு.

5. பொருளியலின் பிரிவுகள் பலவாகும். செல்வத்தைப் பற்றிய இயலே பொருளியல் என்பது தவருன கூற்று. தொன்மைப் பொருளியலாளர்கள் உற்பத்தி மற்றும் நுகர்ச்சி நடவடிக்கைகளிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.

6. பகுத்தறி முறையை (deductive method) விட தொகுத்தறி முறையே (inductive method) சிறந்தது. தற்போதைய பொருளியலாளர்கள் தொகுத்தறி முறையையே பெரிதும் பின்பற்றுகின்றனர். தொன்மைப் பொருளியலாளர்கள் பகுத்தறி முறையையே பின்பற்றினர்.

7. பொருளாதாரம் என்பது மாறுதல்கள் ஏற்படாத தேக்கநிலையில் (static) இருப்பதெனக் கருதி விதிகள், இலக்கணங்கள், கோட்பாடுகள், எடுகோள்களை வரையறுத்தனர். ஆனல், பொருளாதாரம் இயக்க நிலையைக் (dynamic) கொண்டது. இயக்கநிலைப் பொருளாதாரத்தில் மக்கள்தொகை பெருகுகின்றது; விருப்பங்கள் பெருகுகின்றன; தொழில் அமைப்புகள் எண்ணிக்கையில் கூடுகின்றன; உற்பத்தி முறைகளிலும் முன்னேற்றமான மாற்றங்கள் தோன்றுகின்றன.

8. மனிதாபிமானச் சமுதாய நோக்கங்கள் செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட இவ் விலக்கணத்தில் புறக்கணிக்கப் படுகின்றன. இதில் மனித நலன் (human welfare) புறக்கணிக்கப் படுவதை ஏற்க இயலாது. செல்வத்தைவிட மனித நலனே முக்கியமானது.

மேற்கண்ட குறைபாடுகளால் செல்வத்தை அடிப்படையாகக்கொண்ட இலக்கணம் செல்வாக்கிழந்தது. பொருளியலில் செல்வத்திற்கும், பணத்திற்கும் நிரம்ப வேறுபாடுகள் உள. செல்வத்தைப் பற்றி மட்டும் படிப்பதல்ல பொருளியல். ஆடம் ஸ்மித் இலக்கணத்தில் தேவைக்கு அதிகமாகச் செல்வத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

எனினும், ஆடம் ஸ்மித் வாழ்ந்த காலத்தையும் கவனத்தில் கொள்வது நல்லது. அவர் தன் நூலை எழுதும்போது இங்கிலாந்தில் தொழிற்புரட்சி தோன்றியது. இயந்திரப் பேரளவு உற்பத்தி முறைகளால் பொருள்களின் உற்பத்தி பல மடங்கு பெருகியது.

இவற்றின் காரணமாகவும் ஸ்மித் செல்வத்திற்கு முக்கியத்துவம் அளித்துப் பொருளியலைச் செல்வத்தைப் பற்றிய இயல் என வரையறுத்தார்.

**(ஆ) பொருள்சார் நலத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கணம்** (Material Welfare Definition) : பொருளாதார இயலுக்குப் புதிய இலக்கணத்தை வகுத்து அதை ஒரு சமூகவியல் எனப் பலரும் அறியச் செய்தவர் ஆல்ஃபிரட் மார்ஷல் (1842–1924) ஆவார். பொருளாதாரத்தில் ஸ்மித் செல்வத்திற்கு அளித்த முக்கியத்துவத்தை மார்ஷல் மனிதனுக்கு அளித்தார். மனித நலனே பொருளியலின் நோக்கமென மார்ஷல் விளக்கி னார். அவர் எழுதிய 'பொருளாதாரக் கோட்பாடுகள்' (Principles of Economics) வெளியிடப்பெற்றது. அதில் அவர் பொருளா தாரத்திற்குத் தந்த புது விளக்கமாவது, 'பொருளாதாரம் அல் லது அரசியல் பொருளாதாரம் என்னும் இயல் சாதாரண மனி தன் தினசரி வாழ்க்கையில் எங்ஙனம் ஈடுபடுகிறான் என்பதை ஆராய்கிறது; நல்வாழ்விற்குத் தேவையான பொருள்களைப் பெறு வது, பயன்படுத்துவது ஆகியவற்றோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட தனி மனித-சமுதாய நடவடிக்கை பற்றி ஆய்வு செய் கிறது. எனவே, இது ஒருபுறம் செல்வத்தைப் பற்றிய கல்வி யாகும்; அடுத்த முக்கியமான புறத்தில் மனிதனைப் பற்றிய ஆய்வு ஒரு பகுதியாக உள்ளது.'

மனித நல்வாழ்வுக்குப் பல பொருள்கள் தேவைப்படுகின் றன. அப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கினால் வாழ்வு வளமடையும். மார்ஷல் செல்வத்தையும், அதன் ஆக்கத்தையும் புறக்கணிக்காமல் மனித நலத்தைச் செல்வத்தோடு இணைத்துக் குறிப்பிடுகின்றார். பொருள்களை உற்பத்தி செய்வதும், நுகர் வதும் மனித நல்வாழ்விற்கே. ஆகவே, மார்ஷல் பொருளியலில் மனிதனுக்கு முதலிடத்தையும், செல்வத்திற்கு இரண்டாவது இடத்தையும் தருகின்றார்.

ஆக்கம், நுகர்வு, பகிர்வு ஆகிய பொருளியலின் மூன்று முக்கிய பிரிவுகளுக்கும் மார்ஷல் முக்கியத்துவம் அளிக்கின்றார். மக்களின் வறிய நிலையை விரட்டப் பொருளியல் உதவ வேண்டும். மனித நலத்திற்கு இன்னல் விளைவிக்கும் தடைகளைப் பொருளியல் களையவேண்டும். பொருள்சார் நலம் பற்றியதே பொருளாதார இயல் என்பதைப் பிகு (Pigou), கேனன் (Cannon), பேவரிட்ஜ் (Beveridge) போன்ற பொருளியலாளர்களும் குறிப்பிட் டுள்ளனர்.

மனிதனுக்காகவும், மனித நலனிற்காகவுமே பொருளாதார இயலில் செல்வம் முக்கிய இடத்தைப்பெற்று ஆய்வு செய்யப் படுகிறது. சுயநலத்தை வளர்க்கும் இயலாகப் பொருளியலைக் கருதத் தேவையில்லை. மார்ஷலின் இலக்கணம் சிலவகைச் சிறப்பு களைக் கொண்டுள்ளது.

1. இவ் விலக்கணம் மனிதனுக்கும், மனித நலனுக்கும் முதலிடம் தருகிறது. மனித நல்வாழ்வுக்கான செல்வச் சேமிப் பிற்கு இரண்டாவது இடமே தரப்படுவதால், கார்லைல், ரஸ்கின் போன்றவர்களின் கண்டனங்களினின்றும் பொருளியல் காக்கப் படுகிறது. பொருளாதாரம் ஒரு சமூகவியல் என்ற எண்ணம் உருவாகச் செய்தவர் மார்ஷல் ஆவார்.

2. மார்ஷல் ஆக்கத்தோடு நுகர்வு, பகிர்வு போன்ற வற்றையும் இணைத்துக் கூறுகிறார். ஸ்மித்தைப் போலன்றி மார்ஷல் பொருளியலின் பல பிரிவுகளையும் அறிந்தவராவார். எனவே, இவ் விலக்கணம் சற்றெப்பச் சிறப்பானதாக அமைகிறது.

3. பொருளியலுக்கான சமூக நல நோக்கை மார்ஷல் சுட்டிக்காட்டுகிறார். மக்களின் வறுமையைத் துடைப்பதற்கான வழிமுறைகளைப் பொருளியல் ஆராய்வது அவசியம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

4. மார்ஷலின் இலக்கணம் சமூக, சமய, அரசியல் நட வடிக்கைகளைப் பொருளியல் ஆராயாமல் பொருளாதார நட வடிக்கைகளைப் பற்றி மட்டுமே ஆராய்கிறது என்பதை அறிவுறுத்து கிறது. மனிதன் வருமானத்தை எவ்வாறு பெற்று, எவ் வழி களில் செலவிடுகின்றான் என்பதைப் பொருளியல் விளக்குகிறது.

5. இவ் விலக்கணப்படி மனிதன் சமூகத்தின் ஓர் உறுப் பாகிறான். பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளைக் கொண் டிருக்கும் சமூகத்தோடு தனி மனிதன் தொடர்புகொள்கிறான்.

6. இந்த இலக்கணம் பொருளியலின் எல்லையையும் இயல்பையும் விரிவாக்குகின்றது. 'நலப் பொருளாதாரம்' (welfare economics) வளர மார்ஷலின் இலக்கணம் ஒரு தொடக்க நிலையை ஏற்படுத்தித் தந்தது.

7. பொதுநலன் பொருள்சார் நலத்தினின்றும் வேறு பட்டது. நலப் பொருளியலாளர்கள் பொருள்சார் நலத்தைப் பணமென்ற அளவுகோலால் அளவிடலாம் எனக் கூறினர்.

**திறனாய்வு:** மார்ஷல், பிகு, கானன் ஆகியோர் தந்த பொருள்சார் நலத்தை அடிப்படையாகக்கொண்ட விளக்கம் பல ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு நீண்டகாலம் செல் வாக்கும் இருந்தது. ஆனால், இவ் விலக்கணத்தில் உள்ள குறை பாடுகளை லயனல் ராபின்ஸ் 1932-ல் வெளியிட்ட அவரது 'பொருளியலின் இயல்பும் முக்கியத்துவமும் பற்றிய கட்டுரை' (An Essay on the Nature and Significance of Economics) என்ற நூலில் குறிப்பிட்டார்.

1. மார்ஷலின் இலக்கணம் உருவப் பொருள் சார்ந்த நலனைப் பற்றி மட்டும் பொருளாதார இயல் ஆய்வதாகக் கருது கிறது. ஆனால், மனித நல்வாழ்வுக்கு உணவு, உடை, உறையுள் போன்ற உருவப்பொருள்களோடு மருத்துவர், ஆசிரியர் போன் றோர் பணிகளும் தேவை. இவ்வகைப் பணிகளை அருவப் பொருள் கள் எனலாம்.

2. 'நலன்' என்னும் சொல் பொருளாதார இயலில் தெளிவற்ற நிலையில் பயன்படுத்தப்படுவதை ராபின்ஸ் விளக்கு கிறார். அனைத்துச் செல்வங்களும் மனித நலனை வளர்க்கமாட்டா. மயக்கம் தரும் மது மற்றும் போதைப் பொருள்கள் மனித நலனுக்குக் கேடு விளைவிப்பவை. ஆனால், அவை மனிதத் தேவையைப் பூர்த்தி செய்வதால் சந்தைகளில் விற்கப்படுகின்றன; செல்வங்களாகக் கருதப்படுகின்றன. மனித நலனுக்கேற்ற மனி தாபிமானம், நட்பு, தாயன்பு போன்றவை செல்வங்களாகக் கொள்ளப்படுவதில்லை.

3. பொருளாதார இயல் நடப்பு நிலையை ஆய்வுசெய்ய வேண்டுமே தவிர, அது எப்படி இருக்கவேண்டுமென ஆராயத் தேவையில்லை என்றுரைக்கிறார் ராபின்ஸ்.

4. அறவியலுக்கே 'நலன்' என்ற கருத்து ஏற்புடையது. அதைப் பொருளியலில் பயன்படுத்துவது தவறு.

5. 'நலனைப்' பணத்தின் உதவிகொண்டு அளவிட இய லாது. பலரது மன நிலைகளுக்கு ஏற்ப நலமானது வேறுபடும். ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பொருளில் இருந்து கிடைக்கும் பயன்பாடு மற்றவருக்கும் அதே நிலையில் இருக்குமெனக் கூற முடியாது.

6. சில பொருளாதார விதிகள் எல்லோருக்கும் பொது வானவை. சமூகத் தொடர்பற்ற தனி மனிதர்களின் நடவடிக்கை

களுக்கும் பொருளியலுக்கும் தொடர்பேதும் இல்லை என்ற கருத்தை ராபின்ஸ் ஏற்கவில்லை. பதிலீட்டு விதி, குறைந்துசெல் பயன்பாட்டு விதி முதலியவை எல்லோருக்கும் பொருந்துபவையே.

7. ராபின்ஸ் சமய-சமூக-அரசியல் நடவடிக்கைகளைப் பொருளாதார நடவடிக்கைகளினின்றும் பிரிக்கத் தேவையில்லை என்கிறார். கோயில் திருவிழா—திருமணம்—தேர்தல் ஆகியவை முறையே சமய—சமூக—அரசியல் நடவடிக்கைகளாகின்றன. இந்த நடவடிக்கைகளிலும் பொருளாதாரக் கூறுபாடுகள் உள்ளமையால், அவற்றை ஆராயவேண்டுமென்கிறார் ராபின்ஸ்.

நல்வாழ்வைப் பெருக்கும் நடவடிக்கைகளில்தான் பொருளாதாரம் ஈடுபட்டுள்ளது என்பது தவறு. உலகின் பல நாடுகளில் போர்க் கருவிகள், மது வகைகள், சிகரெட் போன்ற நல் வாழ்வுக்குக் கேடுவிளைவிக்கும் பொருள்கள் உற்பத்தியாகின்றன. பஞ்சமும், பட்டினியும் நிலவுகின்ற இந்த நாளில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாகக் கிடைப்பருமை நிலத்தில் சிகரெட்டுக்கான புகையிலை உற்பத்தி செய்யப்படுவது ஏன்? பொருள்சார் நல இலக்கணப்படி இந்த நடவடிக்கைகளைப் பொருளாதார நடவடிக்கைகளாகக் கொள்ளமுடியாது. ராபின்ஸ் இதைத் தவறானது எனக்கூறுகிறார்.

**(இ) கிடைப்பருமையை அடிப்படையாகக் கொண்ட இலக்கணம்** (Scarcity Definition) : ராபின்ஸ் தனது 'கிடைப்பருமை' இலக்கணத்தின்மூலம் மார்ஷலின் 'பொருளசார் நல' இலக்கணத்திலுள்ள குறைகளைக் களைகிறார். 'பொருளியலின் இயல்பும் முக்கியத்துவமும் பற்றிய கட்டுரையில்' (An Essay on the Nature and Significance of Economics) இப் புதிய இலக்கணம் தரப்பட்டுள்ளது. பொருளியலுக்கு இது ஒரு புதுவகை விளக்கம். கிடைப்பதற்கு அரிதான பொருள்களைப் பயன்படுத்துவதில் மனித நடவடிக்கை எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை ஆய்ந்து அறிவிப்பதே பொருளியலாகும்.

லயனல் ராபின்ஸ் பொருளியல் இலக்கணத்தைப் பின்வருமாறு வரையறுக்கிறார்: 'கிடைப்பருமையுள்ள, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய தன்மைகளைக்கொண்ட சாதனங்களைக் கையாண்டு விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள மனிதன் கைக்கொள்ளும் நடவடிக்கையைப் பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும்.' (Economics is a science which studies human behaviour as a relationship between ends and scarce means which have alter-

native uses.) அதாவது, தேவைக்குப் போதாத பொருள்களைப் பல தேவைகளுக்குச் சிக்கனத்துடன் பயன்படுத்துவதுதான் பொருளியல். இவ் விலக்கணம் வலியுறுத்தும் நான்கு அம்சங்களாவன:

(1) மனித விருப்பங்கள் எண்ணற்றவை, எல்லையில்லாதவை;

(2) விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான சாதனங்கள் கிடைப்பருமையானவை;

(3) கிடைப்பருமைச் சாதனங்களைப் பல மாற்று வழிகளில் பயன்படுத்தலாம்;

(4) விருப்பங்களின் முக்கியத்துவம் மாறுந்தன்மை கொண்டது.

'வாழ்நாள் குறுகியது; இயற்கை கஞ்சத்தனமானது' என்றும் ராபின்ஸ் கூறுகின்றார். ராபின்ஸின் விளக்கத்தை ஆராய்ந்தால் சில உண்மைகள் புலப்படும். மனிதன் எண்ணற்ற விருப்பங்களைக் கொண்டிருக்கிறான்; ஆனால், அவற்றைப் பூர்த்திசெய்து கொள்வதற்கான சாதனங்கள் குறைவானவை. நம் புராண—இதிகாசங்களில் வரும் அட்சயபாத்திரம் இருந்தால் மட்டுமே எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள இயலும். மனித ஆசைகளுக்கு எல்லையில்லை. நாகரிக முன்னேற்றத்தால் மனித விருப்பங்கள் பல மடங்கு பெருகியுள்ளன. சில விருப்பங்களை நிறைவு செய்தவுடன் மற்றப் புதிய விருப்பங்கள் தோன்றுகின்றன. பொருளியல் நடவடிக்கைகளுக்கு விருப்பங்களே தூண்டுகோல்களாகும்.

சாதனங்கள் வரையறையின்றிக் கிடைத்து, மனித வாழ்நாள் முடிவின்றி அமைந்தால் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவது எளிது; பொருளியல் சிக்கல்களும் தோன்றமாட்டா. பத்துரூபாய் வைத்திருக்கும் ஒருவர் அதை நண்பர்களோடு திரைப்படம் பார்க்கப் பயன்படுத்தலாம்; அல்லது அருகில் உள்ள ஓரிடத்திற்கு உல்லாசப் பயணம் செல்லலாம்; அல்லது கல்விக்குப் பயன்படும் புத்தகம் வாங்கலாம். ஆனால், இந்த எல்லா விருப்பங்களையும் பத்துரூபாயைக்கொண்டு நிறைவேற்றிவிட இயலாது. எனவே, அவர் மிக அவசியமான விருப்பத்தை முதலில் பூர்த்தி செய்து, பிற விருப்பங்களைக் கைவிடுகிறார்; அல்லது தள்ளிப்போடுகிறார்.

தேவைப்படும் அளவுக்குப் பொருள்கள் கிடைக்காத நிலை யையே 'கிடைப்பருமை' குறிப்பிடுகின்றது. பெருகிவரும் தேவை களையும், பற்றுக்குறைச் சாதனங்களையும் பொருளியலின் அடிப் படை எனலாம். எவராலும் எல்லா விருப்பங்களையும் நிறைவு செய்துகொள்ள முடியாது. விருப்பங்களையும், சாதனங்களையும் தெரிவுசெய்வது பொருளியலின் பணி. ஆகவே, பொருளியலைத் 'தெரிவியல்' (science of choice) எனவும் அழைக்கலாம். நாட்டி லுள்ள வளங்களை எந்த அளவுக்குப் பயன்படுத்தி, எப் பொருள் களை எந்த அளவுக்கு உற்பத்தி செய்வது என்பதைத் தீர்மானிப்பது அரசின் பொருளாதாரப் பணி. சூழ்நிலைகளுக்கேற்பவும் விருப்பங் களின் முக்கியத்துவம் மாறும்.

அதிகப் பயன்பாட்டைத் தரக்கூடிய பொருள்களே பெரு மளவில் விரும்பி நுகரப்படுகின்றன. நாட்டளவில், அரசின் நிதி வசதிகள் 'கிடைப்பருமை' கொண்டவை. நாட்டின் பல துறை வளர்ச்சியும் அரசால் செய்யப்படவேண்டும். வேளாண்மை, தொழில், சமூக நலன், கல்வி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, வாணிகம், மருத்துவம், மின்சாரம், சிறு தொழில்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் ஒரே விகிதத்தில் முதலீட்டைச் செய்ய இயலாது. எத் துறைகளுக்கு அதிக முதலீடு தேவை என்பதைத் திட்டமிட்டுக் கணித்து, அவற்றிற்கு அரசு அதிக மூலதனத்தை ஒதுக்கீடு செய்து பிற துறைகளுக்கான முதலீட்டைக் குறைத்துவிடுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றும்போது, சாதனங்களாகிய (means) நிதி வசதிகள் குறைவாக இருப்பதால், பல துறைகளின் வளர்ச்சிக் கான முதலீட்டு அளவு அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப தெரிவு செய்யப்படுகிறது.

ராபின்ஸ் இலக்கணத்தின் சிறப்பியல்புகளாவன:

1. அறிவியல் அடிப்படையில் அமைந்தது ராபின்ஸின் விளக்கம். விருப்பு, வெறுப்பற்ற பாரபட்சமில்லாத நிலையில் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் ஆராயப்பட வேண்டு மென ராபின்ஸ் கருதுகிறார்.

2. அவரின் இலக்கணம் எச் சூழ்நிலைகளுக்கும் பொருந்து வது; பகுத்தாய்வின் அடிப்படையில் அமைந்தது.

3. ராபின்ஸின் இலக்கணம் பொருளியலை வலுப்படுத்தி, அதன் எல்லையை விரிவுபடுத்துகிறது. ஸ்மித்தின் செல்வத்தை

அடிப்படையாகக்கொண்ட இலக்கணம் பொருளியலைப் பற்றிய தாழ்வான கருத்துத் தோன்றக் காரணமாயிருந்தது. பொருள்சார் நலத்தை ஆதாரமாகக் கொண்ட மார்ஷலின் இலக்கணம் பொருளியலின் எல்லா நடவடிக்கைகளையும் உள்ளடக்கவில்லை. ராபின்ஸின் விளக்கம் பொருளியலின் பல பிரிவுகளையும் உள்ளடக்குகிறது.

ராபின்ஸின் இலக்கணத்தில் சில குறைபாடுகளும் உள்ளன. பல சமீபகால புதுப் பொருளாதாரக் கருத்துகள் இவ் விலக்கண எல்லைக்குள் வருகின்றன என்று கூற இயலாது. பொருளியல் நடப்பு நிலைகளைப் பற்றி மட்டுமே ஆய்வுசெய்ய வேண்டுமென்று ராபின்ஸ் குறிப்பிடுகிறார். ஆனால், பொருளியல் இருப்பதை மட்டும் விளக்காமல், அவை எவ்வாறு இருக்கவேண்டுமென்பதைக் கூறுவதும் இன்றியமையாதது. அவரின் விளக்கத்தில் மனித நலனும், அறக் கருத்துகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இது சமூக நலனுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பொருளாதாரம் ஏற்றுக்கொள்கிறது என்னும் தவறான கருத்தைத் தோற்றுவிக்கிறது.

ஒருசில குறைகள் இருப்பினும், லயனல் ராபின்ஸ் இலக்கணத்தில் அறிவியலுக்கு அமையவேண்டிய சிறப்பும், தெளிவும், துல்லியமும் காணப்படுகின்றன. மார்ஷல் மனித நல்வாழ்வுக்குத் தம் இலக்கணத்தில் தலையாய இடத்தைத் தந்திருப்பதால், அவருடைய இலக்கணமே சிறந்தது என்று சிலர் கருதுகின்றனர். எந்த ஒரு தனி இலக்கணத்தாலும் பொருளியலை முழுமையாக விளக்க முடியாது. பொருளாதார இயலின் பல கூறுகளையும் நன்குணர வெவ்வேறு இலக்கண வரையறைகளையும் பயில்வது அவசியம்.

# 2. பொருளியலும் பிற சமூக இயல்களும்

## சமூக அறிவியல் (Social Science) — ஒரு விளக்கம்

சமுதாயத்திலுள்ள மனிதனைப் பற்றியதே சமூக அறிவியல். சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் மனிதனின் நடவடிக்கைகளை ஆராய்வதால், பொருளியலும் ஒரு சமூக அறிவியலே. இதையே ஆல்ஃபிரட் மார்ஷலும் குறிப்பிடுகிறார். மனிதன் தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. 'தொழிலாளி-முதலாளி, விற்பவர்-வாங்குபவர், உற்பத்தியாளர்-நுகர்பவர், சேமிப்பாளர்-முதலீட்டாளர்' போன்ற சமுதாயத்திலுள்ள மக்களின் நடவடிக்கைகளைப் பற்றியதே பொருளியல் என்று கெயின் கிராஸ் (Cairn Cross) கூறுகிறார்.

பல சமூக அறிவியல்களில் பொருளியலும் ஒன்று. சேர்ந்து வாழ்வதே மனித இயல்பு. இணைந்து வாழும் பலர் சமூகமாகின்றனர். ராபின்சன் குருசோ (Robbinson Crusoe) போன்று தனித்துவிடப்பட்ட மனிதரை இன்று நாம் காண்பதரிது. சமூகத்தின் தனி மனிதர்கள் செல்வத்தை ஈட்டி, அதை எவ்வாறு செலவழிக்கிறார்கள் என்பதைப் பற்றிய விளக்கங்களே பொருளியலில் அடங்கியுள்ளன. பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட மற்றவர்களின் கூட்டுறவு தனி மனிதனுக்குத் தேவை. உற்பத்தி, மாற்று, பகிர்வு போன்ற பொருளாதார நடவடிக்கைகள் கூட்டு முயற்சியால் விளைபவையே. தனியார் நலத்தோடு சமூக நலமும் குறிக்கோளாக இருப்பதால் பொருளியல் சமூக அறிவியலாகின்றது.

நுகர்வோர் உற்பத்தியாளரைச் சார்ந்திருக்கின்றனர். நுகர்வு இல்லாவிடில் உற்பத்தி தேவையில்லை. எனவே, உற்பத்தியாளரும் பொருள்களை விற்பனை செய்ய நுகர்வோரைச் சார்ந்துள்ளனர். இவ்விரு பிரிவினருக்குமிடையே உள்ள வணிகர்கள் பொருள்களை மாற்றுவதற்கு உதவுகின்றனர். சமுதாயப் பிரச்சினை

களுக்குத் தீர்வுகாணவும் பொருளியல் கோட்பாடுகள் வகைசெய்கின்றன.

பொருளியல் பிற சமூக அறிவியல்களான சமூக வாழ்வியல், வரலாறு, அரசியல், உளவியல், அறநெறியியல், சட்டவியல், புவியியல், புள்ளியியல் போன்றவற்றோடு தொடர்புகொண்டுள்ளது. உதாரணமாக, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பொருளாதாரக் காரணிகளை மட்டும் சார்ந்து அமைவதில்லை. அது வரலாற்று, அரசியல், சமூக வாழ்வியல் காரணிகளுக்கு ஏற்பவும் அமையும். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், வரலாற்றுக் காரணங்களால் பொருளாதார வளர்ச்சி சீராகவும் சிறப்பாகவும் அமையவில்லை. நம் நாடு சுதந்திரமடைந்த 1947ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றமையால், பொருளாதார மேம்பாடு ஓரளவு செம்மையடைந்துள்ளது. அரசாட்சியில் நிலைத்தன்மை இருப்பதால்தான் இந்த அளவுக்காவது நாம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுள்ளோம். ஆனால், விடுதலை பெற்றுள்ள வேறு சில அயல்நாடுகளில், அரசியலின் நிலையற்ற தன்மையால் நாட்டு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவைபோன்ற நாடுகளில் இன்றுள்ள அரசு நாளை இருக்காது; நாளை உள்ள அரசு அதற்கு மறுநாள் இருக்காது. இதற்கான நல்ல உதாரணம் ஆப்பிரிக்காவில் உள்ள பெல்ஜியன் காங்கோவாகும்.

**(அ) பொருளியலும் சமூக வாழ்வியலும்** (Economics and Sociology) : பொருளியலும் சமூகவாழ்வியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை. சமூக வாழ்வியல் மனித சமுதாய அமைப்பின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றியது. ஆனால், பொருளாதாரம் சமூக வாழ்வின் பொருளாதாரக் கூறு பற்றி படிப்பதாகும். இவ் வகையில் பொருளியல் சமூக வாழ்வியலின் ஒரு பிரிவாகிறது.

சமூக வாழ்வியல் சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு, மரபு, சட்டதிட்டங்கள், அரசமைப்பு முதலியவைபற்றி ஆய்வது. அது பிற சமூக இயல்களுக்கு அன்னையைப் போன்றது. சமூக வாழ்வியலை ஒரு மரத்திற்கு ஒப்பிட்டால், அதன் கிளைகளாக மற்ற சமூக இயல்கள் அமைகின்றன.

சமுதாய வாழ்வு நிலைகளைப் பற்றி அறியாமல், ஒரு சமூகத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள

இயலாது. சமூகநலவாதிக்கும் பொருளியலாளருக்கும் உள்ள தொடர்பு பொதுமருத்துவருக்கும், மருத்துவத்தின் சில தனிப் பிரிவுகளில் தேர்ச்சிபெற்ற மருத்துவருக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. பொதுமருத்துவர் சில குறிப்பிட்ட நோய்களுக்குச் சிகிச்சைபெற, தனித் தேர்ச்சிபெற்ற மருத்துவர்களைப் பார்க்க வேண்டுமெனப் பரிந்துரைக்கிறார். இதற்கு உதாரணமாக, இதய மருத்துவர்கள், கண் மருத்துவர்கள், காது-மூக்கு-தொண்டை மருத்துவர்கள், பல் மருத்துவர்கள், தோல் மருத்துவர்கள் ஆகியோரைக் கூறலாம். பொதுமருத்துவர் நோய்க் குறியறிந்து சிகிச்சை செவ்வனே அளிக்க முடியாத நிலையில், சிறப்புத் தேர்ச்சிபெற்ற பிற மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்கக் கூறுகிறார். இதுபோன்றே சமூகநலவாதி (sociologist) சமுதாயப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாதபோது, அச் சமுதாயப் பிரச்சினையின் பொருளாதாரக் கூறு பற்றி அறிய பொருளியலாளரைக் (economist) கலந்து ஆலோசனைபெற வேண்டியுள்ளது. இவ்வாறு, பல நிலைகளில் பொருளியல் சமூக வாழ்வியலோடு தொடர்பைப் பெற்றுள்ளது.

**(ஆ) பொருளியலும் வரலாறும் (Economics and History) :** பொருளாதாரக் கோட்பாடுகளையும், சிக்கல்களையும் புரிந்து கொள்ளத் தேவையான பின்னணியை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்துகின்றன. பொருளாதார விதிகளின் செயல்பாட்டைச் சரிபார்க்க வரலாறு துணைபுரிகிறது. இதுபோன்றே வரலாற்று வல்லுநர்களுக்கும் பொருளியல் பயனளிக்கிறது. பொருளாதாரம் வரலாறு என்னும் அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்படும் கட்டடமாகும். வரலாற்றைக் கோபுரத்திற்கு ஒப்பிட்டால், அதில் உள்ள கலசமாகப் பொருளியலைக் குறிப்பிடலாம். சர் ஜான் சீலி இரண்டு இயல்களுக்கும் உள்ள தொடர்பைக் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்.

> 'வரலாறில்லாத பொருளியல் வேரில்லாத மரம் போன்றது; பொருளியலில்லாத வரலாறு பழமில்லா மரம் போன்றது.'[1]

ஒரு நாட்டின் பொருளாதார வரலாறு அந்த நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கான காரணங்களை, அவற்றின் பின்புலத் தோடு அறிவுறுத்துகிறது. தொழிற்புரட்சியால் இங்கிலாந்து செல்வ நாடாகியது; ரஷ்யப் புரட்சியால் அந்த நாட்டில் சமதர்ம அரசு தோன்றியது. வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையிலேயே மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு உருவாகியது.

---

1. "Economics without History has no root;
History without Economics has no fruit" —Sir John Seely

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு உலகப் போர்களுக்குப் பிறகு, உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. பல நாடுகளில் 'முதலாளித்துவம்' (Capitalism) கைவிடப்பட்டது.

வரலாறு பயிலும் ஒருவருக்கு வரலாற்றுக் கொலைகளும், கொள்ளைகளும், திருமணங்களும், அரச-அரசியரின் காதல் விவகாரங்களும் முக்கியமானவை. ரோமாபுரி வரலாற்றைப் படிப்பவருக்கு அந்தோணி-கிளியோபாத்ரா காதல் வாழ்க்கையும், ஜூலியஸ் சீசர் கொலையும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய வைகளாக இருக்கலாம். இந்திய மொகலாய சாம்ராஜ்யத்தின் மன்னர் ஔரங்கசீப்பின் மதக் கொள்கையை வரலாற்று மாணவர் அறியவேண்டியதும் அவசியமே. ஆனால், பொருளியல் மாணவர் ஒருவர் கடந்தகால பொருளாதாரச் சிக்கல்களைப் புரிந்துகொள்ள உதவும் வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டுமே கருத்தூன்றி அறிகின்றார். சென்றகால வரிவிதிப்பு முறைகளையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், உற்பத்தியில் பின்பற்றப்பட்ட முறைகளையும், வரிவருவாயைப் பெருக்க பண்டைய அரசுகள் கைக்கொண்ட வழிகளையும் ஆய்ந்தறிவதே அவரின் விருப்பமாகிறது.

பொருளியலில் பயிலக்கூடிய 'வாணிகச் சுழல்கள்' (trade cycles) ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தோன்றி மறைவதை வரலாற்றுக் குறிப்புகள் மெய்ப்பிக்கின்றன. 1930ஆம் ஆண்டிலிருந்து உலகின் பல நாடுகளில் நிலவிய 'பொருளாதாரப் பெரு மந்தத்தையும்' (great economic depression) இதற்குச் சான்றுகக் கூறலாம்.

**(இ) பொருளியலும் அரசியலும்** (Economics and Politics): அரசுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை அரசியல் உணர்த்துகிறது. எந்த ஓர் அரசியல் கொள்கையையும் செயல்படுத்துவதற்கு முன்பாக, ஆட்சியாளர்கள் பொருளாதாரச் சூழ்நிலைகளையும், அமைப்புகளையும் கவனத்திற்கொள்ளவேண்டியது அவசியம். சில நேரங்களில் பொருளாதாரக் கோட்பாடுகளுக்கேற்ப அரசியல் அமைப்புகளும் கருத்துகளும் உருவாகின்றன. சான்றாக, 'சமதர்மம்' (Socialism) என்ற பொருளாதாரக் கோட்பாடு உலக நாடுகளின் பல அரசுகளாலும் பின்பற்றப்பட்டு வருவதைக் குறிப்பிடலாம்.

பொருளியலுக்கும் அரசியலுக்கும் பல நிலைகளில் தொடர்பு இருக்கின்றது.

முதலாவதாக, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப அரசிய லமைப்புகள் மாறுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, சோவி யத் ரஷ்யாவில் பொதுவுடைமை அமைப்பும் (Communism), இந்தியாவில் சமதர்ம அமைப்பும் (Socialism), அமெரிக்காவில் முதலாளித்துவ அமைப்பும் (Capitalism) செயல்பட்டு வருவதை உணர்த்தலாம்.

இரண்டாவதாக, பொருத்தமான பொருளாதாரக் கொள் கைகளின் அடிப்படையில் பொருளியலாளர்கள் தரும் பொதுநலக் கருத்துகளை ஆட்சியாளர்கள் ஏற்றுச் செயல்படுத்துகின்றனர். இந்தியாவில் திட்டக்குழு அரசு நிறைவேற்றும் திட்டங்களை வரை கிறது. பொருளாதார நடவடிக்கைகளின் பூரிப்பு நிலை அர சாட்சியை வலுப்படுத்தும். பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டில், அரசியலமைப்பு ஆட்டங்கண்டுவிடும்.

மூன்றாவதாக, ஒரு நாட்டிற்குள் நிகழும் பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றையும் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி, வழிப்படுத்துவது அந்நாட்டின் அரசே. அத்தியாவசியப் பொருள் களின் விலைகள், உற்பத்தி, நுகர்வு, மாற்று, பகிர்வு ஆகியவற்றை யும் அரசு கட்டுப்படுத்துகின்றது. வாணிகம், ஊதியம், வரி விதிப்பு ஆகியவற்றிற்கான சட்டங்களை இயற்றுவதன்மூலம் நாட் டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு அதிகாரத்தைச் செலுத்துகின்றது.

நான்காவதாக, பொருளாதாரக் காரணங்களுக்கும், அரசி யல் நெருக்கடிகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. நாடுக ளிடையே போர்கள் நிகழ்ந்தமைக்கு இதுவே காரணமாகும்.

ஐந்தாவதாக, முதலாளித்துவ நாடுகளின் பிடியினின்றும் விடுவிக்க, வளரும் இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளுக்கு ரஷ்யா உதவியளித்து வருகிறது. அமெரிக்கா, முதலாளித்துவக் கொள்கையைப் பரப்ப பல பின்தங்கிய நாடுகளுக்குப் பேரளவில் பொருளாதார உதவியை வழங்குகிறது.

இறுதியாக, பொருளாதார மேம்பாட்டை அரசியல் நிலைகள் பாதிக்கின்றன. அரசியல் சுதந்திரம் கொண்ட ஒரு நாடு அத னுடைய சொந்தக் கொள்கைகளை நாட்டு மக்களின் நலனிற்காகத் தடையின்றி நிறைவேற்றலாம். 'காலனி' ஆதிக்கத்திலிருந்த நாடுகள் விடுதலையடைந்த பிறகுதான் குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன.

19ஆம் நூற்றாண்டில் மேற்கத்திய நாடுகளில் 'தலையிடாமைக் கொள்கை' (laissez-faire) செல்வாக்குக் கொண்டிருந்தது. அந்த நாடுகளின் அரசுகள் 'காவல் அரசுகளாகவே' (Police States) செயலாற்றின. இன்று அக் கொள்கையில் இருந்த குறைபாடுகளை உணர்ந்து, முதலாளித்துவ நாடுகளும் கூட பொருளாதார நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அறிந்து, அதற்கேற்பச் செயல்படுகின்றன.

**(ஈ) பொருளியலும் அறநெறியியலும்** (Economics and Ethics): நம் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் அறநெறியை ஒட்டியே அமைந்தால் பூசல்கள் எழமாட்டா. சமூக நலத்தைக் காக்க, அன்றாட வாழ்வில் நாம் பொருளியல் நடவடிக்கைகளை அறிவியலோடு இணைக்கவேண்டும். பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய பொருளியலாளர், அவற்றை அறவழிகளில் செய்தல் அவசியம். உற்பத்தி மற்றும் பங்கீடு ஆகியவையும் அறநெறியோடு அமைதல் இன்றியமையாதது. அறநெறியியலின் அடிப்படையில் ஒவ்வொரு சமுதாயமும் பொருளாதாரச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டவேண்டும். செல்வப் பங்கீட்டிலுள்ள வேறுபாடுகளை நீக்குதல், வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துத் தேசிய வருமானத்தை மக்களிடையே சமமாகப் பங்கிடுதல் ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் அறநெறியியலைச் சார்ந்தவையே.

மனித வாழ்வில் நற்பண்புகளை வளர்ப்பது அறநெறியியல், அது எவ்வகைச் செயல்கள் சரியானவை, எவை தவறானவை என்பதைப் போதிக்கிறது. பொருளியலும் அறநெறியியலும் மனித நல்வாழ்வையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன. பிகு போன்ற பொருளியலாளர்கள் அறநெறியியலின் 'கைப்பாவையாக' பொருளியலை வர்ணிக்கின்றனர். இந்தியாவில் தமிழ்நாடு போன்ற ஒருசில மாநிலங்களில், மக்கள் நலத்தைக் கருத்திற்கொண்டு, மதுவிலக்கு அமுலாக்கப்படுகிறது.

மனிதனின் பொருள்சார் நலத்தை மேம்படுத்துவதே பொருளியலின் நோக்கமென்று மார்ஷல் கூறுகிறார். அறநெறிக்கு ஒப்பவே அதிக வருமானத்தைப் பெறுபவர்கள், உயர்வான செல்வத்தைக் கொண்டவர்கள் ஆகியோர் மீது உயர்வீத வரிகள் விதிக்கப்படுகின்றன. 'இப்படித்தான்' நேர்மையாக வாழவேண்டுமென அறிவுறுத்துவது அறநெறியியல்.

சுவாமி விவேகானந்தர், 'பசியோடு இருப்பவனிடம் பக்தியைப் பற்றிப் பேசுவது பயனற்றது' என்றார். செலிக்மேன்

(Seligman) 'பொருளாதார நடவடிக்கை ஒழுக்கச் செய லாக இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார். அண்ணல் காந்தி, 'அறநெறியில்லாத பொருளியல் ஆன்மாவற்ற உடல்' எனக் கூறி னார். இவையனைத்தும் பொருளியலுக்கும் அறநெறியியலுக்கும் உள்ள ஆழ்ந்த தொடர்பினைக் காட்டுகின்றன.

**(உ) பொருளியலும் சட்டவியலும்** (Economics and Jurisprudence): ஒரு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே பொருளாதார நடவடிக்கைகள் நடைபெறவேண்டும். சட்ட மன்றம் நாட்டின் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப சட்டங்களை இயற்றுகிறது. அரசு நிறைவேற்றும் சட்டங்களுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாடு செல்வம் கொழிக்க, அரசு திட்டங்களைத் தீட்டி சட்டங்களை நிறைவேற்றுகிறது.

இந்தியாவில் மூலதனத் திரட்சி (capital formation) குறைவாக உள்ளது. அயல்நாட்டவர் இங்கு முதலீடு செய்ய நம் நாட்டுச் சட்டங்கள் தடையாக இல்லை. அந்நிய அரசுகளின் மூலதனத்தாலும், வெளிநாடுகளிலுள்ள தனியாரின் மூலதனத் தாலும் நம் பொருளாதாரம் பெரிதும் வளர்ந்துள்ளது. ஆனால், நம் வரிவிதிப்புச் சட்டங்கள் சரியானவை என்று கருத முடியாது. ஏனெனில், அரசின் வரிவிதிப்புகள் பெரும்பாலும் வறியவர்களை யும் நடுத்தர வகுப்பினரையுமே பாதிக்கின்றன. உழைப்பாளர் நலச் சட்டங்களாலும், தொழிலாளர் சங்கங்களின் உரிமைகள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுவதாலும் பல தொழில்களில் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும், முற்றுகைப் போராட்டங் களுமே பெருகியுள்ளன. ஆயினும், இந்திய அரசு 'சமதர்மத்தை' நிலைநாட்டவும், பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்த வும் பல புதிய சட்டங்களை இயற்றிவருகின்றது.

பொருளாதார நடவடிக்கைகள் ஒழுங்குபட சட்டங்கள் உதவுகின்றன. சட்டத்திற்கு முரண்பட்ட நடவடிக்கைகள் தண்டிக்கப்படுகின்றன. சான்றாக, பொருள்கள் உற்பத்தி-விற்பனை யில் கலப்படத்தை நீக்க சட்டங்கள் உதவுகின்றன.

**(ஊ) பொருளியலும் உளவியலும்** (Economics and Psychology): மனிதமனம் எவ்வாறு செயல்படுகின்றது என்பதை உளவியல் ஆய்கின்றது. உளவியல் அடிப்படையிலேயே பல பொருளாதார விதிகளும் எழுதப்பட்டுள்ளன. விலைகளைக் கூட்டினாலோ, குறைத் தாலோ விற்பனை எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை

வியாபாரி உணர உளவியல் கருத்துகள் உதவுகின்றன. தொழிற் கூட முதலாளிகள் தொழிலாளர்களிடையே சமூக உறவைப் பெறவும் உளவியல் வகை செய்கிறது. சட்டங்கள் இயற்றப் படுவதற்கு முன், மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பி னர்கள் மக்கள் கருத்துகளைச் சட்டமன்றத்தில் விவாதித்து முடிவுக்கு வருகின்றனர்.

மனிதனின் மனப்பாங்கு அவனது பொருளாதார நட வடிக்கைகளைப் பாதிக்கிறது. பொருளியலின் பல விதிகளும் கருத்துகளும் மனிதனது உள்ளப்பாங்கினை ஒட்டி அமைந்துள்ளன. சான்றாக, 'தேவை-அளிப்பு விதி, துய்ப்போர் உபரிக் கோட்பாடு, குறைந்துசெல் பயன்பாட்டு விதி' ஆகியவற்றையும், 'பயன்பாடு, விருப்பம், ஊக வாணிகம்' ஆகிய கருத்துகளையும் குறிப்பிடலாம். இதனாலேயே ராபின்ஸ், 'பொருளியலாளர் உளவியலாளராகவும் இருத்தல்வேண்டும்' என்று கூறுகிறார். நுகர்வோருடைய மனதைக் கவர்ந்து பொருள்களை விற்பனை செய்யவே உற்பத்தி யாளரால் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

(எ) **பொருளியலும் புவியியலும்** (Economics and Geography): ஒரு நாட்டிலுள்ள மக்கள் வாழ்வுக்கும் அந் நாட்டின் இயற்கை வளம், தட்பவெப்ப நிலை, புவி அமைப்பு ஆகியவற்றிற் கும் உள்ள தொடர்பைப் புவியியல் ஆய்கிறது. இதனால், பொரு ளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன. ஆக்கக் காரணிகளில் ஒன்றான நிலம் புவியியல் ஆய்வுக்குப்பட்டது. தொழிற்சாலைகளை அமைக்க புவியியல் அறிவு தேவை.

பொருளாதார முன்னேற்றத்திற்கும் புவியியலமைப்புக்கும் தொடர்புள்ளது. இயற்கை வளங்களையும், செயற்கை வசதி களையும் சிறப்பாகப் பயன்படுத்தினால் பொருளாதார வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்தலாம்.

(ஏ) **பொருளியலும் புள்ளியியலும்** (Economics and Statistics): புள்ளியியல் விவரங்களின்றிப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இயலாது. புள்ளி விவரங்களின் உதவியுடன் எவ்விதச் சிக்கலுக்கும் முடிவு காணலாம். புள்ளியியல் வெவ் வேறு பொருளாதாரத் துறைகளைச் சார்ந்த விவரங்களைச் சேக ரித்துக் கணித்து, வகைப்படுத்தித் தொகுத்தளிக்கிறது. பொரு ளியல் நடவடிக்கைகளைத் தெளிவாக உணர புள்ளி விவரங்கள் தேவை.

மக்கள்தொகைப் பெருக்கம், தேசிய வருமான வளர்ச்சி, வள வைப்பு, வேலைவாய்ப்பு, உற்பத்தியளவு, நுகர்வளவு, பகிர் வளவு போன்றவற்றின் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டால்தான் பொருளியல் பிரச்சினைகளை எளிதில் முடிவுக்குக் கொண்டு வரலாம். பொருளாதாரக் கோட்பாடுகளையும், விதிகளையும், கருத்துகளையும் உருவாக்க புள்ளிவிவரங்கள் இன்றியமையா தவை. புள்ளியியல் இல்லையேல் பொருளாதார முன்னேற்றத்திற் கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முடியாது.

**(ஐ) பொருளியலும் வாணிகவியலும்** (Economics and commerce): பொருள்களை விற்றலும் வாங்குதலும் வாணிக மாகும். போக்குவரத்து வசதிகள், வங்கிகள், காப்புறுதி நிறு வனங்கள் (insurance companies) போன்றவை வாணிகம் நடத்த வசதிகளாக இருக்கின்றன. உற்பத்தியாளரிடமிருந்து நுகர் வோருக்குப் பொருள்கள் சென்றடைய வாணிகர்கள் உதவுகின் றனர். இவ்வாறு சமுதாயத்தின் ஒரு பிரிவு மக்களிடமிருந்து மற்றொரு பிரிவு மக்களுக்குப் பொருள்கள் மாற்றப்படுவதையே வாணிகவியல் குறிக்கும். உற்பத்தி, நுகர்வு, மாற்று, பகிர்வு ஆகியவற்றின் கோட்பாடுகளைப் பற்றியதே பொருளாதாரம். வாணிகவியல் பொருளியலின் ஒரு பிரிவாக உள்ளது. வாணிகம் அல்லது வியாபாரத்தில் பொருளாதாரக் கருத்துகள் செல்வாக்கைப் பெற்றுள்ளன.

**(ஒ) பொருளியலும் கணிதவியலும்** (Economics and Mathematics): கணிதவியலைச் சமூகவியலாகக் கொள்ள இய லாது. எனினும், இவ் வறிவியல் பொருளியலோடு அண்மை ஆண்டுகளில் மிக நெருங்கிய தொடர்பைப் பெற்றிருக்கிறது. பொருளியலின் சந்தை மதிப்பு, பண அளவைக் கோட்பாடு, குறைந்துசெல் பயன்பாட்டு விதி, உள்ளீட்டு-உற்பத்தி ஆய்வு, தேசிய வருமானக் கணக்கெடுப்புப் போன்றவற்றில் கணிதவிய லால் நன்மைகள் விளைந்துள்ளன. பொருளாதார வரைபடங் களும் கணிதவியல் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இவற்றின் காரணமாகவே இன்று 'கணிதவியல் பொருளாதாரம்' (mathematical economics) தனியானதொரு பாடமாகவே பயிலப் படுகிறது.

பொருளியலைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள, மற் றைய அறிவியல்களுக்கும் பொருளியலுக்கும் உள்ள தொடர்பு களைப் புரிந்துகொள்வது அவசியம். பிற சமூகவியல்கள் பொரு ளியலின் வளர்ச்சிக்கு உதவுகின்றன; பொருளியலும் மற்ற சமூக வியல்களின் மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கின்றது.

# 3. பொருளியலின் முக்கிய பிரிவுகள்

பொருளியலில் பல பகுதிகள் உள்ளன. அவற்றைப் பொருளியல் அறிஞர்கள் நுகர்வு (consumption), உற்பத்தி (production), மாற்று (exchange), பகிர்வு (distribution) என்ற நான்கு பெரும் பிரிவுகளின் கீழ் ஆய்வு செய்துள்ளனர். மனித விருப்பங்களின் அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகக் கிடைக்கும் உற்பத்தி நுகரப்பட்டு மன நிறைவு எய்தப்பெறுகிறது. சமீப காலத்தில் பொருளியலாளர்கள் பொது நிதியையும், பொருளியலின் மற்றொரு முக்கிய பிரிவாகச் சேர்த்துள்ளனர்.

இந்த ஐந்து பெரும் பிரிவுகளின் கீழ் மனித விருப்பங்கள், நுகர்வு விதிகள், ஆக்கக் காரணிகள், வாணிகம், பொருள்களின் விலை நிர்ணயம், பணம், வங்கி, வாரம், வட்டி, கூலி, இலாபம், வரிவிதிப்புப் போன்ற பல உட்பகுதிகள் அடங்குகின்றன.

பொருளியலின் இப் பல்வேறு பிரிவுகளும், உட்பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை.

### (1) நுகர்வு (Consumption)

பொருளியலின் நுகர்வு என்ற பிரிவில் மனித விருப்பங்களைப் பற்றியும், அவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது குறித்தும் படிக்கிறோம். விருப்பங்கள் இல்லையேல் பொருளாதார நடவடிக்கைகள் இல்லை. விருப்பம் நிறைவு செய்யப்படுவதே நுகர்வு. ஆசிரியர், மருத்துவர், வழக்குரைஞர் ஆகியோருடைய பணிகளைப் பயன்படுத்திக்கொள்வதும் பொருளியலில் நுகர்வாகக் கருதப்படுகிறது. இப் பிரிவில் விருப்பங்களின் இயல்பு — பருப்பு, குறைந்துசெல் பயன்பாட்டு விதி, எங்கெலின் குடும்பச் செலவீட்டு விதி (Engel's law of family expenditure), தேவை விதி, பதிலீட்டு விதி (law of substitution), நுகர்வோர்

உபரி (consumer's surplus), தேவை நெகிழ்ச்சி (elasticity of demand) ஆகியவற்றை ஆராய்கிறோம். விருப்பமே இவை யாவற்றிற்கும் தூண்டுகோலாகவும், அடிப்படையாகவும் அமைகிறது. விருப்பு-வெறுப்பில்லாதவர்கள் துறவிகள் என்று சொல்லப்படுகின்றனர். ஆனால், 'துய்ப்பு' (consumption) மற்றும் ஆசையைத் துறந்த உண்மைத் துறவிகளே இன்று நாம் காணமுடிவதில்லை.

## (2) உற்பத்தி (Production)

பொருள்களையும் பணிகளையும் உருவாக்கும் மனித முயற்சிகள் இப் பிரிவில் விளக்கப்படுகின்றன. குறிப்பாக நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு ஆகியவை எவ்வாறு ஒருங்கிணைந்து உற்பத்திப் பணியை முடிக்கின்றன என்பதை அறிகிறோம். ஆக்கக் காரணிகளின் முக்கியத்துவத்தையும், அவற்றின் திறனையும் ஆராய்கிறோம். செல்வத்தை உருவாக்குவதே உற்பத்தி எனப்படும். பயன்பாடுகளைத் தோற்றுவிப்பதே ஆக்கமாகும். பயன்பாடு என்பது தேவையைப் பூர்த்திசெய்யும் திறனைக் குறிக்கும். பயன்பாடு மூன்று வகைப்படும். அவையாவன: உருவப் பயன்பாடு, இடப் பயன்பாடு, காலப் பயன்பாடு. இந்த உற்பத்திப் பிரிவில், ஆக்கக் காரணிகளைச் சார்ந்த விதிகளைப் பற்றி படிக்கின்றோம். உதாரணத்திற்கு மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டையும் (Malthusian theory of population), விளைவு விதிகளையும் (laws of returns) குறிப்பிடலாம். இப் பகுதியில் தொழில் அமைப்புகள், தொழில்களின் இடச்செறிவு (localisation of industries) ஆகியவற்றையும் கற்கின்றோம்.

## (3) மாற்று (Exchange)

பொருள்கள் மற்றும் பணிகளை மாற்றுவது அவற்றின் தேவை-அளிப்புக் காரணிகளுக்கேற்ப அமையும். விற்றலும் வாங்குதலும் சந்தையில் நிலவும் விலைகளுக்குத் தக்கவாறு இருக்கும். உலகில் எந்த ஒரு தனி மனிதனும் தனித்து வாழ முடியாது. பொருள்கள் பிற பொருள்களுக்கும், பணத்திற்கும் மாற்றப்படுகிறது. சந்தையில் நிலவும் வெவ்வேறு போட்டி நிலைகளையும், விலை நிர்ணயத்தையும், பணத்தின் பணிகளையும், வங்கிகளின் நிலையையும், பன்னாட்டு வாணிகத்தையும், சந்தை நிலவரங்களையும் பற்றி இப் பிரிவில் ஆய்கிறோம். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே பண்டங்களும் பணிகளும் எவ்வாறு பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்பதை மாற்று என்ற இப் பிரிவு உணர்த்துகிறது.

### (4) பகிர்வு (Distribution)

நிலத்திற்கான வாரமும் (rent), உழைப்பிற்கான ஊதியமும் (wage), மூலதனத்திற்கான வட்டியும் (interest), தொழிலமைப்பிற்கான இலாபமும் (profit) எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை இப் பிரிவு விளக்குகிறது. உற்பத்தி மூலம் கிடைக்கும் மொத்த வருவாய் ஆக்கக் காரணிகளிடையே எவ்வாறு பங்கிடப்படுகிறது என்பதும் தெரியவருகிறது. பணிகளுக்கேற்ப ஒவ்வொரு காரணியும் ஊதியத்தை அல்லது வருவாயைப் பெறுகின்றன. இவற்றிற்கான பொருளாதார விதிகளையும் இப் பிரிவில் பயில்கிறோம்.

### (5) பொது நிதி (Public Finance)

வரிவிதிப்பு, பொதுச் செலவீடு (public expenditure), பொதுக் கடன் (public debt) ஆகியவை இதில் அடங்கும். பொது நிதியியல், அரசு வருவாயை எவ்வாறு பெறுகின்றது என்பதையும், அதை மக்கள் நலனுக்காக எப்படிச் செலவிடுகின்றது என்பதையும் விளக்குகிறது.

### பொருளியலின் பிரிவுகளுக்கு இடையேயுள்ள தொடர்பு

ஐம்பெரும் பிரிவுகளாகப் பொருளியலைப் பகுத்திருப்பதால், இவை ஒவ்வொன்றும் தனித்தனியானவை என்று நினைப்பது தவறு. இவை யாவும் ஒன்றையொன்று சார்ந்து தொடர்பு கொண்டுள்ளன. படிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் வசதியாகவே இவ்வாறு பிரிவுகளாக்கப்பட்டிருக்கின்றன.

#### (i) நுகர்வும் உற்பத்தியும்

இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு வெளிப்படையானது. நுகரவேண்டுமென்ற நுகர்வோரின் விருப்பம் உற்பத்திக்கு வித்திடுகிறது. உற்பத்தியின் அளவுக்கும் இயல்புக்கும் ஏற்ப நுகர்வு அமைவதும் உண்டு. உற்பத்தியும் நுகர்வும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. மலிவாகவும் ஏராளமாகவும் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளின் நுகர்வு உயரளவில் இருக்கும். ஆனால், நுகர்வு அளவின் நிலைக்கேற்பவே உற்பத்தியாளர்கள் பொருள்களின் ஆக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

#### (ii) நுகர்வும் மாற்றும்

இந் நாளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள வசதிகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப பொருள்கள் உற்பத்தி

யாகின்றன. பொருள்களையும், பணிகளையும் மாற்றம் செய்யாமல் நுகர்வு திறைவுபெறுது. ஒருவர் தன்னிடம் உள்ள பண்டத்தையோ பனியையோ விற்றுவிட்டு, தனக்கு அதிக பயன்பாட்டை அளிக்கும் நுகர்வைச் செய்ய 'மாற்று' உதவுகின்றது. நுகர்வே மாற்றுக்கு அடிப்படை; நுகர்வின் அளவுக்கு ஏற்ப மாற்றின் அளவும் இருக்கும்.

### (iii) நுகர்வும் பகிர்வும்

தேசிய வருமானம் உற்பத்திக் காரணிகளிடையே எங்ஙனம் பங்கிடப்படுகிறது என்பதைப் பகிர்வில் அறிகிறோம். ஆக்கக் காரணிகள் அவற்றின் நுகர்வுக்குத் தேவையானவற்றைப் பெற ஆக்கப் பணிகளைச் செய்கின்றன. பகிர்வின் வாயிலாகக் கிடைக்கும் வருமானத்தை அவை நுகர்வதற்குப் பயன்படுத்துகின்றன.

நுகர்வோர் அனைவருக்கும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை அளித்துவிட்டால், அவர்களின் பணியாற்றுந் திறன் உயர்வாக இருக்கும். அவர்கள் திறமையோடு உழைத்து மேலும் உற்பத்தியைப் பெருக்குவர். ஒருவருடைய நுகர்வின் அளவு அவருடைய வருமானத்திற்கேற்ப அமையும். குறைந்தளவு கூலியைப்பெறும் ஒருவரின் வாழ்க்கைத் தரம் தாழ்வானதே; அவர் குறைவாகவே நுகர இயலும்.

இன்றைய நிலைகளில் உற்பத்தியைவிடப் பகிர்வுச் சிக்கல்களே மிகுதியாக உள்ளன. மக்களின் நல்வாழ்வு உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் பணிகளும் எவ்வாறு பங்கிடப்படுகின்றன என்பதைப் பொருத்து அமையும். செல்வமானது ஒரு நாட்டில் சமமாகப் பங்கிடப்பட்டால்தான் மக்களது வாழ்க்கைத் தரம் உயரும்.

### (iv) உற்பத்தியும் மாற்றும்

'மாற்று' இல்லாமல் உற்பத்தி முழுமைபெறுது. உற்பத்திப் பொருள்கள் நுகர்வோரைச் சென்றடையவேண்டும். 'மாற்று' இன்றி இது நடைபெறுது. சந்தைகளில் விற்று வாங்கும் முறையால் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. ஆனால், மாற்றும் உற்பத்தியைச் சார்ந்துள்ளது. பொருள்கள் உற்பத்தி செய்யப்படாவிட்டால், அவற்றை மாற்றுவதற்கான தேவையே எழாது.

### (v) உற்பத்தியும் பகிர்வும்

ஒரு நாட்டின் உற்பத்தியளவு உயர்வாக இருப்பின், உற்பத்திக் காரணிகளுக்கான பங்கும் உயரளவில் அமையும். எனவே,

பகிர்வின் அளவு மொத்த உற்பத்தி அளவுக்குத் தக்கவாறு இருக்கும். பகிர்வு செய்யப்படுவதற்கு முன்பாக உற்பத்தி முடிவடைந்திருக்கவேண்டும். உற்பத்தியும் பகிர்வைச் சார்ந்து அமைகிறது. ஒருவருடைய வருமானம் அவரின் திறனையும், அவர் உற்பத்தி செய்யும் பொருளின் அளவையும் நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களுடைய ஊதியத்தை உயர்த்துதல், ஒரு நாட்டின் உற்பத்தித் திறன் உறுதியாக மேம்பாடடையும். இதனால், நாட்டு ஆக்கத்தின் அளவும் அதிகரிக்கும்.

### (vi) நுகர்வும் பொது நிதியும்

பொது நிதி முறையால் நுகர்வைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதிகரிக்கவோ இயலும். வருமான வரி, ஆயத் தீர்வை (excise duty), விற்பனை வரி ஆகியவை நுகர்வைக் குறைக்கின்றன. மான்யங்கள் அல்லது கொடைகள், நிவாரண நிதி, முதுமைக் கால உதவி, ஓய்வுக்கால ஊதியம், வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு உதவி போன்றவை நுகர்வைப் பெருக்குகின்றன. இதைப் போன்றே நுகர்வும் அரசின் நிதிமுறையைப் பாதிக்கின்றது. நுகர்வு மிகும்போது, மறைமுக வரிகளின் (indirect taxes) மூலம் அரசு வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம்.

உடலின் பல உறுப்புகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது போல, பொருளியலின் வெவ்வேறு பிரிவுகளும் கட்டுக்கோப்பாக மற்றவற்றைச் சார்ந்து செயல்படுகின்றன.

# 4. பொருளியலைப் பயில்வதன் பயன்கள்

பொருளியல் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் தோன்றி வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல். இது அன்றாட வாழ்வில் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் கோட்பாடுகள் நடைமுறைக்கு ஏற்றவையாக இருக்கின்றன. நாட்டின் நிலையை உய்த்துணர ஒவ்வொரு குடிமகனுக்கும் பொருளியல் அறிவு தேவை. உலகநாடுகளின் வரலாறு, பொருளாதாரக் காரணங்களே பல புரட்சிகளுக்கும் போர்களுக்கும் அடிப்படையாக இருந்ததை அறிவுறுத்துகின்றது. பொருளியல் காரணங்களாலேயே பொதுவுடைமை, சமதர்மம், முதலாளித்துவம் போன்ற அரசியலமைப்புகள் உலக நாடுகளிடையே மலர்ந்துள்ளன.

சுவைப்பதற்கு இனிமையானது பொருளியல் பாடம். இதில் வருமானம் ஈட்டப்படும் வழிகளும், செலவிடப்படும் முறைகளும் விளக்கப்படுகின்றன. டர்பின் பொருளியலை 'அறிவாற்றல் பெற்ற சமயம்' (intellectual religion) என்கிறார். மிகப் பழைய காலத்தில் கார்லைல், ரஸ்கின் போன்றோர் பொருளியலை இழிவான இயலாகக் கருதினர். இன்று, இதன் நன்மைகளை உணராதவர் எவருமிலர். இச் சமூகவியல் மனிதனைச் சிந்தித்துச் செயலாற்றத் தூண்டுகிறது. இதனால், எவ்வகைச் சிக்கல்களுக்கும் தீர்வுகாண முடியும்.

பொருளாதார இயலைப் பயில்வதால் விளையும் பயன்களைப் பின்வருமாறு விளக்கலாம்:

### (1) தனிமனிதனுக்குக் கிடைக்கும் நன்மை

பயனுள்ள குடிமக்களைப் பெற, அவர்களுக்குப் பொருளியலறிவைப் புகட்டவேண்டும். 'பொருளியலறிவு ஒருவனைச் சிறந்த குடிமகனாக்குகிறது' என்கிறார் பார்பரா ஊட்டன் (Barbara Wooton). அதனால், அவன் நாட்டின் பொருளாதாரப்

பிரச்சினைகளை இனங்கொண்டுகொள்ள முடிகிறது. அறிவுமிக்க, திறமையான குடிமக்களைப் பெற்ற ஒரு நாட்டின் அரசு ஆட்சியைச் செவ்வனே செய்யமுடியும். நல்லாட்சிக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இந்தியாவில் மக்கள் தொகை மிக அதிகமாக இருப்பதோடு விரைவாகவும் பெருகி வருகிறது. இதனால், உணவுப் பற்றாக்குறை, வேலையின்மை, விலையேற்றம் போன்ற பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. பொருளியலறிவு கொண்ட எவரும் குடும்பநலத் திட்டத்தில் ஈடுபாடு கொள்வர். அத் திட்டம் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஒருங்கே நன்மை பயக்கும்; பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிகோலும்.

### (2) சிந்தனைத் திறன் வளர்ச்சி

சுயமாகச் சிந்திக்கும் திறனைப் பொருளியல் வளர்க்கிறது; பொருளாதார நடவடிக்கைகளைப் பகுத்தாய்வு செய்யத் தூண்டுகிறது. தனிப்பட்டவர்கள் சிந்தித்துச் செயல்படும்போது, அவர்களால் நலமான வாழ்வைப் பெறமுடியும். அச் சிந்தனைச் சக்தியைப்பெற மூளைக்குப் பயிற்சியளிப்பதும் பொருளியலே. பொருளாதார அறிவாற்றல் ஒழுக்கம், தன்னம்பிக்கை, திட்டமிட்டுச் செயல்படுதல் ஆகியவற்றிற்கும் வழிவகுக்கிறது. பொருளியல் அறிவு நிரம்பியவர்கள் எவ்விதப் பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு காணலாம்.

### (3) தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் தலைவர்களுக்கும்

பொருளாதார அறிவுபெற்ற தொழிலாளர்களும், தொழிலாளர் தலைவர்களும் தாங்கள் பணியாற்றும் தொழிற்சாலையின் உற்பத்தி, விற்பனை, இலாபம் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்திருப்பர். உழைப்பாளர் பொருளியல் (labour economics) பொருளாதார இயலின் முக்கிய பிரிவாக இருக்கிறது. தொழிலாளர் தலைவர்கள் இலாப-நஷ்டங்களைப் பற்றிய உண்மையான நிலையைத் தொழிலாளர்களுக்கு உணர்த்தி வேலைநிறுத்தம், முற்றுகைப் போராட்டம் போன்றவற்றைத் தவிர்க்கலாம். தொழிலாளர்கள் கடுமையாக உழைத்து, உற்பத்தியைக் கூட்டி, இலாபத்தைப் பெருக்கி அதிக ஊதியத்தைச் சுமுக முறையில் வேண்டலாம். தொழிற்துறையில் அமைதி நிலவ, அதைச் சார்ந்தவர்களுக்குப் பொருளியலறிவு கற்பிக்கப்படவேண்டும்.

### (4) வாணிகர்கள்

வியாபாரத் தன்மையை உணர்த்தும் உண்மைகளை வாணிகர்கள் அறிந்திருத்தல் அவசியம். பொருளியலறிவு பெற்ற

வாணிகர்கள் சந்தை நிலவரங்களை நன்கறிந்து, அதற்கேற்ப வாணிகத்தைச் செய்து அதிக இலாபத்தைப் பெறலாம்; அல்லது இழப்பைத் தவிக்கலாம். உற்பத்தி, தேவை, அளிப்பு ஆகியவற்றின் புள்ளிவிவரங்களைத் தெரிந்து வியாபாரத்தைச் செய்தால் வாணிகர்கள் பெரும்பாலும் இலாபத்தையே பெறுவர்.

### (5) வங்கியாளர்கள் (Bankers)

வங்கியாளர்கள் பொருளியல் கருத்துகளை அறிவது இன்றியமையாதது. இவர்கள் 'வைப்பு நிதிகளைப்' (deposits) பெற்றுத் தொழிலதிபர்களுக்கும், வாணிகர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் கடனளிக்கின்றனர். பொருளாதாரப் போக்கில் சீர்குலைவு காணப்பட்டால் கடனளிப்பதை இவர்கள் நிறுத்தியோ அல்லது குறைத்தோ விடுதல்வேண்டும். வைப்பு நிதிகளைப் பெற்றுக் கடனளிப்பதோடு, வேறு பல வங்கிப் பணிகளையும் வங்கியாளர்கள் மேற்கொள்கின்றனர். பொருளியலறிவு இன்றி வங்கித் தொழிலைச் செவ்வனே செய்ய இயலாது.

### (6) தொழிலதிபர்கள் (Industrialists)

உலகச் சந்தை நிலவரம், அரசின் ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கை, வரி விதிப்புக் கொள்கை, போக்குவரத்து-செய்தித் தொடர்பு வசதிகள், வங்கி வசதிகள் முதலியவற்றை தொழிலதிபர்கள் அறிந்திருந்தால் எளிதில் இலாபத்தை ஈட்டலாம். எப்பண்டங்களை, எந்த அளவில் எம் முறையில் எக் காலத்தில் உற்பத்தி செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிக்க, பொருளியலறிவு தேவை. இவற்றை நன்குணர்ந்து செயலாற்றினால் உற்பத்திச் செலவைக் குறைத்து இலாபத்தைக் கூட்டலாம்.

### (7) ஆட்சியாளர்கள்

அரசியலறிவோடு பொருளியலறிவும் ஆட்சியாளர்களுக்கு இன்றியமையாதது. ஏனெனில், நாட்டின் எதிர்காலப் பொருளாதார முறையை அவர்கள்தான் உருவாக்குகிறார்கள். பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும்போது, அதைச் செம்மைப்படுத்தும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் அவர்கள் கடமையே. 1930ஆம் ஆண்டு அமெரிக்காவில் பொருளாதாரப் பெருமந்தம் தோன்றியபோது, அதற்குத் தீர்வுகாண ஜனதிபதி ரூஸ்வெல்ட் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த பொருளியலறிஞர் எனப் போற்றிப் புகழப்படும் கெயின்ஸின் ஆலோசனையைப் பெற்றார். மக்களின் நலனைப் பெரிதும் பாதிக்காத வகையில் வரி விதிக்கவும், பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச்

சீரிய வகையில் நிறைவேற்றவும் ஆட்சியாளர்களுக்குப் பொருளியல் அறிவு நிரம்பவேண்டும்.

## (8) உலகப் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள

நாட்டளவோடு இல்லாமல், பன்னாட்டளவிலும் பொருளாதாரச் சிக்கல்களைப் புரிந்துகொள்ள பொருளியலறிவு வேண்டும். ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. வெளிநாட்டு உதவியால்தான் பொகாரோ, ரூர்கேலா, துர்க்காபூர், பிலாய் ஆகிய இரும்பு-எஃகு உருக்குத்தொழிற்சாலைகளை நாம் பெற்றிருக்கிறோம்.

பொதுவாகக் கூறினால், பொருளியலறிவு எல்லாப் பிரிவு மக்களுக்கும் ஏதாவது ஒரு வகையிலாவது பயனளிக்கிறது. தற்பொழுது பொருளியல் நடைமுறைக்கேற்ற அறிவியலாக அமைந்து, பல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது.

# 5. பொருளியல் விதிகள்
## (Economic Laws)

பொருளியல் ஓர் அறிவியல். எனவே, அது பிற அறிவியல் களைப் போன்று விதிகளைக் கொண்டுள்ளது. சில குறிப்பிட்ட நிலைகளில், இவை இப்படித்தான் நடக்கும் என்பதை விதி உணர்த்து கிறது. பொருளாதார விதிகள் 'போக்குரைக் கூற்றுகளாக' அமைகின்றன. மனித நடவடிக்கைகளைப் பற்றிய சமூகவியலே பொருளியல். மனிதனுடைய செயல்பாடுகளில் நிலையான தன்மை யும், உறுதியான போக்கும் காணப்படாது. பொருளியல் விதிகள் சிலவற்றைச் செய்யும்படி மனிதனைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால், அரசு நிறைவேற்றும் சட்டம் அல்லது விதி முறையை அனைவரும் பின்பற்றவேண்டும். இல்லாவிடில் தண்டிக்கப்படுவர்.

அறிவியலுக்குரிய இலக்கணப்படிப் பார்த்தால், பொருளிய லும் ஓர் அறிவியலே. காரணத்திற்கும், விளைவிற்கும் உள்ள தொடர்பை அறிவியல் விதி உணர்த்துகிறது. ஹக்ஸ்லே (Huxley) 'சான்றுகளையும், பகுத்தாய்வுகளையும் சார்ந்திருப்பதே அறிவியல்' என்று குறிப்பிடுகிறார். பொருளியல் விதிகள் சான்றுகளோடு எழுதப்பட்டு, மனித நடவடிக்கைகளின் காரண-காரியங்களை ஆராய்கின்றன.

மனிதனின் 'பொருள்சார்' நடவடிக்கைகளைப் பற்றிய பல விதிகள் பொருளியலில் வகுக்கப்பட்டுள்ளன. அவை அறிவியல் விதிகளைப் போன்றே, பொருளாதார நடவடிக்கைகளுக்கான காரணங்களையும், விளைவுகளையும் கூறுகின்றன. இதற்கு உதாரண மாகத் தேவை விதியைக் குறிப்பிடலாம். 'விலை குறையும்போது பொருளின் தேவை அதிகரிக்கும்; விலை உயரும்போது தேவை குறையும்' என்று தேவை விதி. இதில் தேவை மாற்றம்

(தேவை அதிகரிப்பு அல்லது தேவைக் குறைவு) 'விலைவாகவும்', விலைமாற்றம் (விலைக் குறைவு அல்லது விலை உயர்வு) 'காரணமாக வும்' இருப்பது அறியத்தக்கது.

ஆனால், அறிவியல் விதிகள் போன்று பொருளியல் விதிகள் திட்டவட்டமாகவும் துல்லியமாகவும் இருப்பதில்லை. பொருளா தார நடவடிக்கைகளில் மனித உணர்ச்சிகளும், எண்ணங்களும் செல்வாக்குப் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். மேலும், மனிதனுடைய இயல்பையும், மனப்போக்கையும் கட்டுப்படுத்து வது எளிதல்ல.

செல்வத்தை நுகர்ச்சி செய்து, உற்பத்தி செய்து, மாற்றம் செய்து, பகிர்வு செய்து மனிதன் பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபடும்போது ஏற்படும் சாத்தியமான காரணம் ஏற் படுத்தும் விளைவைப் பொருளியல் விதிகள் அறிவுறுத்துகின்றன.

பொருளியலில், 'குறைந்துசெல் பயன்பாட்டு விதி, விளைவு விதிகள், தேவை விதி, அளிப்பு விதி, பதிலீட்டு விதி, துய்ப்போர் உபரி விதி, மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு, எங்கெலின் குடும்பச் செலவீட்டு விதி, பணத்தைப் பற்றிய கிரஷம் விதி' போன்ற எண்ணற்ற விதிகள் உள்ளன. அவற்றின் தன்மைகளைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்:

**பொருளியல் விதிகளின் தன்மைகள்**

**(1) பொருளியல் விதிகள் போக்குரைக் கூற்றுகள்:** குறிப் பிட்ட நிலைகளில் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கக்கூடும் என்பதைப் பொருளியல் விதிகள் விளக்கு கின்றன. மார்ஷல் பொருளியல் விதிகளைப் 'பொருளாதாரப் போக்குகள் குறித்த கூற்றுகள்' (statements of economic tendencies) என்கிறார். மனிதனின் அன்றாட வாழ்க்கை நட வடிக்கைகளில் இருந்து பொருளாதார விதிகள் உருவாகியுள்ளன. எனினும், எல்லாச் சூழ்நிலைகளிலும் மனிதன் பொருளாதார விதிகளின்படியே செயல்படுவான் என எதிர்பார்ப்பது தவறு. அவ் விதிகளுக்குச் சில விலக்குகளும் உள்.

சான்றாகத் தேவை விதியையே எடுத்துக்கொள்ளலாம். இதன்படி, 'விலை அதிகமாக இருக்கும்போது ஒரு பொருள் குறைவாகவும், விலை குறைவாக அமையும்போது அதிகமாகவும் வாங்கப்படும்.' ஆனால், எப்படிச் செலவழித்தும் தீராத செல்வத்தையும் வருமானத்தையும் கொண்டவர்கள் விலை அதிக

மாக இருக்கும் ஒரு பொருளையும் அதிக அளவிலேயே வாங்குகின்றனர்.

**(2) பொருளியல் விதிகள் 'எடுகோள்களுக்கு'** (Assumptions) **உட்பட்டவை:** குறிப்பிட்ட சில காரணிகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இருக்கும்போது மட்டுமே பொருளியல் விதிகள் சரியாகச் செயல்படுகின்றன. எல்லாப் பொருளியல் விதிகளும் சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவ் விதிகளில் 'மற்றவை மாறுமல் இருப்பின்' (other things remaining the same) என்ற பதத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இதற்கும் தேவை விதியை உதாரணமாகக் கொள்ளலாம். 'நுகர்பவரின் வருமானம், பதிலீட்டுப் பொருளின் விலை, விருப்பம்' போன்ற பிற காரணிகள் மாறுமல் இருந்தால்தான், விலை குறையும்போது பொருளின் தேவை கூடி, விலை அதிகரிக்கும் போது தேவை குறைவடையும்.

**(3) அறிவியல் விதிகளைப் போன்றவை பொருளியல் விதிகள்:** காரணத்தையும், விளைவையும் தொடர்புபடுத்திக் கூறுபவை அறிவியல் விதிகள். இவை போன்றவையே பொருளியல் விதிகள். உதாரணத்திற்குக் குறைந்துசெல் பயன்பாட்டு விதியைக் குறிப்பிடலாம். ஒருவர் தொடர்ச்சியாக ஒரு பொருளை நுகரும்போது, இறுதி அலகுகளில் 'இறுதிநிலைப் பயன்பாடு' (marginal utility) குறையுமென்று கூறுகிறது இவ் விதி. இதில் 'நுகர்வு' காரணமாகவும், 'பயன்பாடு' விளைவாகவும் இருப்பதை அறிகிறோம்.

**(4) அறிவியல் விதிகளைப் போலன்றிப் பொருளியல் விதிகள் துல்லியமற்றவை; உறுதிநிலையற்றவை:** கணிதம், பௌதிகம், இரசாயனம் போன்ற அறிவியல்களின் விதிகள் திட்டவட்டமானவையாகவும், துல்லியமானவையாகவும் உள்ளன. புவியீர்ப்பு விதி, மிதப்பு விதி, அணுவின் கோட்பாடு ஆகிய அறிவியல் விதிகளை எடுத்துக்கொண்டால், அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. இவற்றைப் போன்றவையே இயற்கை அறிவியல்களின் விதிகளும், இவ் விதிகளின் உண்மைகளை ஆராய்ச்சிக் கூடங்களில் பரிசோதனை செய்து துல்லியமானவை என்று நிரூபிக்கலாம். ஆனால், பொருளியல் மாறுபட்ட மனநிலைகளைக் கொண்ட மனித நடவடிக்கைகளை ஆராய்கிறது. காரணிகள் மாறும்போது, பொருளியல் விதிகள் சரியானபடி செயற்படாமற் போகவும் வாய்ப்புண்டு.

**(5) பொருளியல் விதிகளில் சில எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும் பொருந்துபவை :** எல்லா இடங்களுக்கும், எக்காலத்திற்கும் ஏற்புடைய பொருளியல் விதிகளும் இருக்கின்றன. சான்றாக நிலத்தில் செயல்படும் 'விளைவு விதிகளைக்' (laws of returns) குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில், உழைப்பும் மூலதனமும் கலந்த இடுமானங்களை முதலீடாக்கும்போது முதற்சில நிலைகளில் உற்பத்தி வளர்ந்து செல்நிலையும், பிறகு மாறு நிலையிலும், இறுதி நிலைகளில் குறைந்து செல் நிலையிலும் இருக்கும். இந்திய வேளாண்மை நிலங்களில் உற்பத்தி முதல் நிலையிலும், அமெரிக்கா-கனடா போன்ற நாடுகளில் உற்பத்தி இரண்டாவது நிலையிலும் இருப்பதாகக் கருதலாம். 'குறைந்து செல் பயன்பாட்டு விதியும்' இதற்குப் பொருத்தமான எடுத்துக் காட்டாகும்.

**(6) பொருளியல் விதிகள் ஊகங்களின் அடிப்படையிலானவை:** பொருளாதாரச் சூழ்நிலைகள் மாறுபடும்போது பொருளியல் விதிகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலைகள் இருப்பின், பொருளியல் விதிகள் இவ்வாறு செயல்படுமென்று ஊகிக்கப்படுகிறது. சில சமயங்களில் அதில் தவறுகளும் ஏற்படலாம். ஆனால், பெரும்பாலும் இவ் விதிகள் வரையறுக்கப்பட்டுள்ள நிலைகளுக்கேற்பவே செயல்படுகின்றன.

**(7) காலம் இடம் போன்றவற்றிற்கேற்ப சில பொருளியல் விதிகள் மாறக் கூடியவை :** பொருளாதாரச் சூழ்நிலைகள் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதில்லை. முன்னேற்றமடைந்த மேலை நாடுகளில் பல முதலாளித்துவ முறையையும், வளர்ச்சியடைந்துவரும் கீழைநாடுகள் சமதர்ம முறையையும் பின்பற்றிவருகின்றன. கெயின்ஸின் கருத்துகள் மற்றும் கோட்பாடுகள் பெரிதும் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளுக்கே பொருந்துகின்றன. மக்கள் வளம், கனி வளம், நில வளம், நீர் வளம், மலை வளம், வன வளம், எண்ணெய் வளம் ஆகியவை பல நாடுகளிலும் வெவ்வேறு அளவுகளில் உள்ளன. இவற்றிற்கேற்ப பொருளாதார - அரசியல் அமைப்பு முறைகள் மாறுபடுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகள் மாறிக்கொண்டே இருக்கக் கூடியவை. பழக்கவழக்கங்கள், நாகரிக முன்னேற்றம், புதிய சட்டங்கள் இயற்றுதல் ஆகியவற்றால் பொருளாதாரப் போக்கில் மாறுதல்கள் தோன்றலாம். இவற்றால் பொருளியல் விதிகளில் உறுதியற்ற நிலை ஏற்படுகிறது. இதனாலேயே மார்ஷல், 'எளி

மையான, திட்டவட்டமான புவியீர்ப்பு விதியோடு பொருளியல் விதிகளை ஒப்பிடுவதைக்காட்டிலும், அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம்' என்கிறார்.

**பொருளியல் விதிகளும் மற்றவிதிகளும்**

**(i) பொருளியல் விதிகளும் அரசின் சட்டங்களும்:** அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது கட்டாயமானது. சட்டங்களை மீறுபவர்கள் தண்டனைக்குள்ளாகிறார்கள். அவர்கள் அபராதம் கட்டுகிறார்கள்; அல்லது சிறைத் தண்டனையை அனுபவிக்கிறார்கள்; அல்லது அபராதத்தோடு சிறைத் தண்டனையையும் பெறுகிறார்கள். இவ்வித இயல்புகள் பொருளியல் விதிகளுக்கு இல்லை. உதாரணத்திற்குத் தேவை விதியை எடுத்துக்கொள்ளலாம். இவ் விதிக்கு மாறாக, ஒருவர் குறைந்த விலையில் குறைவான பொருளையும், உயர்விலையில் அதிக பொருளையும் வாங்கினால், அவரை எவரும் தடுக்கவோ தண்டிக்கவோ முடியாது. ஆனால், அரசு இயற்றியுள்ள சாலைவிதிகளை அனுசரிக்காத ஸ்கூட்டர் ஓட்டியோ அல்லது காரோட்டியோ தண்டிக்கப்படுகிறார். அவர்கள் வாகனங்களை இயக்குவதற்கான 'உரிமம்' (licence) வைத்திருப்பதோடு, சாலை விதிகளையும் சரிவரப் பின்பற்றவேண்டும். பொருளாதார விதிகளை மீறினால் எவரும் தண்டிக்கப்படமாட்டார்கள்; ஆனால், அவர்கள் பொருள் இழப்பை ஏற்கவேண்டிவரும்.

**(ii) பொருளியல் விதிகளும் அறவிதிகளும் :** ஒழுக்கம் உயிரினும் மேலானது. சமய நம்பிக்கைகள் ஒழுக்கத்தையும் அறவழிகளையும் வளர்க்கின்றன. சமயத்தில் நம்பிக்கையுள்ள ஒருவர் இறைவனுக்குப் பயந்தாவது அறநெறிகளைக் கடைப்பிடிக்கிறார்; நாத்திகவாதி ஒருவர் எவருக்கும் அஞ்சாமல் எதையும் செய்கிறார். ஆனால், இவ்விரு நிலைகளிலும் விதிவிலக்குகள் உள்ளன. சமயவாதி நயவஞ்சகமானவராகவும், நாத்திகவாதி நாணயமானவராகவும் இருக்கின்ற நிலைகளும் உள. பொருளியல் விதிகளை அறநெறிகளோடு பின்பற்றுவது எல்லோருக்கும் நன்மை பயக்கும். அறவழிகளைக் கட்டாயமாகக் கைக்கொள்ளவேண்டுமென சமயங்கள் வற்புறுத்துகின்றன. பொருளியல் விதிகளில் கட்டாய நிலை ஏதுமில்லை.

**(iii) பொருளியல் விதிகளும் அறிவியல் விதிகளும்:** இவை இப்படி நடைபெறக்கூடும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் பொருளியல் விதிகள் அமைந்துள்ளன. அறிவியல் விதிகள் இவை இப்படித்தான் நடைபெறவேண்டும் என்று உறுதியோடு அறுதி

யிட்டுக் கூறுகின்றன. அறிவியல் விதிகளைச் சோதனையிட்டுச் சரியானவை, துல்லியமானவை என நிரூபிக்கலாம். ஆர்கமிடீஸ் தத்துவத்தை இன்றும் நம்மால் திட்டவட்டமாகச் சரிபார்க்க முடிகிறது. ஆனால், மாறும் மனநிலைகளைக் கொண்ட மனிதனின் நடவடிக்கைகளால், பொருளாதார விதிகளை, அனுமானங்களை ஆதாரமாகக் கொண்டே வரையறுக்கலாம்.

**(iv) பொருளியல் விதிகளும் சமூக விதிகளும்:** சமூகப் பழக்கவழக்கங்கள் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடியவை. இவை உலக நாடுகளிடையே பெரிதும் வேறுபடுகின்றன. கலாசாரம், பண்பாடு, நாகரிகம், போன்றவை இடத்திற்கு இடம் மாறுபடுபவை. சமுதாய விதிமுறைகளையும், சட்டதிட்டங்களையும் மதித்துப் பின்பற்றாத மனிதர்களைச் சமுதாயமும் மதிக்காது. கூட்டுறவாடும் சமுதாயம் அம் மனிதர்களைத் தண்டிக்கவும் செய்யும். ஆனால், பொருளாதார விதிகளை ஒருவர் அனுசரிக்காமலும் இருக்கலாம்.

## பொருளியல் விதிகளின் முக்கியத்துவம்

பொருளாதார முன்னேற்றத்திற்கான கொள்கைகளை வகுக்க பொருளியல் விதிகள் உதவுகின்றன. குறைந்துசெல் பயன்பாட்டு விதி ஒரு பொருளின் தேவை, மதிப்பு நிர்ணயம் ஆகியவற்றோடு தொடர்புகொண்டுள்ளது. பொருளியல் விதிகளின் அடிப்படையிலேயே வரிவிதிப்புக் கொள்கைகள் அமைகின்றன. அவை நடைமுறை வாழ்க்கைக்கு நன்மை புரிகின்றன.

விலை குறையும்போழ்து, ஒரு பொருளின் அளிப்புக் குறைவதற்கான காரணங்களும் அறியப்படுகின்றன. குளிர்காலத்தில் ஆரஞ்சு மற்றும் ஆப்பிள் பழங்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. தேவை அந்த அளவுக்கு இல்லாமல் குறைவாக இருப்பதால், அவற்றின் விலைகள் குறைகின்றன. குறைந்துசெல் பயன் பாட்டு விதி ''வளர்வீத வரிவிதிப்புக்கும்' (progressive taxation) வித்திடுகிறது. அதிக வருமானத்தைப் பெறுபவர் அதிக வரியைச் செலுத்தவேண்டும். இந்திய வருமானவரி முறையை இதற்குச் சான்றுகக் கருதலாம். இதன்படி வருமானம் உயரும்போது, செலுத்தவேண்டிய வருமானவரியின் விகிதங்களும் உயர்கின்றன. அதிக வருமானத்தைக் கொண்டிருப்பவர்களுக்குப் பணத்தின் பயன்பாடு குறைந்தளவில் இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே வருமானவரி முறை அமைந்துள்ளது.

நிலத்தில் குறைந்துசெல் விளைவு விதி செயல்படுகிறது என் பதையும் நாம் அறிகிறோம். உழைப்பும் மூலதனமும் கலந்த இடுமானங்களை இருமடங்காக்கி நிலத்தில் முதலீடு செய்தால், உற்பத்தி இருமடங்கு பெருகும் எனக் கருதுவது தவறு. உற் பத்தியில் வளர்ந்துசெல் விளைவு ஒரு குறிப்பிட்ட நிலை வரைதான் ஏற்படும். அதன் பின்பு விளைவில் மாறு நிலை ஏற்பட்டு, இறுதி யில் உற்பத்தி குறைந்துசெல் நிலையை எய்தும்.

மக்கள்தொகைப் பெருக்கவீதம் உணவு உற்பத்திப் பெருக்க வீதத்தைவிட அதிகமாக இருப்பின், ஒரு நாட்டில் பல பிரச்சினை கள் உருவெடுக்கும் என்பதை மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு உணர்த்துகிறது. இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ் தான், சீனா, எகிப்து ஆகிய நாடுகளில் பல பிரச்சினைகள் தோன்றி யுள்ளமைக்கு விரைவான மக்கள்பெருக்கமே மிக முக்கியக் காரண மாகும். குடும்பநலத் திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றி கண்டால்தான், இந் நாடுகள் பல சிக்கல்களையும் முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இவ்வாறு பல வகைகளிலும் பொருளியல் விதிகள் நடை முறை முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றன.

# 6. பொருளாதார வளர்ச்சி நிலைகள்

## (Stages of Economic Development)

மனித சமுதாயம் பல குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி நிலைகளைக்கண்டு வந்துள்ளது. பொருளாதார அமைப்புகள் தொடக்கத்தில் எளிமையானவையாக இருந்தன; தற் பொழுது சிக்கல்கள் உடையனவாக மாறிவிட்டன. உலகின் எல்லா நாடுகளும் பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் படிப்படியாகக் கடந்தே வந்துள்ளன. அவற்றைக் கீழ்க்காணும் ஐம்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேட்டைநிலை, மேய்ச்சல் நிலை, வேளாண்மை நிலை, வாணிக நிலை, தொழில் நிலை.

### (1) வேட்டை நிலை (Hunting Stage)

இந் நிலையில் மனிதன் வேட்டையாடி மீன் பிடித்தான். இது மனித நாகரிகத்தின் மிகத் தொன்மையான நிலை. குறைவான அளவில் மக்கள் காடுகளிலும், கடற்கரை ஓரங்களிலும் வசித்தனர். அவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டனர். உண்ண உணவு கிடைக்காதபோது மனித மாமிசத்தையும் உண்டனர். பண்டைக் கால மனிதனின் தேவைகளும் குறைவானவையே. அவன் பழங்களையும் கிழங்குகளையும் புசித்தான். ஆதி மனிதர்கள் சிறு சிறு கூட்டங்களாக வெவ்வேறு இடங்களில் அலைந்து திரிந்தார்கள். கொடிய மிருகங்களோடு காடுகளில் வசிக்கவேண்டியிருந்தமையால் வாழ்க்கை ஆபத்தானதாக இருந்தது.

செலிக்மேன் (Seligman) கூற்றுப்படி, 'உண்ண உணவின்றி இருந்தபோது, பண்டை மனிதர்கள் தங்களுடைய எதிரிகளின் மாமிசத்தைத் தின்றதோடு மட்டுமன்றி, தங்கள் கூட்டத்திலிருந்த முதியவர்கள் மற்றும் ஏதற்கும் பயனற்றவர்கள் ஆகியோரது மாமிசத்தையும் புசித்தனர்.' அவர்களுடைய வேட்டை

யாடும் தொழிலில் முன்னேற்றமான நுணுக்கங்கள் தோன்றின. ஏரிகளிலும், குளங்களிலும், ஆறுகளிலும், கடலிலும் அவர்கள் மீன் பிடித்தார்கள். மெல்லிய மரப்பட்டைகளையும், விலங்குகளின் தோலையும் ஆடைகளாகப் பயன்படுத்தினர். மரப்பொந்துகளும், மலைக் குகைகளும் அவர்களின் இருப்பிடங்களாக இருந்தன.

படிப்படியாக அவர்கள் வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் கருவிகளை உருவாக்கினர். மரக்கம்புகள், யானைத் தந்தங்கள், விலங்குகளின் எலும்புகள், பற்கள், கற்கள் ஆகியவற்றையே துவக்கத்தில் கருவிகளாகக் கொண்டிருந்தனர். பிறகு, உலோகங்களால் ஆன, வில், ஈட்டி, அம்பு, தூண்டில் போன்றவற்றைச் செய்து பயன்படுத்தினர். தீயின் பயன் அறியப்பட்டது. அவர்கள் நாடோடிகளைப்போல வாழ்ந்தனர்.

வேட்டை நிலையில் மக்கள் வாழ்க்கை ஓரிடத்திலேயே நிலையானதாக இல்லை. நிலம் இயற்கையின் அன்பளிப்பாகவும் எல்லோருடைய பொதுச்சொத்தாகவும் இருந்தது. சிலர் சில விலங்குகளைப் பழக்கித் தமக்குத் துணையாக்கிக் கொண்டனர். பாதுகாப்புக்காகவும், தேனையை ஓட்டியும், வேட்டையாடவும், மீன்பிடிக்கவும் மக்கள் கூட்டம்கூட்டமாக வசித்தனர்.

## (2) மேய்ச்சல் நிலை (Pastoral Stage)

இந் நிலையில் மனிதன் வீட்டில் வளர்க்கும் பிராணிகளை இனங்கண்டு கொண்டான். மனித மாமிசத்தைப் புசிக்கும் பழக்கம் கைவிடப்பட்டது. கால்நடை செல்வமாக மதிக்கப் பட்டு, மனித வாழ்க்கை ஓரளவு சீரடைந்தது. மனிதன் இனத் தோடு சேர்ந்து இங்குமங்கும் அலைந்து திரிந்தான். மக்கள் பெருக்கம் ஏற்பட்டமையால் உணவின் தேவை கூடியது. உணவுக்காக அவர்கள் விலங்குகளை வளர்க்கத் தலைப்பட்டனர். பின்பு, அவற்றைப் பாதுகாப்புக்காகவும், போக்குவரத்துக்காகவும் பயன் படுத்தினர்.

மனிதன் நிலையான வாழ்வை இக் காலத்திலும் பெறவில்லை. அவன் கால்நடைகளைப் பராமரிக்க மேய்சசல் நிலங்களை நாடி வெவ்வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்தான். தனியார் சொத்துரிமை தோன்றியது. கால்நடைகளே சொத்துகளாகக் கருதப் பட்டன. இதனால் செல்வப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றின. காடுகளில் வாழும் வாழ்க்கை கைவிடப்பட்டது. கணிசமான அளவுக்குப் பாதுகாப்பான வாழ்வை மனிதன் பெற்றான்.

உலோகக் கருவிகளில் முன்னேற்றங்கள் செய்யப்பெற்றன. இக் காலத்தில் சிறிதளவு 'வேலைப்பகுப்பும்' (division of labour) இருந்தது. ஆடு-மாடுகளை மேய்த்தமையால் இறைச்சி-பால் ஆகியவை உணவுப் பொருள்களாகவும், தோல்-கம்பளி ஆகியவை ஆடை அணிகளாகவும் கிடைத்தன. கால்நடை பராமரிப்போடு வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்றவையும் தொடர்ந்து செய்யப்பட்டன.

## (3) வேளாண்மை நிலை (Agricultural Stage)

இந்த காலத்தில் மனிதன் உணவுக்காகவும் உடைக்காகவும் நிலத்தைச் சாகுபடி செய்து பல பயிர்களை உற்பத்தி செய்யக் கற்றுக்கொண்டான். நிலம் மற்றும் வீடுகள் தனியார் சொத்துகளாயின. வேலைப்பகுப்பு முறையில் சீரான முன்னேற்றம் காணப்பட்டது. மிகவும் பாதுகாப்பான வாழ்வை மனிதன் பெற்றான். ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவுபெற்றுத் திகழ்ந்தது. முன்னேற்றமடையாத சாகுபடி முறைகள் பின்பற்றப்பட்டன. வாணிக நோக்கோடு வேளாண்மை உற்பத்தி செய்யப்படவில்லை. நீர்ப்பாசனமுறை அறிவைப் பெறவில்லை. மழையை நம்பியே வேளாண்மை செய்யப்பட்டது.

வேளாண்மை நிலையில் பல கிராமங்கள் தோன்றின. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு உணவுப் பொருள்களின் ஆக்கமும் அதிகரித்தது. நாகரிக வாழ்வுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பண்டமாற்று முறையில் உற்பத்திப் பொருள்கள் மாற்றிக் கொள்ளப்பட்டன. நாடோடி வாழ்க்கைநிலை முடிவடைந்தது. சில இடங்களில் நிலம் பொதுச்சொத்தாக இருந்தது. கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான யாவற்றையும் தாங்களே உற்பத்தி செய்துகொண்டனர். சிறிது சிறிதாகக் கிராமங்கள் நகரங்களாக மாறத் தொடங்கின.

ஆற்றோரங்களிலும், ஏரிக் கரைகளிலும் கிராமங்கள் தோன்றலாயின. ஓரளவுக்கு இல்லத் தொழில்களும் வளர்ந்தன. சாகுபடிக் கருவிகளில் முன்னேற்றங்கள் செய்யப்பெற்றன.

## (4) வாணிக நிலை (Commercial Stage)

தொழில்களின் எண்ணிக்கை பெருகியமையால் பொருள்களின் மாற்று நிலைகளும் அதிகரித்தன. விற்றலும், வாங்குதலும் அவசியமாயின. வாணிக - வங்கி அமைப்புகள் தோன்றின. 'பண்டமாற்று முறைக்குப்' (barter system) பதிலாகப் பணமுறை

உருவாயிற்று. தங்கமும், வெள்ளியும் பணமாயின. உள்நாட்டு வாணிகத்தோடு வெளிநாட்டு வாணிகமும் கைக்கொள்ளப்பட்டது. 'மாற்று உண்டியல்கள்' ( bills of exchange) போன்ற கடன் கருவிகளும் (credit instruments) பயன்படுத்தப் பெற்றன. .

சிறிய நகரங்களிலும், பெரிய நகரங்களிலும் மக்கள் நெருக்கம் மிகுந்தது. வேலைப்பகுப்புமுறை செம்மையுற்றது. வருமானத்திலும், செல்வப் பங்கீட்டிலும் இருந்த ஏற்றத்தாழ்வுகள் வெளிப்படையாகத் தெரிந்தன. சந்தைகள் விரிவாக்கம் பெற்றன. உற்பத்தி முறைகளில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டது. மக்களின் தேவைகள் பெருகின. 'தன்னிறைவுக்கான உற்பத்தி' என்ற நிலை மாறி 'சந்தைக்கான உற்பத்தி' என்ற நிலை ஏற்பட்டது.

கைவினைத் தொழில்கள் வளரலாயின. தொடக்கத்தில் சிலவகைக் கற்களும், கால்நடைகளும், உலோக நாணயங்களும் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. போக்குவரத்து வசதிகளும் சீரடைந்தன. வாணிக வளர்ச்சிக்குக் 'கூட்டுப் பங்கு நிறுவனங்களும்' (joint stock companies) வகை செய்தன. நிலக்கிழார்கள் தோன்றினர். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நடுவே இடைநிலைத் தரகர்கள் எண்ணிக்கையில் பெருகினர்.

### (5) தொழில் நிலை (Industrial Stage)

இது பொருளாதார வளர்ச்சியின் இறுதிநிலையாகும். தொழில் நிலையைக் கீழ்க்காணும் நான்கு முறைகளின் முன்னேற்ற அடிப்படையில் விளக்கலாம்:

(1) கைவினைத் தொழில்முறை;

(2) கூட்டுச் சங்கமுறை;

(3) இல்ல முறை;

(4) தொழிற்கூட முறை.

(i) **கைவினைத் தொழில் முறை** (Handicraft System): கிராமத்திலும், நகரத்திலும் வசித்த மக்கள் கருவிகளை உபயோகித்து வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பதை அறிந்தனர். சிலர் அவ் வகைக் கருவிகளை ஆக்கும் கைவினைஞர்களாக மாறினர். தச்சர்கள், கொல்லர்கள், பொன்-வெள்ளி ஆபரணங்களைச்

செய்யும் தட்டார்கள், நெசவாளர்கள், தையற்கலைத் தேர்ச்சியாளர்கள், குயவர்கள் போன்றோர் தனித்தனியே தொழில்களை நடத்தினர். அவர்கள் தம் குடும்பத்தினருடைய உதவியோடு, வேலைப்பகுப்பு முறையைப் புகுத்தி, தங்களுடைய தொழில்களைச் செய்தனர்.

கைவினையாளர்கள் தனிப்பட்ட உற்பத்தியாளர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய இல்லங்களில் கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தனர். இந்நிலைகளிலேயே பணப் பொருளாதாரத்தின் துவக்கம் ஏற்பட்டது. எனினும், தானியம், கால்நடை போன்றவையும் பணத்தின் பணிகளை ஆற்றின.

**(ii) கூட்டுச் சங்க முறை** (Guild System): நகரங்களின் வளர்ச்சியால் கூட்டுச்சங்க முறை உருவெடுத்தது. இம் முறை இடைக்காலத்திலிருந்து 16ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவிலும், மற்ற பல இடங்களிலும் இருந்தது. ஒரே தொழிலைச் சார்ந்த பலரும் ஒருங்கிணைந்து கூட்டாகச் செயலாற்றினர். இவ்வாறு வாணிகக் கூட்டுச் சங்கங்களும், கைவினைஞர் கூட்டுச் சங்கங்களும் அமைந்திருந்தன. இதனால், வாணிகர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் நன்மைகளும், பாதுகாப்பும் கிடைத்தன. விற்பதிலும், வாங்குவதிலும் போட்டியைத் தவிர்த்துச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடைந்தனர்.

இச் சங்கங்களால் கூட்டுறவு வளர்ந்தது; கைவினைஞர்களின் திறமை உயர்ந்தது; பொருள்களின் தரம் அதிகரித்தது; உற்பத்தி கூடியது. ஆனால், சாதி அடிப்படையிலும் இச் சங்கங்கள் வளரலாயின. அவை 'சாதிப் பஞ்சாயத்துகள்' (caste panchayats) என அழைக்கப்பெற்றன. இந்தியாவில் சாதிமுறை பொருளாதார வளர்ச்சியின் முதற் சில நிலைகளில் தோன்றியது. பிறப்பின் அடிப்படையில் இல்லாமல், தொழிலின் அடிப்படையிலேயே சாதிகள் தோன்றின என்பதை நாம் மறக்கவோ மறுக்கவோ இயலாது.

**(iii) இல்ல முறை** (Domestic System) : ஆரம்ப நாட்களில், கைவினைஞர்கள் பொருள்களை உற்பத்திசெய்து நுகர்வோரிடம் நேரடியாக விற்றனர். அவர்களின் உற்பத்தி குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்தவர்களுக்காகவே செய்யப்பட்டது. காலம் செல்லச்செல்ல, பொருள்களின் தேவை பெருகியமையால், சந்தைகள் விரிவடைந்தன. கைவினைஞர்கள் உற்பத்தியையும், சந்தையில் விற்பனை செய்வதையும் ஒருங்கே செய்வது

கடினமாயிற்று. விற்பனை செய்யும் பணியை வாணிகர்கள் ஏற்றுக்கொண்டனர். இதனால், உற்பத்தி கூடியது. தரகர்கள் (இடை நிலையாளர்கள் – middlemen) கைவினைஞர்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை அளித்தனர். அவர்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றனர்.

தாமாகவே உற்பத்தியைச் செய்துவந்த கைவினைஞர்கள், இடைநிலையாளர்களிடம் இருந்து கூலியைப்பெற்றும் உழைக்கத் தலைப்பட்டனர். தொலைவில் அமைந்த சந்தைகளில் கைவினைப் பொருள்களை விற்றுத் தரகர்கள் கொள்ளை இலாபம் பெற்றனர். இதனால், கைவினைஞர்கள் தன்னிச்சையாகச் செயல்படும் சுதந்திரத்தை இழந்தனர்.

இவ் வகை இல்லமுறை 16ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை கீர்த்தி பெற்றிருந்தது. மக்கள் தங்களுடைய இல்லங்களிலேயே உழைத்தனர். ஆனால், இது குடும்ப கைவினைத் தொழில் முறையினின்றும் வேறுபட்டது. வாணிகர்கள் முதலாளிகளாக மாறினர். அயல்நாடுகளில் இருந்தும் பொருள்களுக்கான தேவை பெருகியது. நெசவாளர்களுக்குத் தேவையான நூலை வாணிகர்கள் அளித்தனர். நூலைத் துணியாக நெய்தபிறகு நெசவாளர்கள் கூலியைப் பெற்றனர்.

குடும்ப கைவினைத்தொழில் முறைக்கும், தொழிற்கூட முறைக்கும் இடைப்பட்டதே இல்லமுறை. இக் காலத்தில் உற்பத்திக்காக அதிக மூலதனம் முதலீடாக்கப்பட்டது. சில குறைபாடுகளின் காரணமாக, இல்லத் தொழில்முறை தொடர்ந்து நீடிக்கவில்லை. இடைநிலையாளர்கள் உழைப்பாளர்களால் ஏமாற்றப்பட்டனர். நேர்மையற்ற உழைப்பாளர்கள் உற்பத்தியைச் செய்வதில் காலம் தாழ்த்தினர். எனவே, நல்லதொரு உற்பத்தி முறை தேவையாயிற்று. தொழிற்புரட்சிக் காலத்தில் இல்லத் தொழில்முறை மறைந்து தொழிற்கூட முறை தோன்றியது. தொழில்நிலையில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

**(iv) தொழிற்கூட முறை** (Factory System) : 19, 20ஆம் நூற்றாண்டுகளில் தொழிற்கூட முறை செல்வாக்குப் பெற்றது. இம் முறை தோன்றியமைக்குத் தொழிற்புரட்சியே காரணமாகும். இம் முறையின்மூலம் இன்று உற்பத்தி பேரளவில் வேலைப்பகுப்பு முறையைப் பின்பற்றிச் செய்யப்படுகிறது. பண்டைக் காலத்தில், தொழிலாளி தன் இல்லத்திலேயே உழைத்தான்; தற்பொழுது

தொழிற்கூடங்களில் அன்றுடம் குறிப்பிட்ட மணி நேரம் உழைப்பைத் தந்து ஊதியம் பெறுகிறுன். நவீன, தொழில்நுட்பம் மிக்க இயந்திரங்களும் கருவிகளும் உற்பத்தி முறைகளில் பயன் படுத்தப்படுகின்றன.

மூலதனத்தை முதலீட்டாளர்கள் தருகின்றனர். தொழிற் கூட முறையில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பூசல்கள் தோன்றுகின்றன. வேலைநிறுத்தங்களும் கத வடைப்புகளும் (lockouts) செய்யப்படுகின்றன. தொழி லாளர்கள் அதிக ஊதியத்தையும் முதலாளிகள் உயர் இலாபத்தை யும்பெற விரும்புகின்றனர். இன்று தொழிற்கூடங்களில் பணி யாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பலமடங்கு கூடி வருகிறது. தொழிலாளர் சங்கங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருக்கின்றன.

இந்தியாவில் இல்லத்தொழில் முறையும், தொழிற்கூட முறையும் இணைந்து செயல்படுகின்றன. இங்குக் கதர் மற்றும் கைத்தறித்துணிப் பொருள்கள் இல்லத்தொழில் முறையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

**தொழிற் புரட்சி** (Industrial Revolution)

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி *(1750–1850)* உற்பத்திக் கான பல புதிய இயந்திரங்களைத் தந்தது. அதனால், அந் நாட் டின் தொழிற்துறையில் வியத்தகு மாற்றங்கள் தோன்றின. தொழில் அமைப்புகளிலும் உற்பத்தி முறைகளிலும் ஏற்பட்ட பல அடிப்படை மாற்றங்களையே 'தொழிற்புரட்சி' குறிப்பிடு கிறது. தற்பொழுது உலகின் எல்லா நாடுகளிலும் தானியங்கி இயந்திரங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமைக்குத் தொழிற்புரட்சியே காரணம்.

தொழிற்புரட்சிக் காலத்தில் இங்கிலாந்து நாட்டில் நெச வாலைத்தொழில், சுரங்கத்தொழில், பொறியியல் தொழில் ஆகிய வற்றில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது. நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பெற்றது. அதேகாலத்தில் வேளாண்மைப் புரட்சி யும் வாணிகப் புரட்சியும் தோன்றின.

உழைப்பாளர் பற்றுக்குறையாலும், உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் தேவையாலும் இயந்திரங்கள் பல கண்டு பிடிக்கப் பட்டன. இங்கிலாந்தைத் தொடர்ந்து பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தொழிற்புரட்சி ஏற்

பட்டது. தொழிற்புரட்சியின் விளைவால் மூலதனம் முக்கிய ஆக்கக் காரணியாக மாறியது. இயந்திர உற்பத்திமுறையால் ஆக்கச் செலவுகள் குறைந்தன.

தொழிற்புரட்சியால் தொழில்நிலை சீரடைந்துள்ளது. இயக்கச் சக்தியாக மின்சாரம், பெட்ரோல், டீசல், நீராவி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. வேளாண்மை, தொழில், வாணிகம், ஆகிய துறைகள் வளர்ந்துள்ளன. வெவ்வேறு வகை போக்கு வரத்து வசதிகளும் பெருகியுள்ளன. அறிவியல் வளர்ச்சிக்குத் தகவல் தொடர்பு வசதிகள் உதவுகின்றன.

**நிறைவுரை**

இந்தியா வேளாண்மை நிலையினின்றும் மாறி தொழில் நிலையை இன்னும் முழுமையாக அடையவில்லை. நம் வாழ்வில் புதுமையோடு பழமையும் கலந்து விரவி இருப்பதைக் காண்கிறோம். மேலும், சில தலைமுறைகள் சென்றபின்பே நாம் தொழில் நிலையை எய்துவோம். 'பசுமைப் புரட்சியை' அடைந்துவரும் இன்றைய நிலையிலும், இந்தியாவின் பல பகுதிகளில் வேளாண்மை யில் நிலத்தை உழுவதற்கு மரக்கலப்பைகளும், கால்நடைகளுமே பயன்படுத்தப்படுகின்றன. நம் சாலைகளில் மாட்டு வண்டிகளும், மோட்டார் கார்களும் ஒருங்கே ஊர்ந்து செல்கின்றன; வயல் களில் மரக்கலப்பைகளும், இயந்திரக் கலப்பைகளும் ஒருங்கே உழுகின்றன. 'வறுமையை விரட்டுவதாகச்' சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

நம் நாட்டில் சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் பெருகி வளர்ந்து வருகின்றன. நாம் வாழ்வது 'அணுயுகத்தில்' (nuclear age). பிற நாடுகளோடு ஒப்பிடும்போது, இந்தியப் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவானதாகவே உள்ளது. திட்டங்களின்மூலம் நம் வாழ்க்கை ஓரளவாவது இருந்தும் என்று நம்பிக்கை கொள்வோம்.

உலகின் பல நாடுகள் மேற்கண்ட பொருளாதார வளர்ச்சி நிலைகளைக் கடந்தே வந்துள்ளன என்பதை, அவற்றின் பொரு ளாதார வரலாறுகள் உணர்த்துகின்றன.

# 7. பொருளியல் கலைச்சொற்கள்

## (Economic Terms)

சாதாரணப் பேச்சு வழக்கில் இருக்கும் சில சொற்களைப் பொருளியலில் பயன்படுத்துகிறோம். பொருளியலில் அவற்றின் பொருள் வேறுபட்டதாக இருக்கிறது. உதாரணமாக, சாதாரண வழக்கில் உற்பத்தி என்னும் சொல் பொருள்கள் ஆக்கப்படுவதையே குறிக்கிறது. ஆனால், பொருளியலில் உற்பத்தி என்பது பண்டங்களோடு பணிகள் உற்பத்தியையும் உணர்த்தும். ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், பொறியாளர்கள் போன்றவர்கள் பொருளாதார ரீதியில் உற்பத்திப் பணிகளிலேயே ஈடுபட்டுள்ளனர். பொருளியலின் சில சொற்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

## I. செல்வம் (Wealth)

பேச்சு வழக்கில் செல்வம் என்பது பணத்தை மட்டுமே குறிக்கும். பொருளியலில் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யக் கூடிய கிடைப்பருமையைக் கொண்டுள்ள மதிப்புடைய பொருள்களையும் செல்வம் என்கிறோம். பணத்தைக் கொடுத்து வாங்கக் கூடிய பொருள்களும் செல்வங்களே. மனிதன் உடைமையாகக் கொண்டுள்ள நிலம், வீடு, கால்நடை போன்றவையும் செல்வத்தில் அடங்குபவையே.

சில்வர்மேன் (Silverman) வரையறுப்பதுபடி, 'பயன்பாட்டைக் கொண்டு, மாற்றத் தக்கவையான, குறைவான அளவில் உள்ளவையே பொருளாதாரச் செல்வமாகும்.' செல்வத்தின் தன்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**செல்வத்தின் தன்மைகள்**

**1. பயன்பாடு** (Utility) : நேரடியாகவோ, மறைமுகமாகவோ மனித விருப்பங்களைத் தீர்க்கக்கூடிய தன்மையைக்

கொண்டவையே பொருள்கள். அவை பயன்பாட்டைக் கொண்டவை. பயன்பாடில்லாத பொருளை எவரும் விரும்பமாட்டார்கள். எனவே, அதைச் செல்வமெனக் கருதமுடியாது. மார்ஷல் கூற்றுப்படி, 'விரும்பத்தக்கவையாக இருப்பவையே செல்வம்' எனப்படும்.

**2. கிடைப்பருமை** (Scarcity) : பயன்பாட்டைக்கொண்ட எல்லா பொருள்களையும் செல்வமெனக் கொள்ள இயலாது. நீர், காற்று, சூரிய ஒளி போன்றவை அமிதப் பயன் பாட்டைக் கொண்டவை. விலைகொடுத்து வாங்கப்படுவதில்லை யாதலால், இவற்றைச் செல்வமெனக் கருதுவது தவறு. மேலும், இவை இயற்கையிலேயே ஏராளமாகக் கிடைக்கின்றன. எனவே, கிடைப்பருமை செல்வத்தின் மற்றொரு முக்கிய இயல்பாகிறது.

**3. மாற்றுக்குரிய நிலை** (Transferability) : ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றத்தக்க இயல்பைக் கொண்டதாகச் செல்வம் இருக்கவேண்டும். வீடு, நிலம், தொழிற்கூடம் போன்ற இடம்பெயராத பொருள்களை உரிமை மாற்றிக்கொள்ளலாம். பணம், பத்திரம் ஆகியவற்றை எளிதில் கைமாற்றிக்கொள்ள முடியும். மாற்றுக்குரிய நிலை என்பது செல்வப் பொருளின் உடைமை உரிமையை மாற்றுதலையே உணர்த்துகிறது.

**4. பிரிக்கக்கூடிய நிலை** (Externality) : அகத் (Internal) திறன்கள் பொருளியலில் செல்வமாகா. லதா, கிஷோர், சுசீலா, சௌந்தரராசன், பாலசுப்பிரமணியன், வாணி ஜெயராம் போன்ற புகழ்பெற்ற திரைப்படப் பின்னணிப் பாடகர் களின் திறமையை அவர்களிடமிருந்து பிரிக்க இயலாது. இதைப் போன்றதே ஓவியர் ஜெயராஜ் திறமையும். அவர்களுடைய அக ஆற்றலைச் செல்வம் எனக் குறிப்பிடமுடியாது. ஆனால், அவ் வாற்றலைக் கொண்டு அவர்கள் செல்வத்தை ஈட்டலாம்.

**5. மாற்று மதிப்பு** (Value-in-exchange) : ஒரு பொருள் பயன் மதிப்போடு (value-in-use) மாற்று மதிப்பையும் பெற்றிருக்கவேண்டும். கதிரவன் ஒளி, காற்று, ஆற்று மணல், கடற்கரை மணல் ஆகியவற்றிற்குப் பயன் மதிப்பு உண்டு. அவற்றால் நாம் பயனடைகிறோம். எனினும், மாற்று மதிப்பு இல்லாமையால் அவற்றைச் செல்வம் எனக்கொள்ளக் கூடாது.

**6. உடைமையாகக்கூடிய நிலை :** செல்வம் தனி மனித னுக்கு உடைமையாகக் கூடியதாக இருக்கவேண்டும். அப்போது

தான் செல்வத்தின் பயனை உணரமுடியும். மேலும், உருவ முடைய பொருளாகச் செல்வம் இருக்கத் தேவையில்லை. 'எழுத் தாளரின் உரிமை' போன்றவையும் செல்வமே.

செல்வத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட தன்மைகள் யாவும் இருத்தல் அவசியம். சிலவகை உதாரணங்களிலிருந்து செல்வ மென்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

(i) **இயற்கையின் அன்பளிப்புகள் :** கதிரவன் ஒளி, காற்று, நீர், மழை, மணல் போன்றவை பயனைக் கொண்டிருப்பினும், மாற்று மதிப்பைப் பெற்றில்லாமையால் செல்வங்கள் அல்ல.

(ii) **வெவ்வேறு வகைப் பணிகள் :** ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், தச்சர், கொல்லர் ஆகியோ ருடைய பணிகளுக்குப் பயன்பாடு உண்டு. கிடைப்பருமையோடு மாற்றுமதிப்பும் கொண்டிருப்பதால் இவர்களுடைய பணிகளைச் செல்வங்களாகவே கருதவேண்டும்.

(iii) **மனித நலனுக்கு ஊறு விளைவிப்பவை :** போர்க்கருவி கள், போதைப் பொருள்கள் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்பவை; கிடைப்பருமை கொண்டவை; மாற்று மதிப்புடை யவை. எனவே, மனித நலனுக்குத் தீங்கு விளைவித்தாலும் இவை செல்வங்களே.

(iv) **சொத்துடைமை உரிமைப் பத்திரங்கள் :** உண்டியல் கள், அரசின் கடன் பத்திரங்கள், சேமிப்புப் பத்திரங்கள், பங்குப் பத்திரங்கள், சொத்துரிமைப் பத்திரங்கள் போன்ற மாற்றும் தன்மை கொண்ட சொத்துகள் செல்வங்களாகும்.

(v) **இயற்கை வளங்கள் :** இயற்கையில் அமைந்த மலை கள், ஏரிகள், ஆறுகள், கடல்கள், குளங்கள் நாட்டின் செல்வங்கள்.

(vi) **பிரிக்க இயலாத சிறப்பாற்றல்கள் :** ஓவியத்திறன், மருத்துவத்திறன், நடிப்புத் திறன், விளையாட்டுத் திறன், பேச்சுத் திறன், எழுதும் திறன் போன்றவை மாற்றுதற்குரியதாக இல்லா மையால் செல்வமாகா.

(vii) **அரிய பொருள்கள் :** பண்டைக்காலச் சிற்பங்கள், உலோகச் சிலைகள், ரவிவர்மாவின் ஓவியங்கள், பிகாசோவின் படங்கள், ஓலைச் சுவடிகள், பல நாடுகளின் பழையகால தபால் தலைகள் – நாணயங்கள் கிடைப்பருமையுடைய செல்வங்கள்.

**செல்வ வகைகள்**

**1. தனி மனிதனின் செல்வம்** (Individual Wealth) : ஒரு தனி மனிதன் உடைமையாகக் கொண்டுள்ள நிலம், வீடு, ஆபரணங்கள், இல்லப்பயன் பொருள்கள், பங்குகள், புத்தகங்கள் போன்றவை செல்வமாகும். உருவமில்லாத அருவப் பொருள்களாகக் கருதப்படும் தேர்ச்சிப் பணிகள் செல்வத்தை ஈட்ட உதவுகின்றன. அறுவை மருத்துவர் ஒருவரின் திறமை செல்வமாகாது. ஆனால், செல்வத்தைச் சேர்க்க அவரின் திறமை வழிவகுக்கும். மாற்றமுடியாதாகையால், பொருளியலில் அறிவுத் திறனைச் செல்வமெனக் கருதுவதில்லை.

**2. சமூகச் செல்வம்** (Social Wealth) : மக்கள் அனைவராலும் பயன்படுத்தப்படுவது சமூகச் செல்வம். அரசின் சொத்து, இரயில்வேக்கள், தபால்-தந்தி, நூலகங்கள், பூங்காக்கள், அரும்பொருள்காட்சியகங்கள் (Museums), கோயில்கள், குளங்கள், அணைகள், சாலைகள், பள்ளிகள், அரசின் மருத்துவமனைகள், ஆகியவை சமூகச் செல்வங்களாகும். சமூகத்திலுள்ள மக்கள் அனைவரும் இச் செல்வங்களால் நன்மையடைகின்றனர். தனியார் எவரும் இவற்றின்மீது சொத்துரிமைக் கொண்டாட முடியாது.

**3. நாட்டுச் செல்வம்** (National Wealth) : ஒரு நாட்டின் செல்வம், தனியார் செல்வங்களின் தொகுதியோடு சமூகச் செல்வங்களும் சேர்ந்ததாகும். ஆறு, ஏரி, மலை, கடல், காடு ஆகியவையும் நாட்டுச் செல்வங்களே. சில பொருளியலாளர்கள் 'இலவசப் பொருள்களையும்' (free goods) நாட்டுச் செல்வமாகக் கருதுகின்றனர். தேம்ஸ் நதி இங்கிலாந்து நாட்டின் செல்வமென மார்ஷல் கூறுகிறார். நைல்நதி எகிப்திய நாட்டின் செல்வமாகும். ஆனால், செலிக்மேன் போன்றவர்கள் நதிகள் மற்றும் தட்பவெப்ப நிலைகளைச் செல்வமாகக் கருதக்கூடாது என்கின்றனர். அவை செல்வத்தின் ஆக்கத்திற்குப் பயன்படுகின்றனவேயன்றி செல்வமல்ல என்பது அவர்கள் கூற்று.

மேலும், நாட்டுச் செல்வத்தைக் கணக்கிடும்போது, தேசியச் சொத்தினின்றும் அயல்நாடுகளுக்குத் தரவேண்டிய கடன்களைக் கழிக்கவேண்டும். அந்த நாடு அயல்நாடுகளில் முதலீடு செய்திருப்பின், அதைத் தேசியச் சொத்தோடு சேர்த்துக்கொள்ளலாம். மக்களின் கடின உழைப்பால் நாட்டின் செல்வத்தைப் பெருக்கலாம். சீரிய வேலைப்பகுப்பின்மூலம் ஒரு நாட்டின் செல்வத்தை உயர்த்தலாமென ஆடம்ஸ்மித் குறிப்பிட்டுள்ளார். ஜப்

பானைத் தவிர்த்து ஆசிய நாடுகள் பல ஏழ்மை நிலையில் உள்ளன. ஜப்பானியரின் கடின உழைப்பே ஜப்பானில் செல்வம் கொழிக்கின்றமைக்குக் காரணமாகும்.

**4. பன்னாட்டுச் செல்வம்** (Cosmopolitan or International Wealth): உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் உரிமையுடைய வையே பன்னாட்டுச் செல்வம். பெருங்கடல்கள் யாவும் உலகச் சொத்தாகும். சில முக்கிய கண்டுபிடிப்புகளும் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அறிவியல் சாதனைகளும், முன் னேற்றங்களும் பன்னாட்டுச் செல்வங்களே. இங்கிலாந்தில் தொழிற்புரட்சிக் காலத்தில் செய்யப்பட்ட இயந்திரக் கண்டு பிடிப்புகள் இன்று உலகச் சொத்தாக உள்ளன.

**செல்வமும் வாழ்க்கை நலமும்** (Wealth and Welfare)

வாழ்க்கை நலனைப் பெருக்கிக்கொள்ளவே எல்லோராலும் செல்வம் விரும்பிச் சேமிக்கப்படுகிறது. செல்வம் மனித நலனை வளர்ப்பதால்தான், பொருளியல் செல்வத்தைப் பற்றி ஆராய் கின்ற ஓர் இயலாகின்றது. பொருளியலில் மனிதனின் வாழ்க்கை நலத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறதே தவிர, செல்வத்திற்கு அல்ல. செல்வத்திற்கும் வாழ்க்கை நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

பேராசிரியர் பிகு (Professor Pigou), 'செல்வச்சேமிப்பு மனித வாழ்க்கை நலத்திற்கு நல்லது; செல்வத்தில் ஏற்படும் குறைவு சமுதாயத்திற்கு இழப்பைத் தரும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், மனித வாழ்வின் நலன் செல்வத்தை மட்டுமன்றி, குடும்பமுறை, சமூக நிலை, அரசியல் அமைப்பு, சமயமுறை ஆகியவற்றையும் சார்ந்து அமையும். எனினும், செல்வ நாடு களில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வாகவே உள்ளது.

பொருளியலில் செல்வமெனக் கருதுபவை யாவுமே மனித வாழ்வின் நலனுக்கு ஏற்றவை எனக் கருத இயலாது. செல்வமும் வாழ்க்கைநலனும் முரண்படுகின்ற நிலைகளைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்:

(1) எந் நிலையிலும் போட்டியே நிலவும் இன்றைய சமு தாயத்தில், உற்பத்தி இலாப நோக்கிலேயே செய்யப்படுகிறது. அறிவை மங்கச் செய்து, போதையை ஏற்றும் மது, பெத்தடின், கஞ்சா போன்ற பொருள்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்

பட்டுக் கொள்ளை இலாபத்தில் விற்கப்படுகின்றன. மனித நல னிற்குக் கேடு விளைவிப்பினும், பொருளியலில் இப் பொருள்களைச் செல்வமெனவே கொள்கிறோம்.

(2) இயற்கைக் காரணிகள் மனிதனோடு ஒத்துழைத்தால் தான், உற்பத்தியைக் கூட்டி நலமான வாழ்வைப் பெறலாம். மழை பொய்த்துத் தட்பவெப்ப நிலைகள் சாதகமாக இல்லாவிடில் வறட்சி நீடித்துப் பஞ்சங்கள் தோன்றும்.

(3) கடின உழைப்பே செல்வத்தை உருவாக்குகிறது. ஆனால், உழைப்பைத் தருபவர்கள் செல்வத்தின் பயனை அதி களவில் நுகர முடிவதில்லை. மூலதனத்தை அதிகமாகக் கொண்ட தொழில் முதலாளிகளே செல்வப் பெருக்கத்தால் பெரிதும் நன்மையடைகின்றனர்.

(4) ஒரு நாட்டின் செல்வம் சமமாகப் பங்கிடப்பட்டால் தான், மக்கள் எல்லோரும் நலமான வாழ்வைப் பெறுவர். செல்வம் ஒருசிலரையே சென்று சேர்ந்தால், நாட்டு மக்களின் வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுதியடையும். திறமையான அரசு, வரிவிதிப்பின்மூலம் வருமானத்திலும், செல்வப் பங்கீட்டி லும் இருக்கும் வேறுபாடுகளைக் களையும். நல்வாழ்வைப் பெற்ற மக்களால்தான் மேலும் அதிக செல்வத்தை ஆக்க முடியும்.

விருப்பங்கள் பெருகும்போது, செல்வத்தை ஆக்கும் முயற்சி கள் அதிகரிக்கின்றன. குறைந்தளவு செல்வத்தைக் கொண்டவர் கள் குறைவான விருப்பங்களையே பூர்த்திசெய்துகொள்ள முடி கிறது.

## II. பொருள்கள் (Goods)

பொருளியலில் மனித விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் எதை யும் 'பொருள்' என்கிறோம். ஆசிரியர், பொறியாளர், வழக் குரைஞர் ஆகியோருடைய பணியும் பொருளாகவே கருதப்படு கின்றது. உருவ-அருவப் பொருள்கள் அனைத்துமே பொருள்க ளாகக் கொள்ளப்பெறுகின்றன. இயல்புகளுக்கேற்ப பொருள் களைச் சில பிரிவுகளாகப் பகுக்கலாம்.

### செல்வப் பொருள்கள் (Economic Goods)

இவற்றை 'விலைதரும் பொருள்கள்' எனவும் சொல்லலாம். கிடைப்பருமை உள்ள இவை மனித முயற்சியால் பெறப்

படுகின்றன. பழங்கள், காய்கறிகள், முட்டை, இறைச்சி, பால், ரொட்டி போன்றவற்றைச் செல்வப் பொருள்கள் எனலாம். இவை பற்றுக்குறையுடைய பயன்தரும் பொருள்களாதலால் விலை கொடுத்து வாங்குகிறோம். பொருளியலில் நாம் பெரும்பாலும் செல்வப் பொருள்களைப் பற்றியே ஆய்கிறோம். இப் பொருள்கள் பயன் மதிப்போடு 'பரிவர்த்தனை மதிப்பையும்' (value-in-exchange) கொண்டனவை.

**இலவசப் பொருட்கள்** (Free Goods)

இவற்றை 'விலைதராப் பொருள்கள்' என்றும் குறிப்பிடலாம். இயற்கையின் அன்பளிப்பான இப் பொருள்களை மனித முயற்சியின்றிப் பெறலாம். சமுதாயத்தின் தேவையோடு ஒப்பிடும் போது, இவற்றின் அளிப்பு அளவற்றதாக இருக்கிறது. காற்று, நீர், சூரிய ஒளி, மணல், மழை, கடல் நீர் முதலியவை இலவசப் பொருள்கள். இவை பற்றுக்குறை நிலையைக் கொண்டிருக்க வில்லை. எளிதில் ஏராளமாகக் கிடைப்பவையே இவை.

இலவசப் பொருள்கள் சில இடங்களில் விலை தரும் செல்வப் பொருள்களாக ஆவதும் உண்டு. மரங்கள் அடர்ந்த கிராமங்களில் விறகு இலவசப் பொருளாக இருக்கக்கூடும்; அதுவே கிடைப்பருமை உடைய நகர்ப்புறங்களுக்குக் கொண்டுவரப்படும் போது விலைபெறுகிறது. சில காலங்களில் கோவையில் தண்ணீர் குறைந்த விலையில் விற்கப்படுவதை நாமறிவோம். கிராமப் புறங்களில் மாவிலைகளை இலவசமாகப் பெறலாம்; மாறாக, நகர்ப் புறங்களில் பண்டிகைக் காலங்களில் அவை விலை கொடுத்து வாங்கப்படுவது நாம் அறிந்ததே. ஆற்றோரங்களிலும், கடற் கரை ஓரங்களிலும் வசிப்பவர்கள் மணலை விலையின்றி இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அதுவே நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கு எடுத்துவரும்போது விலைப்பொருளாகிறது.

**செல்வப் பொருள்களின் பிரிவுகள்**

**(1) நுகர்வோர் பொருள்கள்** (Consumers' Goods) : இவை நுகர்வோருடைய விருப்பங்களை நிறைவு செய்பவை. கார்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், தொலைநோக்கிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், மின்விசிறிகள், கடிகாரங்கள், டேப் ரிக்கார்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், இஸ்திரிப் பெட்டிகள், உணவு, உடை போன்றவை இதற்கு உதாரணமாகும். இப் பொருள்கள் நுகர்வோருக்கு நேரடியாக மனநிறைவை அளிப்பவை.

**(2) உற்பத்தியாளர் பொருள்கள்** (Producers' Goods) : நுகர் பொருள்களை உற்பத்தி செய்ய உதவும் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவையே உற்பத்தியாளர் பொருள்களாகும். இவை நேரடியாக மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில்லை. உற்பத்தியைச் செய்யும் இவை விருப்பங்களை மறைமுகமாக நிறைவேற்றுகின்றன. பயன்படுத்துகின்ற முறையினின்றும் ஒரு பொருள் உற்பத்தியாளர் பொருளா, நுகர்வோர் பொருளா என்பது முடிவாகிறது. 'டாக்சி' வைத்திருப்பவர், அதைத் தன் சொந்தப் பயனுக்கு உபயோகித்துக் கொண்டால் அது நுகர் பொருள்; மாறாக, வாடகைக்கு அதுவே ஓடும்போது உற்பத்திப் பொருளாகிறது. மின்சாரம் வீடுகளில் பயன்படுத்தப்படும்போது நுகர் பொருள்; அதுவே தொழிற்சாலைகளில் உற்பத்திப் பொருளாக மாறுகிறது.

**(3) உருவப் பொருள்கள்** (Material Goods) : இவை கண்ணுக்குப் புலனாகும் உருவமைப்பை உடையவை. நிலம், கட்டடங்கள், மேசை-நாற்காலிகள், உடை, புத்தகங்கள், பணம், பேனா, பென்சில் போன்றவை இதற்கான உதாரணமாகும்.

**(4) அருவப் பொருள்கள்** (Non-material Goods) : இவை விலை மதிப்புடைய, கண்ணுக்குப் புலனாகாத பணிகளாகும். அறிவியலார் பணி, ஆராய்ச்சியாளர் திறமை, ஆசிரியர் பணி ஆகியவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

**(5) நீண்ட நாள்கள் பயன்படும் உறுதியான பொருள்கள்** (Durable Goods) : நீண்ட காலத்திற்கு நீடித்துப் பயன்தரக் கூடிய மேசை-நாற்காலி, பீரோ, கட்டில், வீடு, சைக்கிள், மின்விசிறி போன்றவை இதற்கு உதாரணமாகும்.

**(6) விரைவில் அழியும் தன்மையுடைய பொருள்கள்** (Perishable Goods) : சில நாள்கள் அல்லது மிகக் குறைந்த காலத்திற்கு மட்டுமே பயன்தரும் பால், பழம், முட்டை, இறைச்சி, மீன், மலர் போன்ற பொருள்களும் உள்ளன.

**(7) மாற்றத்தக்க பொருள்கள்** (Transferable Goods) : நிலம், வீடு, வானொலிப் பெட்டி போன்றவற்றின் உடைமைகளை உரிமைமாற்றிக் கொடுக்க முடியும்.

**(8) மாற்ற இயலாத பொருள்கள்** (Non-transferable Goods) : நடிகர், பாடகர், ஓவியர், கலைஞர் ஆகியோரது

திறமை அவரவர்களோடு கலந்திருப்பது. அத் திறமையைப் பிரித்து மற்றவர்களுக்கு அளிப்பதோ விற்பதோ இயலாதது.

## III. வருமானம் (Income)

வருமானத்திற்கு ஆதாரமாக இருப்பது செல்வம். நிலம், வீடு, இயந்திரம் போன்ற செல்வங்களை உடைமையாகக் கொண்ட ஒருவர், அவற்றினின்றும் வருமானத்தைப் பெறுகிறார். கால அளவோடு வருமானம் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. கூலியாள் தினக்கூலியையும், ஆசிரியர் மாதச் சம்பளத்தையும், நடிகர் ஒப்பந்த ஊதியத்தையும் பெறுகின்றனர். சிலர் தாங்கள் கொண்டுள்ள செல்வத்தினின்றும் ஆண்டுதோறும் வருமானத்தைப் பெறக் கூடும். ஆயிரம் ரூபாய் பணத்தைச் செல்வமாகப் பெற்ற ஒருவர் ஆண்டொன்றுக்கு சுமார் நூறு ரூபாயை அதன் வட்டி வருமானமாகப் பெறுகிறார். உணவு விடுதி அறையொன்றில் தங்குவதற்கு அதன் உரிமையாளர் நாளொன்றுக்கு ஐந்து ரூபாய் வாடகையாகப் பெறலாம். மணி நேரத்திற்கு ஏற்ப, சைக்கிள் வாடகைகள் வாங்கப்படுகின்றன.

செல்வம் வருமானத்தை அளிப்பதுபோல, உழைப்பும் வருமானத்தை ஈட்டுகிறது. உழைப்பிற்குக் கிடைப்பது கூலி அல்லது இலாபமாகவும், செல்வத்திற்குக் கிடைப்பது வட்டி அல்லது வாரமாகவும் அமைகின்றன. செல்வத்தைப் 'பண வருமானம்' (money income), 'உண்மை வருமானம்' (real income) என இரு வகைகளாகப் பிரிக்கலாம். பண வருமானத்தின் 'வாங்கும் திறனை' (purchasing power) உண்மை வருமானம் உணர்த்துகிறது. பணத்தின் வாங்கும் திறன் நடப்பு விலைகளுக்கேற்ப அமையும். விலைகள் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறக்கூடியவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒருவர் ஈட்டும் வருமானத்தின் அளவை மட்டுமே பணவருமானம் குறிக்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரம் உண்மை வருமானத்திற்கேற்ப அமையும்.

மூலதனம், செல்வம் ஆகியவற்றினின்றும் 'வருமானம்' வேறுபட்டது. செல்வம் வருமானத்தைத் தரக்கூடியது; மூலதனம் வருமானத்தை ஈட்டுவதற்கு வழிகோலுவது. மூலதனம், செல்வம், வருமானம் ஆகிய மூன்றும் ஒன்றிற்கொன்று தொடர்புடையவை. தேசிய வருமானம் ஒரு நாட்டு நிகர பொருள்களின் உற்பத்தியினின்றும் கணக்கிடப்படுகிறது. மக்கள்

எல்லோருடைய வருமானங்களின் கூட்டுத் தொகையும் தேசிய வருமானமே. நாட்டு மக்களின் சராசரி வருமானம் 'தலா வருமானம்' (per capita income) ஆகும். இது ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை, அந்த நாட்டு மக்கள் தொகையால் வகுத்துக் கிடைப்பதாகும்.

## IV. சந்தை (Market)

'நேரடியாகவோ அல்லது தரகர்கள் மூலமாகவோ விற்பவர் களும் வாங்குபவர்களும் சந்தையில் நெருங்கிய தொடர்பு பெறுகிறார்கள். சந்தையின் ஒரு பகுதியில் நிலவும் விலைகள் பிற பகுதிகளின் விலைகளைப் பாதிக்கும்', என பென்ஹாம் குறிப்பிடு கிறார். சந்தையில் வாங்குவதிலும் விற்பதிலும் போட்டி நிலவு கிறது. சாதாரண வழக்கில் குறிப்பிட்ட இடத்தில் பொருள்கள் விற்று-வாங்கப்படுகின்றன. அவ்விடத்தைச் சந்தை என்கிறோம். எடுத்துக்காட்டாக, சென்னை 'கொத்தவால் சாவடியில்' காய் கறிகள் விற்கப்படுவதையும், மலர்கள்-மாலைகள் போன்றவை 'பூக்கடை' என்னுமிடத்தில் விற்கப்படுவதையும் கூறலாம்.

ஆனால், பொருளியலில் 'சந்தை' என்பது பரந்த பொருளைக் கொண்டது. பெர்ருள்கள் விற்று வாங்கப்படும் குறிப்பிட்ட இடங்களை மட்டுமே சந்தை எனக் கருதுவது தவறு. உழைப்புச் சந்தை, மூலதனச்சந்தை, அந்நியச் செலாவணிச் சந்தை (foreign exchange market) போன்றவையும் அமைந்துள்ளன. விற்பவர் களும், வாங்குபவர்களும் உலகம் முழுதும் பரந்து விரிந்து கிடக்கலாம். அவர்கள் யாவரும் பொருள்களை விற்று-வாங்கக் குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள ஓரிடத்தில்தான் கூடுவர் எனக்கொள்வது தவருனது.

ஒரு குறிப்பிட்ட பொருளை விற்று விலையாக்குவது தொடர் பாக எழும் அனைத்து நடவடிக்கைகளையும் 'சந்தை' என்னும் சொல் குறிக்கும். இதன் அடிப்படையில் பணச் சந்தை, பொன் சந்தை, வெள்ளிச் சந்தை, கோதுமைச் சந்தை, கரும்புச் சந்தை, பருத்திச் சந்தை போன்று ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனிச் சந்தை இருப்பதை அறியலாம்.

### சந்தை வகைகள்

சந்தைகளை அவற்றின் தன்மைக்கேற்ப பல வகைகளாகப் பிரிக்கலாம். பொருள்கள் கொள்முதல் செய்யப்படும் இடஅளவை

மற்றும் போட்டியின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப சந்தைகளைப் பாகுபாடு செய்யலாம். குறுகியகால, நீண்டகாலச் சந்தைகளும் விளக்கப்படுகின்றன. இடப் பரப்பளவின் அடிப்படையில் சந்தையை மூன்று பிரிவாக்கலாம்.

**(1) உள்ளூர்ச் சந்தை** (Local Market) : விரைவில் அழியும் தன்மையுடைய காய்கறிகள், கனிகள், பால், மீன், இறைச்சி, முட்டை போன்றவை பெரும்பாலும் உள்ளூர்ச் சந்தையிலேயே விற்கப்பெறுகின்றன. இவை உற்பத்தி செய்யப்படும் இடங்களிலும், அவ் விடங்களின் சுற்றுப்புறங்களிலும் அதிகமாக விற்கப்படுகின்றன. ஆனால், அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, இப் பொருள்களை, நீண்ட நாள்களுக்குப் பாதுகாக்கும் குளிர்ப்பதன வசதிகள் பெருகியுள்ளன. இதனால், நீண்ட தொலைவிலுள்ள இடங்களுக்குக்கூட இவை எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. சில காலத்திற்கு முன் இந்தியாவிலிருந்து ரஷ்யாவிற்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதை உதாரணமாகக் கொள்ளலாம். காஷ்மீர், சிம்லா ஆகிய இடங்களிலிருந்து தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் (Tamil Nadu Agro-industries Corporation) ஆப்பிள்களைத் தருவித்துக் குளிர் சாதன வசதியுள்ள இடத்தில் வைத்துப் பாதுகாத்து விற்பனை செய்வதையும் நாமறிவோம்.

**(2) நாட்டுச் சந்தை** (National Market) : சில பொருள்களுக்கு நாட்டளவில் சந்தை அமைந்துள்ளது. அலங்கார சாதனப் பொருள்கள், மருந்துகள், துணிகள் ஆகியவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். நாட்டுச் சந்தையை 'தேசியச் சந்தை' எனவும் குறிப்பிடலாம்.

**(3) பன்னாட்டுச் சந்தை** (International Market) : அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் உற்பத்தியாகும் கோதுமைக்கு இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மற்றும் உலக நாடுகள் பலவற்றிலும் தேவை மிகுதியாக உள்ளது. இதுபோன்றே பொன், வெள்ளி, பருத்தி, சணல், சர்க்கரை, இரும்பு-எஃகு, தேயிலை, காப்பி, கம்பளி, அரிசி ஆகியவற்றிற்குப் பன்னாட்டுச் சந்தை அமைந்திருக்கிறது.

இடப்பரப்பளவின் அடிப்படையில் ஒரு பொருளுக்கான 'சந்தை' பல காரணிகளைப் பொறுத்து அமையும். அதிகப் பயனளிக்கக்கூடியதும், நீடித்து உழைக்கக் கூடியதும், எளிதில் எடுத்துச்செல்லத்தக்கதுமான பொருள்களுக்குப் பரந்த சந்தை

அமையும். அரசின் வாணிகக் கொள்கை, வரி விதிப்புக்கொள்கை, விஞ்ஞான முன்னேற்றம், போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகள் போன்றவையும் சந்தையின் அளவைத் தீர்மானிக்கின்றன.

போட்டியின் அடிப்படையில் சந்தையை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(i) **நிறைவுச் சந்தை** (Perfect Market): ஒரு சந்தையில் நிறைந்த அளவில் போட்டி நிலவினால், அதை நிறைவுச் சந்தை எனலாம். நிறைவுச் சந்தையின் இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(1) பொருள்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருக்கும்;

(2) வாங்குபவர்களும் விற்பவர்களும் எண்ணிக்கையில் மிகுதியாக இருப்பர்;

(3) விற்பனைப் பொருள் ஒரே இயல்புடையதாக இருக்கும்;

(4) பொருள்கள் எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடியவைகளாக அமையும்;

(5) ஒரு பொருளுக்கு சந்தை முழுதும் ஒரே விலை நிலவும்;

(6) விற்பனையாளர்கள் வாங்குபவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் எவ்விதத் தனிச் சலுகைகளும் காட்டமாட்டார்கள்;

(7) சந்தைக்கு வந்து பொருளை விற்கவும் வாங்கவும் எவருக்கும் தடையிருக்காது.

(ii) **நிறைகுறைச் சந்தை** (Imperfect Market): நிறைகுறைச் சந்தை நிறைவுச் சந்தைக்கு எதிரான இயல்புகளைக் கொண்டது. நிறைகுறைச் சந்தைகளின் தன்மைகள் கீழ்க்காணுமாறு அமைகின்றன;

(1) ஒரே பொருளுக்குப் பல விலைகள் நிலவுகின்றன;

(2) பொருள்களின் தரத்தில் வேறுபாடுகள் உள்ளன;

(3) வாங்குபவர்கள் சந்தையின் விலை நிலவரங்களைத் தெரிந்திருக்கமாட்டார்கள்;

(4) விற்பவர்களும் வாங்குபவர்களும் எண்ணிக்கையில் குறைவாகவே இருப்பர்;

(5) வாங்குபவர்கள் விலை நிலவரங்களைத் தெரிந்துகொள்ளாமைக்குச் சோம்பலும் அறியாமையும் காரணங்களாகின்றன;

(6) திறமை மிக்க விற்பனையாளர்கள் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனர்;

(7) நுகர்வோரில் சிலர் வாடிக்கையாகச் சில விற்பனையாளரிடமே பொருள்களை வாங்குகின்றனர்.

நம்முடைய நடைமுறை வாழ்வில் நிறைவுச் சந்தைகள் அமையாமல் நிறைகுறைச் சந்தைகளே அமைந்துள்ளன.

(iii) **முற்றுரிமை அல்லது சர்வாதீனச் சந்தை** (Monopoly Market): இவ்வகைச் சந்தையில் ஒரு விற்பனையாளர் மட்டுமே இருக்கிறார். அவருடைய பொருளுக்குப் பதிலியும் (substitute) இருக்காது. உற்பத்தியைக் குறைத்து, விலையை உயர்த்தி, கொள்ளை இலாபத்தைப் பெறுவது முற்றுரிமையாளர்களின் நோக்கமாக அமைகிறது.

## V. மதிப்பு (Value)

பொருளியலில் 'மதிப்பு' என்பது ஒரு பொருளின் 'மாற்று மதிப்பைக்' (value-in-exchange) குறிக்கின்றது. மனித விருப்பத்தை நிறைவுசெய்யும் பொருள்கள் பயன்பாட்டைக் கொண்டுள்ளன. பயன்பாட்டைக் கொண்டிருக்கும் எல்லா பொருள்களையும் மதிப்புடையவை எனக் கூற இயலாது. 'பயன் மதிப்பைப்' (value-in-use) பெற்றுள்ள காற்று, தண்ணீர், ஒளி போன்றவை சந்தை மதிப்பைப் பெற்றிருக்கவில்லை. முத்து, வைரம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம் போன்ற கற்கள் கிடைப்பருமை கொண்டவை. குறைந்த அளவே பயனைக் கொண்ட இவை மாற்று மதிப்பைக் கொண்டுள்ளதால் அதிக விலையில் விற்கப்படுகின்றன.

ஒரு மூட்டை உளுந்தைக் கொடுத்து நான்கு மூட்டை நெல்லை வாங்கினால், ஒரு மூட்டை உளுந்தின் மதிப்பு நான்கு மூட்டை நெல்லுக்குச் சமம். மாற்றுத் தன்மை, பயன்பாடு, கிடைப்பருமை ஆகியவற்றைக் கொண்ட பொருள்களுக்கு மாற்று மதிப்புண்டு.

## VI. விலை (Price)

பொருளின் மதிப்பு விலையின் வாயிலாக வெளிப்படுகிறது. விலைகளை ஒப்பிட்டுப் பொருள்களின் தராதர மதிப்பைப் (relative value) புரிந்துகொள்ளலாம். பண்டங்கள் – பணிகள் ஆகிய வற்றின் விலைகள் மாறலாம்; ஆனால், அவற்றின் மதிப்பு அதிக அளவில் மாறுவதில்லை. மதிப்புக்கும் விலைக்கும் உள்ள தொடர்பை அறிவது அவசியம். மாற்றப்படும் இரு பண்டங்களின் மதிப்பு ஒரே சமயத்தில் கூடவோ அல்லது குறையவோ செய்யாது. ஒரு பண்டத்தின் மதிப்புக் கூடும்போது மற்றதன் மதிப்புக் குறை கிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு பேனாவிற்கு நான்கு பென்சில்கள் என்று மாற்றுவீதம் இருப்பதாகக் கொள்வோம். பேனாவின் மதிப்பு உயர்ந்தால் பென்சிலின் மதிப்புக் குறையும். அதாவது ஒரு பேனாவிற்கு 5 பென்சில்கள் கிடைக்கும். எனினும், பேனா விலையும் பென்சில் விலையும் ஒரேமாதிரியாகக் குறையவோ கூடவோ செய்யும். முதலில் பேனாவின் விலை ஒரு ரூபாய் எனவும் பென்சிலின் விலை 25 காசாகவும் இருந்து, பிறகு பேனா விலை இரண்டு ரூபாயாகவும் பென்சிலின் விலை 40 காசாகவும் உயர லாம். இரண்டின் விலைகளும் ஒரேவீதத்தில் அதிகரித்தால், அவற்றின் ஒப்பு மதிப்பு மாறாது.

விலை நிர்ணயம் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. விலை நிலைகளுக்கேற்பவே பொருள்களின் உற் பத்தி, நுகர்வு, பகிர்வு ஆகியவை அமைகின்றன. விலை மாற்றங் கள் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றுகின்றன. உற்பத்தி யாளர்கள், நுகர்வோர் ஆகிய இரு சாராருக்கும் ஏற்படும் விற்றல்-வாங்கல் போட்டிகளின் விளைவால் பண்டங்கள் மற்றும் பணி களின் விலைகள் நிர்ணயமாகின்றன; மாறுகின்றன.

விலையுயர்வு நுகர்வைக் கட்டுப்படுத்தும். தேவையற்ற பொருள்களின் நுகர்வைக் குறைக்க அரசு வரி விதிப்பு முறை யைப் பின்பற்றுகிறது. விலை உயரும்போது உற்பத்தியாளர் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தைப் பெறுகிறார். சிறிய அளவில் படிப்படியாக விலைகள் உயர்வதை அரசு அனு மதிக்கலாம். அந்த நிலை உற்பத்தியைப் பெருக்க வகைசெய்யும். ஆனால், 'தாவும்' அல்லது 'ஓடும்' பணவீக்கத்தைத் (inflation) தடுப்பது அரசின் கடமையாகும்.

# 8. நுகர்வு
## (Consumption)

### I. விளக்கமும் முக்கியத்துவமும்

ஒரு பண்டத்தையோ பணியையோ நுகர்வது அல்லது பயன்படுத்துவது நுகர்ச்சி எனப்படும். பசியைத் தணிக்க உணவு நுகரப்படுகிறது. நோயாளி மருத்துவரிடம் சிகிச்சை பெறுகிறார். இங்கு மருத்துவரின் பணியை நோயாளி நுகருகிறார். பயன் பாட்டை அழித்தலும் நுகர்வே. புசிப்பதற்கு முன் உணவு பயன்பாட்டைக் கொண்டிருக்கிறது. பசியைத் தணித்த உணவு பயன்பாட்டை இழக்கிறது. உணவைப் புசிப்பவர் அதன் பயன் பாட்டை அழிக்கிறார்.

சில பொருள்கள் நீண்டகாலத்திற்குப் பயனளிப்பவை. வாஞ்ஞலிப் பெட்டி, மின்விசிறி, பீரோ போன்றவை நெடுங் காலப் பயனைக்கொண்டு நீண்டகாலத்தில் நுகரப்படுகின்றன. மனித விருப்பம் நிறைவேறுமல் ஒரு பொருளின் பயன்பாடு அழிக்கப்பட்டால், அதை நுகர்வு எனக் கொள்ள இயலாது. ஒரு வீடு தீப்பற்றி எரியும்போதோ, வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும்போதோ அதன் பயன்பாடு அழிக்கப்படுகிறது. இந் நிகழ்வை எவரும் விரும்பமாட்டார்கள். எனவே, இது நுகர் வாகாது. 'பயன்பாட்டை நுகர்வில் அழிக்கிறோம்; பொருளை அழிப்பதில்லை', என்றுகிறார் பேராசிரியர் இலி (Ely). விளை யாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவது நுகர்வு; அவற்றை உடைத்து நொறுக்கி அழிப்பது நுகர்வாகாது.

மனித விருப்பங்களே பொருளாதார நடவடிக்கைகளுக்கு முதலாகவும் முடிவாகவும் இருக்கின்றன. நுகர்வு உற்பத்தியைத் தூண்டுகிறது. பொருளியலின் நுகர்வுப் பிரிவில் விருப்பங்களின்

இயல்புகள் - வகைகள், தேவைவிதி, குறைந்துசெல் பயன் பாட்டு விதி, எங்கெலின் குடும்பச் செலவீட்டு விதி போன்ற வற்றைப் படிக்கிறோம்.

உற்பத்தி செய்வதற்காகச் சில பொருள்கள் நுகரப்படு கின்றன. உதாரணமாக, துணி உற்பத்திக்குப் பயன்படும் பருத்தியையும், சர்க்கரை உற்பத்திக்கு உதவும் கரும்பையும் 'ஆக்கப் பொருள்களாகக்' (production goods) குறிப்பிட லாம். நாட்டியம், நாடகம், திரைப்படம், இன்னிசைக் கச்சேரி ஆகியவற்றிற்குச் செல்வதும், ஆசிரியரிடம் பாடம் பயில்வதும், வழக்குரைஞரைக் கலந்தாலோசிப்பதும் நுகர்வேயாகும்.

ஆரம்பக் காலத்தில் ரிக்கார்டோ, சே (Say), மில் போன்றவர்கள் பொருளியலின் உற்பத்திப் பிரிவிலேயே கவனத் தைக் கொண்டிருந்தனர். நுகர்வின் முக்கியத்துவத்தை முத லில் சுட்டிக்காட்டியவர் மார்ஷல் ஆவார். அதைத் தொடர்ந்து பேராசிரியர்கள் ஜெவான்ஸ் (Jevons), பேட்டென் (Patten) முதலியவர்கள் நுகர்வின் இன்றியமையாத நிலையை மேலும் தெளிவாக்கினர். ஆக்கக் காரணிகளின் உற்பத்தித் திறனை நிர்ணயிப்பது நுகர்வு. பொருளியலின் எல்லாப் பிரிவுகளோடு நுகர்வு தொடர்பைக் கொண்டுள்ளது. பகிர்வையும் மாற்றை யும் தூண்டுவது நுகர்வு.

## II. விருப்பங்கள் (Wants)

சாதாரண வழக்கில் 'விருப்பம்' என்னும் சொல்லைத் 'தேவை', 'ஆர்வம்' என்ற அர்த்தங்களில் பயன்படுத்துகிறோம். ஆனால், பொருளியலில் 'விருப்பம்' என்ற சொல் ஒரு தனிப்பட்ட பொருளில் விளக்கப்படுகிறது. விருப்பத்திற்குப் பொருளைப்பெறத் தேவையான 'ஆர்வம்' (desire), அதைப் பெறுவதற்கான 'சாதனங்கள்' (means), சாதனங்களை அளித்து அதை அடை வதற்கான 'மனவிழைவு' ஆகியவை தேவை.

உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை மனிதனின் அடிப் படை விருப்பங்கள். நாகரிக மேம்பாட்டினால் அவனுடைய விருப்பங்கள் பெருகின. அவன் வசதிப் பொருள்களையும் ஆடம் பரப் பொருள்களையும் விரும்பத் தொடங்கினான். இன்றைய மனிதன் வெவ்வேறு பொழுதுபோக்கு வசதிகளையும் வெகுவாக விரும்புகிறான். புத்தகங்கள், புகைப்படமெடுக்கும் கேமரா, ஸ்கூட்டர், கடிகாரம், டிரான்சிஸ்டர், டேப் ரிக்கார்டர் போன்ற

வற்றைப் பெறும் விருப்பத்தைக் கொண்டிருக்கிறான். சில விருப்பங்களைத் தீர்த்தவுடன் மற்ற பல விருப்பங்கள் உருவெடுக்கின்றன. ''ஆசைக்கோர் அளவில்லை' என்று அன்றே சொல்லப்பட்டது. மனித விருப்பங்களுக்கு எல்லையே கிடையாது. சில விருப்பங்கள் அறநெறிக்குட்பட்டவையாகவும், சில அறநெறிக்கப்பாற்பட்டவையாகவும் இருக்கின்றன.

**மனித விருப்பங்களின் இயல்புகள்**

எண்ணிலடங்காத மனித விருப்பங்களின் பொதுவான இயல்புகளைக் கீழ்க்காணுமாறு தொகுத்து விளக்கலாம்.

**1. விருப்பங்கள் எண்ணற்றவை :** மனிதனை 'விருப்பங்களின் மூட்டை' என்று குறிப்பிடுவதுண்டு. ஒவ்வொரு மனிதனும் எண்ணற்ற விருப்பங்களைக் கொண்டிருக்கிறான். பிறந்தது முதல் இறக்கும் வரை கணக்கற்ற விருப்பங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. ஒரு விருப்பம் நிறைவு செய்யப்பட்ட பிறகு மற்றொரு விருப்பம் தோன்றுகிறது. இன்று நாம் நம் மூதாதையருக்குத் தெரியாத பலவற்றையும் விருப்பங்களாகக் கொண்டிருக்கிறோம்.

எடுத்துக்காட்டாக, ஒரு மாணவனின் நிலையை ஆராயலாம். முதலில் அவன் ஒரு சைக்கிள் வாங்குவதை விருப்பமாகக் கொண்டிருக்கக்கூடும். அது நிறைவேறிய பிறகு ஒரு கைக்கடிகாரம் வாங்குவது அவனுடைய புதிய விருப்பமாகிறது. அவ்விருப்பமும் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, புதுவகை டெரீன் பேன்ட், டிரான்சிஸ்டர், கேமரா, டேப் ரிக்கார்டர், ஸ்கூட்டர் போன்றவற்றைப் பெறும் விருப்பங்களும் அவனுக்குத் தோன்றுகின்றன.

விருப்பங்கள் எண்ணற்றவையாக இருப்பினும், அவற்றை நிறைவு செய்வதற்கான வசதிகள் குறைவான அளவிலேயே உள்ளன. இதனாலேயே பற்றாக்குறையும் கிடைப்பருமையும் காணப்படுகின்றன.

**2. எல்லா விருப்பங்களையும் நிறைவேற்ற இயலாமை :** எண்ணிலடங்காத விருப்பங்கள் இருந்தாலும் ஒருசில விருப்பங்களையே நிறைவேற்றுவது சாத்தியம். வாங்கும் திறனைப் பெற்றுள்ள ஒருவர் உடனடியாகவோ அல்லது சற்றுக் காலம் தாழ்த்தியோ ஒரு குறிப்பிட்ட விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். உண்ணவேண்டும் என்ற விருப்பம் கொண்டு பசியோடு

இருக்கும் ஒருவர் உணவகம் சென்று அவ் விருப்பத்தை நிறை வேற்றலாம். எல்லா விருப்பங்களையும் ஒரே சமயத்தில் தீர்த்துக் கொள்ள இயலாது. தனி விருப்பத்தை நிறைவேற்றலாம்; அத் தனி விருப்பம் தொடர்ந்து நீடிக்காது என்ற அடிப்படையிலேயே 'குறைந்துசெல் பயன்பாட்டு விதி' (law of diminishing utility) வரையப்பட்டுள்ளது. மிட்டாய் விரும்பும் ஒரு குழந்தையை இதற்குச் சான்றாகக் கூறலாம். அக் குழந்தை தொடர்ந்து, அளவில்லாமல் மிட்டாயைத் தின்பதற்கு விரும்பாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் மிட்டாயின் பயன்பாடு குறையத் தொடங்கி, பின்பு பூஜ்ய நிலையை அடைந்து, எதிர்மறை நிலை யிலும் செயல்படும்.

**3. விருப்பங்கள் போட்டியிடும் தன்மை கொண்டவை:** எல்லா விருப்பங்களையும் பூர்த்திசெய்ய முடியாமையால், சில வற்றைத் தெரிந்தெடுத்து நிறைவேற்றுகிறோம். சில விருப்பங்கள் முக்கியத்துவத்திற்கேற்ப முதலில் நிறைவேற்றப்பெறுகின்றன. காலம், பணம் போன்ற சாதனங்களின் (வசதிகளின்) குறை வால் அவசரமானதும் அவசியமானதுமான விருப்பங்களே உட னடியாகத் தீர்க்கப்படுகின்றன. மற்ற விருப்பங்களை நிறைவு செய்வது தள்ளி வைக்கப்படுகிறது. இதை விளக்க ஒரு கல்லூரி மாணவியை உதாரணமாகக் கொள்ளலாம். தந்தையிடமிருந்து பிறந்த நாள் பரிசாகப் பெறுகின்ற நூறு ரூபாயை அவள் பல வழிகளில் பயன்படுத்தலாம். புடவை வாங்குவதும், கடி காரம் ஒன்றைப் பெறுவதும், பாடநூல்களை வாங்குவதும், சுற் றுலாப் பயணம் செல்வதும் அவளது விருப்பங்களாக அமையக் கூடும். இந்த எல்லா விருப்பங்களையும் நூறு ரூபாயைக் கொண்டு நிறைவேற்ற முடியாது. முக்கிய விருப்பத்தை அவள் முதலில் நிறைவேற்றிக்கொள்கிறாள். தேர்வு நேரமாக இருப்பின், பாட நூல்களை வாங்குவது அவளது விருப்பமாக இருக்கும்.

**4. விருப்பங்களை மாற்று வழிகளில் நிறைவேற்றுதல்:** சில விருப்பங்களை மாற்று வழிகளில் பூர்த்தி செய்துகொள்ளலாம். பசியோடு இருக்கும் ஒருவர் அரிசிச் சோறு, ரொட்டி, சப்பாத்தி, பழங்கள் போன்றவற்றில் எதை வேண்டுமானாலும் உட்கொள்ள லாம். இதுபோன்றே ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல விரும்பும் ஒருவர் சைக்கிளைப் பயன்படுத்தலாம்; அல்லது டாக்ஸி யிலோ பஸ்ஸிலோ செல்லலாம். பொழுதுபோக்குவதற்குக் கிரிக் கெட், ஹாக்கி, டென்னிஸ் போன்ற விளையாட்டுகளைப் பார்க்க லாம்; அல்லது திரைப்படம், நாடகம், சர்க்கஸ், பொருட்காட்சி, நாட்டியம், மெல்லிசை ஆகியவற்றைக் கண்டு அல்லது கேட்டு ரசிக்கலாம்.

**5. சில விருப்பங்கள் ஒருங்கிணைந்தவை:** சில விருப்பங்களை நிறைவேற்றப் பல பொருள்கள் இணைவாகத் தேவைப்படுகின்றன. 'டென்னிஸ்' விளையாட மட்டை (ராக்கெட்), பந்து, வலை, மைதானம் ஆகியவை கூட்டாக ஒருங்கே கிடைக்கவேண்டும். தேநீர் தயாரிக்கப் பால், தேயிலைத்தூள், சர்க்கரை முதலிய ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இணைந்து வேண்டப்பெறுகின்றன. ஒரே ஒரு காலணியை வைத்துக்கொண்டு பயன்பெற முடியாது. மையில்லாத பேனாவினால் பயனுண்டா? கார்-பெட்ரோல், வண்டி-குதிரை, டூத்பேஸ்ட்-டூத் பிரஷ் போன்றவற்றையும் எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

**6. சில விருப்பங்கள் திரும்பத்திரும்பத் தோன்றுபவை:** விருப்பங்களில் பல தொடர்ந்து திரும்பவும் தோன்றக்கூடியவை. பசியும் தாகமும் திரும்பத் திரும்பத் தோன்றும் விருப்பங்களாகும். இவற்றை என்றும் தோன்றுதபடிப் பூர்த்திசெய்ய இயலாது. இவ் விருப்பங்களைப் பூர்த்திசெய்து, திரும்பவும் இதே விருப்பங்கள் தோன்றுவதற்கு இடையே கால இடைவெளி அமையும்.

**7. விருப்பங்கள் பழக்கங்களாக மாறக்கூடியவை :** ஒரு குறிப்பிட்ட விருப்பம் ஒரு குறிப்பிட்ட வழியில் தொடர்ந்து நிறைவேற்றப்படும்போது, அது பழக்கமாக மாறிவிடுகிறது. தேநீர் அருந்துதல், புகைபிடித்தல், மது அருந்துதல், திரைப்படம் பார்த்தல், சீட்டாடுதல், குதிரைப் பந்தயத்திற்குச் செல்லுதல் முதலியவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சிலர் மின்விசிறியின்றி உறங்கவே மாட்டார்கள்.

**8. விருப்பங்களை நிறைவேற்றும் விரைவில் வேறுபாடு :** விருப்பங்கள் பூர்த்தி செய்வதற்கான அவசரத் தன்மையில் வேறுபடுகின்றன. எல்லா விருப்பங்களும் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்ற தீவிரத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை. சில விருப்பங்களை நிறைவேற்றுவதைக் காலம் தாழ்த்தி ஒத்திப் போடலாம். பசியோடு இருக்கும் ஒருவர் உணவு உட்கொள்வதையும், திரைப்படம் செல்வதையும் விருப்பங்களாகக் கொண்டிருந்தால், பசியைத் தீர்த்துக்கொள்வதே அவசரத் தன்மையுடைய விருப்பமாகும்.

**9. விருப்பங்களின் முக்கியத்துவத்தில் வேறுபாடு:** வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கான விருப்பங்கள் முக்கியமானவை. ஆடம்பரப் பொருள்கள், வசதிப் பொருள்கள் ஆகிய

வற்றிற்கான விருப்பங்களே அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கருத முடியாது. முக்கியத்துவத்திற்கேற்ப விருப்பங்களே நிறைவேற்ற நாம் முயலுகின்றோம்.

**10. விருப்பங்கள் மாறக்கூடியவை :** சூழ்நிலை, காலம், இடம் ஆகியவற்றிற்கேற்ப விருப்பங்கள் மாறுபடுகின்றன. குளிர் மிக்க மேலைநாடுகளில் மது அருந்துவதைத் தவிர்ப்பது கடினம். மேலைநாட்டு உடைகள் இந்தியா போன்ற நாடுகளுக்குச் சற்றும் பொருந்த மாட்டா. வேனிற்காலத்தில் குளிர்பானங்களையும், குளிர்காலத்தில் சூடான பானங்களையும் அருந்துகிறோம்.

**11. விருப்பங்கள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளுக்கு உதவுதல்:** விருப்பங்களே நிறைவேற்றும் பொருள்களே உற்பத்தி செய்யும் பணிகளில் தொடர்ந்து ஈடுபடும்போது, புத்தாக்க முறைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆக்கப்பணிகளே ஊக்குவிக்கும் விருப்பத்தோடு இந்தியா அணுக்குண்டை வெடித்துப் பரிசோதனை செய்துள்ளது. இந்திய விஞ்ஞானிகள் சுமார் 30 மாதங்கள் அறிவியல் ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய 'ஆர்யபட்டா' (Aryabhata) என்னும் பெயருடைய உபகிரகத்தை (Satellite) ரஷ்ய ராக்கெட்டின் உதவியோடு விண்வெளிக்குச் செலுத்தி, அது பூமியைச் சுற்றுமாறு செய்திருக்கிறார்கள்.

**12. விருப்பங்கள் விளம்பரங்களால் பாதிக்கப்படுபவை :** போட்டி நிலவும் இன்றைய நிலைகளில் விளம்பரங்கள் இன்றிப் பொருள்களே விற்க முடியாது. விளம்பரங்கள் விருப்பங்களைக் கிளர்ந்து எழுமாறு செய்கின்றன. ஆஞல், கவர்ச்சியான விளம்பரங்களைக் கண்டு, தரம் குறைந்த திரைப்படங்களைப் பார்க்கச் சென்று ஏமாறுபவர்களும் ஏராளமானவர்களாவர்.

**விருப்பங்களின் வகைகள்** (Classification of Wants)

விருப்பங்களே இன்றியமையாதவை, வசதிக்குரியவை, ஆடம்பரமானவை என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இன்றியமையாதவற்றை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை, திறமைக்கு இன்றியமையாதவை, மரபு வழி இன்றியமையாதவை என்று மேலும் மூன்று உட்பிரிவுகளாகப் பகுக்கலாம்.

**1. இன்றியமையாதவை** (Necessaries) : வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் அவசியமான விருப்பங்கள் இன்றியமையாதவையாகும். இவையின்றி மனித வாழ்க்கை நடைபெற இயலாது.

**(i) வாழ்க்கைக்கு இன்றியமையாதவை** (Necessaries of Life): நாம் வாழ்க்கையை நடத்த உணவு, நீர், உடை, இருப்பிடம் ஆகியவை அடிப்படைத் தேவைகளாகின்றன. இவை யில்லாமல் நம்மால் உயிர்வாழ முடியாது. எனவே, இவற்றைப் பெறுவது மனிதனின் முக்கிய முதல் நோக்கமாகிறது. இவ்வகைப் பொருள்கள்கூட நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடும் தன்மை கொண்டவை.

**(ii) திறமைக்கு இன்றியமையாதவை** (Necessaries for Efficiency): மனிதனின் பணித்திறனை மேம்படுத்த சில பொருள் கள் தேவை. திறனைப் பெருக்கும் இவ்வகைப் பொருள்கள் உற்பத்தியை உயர்த்துகின்றன. பால், தயிர், முட்டை, மீன், இறைச்சி போன்றவை மனிதனின் உடல் திறனை வளர்ப்பவை. கல்வி, பயிற்சி ஆகிய பணிகளும் திறமையாகப் பணிபுரிவதற்கு உதவுபவையே. இப் பொருள்களின்றி நாம் வாழமுடியும்; ஆனால், நம் உழைக்கும் ஆற்றல் பாதிக்கப்படும். படிப்பதற்கு உதவியாக மேஜை விளக்கை ஒரு மாணவன் பயன்படுத்தும்போது, அவனது பயிலும் திறன் அதிகரிக்கிறது. அதனால் ஆகும் செலவைவிட, அவன் பெறுகின்ற நன்மையே உயர்வானதாகும். கல்வியறிவு பெறுதவர்களோடு ஒப்பிடும்போது, கல்வி கற்றவர்கள் திறமைசாலிகளே. மனிதனின் திறமையை வளர்ப்பதில் பொதுக் கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும் பேருதவி புரிகின்றன. மக்களுடைய ஆரோக்கியத்திற்கேற்பவும் அவர்களின் உழைக்கும் திறன் அமையும். ஆரோக்கியத்தை வளர்க்க மருத்துவ வசதிகள் பெருக்கப்படவேண்டும்.

**(iii) மரபுவழி இன்றியமையாதவை** (Conventional Neces-saries) : சமூகப் பராம்பரியங்களுக்கும்; மரபுகளுக்கும், பண்பாடுகளுக்கும், கலாச்சாரத்திற்கும், பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமுடைய சில பொருள்களைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. இவற்றைப் பயன்படுத்தினால்தான் சமூகத்தில் ஓர் அந்தஸ்தைப் பெறமுடிகிறது. தீபாவளி, பொங்கல், ஹோலி முதலிய பண்டிகைகளிலும், கோயில் திருவிழாக்களிலும், மதச் சடங்குகளிலும் நாம் உபயோகிக்கும் பண்டங்கள் இவ் வகையைச் சேர்ந்தவை. இவ்வகைப் பொருள்களைப் பயன்படுத்துவது பழக்க மாகவும் மாறிவிடுகிறது. தீபாவளி-பொங்கல்-கிருஸ்துமஸ் தினங் களில் புத்தாடைகள் உடுத்துவது, திருமணத்தில் விருந்தோம்பு வது ஆகியவை பாரம்பரியமானவை. தேநீர் அருந்துவது, உணவு உண்ட பிறகு புகைபிடிப்பது போன்றவை பழக்கத்தால் கைக் கொள்ளப்படுபவையாகும்.

**2. வசதிக்குரியவை** (Comforts) : வசதியான வாழ்க்கைக்குச் சில பொருள்கள் தேவை. திறமை, மன மகிழ்ச்சி, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை வளர்க்க வசதிப் பொருள்கள் வகை செய்கின்றன. உதாரணமாக, மின்விசிறியின் கீழ் வசதியாக அமர்ந்து பணியாற்றும் ஒரு கணக்கரின் திறன் உயர்வாக இருக்கும். ஆனால், இப் பொருள்களுக்கு ஆகும் செலவுக்குத் தக்க அளவில் திறமை மேம்படும் என்று கருதமுடியாது. கட்டிலில் படுப்பதும், நாற்காலியில் அமர்வதும் வசதியாக அமைகின்றன. இப் பொருள்களை வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களென்று கொள்ள இயலாது. மருத்துவர் ஒருவருக்குக் கார் வசதியானதாக இருப்பதோடு அவரது திறனையும் வளர்க்கிறது. வாடிக்கையாளர்களின் வசதிக்காகவே கடைகளில் குளிர்சாதன் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. குளிர்காலத்தில் கம்பளி ஆடைகள் வசதி தருபவை. வசதிப் பொருள்கள் வாழ்க்கையை எளிதாக்குகின்றன. இவை மறைமுகமாக மனிதத் திறமையை வளர்க்கக்கூடியவை.

**3. ஆடம்பரமானவை** (Luxuries) : திறனைக் கூட்டாமல், மன மகிழ்ச்சியை வளர்த்து, மனிதனின் படாடோப-டாம்பீக வாழ்க்கைக்கு ஆடம்பரப் பொருள்கள் உதவுகின்றன. இவற்றைப் 'போகப் பொருள்கள்' என்றும் கூறலாம். இவற்றின் நுகர்வைத் தவிர்க்க இயலும். மிக விலையுயர்ந்த ஆடைகளும், இல்லங்களும், இல்லப் பொருள்களும் ஆடம்பரமானவை. மெர்சிடெஸ், பிளிமத், செவர்லெட் போன்ற கார்களை வைத்திருப்பதும், பொமரேனியன், ஆல்சேஷன், புல்டாக் போன்ற விலையுயர்ந்த நாய்களை வளர்ப்பதும், ஓபராய்-ஷெராட்டன், அசோகா, தாஜ்-கோரமண்டல், சவேரா போன்ற ஹோட்டல்களில் தங்குவதும் ஆடம்பர வாழ்வின் பிரதிபலிப்புகளே. ஓபராய்-ஷெராட்டனில் தங்குவதற்கான ஒருநாள் செலவு சுமார் ஆயிரம் ரூபாயாக இருக்குமாம்!

முத்துகளும் வைரங்களும், 'போகப் பொருள்களே'. சமுதாயத்தில் 'மதிப்பை' அல்லது 'அந்தஸ்தைப்' பெறவே இவை பயன்படுத்தப்படுகின்றன. பண்டைக்கால மன்னர்கள் போக வாழ்வை நடத்தினர். மேற்கண்டவைகளில் பல 'தீங்கற்ற போகப் பொருள்களே' (harmless luxuries). மது அருந்துதல், பணம் வைத்துச் சீட்டாடுதல், குதிரைப் பந்தயங்களுக்குச் செல்லுதல் முதலியவை 'தீங்கு விளைவிக்கும் ஆடம்பரங்கள்' (harmful luxuries) ஆகும்.

விருப்பங்களின் இவ்வகைப் பாகுபாடுகள் திட்டவட்ட மானவையல்ல. ஒருவருடைய போகப் பொருள் மற்றொருவருக்கு அவசியப் பொருளாக இருக்கக்கூடும். வேலையின்றி வீணே பொழுதைக் கழிக்கும் செல்வந்தருக்குக் கார் போகப் பொருள். அதுவே மருத்துவர், வழக்குரைஞர் போன்றவர்களுக்கு அவசியப் பொருளாகிறது. இந்தியாவில் 'தொலைக்காட்சிப் பெட்டி' (television set) ஆடம்பரப் பொருளாக அமையும்போது, பிரான்ஸில் அவசியப் பொருளாகக் கருதப்படுகிறது. நாற்காலி தேவையான ஒரு பொருள்; நுரை ரப்பர் பஞ்சு வைத்த சோஃபா ஆடம்பரப் பொருள். சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் வானொலிப்பெட்டி போகப் பொருளாகக் கருதப் பட்டது. இன்று, அது அவசியப் பொருளாக உணரப்பட்டு வரு கிறது.

ஏழை ஆசிரியர் ஒருவருக்கு ஸ்கூட்டர் ஆடம்பரப் பொரு ளாகும்; அதுவே சீட்டு நிதி நிறுவனப் பணியாளருக்கு அவசியத் தேவையாகிறது. விமானத்தில் செல்வதைப் பிரதம மந்திரி தவிர்க்க முடியாது. ஏனெனில், அவருக்குக் 'கடமை கண் போன்றது; காலம் பொன் போன்றது'. காசி யாத்திரைக்குச் செல்லும் வறிய நிலையிலுள்ள முதியவர் ஒருவருக்கு விமானப் பயணம் ஆடம்பரமானது. குறைந்த வருமானமுடையவர் களுக்குப் போகப் பொருள்களாக இருக்கக்கூடியவை, செல்வந் தர்களுக்கு அவசியப் பொருள்களாகின்றன. விருப்பங்களை இன்றி யமையாதவை, வசதிக்குரியவை, ஆடம்பரமானவை என்று வகைப்படுத்தும்போது நுகர்வோருடைய வருமானம், செல்வ நிலை, நாட்டின் சீதோஷ்ண நிலை, பொருள்களின் விலைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படவேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் புரிந்துகொள்ளவும் விருப்பங்களின் பாகுபாடு உதவுகிறது.

**கூட்டு விருப்பங்கள்** (Collective wants)

மக்கள், சில கூட்டு விருப்பங்களையும் கொண்டிருக்கிறார்கள். அவ் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய அரசு உதவும். அமைதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பலரும் கூட்டாக விரும்புகின் றனர். அரசின் காவல்துறை இவற்றைப் பாதுகாக்கிறது. மக்களின் கூட்டு விருப்பங்களை நிறைவேற்றவே அரசு சிப்பாய்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறிஞர்கள், வழக்குரைஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியவர்களை வேலைக்கமர்த்திப் பொதுநலப் பணி களைப் பூர்த்தி செய்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் மக்கள் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதையும், சாலையை

செப்பனிடுவதையும் கூட்டு விருப்பங்களாகக் கொண்டிருக்கலாம். அவற்றை நிறைவேற்றுவது அரசே ஆகும். ஆனால், இவ்வகைப் பொது விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்ள நேரடியாக விலை களை நாம் அளிப்பதில்லை. மாறாக, வரிப்பணத்தை அரசுக்குச் செலுத்துகிறோம்.

## III. வாழ்க்கைத்தரம் (Standard of Living)

நுகரும் பொருள்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் அளவுக் கேற்ப வாழ்க்கைத்தரம் அமைகிறது. மிக அவசியமான பொருள் களைக்கூடப் பெறமுடியாதவரின் வாழ்க்கைத்தரம் தாழ்வானது. இன்றியமையாத பொருள்களோடு வசதிப் பொருள்களையும் ஓர ளவு ஆடம்பரப் பொருள்களையும் பெற்று வாழ்பவருடைய வாழ்க்கைத்தரம் உயர்வானது. ஒவ்வொரு மனிதனும் நல் லுணவு, சிறப்பான உடை, வசதியான வீடு, குழந்தைகளுக்கான கல்வி வசதிகள் ஆகியவற்றை விரும்புகின்றான். இவ் வசதிகள் யாவற்றையும் பெற்று உயர்வான வாழ்க்கைத் தரத்தை அடை வது அவனது நோக்கமாகிறது.

வாழ்க்கைத் தரத்தை வரையறுப்பதும் அளவிடுவதும் கடி னமே. குடும்ப நிலை, கல்வி, செல்வம், வருமானம் போன்றவற் றிற்கேற்ப வாழ்க்கைத் தரம் வேறுபடும். வருமானத்தையும் செல்வத்தையும் இழந்த ஒருவரது வாழ்க்கைத்தரம் பாதிக்கப் படுகிறது. அந் நிலையில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் பல வசதிப் பொருள்களையும் ஆடம்பரப் பொருள்களையும் நுகர முடியாது.

வாழ்க்கைத் தரத்திற்கும் வாழ்க்கைச் செலவுக்கும் (cost of living) உள்ள வேறுபாட்டை அறிவது அவசியம். வாழ்க்கை நடத்துவதற்கான விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஆகும் பணச் செலவை வாழ்க்கைச் செலவு என்கிறோம். ஒரு நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டு விலைகள் அதிகரிக்கும்போது, வாழ்க்கைச் செலவு கூடி வாழ்க்கைத்தரம் தாழ்வடைகிறது.

வாழ்க்கைத் தரம் 'வாழ்வியல் தரத்தினின்றும்' (standard of life) வேறுபட்டது. ஒருவர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகளின் அளவுக்கேற்ப வாழ்க்கைத்தரம் இருக்கும்போது, வாழ்வியல் தரமானது வாழ்வுமுறை, மனப்பாங்கு, கொள்கை, நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப அமையும். அதிகச் செல்வத்தை

யும் வருமானத்தையும் பெறும் ஒருவரது வாழ்க்கைத்தரம் உயர்வானது. எனினும், அவர் நேர்மையற்ற வாழ்க்கையைக் கொண்டிருந்தால், அவரது வாழ்வியல் தரம் தாழ்வானதென்றே கருதப்படும். வாழ்க்கைத் தரம் புற வாழ்க்கையையும், வாழ்வியல் தரம் அகவாழ்வையும் சார்ந்திருக்கின்றன.

**வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் காரணிகள்**

தனி ஒருவரது அல்லது ஒரு குடும்பத்தினரது அல்லது ஒரு நாட்டினரது வாழ்க்கைத் தரம் பின்வரும் பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

**1. குடும்ப அங்கத்தினரது எண்ணிக்கை:** அளவில் பெரிய குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் தாழ்வாகவும், சிறிய குடும்பத்தின் தரம் உயர்வாகவும் இருக்கும். மேலும், குறைந்த வருமானத்தைப் பெறும் அதிக அங்கத்தினர்களைக் கொண்ட குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் மிக மோசமாக இருக்கும். இதன் காரணமாகவே குடும்பநலத் திட்டம் 'அளவான குடும்பத்தை' அமைத்துக் கொள்ளத் தூண்டுகிறது. பெரிய குடும்பத்தில், குடும்ப வருமானம் பல அங்கத்தினரிடையே பகிரப்படுவதால் வாழ்க்கைத் தரம் தாழ்ந்த நிலையிலேயே அமையும்.

**2. வருமானம்:** வாழ்க்கைத்தரம் பெரிதும் வருமானத்தைச் சார்ந்தே அமைகிறது. நாட்டுச் செல்வத்தையும் வருமானத்தையும் அரசு சமமாகப் பங்கிடாவிட்டால், மக்களின் வாழ்க்கைத் தரங்களில் அதிக வேறுபாடு இருக்கும். அதிக வருமானத்தைப் பெறுபவர் பல விருப்பங்களை நிறைவுசெய்துகொள்ள முடியும். எனவே, அவர் உயர்வான வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருப்பார். குறைந்த தினக்கூலியைப் பெறும் தொழிலாளி ஒருவரின் வாழ்க்கைத் தரம் தாழ்வானதே. ஒரு கோடீஸ்வரர் எவ்வகை விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொண்டு, மிக ஆடம்பரமான வாழ்க்கையை நடத்த இயலும். ஒருவரது 'ஈட்டும் திறன்' அல்லது 'வாங்கும் திறன்' வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிக்கின்றது.

**3. விலை மாற்றங்கள்:** பொருள்களின் விலை மாற்றங்களுக்கேற்பவும் வாழ்க்கைத் தரம் அமையும். நிலையான மாத வருமானத்தைப் பெறும் நடுத்தரக் குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் பணவீக்கக் காலத்தில் பெரிதும் பாதிக்கப்படும்; விலைகள் குறையும்போது சீரடையும்.

**4. நாகரிக மேம்பாடு :** இன்று உலகின் பல நாடுகளிடையே நெருங்கிய தொடர்பு அமைந்துள்ளது. இதனால், நாகரிகம் வளர்கிறது. உயர் வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட மேம்பாடடைந்த நாடுகளைப் போன்று முன்னேற வேண்டுமெனப் பின்தங்கிய நாடுகளும் விழைகின்றன. இதனால், அவை செல்வத்தையும் வருமானத்தையும் உற்பத்தியையும் கூட்டி மேலான வாழ்க்கைத் தரத்தைப் பெறுகின்றன.

**5. கல்வி :** உயர்நிலைப் பொதுக்கல்வியையும், தொழில் நுட்பக் கல்வியையும் பெற்றவர்களே அதிக வருமானத்தை ஈட்டி உயர்வான வாழ்க்கைத் தரத்தைப் பெறமுடியும்.

**6. சமயம் :** மிகுந்த செல்வத்தைக் கொண்ட அறநெறியாளர்களில் சிலர் எளிய வாழ்வை விரும்பி ஏற்றுக் குறைந்தளவு நுகர்விலேயே ஈடுபடுகிறார்கள். இதனால், இவர்களது வாழ்வின் தரத்தை உயர்வானதாகக்கொள்ள இயலாது.

**7. தொழில்களின் முன்னேற்றம் :** வேளாண்மையோடு தொழிற்துறையும் வளர்ந்த ஒரு நாட்டில் உற்பத்தியும் வருமானமும் அதிக அளவில் அமையும். பல்வேறு தொழில்களும் வெவ்வேறு நுகர் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும். அந்த நாட்டில் தனி ஒருவருக்குக் கிடைக்கும் பொருள்கள், வருமானம், வாழ்க்கைத் தரம் ஆகியவை உயர்மட்டத்தில் அமையும்.

**8. இயற்கை வளங்கள் :** ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல இயற்கை வளங்கள் இருப்பதால்தான் அந்நாட்டு மக்கள் அவ் வளங்களை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி நலவாழ்வைப் பெற்றிருக்கின்றனர். அரபு நாடுகளின் எண்ணெய் வளம் அரேபியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. ஆனால், ஜப்பான் இயற்கை வளங்களை மிகுதியாகக் கொண்டிருக்கவில்லை. எனினும், ஜப்பானியர்கள் பிற நாடுகளினின்றும் மூலப்பொருள்களை இறக்குமதி செய்து, பல வினை முடிந்த பொருள்களை உருவாக்கி ஏற்றுமதி செய்கின்றனர். கடின உழைப்பே அவர்களுக்கு உயர்வான வாழ்க்கைத் தரத்தைத் தந்துள்ளது.

### இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம்

ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு

ஒப்பிடும்போது, இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் மிகத் தாழ்வாக இருக்கிறது. இந்தியாவில் ஏழ்மை மிகுந்திருப்பதற்கான காரணங்களாவன:

**(i) மிகுதியான மக்கட் பெருக்கம்:** வளங்களோடு ஒப்பிடுகையில் இந்திய மக்கள் தொகை மிகையானதே. குறைவான தேசிய வருமானத்தை அதிக எண்ணிக்கையில் உள்ள மக்கள் பங்கிட்டுக்கொள்ளும்போது தலா வருமானம் குறைகிறது.. தற்பொழுது நம் நாட்டின் மக்கள்தொகை 55 கோடியைக் கடந்து விட்டது. மக்கள்தொகையை நிலையாகக் கொண்டுள்ள ஒரு நாட்டில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

**(ii) குறைவான தனி மனித வருமானம்:** ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளோடும், பிற வளர்ச்சியடைந்த நாடுகளோடும் ஒப்பிடும் போது இந்தியாவில் தனி மனித வருமானம் மிகவும் தாழ்வாக இருக்கிறது.

**(iii) வேளாண்மை உற்பத்திக் குறைவு:** முன்னேற்றமடைந்த நாடுகளில் வேளாண்மைத் துறையில் சாகுபடியில் ஈடுபட்டுள்ள தனியொருவரின் உற்பத்தியும், ஓர் ஏக்கருக்கான உற்பத்தியும் மிக அதிகமாக உள்ளன. நிலச்சீர்திருத்தங்கள் சரிவர செய்யப்படாமை, குறைந்த முதலீடு, மின்சாரப் பற்றாக்குறை, பாசன வசதிக் குறைவு, பருவமழை தவறுதல், இயந்திரங்களை மிகுதியாகப் பயன்படுத்தாமை, விஞ்ஞானச் சாகுபடி முறைகள் சரியாகப் பின்பற்றப்படாமை, உரங்களின் விலையுயர்வு, விவசாயிகளின் கடன் நிலை போன்றவை இந்திய வேளாண்மையைப் பின்தங்கிய நிலையிலேயே வைத்துள்ளன.

**(iv) தொழில் வளர்ச்சியின்மை:** எல்லா வளங்களையும் கொண்ட நம் திருநாட்டில், அவ் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான மூலதன வசதி குறைவாக உள்ளது. பெட்ரோலிய எண்ணெய்களின் விலையுயர்வும், மின்சாரப் பற்றாக்குறையும் நம் நாட்டின் சிறு தொழில்களை வெகுவாகப் பாதித்துள்ளன.

**(v) குறைவான மூலதனத் திரட்சி:** தாழ்வான மக்கள் வருமானம், அரசின் பண-நிதிக் கொள்கைகளின் குறைபாடுகள், வங்கிப் பழக்கமின்மை, வீணான நுகர்வு முதலியவை இந்தியாவில் குறைவான மூலதனத் திரட்சிக்குக் காரணங்களாகின்றன.

**(vi) சமுதாய — சமயக் காரணிகள்:** இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்திருப்பதற்கு மக்களின் கண்மூடிப் பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள், பண்பாடு, பாரம்பரியம், கூட்டுக் குடும்ப முறை, பிற்போக்குக் கொள்கை போன்றவையும் அடிப்படையாகின்றன.

**(vii) பொருளாதாரத்தின் பின் தங்கிய நிலை:** போக்கு வரத்துத் தகவல் தொடர்பு வசதிகள் முழுமையாக வளராமை, இடைநிலையாளர்கள் அல்லது தரகர்களின் சுரண்டல், அரசின் கட்டுப்பாடுகள் முதலியவை இந்தியப் பொருளாதாரத்தைப் பின் தங்கிய நிலையில் இருத்தியுள்ளன.

நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றன:

(i) பொருளாதார வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுல் தேசிய வரு மானம் கூடும்.

(ii) மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் குடும்பநலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றிற்காக அதிக மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) ஆக்கப் பணிகளைத் திறம்படச் செய்யவேண்டுமென்ற உணர்வைக் கல்வியறிவால்தான் அளிக்க இய லும். எனவே, நம்முடைய திட்டங்களில் கல்வி வளர்ச்சிக்குச் சிறப்பான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) போக்குவரத்து-செய்தித் தொடர்பு வசதிகளில் கவ னம் செலுத்தப்படுகிறது. இவ் வசதிகள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றவர்களுக்கும் மற்ற வர்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துகின் றன. இதனுல், உழைத்து, உற்பத்தியைப் பெருக்கி, வருமானத்தை உயர்த்தி, நல்வாழ்வைப்பெற வேண்டுமென்ற விருப்பம் எல்லோருக்கும் எழுகிறது.

(v) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தேசிய வருமானத்தைப் பெருக்குனல் மட்டும் போதாது. பெருகிய வருமானம் மக்கள் அனைவரிடையே ஓர ளவு சமமாகப் பங்கிடப்படவேண்டும். இதனுலேயே வேளாண்மை உழைப்பாளர்களுக்கும், தொழி

லாளர்களுக்கும் குறைந்த மட்டக் கூலிகள் நிர்ணயிக்கப் படுகின்றன.

(vi) மக்களுடைய உண்மை வருமானத்தை உயர்த்துவதே நம் இலக்காக இருத்தல் அவசியம். விலைகள் கட்டுப்படுத்தப்படாமல் உயரும்போது கூலி உயர்வால் எப் பயனும் ஏற்படுவதில்லை. 'விலை நிலைப் பேறுக்கத்தைப்' (price stabilisation) பெறவும் அரசு பல முறைகளைப் பின்பற்றுகிறது.

(vii) அரசு பல சமூகநலப் பணிகள் வாயிலாகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயலுகிறது. சில அவசிய உணவுத் தானியங்களும், சில ரசித் துணிகளும் கட்டுப்படுத்தப்பட்டுக் குறைவான விலைகளில் விநியோகிக்கப்பெறுகின்றன.

இந் நடவடிக்கைகள் இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுமென நம்பலாம்.

மக்களின் மேலான வாழ்க்கைத் தரம் மூலதனத் திரட்சிக்கு உதவும். உயர்வான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவர்கள் அதிக 'வாங்கும் திறனைக்' (purchasing power) பெற்றிருப்பர். இதனால் பண்டங்கள்-பணிகள் ஆகியவற்றின் தேவை பெருகும். உற்பத்திப் பணிகளில் அதிக முதலீட்டின் தேவை உணரப்படும். அதிக முதலீட்டினால் உற்பத்திகூடி வருமானம் பெருகும். மூலதனத் திரட்சி எளிதாகும்.

வாழ்க்கைத்தரம் காலத்திற்குக் காலம் மாறக்கூடியது. இந்தியாவில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இன்று மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. ஆனால், இந்த உயர்வு போதுமானதாக இல்லை.

## IV. எங்கெலின் நுகர்வு விதி (Engel's Law of consumption)

வாழ்க்கைத் தரத்தைப்பற்றி அறிந்துகொள்ளக் குடும்பச் செலவீட்டுமுறை உதவுகிறது. இதற்கு, மக்களின் வருமானம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை அறிவது அவசியம். இவ் விவரங்களை ஆய்வு செய்து, சில முக்கிய முடிவுகளைக் கண்டறிந்தவர் டாக்டர் எர்னஸ்ட் எங்கெல் (Dr. Ernest Engel, *1821–1896*).

என்ற பிரஷ்ய நாட்டுப் (Prussia) புள்ளி விவரத் துறையின் தலைவராக இருந்தவராவார். அவர் 1857ஆம் ஆண்டு சாக்ஸனி (Saxony) என்ற நகரிலிருந்த செல்வந்தர்கள், நடுத்தரக் குடும்பத்தினர், தொழிலாளர்கள் ஆகிய மூன்று பிரிவினரின் குடும்ப வரவு-செலவுப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தார். அதன் மூலம் நுகர்வின் போக்கிற்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பைக் கண்டறிந்தார். அவர் தந்த முடிவுகளைத்தான் எங்கெலின் 'குடும்பச் செலவீட்டு விதி' (law of family expenditure) அல்லது 'நுகர்வு விதி' என்பதன்கீழ்ப் படிக்கிறோம். மக்களின் வருமானம் உயரும்போது அவர்களின் தேவை எவ்விதம் மாறுகிறது என்பதை இவ்விதி உணர்த்துகிறது. எங்கெல் கண்டறிந்த முடிவுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) ஒரு குடும்பத்தின் வருமானம் அதிகரிக்கும்போது உணவுக்காகச் செலவிடும் பணத்தின் சதவீதம் குறைந்துகொண்டே செல்கிறது.

(2) வருமானம் வேறுபட்டிருப்பினும், எல்லாக் குடும்பங்களும் உடைக்காகச் செலவிடும் பணத்தின் சதவீதம் சற்றெறுப்ப ஒரேநிலையில் உள்ளது.

(3) வருமானம் மாறுபட்டிருப்பினும், எல்லாக் குடும்பங்களிலும் வீட்டு வாடகை, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் பணத்தின் சதவீதம் ஏறக்குறைய ஒரே அளவில் இருக்கிறது.

(4) ஒரு குடும்பத்தின் வருமானம் உயரும்போது, அக்குடும்பம் ஆடம்பரப் பொருள்கள் மீதும், கல்வி, கேளிக்கை, உடல்நலம், வரி போன்ற இனங்களின் மீதும் செலவிடும் பணத்தின் சதவீதம் உயர்ந்து செல்கிறது.

(5) ஒரு குடும்பத்தின் வருமானம் அதிகரிக்கும்போது, செலவு செய்யும் இனங்களின் எண்ணிக்கையும் உயரும்.

இம் முடிவுகளில் இருக்கும் உண்மையை 79ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

| பொருள்களின் விவரம் | ரூ. 200 வருமானம் பெறும் குடும்பம் செலவிடும் தொகை | வருமானத்தில் செலவின் சதவீதம் | ரூ. 500 வருமானம் பெறும் குடும்பம் செலவிடும் தொகை | வருமானத்தில் செலவின் சதவீதம் | ரூ. 1,000 வருமானம் பெறும் குடும்பம் செலவிடும் தொகை | வருமானத்தில் செலவின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு | 120 | 60 | 250 | 50 | 400 | 40 |
| 2. உடை | 30 | 15 | 75 | 15 | 150 | 15 |
| 3. வாடகை, எரி பொருள், மின் சாரம் | 20 | 10 | 50 | 10 | 100 | 10 |
| 4. கல்வி, கேளிக்கை, உடல்நலம், வரி, ஆடம்பரப் பொருள்கள் | 30 | 15 | 125 | 25 | 350 | 35 |
| | 200 | 100 | 500 | 100 | 1000 | 100 |

பட்டியலில் ரூ. 200, ரூ. 500, ரூ. 1,000 வருமானம் பெறும் மூன்று குடும்பங்களின் செலவினங்களும், அவற்றின் விகிதாச்சாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கெலின் விதியில் கூறப்படும் மாற்றங்கள் செலவின் விகிதாச்சாரம் பற்றியவை; செலவின் அளவு பற்றியவை அல்ல.

குறைவான வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானத்தில் அதிக அளவான 60 சதவீதம் உணவுக்குச் செலவாகிறது. வருமானம் உயரும்போது உணவுக்குச் செலவிடும் பண அளவு கூடினாலும், செலவின் சதவீதம் படிப்படியாக 60-ல் இருந்து 50 ஆகவும், பிறகு 40 ஆகவும் குறைகிறது.

உடை மற்றும் வாடகை, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றிற்கான செலவின் விகிதாச்சாரம் மாறுமல் உள்ளது.

கல்வி, கேளிக்கை, உடல்நலம், வரி மற்றும் ஆடம்பரப் பொருள்கள் போன்றவற்றிற்கான செலவின் விகிதாச்சாரம் அதிக வருமானத்தில் உயர்வாகவும், குறைந்த வருமானத்தில் தாழ்வாகவும் அமைகிறது.

எங்கெலின் முடிவுகள் பல நாடுகளிலும் சோதித்துச் சரியானவை என அறியப்பட்டன. இந்தியாவில் பம்பாய் மாநிலத்தில் ஃபின்ட்லே ஷிர்ராஸ் (Findlay Shirras), வங்காளத்தில் மேஜர் ஜாக் (Major Jack), தக்காணத்தில் ஹரால்டு மேன் (Harold Mann) ஆகியோர் குடும்ப வரவு-செலவுப் புள்ளி விவரங்களை ஆராய்ந்து, எங்கெலின் கருத்துகள் சரியானவை என உறுதிப்படுத்தினர்.

குடும்பங்களின் வரவு-செலவுகளைப் பற்றிய ஆய்வு, அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவும், அவர்களுடைய ஆக்கத்திறனை அதிகரிக்கவும், சரியான வரிவிதிப்புக் கொள்கையை உருவாக்கவும் உதவுகிறது.

தேசிய வருமானக் கணக்கெடுப்புக் குழு (1949) 'இந்தியாவின் நாட்டு வருமானத்தில் பாதிக்குமேல் உணவுக்காகச் செலவிடப்படுகிறது' என்று குறிப்பிட்டது. உணவிலும் உடையிலுமே நம்முடைய தேசிய வருமானத்தின் பெரும்பகுதி செலவழிக்கப்பெறுகிறது. இது இந்தியா ஓர் ஏழை நாடென்பதையும், இங்கு எண்ணிறந்த வறிய குடும்பங்கள் இருக்கின்றன என்பதையும் புலப்படுத்துகிறது. எங்கெலின் விதியில் உள்ள உண்மையை இதன் வாயிலாகவும் அறிகிறோம்.

# 9. நுகர்வு விதிகள்
## (Laws of Consumption)

### I. பயன்பாடு (Utility)

**விளக்கம்**

மனித விருப்பங்களைப் பூர்த்திசெய்யும் ஒரு பொருள் அல்லது பணியின் திறனே பயன்பாடு. நாம் சாதாரணப் பேச்சு வழக்கில் சொல்லும் 'பயன்' (usefulness) என்ற வார்த்தை 'பயன் பாட்டினின்றும்' வேறுபட்டது. நன்மைதரும் பொருள்கள் 'பயன்' கொண்டவை. உடலுக்கும் மனதுக்கும் கேடு விளை விக்கும் மது பயனைக்கொண்டதல்ல. ஆனால், அருந்துபவரின் விருப்பத்தை நிறைவு செய்ததால், அது 'பயன்பாட்டைப்' பெற் றிருக்கிறது. இது போன்றே புகைபிடிப்பதையும் உதாரண மாகக் கொள்ளலாம்.

ஒருவருக்குப் பயன்பாட்டைத் தரக்கூடிய ஒரு பொருள் மற்றொருவருக்குப் பயன்பாட்டைத் தராமற் போகலாம். சைவ உணவு புசிப்பவர்களுக்கு மீன், இறைச்சி, முட்டை ஆகியவை பயன்பாடற்றவை; ஆனால், அசைவ உணவு உண்பவர்களுக்கு அவை பயன்பாடு கொண்டவை.

பொருள்களில் இருந்து கிடைக்கும் பயன்பாடு நுகர்வோரின் 'மனநிலைக்கு' ஏற்பவும் அமையும். ஒருவருக்குக் குறைவான பயன்பாட்டைத்தரக்கூடிய ஒரு பொருள் மற்றொருவருக்கு அதிகப் பயன்பாட்டைத் தரலாம். தொடர்ந்து புகைபிடிப்பவருக்குச் 'சிகரெட்' மிகுதிப் பயன்பாட்டைத் தரும்; எப்போதாவது புகை பிடிப்பவருக்குச் 'சிகரெட்டின்' பயன்பாடு குறைவானது. செல் வந்தர் ஒருவருக்குப் பத்து ரூபாயின் பயன்பாடு தாழ்வானது. அதே பத்து ரூபாய் ஒரு ஏழைத் தொழிலாளிக்கு மிகுதிப் பயன்

பாட்டைத் தரும். அறிவை வளர்க்கும் நூல்கள் எழுத்தறிவு கற்றவர்களுக்கு மட்டுமே பயன்பாட்டைத் தரக்கூடியவை.

**பயன்பாட்டின் வகைகள்**

(i) பொருளுக்கு அதன் உருவத்தை ஒட்டிப் பயன்பாடு அமையலாம். இரும்பு-எஃகுத் தகடுகளைப் பீரோ, கட்டில், மேஜை, நாற்காலிகளாக உருவாக்குவதால் கிடைக்கும் பயன் பாடு 'உருவப் பயன்பாடு' (form utility) ஆகும்.

(ii) ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியாகும் ஒரு பொருளைக் காத்துத் தேவைப்படும் காலத்தில் அளிக்கும்போது அதன் பயன்பாடு உயர்கிறது. காய்கறிகள், முட்டைகள், பழங் கள் போன்றவை கெடாமல் பதப்படுத்தப்பட்டுத் தேவையான போது அளிக்கப்படுகின்றன. கோடையில் குளிர்பானங்களுக்கு அதிகப் பயன்பாடு உள்ளது. இதைக் 'காலப் பயன்பாடு' (itme utility) எனலாம். மழைக்காலத்தில் குடைகள் மிகுதிப் பயன்பாடு உடையவை. அமைதியான காலத்தைக் காட்டிலும் போர்க்காலத்தில் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், வெடிமருந்து கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், பீரங்கிகள், டாங்கிகள் அதிகப் பயன்பாட்டைக் கொண்டிருப்பதால் அதிக மாகத் தேவைப்படுகின்றன.

(iii) காடுகளிலும் கிராமங்களிலும் கிடைக்கும் விறகு நகரங்களுக்குக் கொண்டுவரப்பட்டு விற்கப்படுகிறது. இது 'இடப் பயன்பாட்டைக்' (place utility) குறிப்பதாகும்.

ஒருவர் தொடர்ச்சியாக ஒரு பண்டத்தை நுகரும்போது கிடைக்கும் பயன்பாட்டுத் தொகுதி 'மொத்தப் பயன்பாடு' (total utility) ஆகும். ஒருவர் ஒரே நேரத்தில் ஐந்து வாழைப்பழங்களை உட்கொண்டால், அந்த நுகர்வின்மூலம் அவ ருக்குக் கிடைக்கும் பயன்பாடு மொத்தப் பயன்பாடாகும். அவர் இறுதியாக நுகரும் அலகை 'இறுதிநிலை அலகு' (marginal unit) என்கிறோம். நம் உதாரணத்தில், ஐந்தாவது வாழைப்பழத்தி லிருந்து கிடைக்கும் பயன்பாடு 'இறுதிநிலைப் பயன்பாடு' (marginal utility) எனப்படும்.

**பயன்பாட்டை அளவிடுதல்**

பயன்பாடு என்பது நுகர்வோரின் மனநிலைக்கு ஏற்ப அமை யும் என்பதால் பயன்பாட்டை அளவிட இயலாது; நுகர்வோர்

மட்டுமே அதைப் புரிந்துகொள்ள முடியும் என்று சில பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், பணம் பயன் பாட்டை அளக்க உதவும் ஒரு கருவியாக அமைகிறது. ஒருவர் ரூ. 2 கொடுத்து ஒரு திரைப்படத்திற்குச் செல்கிறார் என்று வைத்துக்கொண்டால், அத் திரைப்படத்தைப் பார்ப்பதன்மூலம் அவருக்குக் கிடைக்கும் பயன்பாடு இரண்டு ரூபாய்க்குச் சமம் எனக்கொள்ளவேண்டும். 'சீக்கோ' கைக்கடிகாரத்தை வாங்கு வதற்கு ஒருவர் ரூ. 200 விலை கொடுத்தால், அவர் பெறும் பயன்பாடு இருநூறு ரூபாய்க்குச் சமமாக இருக்கும். அதற்குக் குறைவாக இருந்தால், அவர் கைக்கடிகாரத்தை வாங்கமாட்டார். ஒரு பொருளின் விலை அதன் பயன்பாட்டிற்கு ஏற்ப இருக்கும்.

## II. குறைந்துசெல் பயன்பாட்டு விதி (Law of Diminishing Utility)

மனித விருப்பங்கள் எண்ணற்றவையாக இருப்பினும், ஒரு சிலவற்றை நிறைவுசெய்துகொள்ள இயலும் என்பதை முன்ன மேயே கண்டோம். விருப்பத்தை நிறைவு செய்யும் திறன் கொண்ட ஒரு பொருள் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட அளவுவரை நுகரப்படுகிறது. தினசரி வாழ்க்கையில் நாம் இதுபோன்ற பல விருப்பங்களைப் பூர்த்தி செய்கிறோம். உதாரணமாக, ஒருவர் சிறிய அளவிலுள்ள ஆப்பிள்களை நுகர்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம். முதலிரண்டு ஆப்பிள்கள் வரை அவருக்கு அதிகப் பயன்பாடு கிடைக்கிறது. மூன்றாவது, நான்காவது ஆப்பிள்களில் பயன்பாடு குறைகிறது. ஐந்தாவது ஆப்பிளைச் சாப்பிடும்போது பயன்பாடு 'பூஜ்ய' நிலையை அடைகிறது. அவர் தொடர்ந்து ஆறாவது, ஏழாவது ஆப்பிள்களை நுகர்ந்தால் 'பயன்பாடின்மை' (disutility) தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பிறகு நுகர்வில் 'தெவிட்டும்' நிலை ஏற்படுகிறது.

ஒரு பொருளைத் தொடர்ச்சியாகப் பல அலகுகள் நுகரும் போது, அவற்றின்மூலம் கிடைக்கும் மொத்தப் பயன்பாடு கூடு கிறது; ஆனால், இறுதிநிலைப் பயன்பாடு குறைகிறது. இதையே 'குறைந்துசெல் பயன்பாட்டு விதி' அல்லது 'குறைந்துசெல் இறுதி நிலைப் பயன்பாட்டு விதி' (law of diminishing marginal utility) விளக்குகிறது.

இவ் விதியை ஆல்ஃபிரட் மார்ஷல், 'மற்றவை மாறுமல் இருக்கும்போது, ஒருவரிடம் இருக்கும் ஒரு பொருளின் இருப்பு


அதிகரித்துக்கொண்டே சென்றால், ஒவ்வொரு அலகிலிருந்தும் அவர் பெறுகின்ற பயன்பாடு குறைந்துகொண்டே செல்லும்' என வரையறுக்கிறார். (The additional benefit which a person derives from a given increase of a thing diminishes with every increase in the stock that he already has.)

தெளிவாக இவ் விதியை அறிவதற்கு முன்பு நாம் கண்ட ஆப்பிள்களின் நுகர்வையே எடுத்துக்காட்டாகப் கொள்ளலாம். முதல் ஆப்பிளில் இருந்து கிடைக்கும் பயன்பாடு 10 அலகுகள் (அதாவது 100 காசுகள் மதிப்புடையது) என வைத்துக் கொள்ளலாம். இரண்டாவது ஆப்பிளில் 8 அலகுகளும், மூன்றுவதில் 6 அலகுகளும், நான்காவதில் 4 அலகுகளும், ஐந்தாவதில் 2 அலகுகளும் பயன்பாடுகளாகக் கிடைக்கின்றன. ஆறுவது ஆப்பிளில் பயன்பாடு 'பூஜ்ய' நிலையை அடைகிறது. ஏழாவது ஆப்பிளை வலுக்கட்டாயமாக நுகரும்போது பயன்பாடின்மை தோன்றுகிறது. இந் நிலையைப் பின்வரும் பட்டியலில் குறிப்பிடலாம்.

| நுகரும் ஆப்பிள்களின் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாடு (Total Utility) | இறுதி நிலைப் பயன்பாடு (Marginal Utility) |
|---|---|---|
| 1 | 10 | 10 |
| 2 | 18 | 8 |
| 3 | 24 | 6 |
| 4 | 28 | 4 |
| 5 | 30 | 2 |
| 6 | 30 | 0 |
| 7 | 28 | −2 |

இப் பட்டியல் விதியின் சில உண்மைகளை உணர்த்துகிறது. ஐந்து ஆப்பிள்களை நுகரும்வரை மொத்தப் பயன்பாடு அதிகரிக்கிறது. ஐந்து ஆப்பிள்களின்மூலம் கிடைக்கும் மொத்தப் பயன்பாடு 30 அலகுகளுக்குச் சமமாக இருக்கிறது. ஐந்தாவது ஆப்பிளை நுகர்வதால் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு 2 அலகுகள். ஆறுவது ஆப்பிளில் பயன்பாடு பூஜ்யமாக உள்ளது. ஏழாவது ஆப்பிளை நுகரும்போது பயன்பாடு எதிர்மறையில் 2 அலகுகளாக அமைகிறது.


பட்டியலின் விவரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வரைபடத்தையும் வரையலாம்.




படம் 2.

வரைபடத்தில் ஒவ்வொரு ஆப்பிளில் இருந்தும் பெறப்படும் பயன்பாட்டை நீண்ட சதுர இணைகரங்களினின்றும் அறிகிறோம். OX என்ற படுக்கிடை அச்சில் பொருளின் அலகுகளும், OY என்னும் செங்குத்து அச்சில் பயன்பாட்டின் அலகுகளும் குறிக்கப்பட்டுள்ளன. நுகரும் ஆப்பிள்களின் எண்ணிக்கை கூடக்கூட, ஒவ்வோர் ஆப்பிளில் இருந்தும் பெறப்படும் பயன்பாடும் குறைந்து கொண்டே செல்கிறது. பயன்பாடு குறைவதை நீண்ட சதுரங்கள் உணர்த்துகின்றன. இவற்றின்மூலம் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து செல்வதையும் அறியலாம்.

படிப்படியாக இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து செல்வதைக் கீழ்க்காணும் வரைபடமும் உணர்த்தும்.




படம் 3.

இவ் வரைபடத்தில் தொடர்ச்சியாக நுகர்வைச் செய்யும் போது, இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து சென்று, ஆறுவது ஆப்பிளில் பயன்பாடு பூஜ்ய நிலையை அடைகிறது. ஏழாவது ஆப்பிளின் நுகர்வு எதிர்மறைப் பயன்பாட்டை அளிக்கிறது. ஒவ்வொரு ஆப்பிளில் இருந்தும் பெறப்படும் பயன்பாட்டைக் குறிக்கும் புள்ளிகளை இணைத்தால் DU என்ற நேர்க்கோடு அமை கிறது. DU என்ற இந்த நேர்க்கோடு இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துசெல்வதைக் குறிக்கிறது.

**வரையறைகள்**

பிற பொருளியல் விதிகளைப் போன்றே, குறைந்துசெல் பயன்பாட்டு விதியும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செயல் படுகிறது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**1. தொடர்ச்சியாக நுகர்தல் :** இவ் விதி செயல்பட வேண்டுமானால் நுகர்வானது தொடர்ச்சியாக ஒரே நேரத்தில் நிகழவேண்டும். ஆப்பிள்களைத் தினந்தோறும் ஒவ்வொன்றாக நுகர்ந்து வந்தால், குறைந்துசெல் பயன்பாட்டு விதி செயல் படாது. காலையில் ஒரு பழமும், மாலையில் ஒரு பழமுமாக உட் கொண்டால்கூட, கால இடைவெளி மிகுந்து பயன்பாடு குறை யாது.

**2. உரிய அளவு ஒரே தன்மை :** நுகரும் பொருள் ஒரே அளவினதாகவும் இயல்புடையதாகவும் தரமுடையதாகவும் இருத்தல்வேண்டும். நம் உதாரணத்தில் ஓர் ஆப்பிள் சுவையான தாகவும், மற்றொன்று சுவையற்றதாகவும், வேறொன்று அளவில் வேறுபாடு கொண்டதாகவும் இருக்கக்கூடாது. ரொட்டித் துண்டு கள் அளவில் மிகச் சிறியவாக இருந்தால், பல துண்டுகள்வரை பயன்பாடு குறையாது. ஓவல்டின், போர்ன்விடா போன்ற பானங்களைக் 'கப்' அளவுகளில் அருந்தினால்தான் குறைந்துசெல் பயன்பாட்டு விதி செயல்படும். 'ஸ்பூன்' அளவுகளில் அருந்திக் கொண்டிருந்தால் பல அலகுகள்வரை பயன்பாடு தாழ்வடை யாது.

**3. நுகர்வோர் இயல்பில் மாறுதல் இன்மை :** நுகர்வோ ருடைய மனப்பண்பில் மாறுதல் இருக்கக்கூடாது. கர்னாடக இசையில் ஈடுபாடு கொண்டவர்கள் நீண்ட நேர இன்னிசைக் கச்சேரியும் விரும்பிக் கேட்பார்கள்.

**4. பிறவற்றில் மாறுதல் இல்லாமை :** பொருளை நுகர் பவரின் வருமானத்திலும் பழக்கவழக்கங்களிலும் பொருளின் விலையிலும் மாற்றம் தோன்றக்கூடாது. இவற்றில் ஏற்படும் மாற்றங்கள், பெறக்கூடிய பயன்பாட்டின் அளவில் மாறுதலை ஏற்படுத்தும்.

**விதி விலக்குகள்**

இந் நுகர்வு விதி செயல்படாத சில நிலைகளும் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

**1. போதைப் பொருள் வகைகள் :** மதுப் பொருள்கள், கஞ்சா, பெத்தடின் போன்றவற்றை நுகர்பவர்களுக்கு உச்ச நிலைப் பயன்பாடு கிடைப்பதே இல்லை. மேலும் மேலும் அவற்றை நுகரவேண்டுமென்ற வெறித்தன்மையையே அவர்கள் கொண்

டிருக்கின்றனர். இதுபோன்றே சீட்டாடுதல், குதிரைப்பந்தயங் களுக்குச் செல்லுதல், திரைப்படங்களைப் பார்த்தல் போன்ற வற்றிலும் சிலருக்குக் குறைந்துசெல் பயன்பாட்டு நிலையே தோன்றுவதில்லை.

**2. கிடைத்தற்கரிய பொருள்கள் :** வெவ்வேறு நாடுகளின் அஞ்சல் தலைகள், பண்டைய நாணயங்கள், புராதனப் பொருள் கள் ஆகியவற்றைச் சேகரிப்பவர்களுக்கு மேலும் அவற்றைச் சேர்க்க வேண்டுமென்ற விருப்பமே மிகுதியாக இருக்கும். சேர்க்கச் சேர்க்க மேலும் சேகரிக்க வேண்டுமென்ற ஆசையை வளர்க் கும் திறனே இப் பொருள்கள் பெற்றிருக்கின்றன. ஆனால், மொகலாயர் கால நாணயங்களைச் சேகரித்து வைத்திருக்கும் ஒருவர், அவற்றையே மேலும் சேர்க்க விரும்பமாட்டார். குப்த கால, சோழகால, பல்லவகால, மௌரியகால நாணயங்களைச் சேகரிக்கும் விருப்பத்தையே அவர் கொண்டிருப்பார். இது போலவே ஒரேவகை அஞ்சல் தலைகளைச் சேகரிக்கவும் எவரும் விரும்புவதில்லை.

**3. கருமிகள் :** கருமிகளுக்குப் பணத்தின் மீதான பயன் பாடு சேர்க்கச் சேர்க்க அதிகரித்துக்கொண்டே செல்லும். குறைந்துசெல் பயன்பாட்டு விதி பணத்திற்கும்கூட பொருந்து கிறது. பொதுவாகச் செலவு செய்யும் இயல்பைக் கொண்ட செல்வந்தர் ஒருவருக்குப் பணவருமானம் பெருகும்போது, பணத் தின் இறுதிநிலைப் பயன்பாடு குறைகிறது.

**4. மற்றவர்களின் பொருளுடைமை:** சில சமயங்களில் மற்றவர்கள் ஒரு பொருளை உடைமையாகப் பெறுவதன்மூலம், நம்முடைய பொருளின் பயன்பாடு கூடுவதுண்டு. எடுத்துக் காட்டாக, நமக்கு வேண்டியவர்கள் தொலைபேசி வசதியை அமைத்துக்கொள்ளும்போது நம் தொலைபேசியின் பயன்பாடு உயர்கிறது.

**பயன்கள் :**

குறைந்துசெல் பயன்பாட்டு விதி பல நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செயல்படுகிறது. இவ் விதி சில விதிவிலக்குகளையும் கொண்டுள்ளது. ஆனால், இது குறிப்பிடுவதுபோலப் பயன் பாட்டை அளவிட இயலாது. குறைபாடுகளைக் கொண்டிருப் பினும், இவ்விதி பின்வரும் பயன்களையும் தருகிறது.

**1. பொருளியல் கோட்பாடுகள் பலவற்றிற்கும் அடிப் படை :** பல பொருளியல் கோட்பாடுகள் வரையப்படுவதற்கு,

இவ் விதியே அடிப்படையாக அமைந்தது. தேவை வளைகோடு மேலிருந்து கீழாக, இடப்புறத்திலிருந்து வலப்புறமாக வளைந்து செல்வதற்குக் குறைந்துசெல் பயன்பாட்டு விதியே காரணமாகும். விலை நிர்ணயக் கோட்பாடுகளிலும் இவ் விதி பயனுடையதாக இருக்கிறது. தேவை விதி இதை ஆதாரமாகக் கொண்டதே. 'துய்ப்போர் உபரிக் கோட்பாடும்' இவ் விதியின் அடிப்படையி லேயே அமைந்துள்ளது.

**2. அரசின் நிதிக் கொள்கைக்குத் துணை:** நாட்டு மக்க ளிடையே செல்வத்திலும் வருமானப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் அரசு வரிகளை விதிக்கிறது. அவ் வகை வரிவிதிப்பு முறைக்கு இவ் விதி உதவுகிறது. பணத் தின் பயன்பாட்டைக் குறைவாகக் கொண்ட செல்வம் மிக்கவர் கள் மீது வளர்வீத வரிகளை விதிக்கவேண்டுமென இவ் விதி கூறு கிறது. இந்த ஆதாரத்திலேயே உலகின் பல நாடுகளின் வளர்வீத வருமான வரிமுறை அமைந்துள்ளது.

**3. மதிப்புக் கோட்பாட்டின் உருவாக்கம்:** இவ்விதி 'பயன் மதிப்பிற்கும்', 'மாற்று மதிப்பிற்கும்' உள்ள வேறு பாட்டைக் குறிப்பிடுகிறது. 'பொருள்களின் மொத்தப் பயன் பாடு அதிகமானது; அவற்றின் இறுதிநிலைப் பயன்பாடு விலைக்குக் குறையாமல் இருக்கவேண்டும்' என்று கூறும் இவ் விதியின் அடிப்படையிலேயே மதிப்புக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

**4. அளிப்பு விதி:** பொருள்களின் அளிப்பு அதிகரிக்கும் போது, அவற்றின் மதிப்புக் குறைவடையுமென்பதை இவ் விதியைக்கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இவ்விதி அரசுக்கும் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக் கும் பயனளித்து முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது.

## III. சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Equi-marginal Utility)

இவ் விதி குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை அடிப்படையாகக் கொண்டது. கணக்கற்ற விருப்பங்களை நிறைவு செய்துகொள்ளப் போதுமான பணம் இல்லாமையால், நுகர் வோர் அவர்களுடைய சக்திக்குட்பட்ட வருமானத்திலிருந்து உச்ச நிலைப் பயன்பாட்டைப்பெற முயலுவதை இவ் விதி விளக்குகிறது. இறுதிநிலைப் பயன்பாடு விலைக்குச் சமமாகும் நிலையில், அப்

பொருளின் நுகர்வு நிறுத்தப்படுகிறது. ஆனால், பொதுவாக நுகர்வோர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையே வாங்குகின்றனர். 'ஒன்றுக்குமேற்பட்ட பொருள்களை நுகர்வோர், வாங்கும் பொருள்களினுல் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு சமமாக இருந்தால் தான் உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறுவர்' என்று இவ் விதி கூறுகிறது.

இவ் விதியின் கருத்து 'பதிலீட்டு விதி' (law of substitution) 'சமநோக்கு விதி' (law of indifference), 'செலவுச் சிக்கன் விதி' (law of economy of expenditure), 'உச்சநிலை மொத்தத் திருப்தி விதி' (law of maximum satisfaction), 'சம இறுதிநிலை விளைவு விதி' (law of equi-marginal returns) என்று வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இவ் விதியை முதலில் வரையறை செய்தவர் ஜெர்மனி நாட்டின் பொருளியலாளரான கோசென் (Gossen) என்பவராவார்.

இதன் கருத்தை மார்ஷல், 'ஒருவர் அவரிடமுள்ள பணத்தைப் பல வழிகளில் பயன்படுத்தும்போது, ஒவ்வொரு வகைப் பயனிலிருந்தும் பெறப்படும் இறுதிநிலைப் பயன்பாடு சமமாக இருக்கும்வரையில் பணத்தைப் பகிர்ந்து செலவிடுகிறார்' என்று குறிப்பிடுகிறார்.

இப் பதிலீட்டு விதியை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் எளிதாக உணரலாம். நுகர்பவர் ஒருவர் ஐந்து ரூபாயைக் கையிருப்பாகக் கொண்டு ஆப்பிள், அன்னசி ஆகிய இரண்டு பொருள்களை வாங்க விரும்புகிறார் எனவும், அவற்றின் விலை பழம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் எனவும் வைத்துக்கொள்வோம். அவர் ஒவ்வொரு ரூபாயாக ஒவ்வொரு பொருளிலும் செலவிடும்போது பெறப்படும் பயன்பாடு, குறைந்துசெல் பயன்பாட்டு விதியின் அடிப்படையில் எவ்வாறு அமையுமென்பதைப் பின்வரும் பட்டியல் விளக்கும்.

| செலவிடும் பணம் | ஆப்பிள் பழத்தினுல் கிடைக்கும் இறுதி நிலைப் பயன்பாடு | அன்னசிப் பழத்தினுல் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| முதல் ரூபாய் | 20 | 15 |
| இரண்டாவது ரூபாய் | 15 | 10 |
| மூன்றுவது ரூபாய் | 10 | 5 |
| நான்காவது ரூபாய் | 5 | 2 |
| ஐந்தாவது ரூபாய் | 2 | 1 |

ஆப்பிளில் முதல் ரூபாயைச் செலவழிக்கையில் நுகர்பவருக்கு 20 அலகுகள் பயன்பாடு கிடைக்கிறது. இரண்டாவது ரூபாயில் 15 அலகுகள் பயன்பாடும், மூன்றுவது ரூபாயில் 10 அலகுகள் பயன்பாடும் பெறப்படுகின்றன. மூன்றுவது ரூபாயை ஆப்பிள் வாங்குவதற்குப் பதிலாக அன்னாசிப் பழம் வாங்கப் பயன்படுத்தினால் 15 அலகுகள் பயன்பாடு கிடைக்கும்; ஆப்பிளையே வாங்கினால் 10 அலகுகள் பயன்பாடு மட்டுமே பெறப்படும். ஐந்து ரூபாயைக் கொண்டுள்ள அவர், மூன்று ரூபாயை ஆப்பிள் வாங்கவும் இரண்டு ரூபாயை அன்னாசி வாங்கவும் செலவழித்தால் மொத்தப் பயன்பாட்டை (ஆப்பிள்களின் பயன்பாடு → 20 + 15 + 10 = 45; அன்னாசிகளின் பயன்பாடு → 15 + 10 = 25) 70 அலகுகள் என்ற உச்ச நிலையில் பெறலாம். ஐந்து ரூபாயை ஆப்பிள்கள் வாங்கமட்டும் செலவழித்தால் கிடைக்கும் மொத்தப் பயன்பாடு 52 (20 + 15 + 10 + 5 + 2) அலகுகள் ஆகும். ஐந்து ரூபாயையும் அன்னாசிகள் வாங்குவதற்காக மட்டுமே செலவிட்டால் பெறப்படும் மொத்தப் பயன்பாடு 33 (15 + 10 + 5 + 2 + 1) அலகுகள் மட்டுமேயாகும்.

ஆப்பிள்களுக்கு மூன்று ரூபாயும் அன்னாசிகளுக்கு இரண்டு ரூபாயும் செலவழிக்காமல், வேறு எவ்வகையில் செலவழித்தாலும் பெறப்படும் மொத்தப் பயன்பாடு குறைவாகவே இருக்கும். மூன்று ஆப்பிள்களும் இரண்டு அன்னாசிகளும் வாங்கும்போது, அவற்றுல் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு இரண்டிலும் 10 அலகுகள் என்ற அளவில் அமைகிறது. ஆகவே, இறுதிநிலைப் பயன்பாடு சமமாகும் நிலையில் மொத்தப் பயன்பாட்டை உச்ச நிலையில் பெறலாம் என்பது அறியப்பெறுகிறது.


$$\frac{\text{முதல் பண்டத்தின் விலை}}{\text{முதல் பண்டத்தின் பயன்பாடு}} = \frac{\text{இரண்டாம் பண்டத்தின் விலை}}{\text{இரண்டாம் பண்டத்தின் பயன்பாடு}}$$

என்ற நிலையில் நுகர்பவருக்கு மொத்தத்தில் உச்சநிலைப் பயன்பாடு கிடைக்கிறது.

சம இறுதிப் பயன்பாட்டு விதியைப் பின்வரும் வரைபடத்தின் உதவியோடும் விளக்கலாம் (படம் 4).

'தவற்றின்மூலம் உண்மை அறிதல்' (Reductio ad absurdum) என்ற முறையின் அடிப்படையில் இவ் விதி வரை

படத்தில் விளக்கப்படுகிறது. MU என்பது ஆப்பிளின் இறுதி நிலைப் பயன்பாட்டு வரைகோடு; $M_1U_1$ அன்னாசியின் இறுதிநிலைப் பயன்பாட்டு வரைகோடு. OK அளவுப் பணத்துக்கு ஆப்பிளும், $KK_1$ அளவுப் பணத்திற்கு அன்னாசியும் வாங்கினால், இரண்டின் இறுதிநிலைப் பயன்பாடும் சமமாக இருக்கின்றன ($PK = P_1K_1$). இந்த நிலையில் உச்சநிலைப் பயன்பாடு கிடைக்கப்பெறுகிறது. வேறு எவ்வகையில் பணத்தைச் செலவிட்டாலும், கிடைக்கும் மொத்தப் பயன்பாடு குறைகிறது.




படம் 4.

இதை விளக்க ஆப்பிளுக்கு KN அளவுப் பணத்தை அதிகமாகவும், அன்னாசிக்கு அதே அளவுப் பணத்தை ($N_1K_1$) குறைவாகவும் செலவழிப்பதாகக் கொண்டால், இரு பொருள்களாலும் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு மாறுபடுகிறது ($QN \neq Q_1N_1$) இவ்வகைப் புதிய நுகர்வால் அடையப்பெறும் பயன்பாடு PKNQ

என்ற பரப்பளவினாலும், இழக்கப்பெறும் பயன்பாடு $P_1K_1N_1Q_1$ என்ற பரப்பளவினாலும் குறிக்கப்பட்டுள்ளன. வரைபடத்தில்,

$$PK = P_1K_1; KN = K_1N_1$$

ஆனால், $Q_1N_1 > QN$

எனவே, $P_1K_1N_1Q_1 > PKNQ$

இழந்த பயன்பாடு, அடைந்த பயன்பாட்டைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே OK அளவுப் பணத்தை ஆப்பிளுக்கும், $KK_1$ அளவுப் பணத்தை அன்னாசிக்கும் செலவிடுவதன்மூலமே உச்ச நிலை மொத்தப் பயன்பாட்டை அடையலாம்.

**வரையறைகள்**

பிற பொருளியல் விதிகளைப் போன்றே, இவ் விதியும் சில நிபந்தனைகளுக்குட்பட்டே செயல்படுகிறது.

*(1)* இவ் விதி ஒரு போக்குரைக் கூற்று (statement of tendency). இவ் விதியின்படித் துல்லியமாகக் கணக்கிட்டு நுகர்வோர் பொருள்களை வாங்குவதில்லை. பலருக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் திறமையும் அறிவாற்றலும் இருப்பதில்லை.

*(2)* அறியாமையாலும் உச்சநிலைப் பயன்பாட்டை நுகர்வோர் அடைய இயலாமற் போகலாம். பலர் அறிமையாலோ அல்லது தெரிந்தோ பொருள்களை அதிக விலைகொடுத்து வாங்குகின்றனர். மேலும், அவர்கள் மாற்றுப் பொருள்கள் அனைத்தின் பயன்பாட்டையும் அறிய இயலாது.

*(3)* சமுதாயப் பழக்கவழக்கங்களுக்கேற்பவும் பொருள்கள் வாங்கப்படுகின்றன. திருமணம், திருவிழா, அரசியல் கூட்டம், பிரிவு உபசார விழா போன்ற பலவற்றிற்காக ஆடம்பரமாகச் செலவிடப்படும் செலவினங்கள் வீணானவையே. இவ்வித நுகர்வுகளில் பதிலீட்டு விதி செயல்படாது.

*(4)* அதிக அளவுப் பணமானது செலவிடப்படும்போது, நுகர்வோர் பயன்பாட்டைப் பற்றிக் கருதிப்பார்க்க முடியும். குறைந்த அளவு வருமானத்தைக் கொண்ட பலரும் குறைந்த பணத்தைச் செலவழிக்கும்போது பயன்பாடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பது கடினம்.

*(5)* சம இறுதிநிலைப் பயன்பாட்டைப்பெறப் பொருள்களைச் சிறிய அளவுகளில் துண்டித்துப் பிரிக்கவேண்டிய நிலை ஏற்

படலாம். சில பொருள்களைப் பிரித்தால், அவை பயனற்றுப் போய்விடும். பயன்பாட்டிற்கேற்ப பொருள்கள் எல்லாவற்றையும் சிறிய அலகுகளாகப் பகுக்க இயலாது. உதாரணமாக, ஒரு குதிரையையும், ஒரு வண்டியையும் வாங்குபவர், இரண்டிலும் சம இறுதிநிலைப் பயன்பாட்டைப் பெற அரைக் குதிரையையும் ஒன்றரை வண்டியையும் வாங்கவேண்டிவரும். இது சாத்தியமான தல்ல.

*(6)* இன்றைய விளம்பரம், விற்பனைமுறை, நாகரிகநோக்கு ஆகியவற்றால் பலரும் பொருள்களை வாங்குவதில் தவறை இழைக்கின்றனர். டில்லியில் 'கன்னாட் ப்ளேஸிலும்' சென்னையில் 'அண்ணா சாலையிலும்' பொருள்கள் விலையுயர்வாக இருப்பினும், அதிகமாக வாங்கப்படுகின்றன. அதே தரத்தைக் கொண்ட பொருள்கள் வேறிடங்களில் குறைந்த விலையில் விற்றாலும், நுகர்வோர் அதைப் பற்றி அதிக அக்கறை கொள்வதில்லை.

*(7)* மின்விசிறி, வாஞ்ஞலிப் பெட்டி, பீரோ, போன்றவை நீண்டகாலத்திற்குப் பயனளிப்பவை; பால், முட்டை, காய்கறி போன்றவை மிகக் குறுகிய காலத்திற்கே பயன்தருபவை. எனவே, குறிப்பிட்ட காலத்தில் செலவிடும் பணத்திலிருந்து உயர்ந்த அளவுப் பயன்பாட்டைப் பெறுவது பற்றிச் சரியாகக் கணக்கிடுவது இயலாது.

பயன்பாட்டை அளக்கலாம்; பணத்தின் இறுதிநிலைப் பயன் பாடு மாறுமல் இருக்கும் என்பன போன்ற தவறான எடுகோள் களின் அடிப்படையில் சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி எழுதப் பட்டுள்ளது. ஆனால், இவ் விதி சில நடைமுறை முக்கியத்துவங் களைப் பெற்றிருக்கிறது.

**முக்கியத்துவம்**

இவ்விதி நுகர்வில் மட்டுமன்றி பொருளியலின் பிற பிரிவு களான ஆக்கம், மாற்றம், பகிர்வு போன்றவற்றிலும் செயல் படுகிறது.

*(1)* குறைவான பயன்பாடுள்ள பொருள்களுக்குப் பதிலாக மிகுதியான பயன்பாடுள்ள பொருள்களை வாங்கி உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப்பெற இவ் விதி வழிகாட்டுகிறது. இவ் விதியினுக்கு ஏற்ப நுகர்வோர் அவர்களுடைய வருமானத் தைச் செலவிட்டால் உச்சநிலைப் பயன்பாட்டை அடைவர்.

*(2)* உற்பத்தியாளர் உற்பத்தியைக் கூட்டி இலாபத்தைப் பெருக்க முயலுகிறார். உற்பத்திச் செலவைக் குறைக்க ஆக்கக்

காரணிகளை உரிய விகிதத்தில் சேர்க்கவேண்டும். இக் காரணிகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் இறுதிநிலை உற்பத்தியை அவர் சமன்செய்துகொள்ளவேண்டும். உழைப்பாளர்களின் இறுதி நிலை உற்பத்தித் திறன் அதிகமாகவும், மூலதனத்தின் உற்பத்தித் திறன் குறைவாகவும் இருந்தால், அதிக உழைப்பாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு மூலதனத்தின் அளவு குறைக்கப்படுகிறது.

(3) பணத்திற்குப் பொருள்களும், கிடைப்பருமையுள்ள பொருள்களுக்குக் கிடைப்பருமையற்ற பொருள்களும் பதிலீடு செய்யப்படுவதால், ஓரளவுக்குப் பொருள்களின் பற்றுக்குறை தவிர்க்கப்படுகிறது. மேலும், பொருள்கள் அவற்றின் இறுதி நிலைப் பயன்பாட்டிற்கேற்பவே மாற்றப்படுகின்றன.

(4) எல்லா ஆக்கக் காரணிகளும் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்பவே வருமானத்தைப் பெறுகின்றன என்பதை இவ் விதி உணர்த்துகிறது. நாட்டு வருமானம் எவ்வாறு ஆக்கக் காரணிகளிடையே வாரம், வட்டி, கூலி என்ற வகைகளில் பங்கிடப்படுகிறது என்பதை விளக்கவும் இவ் விதி உதவுகிறது.

(5) பொதுநிதியியலிலும் இவ் விதி செல்வாக்குக் கொண்டிருக்கிறது. அரசின் வளர்ச்சிப் பணிகளால் சமுதாயத்திற்கு மிகுதிப் பயன் கிடைக்கவேண்டுமெனில் ஒவ்வொரு வகைப் பணிச் செலவிலிருந்தும் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு சமமாக இருத்தல்வேண்டும்.

(6) சேமிப்பு அளவு, செலவீட்டு அளவு ஆகியவற்றைத் தீர்மானிக்கவும், இவ் விதி உதவுகிறது. இறுதியாகச் சேமிக்கப் பெறும் பண அலகின் பயன்பாடு, இறுதியாகச் செலவிடப்படும் பண அலகின் பயன்பாட்டை விட அதிகமாக இருந்தால், மேலும் பணம் சேமிக்கப்பெறும்; மாறுக இருந்தால் பணம் மேலும் செலவிடப்படும்.

இவ்வாறு சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி அரசின் நிதியியலிலும், பொருளியலின் பல பிரிவுகளிலும் உபயோகம் பெற்றுள்ளது.

## IV. நுகர்வோர் உபரிக் கோட்பாடு (Consumer's Surplus)

இது பொருளியலில் ஒரு முக்கியத்துவம் பெற்ற ஒரு கோட்பாடாக இருக்கிறது. பொருளியலாளர்களிடையே இது அதிக அளவுக்குக் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளது. இதைத்

தந்தவர் ஆல்ஃபிரட் மார்ஷல் ஆவார். குறைந்துசெல் பயன் பாட்டு விதியை ஒட்டி அமைந்துள்ள இதனைத் துய்ப்போர் உபரிக் கோட்பாடு எனவும் அழைக்கலாம்.

**விளக்கம்**

தினசரி வாழ்வில் நாம் வாங்கும் பண்டங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் மொத்தப் பயன்பாடு, நாம் அப் பண்டங்களுக்குக் கொடுக்கும் மொத்த விலையைவிடக் கூடுதல் ஆகும். அவ்வாறில்லாவிடில் பேரங்கள் நடைபெறமாட்டா. சந்தையில் தக்காளியின் விலை கிலோவுக்கு ஒரு ரூபாயாக இருந்தால் ½கிலோ வாங்குவதாக வைத்துக்கொள்ளலாம். வாங்கும்போது ½கிலோ தக்காளியின் பயன்பாடு 50 பைசாவைவிட அதிகமானது என நம் மனதுக்குத் தோன்றுகிறது. ஆகவே, நுகர்வோர் வாங்கும் பொருள்கள் எல்லாவற்றிலும் 'உபரி' இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

மார்ஷல் கூற்றுப்படி, 'ஒரு பொருளின்றிப் போவதைவிட வாங்குவதே மேல் என்று கருதிய நுகர்வோரால் கொடுக்கத் தயாராக உள்ள (அதாவது அவர்கள் மனதில் நிர்ணயித்துள்ள) அதிகபட்ச விலைக்கும், உண்மையில் கொடுக்க நேரிட்ட விலைக்கும் இடையிலுள்ள வித்தியாசமே துய்ப்போர் உபரி'.

ஒரு பொருளுக்கு விலையாகப் பணத்தை அளிக்கும்போது, பணத்தின் பயன்பாட்டை இழக்கிறோம். ஆனால், அப் பொருளின் பயன்பாட்டைப் பெறுகிறோம். பெறப்படும் பொருளின் பயன் பாடு இழக்கப்படும் பணத்தின் பயன்பாட்டைவிட அதிகமானது என்று நம் மனதுக்குத் தோன்றினால்தான், நாம் அப் பொருளை வாங்குகிறோம்.

பலாச்சுளைகளை நுகரும் ஒருவரின் பயன்பாட்டுப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பலாச்சுளைகளின் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 30 | 30 |
| 2 | 55 | 25 |
| 3 | 75 | 20 |
| 4 | 90 | 15 |
| 5 | 100 | 10 |
| 6 | 105 | 5 |
| 7 | 108 | 3 |

ஒரு பலாச்சுளையின் விலை 10 பைசா என வைத்துக்கொள்ளலாம். 6 சுளைகள் வாங்கும்போது விலை இறுதிநிலைப் பயன்பாட்டிற்குச் சமமாகிறது. அதனால், நுகர்வு அதோடு நிறுத்தப்படும். இதனால், கிடைக்கப்பெறும் மொத்தப் பயன்பாடு 100 பைசாவிற்குச் சமமாக உள்ளது. எனினும், 5 பலாச் சுளைகளை வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை $10 \times 5 = 50$ பைசாவாகும். ஆகவே, இதன் மூலம் கிடைக்கும் நுகர்வோர் உபரி $100 - 50 = 50$ பைசாவிற்குச் சமமாக அமைகிறது.

இந்த எடுத்துக்காட்டிலிருந்து நுகர்வோர் உபரியை எங்ஙனம் அளவிடுவது என்பதை அறியலாம். ஒரு பொருளை நுகர்வதிலிருந்து பெறப்படும் மொத்தப் பயன்பாட்டிற்கும், அதற்காகத் தருகின்ற விலைக்குமுள்ள வித்தியாசமே நுகர்வோர் உபரி. சுருங்கக் கூறினால், நுகர்வோர் உபரி = மொத்தப் பயன்பாடு — விலை × வாங்கப்படும் பொருள்களின் எண்ணிக்கை.


நாம் பயன்படுத்தும் தீப்பெட்டி, உப்பு, செய்திப் பத்திரிகை, அஞ்சல் அட்டை ஆகியவற்றின் பயன்பாடு மிக அதிகமாக இருந்தும், அவற்றிற்கு நாம் கொடுக்கும்விலை குறைவாக இருக்கிறது. எனவே, இப் பொருள்கள் நுகர்வோர் உபரியை மிகுதியாகக் கொண்டவை எனக் கருதப்படுகின்றன.

தேர்வு முடிவு வெளியாகி இருக்கும் ஒரு பத்திரிகைக்குக் கல்லூரி மாணவர் ஒருவர் விலையாக ஒரு ரூபாய்கூட அளிக்கத் தயாராக இருந்து, அது அவருக்கு 40 பைசாவிற்கே கிடைத்து விட்டால் பெறப்படும் நுகர்வு உபரி 60 பைசா (ரூ. 1 — 40 பைசா = 60 பைசா). விமானம் நொறுங்கித் தனித்த மலைப் பிரதேசத்தில் விழுந்து உயிர் பிழைத்த செல்வந்தர் ஒருவர் ஒரு ரொட்டித் துண்டத்திற்கு 50 ரூபாய் விலையாகத்தர முன்வரலாம். ஆனால், அவருக்கு ரொட்டித் துண்டமானது ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது எனக்கொண்டால், அவர் நிச்சயமாக அதிக நுகர்வோர் உபரியைப் பெறுவார்.

நுகர்வோர் உபரியை விளக்கப் பின்வரும் வரைபடம் (படம் 5) உதவும்.

வரைபடத்தில் தேவைக்கோடு $DD_1$ நுகர்வோரின் இறுதி நிலைப்பயன்பாட்டு வளைகோடாகவும் அமைகிறது. இவ் வளைகோடு வாங்கும் பொருளுடைய தேவையைக் குறிக்கிறது. விலை PL ஆக இருக்கும்போது OL அளவுக்குப் பொருள் வாங்கப்படுகிறது. நுகர்

பவர் கொடுக்கும் மொத்தவிலை PL × OL = OEPL என்ற பரப்பளவிற்குச் சமம். ஆனால், அவர் OL அளவு பொருளை PL விலையில் நுகர்வதால் கிடைக்கும் மொத்தப் பயன்பாடு ODPL என்ற பரப்பளவிற்குச் சமமாக உள்ளது. எனவே, அவருக்குக் கிடைக்கும் எச்சப் பயன்பாடு ODPL − OEPL = DEP ஆகும்.




படம் 5

பொருளின் விலை QM ஆகக் குறையும்போது OM அளவுக்குப் பொருள் நுகரப்படுகிறது. மொத்தப் பயன்பாடு ODQM ஆகவும், மொத்த விலை OFQM ஆகவும் இருப்பதால் துய்ப்போர் உபரி DFQ என்ற பரப்பளவிற்குச் சமமாக அதிகரிக்கிறது. விலையானது RN ஆக மேலும் குறையும்போது, பொருள் வாங்குவதன் அளவு ON ஆக மிகவும் கூடுகிறது. இந்நிலையில் DGR என்ற அளவுக்கு உபரிப் பயன்பாடு கிடைக்கிறது. இதன்மூலம் விலை குறையும்போது நுகர்வோர் எச்சம் கூடுமென்பதையும், விலை உயரும்போது நுகர்வோர் எச்சம் குறையுமென்பதையும் அறிகிறோம்.

ஒரு பொருளின் 'தகு விலைக்கும்' (potential price), 'உண்மையில் கொடுக்க நேர்ந்த விலைக்கும்' (actual price) உள்ள வித்தியாசமே நுகர்வோர் உபரியாகும்.

**வரையறைகள்**

பின்வரும் எடுகோள்களின் ஆதாரத்தில் நுகர்வோர் உபரிக் கருத்து விளக்கப்பட்டுள்ளது:

1. பணத்தைக் கருவியாகக் கொண்டு பயன்பாட்டை அளவிட இயலுமென்று மார்ஷல் கருதுகிறார்.

2. பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்கள் இல்லை. பதிலிப் பொருள்கள் இருப்பினும், அவை யாவற்றையும் ஒரே பொருளாகக் கருதவேண்டுமென்று மார்ஷல் கூறுகிறார்.

3. எல்லாச் சூழ்நிலைகளிலும் நுகர்வோர் செலவழிக்கும் பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாது எனவும் இக் கோட்பாடு குறிப்பிடுகிறது. அவ்வாறு இருந்தால்தான் பெற்ற பயன் பாட்டையும், இழந்த பயன்பாட்டையும் ஒப்பிடமுடியும்.

4. இக் கோட்பாடு, சந்தையில் ஒரு பொருளுக்கு ஒரு விலையே நிலவும் எனக் கருதி, சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுவதாகவும் குறிப்பிடுகிறது.

5. ஒரு பொருளின் பயன்பாடு அதன் அளிப்பைச் சார்ந்து அமையும். மற்றப் பொருள்களைச் சார்ந்து ஒரு பொருளின் பயன் பாடு அமைவதுண்டு என்பது அறியப்படவில்லை.

6. ஒரு சந்தை முழுமைக்குமான துய்ப்போர் உபரியைக் கணக்கிடும்போது, பொருளை வாங்குவோரிடையே நாகரிகம், விருப்ப உணர்வு, வருமானம் ஆகியவற்றில் மாறுதல்கள் இல்லை எனக் கொள்ளப்படுகிறது.

**குறைபாடுகள்**

நிக்கல்சன், டேவன்போர்ட், டாசிக், கானன், ஹிக்ஸ், சாமுவெல்சன் போன்ற பொருளியல் வல்லுநர்கள் துய்ப்போர் உபரிக் கருத்தைப் பெரிதும் குறைகூறியிருக்கின்றனர். அக் கருத்திலுள்ள குறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்:

1. **கணக்கிடமுடியாமை :** துய்ப்போர் உபரியைத் துல் லியமாகவும் திருத்தமாகவும் கணக்கிட இயலாது. ஒரு பொரு ளுக்கு எல்லோரும் ஒரே விலையளிக்க முன்வருவர் எனக் கருதுவது தவறு. பொருளை வாங்குபவர்கள் கொடுக்கத் தயாராக

உள்ள விலை மனத்தளவே உண்மையானது. ஒரு பொருளுக்குப் பலரும் கொடுக்க முன்வரும் விலை அவரவர் வருமானம், சுவை யுணர்வு, பொருளாதாரச் சூழ்நிலை, சமூகநிலை, பொருளின் தன்மை ஆகியவற்றைச் சார்ந்து அமையும். ஒருவர் ஒரு குறிப் பிட்ட பொருளை நுகரும்போது அதிகப் பயன்பாட்டையும், மற் றொருவர் குறைந்த பயன்பாட்டையும் பெறக்கூடும். மக்களு டைய விருப்பு-வெறுப்புகள் மாறக்கூடியவை.

**(2) மாயக் கோட்பாடு :** நுகர்வோர் உபரிக் கோட்பாட் பாட்டை ஒரு மாயக் கோட்பாடு எனவும், அதில் கூறப்படும் நுகர்வோர் உபரி கற்பனையானது எனவும் நிக்கல்சன் கூறியிருக் கிறார். 'கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்' பார்க்க ஒருவர் 25 ரூபாய் நுழைவுக் கட்டணச் சீட்டை 100 ரூபாய்க்கு வாங்கத் தயாராக இருக்கலாம். அதை அவர் 25 ரூபாய்க்கே வாங்கிவிடுகிறார் எனக் கொண்டால், 75 ரூபாய் நுகர்வோர் உபரி அவருக்குக் கிடைக் கிறது என்று குறிப்பிடுவது தவறு.

**(3) அவசியப் பொருள்கள்:** மிகவும் இன்றியமையாத ஒரு பொருளுக்கு ஒருவர் மிக அதிக விலையைக் கொடுக்கவும் தயாராக இருக்கலாம். ஆகவே, இவ்வகை இன்றியமையாத பொருளுக்கு நுகர்வோர் எச்சம் அதிகமெனக் கூறப்படுகிறது. இக் குற்றச்சாட்டுக்கு மார்ஷல் மறுப்புத் தெரிவித்து விளக்கம் தெரிவித்துள்ளார். 'கடினப் பொருளாதார நிலையைக்' (pain economy) கடந்து 'மகிழ்வுப் பொருளாதார நிலையை' (pleasure economy) எய்திய பின்பே இக் கோட்பாடு பொருந்துமென அவர் குறிப்பிட்டுள்ளார். சான்றாக, அதிகப் பசியுடனிருக்கும் ஒரு வருக்கு இக் கோட்பாடு பொருந்தாது. அவரது பசி ஓரளவு அடங்கி, சாதாரண நிலையை அடைந்த பிறகு, அவர் உணவுக்குக் கொடுக்க முன்வரும் விலையையே 'தகுவிலையாகக்' கொள்ள வேண்டும்.

**(4) பதிலிப் பண்டங்கள்:** பதிலீட்டுப் பண்டங்களின் விலையில் ஏற்படும் மாற்றங்களால் நுகர்வோர் எச்சம் பாதிக்கப் படுகிறது. காப்பியின் விலை உயர்வாக இருப்பின், தேநீரின் பயன்பாடு அதிகரித்து அதிக அளவு நுகர்வோர் உபரியைப் பெற லாம். மாறாகக் காப்பியின் விலை குறைந்தால், பதிலீட்டுப் பொரு ளான தேநீரின் பயன்பாட்டில் மாறுதல் தோன்றி, அதிலிருந்து பெறப்படும் நுகர்வோர் உபரி குறைந்துவிடும். ஒரு குறிப்பிட்ட பொருளின் அளிப்பைச் சார்ந்தே அதன் பயன்பாடு அமைவதாக மார்ஷல் கருதுகிறார். ஆனால், சில பொருள்கள் கூட்டாகத் தேவைப் படுகின்றன.

**(5) ஆடம்பரப் பொருள்கள்:** பொன், வைரம் போன்ற போகப் பொருள்களால் செல்வந்தர்கள் மிகுதியான துய்ப்போர் உபரியைப் பெறுகின்றனர். இப் பொருளிகளின் விலை குறையும் போது துய்ப்போர் உபரி தாழ்வடைகிறது. அல்லது மறைந்து விடுகிறது. இந் நிலை நுகர்வோர் உபரிக் கருத்திற்கு ஒத்ததாக இல்லை.

**(6) நுகர்வோர் உபரி இல்லாமை:** ஒரு பொருளின் தகு விலைக்கும், நுகர்பவர் உண்மையில் கொடுக்க முன்வரும் விலைக் கும் வேறுபாடு இல்லையென யுலிசி கோப்பி (Ulisse Gobbi) என்பவர் வாதிடுகிறார். நுகர்வோர் எச்சம் என்று ஏதுமில்லை என அவர் குறிப்பிடுகிறார்.

**(7) பணத்தின் பயன்பாடு:** செல்வந்தர் ஒருவரிடமுள்ள 100 ரூபாயின் பயன்பாடு அவருக்குக் குறைவானதே; ஆனால், அதே 100 ரூபாய் ஏழை ஒருவருக்கு மிகுந்த பயன்பாட்டைத் தருகிறது. மேலும், தனி ஒருவரிடமே கையிருப்பாகிய பணத்தின் அளவு குறையும்போது அதன் பயன்பாடு மிகுதியடைகிறது. ஆனால், நுகர்வோர் உபரிக் கோட்பாடு செலவிடப்படும் பணத் தின் பயன்பாடு மாறுதெனத் தவறுகக் கருதுகிறது.

**(8) பயன்பாட்டை அளவிட முடியாமை:** தற்காலப் பொருளாதார நிபுணர்களில் பலர் பயன்பாட்டை அளக்க இய லும் என்ற இக் கோட்பாட்டின் கருத்தைத் தவறுடையதென வாதிடுகின்றனர். திரைப்பட நட்சத்திரங்கள் விளையாடும் ஹாக்கி ஆட்டத்தைக் காண ஒரு கல்லூரி மாணவர் ரூ. 50 கொடுக்க விருப்பமுடையவராக இருக்கலாம். ஆனால், கதாகாலட்சேபங் களை மட்டுமே விரும்பக்கூடிய பெரியவர் ஒருவருக்குச் சினிமா நட்சத்திரங்களின் ஹாக்கி ஆட்டம் எந்தப் பயன்பாட்டையும் அளிக்காது. பல்வேறு பொருள்களுக்கும் பணிகளுக்குமான பயன் பாடு காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், நபருக்கு நபர் மாறுபடும்.

**(9) பழைய நுகர்வு அலகுகளின் பயன்பாடு குறைதல்:** ஒரு பொருளின் நுகர்வில் புதிய அலகுகளைச் சேர்க்கும்போது, முன்னமேயே நுகரப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பழைய அலகு களின் பயன்பாடு குறையும்.

இவை யாவற்றையும் விட, நுகர்பவர் ஒருவர் இந்தெந்தப் பொருள்களை இன்னென்ன விலைகளில், இந்த அளவுகளுக்குத்தான்

வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கடைக்குச் செல்வ தில்லை.

**பயன்கள்**

நுகர்வோர் உபரிக் கருத்து, பல குறைபாடுகளைக் கொண்டி ருந்தாலும், அது நடைமுறை வாழ்க்கையில் சில முக்கியத்துவங் களையும் பெற்றிருக்கிறது.

**(1) மக்களின் வாழ்க்கைத் தர ஒப்பீடு:** வெவ்வேறு இடங் களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஒப்பிட்டறிய இக் கோட்பாடு வகை செய்கிறது. வாழ்வதற்கான வசதிகள் நிறைந்த நகரில் கிடைக்கும் குறைந்த வருமானம், வசதிகள் குறைந்த கிராமத்தில் கிடைக்கும் அதிக வருமானத்தைவிட விரும்பத்தக்கது. பெரிய நகரங்களில் இல்லாத வசதிகளே இல்லை எனலாம். இதனால், நகரவாசிகள் அதிக நுகர்வோர் உபரியை அடைகின்றனர். கிராமப் புறங்களில் ஆறுகளைக் கடக்க அதிகச் செலவில் தோணியில் செல்லவேண்டும். நகரங்களில் ஆறுகளுக் குக் குறுக்கே பாலங்கள் கட்டப்பட்டிருப்பதால், அவற்றைக் கடக்கச் செலவேதும் தோன்றுது. நகரில் உள்ள ஒருவர் உயர் கல்வியைக் குறைந்த செலவில் பெறலாம்; கிராமத்தில் உள்ளவர் அதற்கு அதிகம் செலவிட வேண்டியுள்ளது. இவ்வாறு, பல்வேறு பண்டங்கள்–பணிகள் ஆகியவற்றின் பயன்பாட்டை ஒப்பிட்டு இருவேறு இடங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிக்க நுகர்வோர் எச்சக் கோட்பாடு உதவுகிறது.

**(2) பயன் மதிப்பு – பரிவர்த்தனை மதிப்பு (மாற்று மதிப்பு) வேறுபாட்டு விளக்கம் :** நுகர்வோர் உபரி மிகுதியுள்ள பொருள்கள் பயன்மதிப்புக் கொண்டவையாகவும், மாற்று மதிப்புக் குறைந்தவையாகவும் இருக்கும். உதாரணமாக, செய்திப் பத்திரிகை, அஞ்சல் அட்டை, உப்பு, தீப்பெட்டி போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இப் பொருள்களின் பயன்பாட்டோடு ஒப்பிட்டால், இவற்றிற்கு அளிக்கப்படும் விலை குறைவானதே. இதுபோன்று, துய்ப்போர் உபரிக் கோட்பாடு பயன் மதிப்புக்கும் மாற்று மதிப்புக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க உதவுகிறது.

**(3) பொது நிதியியல்:** எவ்வகைப் பொருள்களின் மீது வரிகளை விதிக்க வேண்டுமென்பதை அரசு தீர்மானிக்க இக் கோட்பாடு பயனளிக்கிறது. நுகர்வோர் உபரி அதிகமுடைய பொருள்கள் மற்றும் பணிகள் மீது வரிகளை விதித்தால், அரசு அதிக வருமானத்தைப் பெறமுடியும். இதற்கு எடுத்துக்காட்டாக,

நம் நாட்டில் பெட்ரோல் மீதான வரி, இரயில்வே பயணக் கட்டணம், அஞ்சல் கட்டணங்கள் ஆகியவற்றை அரசு உயர்த்தியதைக் கூறலாம். விலையுயர்வால் இவற்றின் விற்பனை பாதிக்கப்படுவதில்லை. மேலும், உற்பத்திச் செலவுகள், விலைகள், இலாபம் போன்றவை வரிவிதிப்பால் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன என்பதை அறியவும் நுகர்வோர் உபரிக் கருத்து உதவுகிறது. இந்திய அரசு தனது வருமானத்தைப் பெருக்க ஆண்டுதோறும் நுகர்வோர் உபரி கொண்ட பொருள்கள் மீது மறைமுக வரிகளை உயர்வித்தத்தில் விதித்து வருகிறது. மக்கள் நலனைக் காக்க, அரசு அத்தியாவசியப் பொருள்களின் மீது அதிக அளவில் வரிவிதிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**(4) முற்றுரிமையாளர்:** முற்றுரிமை உற்பத்தியாளர்களும் தங்கள் பொருள்களின் விலைகளை நிர்ணயிக்க இவ் விதியினைப் பின்பற்றுகின்றனர். நுகர்வோர் உபரி மிகுதியாக உள்ள பொருள்களின் விலைகளை உயர்த்தினால் தேவை பாதிக்கப்படமாட்டாது. மாறாக, நுகர்வோர் உபரி குறைந்த பொருள்களின் விலைகளைச் சற்று உயர்த்தினாலும் விற்பனை பாதிக்கப்படும். முற்றுரிமையாளர் சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு பொருளையே நுகர்வோரிடம் வெவ்வேறு விலைகளில் வேறுபடுத்தி விற்பதுண்டு.

**(5) பன்னாட்டு வாணிகம்:** பன்னாட்டு வாணிகத்தால் தோன்றும் இலாபத்தைக் கணக்கிடவும் இவ் விதி பயன்படுகிறது. இந்தியாவில் இறக்குமதி செய்யும் வெளிநாட்டுப் பொருள்களுக்கு அவற்றின் தகுவிலையைவிடக் கூடுதல் விலையளிக்க நாம் முன்வருகிறோம். இந் நிலை அந்நியப் பொருள்களின் உயர்வான தரத்தை உணர்த்துவதோடு, அவற்றில் துய்ப்போர் உபரி அதிகமாக இருப்பதையும் குறிப்பிடுகிறது. இந்த உபரியின் அளவைப் பொறுத்தே பன்னாட்டு வாணிகத்தின் இலாபம் கணக்கிடப்படுகின்றது. இறக்குமதிப் பொருள்களின் விலை குறைவாக இருந்தால், அவற்றின் துய்ப்போர் உபரியும் அதிக அளவில் அமையும்.

'இன்றியமையாத தேவைகள் நிறைவு செய்யப்படும் தாழ்ந்த நிலையிலும், ஆடம்பரப் பொருள்கள் வாங்கப்படும் உயர்ந்த நிலையிலும் தெளிவாகத் தோன்றுத நுகர்வோர் உபரி, இவற்றிற்கு இடைப்பட்ட பேரங்களில் உறுதியாகத் தோன்றுகிறது', எனப் பேராசிரியர் டாசிக் (Proffessor Taussig) இக் கோட்பாட்டின் பயனை விளக்குகிறார்.

# 10. தேவை
## (Demand)

நாம் பேச்சு வழக்கில் 'தேவை' என்னும் சொல்லை 'ஆசை', 'ஆர்வம்', 'வேட்கை' என்ற பல்வேறு அர்த்தங்களில் பயன் படுத்துகிறோம். ஆனால், பொருளாதாரத்தில் சாதாரண விருப் பம் தேவையாகாது; விருப்பத்தோடு பொருளை வாங்குகின்ற திறனைப் (பணம்) பெற்ற நிலையையே தேவை என்கிறோம். பிச் சைக்காரன் ஒருவன் ஒரு திரைப்படத்தைப் பார்க்க விரும்பலாம். திரைப்படத்தைப் பார்ப்பதற்கான கட்டணத்தைக் கொடுக்க அவனிடம் காசு இருந்தால், அவனுடைய விருப்பம் தேவையா கிறது. கடைநிலை ஊழியர் ஒருவர் 'டெலிவிஷன் செட்' வாங்க வேண்டுமென்ற விருப்பத்தைப் பெற்றிருக்கலாம். அவ் விருப் பத்தை நிறைவு செய்வதற்கான பணவசதி அவரிடம் இல்லை யாதலால், அவருடைய விருப்பம் தேவையாகாது.

தேவையின் இயல்புகளைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்: **முதலாவதாக**, பொருளை வாங்குவதற்கான விருப்பம் (desire) தேவைக்கு அடிப்படையாகிறது. **இரண்டாவதாக**, விருப்பத் தைக் கொண்டுள்ள ஒருவர், அதைப் பூர்த்தி செய்வதற்கான வாங்கும் திறனைப் (பணம்) பெற்றிருக்கவேண்டும். **மூன்றாவதாக**, அவர் பணத்தைக் கொடுத்துத் தேவையை நிறைவு செய்து கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். **நான்காவதாக**, தேவை விலையைச் சார்ந்து அமையும். விலை மாறும்போது தேவை யும் மாறுகிறது. விலை குறையும்போது தேவை விரிவடைகிறது; விலை கூடும்போது தேவை குறைவடைகிறது. **இறுதியாக**, தேவை கால அளவோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது.

ஒரு பெரிய குடும்பம் மாதமொன்றுக்கு 10 கிலோ சர்க்கரை யைத் தேவையாகக் கொண்டிருக்கலாம். அக் குடும்பம் நாள்

ஒன்றுக்கு 5 லிட்டர் பாலையும், ஆண்டொன்றுக்கு 30 கிலோ புளியையும், ஒரு மூட்டை உளுத்தம் பருப்பையும் தேவையாகப் பெற்றிருக்கக்கூடும். எனவே, தேவை என்பது நாள், வாரம், மாதம், வருடம் போன்ற கால அளவோடு தொடர்பு கொண்டிருக்கிறது.

சில பொருள்களின் தேவை வாணிகக் குறியீடுகளுக்கு ஏற்ப அமையும். 'மைசூர் சாண்டல், ஹமாம், மார்கோ, சிந்தால், லக்ஸ்ப்பாய், ரெக்ஸோனா, லக்ஸ் சுப்ரீம்' முதலிய சோப்புகளின் தேவை ஒரே அளவில் இருப்பதில்லை. அதிக விலையால் 'சிந்தால்' சோப் குறைந்த தேவையையும், 'ஹமாம்' சோப் அதிகத் தேவையையும் கொண்டிருக்கலாம். தேவை என்பது ஒரு குறிப்பிட்ட பொருள், குறிப்பிட்ட விலையில், குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு வாங்கப்படும் என்பதைக் குறிப்பிடும். இதைச் 'செயல் விளைவுடைய தேவை' (effective demand) என்றும் கூறலாம்.

## I. தேவையின் வகைகள்

(i) சந்தையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெவ்வேறு விலைகளில் வாங்கப்படும் ஒரு பொருளின் அளவுகள் **'விலைத் தேவை'** (Price Demand) ஆகும். (ii) ஒரு பொருளின் விலை மாற்றம், அதைப் போன்ற மற்றொரு பொருளின் தேவையில் மாற்றத்தை ஏற்படுத்துவது **'குறுக்குத் தேவை'** (Cross Demand) எனப்படும். 'போர்ன்விடாவின்' விலை அதிகரிப்பதால் **'ஓவல்டின்னின்'** தேவை கூடலாம். (iii) சில விருப்பங்களை நிறைவேற்ற ஒன்றுக்கு மேற்பட்ட சில பொருள்கள் இணைவாகத் தேவைப்படுவது **'கூட்டுத் தேவை'** (Joint Demand). உதாரணமாக, பேனா-மை, கிரிக்கெட்பந்து-மட்டை-குச்சிகள். குதிரை-வண்டி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். (iv) நுகர்வோருடைய வருமான அளவுகளுக்கேற்ப, வாங்கப்படுகின்ற பொருளின் அளவுகளை **'வருமானத் தேவை'** (Income Demand) உணர்த்துகிறது. (v) ஒரு பண்டத்திற்கு நேரடியாகத் தோன்றுவது **'நேர்முகத் தேவை'** (Direct Demand); அப் பண்டத்தின் மூலம் பிற பண்டங்களுக்குத் தோன்றும் தேவை **'பிறப்பிக்கப்பட்ட தேவை'** (Derived Demand). வீடுகளுக்கு இருப்பது நேர்முகத் தேவை. வீடு கட்ட உதவும் மணல், சிமெண்ட், கருங்கற்கள், இரும்புக் கம்பிகள், மரத்துண்டங்கள் போன்றவற்றிற்கான தேவை வீட்டுத் தேவையால் பிறப்பிக்கப்பட்டவையாகும். (vi) வெவ்வேறு விருப்பங்களை நிறைவேற்ற உதவும் தேவை

'கலவைத் தேவையாகும்' (Composite Demand). இதற்குச் சான்றாக நிலக்கரி, மின்சாரம், இரும்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## II. தேவை விதி (Law of Demand)

இது குறைந்துசெல் பயன்பாட்டு விதியின் அடிப்படையிலானது. ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு ஒரு குறிப்பிட்ட விலையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இருக்கும் கிராக்கியையே தேவை என்கிறோம். 'விலை குறையக் குறையத் தேவை அதிகரிக்கிறது; விலை உயர உயரத் தேவை குறைகிறது' என்பதே தேவை விதி. விலைக்கும் தேவைக்கும் இருக்கின்ற தலைகீழ்த் தொடர்பை இவ்விதி குறிப்பிடுகிறது.

மார்ஷல் பின்வருமாறு தேவை விதியை வரையறுக்கிறார்: 'மற்றவை மாறுமல் இருந்தால், விலை அதிகரிக்கும்போது தேவை குறையும்; விலை குறையும்போது தேவை அதிகரிக்கும்'. தேவை விதி சரியாகச் செயல்பட வேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் நுகர்பவரின் வருமானம், பழக்கவழக்கங்கள், விருப்பு-வெறுப்புகள், நாகரிகம், பதிலிப் பொருள்களின் விலை ஆகிய மற்றக் காரணிகளில் மாறுதல்கள் தோன்றக்கூடாது. இதையே **'மற்றவை மாறுமல் இருந்தால்'** என்னும் பதத்தின்மூலம் குறிக்கின்றோம்.

பொருள்கள் மலிவாகக் கிடைத்தால், அவற்றை அதிக அளவிலும், கிராக்கியால் உயர்விலையில் விற்கப்படும்போது குறைந்த அளவிலும் வாங்குகின்றோம்.

## III. தேவைப் பட்டியல் (Demand Schedule)

தனிப்பட்ட ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருளை வெவ்வேறு விலைகளில் எந்த அளவுகளில் வாங்குவாரென்பதைத் 'தனி நபர் தேவைப் பட்டியல்' (individual demand schedule) உணர்த்துகிறது. சந்தையில் பேரத்தில் ஈடுபடும் எல்லொருடைய மொத்தத் தேவையினை வெவ்வேறு விலைகளில் கண்டறிந்து குறிப்பிடுவதே 'அங்காடித் தேவைப் பட்டியல்' (market demand schedule).


கற்பனையாகத் தயாரிக்கப்பட்ட அங்காடித் தேவைப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஒரு அலகு பொருளின் விலை (பைசாவில்) | | தேவையின் அளவு (ஆரஞ்சுப் பழங்கள்) |
|---|---|---|
| 60 | .. | 1,000 |
| 50 | .. | 1,200 |
| 40 | .. | 1,500 |
| 30 | .. | 1,900 |
| 20 | .. | 2,500 |
| 10 | .. | 4,000 |

ஆரஞ்சுப் பழமொன்றின் விலை 60 பைசாவாக மிக அதிகமாக இருக்கும்போது தேவை 1,000 பழங்களாக மட்டுமே உள்ளது. அதன் விலை 10 பைசாவாக மிகவும் குறையும்போது தேவை 4,000 பழங்கள் என்ற அளவுக்கு அதிகமாக விரிவடைகிறது.

## IV. தேவை வளைகோடு (Demand Curve)

தேவை விதியை மேலும் எளிதாகப் புரிந்துகொள்ளப் பின்வரும் வரைபடத்தைத் தீட்டலாம்:




படம் 6

இவ் வரைபடத்தில் $DD_1$ என்பது தேவை வளைகோடு. X அச்சில் பொருளின் தேவையளவும் Y அச்சில் விலையும் அளவிடப்படுகின்றன. முதலில் விலை $OP_1$ ஆக இருக்கும்போது தேவை $OM_1$ ஆகும். விலையானது OP ஆக உயர்வடைகிறது என்று வைத்துக் கொள்வோம். இதனால் தேவை OM ஆகச் சுருங்குகிறது. ஆனால், விலை $OP_2$ ஆகக் குறையும்போது தேவை $OM_2$ ஆக விரிவடைகிறது.

**தேவை வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி வளைந்திருப்பதற்கான காரணங்கள் :**

தேவை வளைகோடு மேலிருந்து கீழ்ப்புறமாக இடது புறத்திலிருந்து வலதுபுறம் நோக்கிச் சரிந்திருப்பதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

**1. குறைந்து செல் பயன்பாட்டு விதியின் அடிப்படை :** பொருளின் விலை குறையும்போது, குறைந்துசெல் பயன்பாட்டு விதியின் காரணமாக அதிக அளவுப் பொருள் வாங்கப்படுகிறது. பொருளின் விலை குறைவால், இறுதிநிலைப் பயன்பாடு விலையை விடக் கூடுதலாகி மேலும் சில அலகுகள் வாங்கப்படுகின்றன. இதனால், இறுதிநிலைப் பயன்பாடு விலைக்குச் சமமாகிறது. விலையும் இறுதிநிலைப் பயன்பாடும் சமமாகும் வரை ஒருவர் ஒரு பொருளை வாங்குகிறார். அப்போதுதான் நுகர்பவர் உச்சநிலை மனநிறைவைப் பெறஇயலும். விலை குறையும்போது தேவை அதிகரிப்பதாலும், விலை கூடும்போது தேவை குறைவதாலும் தேவை வளைகோடு கீழ்நோக்கி வளைந்திருக்கிறது.

**2. விலைக் குறைவால் வாங்கும் சக்தி அதிகரித்தல்:** விலை குறையும்போது, பணத்தின் வாங்கும் சக்தி கூடுகிறது. இதனால், நுகர்பவர் அதிக அளவுப் பொருளை வாங்க முடிகிறது. அவர் முன்பு வாங்கியதைவிடச் சற்று அதிக அளவில் வாங்குகிறார். ஒரு ரூபாயைக் கொண்டுள்ள ஒருவர், வாழைப்பழம் ஒன்று 10 பைசா என்ற விலையில் விற்கப்படும்போது 10 பழங்களைப் பெறுகிறார். வாழைப்பழத்தின் விலை 5 பைசாவாகக் குறைந்தால், அவர் ஒரு ரூபாயில் 20 பழங்களை வாங்கமுடியும். இவ்வாறு பொருள்களின் விலை குறையும்போது பணத்தின் வாங்கும்திறன் அதிகரிக்கிறது.

**3. விலை குறையும் போது பொருள்களைப் பல வகைகளிலும் பயன் படுத்துதல் :** பதிலீட்டுப் பண்டங்களைப் பயன்படுத்தியவர்கள்கூட குறிப்பிட்ட பொருளின் விலை குறையும்போது, விலை

குறைந்த பொருளையே வாங்குகிறார்கள். உதாரணமாக நிலக்கரி, மின்சாரம் போன்றவை பல பயன்களைக் கொண்டவை. விலை அதிகமாக இருப்பதால்தான் நிலக்கரி நீராவி என்ஜின், தொழிற் கூடங்கள் முதலியவற்றில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. அதன் விலை குறைந்தால் இல்லங்களில் எரிபொருளாகவும்கூட அது பயன்படுத்தப்படும். பெட்ரோலின் விலையுயர்வால் வாடகைக் கார்களின் கட்டணங்கள் கூடியுள்ளமையால் பலரும் இரயில் மற்றும் பஸ் பயணங்களையே மேற்கொள்ளுகின்றனர்.

**4. புதிய நுகர்வு :** ஒரு பொருளின் விலைக் குறைவால், அப் பொருளை அதற்கு முன் உபயோகப்படுத்தாதவர்களும்கூடப் புதிதாகப் பயன்படுத்தத் தொடங்குவர். உதாரணமாக, ஆப்பிளின் விலை 50 பைசாவாகக் குறையும்போது, எண்ணற்ற புதிய நுகர்வோர் ஆப்பிள்களை வாங்குவர். அரிசியைவிடக் கோதுமையின் விலை குறைவாக இருந்தால், கோதுமையைப் பயன்படுத்தாதவர்களும் அதை வாங்குவார்கள்.


**5. விருப்பங்களின் தீவிரம் :** ஒருவருக்கு ஒரு பொருளின் மீது கட்டுக்கடங்காத விருப்பம் இருக்கலாம்; மற்றொருவருக்கு அதே பொருளின் மீது குறைந்தளவு விருப்பமே இருக்கக்கூடும். வேறொருவருக்கு அதன்மீது விருப்பமே இல்லாமல் இருக்கலாம். அப் பொருளின் விலை குறையும்போது, விருப்பம் குறைந்தவரும் விருப்பம் இல்லாதவரும்கூட அதை வாங்கிப் பயன்படுத்துவர். இதனால் விலை குறையும்போது தேவை பெருகுகிறது.

## V. விதிவிலக்குத் தேவை வளைகோடுகள் (Exceptional Demand Curves)

பொதுவாகத் தேவை வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி இடப்புறத்திலிருந்து வலப்புறமாக வளைந்து செல்லும் தன்மை கொண்டது. ஆனால், சில நிலைகளில் தேவை வளைகோடு இடமிருந்து வலமாக உயர்ந்து செல்லவும் கூடும். சில பொருள்களின் விலை குறையும்போது தேவையும் குறைகிறது; விலை உயரும் போது தேவையும் அதிகரிக்கும். இவ்வகைப் பொருள்களின் தேவை வளைகோடு பின்வரும் வரைபடத்தில் (படம் 7) இருப்பது போல அமையும்.

பின்வரும் வரைபடத்தில் $DD_1$ என்பது விதிவிலக்குத் தேவை வளைகோடு. தேவை X அச்சிலும், விலை Y அச்சிலும்

அளக்கப்படுகின்றன. விலை குறைவாக OP என்ற அளவில் இருக்கும்போது தேவையின் அளவு குறைவாக OM அளவுக்கு அமைகிறது. விலையானது $OP_1$ என்ற உயர் மட்டத்தில் அமையும்போது தேவையும் விரிவான அளவில் $OM_1$ ஆகத் திகழ்கிறது.




படம் 7

இதற்கான காரணங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

### 1. ஆடம்பரப் பொருள்கள்

மதிப்புள்ள வைரம், தங்கம் போன்ற பொருள்களின் விலை அதிகரிக்கும்போது, சமுதாயத்தில் தங்களுடைய அந்தஸ்தையும் பகட்டையும் டாம்பீகத்தையும் காட்டிக்கொள்ள விரும்பும் செல்வந்தர்கள் அவற்றை அதிகமாக வாங்க முற்படுவார்கள். இந்தியாவில் மிகுதி வருமானத்தைப் பெறுபவர்கள், விலை மிகவும் அதிகமான வெளிநாட்டுக் கார்களை வாங்குவதில் போட்டியிடுகின்ற நிலையையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். பண்டைக்காலச் சிற்பங்கள், உலோகச் சிலைகள், ஓவியங்கள்

போன்றவை உயர்ந்த விலையிலும் மிகுதியான தேவையைக் கொண்டுள்ளன.

## 2. கி:பெனின் தேவை விதி முரண்பாட்டுக் கருத்து (Giffen's paradox)

சில தரம் தாழ்ந்த பொருள்களின் விலை குறையும்போது அவற்றைக் குறைவாகவும். விலை உயரும்போது அவற்றை அதிக மாகவும் வாங்கப்படும். இதை முதலில் ராபர்ட் கிஃபென் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளக்கினார். இங்கிலாந்தில் 'தானியச் சட்டம்' (Corn Law) செயல்படுத்தப்பட்ட அக் காலத்தில், தொழிலாளர்கள் ரொட்டியின் விலை உயர்ந்தபோது இறைச்சி வாங்குவதைக் குறைத்து ரொட்டியையே அதிகம் வாங் கினர். ரொட்டியின் விலை குறைந்தபோது அதன்மூலம் கிடைத்த அதிக உண்மை வருமானத்தை இறைச்சி வாங்கப் பயன்படுத்திக் கொண்டு ரொட்டியைக் குறைந்த அளவிலேயே வாங்கினார்கள். கிஃபென் கூற்றில் ரொட்டி தரம் குறைந்த பொருளாகவும், இறைச்சி உயர்தரப் பொருளாகவும் கருதப்படுகிறது. இது போன்றே நம்நாட்டில் தாழ்ந்தரகப் பொருள்கள் எனக் கொள்ளப்படும் கம்பு, கேழ்வரகு போன்ற பொருள்களின் விலை அதிகரிக்கும்போது, அவற்றின் தேவை கூடுகிறது.

## 3. வருங்காலத்தில் மேலும் விலை உயருமென எதிர்பார்த்தல்

பணவீக்கக் காலங்களிலும், போர்க் காலங்களிலும், பற்றுக் குறைக் காலங்களிலும் சில பொருள்களின் விலை மேலும் அதி கரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அவற்றின் விலை உயர்வாக இருப்பினும், மக்கள் அவற்றை அதிகளவில் வாங்கி இருப்பாக வைக்கின்றனர். இவ்வாறு வாங்கும் நிலை, விலையை மேலும் உயர்த்திவிடுகிறது.

## 4. பங்கு அங்காடி (Stock Market)

பங்கு அங்காடியில் ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் பங்கு உயர் விலையில் விற்றால், அந் நிறுவனம் அதிக இலாபம் பெறத்தக்க வகையில் வளர்ச்சியடைந்துள்ளது என்று பொருள். ஆகவே, அந் நிறுவனப் பங்குகளின் விலை கூடும்போது, அவை அதிகமாக வாங்கப்படுகின்றன. பங்குகளின் விலை மேலும் அதி கரிக்கும் என்ற எண்ணத்தில் வாங்கப்படவும் கூடும். பங்குகளின் விலை குறையும்போது மேலும் விலை சரியுமென எதிர்பார்த்து அவற்றை வாங்காமல் காத்திருப்பவர்களும் உண்டு.

### 5. விலையைப் பற்றி அறியாத நிலை

அருகாமையிலுள்ள அங்காடிகளில் நிலவும் விலைவாசி மற்றும் அளிப்பு நிலவரங்கள் தெரியாமல், சிலர் உயர்விலை கொடுத்து அதிகளவுப் பண்டங்களை வாங்குவதும் உண்டு.

## VI. தேவை மாற்றங்கள் (Changes in Demand)

விலை மாற்றங்களால் தேவையின் அளவில் மாறுதல் தோன்றுவதைத் தேவை விதி குறிப்பிடுகிறது. விலை மாற்றம் இல்லாமலேயே, வேறு சில காரணிகளில் மாற்றம் ஏற்பட்டுத் தேவையில் மாற்றம் ஏற்படுவதுண்டு.

'தேவைப் பெருக்கம்' (increase in demand), 'தேவைக் குறைவு' (decrease in demand), 'தேவைச் சுருக்கம்' (contraction of demand), 'தேவை விரிவு' (extension of demand) ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைத் தெரிந்துகொள்வது அவசியம்.


விலைக் குறைவால் தேவை அதிகரிப்பதைத் 'தேவை விரிவு' எனவும், விலை உயர்வால் தேவை சுருங்குவதைத் 'தேவைச் சுருக்கம்' எனவும் கூறலாம். விலை மாற்றமின்றிப் பிற காரணிகளின் மாற்றத்தால் தேவை கூடினால் அதைத் தேவைப் பெருக்கம் எனவும், தேவை குறைவுபட்டால் அதைத் தேவைக் குறைவு எனவும் குறிப்பிடலாம். இங்குப் பிற காரணிகளாகக் குறிப்பிடப்படுபவை வருமானம், தட்பவெப்பநிலை, சுவையுணர்வு, மக்கள் தொகை, விளம்பரம் போன்றவையாகும்.

### தேவை விரிவு - தேவைப் பெருக்கம்

விலைக் குறைவால், 'தேவை விரிவடைதலையும்', விலை மாற்றமின்றி இருக்கும்போது பிற காரணிகளின் மாற்றத்தால் 'தேவை பெருக்கமடைதலையும்' பின்வரும் பட்டியல் மூலம் உணர்த்தலாம்:

| | நாற்காலியின் விலை (ரூபாயில்) | தேவை (நாற்காலிகள்) |
|---|---|---|
| தேவை விரிவு (extension of demand) | 30 | 150 |
| | 20 | 200 |
| தேவைப்பெருக்கம் (increase in demand) | 30 | 150 |
| | 30 | 200 |

இப் பட்டியலின் அடிப்படையில் தீட்டப்பெற்ற கீழ்க்காணும் வரைபடத்தின் வாயிலாகவும் தேவை விரிவையும், தேவைப் பெருக்கத்தையும் விளக்கலாம்:




படம் 8.

முதலில் $DD_1$ தேவைக்கோட்டைக்கொண்டு தேவை விரிவை விளக்கலாம். நாற்காலியின் விலை 30 ரூபாயாக இருக்கும்போது தேவை 150 ஆக உள்ளது. விலை 20 ரூபாயாகக் குறைவதாகக் கொண்டால், தேவை 200 ஆக விரிவடைகிறது. இவ்வாறு விலையில் ஏற்படும் குறைவால் தேவை கூடுவதைத் தேவை விரிவு என்கிறோம்.

தேவைப் பெருக்கமென்பது விலை மாற்றத்தால் ஏற்படாமல் மக்கள்பெருக்கம், கூடுதல் வருமானம் போன்ற பிற காரணிகளால் தோன்றுவதாகும். தேவைப்பெருக்கம் ஏற்படும் போது தேவைக்கோடு $DD_1$ என்ற நிலையினின்றும் மாறி $D_2$ $D_3$ என்ற நிலையில் உயர்வாக வலப்புறத்தில் அமையும். இதில் விலை மாறுமல் 30 ரூபாயாகவே இருக்கும்போது தேவை 150-ல் இருந்து 200 ஆகப் பெருகுகிறது.


வரைபடத்தில் $DD_1$ தேவைக்கொட்டில் தேவை P என்ற புள்ளியிலிருந்து Q என்ற புள்ளிக்கு விரிவடைந்துள்ளது.

**தேவைச் சுருக்கம் — தேவைக் குறைவு**

விலை உயர்வால் ஏற்படும் 'தேவைச் சுருக்கத்தையும்', விலை மாற்றமின்றிப் பிற காரணிகளின் மாற்றங்களால் ஏற்படும் 'தேவைக் குறைவையும்' கீழ்க்காணும் பட்டியல் உணர்த்துகிறது:

| | நாற்காலியின் விலை (ரூபாயில்) | தேவை (நாற்காலிகள்) |
|---|---|---|
| தேவைச்சுருக்கம் | 30 | 150 |
| (contraction of demand) | 40 | 100 |
| தேவைக்குறைவு | 30 | 150 |
| (decrease in demand) | 30 | 100 |

இப் பட்டியலின் அடிப்படையில் தீட்டப்பெற்ற பின்வரும் வரைபடத்தின் மூலமும் தேவைச் சுருக்கம், தேவைக் குறைவு ஆகியவற்றை விளக்கலாம்:




படம் 9

இவ் வரைபடத்தின் $DD_1$ தேவைக்கோட்டில், விலை உயர்வால் தேவைச்சுருக்கம் காட்டப்பட்டுள்ளது. நாற்காலியின் விலை 30 ரூபாயாக இருக்கும்போது தேவை 150 ஆகவும், விலை 40 ரூபாயாக உயரும்போது தேவை 100 ஆகச் சுருங்குவதையும் இதனால் அறியப்படுகிறது. தேவை Q என்ற புள்ளியில் இருந்து P என்ற புள்ளிக்குச் சுருங்குகிறது.

தேவைக் குறைவு ஏற்படும்போது தேவைக்கோடு $DD_1$ என்ற நிலையினின்றும் $D_2D_3$ என்ற நிலைக்கு மாறி இடப்புறமாகத் தாழ்வாக அமைகிறது. உதாரணத்திற்காக, நுகர்வோர் வருமானம் குறைவுபடுவதாகக் கொள்ளலாம். விலையில் உயர்வு இல்லாவிட்டாலும்கூட வருமானக் குறைவால் தேவை 150-ல் இருந்து 100 ஆகக் குறைகிறது.

இவ்வாறு விலை மாற்றமின்றிப் பிற காரணிகளில் ஏற்படும் மாற்றங்களால் தேவை மாற்றம் ஏற்படுவதையே 'தேவைப் பெருக்கம்' அல்லது 'தேவைக் குறைவு' என்கிறோம்.

**தேவை மாற்றம் அடையச் செய்யும் காரணிகள்**

**1. நாகரிக மாற்றம்:** தேவையின் அளவு நாகரிக மாற்றத்தால் பாதிக்கப்படுகிறது. வானொலிப் பெட்டி வைத்திருப்பது நாகரிகம் எனக் கருதப்பட்டதால் கிராமபோனின் தேவை குறைந்தது. இன்று டெலிவிஷன், ஸ்டீரியோ (Stereo), கேசெட் டேப் ரிக்கார்டடர் (Cassette tape recorder) போன்றவற்றை உடைமையாகக் கொண்டிருப்பது நாகரிகமாகக் கருதப்படுவதால், வானொலிப் பெட்டிகளின் தேவை குறையவும் வாய்ப்புண்டு. நுகர்வோருடைய விருப்ப உணர்வு, மனநிலை ஆகியவை நாகரிக நிலைக்கேற்ப அமைகின்றன. நகரங்களில் இருக்கும் பலரும் 'டெரிகாட்டன், டெரீன், டபுள் நிட்டட் டெரிலீன்' போன்றவற்றையே வாங்குவதால் சாதாரணப் பருத்தித் துணிகளுக்குக் கிராக்கி குறைந்துள்ளது. தற்பொழுது ஆண்களும் பெண்களும் நீண்ட முடியை வளர்ப்பது நாகரிகமாகி விட்டதால், முடிதிருத்துபவர்களின் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. திரைப்படங்கள், பத்திரிகைகள் ஆகியவை மேலை நாட்டு நாகரிகத்தை இந்தியா போன்ற கிழக்கு நாடுகளில் பரப்புகின்றன.

**2. தட்ப-வெப்ப நிலையில் ஏற்படும் மாறுதல்கள்:** கோடைக் காலத்தில் குளிர்பானங்களும், குளிர்காலத்தில் சூடான பானங்களும் அதிகத் தேவையைக் கொண்டுள்ளன. வேனிற் காலத்தில் பருத்தி ஆடைகளும், குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளும்

பயனளிப்பவை. மழைக்காலத்தில் குடையின் தேவை மிகுதியாக உணரப்படுகிறது.

**3. மக்கள் தொகையின் அளவு:** நம் நாட்டில் மக்கள் பெருக்கம் விரைவானதாக இருப்பதால், உணவுப் பொருள் களுக்கான தேவை கூடிவருகிறது. குழந்தைகளை அதிக எண் ணிக்கையில் கொண்டுள்ள ஒரு நாட்டில் தொட்டில்கள், குழந்தை உணவுப் பொருள்கள், விளையாட்டுச் சாமான்கள், மிட்டாய் போன்றவற்றின் தேவை அதிகமாக இருக்கும். இந்தியாவில் 'பங்களாதேஷ்' அகதிகளின் வருகையால் உணவுப் பண்டங்களின் தேவை கூடியது. பொதுவாக, மிகையான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாட்டில் உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றின் தேவையோடு, பல்வகை நுகர் பொருள்களின் தேவையும் மிகுதி யாகவே அமையும்.

**4. வருமான மாற்றம்:** மக்களின் உண்மை வருமானம் அதிகரித்தால் பல பொருள்களுக்கான தேவை பெருகும். இயற்கை வளங்கள் பலவற்றையும் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்களின் வரு மானம் அதிகரித்து வருகிறது. உண்மை வருமானம் கூடும்போது பணத்தின் வாங்கும் திறனும் அதிகரிக்கிறது. உண்மை வரு மானம் குறைந்தால் தேவையும் குறையும்.

**5. பண அளவில் ஏற்படும் மாற்றம் :** புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு மிகுதியாக இருந்தால், பொருள்களுக்கான தேவை அதிகமாக அமையும். பெரும்பாலும் பொருள்களின் விலை மட்டங்கள் பணப்புழக்கத்திற்கு ஏற்பவே இருக்கும். பண வீக்கம் ஏற்படும்போது தேவை கூடுவதை நாமறிவோம்.

**6. செல்வ – வருமானப் பங்கீடு :** ஏழ்மை நிலையைப் பெற்றிருக்கும் இந்தியா போன்ற நாடுகளில் நாட்டின் செல்வமும் வருமானமும் மக்களிடையே சமமாகப் பங்கிடப்பட்டால் இன்றி யமையாத பண்டங்களின் தேவை அதிகரிக்கும். மாறாகச் செல் வம் ஒரு சிலரிடையே குவிந்திருக்கும்போது, ஏழை மக்கள் பலர் குறைவான வருமானத்தைப் பெறுவதனால் உணவுப் பொருள் களுக்கான தேவையைக்கூட தாழ்ந்த அளவிலேயே பெற்றிருப்பர். செல்வ நிலையிலுள்ள சிலர்மட்டும் அதிக அளவில் ஆடம்பரப் பொருள்களை வாங்கி நுகர்வர்.

**7. கூட்டுப் பொருள்கள் :** கார்கள், ஸ்கூட்டர்கள், ஆகியவை அதிகமாக வாங்கப்படும்போது 'பெட்ரோல்' தேவை

யும் பெருகும். 'டிரான்சிஸ்டர்களின்' தேவை கூடும்போது அவற்றிற்கான 'பாட்டரிகளின்' தேவையும் அதிகரிக்கும். பெட்ரோல் விலையேற்றத்தால் கார்களின் தேவை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

**8. உற்பத்தி முறையில் கைக் கொள்ளப்படும் தொழில் நுட்பம்:** வேலைப் பகுப்பு, இயந்திர உற்பத்தி, பேரளவு உற்பத்தி ஆகிய முறைகளில் பொருள்களின் உற்பத்திச் செலவு குறைந்து, அவை குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இயந்திரக் கண்டுபிடிப்புகளாலும், அவற்றால் ஏற்பட்டுள்ள தொழில்நுணுக்க முன்னேற்றங்களாலும் பல பொருள்கள் மலிவாக விற்கப்படுகின்றன.

**9. வாணிக நிலை :** பொருளாதாரப் பூரிப்பு நிலைகளில் வாணிகம் செழித்துப் பொருள்களின் தேவை மிகுதியடையும். வாணிகம் சீர்கேடு அடைந்திருந்தால் தேவை குறையும்.

**10. விளம்பரங்கள்:** இன்றைய சூழ்நிலைகளில் விளம்பரம் இன்றி எந்த ஒரு பொருளையும் இலாபகரமாக விற்பனை செய்ய இயலாது. திரைப்படம், சுவரொட்டி, துண்டுப் பிரசுரம், பத்திரிகை, வானொலி, தொலைநோக்கி ஆகியவற்றின் வாயிலாக விளம்பரம் செய்வதால் பொருள்களின் தேவை பெருகுகிறது. விளம்பரத்தால் சில குறிப்பிட்ட பொருள்களை வாங்க வேண்டுமென்ற விருப்பத்தை நுகர்வோர் பெறுகின்றனர்.

# 11. தேவை நெகிழ்ச்சி
## (Elasticity of Demand)

ஒரு பொருளின் விலை அதிகமாக இருந்தால், அதைக் குறைந்த அளவிலும் விலைக் குறைவாக இருந்தால் உயர்ந்த அளவிலும் வாங்கப்படுகிறது என்பதைத் தேவை விதியில் கண்டோம். விலையின் ஏற்றத் தாழ்வுகளால் பொருள்களின் தேவை குறைவதும் அதிகரிப்பதும் ஒரே வீதத்தில் இருக்க வேண்டுமென்ற நியதி எதுவும் இல்லை. பொருள்களின் தன்மை, பயன், நுகர்வோர் நிலை போன்றவற்றிற்கேற்ப அவ் வீதம் மாறும்.

விலைமாற்றம் தேவையில் எந்த அளவுக்கு மாறுதலைத் தோற்றுவிக்கிறது என்பதையே தேவை நெகிழ்ச்சிக் கருத்துக் குறிப்பிடுகிறது. பொருளியலில் இக் கருத்து ஆல்ஃபிரட் மார்ஷலால் புகுத்தப்பட்டது. அவர் கூற்றுப்படி, 'விலையில் தோன்றும் மாற்றத்தால் தேவையில் ஏற்படும் தீவிரமே தேவை நெகிழ்ச்சி.' வேறு வார்த்தைகளில் கூறினால், தேவையில் ஏற்படும் விலை மாற்றத்தின் விளைவே தேவை நெகிழ்ச்சியாகும்.

### நெகிழ்ச்சியுடைய தேவையும் (Elastic Demand) நெகிழ்ச்சியற்ற தேவையும் (Inelastic Demand)

ஒரு பொருளின் விலை குறைந்த அளவே மாறும்போது தேவை அதிக அளவுக்கு மாறுவது நெகிழ்ச்சியுடைய தேவை. எடுத்துக்காட்டாக, நாவலாசிரியரின் ஒரு நூல் 10 ரூபாய்க்கு விற்கப்படும்போது, குறிப்பிட்ட பகுதியில் அதற்கான தேவை 100 என வைத்துக்கொள்ளலாம். அதே நூல் 50 சதவீத விலைக்குறைப்போடு மலிவு விலையில் விற்பனையாகும்போது தேவை 600 ஆக 500 சதவீதம் கூடுவதை நெகிழ்ச்சியுடைய தேவை என்கிறோம். இதனைப் பின் கொடுக்கப்பட்டுள்ள முதல் பட்டியல் உணர்த்தும். மாறாக, விலை 50 சதவீதம் குறையும்போது தேவை

104 ஆக 4 சதவீதம் மட்டுமே கூடினால், அதை நெகிழ்ச்சியற்ற தேவை என்று குறிப்பிடுகிறோம். இதனை இரண்டாவது பட்டியலினின்றும் அறியலாம்.

பட்டியல் 1

| விலை | தேவை |
|---|---|
| ரூ. 10 | 100 |
| ரூ. 5 | 600 |

பட்டியல் 2

| விலை | தேவை |
|---|---|
| ரூ. 10 | 100 |
| ரூ. 5 | 104 |

**தேவை நெகிழ்ச்சியை அளவிடுதல்**

தேவை நெகிழ்ச்சியைப் பின்வரும் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்:

(i) நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவை (Perfectly Elastic Demand);

(ii) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை (Perfectly Inelastic Demand);

(iii) ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவை (Unit Elasticity or Unitary Elasticity or Elasticity equal to one);

(iv) ஒன்றுக்குக் குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை (Elasticity less than Unity);

(v) ஒன்றுக்கு அதிகமான நெகிழ்ச்சியுள்ள தேவை (Elasticity greater than Unity).

தேவை நெகிழ்ச்சியை அளவிடக் கீழ்க்காணும் ஐந்து முறைகளைப் பின்பற்றலாம்:

(1) கணித மார்க்கம் (Arithmetic Method);

(2) வரைபட மார்க்கம் (Graphical Method);

(3) மொத்தச் செலவீட்டு மார்க்கம் (Total Outlay Method);

(4) சதவீத மார்க்கம் (Percentage Method);


(5) தொடுகோடு மார்க்கம் (Tangent Method).

இங்கு நாம் முதல் மூன்று முறைகளையும் பின்பற்றித் தேவை நெகிழ்ச்சியின் ஐந்து வகைகளையும் புரிந்து கொள்ளலாம்.

**(i) நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவை :** விலையில் மாற்றமின்றியோ அல்லது சிறிதளவு விலை மாற்றத்தாலோ தேவை பெருகுவது நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவையாகும். இதைப் பின்வரும் பட்டியலும் வரைபடமும் விளக்குகின்றன.

| விலை | தேவை | |
|---|---|---|
| ரூ. 10 | 100 | $\eta = \infty$ |
| ரூ. 9 | 0 | |

இப் பட்டியலில் விலையில் ஏற்படும் சிறிதளவு மாற்றத்தால் தேவை முடிவிலா நெகிழ்ச்சியுள்ள தேவையாகிறது. நிறைந்த நெகிழ்ச்சியுடைய பொருள்களைக் குறிப்பிட்டவிலையில் முடிவில்லாத அளவுக்கு விற்க முடியும். சில நேரங்களில் சிறிதளவு விலைமாற்றம் கூடத் தேவையைச் சூனியமாகத் தாழ்த்திவிடும். பொருள்களை விற்க முடியாது. ஆனால், அன்றாட வாழ்க்கையில் இந்த நிலை பேரங்களில் காணப்படவில்லை. இது ஓர் ஊகமே ஆகும். பட்டியலில் $\eta$ என்ற அடையாளம் தேவை நெகிழ்ச்சியையும், $\infty$ என்ற




படம் 10

அடையாளம் தேவை முடிவற்ற நிலைக்கு மாறுவதையும் காட்டு கிறது.


மேற்காணும் வரைபடமும் நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவையை உணர்த்தும்.

வரைபடத்தில் தேவைக்கோடு X அச்சுக்கு இணையான படுக்கைக்கோடாக அமைகிறது. OD என்ற விலையில் மாற்ற மின்றியே தேவை OM-ல் இருந்து $OM_1$ அல்லது மேலும் அதிக அளவுக்குப் பெருகுகிறது.

**(ii) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை :** பொருளின் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும், தேவையில் எவ்வித மாற்றமும் ஏற்படாவிட்டால், அப் பொருளின் தேவை முற்றிலும் நெகிழ்ச்சி யற்ற தேவை எனப்படும். கீழ்க்காணும் பட்டியல் இதை விளக் கும்.

| விலை | தேவை | |
|---|---|---|
| ரூ. 10 | 100 | $\eta = 0$ |
| ரூ. 8 | 100 | |

விலையில் ஏற்படும் 20 சதவீதக் குறைவு தேவையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள




தேவையின் அளவு

படம் 11


வரைபடமும் விலைமாற்றம் தேவையில் மாற்றத்தை ஏற்படுத்தாது என்பதை விளக்குகிறது.

முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு Y அச்சுக்கு இணையான செங்குத்துக் கோடாக இருக்கிறது. உதாரணமாக இவ் வரைபடத்தில் விலை $OP_1$-ல் இருந்து OP என்ற அளவுக்கு உயர்வதாகக் கொண்டாலும் தேவை $OD_1$ என்ற நிலையிலேயே மாறுமல் உள்ளது. விலைக் குறைவோ அல்லது விலை அதிகரிப்போ ஏற்பட்டாலும் தேவை மாற்றம் ஏற்படாத நிலையே இதில் குறிப்பிடப்படுகிறது.

**(iii) ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவை :** பொருளின் விலையில் தோன்றும் சதவீத மாற்றம், அதே சதவீத அளவிலேயே தேவை மாற்றத்தையும் ஏற்படுத்துவதை ஒன்றுக்குச் சமமான தேவை நெகிழ்ச்சி என்கிறோம். பின்வரும் பட்டியலில் விலையில் ஏற்படும் 50 சதவீதக் குறைவு, தேவையை 50 சதவீதத்திற்கு உயர்த்துவதைக் காண்க.

| விலை | தேவை | |
|---|---|---|
| ரூ. 10 | 100 | $\eta = 1$ |
| ரூ. 5 | 150 | |

கீழ்க்காணும் வரைபடமும் ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவையை விளக்கும்:





படம் 12

விலை OP-ல் இருந்து $OP_1$ ஆக 50 சதவீதம் குறையும் போது தேவை OM-ல் இருந்து $OM_1$ அளவுக்கு 50 சதவீதம் கூடுகிறது. ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவை விலைமாற்ற விகிதமும் தேவை மாற்ற விகிதமும் சமமாக இருப்பதை உணர்த்துகிறது. உதாரணமாக, மேற்கண்ட படத்தில் விலை$OP_1$-ல் இருந்து OP என்ற அளவுக்கு 50 சதவீதம் கூடுவதாகக் கொண்டால் தேவை $OM_1$-ல் இருந்து OM என்ற அளவுக்கு 50 சதவீதம் சுருங்குகிறது.

**(iv) ஒன்றுக்குக் குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை:** விலை மாற்ற விகிதத்தைவிட தேவை மாற்ற விகிதம் குறைவாக இருப்பதையே இது குறிக்கின்றது. இதைக் கீழ்க்காணும் பட்டியல் உணர்த்தும்.

| விலை | தேவை | |
|---|---|---|
| ரூ. 10 | 100 | $\eta < 1$ |
| ரூ. 6 | 108 | |

விலையில் 40 சதவீதக் குறைவு ஏற்படும்போது தேவை 8 சதவீதம் மட்டுமே கூடுகிறது. இவ்வகைத் தேவை நெகிழ்ச்சியை விளக்கப் பின்வரும் வரைபடத்தையும் தீட்டலாம்.





படம் 13

பொருளின் விலை OP-ல் இருந்து $OP_1$ என்ற நிலைக்கு மிகவும் அதிகமாகக் குறையும்போது, தேவை OM-ல் இருந்து $OM_1$ என்ற குறைந்த அளவுக்கு மட்டுமே அதிகரிக்கிறது. விலையில் தோன்றும் மாற்றத்தைவிடப் பொருள் தேவையில் ஏற்படும் மாற்றம் குறைவாக இருப்பின், அப் பொருளின் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாகும்.

**(v) ஒன்றுக்கு அதிகமான நெகிழ்ச்சியுள்ள தேவை :** விலையில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டிலும் தேவை மாற்றம் மிகுதியாக இருப்பதை இந்த நிலை குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் கற்பனை பட்டியலைக் கொள்ளலாம்:

| விலை | தேவை | |
|---|---|---|
| ரூ. 10 | 100 | $\eta > 1$ |
| ரூ. 7 | 190 | |

விலையானது 10 ரூபாயிலிருந்து 7 ரூபாய்க்கு 30 சதவீதம் தாழ்வடையும்போது, தேவை 100 அலகிலிருந்து 190 ஆக 90 சதவீதம் கூடுதலடைகிறது. இதையே கீழ்க்காணும் வரை படமும் விளக்கும்:




படம் 14

பொருளின் விலை OP-ல் இருந்து $OP_1$ என்ற குறைந்த அளவுக்குத் தாழ்வடையும்போது, தேவை OM-ல் இருந்து $OM_1$ என்ற அளவுக்கு அதிக அளவில் பெருகுகிறது. விலைமாற்ற விகிதத்தை விட தேவை மாற்ற விகிதம் அதிகமாக இருப்பதே ஒன்றுக்கு அதிகமான நெகிழ்ச்சியுள்ள தேவையாகும்.

**மொத்தச் செலவீட்டு முறை** (Total Outlay Method) : தேவை நெகிழ்ச்சியை அளவிடுவதற்கான மொத்தச் செலவீட்டு முறையை விளக்கியவர் ஆல்ஃபிரட் மார்ஷல் ஆவார். இம் முறையில் விலை மாறும்போது, நுகர்வோரின் மொத்தச் செலவு (விற்பனையாளரின் மொத்த வருமானம்) எவ்விதம் மாறுபடுகிறது என்பது கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப தேவை நெகிழ்ச்சி அளவிடப்படுகிறது.

(1) பொருளின் விலையில் மாற்றங்கள் ஏற்படும்போது, அப் பொருளை வாங்குவதில் நுகர்வோரின் மொத்தச் செலவீடு மாறுமலிருந்தால், தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமம். பின் வரும் பட்டியலைக் கொண்டு இதை விளக்கலாம்.

| விலை | தேவை | மொத்தச்செலவீடு | |
|---|---|---|---|
| ரூ. 10 | 100 | ரூ. 1,000 | $\eta = 1$ |
| ரூ. 5 | 200 | ரூ. 1,000 | |
| ரூ. 20 | 50 | ரூ. 1,000 | |

உதாரணமாக, ஒரு குடையின் விலை 10 ரூபாயாக இருக்கும் போது தேவை 100 குடைகள் எனக்கொண்டால் நுகர்வோரின் மொத்தச் செலவு (அதாவது விற்பனையாளரின் மொத்த வருமானம்) 1,000 ரூபாயாக இருக்கிறது. விலையானது ரூ. 5, ரூ. 20 என்ற நிலைக்குக் குறைந்தாலோ அல்லது கூடினாலோ அதற்கேற்பத் தேவையிலும் மாற்றம் தோன்றுகிறது; ஆனால், மொத்தச் செலவீட்டில் மாறுதலின்றி அது 1,000 ரூபாயாகவே அமைகிறது. இவ்வாறு விலை குறைவதும் தேவை அதிகரிப்பதும் சமமாக அமைந்து, மொத்தச் செலவீட்டுத் தொகை மாறுமலிருந்தால், அது ஒன்றுக்குச் சமமான நெகிழ்வுள்ள தேவை.


(2) பண்டத்தின் விலை அதிகரிக்கும்போது மொத்தச் செலவீடு அதிகரிக்கவோ, விலை குறையும்போது மொத்தச் செலவீடு குறையவோ செய்தால் அப் பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாகும்.

| விலை | தேவை | மொத்தச்செலவீடு | |
|---|---|---|---|
| ரூ. 10 | 100 | ரூ. 1,000 | $\eta < 1$ |
| ரூ. 15 | 80 | ரூ. 1,200 | |
| ரூ. 20 | 70 | ரூ. 1,400 | |

(3) மொத்தச் செலவீடு, விலை உயர்வடையும்போது குறைவாகவும் விலை குறைவடையும்போது அதிகமாகவும் இருந்தால் பொருளுக்கான தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமாகும். இதைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்கும்.

| விலை | தேவை | மொத்தச்செலவீடு | |
|---|---|---|---|
| ரூ. 10 | 100 | ரூ. 1,000 | $\eta > 1$ |
| ரூ. 15 | 50 | ரூ. 750 | |
| ரூ. 20 | 30 | ரூ. 600 | |

மொத்தச் செலவீட்டு முறையின் மூலம் தேவை நெகிழ்ச்சி அறியப்படுவதைப் பின்வரும் வரைபடத்தாலும் விளக்கலாம்.




மொத்தச் செலவு

படம் 15.

வரைபடத்தின் X அச்சில் மொத்தச் செலவும், Y அச்சில் விலையும் குறிக்கப்பட்டுகின்றன. RSTO மொத்தச் செலவீட்டு வளைகோடு. $n$ என்ற அடையாளம் தேவை நெகிழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. பொருளின் விலை $OP_1$ என்ற நிலையிலிருந்து OP என்ற நிலைக்குக் குறையும்போது, மொத்தச் செலவு R என்ற புள்ளியிலிருந்து S என்ற புள்ளிவரைக் கூடுகிறது. இப் பகுதியில் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமுள்ளதாக $(\eta > 1)$ அமையும். OP என்ற விலைக்கும் $OP_2$ என்ற விலைக்கும் இடையே மொத்தச் செலவில் மாற்றம் இல்லை என்பதை வளைகோட்டின் ST பகுதி உணர்த்துகிறது. இப் பகுதியில் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக $(\eta = 1)$ உள்ளது. $OP_2$ என்ற நிலையினின்றும் விலை குறையும்போது, மொத்தச் செலவும் குறைவடைகிறது. இப் பகுதியில் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாக $(n < 1)$ இருக்கிறது.

**தேவை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள்**

**(1) பொருளின் விலை :** அதிக விலையுள்ள பண்டங்களுக்கும், மிகக் குறைந்த விலையுள்ள பண்டங்களுக்கும் தேவை நெகிழ்ச்சியற்று இருக்கும். குளிர்சாதனப் பெட்டியின் விலை 2,000 ரூபாயிலிருந்து 1,800 ரூபாயாகக் குறைவடையும்போது, தேவை அதிகமாகப் பெருகாது. ஏனெனில், செல்வந்தர்கள் மட்டுமே இப் பொருளை வாங்குபவர்கள் ஆவர். மேலும், அவர்களில் பலர் குளிர்சாதனப் பெட்டியை முன்னமேயே உடைமையாகக் கொண்டிருப்பர். இதுபோன்றே தீப்பெட்டி, உப்பு போன்ற மிகக் குறைந்த விலையில் விற்கப்படும் பொருள்களுக்குத் தேவை நெகிழ்ச்சியற்றதாக அமையும். உதாரணமாக, ஒரு லிட்டர் உப்பின் விலை 20 பைசாவில் இருந்து 25 பைசாவிற்கு உயர்ந்தாலும், அது வாங்கப்படும் அளவில் மாறுதல் ஏற்படாது. ஆனால், நடுத்தர விலையில் விற்கப்படும் பொருள்களின்தேவை நெகிழ்ச்சி உடையதாக இருக்கும்.

**(2) பொருளின் இயல்பு :** வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுத் தானியங்களின் தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும். பொதுவாக ஆடம்பரப் பொருள்கள் மற்றும் வசதிப் பொருள்களின் தேவை நெகிழ்ச்சியுள்ளதாக அமையும். சில்க் புடவைகள், அழகுச் சாதனப் பொருள்கள், சைக்கிள், மின்விசிறி, வானொலிப் பெட்டி, இஸ்திரிப் பெட்டி போன்றவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மிகவும் விலை அதிகமான கார், டெலிவிஷன், வைரம் போன்ற பொருள்களுக்குத் தேவை நெகிழ்ச்சியற்று அமையும். 'ஸ்டாண்டர்ட் கேசல்' (Standard Gazel) காரின்

விலை 26,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய்க்குக் குறைந்தாலும் தேவை பெருகும் என எதிர்பார்க்க முடியாது. மது, புகையிலை, காப்பி, சிகரெட் போன்றவை நெகிழ்ச்சியற்ற தேவையைக் கொண்டவை. இவற்றைப் பயன்படுத்துபவர்கள் இவற்றின் விலை உயர்ந்தாலும், தொடர்ந்து வாங்கிக் கொண்டிருப் பார்கள்.

**(3) நுகர்வோர் வருமானம்:** குறைந்த வருமானம் பெறுபவர்கள் ஒரு பொருளை வாங்கும்போது அதன் தேவை நெகிழ்ச்சி மிக்கதாகவும், அதே பொருளைச் செல்வந்தர்கள் வாங்கும்போது தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, செல்வந்தர்கள் வெண்ணெய் வாங்கும்போது, அதன் விலையைப் பற்றி அதிக அக்கறை கொள்வதில்லை. ஆனால், நடுத்தரக் குடும்பத்தினர் வெண்ணெயின் விலை கூடினால், அதன் நுகர்வைக் குறைத்துக் கொள்கிறார்கள். ஒரு செல்வந்தரும் அவ ருடைய பணியாளும் திரைப்படம் பார்க்கச் சென்றால், செல்வந் தருக்குத் தேவை நெகிழ்ச்சியில்லாத உயர் வகுப்பு நுழைவுச் சீட்டு, பணியாளருக்குத் தேவை நெகிழ்ச்சி உடையதாகிறது. பொதுவாக, குறைந்த வருமானம் பெறுபவர்கள் வாங்கும் பொருள்களின் தேவை நெகிழ்ச்சி உடையதாகவும், அதிக வரு மானம் பெறும் செல்வந்தர்கள் வாங்கும் பொருள்களின் தேவை நெகிழ்ச்சியற்றதாகவும் இருக்கும்.

**(4) பலவகைப் பயன்களை உடைய பொருள்கள்:** பல வகைப் பயன்களை உடைய பொருள்களின் தேவை நெகிழ்ச்சி நிறைந்ததாக அமையும். மின்சாரத்தின் விலை குறைந்தால், அதை மேலும் பல இல்லப் பணிகளுக்கு நாம் பயன்படுத்துவோம். விலை அதிகமாக இருப்பதால், மின்சாரத்தைக் குறிப்பிட்ட அவசியப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துகிறோம். நிலக்கரியின் விலை குறைவாக இருந்தால், அது வீடுகளில் எரிபொருளாகவும் சிறிய தொழிற்கூடங்களில் இயக்கச் சக்தியைப் பெறுவதற்காகவும் பயன்படுத்தப்படும். விலை உயர்வாக இருப்பதால் நிலக்கரி மிக அவசியமான பயன்களைப் பெறுவதற்கு மட்டும் உபயோகிக்கப் படுகிறது.

**(5) பதிலீட்டுப் பண்டங்கள்:** பதிலீடு செய்யத்தக்க பண்டங்களின் தேவை நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும். டாக்ஸி வாடகைக் கட்டண உயர்வால் ஆட்டோவிலும் பஸ்களிலும் செல் கிறோம். போர்ன்விடா, ஓவல்டின் ஆகியவற்றை ஒன்றுக்கு ஒன்று பதிலிகளாகக் கொள்ளலாம். ஓவல்டின்னின் விலை கூடினால்

பலரும் போர்ன்விடா வாங்கத் தொடங்குவர். இதனால், ஓவல்டின்னின் தேவை குறையும். காப்பி, தேநீர், அமுல்-க்ளாக்ஸோ-அமுல்ஸ்பிரே ஆகியவற்றையும் பதிலிப் பொருள்களாகக் கருதலாம். சீனியின் விலை அதிகரிக்கும்போது நாட்டுச் சர்க்கரை, வெல்லம், கருப்பட்டி ஆகியவற்றைப் பலரும் பயன்படுத்துவர். எனவே, சரியான பதிலிகள் உள்ள பொருள்களின் தேவை நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.

**(6) கூட்டுத் தேவைப் பொருள்கள் :** பெரும்பாலும், கூட்டுத் தேவைப் பொருள்கள் ஒவ்வொன்றின் தனித் தேவையும் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும். பேனா, மை ஆகிய இரண்டும் கூட்டுப் பொருள்கள். மையின் விலை குறைந்தால் அதனுடைய தேவை பெருகும் என்று கருத முடியாது. ஆனால், டிரான்சிஸ்டர்களின் விலை குறையும்போது அவை அதிக எண்ணிக்கையில் வாங்கப்படும். அதோடு அவற்றிற்குத் தேவையான பாட்டரி செல்களின் தேவையும் அதிகரிக்கும், இங்கு ஒன்றின் விலைக் குறைவு மற்றொரு பொருளின் தேவையைப் பெருகச் செய்கிறது.

**(7) வருமானத்தில் செலவிடும் பங்கு :** வருமானத்தில் அதிக அளவு செலவழிக்கப்படும் பொருள்களுக்கான தேவை நெகிழ்ச்சியுள்ளதாகவும், குறைந்த அளவு செலவழிக்கப்படும் பொருள்களுக்கான தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவும் இருக்கும். செய்திப் பத்திரிகை, அஞ்சல் அட்டை, தீப்பெட்டி, சிகரெட், வெற்றிலைப் பாக்கு, மூக்குப் பொடி ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் பணம் வருமானத்தின் குறைந்த பங்கேயாகும். எனவே, இவற்றிற்கான தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும். வருமானத்தில் அதிக அளவு செலவிடப்படும் மின்சாரம், பால், மண்ணெண்ணெய், வீட்டு வாடகை ஆகியவற்றிற்கான தேவை நெகிழ்ச்சியுடையதாக அமையும்.

**(8) நீண்ட காலம் பயனளிக்கக் கூடிய பொருள்கள் :** தையல் இயந்திரம், சைக்கிள், வானொலிப்பெட்டி, ஸ்டீல் பீரோ, கடிகாரம், மேஜை, நாற்காலி, கட்டில், தொட்டில், தட்டெழுத்துப் பொறி போன்ற பொருள்கள் நெடுங்காலம் பயன்தரக்கூடியவை. இவற்றைப் பலரும் முன்னமேயே வாங்கி உடைமையாக வைத்திருப்பர். இவற்றின் விலை சிறிது குறையும்போது இவற்றிற்கான தேவை பெருகாது. நீண்டகாலம் பயனளிக்கக்கூடிய 'உறுதிப் பொருள்களின்' (durable goods) தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருப்பதே இதற்குக் காரணமாமும். பூட்ஸ்களின்

விலை மிகவும் அதிகரிக்கும்போது, அவற்றை வாங்குவதைச் சில காலம் தள்ளிப் போடுகிறோம்.

**(9) கால அளவு :** நீண்ட காலத்தைவிடக் குறுகிய காலத்தில் பொருள்களின் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக அமையும். மிகக் குறுகிய காலத்தில் விலைக்குறைவு தேவையைப் பெருக்காது. நுகர்வோருடைய பழக்க வழக்கங்களும் (விலைக் குறைவை) அறியாமையுமே இதற்குக் காரணமாகும்.

**(10) பழக்க வழக்கங்கள் :** மதுவின் விலை உயர்ந்தாலும், குடிகாரர்கள் குடித்துக்கொண்டே இருப்பார்கள். சிகரெட்டின் விலை அதிகரித்தாலும் புகைப்பிடிக்கும் பழக்கத்தைத் தவிர்க்கப் பலராலும் முடிவதில்லை. எனவே, நுகர்வோருக்குப் பழக்கமான சில பொருள்களின் தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும்.

**(11) சிறிது காலம் நுகர்வைத் தள்ளிவைத்தல் :** மழைக் கோட்டு, தொப்பி, டை, கறுப்புக் கண்ணாடி, குடை போன்றவை மிக அவசியமான பொருள்கள் அல்ல. இவற்றின் விலை உயர்வாக இருக்கும்போது, இவற்றைப் பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று பலரும் நுகர்வைச் சிறிது காலம் தள்ளி வைக்கின்றனர். ஆகவே, இவ்வகைப் பொருள்களின் தேவை நெகிழ்ச்சி நிறைந்ததாக அமைகிறது.

**(12) நுகர்வோர் உபரி :** நுகர்வோர் உபரியை மிகுதியாகத் தரக்கூடிய பொருள்களுக்கான தேவை நெகிழ்ச்சி குறைந்தது. உதாரணமாக, கிரிக்கெட் மாட்ச், ஹாக்கி மாட்ச், டென்னிஸ் மாட்ச், திரைப்படம் ஆகியவற்றைப் பார்ப்பதற்கான நுழைவுக் கட்டணம் உயர்த்தப்பட்டாலும், இவற்றைப் பார்க்க வருகின்ற ரசிகர்களின் எண்ணிக்கை குறையாது.

**(13) பொருளின் பயன் :** மனித நுகர்வுக்காக அரிசிநொய் வாங்கப்படும்போது அதன் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவும், அப் பண்டம் கோழி உணவாக வாங்கப்படும்போது அதன் தேவை நெகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும். இவ்வாறு பொருளின் பயன்பாட்டுக்கு ஏற்பவும் தேவை நெகிழ்ச்சி அமையும்.

### தேவை நெகிழ்ச்சிக் கருத்தின் முக்கியத்துவம்

**(1) அரசின் பொருளாதார—நிதிக் கொள்கைகள் :** அரசு பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், நிதிக் கொள்கையை வரையவும் தேவை நெகிழ்ச்சிக் கருத்து உதவு

கிறது. பணவீக்கம் (inflation), பணவாட்டம் (deflation), வாணிக மந்தம் (trade depression) முதலிய பொருளாதாரச் சீர்குலைவுகளைச் சரிசெய்ய அரசு பல பொருள்களின் தேவை நெகிழ்ச்சியை அறியவேண்டும். உணவுப்பொருள்களின் உற்பத்தி, பங்கீடு, கொள்முதல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதில் தேவை நெகிழ்ச்சிக் கருத்துப் பயனளிக்கிறது. நிதி அமைச்சர் அரசின் வருமானத்தைப் பெருக்க விரும்பினால் தேவை நெகிழ்ச்சி யற்ற பொருள்களின் மீது உயர்வீத வரிகளை விதிக்கவேண்டும். நெகிழ்ச்சியுள்ள தேவையைக் கொண்ட பண்டங்களின் மீது வரி களை விதித்து அரசு வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள இயலாது.

**(2) ஆக்கக் காரணிகளுக்கான ஊதிய நிர்ணயம் :** தேவை நெகிழ்ச்சிக் கருத்து ஆக்கக் காரணிகளின் சன்மானத்தை நிர்ண யிப்பதற்கும் உதவுகிறது. ஒரு தொழிற்சாலையில் உழைப்பாளர் களின் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருந்தால், உழைப்பாளர் கள் எளிதில் ஊதிய உயர்வைப் பெறமுடியும். ஆனால், நெகிழ்ச்சி மிக்க தேவையைக் கொண்ட உழைப்பாளர்கள் செயல்படும் ஒரு தொழிற்சாலையில், தொழிலாளர் சங்க முயற்சிகளாலும் கூட ஊதிய உயர்வைப் பெறஇயலாது. மருத்துவத்தில் முதுநிலைக் கல்விப் பட்டம் பெற்ற மருத்துவர்களின் தேவை நெகிழ்ச்சி குறைந்தது. பல நோயாளிகளும் இவர்களிடமே சிகிச்சை பெற விரும்புவதால், இம் மருத்துவர்கள் உயர்வான சிகிச்சைக் கட்ட ணத்தைப் பெற்று வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

**(3) பொருள்களின் விலை நிர்ணயம் :** உற்பத்தியாளர் களும் வணிகர்களும் தங்களுடைய உற்பத்தி—விற்பனைப் பொருள் களின் விலையை நிர்ணயிக்கத் தேவை நெகிழ்ச்சிக் கருத்து உதவு கிறது. பொருள்களின் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருந் தால், விலையை உயர்த்தினாலும் தேவை குறையாது. தேவை நெகிழ்ச்சி நிறைந்த பொருள்களின் விலையைக் கூட்டினால், பல ரும் அப் பொருள்கள் வாங்குவதைக் குறைத்து விடுவர் அல்லது நிறுத்தி விடுவர்.

**(4) 'வளக் கொழிப்புக்கிடையே வறுமை' :** குறைந்த தேவை நெகிழ்ச்சிகளைக் கொண்ட பண்டங்களைத் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யும்போது உற்பத்தியாளர் பாதிக்கப் படுகிறார். உதாரணமாக, ஒரு மூட்டை கோதுமை 100 ரூபாய் விலையில் விற்கும்போது, ஒரு விவசாயி 50 மூட்டை விளைவித்து ரூ. 5,000 வருமானம் பெறுகிறார். அடுத்த மகசூலில் உற்பத்தி 80 மூட்டைகளாக அவரால் உயர்த்தப்படும்போது, கோதுமை

யின் தேவை குறைந்து விலை மூட்டை ஒன்றுக்கு 60 ரூபாயாகக் குறைகிறது. இதனால், அவ் விவசாயி 4,800 ரூபாயை மட்டுமே வருமானமாகப் பெறுகிறார். விளைவு குறையும்போது கோதுமையின் விலை கூடும். இவ்வகைக் குறைபாடு தோன்றுமல் இருக்க, விளைச்சல் அதிகமாக இருக்கும்போது கோதுமையை அரசு ஏற்று மதி செய்யலாம். தேவை நெகிழ்ச்சியற்ற அவசியப் பண்டங்களில் பற்றுக்குறை ஏற்படாமல் தவிர்ப்பதும், அவற்றின் விலைகளை நிர்ணயிப்பதும், அவற்றைச் சரியாகப் பங்கீடு செய்வதும் அரசின் கடமையாகும்.

**(5) பொதுப்பயன் (Public Utility) பணிகளும் தொழில்களும் :** முற்றுரிமை நிலையைக் கொண்ட, தேவை நெகிழ்ச்சி குறைந்த பொதுப் பயன் பணிகளையும் தொழில்களையும் அரசு ஏற்று நடத்துவதால் மக்கள் நன்மை அடைகின்றனர். இரயில்வே, தபால்-தந்தி, தொலைபேசி, குடிநீர் அளிப்பு, மின் சாரம் வழங்குதல் போன்றவை தனியார் ஆதிக்கத்தில் இருந்தால், அவர்கள் இப் பொருள்களின் விலையை உயர்த்தி மக்களுடைய நலனைக் குறைப்பார்கள். எனவே, இவ்வகைப் பொதுப் பயன்களை அரசே ஏற்று நடத்தவேண்டும். எவ்வகைத் தொழில்களையும் பணிகளையும் அரசு ஏற்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கத் தேவை நெகிழ்ச்சிக் கருத்து துணைபுரிகிறது.

**(6) பன்னாட்டு வாணிகம் :** நாடுகளிடையே வாணிகம் நடைபெறும்போது பண்டங்களின் மாற்றுவீதத்தைத் தீர்மானிக்கத் தேவை நெகிழ்ச்சிக் கருத்து உதவுகிறது. ஒரு நாட்டில் வெளிநாட்டுப் பொருள்களுக்கான தேவை நெகிழ்ச்சி குறைவானதாக இருந்தால், வெளிநாட்டுப் பொருள்களின் விலை உயர்வாக அமையும்.

**(7) அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் :** ஒரு நாட்டின் பணத்தோடு அயல்நாட்டுச் செலாவணியின் மாற்று வீதத்தை நிர்ணயிப்பதிலும் தேவை நெகிழ்ச்சிக் கருத்து உதவியாக உள்ளது. மேலும், ஒரு நாடு ஏற்றுமதி - இறக்குமதிப் பொருள்களின் தேவை நெகிழ்ச்சியை ஆய்வு செய்த பிறகே தனது பணத்தின் மதிப்பைக் குறைக்கவோ அல்லது கூட்டவோ செய்யலாம்.

**(8) கூட்டு ஆக்கத்தில் பொருள்களின் விலைகளைத் தீர்மானித்தல் :** இறைச்சி-தோல், பருத்தி-பருத்திக்கொட்டை, நெல்-

வைக்கோல் போன்றவை கூட்டாக ஆக்கப்படும் பொருள்களாகும். இவை ஒவ்வொன்றின் உற்பத்திச் செலவையும் தனியாகக் கணக்கிட இயலாது. கூட்டு ஆக்கப் பொருள்களில் முக்கியப் பொருளின் தேவை நெகிழ்ச்சிக்கேற்ப, மற்ற பொருளின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

இவ் வகைகளில் தேவை நெகிழ்ச்சிக் கருத்து பொருளாதார சமுதாய நிலைகளில் பல பிரயோகங்களைக் கொண்டதாக இருக்கிறது.

# 12. உற்பத்தி
## (Production)

பொருளியலின் நுகர்வுப் பகுதியில் மனித விருப்பங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. உற்பத்திப் பிரிவில் விருப்பங்களை நிறைவேற்ற எவ்வித முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதை அறிகிறோம். 'பயன்பாட்டை உருவாக்குவதே' (Creation of Utility) உற்பத்தியாகும். பேராசிரியர் பிகு (Professor Pigou) பணத்திற்கு மாற்றக்கூடிய பண்டம் அல்லது பணியை உருவாக்குவதே உற்பத்தி என்கிறார். உற்பத்திக்கு ஆதாரமாக இருப்பது நுகர்வே. விவசாயி, தொழிலாளி, வியாபாரி, தச்சர், கொல்லர், ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், எழுத்தர், தட்டெழுத்தர், கடைநிலைப் பணியாளர், தாதியார், கணக்கியலாளர், தரகர், காவலர், பாடகர், நடிகர், ஓவியர், அஞ்சலர் போன்ற பலரும் ஆக்கப் பணிகளிலேயே ஈடுபட்டுள்ளனர்.

உருவாக்கப்படும் பயன்பாடு மாற்று மதிப்புள்ளதாக இருத்தல் அவசியம். மருத்துவர் ஒருவர் தன் மகளுக்கு மருத்துவம் பார்ப்பதோ, ஆசிரியர் ஒருவர் தன் மகனுக்குக் கல்வி பயில்விப்பதோ பொருளியல் ஆக்கமெனக் கருதப்படமாட்டாது. ஆனால், மருத்துவர் மருத்துவமனையில் பிற நோயாளிகளைக் கவனிப்பதும், ஆசிரியர் பள்ளியில் கல்வி போதிப்பதும் உற்பத்திப் பணிகளாகின்றன.

உற்பத்திப் பொருள்கள் யாவுமே நல்ல பயன்களைத்தான் தரும் எனக் கருத இயலாது. கள், சாராயம், கஞ்சா, சிகரெட் போன்றவை மனித நலனுக்குத் தீங்கு விளைவிப்பதும் உண்டு.

பணத்திற்கு ஈடாகச் செய்யப்படும் சேவைகளும் ஆக்கமே. மக்களின் பொழுதுபோக்கிற்காகப் பாடும் பாடகர், நடிக்கும்

நடிகர், படம் வரையும் ஓவியர், விளையாடும் ஆட்டக்காரர், நடனமாடும் நாட்டிய அழகி ஆகிய யாவரும் ஆக்கப் பணி களிலேயே ஈடுபட்டுள்ளனர்.

ஒரு நாட்டின் மொத்த ஆக்கம் நில வளம், நீர் வளம், கனி வளம், மக்கள் வளம், மூலை வளம், வன வளம், மழை வளம் போன்றவற்றைச் சார்ந்து அமையும். உற்பத்தியை ஊக்குவிக்கும் பிற காரணிகளாவன: போக்குவரத்து — தகவல் தொடர்பு, வாணிகம், வங்கிமுறை வளர்ச்சி, மூலதனத் திரட்சி, கல்வி வளர்ச்சி தொழில்நுட்பம், விஞ்ஞானம், தட்ப-வெப்ப நிலை, முன்னேற்றத் திற்குத் திட்டமிடல், அரசியல் அமைப்பு, அமைதிச் சூழ்நிலை, சமுதாய அமைப்பு, உழைப்பாளர்களின் உழைக்கும் ஆர்வம், கலாசாரம், மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, கூட்டுறவு, வேளாண்மை வளர்ச்சி, தொழில்முன்னேற்றம், சுகாதார ஆரோக்கிய வசதிகள், சமூகநலப் பணிகள்.

இயற்கையில் கிடைக்கும் பொருள்களை உழைப்பின்மூலம் பயன்பாடு அடையச் செய்வது ஆக்கமாகும். காட்டில் வளரும் தேக்கு மரத்திற்குப் பயன்பாடு இல்லை. ஆனால், அம் மரம் வெட்டப் பட்டு மேஜைநாற்காலிகளாகச் செய்யப்பட்டு நகர்ப்புறங்களில் விற்கப்படும்போது பயன்பாட்டைப் பெறுகிறது. இடமாற்றத் தினால் மரமானது பயன்பாட்டைப் பெறுகின்ற இந்த நிலையை 'இடப் பயன்பாடு' (place utility) என்கிறோம். மரம் பலகைகளாகவும் சட்டங்களாகவும் அறுக்கப்பட்டு மேஜை-நாற்காலிகளாக உரு மாற்றம் செய்யப்பட்ட பிறகுதான் விற்பனையாகின்றன. இங்கு உருமாற்றத்தால் மரம் பயன்பாட்டைப் பெறுகின்றமை 'உருவப் பயன்பாடு' (form utility) எனப்படுகிறது. அறுவடை முடிந்த வுடனேயே நெல், கோதுமை போன்ற உணவுத் தானியங்கள் அனைத்தும் விற்பனை செய்யப்படுவதில்லை. அவை களஞ்சியங்களில் இருப்பாக வைக்கப்பட்டு, சில காலம் சென்று தேவைப்படும் போது விற்பனையாகின்றன. இவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியாகும் பொருள்களை இருப்பாக வைத்திருந்து பயன் படும் காலத்தில் அளிப்பது 'காலப் பயன்பாடு' (time utility) ஆகும்.

### ஆக்கத் தொழில் வகைகள்

ஆக்கத் தொழில்களைப் பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்: (i) வேளாண்மைச் சாகுபடி, மீன் பிடித்தல், மூலப்பொருள்களைத் தோண்டி எடுக்கும் சுரங்கத் தொழில் முத லிய 'எடுப்புத் தொழில்கள்' (extracting industries);

(ii) கச்சாப் பொருள்களை விளைமுடிந்த நுகர்பொருள்களாக மாற்றும் 'தயாரிப்புத் தொழில்கள்' (manufacturing industries), (iii) ஆசிரியர், மருத்துவர், பொறியாளர் போன்றோரின் 'நேர் முகப் பணிகள்' (direct services); (iv) வெவ்வேறு வகைப் போக்குவரத்து–செய்தித் தொடர்பு வசதிகள், வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் 'வாணிகப் பணிகள்' (commercial services).

## ஆக்கக் காரணிகளின் பகுப்பு

நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு ஆகிய நான்கும் ஆக்கக் காரணிகளாகும். இவற்றில் ஏதாவது ஒரு காரணி செயல்படாவிட்டாலும்கூட உற்பத்தியைச் செய்ய இயலாது. இக் காரணிகள் கூட்டாக இணைந்து செயல்படும்போதுதான் உற்பத்தி தோன்றுகிறது. கார்ல் மார்க்ஸ் போன்ற பொதுவுடைமை வாதிகள் உழைப்பை மட்டுமே உற்பத்திக் காரணியாகக் கொள்ளவேண்டுமென வாதிடுகின்றனர். வேறுசில பொருளியலாளர்கள் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்றை மட்டுமே ஆக்கக் காரணிகளாகக் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். இன்றைய பொருளியல் ஆய்வாளர்களில் சிலர் தொழில்நுட்ப அறிவியலை ஆக்கத்தின் ஐந்தாவது காரணியாகச் சேர்த்துள்ளனர்.

**(1) நிலம்** (Land) : பொருளாதார இயலில் நிலம் என்பது பூமி மட்டத்தையோ, மண்ணையோ மட்டும் குறிக்காமல் வனங்கள், ஆறுகள், மலைகள் போன்ற இயற்கை வளங்களையும், மூலப்பொருள்கள் தோண்டி எடுக்கப்படும் சுரங்கங்களையும் குறிக்கும். நிலத்தின் ஆக்கத்திறன் மழை, தட்பவெப்ப நிலைகள் போன்ற இயற்கைக் காரணிகளைச் சார்ந்தும் அமையும். நிலமே உற்பத்தியின் அடிப்படைக் காரணி

**(2) உழைப்பு** (Labour) : பண்டங்களையும் பணிகளையும் ஆக்குகின்ற மனித நடவடிக்கைகள் யாவும் உழைப்பில் அடங்குகின்றன. உழைப்பு என்பது உடல் உழைப்பாகவோ அல்லது மூளை உழைப்பாகவோ இருக்கலாம். விவசாயி, தொழிலாளி, ஆசிரியர், மருத்துவர், ஆட்சியாளர், வணிகர், தொழில் அமைப்பாளர் போன்றவர்களுடைய பணிகள் உழைப்பிலேயே அடங்கும்.

**(3) மூலதனம்** (Capital) : ஆக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் செல்வமே மூலதனம். இது பணத்தை மட்டுமல்லாமல் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திரத் தள

வாடங்கள், கருவிகள், கட்டடங்கள், மூலப்பொருள்கள் போன்ற வற்றையும் குறிக்கும்.

**(4) தொழில் அமைப்பு** (Organisation): நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்று ஆக்கக் காரணிகளையும் சரிவிகிதத்தில் இணைத்து உற்பத்தியில் ஈடுபடுத்தி, அவற்றின் பணிகளுக்கேற்பச் சன்மானம் அளிப்பது தொழில் அமைப்புக் காரணியாகும். தொழில் அமைப்பாளரே தொழிலைத் தொடங்கி, உற்பத்தியைச் செய்து, விற்பனையையும் கவனிக்கிறார்.

## ஆக்கக் காரணிகளுக்கு இடையேயான தொடர்பு

மேற்கண்ட ஆக்கக் காரணிகள் நான்கும் இணைந்து செயல் பட்டால்தான் உற்பத்தி நிறைவுபெறுகிறது. இவற்றில் ஒரு காரணி இல்லாவிட்டாலும் ஆக்கம் பாதிக்கப்படுகிறது. இக் காரணிகளில் எது முக்கியமானது எனக் குறிப்பிட இயலாது. எல்லாக் காரணிகளும் இன்று சம முக்கியத்துவ நிலையைக் கொண் டுள்ளன. ஆனால், பொருளாதாரத்தின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளில் மாறுபட்ட ஆக்கக் காரணிகள் செல்வாக்குப் பெற் றிருந்தன. உதாரணமாக, மனிதன் வேட்டையாடி மீன்பிடித்து வாழ்ந்த காலத்தில் உழைப்பு முக்கிய உற்பத்திக் காரணியாகவும், வேளாண்மை வளர்ச்சி நிலையில் நிலம் முக்கியக் காரணியாகவும் தொழில் வளர்ச்சிக் காலத்தில் மூலதனம் முக்கியமானதாகவும், வாணிக வளர்ச்சி நிலையில் தொழில் அமைப்பு இன்றியமையாத காரணியாகவும் கருதப்பட்டன. இன்றைய நிலையில் நாம் நான்கு காரணிகளின் கூட்டு முக்கியத்துவத்தை அறிந்திருக்கி றோம்.

ஓர் உற்பத்திக் காரணியின் ஆக்கத் திறன் பிற மூன்று காரணிகளைச் சார்ந்தும் அமையும். எடுத்துக்காட்டாக, நிலத் தின் உற்பத்தித் திறனைக்கூட்ட உரங்களை இடலாம்; நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கலாம்; இயந்திர உற்பத்தி முறையைக் கைக் கொள்ளலாம். இவற்றைச் செய்ய அதிக மூலதனத்தை முத லீடாக்கவேண்டும்.

## ஆக்கக் காரணிகளின் பெயர்ச்சி (Mobility of factors o Production)

இன்றையச் சூழ்நிலைகளில் பல வசதிகளும் பெருகியுள்ளமை யால், நிலத்தைத் தவிர பிற காரணிகள் நாட்டுக்கு உள்ளேயும், நாடுகளுக்கு இடையேயும் எளிதில் இடம் பெயர்கின்றன. தமிழ்

நாட்டைச் சேர்ந்த ஒருவர் கர்னாடகத்தில் மூலதனத்தை முதலீடாக்குவதும், ஆந்திரத் தொழிலாளி ஒருவர் வங்காளத் தொழிற்கூடத்தில் பணிபுரிவதும், பம்பாயைச் சேர்ந்த ஒருவர் கேரளத்தில் ஒரு புதியத் தொழிலை அமைப்பதும், சென்னையில் அமைந்துள்ள திரைப்பட ஸ்டுடியோவைச் சேலத்திற்கு மாற்றி அமைப்பதும் நிலத்தைத் தவிர்த்த மற்ற காரணிகளின் பெயர்ச்சியைக் குறிக்கின்றன. அமெரிக்கர் ஒருவர் ஹாங்காங்கில் வியாபாரத்துறையில் முதலீடு செய்வது நாட்டினிடையே மூலதனப் பெயர்ச்சி இருப்பதைக் காட்டுகிறது. பன்னாட்டு நிதி நிறுவனங்களும், உலக நாடுகளின் அரசுகளும் பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்காக மூலதன உதவியையும், தொழில்நுட்ப உதவியையும் அளித்து வருகின்றன.

நிலம் பெயர்ச்சியற்ற காரணி. எனினும், நெல் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் கரும்பைச் சாகுபடி செய்யமுடியும்.

நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு என்ற ஆக்கக் காரணிகளின் பகுப்புப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனினும், நிலத்தில் வள வேறுபாடுகள் உள்ளன. உழைப்பாளர்கள் எல்லோருடைய திறனும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மூலதனத்தின் வகைகள் பலதரப்பட்டவையாகும். தொழிலமைப்பாளரிடையேயும் திறமையில் வேறுபாடுகள் உள்ளன.

## ஆக்கத்தின் முக்கியத்துவம்

'உற்பத்தி செய் அல்லது ஒழிந்துபோ' (Produce or Perish) என்று ஜவஹர்லால் நேரு நம் மக்களுக்கு அறிவுரை செய்தார். நாட்டின் மொத்த ஆக்கம் கூடினால்தான் மக்கள் தரமான வாழ்வைப் பெறுவர். வேளாண்மைப் பொருள்கள், உற்பத்திக்கு உதவும் மூலதனப் பொருள்கள் ஆகியவற்றைப் பெருக்கவேண்டும். நுகர் பொருள்களின் உற்பத்திப் பெருக இயந்திரங்கள், மூலப்பொருள்கள், மின் சக்தி ஆகியவற்றின் ஆக்கம் அதிகரிக்க வேண்டும்.

ஒரு நாட்டில் ஆக்கத்தின் அளவு அதிகரிக்கும்போது வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன. மக்களின் வருமானமும், வாங்கும் திறனும், வாழ்க்கைத் தரமும் கூடுகின்றன. வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் அரசு கவனத்தைச் செலுத்துதல் அவசியம். பொருளாதாரம் ஓரளவு வளர்ச்சியடைந்த பிறகு வசதிப் பொருள்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் ஊக்குவிக்கப்படலாம்.

உற்பத்தியைப் பெருக்க அயல்நாடுகளின் உதவியை நாடுவதில் தவறில்லை. பலவகைப் பொருள்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி, தேவையைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

**ஆக்கத்தின் அளவை நிர்ணயிக்கும் காரணிகள்**

ஒரு நாட்டின் உற்பத்தி அளவு பின்வரும் சில முக்கியக் காரணிகளைச் சார்ந்துள்ளது :

1. இயற்கை வளங்கள்;
2. மக்களின் ஆக்கத் திறன்;
3. மூலதனத் திரட்சி;
4. தொழில்நுட்ப வளர்ச்சி;
5. போக்குவரத்து-தகவல் தொடர்பு முன்னேற்றம்;
6. வாணிக மேம்பாடு;
7. வளர்ச்சி பெற்ற வங்கிமுறை;
8. அமைதியான அரசியல் அமைப்பு;
9. கல்வி வளர்ச்சி;
10. மனிதனின் உற்பத்திப் பணிகளில் இயற்கைக் காரணிகளின் ஒத்துழைப்பு.

# 13. நிலமும் வினைவு விதிகளும்
## (Laws of Returns)

பொருளியலில் நிலம் என்னும் சொல் பூமி மட்டத்தை மட்டும் குறிக்காமல் சாகுபடிக்குப் பயன்படும் நிலம், காடு, சுரங்கம், கடல் போன்ற இயற்கை வளங்களையும் தட்பவெப்ப நிலையையும் குறிக்கிறது. மார்ஷலின் கூற்றுப்படி, 'பூமியிலும், நீரிலும், ஆகாயத்திலும், ஒளியிலும், வெப்பத்திலும் உற்பத்தியில் மனிதனுக்கு உதவும் இயற்கை சாதனங்களும், சக்திகளும் நிலமாகும்.' பொருளியலாளர்களின் விசித்திர விளக்கங்களின்படி குற்றாலம் அருவியும், கொடைக்கானல் ஏரியும், பாசனத்திற்குப் பயன்படும் வாய்க்காலும் பொருளியலில் நிலமாகின்றன.

நிலமே உற்பத்திக்கு மூல காரணி. வேளாண்மை நிலத்தைச் சார்ந்திருக்கிறது. தொழில்களுக்கான மூலப்பொருள்கள் நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. நிலத்தை ஆதாரமாகக் கொண்டுதான் போக்குவரத்து வசதிகள் பெருக்கப்படுகின்றன. நிலமின்றி உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்க இயலாது.

## I. நிலத்தின் சிறப்பியல்புகள்

### 1. இயற்கையின் அன்பளிப்பு

நிலத்தை நம்மால் உருவாக்க இயலாது. அது இயற்கையின் கொடையாகும். தொன்மைப் பொருளியலாளர்கள் (classical economists) நிலம் இயற்கையின் அன்பளிப்பாகக் கிடைப்பதால் அதற்கு ஆக்கச் செலவு இல்லை எனவும், அதற்குச் சன்மானம் தரவேண்டியது இல்லை எனவும் குறிப்பிட்டனர். ஆனால், நிலம் விலை மதிப்பைப் பெற்றுள்ள நிலையை இக் காலப் பொருளியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

### 2. குறிப்பிட்ட அளவிலானது

நிலத்தின் மொத்த அளவைத் தேவைக்கேற்ப மாற்ற இயலாது. நிலத்திற்கு அளிப்புக் கிடையாது. ஆனால், நிலத்தின் அளவைக்கூட்ட இயலாவிட்டாலும் வளத்தைப் பெருக்க இயலும்.

### 3. இடம் பெயராத தன்மை

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நிலத்தைக்கொண்டு செல்ல முடியாது. இடப் பெயர்ச்சியற்ற இக் காரணியை இருக்கும் இடத்திலேயே பயன்படுத்தவேண்டும். எனினும், நிலத்தை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தலாம். வேளாண்மை நிலத்தில் கோதுமைக்குப் பதில் நெல் சாகுபடி செய்யலாம். அல்லது அந்நிலத்தில் வீடு கட்டலாம். தொழிற்கூடங்களை நிறுவவும் அந்நிலம் பயன்படும்.

### 4. தர—வள வேறுபாடு

நிலத்தின் ஆக்கத்திறன் வெவ்வேறு இடங்களிலும் வேறுபாடு உடையதாக உள்ளது. அமைந்துள்ள இடங்களுக்கேற்பவும் நிலம் மதிப்பைப் பெறுகிறது. பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய பெரிய நகரங்களில் ஒரு 'கிரவுண்டு' நிலத்தின் விலை கிராமங்களின் ஒரு 'கிரவுண்டு' நிலத்தின் விலையைப்போலப் பல மடங்கு அதிகமாக இருக்கிறது. 'இடமதிப்பே' (site value) இதற்குக் காரணமாகும்.

### 5. அழிக்க முடியாத தன்மை

நிரந்தரமான நிலத்தை அணுக்குண்டுகளாலும் அழிக்க இயலாது. அழிக்கமுடியாத இயல்பைக் கொண்டது நிலமென ரிக்கார்டோ குறிப்பிடுகிறார்.

### 6. செயலற்ற காரணி (Passive Factor)

பிற ஆக்கக் காரணிகளின் துணையின்றி நிலத்தின் பயனைப் பெறமுடியாது. உற்பத்தியைச் செய்ய எல்லா ஆக்கக் காரணிகளையும் இணைத்துப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

மற்ற உற்பத்திக் காரணிகளோடு ஒப்பிடும்போது, நிலத்திலேயே குறைந்துசெல் விலைவு விதி விரைந்து செயல்படுகிறது.

### நிலமும் மூலதனமும்

பொருளியலாளர்கள் நிலத்திற்கும் மூலதனத்திற்கும் உள்ள தன்மைகளை ஒப்பிட்டு விளக்குகின்றனர்.

1. நிலம் இயற்கையின் அன்பளிப்பாக இருக்கும்போது, மூலதனம் மனிதனின் கண்டுபிடிப்பாக உள்ளது. ஆனால், உழைப்பும் மூலதனமும் நிலத்திற்கு ஆக்கத் திறனை அளிக்கின்றன.

2. நிலத்தை அழிக்க இயலாது; மூலதனம் அழியும் தன்மை கொண்டது. எனினும், நிலத்தின் பயன் அழியாமல் காக்க உரங்களை இடுகிறோம்.

3. நிலத்தின் மொத்த அளவினைக்கூட்ட முடியாது; மூலதனத்தின் அளவைப் பெருக்குவது எளிது. நிலத்தின் அளவைக் கூட்ட இயலாவிடினும் பயனைக் கூட்டலாம். அறிவியல் சாகுபடி முறைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தின் உற்பத்தியை நான்கு மடங்குகூடப் பெருக்கலாம். நிலம் மிகவும் கிடைப்பருமையாக உள்ள பம்பாயில் பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவதும் யாவரும் அறிந்ததே.

4. பலதரப்பட்ட நிலங்களைப் போன்றே பலவகைப்பட்ட மூலதனங்களும் உள்ளன. அவற்றின் தரங்களுக்கும் வகைகளுக்கும் ஏற்ப அவை உற்பத்தியையும் வருமானத்தையும் பெறுகின்றன.

5. நிலம் இடப்பெயர்ச்சியற்ற காரணியாக இருக்கும் போது, மூலதனம் இடப் பெயர்ச்சி கொண்டதாக அமைகிறது. நிலத்தை உடைமை அல்லது உரிமை மாற்றம் மட்டுமே செய்யலாம்.

6. மூலதனத்தோடு ஒப்பிடுகையில் நிலத்தில் குறைந்து செல் விளைவு விதி விரைவில் செயல்படுகிறது.

**செறிந்த சாகுபடி முறையும்** (Intensive Cultivation) **பரந்த சாகுபடி முறையும்** (Extensive Cultivation)

பற்றுக்குறையாக உள்ள நாடுகளில் நிலத்தைச் செறிந்த சாகுபடி முறையில் ஈடுபடுத்துவது அவசியம். ஒரு குறிப்பிட்ட குறைந்தளவு நிலப்பரப்பில், மூலதனத்தையும் உழைப்பையும் அதிக அளவில் முதலீடு செய்து அறிவியல் அடிப்படையில் சாகுபடி செய்வதே செறிந்த சாகுபடி முறையாகும். இம் முறையில் நிலம் நன்கு உழப்பட்டு, உரங்கள் இடப்பட்டு, நீர்ப்பாசன வசதிகள் பெறப்பட்டு, நல் விதைகள் விதைக்கப்பட்டு, உற்பத்தி பெருக்கப்படுகிறது. இதன்மூலம் ஓர் ஏக்கருக்கான உற்பத்தியைப் பல மடங்கு கூட்ட முடியும். எனினும், நிலத்தின் உற்பத்தித் திறனை ஒரு குறிப்பிட்ட உயர்ந்த அளவுக்கு அதிகமாகப் **பெருக்க இயலாது.**

ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தனி ஒருவருக்கான வேளாண்மை நிலம் அதிக அளவில் கிடைப்பதால், அந் நாடுகளில் பரந்த சாமுபடிமுறை பின்பற்றப் படுகிறது. இச் சாகுபடி முறை பேரளவில் இயந்திரங்களின் உதவியோடு, அறிவியல் அடிப்படையில் செய்யப்பெறுகிறது.

## II. விளைவு விதிகள் (Laws of Returns)

விளைவு விதிகளைக் குறைந்துசெல் விளைவு, வளர்ந்துசெல் விளைவு, மாறுத விளைவு என மூன்றுகப் பகுக்கலாம். தொன்மைப் பொருளியலாளர்கள் குறைந்துசெல் விளைவுவிதி எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பொருந்துமென்று கூறினர். இவ் விதியின் அடிப்படையிலேயே ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடும், மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடும் எழுதப் பட்டன. இங்கிலாந்து நாட்டிலும், ஐரோப்பிய நாடுகளிலும் தொழிற்புரட்சி ஏற்பட்ட பிறகு குறைந்துசெல் விளைவு விதி செயல்படுவதைச் சிறிதுகாலம் தாழ்த்தலாமென்பது உணரப் பட்டது. தற்போது வளர்ந்துசெல் விளைவு விதியும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் உற்பத்தியைப் பெருக்க உழைப்பும் மூலதனமும் கலந்த இடுமானங்கள் முதலீடாக்கப் படுகின்றன என்று வைத்துக்கொள்ளலாம். இறுதிநிலை உற்பத்தி ஒரு குறிப்பிட்ட அளவுவரை அதிகரித்துப் பிறகு குறையத் தொடங்குகிறது. இதை நாம் குறைந்துசெல் விளைவு விதியின்கீழ் விளக்கலாம்.

### (i) குறைந்துசெல் விளைவு விதி (Law of Diminishing Returns)

குறிப்பிட்ட அளவு நிலத்தில் மற்ற ஆக்கக் காரணிகளின் அளவை மேலும் கூட்டிச் சாகுபடி செய்யும்போது மொத்த உற் பத்தி அதிகரிக்கும். எனினும், உற்பத்தி அதிகரிக்கின்ற விகிதம் குறைவாக அமையும். குறைந்துசெல் விளைவு விதி இவ்வாறு நிலத்தில் செயல்படுவதாகத் தொன்மைப் பொருளியலாளர் களான ரிக்கார்டோ, மால்தஸ், மார்ஷல் போன்றவர்கள் விளக் கினர். சுரங்கத் தொழில், மீன்பிடித்தல் போன்ற தொழில்களி லும் இவ் விதி செயல்படுமென்று அவர்கள் குறிப்பிட்டனர்.

நிலத்தின் உற்பத்தித் திறனுக்கு ஒரு வரையறை உண்டு. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு உற்பத்தியைப் பெருக்கும்

திறனே நிலம் இழந்துவிடுமென்பதை இவ் விதி உணர்த்துகிறது. மார்ஷல் குறைந்துசெல் விளைவு விதியைப் பின்வருமாறு வரையறை செய்கிறார்: 'சாகுபடி முறையில் முன்னேற்றம் இல்லையானால், பொதுவாக வேளாண்மை செய்யும் குறிப்பிட்ட அளவு நிலத்தில் உயர்வாக ஈடுபடுத்தப்படும் மூலதனமும் உழைப்பும் உயர்த்தப்பட்ட விகிதத்திற்குக் குறைவாகவே உற்பத்தியைத் தரும்'.


இவ்விதி நிலத்திலும், தொழில் துறையிலும் செயல்படவில்லை என்றால் பொருள்களை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்யலாம். மக்கள்தொகை விரைவாகப் பெருகினாலும் உணவுப்பற்றாக்குறை தோன்றாது.

குறைந்துசெல் விளைவு விதியைப் பின்வரும் ஒரு கற்பனைப் பட்டியலின்மூலம் விளக்கலாம். ஒரு விவசாயி 3 ஏக்கர் நிலத்தை உடைமையாகப் பெற்றுள்ளார் என்று கொள்வோம். அந் நிலத்தில் அவர் மூலதனமும் உழைப்பும் கலந்த இடுமானங்களை முதலீடாக்கி உற்பத்தி செய்கிறார். ரூ. 100 மூலதனத்தையும் 5 கூலியாள்களின் உழைப்பையும் ஓர் இடுமானம் எனக் கருதுவோம். இடுமானங்களை அதிகரிக்கும்போது மொத்த விளைச்சலும், இறுதிநிலை விளைச்சலும் கீழ்க்காணுமாறு இருக்கும்.

| இடுமானங்கள் (மூலதனம்+உழைப்பு) | மொத்த விளைவு (மூட்டைகள்) | இறுதிநிலை விளைவு (மூட்டைகள்) |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 50 | 30 |
| 3 | 90 | 40 |
| 4 | 130 | 40 |
| 5 | 160 | 30 |
| 6 | 180 | 20 |
| 7 | 190 | 10 |

மேற்காணும் பட்டியலில் மூன்றாவது இடுமானம்வரை மொத்த உற்பத்தியும், இறுதிநிலை உற்பத்தியும் அதிகரிக்கின்றன. மூன்றாவது, நான்காவது இடுமானங்களில் இறுதிநிலை உற்பத்தியில் மாற்றம் இல்லை என்றாலும் மொத்த உற்பத்தி கூடுகிறது. ஐந்தாவது இடுமானத்திலிருந்து மொத்த விளைவு கூடினாலும், இறுதி

நிலை விளைவு குறையத் தொடங்குகிறது. இப் பட்டியலின் அடிப் படையில் தீட்டப்பட்ட வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




படம் 16

வரைபடத்தின் X அச்சில் மூலதனமும் உழைப்பும் கலந்த இடுமானங்களும், Y அச்சில் இறுதிநிலை விளைவும் குறிக்கப்பட் டுள்ளன. KLMN வளைகோடு இறுதிநிலை விளைவை உணர்த்து கிறது. இவ் வளைகோட்டின் KL பகுதி இறுதிநிலை விளைவு அதி கரிப்பதையும், LM பகுதி இறுதிநிலை விளைவு மாறுமல் இருப்பதை யும், MN பகுதி இறுதிநிலை விளைவு குறைவதையும் குறிக்கின்றன.

பொதுவாக, நிலத்தில் குறைந்துசெல் விளைவு விதி விரைவில் செயல்படத் தொடங்குகிறது. இவ் விதிக்கு விதிவிலக்கான பிற தொழில்கள் எதுவும் இல்லை. உற்பத்தி குறைந்து செல்லும்போது உற்பத்திச் செலவு வளர்ந்து செல்கின்றது.

**வேளாண்மையில் செயல்படுவதற்கான காரணங்கள்**

**(1) இயற்கைக் காரணிகளின் செல்வாக்கு :** பெரும் பாலும் வேளாண்மைச் சாகுபடி இயற்கைக் காரணிகளே நம் பியே செய்யப்படுகிறது. புவி அதிர்ச்சி, மழையின்மை, மிகை யான மழை, வெள்ளம், புயல்காற்று, பாதகமான தட்பவெப்ப நிலை போன்றவற்றால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப் படும். இதையே மார்ஷல், 'இயற்கை பெரும் பங்கு வகிக்கும் வேளாண்மையில் குறைந்துசெல் விளைவு செல்வாக்கைக் கொண் டுள்ளது; மனிதன் பெரும் பங்கு வகிக்கும் தொழிலில் வளர்ந்து செல் விளைவு செல்வாக்கைப் பெற்றுள்ளது' என்று குறிப்பிடு கிறார்.

**(2) நில அளவு :** சாகுபடி நிலப்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருக்கிறது. எனவே, செறிந்த சாகுபடி முறை பின் பற்றப்படுகிறது. பரந்த சாகுபடி முறையைக் கைக்கொள்வதற் கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. நவீன இயந்திரங் களைப் பயன்படுத்திப் பேரளவில் உற்பத்தியைச் செய்வதற்கான வாய்ப்பும் குறைவாகவே இருக்கிறது.

**(3) சிறிய அளவில் உற்பத்தி :** வேளாண்மை உற்பத்தி சிறிய அளவில் பல விவசாயிகளால் செய்யப்படும்போது பேரள வுச் சிக்கனங்களைப் பெறமுடிவதில்லை. இயந்திர உற்பத்தி முறை, வேலைப் பகுப்புமுறை ஆகியவையும் வேளாண்மையில் சிறப் பாகக் கைக்கொள்ளப்படுவதில்லை. மேலும், திறமையான நிர் வாகம், மேற்பார்வை, கண்காணிப்பு போன்றவை இல்லாவிட் டாலும் வேளாண்மையில் குறைந்துசெல் விளைவு எளிதில் விரை வாகச் செயல்படத் தொடங்கும்.

**(4) நிலத்திற்குப் பதிலி இல்லை :** நிலத்திற்கு மாற்றாக எதையும் பயன்படுத்த முடியாது. நிலத்தைப் பயன்படுத்திக் கொண்டே இருக்கும்போது, நிலத்தின் உற்பத்தித் திறன் குறையத் தொடங்கி விளைவு குறைகிறது. சுரங்கங்கள், காடுகள், மீன் பிடிக்கும் தொழில் ஆகியவற்றிலும் இவ் விதி எளிதில் செயல்படும்.

**(5) வேளாண்மை ஒரு பருவகாலத் தொழில் (Seasonal Industry) :** தொழில்துறையைப் போலன்றி வேளாண்மை உற்பத்தி தொடர்ச்சியாக ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. மேலும், நிலவளம், இயந்திரத்தின் திறனைப் போலன்றி விரைவில் குறையும் தன்மையுடையது.

**எடுகோள்கள் :** குறைந்துசெல் விளைவு விதி கீழ்வரும் எடு கோள்களுக்கு உட்பட்டதாகும்.

*(1)* விஞ்ஞானச் சாகுபடி முறையைப் பின்பற்றும்போது குறைந்துசெல் விளைவு விதி செயல்படாது. உதாரணமாக, இந்திய வேளாண்மையில் குறைந்துசெல் விளைவு தோன்றுமளவுக்கு ஓர் ஏக்கருக்கான உற்பத்தி உயர்த்தப்பட்டிருக்கவில்லை.

*(2)* புதிய நிலங்களில் சாகுபடி செய்யும்போது உற்பத்தி அதிகரிக்கும். நிலத்தின் செழுமை குறைந்த பின்புதான் இவ் விதி செயல்படத் தொடங்கும்.

*(3)* சாகுபடி முறையில் மாற்றம் இல்லாவிட்டால், இவ் விதி செயல்படுமென மார்ஷல் கூறுகிறார். ஆனால், தேவைக் கேற்பச் சாகுபடி முறையில் மாற்றங்கள் தோன்றி வருகின்றன. பண்டைக் காலத்தில் நம் வேளாண்மையில் இரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும், டிராக்டர்களும் பயன்படுத்தப்பட வில்லை. இன்று, இவையன்றி எவரும் சாகுபடிப் பணியை மேற் கொள்வதில்லை.

*(4)* சாகுபடி நிலத்தின் அளவை மாற்றுமல், பிற காரணி களின் அளவைப் பெருக்கிக்கொண்டே செல்லும்போதுதான், இவ் விதி செயல்படுகிறது.

*(5)* ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில், முதலில் குறைந்த வளவு மூலதனத்தையும் உழைப்பையும் முதலீடாக்கிப் பிறகு அவற்றின் அளவைக் கூட்டினால் இறுதிநிலை விளைவு பெருகும்.

**முக்கியத்துவம் :** *1.* இவ் விதியின் செல்வாக்கு எல்லாத் தொழில்களிலும் இருக்கிறது. சில தொழில்களில் உற்பத்தியின் முதற்சில நிலைகளிலும், வேறுசில தொழில்களில் சற்றுக் காலம் தாழ்த்தியும் இவ் விதி செயல்படுகிறது. *2.* நிலம் மட்டுமன்றிக் கிடைப்பருமை கொண்ட எல்லாக் காரணிகளுக்கும் இவ் விதி பொருந்துவதாகும். *3.* நம் வாழ்வின் எல்லா நடவடிக்கை களிலும் இவ் விதி செயல்படுவதால்தான், எப் பணியைத் தொடர்ந்து செய்தாலும் உற்பத்தித் திறன் குறைகிறது. விக்ஸ்டீட் (Wicksteed) இதனை 'வாழ்க்கை விதி' என்கிறார். *4.* பல பொருளாதார விதிகளுக்கு அடிப்படையாக இவ் விதி அமைகிறது. மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு, ரிக்கார் டோவின் வாரக்கோட்பாடு, இறுதிநிலை ஆக்கத்திறன் கோட் பாடு ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

5. உற்பத்திக் காரணிகளை எந்தெந்த விகிதங்களில் இணைப்பது இலாபகரமானது என்பதனையும் இவ் விதி விளக்குகிறது.

### (ii) வளர்ந்துசெல் விளைவு விதி (Law of Increasing Returns)

வேளாண்மையைக் காட்டிலும் தொழில்துறையின் வளர்ச்சி எளிதில் வளர்ந்துசெல் விளைவைத் தோற்றுவிக்கிறது. பெரிய தொழில்கள் முன்னேற்றம் அடையும்போது, ஆக்கச் செலவை விட உற்பத்தி மிகுதியாக உள்ளது. இதுவே, 'வளர்ந்துசெல் விளைவு' அல்லது 'குறைந்துசெல் செலவு' எனப்படுகிறது.

உயர்த்தப்படும் மூலதனமும் உழைப்பும் கலந்த இடுமானங்கள் உற்பத்தியை வளர்வீதத்தில் அதிகரிக்கச் செய்கின்றன. ஓர் இயந்திரத் தொழில் வளரும்போது, மற்றவை மாறுதிருந்தால், உயர்த்தப்படும் ஒவ்வோர் அலகு உழைப்பும் மூலதனமும் உற்பத்தியை வளர்வீதத்தில் அதிகரிக்கும். பேரளவு உற்பத்தியில் அகச் சிக்கனங்களும் (internal economies), புறச் சிக்கனங்களும் (external economies) பெறப்படுகின்றமை இதற்குக் காரணமாகிறது.

வளர்ந்துசெல் விளைவு விதியை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்கலாம். ஒரு தொழிற்கூடத்தில் உற்பத்தியைப் பெருக்க மூலதனமும் உழைப்பும் அதிகமாக்கப்படுகின்றன என வைத்துக் கொள்ளலாம். இருக்கும் இயந்திரங்களைக் கொண்டே ஓரளவு வரை உற்பத்தியைப் பெருக்க இயலும். ஸ்டீல் பீரோக்களைச் செய்யும் சிறிய தொழில்நிறுவனம் 10 பீரோக்களை மட்டுமே ஆக்கும்போது ஒரு பீரோவின் சராசரிச் செலவு ரூ. 1,000 ஆக அமைகிறது. உற்பத்திப் பொருளின் அலகுகள் கூட்டப்படும் போது சராசரிச் செலவு குறைகிறது. அதைப் பின்வரும் அட்டவணை விளக்கும்.

| மொத்த உற்பத்திச் செலவு (ரூபாயில்) | உற்பத்திப் பொருளின் எண்ணிக்கை | சராசரிச் செலவு (ரூபாயில்) |
|---|---|---|
| 10,000 | 10 | 1,000 |
| 16,000 | 20 | 800 |
| 18,000 | 30 | 600 |
| 24,000 | 60 | 400 |
| 30,000 | 100 | 300 |

வேளாண்மையைத் தவிர்த்த தொழில்களில் வளர்ந்துசெல் விளைவு செயல்படுகின்றமைக்குப் பின்வருவனவற்றைக் காரணங் களாகக் கொள்ளலாம்:

**1. இயற்கைக் காரணிகளின் குறைந்த செல்வாக்கு :** தொழிற்துறையில் அதிக மழை, மழைக் குறைவு, தட்ப-வெப்ப நிலை மாறுபாடு ஆகியவற்றால் உற்பத்திப் பணிகள் பாதிக்கப்படுவ தில்லை. ஆண்டு முழுவதும் ஆக்கம் தொடர்ச்சியாகச் செய்யப் படுகிறது. பெரிய தொழில்களில் கணக்கிட்டு உற்பத்தியைப் பெருக்கலாம்.

**2. மாறுத இயந்திரச் செலவு :** பெரிய தொழில்களில் இருக்கும் இயந்திரங்களைக் குறைவாகப் பயன்படுத்தினாலும் அதிக மாகப் பயன்படுத்தினாலும், அவற்றிற்கான செலவு நிலையானதே. இதனாலும் பேரளவில் உற்பத்தி மேற்கொள்ளப்படும்போது, சரா சரி உற்பத்திச் செலவு குறைகிறது.

**3. வசதிகளின் பெருக்கம் :** தொழில்துறையில் உற்பத்திக் கான காரணிகளின் அளவை, ஓரளவு வரை படிப்படியாக அதி கரித்துக்கொண்டே செல்லலாம். மூலதனப் பற்றாக்குறை, மூலப் பொருள் போதா நிலை, மின்சாரத் தட்டுப்பாடு போன்றவை தொழில்துறையின் உற்பத்தியை மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பாதிக்கக்கூடும்.

**4. தொழில்நுட்பம் :** விஞ்ஞான வளர்ச்சியால் அதிக நன்மையைப் பெற்றுள்ளது தொழில்துறையே. தொழில்களின் இயந்திரத் தொழில்நுட்பம் வியத்தகு மட்டத்தை எட்டியுள்ளது. மனித உழைப்பின் தேவையின்றி உற்பத்தியின் எல்லா நிலைகளை யும் தானியங்கிக் கருவிகளும் இயந்திரங்களுமே செய்கின்றன.

**5. அகச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் :** உற்பத்தி பேரளவில் அமையும்போது வேலைப் பகுப்பு முறையைக் கைக் கொள்வது எளிதாகிறது. மூலப் பொருள்களைக் குறைந்த விலையில் வாங்குதல், விற்பனை செய்வதற்கான செலவைக் குறைத்தல், மூலதனத்தை அதிகவளவில் திரட்டுதல் போன்றவற்றைப் பெரிய தொழில்களே எளிதில் செய்கின்றன.

### (iii) மாரு வீளைவு விதி (Law of Constant Return)

உற்பத்திக் காரணிகளில் ஒன்றை நிலையான அளவில் வைத்துக்கொண்டு, மற்றவற்றின் அளவை அதிகரிக்கும்போது

மொத்த உற்பத்தி அதிகரித்தாலும் இறுதிநிலை விளைவு மாறுமல் இருப்பதையே மாறு விளைவு விதி குறிப்பிடுகிறது. இதை மாறுச் செலவு விதி என்றும் குறிப்பிடலாம். 'ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் ஆக்கக் காரணிகளின் அளவை அதிகரிக்கும்போது, உற்பத்தியின் அளவும் அதே விகிதத்தில் அமையும்' என்று ஸ்டிக்லர் (Stigler) மாறு விளைவு விதியை விளக்குகிறார். இயந்திரத் தொழில்களிலும், விளைபறி தொழில்களிலும் (extractive industries) இவ் விதி செயல்படலாம்.

கரும்பைத் தானே விளைவித்துக்கொள்ளும் சர்க்கரை ஆலைக்கும், உரோமத்திற்காக ஆடுகளை வளர்க்கும் கம்பளி உற்பத்தித் தொழிலுக்கும், கச்சாச் சணலை உற்பத்தி செய்துகொள்ளும் சணல் தொழிலுக்கும் இவ் விதி பொருந்தக்கூடியது. கீழ்க்காணும் அட்டவணையின் உதவியாலும் மாறு விளைவு விதியை விளக்கலாம்.

| மொத்த உற்பத்திச் செலவு (ரூபாயில்) | உற்பத்திப் பொருளின் எண்ணிக்கை | சராசரிச் செலவு (ரூபாயில்) |
|---|---|---|
| 10,000 | 10 | 1,000 |
| 20,000 | 20 | 1,000 |
| 25,000 | 25 | 1,000 |
| 40,000 | 40 | 1,000 |
| 70,000 | 70 | 1,000 |
| 90,000 | 90 | 1,000 |

ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் செலவை அதிகரிக்கும்போது, அதே விகிதத்தில் உற்பத்தியின் அளவும் அதிகரிப்பதை அட்டவணையில் காண்கிறோம். மாறு விளைவு விதி செயல்படுவதற்கான காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) ஆக்கக் காரணிகள் யாவும் ஒரே மாதிரியாக (homogeneous) இருந்தால், அவற்றை அதிகரிக்கும்போது உற்பத்தியும் அதுபோன்றே அமையும்;


(2) சரி விகிதத்தில் ஆக்கக் காரணிகள் சேர்க்கப்படும் போது மாறு விளைவு தோன்றுகிறது. அதற்குமேல் அதிக முதலீட்டைச் செய்வது இழப்பையே தரும்;

(3) பற்றுக்குறைக் காரணியை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் தோன்றும் அதிகச் செலவு, பிற காரணிகளி

லிருந்து பெறப்படும் சிக்கனங்களால் ஈடுசெய்யப்படுவதால் சராசரிச் செலவு மாறுமல் இருக்கிறது.

## III. விளைவு விதிகளின் பொதுவான விளக்கம்

விளைவு விதிகள் நிலத்தில் மட்டுமல்லாமல் பிற ஆக்கக் காரணிகளிலும் தொழில்களிலும் மனித நடவடிக்கைகளில் செயல்படுகின்றன என்பது தற்காலப் பொருளியலாளர்களின் கூற்று. ஆக்கக் காரணிகளில் ஒன்று அளவில் மாறுதிருக்கும் போது, பிற காரணிகளின் அளவு கூட்டப்படும்போது மொத்த




படம் 17

ஆக்கம் குறிப்பிட்ட நிலை அதிகரித்துப் பிறகு குறையும். இது போன்றே சராசரி விளைவும், இறுதிநிலை விளைவும் குறிப்பிட்ட அளவுகள் வரை அதிகரித்துப் பிறகு குறைகின்றன. இதை மேற்காணும் வரைபடம் விளக்கும்.

வரைபடத்தின் X அச்சில் உழைப்பும் மூலதனமும் கலந்த இடுமானங்களும், Y அச்சில் உற்பத்தியளவும் கணக்கிடப்படுகின்றன. TPC மொத்த விளைவு வளைகோட்டையும், APC சராசரி விளைவு வளைகோட்டையும், MPC இறுதிநிலை விளைவு வளைகோட்டையும் குறிப்பிடுகின்றன. OM அளவு வரையான இடுமானங்கள் இடப்படும் முதல் நிலையில் மொத்த விளைவும், சராசரி விளைவும் உயர்ந்து செல்கின்றன. ஆனால், இறுதிநிலை விளைவு முதலில் உயர்ந்து, முதல் நிலை முடிவதற்குள்ளாகவே குறையத் தொடங்குகிறது. இரண்டாவது நிலையின் தொடக்கத்தில், T என்ற புள்ளியிலிருந்து சராசரி விளைவும் குறைகிறது. ON என்ற அளவுக்கு அதிகமாக இடுமானங்களை முதலீடாக்கும்போது, மொத்த விளைவும் S என்ற புள்ளியிலிருந்து குறையத் தலைப்படுகிறது. எனவே, மூன்றாவது நிலையில் ON என்ற அளவுக்கு அதிகமாக முதலீட்டைச் செய்வது நட்டத்தையே தரும். இந்த நிலையில் மொத்த விளைவு, சராசரி விளைவு, இறுதிநிலை விளைவு ஆகிய மூன்றுமே குறைகின்றன.

தொழில் அமைப்புகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு குறைந்துசெல் விளைவு விதி செயல்படுவதைத் தவிர்க்க இயலாது.


## IV. விளைவு விதிகளும் செலவு விதிகளும்

குறைந்துசெல் விளைவை வளர்ந்துசெல் செலவு எனவும், மாறு விளைவை மாறுச் செலவு எனவும், வளர்ந்துசெல் விளைவை குறைந்துசெல் செலவு எனவும் கூறலாம். விளைவு வளர்ந்துசெல் நிலையில் இருக்கும்போது, அதிக அளவுப் பொருள்களைக் குறைவான செலவில் உற்பத்தி செய்யலாம் என்பதைக் குறைந்துசெல் செலவு விதி குறிப்பிடுகிறது. மாறுத விளைவு நிலையில் சராசரி உற்பத்திச் செலவும் மாறுமல் இருப்பதை மாறுச் செலவு விதி விளக்குகிறது. உற்பத்தியில் குறைந்துசெல் விளைவு தோன்றும் போது, சராசரிச் செலவு கூடுமென்பதை வளர்ந்துசெல் செலவு விதி அறிவுறுத்துகிறது.

விளைவு நிலைகளையும், செலவு நிலைகளையும் பின்வரும் வரைபடத்தின்மூலம் அறியலாம்.

X அச்சில் முதலீட்டு இடுமானங்களும், Y அச்சில் விளைவு அல்லது செலவு அளவுகளும் அளக்கப்படுகின்றன. KLMN வளை

கோடு விளைவு விதிகளையும், ABCD வளைகோடு செலவு விதிகளை யும் குறிப்பிடுகின்றன. KL வளர்ந்துசெல் விளைவையும், AB




படம் 18

குறைந்துசெல் செலவையும், LM மாறு விளைவையும், BC மாறுச் செலவையும், MN குறைந்துசெல் விளைவையும், CD வளர்ந்து செல் செலவையும் காட்டுகின்றன.

# 14. உழைப்பு
## (Labour)

### I. விளக்கம்

சாதாரணப் பேச்சு வழக்கில் ஆக்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் விவசாயி, தொழிலாளி முதலியவர்களின் உடலுழைப்பையே உழைப்பு என நாம் கருதுகிறோம். ஆனால், பொருளியலில் உழைப்பென்பது வருமானத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் எல்லாவகை உடலுழைப்பையும், மூளை உழைப்பையும் குறிப்பிடுவதாகும். ஒருவர் மனமகிழ்ச்சிக்காகக் கிரிக்கெட் விளையாடுவதும், திரைப்படம் பார்ப்பதும், சர்க்கஸ் பார்க்கச் செல்வதும், பொருட்காட்சியைக் கண்டுகளிப்பதும் உழைப்பாகாது. ஆனால், கிரிக்கெட் அல்லது டென்னிஸ் விளையாடுவதைத் தொழிலாகக் கொண்ட ஒருவர், அவ் விளையாட்டை வருமானம் பெறுவதற்காக ஆடுவது உழைப்பாகிறது. இதுபோன்றே, ஒரு தாய் தன் மகனுக்குச் செய்யும் உதவிப் பணிகளோ அல்லது ஒரு மனைவி தன் கணவனுக்குச் செய்யும் அன்புப் பணிவிடைகளோ உழைப்பாகக் கருதப்படமாட்டாது. எனினும், செவிலியர் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வது உழைப்பாகும்.

பலன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சியே உழைப்பு. செல்வத்தைப் படைத்து, வருமானத்தைப் பெற்று, மனநிறைவான வாழ்க்கையை நடத்தவே மனிதன் உழைக்கிறான். பொருளியலில், தவறான வழியில் செய்யும் உழைப்பு 'ஆக்கமற்ற உழைப்பு' (unproductive labour) எனப்படுகிறது. இதற்கு உதாரணமாக, திருடர், வழிப்பறி செய்பவர், கள்ளச் சந்தை வியாபாரி, சூதாடுபவர் ஆகியோருடைய செயல்பாடுகளைக் குறிப்பிடலாம்.

உழைப்பைத் 'திறமையுள்ள உழைப்பு' (skilled labour), 'திறமையற்ற உழைப்பு' (unskilled labour), 'ஆக்க உழைப்பு' (productive labour), 'ஆக்கமற்ற உழைப்பு' (unproductive labour), 'உடல் உழைப்பு' (physical labour), 'மன உழைப்பு' (mental labour) எனப் பாகுபாடு செய்கிறோம்.

**உழைப்பின் சிறப்பியல்புகள்**

நிலத்தைப் போன்றே உழைப்பும் சில தனி இயல்புகளைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

**1. பிரிக்க இயலாத தன்மை :** உழைப்பாளரையும் உழைப்பையும் பிரிக்க இயலாது. ஆனால், நிலம், மூலதனம் ஆகியவற்றை உடைமையாளரிடம் இருந்து பிரித்துவிடலாம். உழைப்பே உழைப்பாளருக்கு வருமானத்தை ஈட்ட உதவும் சொத்தாக அமைகிறது.

**2. நேரிடையாகத் தருதல் :** உழைப்பவரால் உழைப்பு நேரடியாகத் தரப்படவேண்டும். உழைப்பு அதனைத் தரும் மனிதனிடத்தில்தான் இருக்கிறது. அதை அவனிடமிருந்து பிரித்துப் பயன்படுத்த இயலாமையால்தான், உழைப்பு நேரடியாகத் தரப்பட வேண்டுமென்ற அவசிய நிலையைப் பெற்றுள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒரு தினக்கூலியாள் வேலைக்குச் செல்ல முடிவதில்லை. மேலும், அப்போது அவருடைய உழைக்கும் திறனும் குறைவாக இருக்கும்.

**3. அழியும் தன்மை :** உழைப்பாளி ஒருவர் ஒரு நாள் உழைக்காமல் இருந்துவிட்டால், அந்த நாளைத் திரும்பவும் பெற முடியாது. தவிர, உழைப்பைச் சேமித்து வைத்துக்கொண்டு தேவையானபோது பயன்படுத்திக்கொள்வதும் இயலாததாகும். இதன் காரணமாகவே உழைப்பாளர்கள் பலரும் குறைந்த கூலியைப் பெற்று அதிக உழைப்பைத் தரவேண்டியுள்ளது. பெரிய தொழில்களில் தொழிலாளர் சங்கங்கள் இக் குறையை ஓரளவு தீர்க்கின்றன.

**4. பேரம் பேசும் ஆற்றல் குறைவு :** உழைப்பின் தனி இயல்புகள் பலவும், உழைப்பாளர்கள் கூலி உயர்வைப் பெறுவதற்குத் தடையாக உள்ளன. தொழில் நிறுவனங்களின் கதவடைப்புகள், தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆகியவற்றால் உண்மையிலேயே இழப்பை அடைபவர்கள் உழைப்பாளர்களே. தினக் கூலியாக இரண்டு ரூபாய் மட்டுமே கொடுத்து உழைப்பாளர்களைச்

சுரண்டும் சிறுதொழில் நிறுவன முதலாளிகள் பலரும் இன்று இந்தியாவின் பல நகரங்களில் இருக்கிறார்கள்.

**5. ஆற்றலின் சார்பு :** உழைக்கவேண்டுமென்ற ஆற்றலும் விருப்பமும் இருப்பதாலேதான் உண்மையான உழைப்புத் தரப் படுகிறது. இயந்திரம் தானாக இயங்கக்கூடியது. இயந்திரங் களிடம் இருந்து உழைப்பைப் பெறுவதுபோல மனிதர்களிடம் இருந்து உழைப்பைப் பெற முடியாது.

**6. உழைப்பின் அளிப்பிற்கும் ஊதிய அளவிற்கும் தலைகீழ்த் தொடர்பு :** ஊதியம் குறையும்போது பலர் தங்கள் உழைப்பை அதிகமாக அளிப்பது அவசியமாகிறது. வானை எட்டி நிற்கும் இன்றைய விலைவாசிகளால், ஒரு குடும்பத்திலுள்ள அனை வரும் உழைத்துப் பொருளீட்டுவது இன்றியமையாததாகிறது. ஊதியம் உயரும்போது உழைப்பின் அளிப்புக் குறையும்; ஊதியம் குறையும்போது உழைப்பின் அளிப்பு அதிகரிக்கும்.

**7. திறன் வேறுபாடு :** உழைப்பின் தரங்கள் ஒரே மாதிரி யாக இருப்பதில்லை. உயர்தர உழைப்பு கல்வி, பயிற்சி, திறமை, அறிவாற்றல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது.

**8. உழைப்பின் அளிப்பு மெதுவாகக் கூடுதல் :** மூலதனத் தின் அளவைத் தேவைக்கேற்பக் குறைக்கவோ அல்லது கூட்டவோ செய்யலாம். ஆனால், உழைப்பின் அளிப்பை விரை வாகவும் உடனடியாகவும் பெருக்க இயலாது. பல ஆண்டுக் கல்விக்குப் பிறகே ஆசிரியர்களும் பொறியாளர்களும் மருத்துவர் களும் வழக்குரைஞர்களும் உருவாகின்றனர்.

**9. குறைவான பெயர்ச்சித் தன்மை :** ஆக்கக் காரணி களில் மூலதனமே எளிதில் பெயரும் தன்மை கொண்டது. உழைப்பாளர்கள் ஒரு நாட்டுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையே யும் அதிக அளவுக்கு இடப்பெயர்ச்சி கொள்ளவில்லை. மொழி, மதம், இனம், கலாசாரம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றி லுள்ள வேறுபாடுகள், அரசின் குடியிறக்கக் கட்டுப்பாடுகள் போன்றவையே இதற்குக் காரணமாகும்.

**10. உழைப்பின் உற்பத்திச் செலவைக் கணக்கிட முடி யாமை :** உழைப்பின் உற்பத்திச் செலவை வரையறை செய்வ தில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பிறந்தது முதல் உழைக்கும் தகுதி பெறும் நிலைவரை உழைப்பாளர் ஒருவரின் வளர்ச்சிக்குச்

செலவான தொகையே உழைப்பின் உற்பத்திச் செலவு என்று சிலர் குறிப்பிடுகின்றனர். மற்றச் சிலர் உழைப்பவரைச் சுமாரான வாழ்க்கைத் தரத்தில் வாழ வகை செய்வதற்கான செலவே உழைப்பின் உற்பத்திச் செலவு என்கின்றனர். இவற்றையெல் லாம் ஆய்ந்து உழைப்பின் உற்பத்திச் செலவைக் கணக்கிடுவது இயலாதது.

**உழைப்பின் திறன்** (Efficiency of Labour)

ஒரு நாட்டில் மக்கள்தொகையைப் பொறுத்து உழைப்பின் அளிப்பு அமையுமெனக் கூறமுடியாது. ரஷ்ய, அமெரிக்க, ஜப்பானிய, சீன உழைப்பாளர்கள் இந்திய உழைப்பாளர்களை விடத் திறன் மிக்கவர்கள் என்று சொல்லப்படுகிறது. உழைப்பின் திறனுக்கும் உழைப்பின் அளிப்பளவிற்கும் தொடர்பு அமைந் துள்ளது. நாட்டின் மொத்த ஆக்கம் உழைப்பாளர்களின் உழைக்கும் ஆற்றலுக்கேற்ப அமையும். பின்வரும் காரணிகள் உழைப்பின் திறனை நிர்ணயிக்கின்றன.

**1. இனப் பண்புகளும் பாரம்பரியமும் :** குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட சில பொருள்கள் திறமையாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஸ்விட்சர்லாந்து நாட்டில் கடிகாரங்களும், ஜப்பானில் வெவ்வேறு வகை நுகர்பொருள்களும், ரஷ்யாவில் பொறியியற் பொருள்களும் ஏராளமாக உற்பத்தியாகின்றன. அந்தந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அந்தந்தப் பொருள்களைத் திறமையோடு ஆக்குகின்றனர். இதுபோன்றே பஞ்சாபியர்கள் ஹாக்கி விளையாட்டிலும், பிற துறைகளிலும் சிறந்து விளங்கு கின்றனர்.

**2. சீதோஷ்ண நிலை :** குளிர் நாடுகளில் களைப்பின்றி நீண்ட நேரம் உழைக்கலாம். வெப்ப நாடுகளில் உழைப்பாளர்கள் குறைந்த நேரத்திலேயே களைப்படைந்து விடுகின்றனர்.

**3. உழைப்பாளர்களின் இயல்புகளில் வேறுபாடு :** உழைக் கும் ஆற்றல், உழைக்கும் விருப்பம் ஆகியவை எல்லோரிடத்தி லும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அறிவுக் கூர்மையிலும் வேறுபாடுகள் உள்ளன. கடமை, ஒழுக்கம், தன்னடக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கொண்ட உழைப்பாளர்களின் உழைக் கும் திறன் உயர்வாக இருக்கும்.

**4. கல்வி - பயிற்சி :** பொதுக்கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும், பயிற்சியும் உழைப்பின் திறனைப் பெருக்கும். எழுத்

தறிவு பெற்றவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறமை பெற்றவர்களாவர். உற்பத்தியை உயர்த்த வேண்டுமென்ற ஊக்கத்தையும் அவர்கள் கொண்டிருப்பர்.

**5. தொழில்நுட்ப அறிவு** : இயந்திரங்களையும் கருவிகளையும் திறமையாகக் கையாள்வதற்கான தொழில்நுட்ப அறிவும் பயிற்சியும் பெற்றிருக்கும் உழைப்பாளர்களின் திறன் உயர்வாக அமையும்.

**6. வாழ்க்கைத் தரம்** : நல்ல உணவு, உடை, வீட்டுவசதி, சிறப்பான பொழுதுபோக்கு, ஓய்வு ஆகியவற்றுல் உழைப்பாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு, அவர்களுடைய உழைக்கும் திறனும் கூடும். மேலைநாட்டு உழைப்பாளர்கள் எல்லா வாழ்க்கை வசதிகளையும் பெற்றிருப்பதால்தான், அவர்களின் உழைக்கும் ஆற்றல் உயர்வாக உள்ளது.

**7. உயர்ந்த ஊதியம்** : குறைவான கூலியில் முழுமையான திறன் உழைப்பாளரிடமிருந்து வெளிப்படாது. பசியை ஆற்றிக்கொள்ளக்கூடப் போதுமானதாகக் கூலியின் அளவு இல்லாவிட்டால் உழைப்பாளரின் உழைக்கும் திறன் பெரிதும் பாதிக்கப்படும்.

**8. பணியாற்றும் கால அளவு** : மனிதன் இயந்திரத்தைப் போன்று செயல்பட முடியாது. ஓய்வின்றி நீண்ட நேரம் தொடர்ந்து பணியாற்றும் ஒருவருடைய உழைக்கும் திறன் குறைகிறது.

**9. பணியாற்றும் இடத்தின் சூழ்நிலை** : ஆரோக்கியமான, தூய்மையான, காற்றோட்டமுள்ள, மனதுக்கினிய சூழ்நிலைகளில் உழைப்பாளர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டிப் பணி புரிவர். தற்பொழுது தொழிற்சாலைச் சட்டங்கள், இவ்வசதிகள் இன்றித் தொழிற்சாலைகள் அமைப்பதைத் தடை செய்கின்றன.

**10. முன்னேறுவதற்கான வாய்ப்பு** : ஊதிய உயர்வையோ வேலை உயர்வையோ பெற வாய்ப்புகளைக் கொண்டிருப்பவர்கள் ஊக்கத்துடன் உழைக்கின்றனர். முன்னேறுவதற்கு வாய்ப்பில்லாதவர்கள் ஊக்கமிழந்து பணியாற்றுகின்றனர்.

**11. உற்பத்திச் சாதனங்கள்** : எவ்வகை உற்பத்திச் சாதனங்கள் உழைப்பாளரால் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்

கேற்பவும் உழைப்பின் திறன் அமையும். பழையகாலச் சிறிய கருவிகளுக்குப் பதிலாக நவீன இயந்திரங்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும்போது உழைப்பின் திறன் அதிகரிக்கும்.

**12. அறவழிப் பண்புகள்** : அறநெறியில் நம்பிக்கைக் கொண்டு நேர்வழியில் நடப்பவர்கள் ஒழுங்கோடும், கட்டுப் பாட்டோடும், கடமை உணர்வோடும், நேர்மையோடும், திறமை-யோடும் பணியாற்றி உற்பத்தியைப் பெருக்குவர்.

**13. வேலையளிப்பவர்களின் தன்மை** : உழைப்பாளர்களின் குறைகளை நீக்கி, அவர்களுக்குப் பல வசதிகளையும் செய்துதருவது மேலாளர், நிர்வாகி, முதலாளி ஆகியோரின் கடமையாகும். இக் கடமை நிறைவேற்றப்பட்டால் உழைப்பின் திறன்கூடும்.

**14. சமுதாய - அரசியல் அமைப்பு நிலை** : உழைப்பவர்கள் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தைப் பெற்றிருக்கவேண்டும். அரசு தொழிலாளர்களின் நலனைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் அவசியம்.

**15. உழைப்பாளர் கூட்டமைப்புகள்** : உழைப்பாளர்கள் தங்களிடையே கூட்டுறவை வளர்த்து வாழ்க்கை வசதிகள் பல வற்றைப் பெருக்கிக் கொள்ளலாம். கூட்டுறவின்கீழ் அவர்கள் வீட்டு வசதி, கடன் வசதி, பண்டங்களை விற்றல்-வாங்கல் வசதி போன்றவற்றைப் பெறலாம்.

**16. பொதுவான மற்ற சூழ்நிலைகள்** : கல்வி வசதி, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, இருப்பிட வசதி முதலியவை கிடைக்கப்பெற்ற உழைப்பாளர்களின் உழைக்கும் திறன் உயர் வானதாக இருக்கும்.

இவ்வாறு பல்வேறு காரணிகள் உழைப்பின் திறனை நிர்ண யிப்பவைகளாக உள்ளன.

## இந்திய உழைப்பாளர் திறன் (Efficiency of Indian Labour)

ஆங்கிலேய, ரஷ்ய, அமெரிக்க, ஜப்பானிய, ஜெர்மானிய உழைப்பாளர்களைவிட இந்திய உழைப்பாளர்கள் குறைந்த திறனு டையவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அயல்நாடு களுக்குச் சென்று அங்கேயே வசிப்பவர்களின் உழைக்கும் ஆற்றல் உயர்வாகவே உள்ளது. நான்கு இந்திய உழைப்பாளர்களின் திறனுக்கு ஓர் ஆங்கிலேய உழைப்பாளியின் திறன் சமமானது

எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய உழைப்பாளரின் திறன் குறைவாக உள்ளமைக்குப் பல காரணங்களைச் சொல்லலாம்.

(1) மிகக் குறைந்த கூலியைப் பெறும் இந்திய உழைப் பாளர்கள் அவசியத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்துகொள்ளமுடிவதில்லை.

(2) நாட்டின் உயர்வெப்பம் உழைப்பாளரை எளிதில் களைப்படையச் செய்கிறது.

(3) கல்வியறிவு, தொழில்நுட்ப அறிவு, பயிற்சி ஆகிய வற்றை இந்திய உழைப்பாளர்களில் பலர் பெற்றிருப்ப தில்லை.

(4) குறைந்த வருமானமும், தாழ்வான வாழ்க்கைத் தர மும் அவர்களுடைய நலனைப் பாதிக்கின்றன.

(5) இந்தியாவில் உழைக்கும் நேரம் அதிகமானது.

(6) திறமை மிக்க தொழில்முயல்வோர் (entrepreneur) நம் நாட்டில் குறைவாகவே இருக்கின்றனர்.

(7) பொருள்களின் உற்பத்தியில் இயந்திரங்கள் அதிக மாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

(8) தொழிற்கூடங்களில் உழைப்பாளரின் உற்பத்தித் திற னைக் கூட்டுவதற்கு ஏற்ற ஆரோக்கிய வசதிகள் இல்லை.

(9) இந்தியத் தொழில் முதலாளிகள் உழைப்பாளரின் நலனில் அக்கறை கொள்வதில்லை.

(10) நம் நாட்டு உழைப்பாளர்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பைப் பெற்றிருப்பதில்லை.

இவ்விதக் குறைபாடுகளைக் களைந்தால், இந்திய உழைப் பாளரின் உழைக்கும் திறன் உயர்வடையும்.

**உழைப்பின் தேவை** : பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கேற்ப உழைப்பின் தேவை அமைகிறது. உழைப்பின் தேவை இயற்கை வளங்களை உற்பத்திக்குப் பயன்படுத்தும் நிலை, வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், சுரங்கத் தொழி லின் மேம்பாடு, உற்பத்தி முறை, உற்பத்தியில் இயந்திரங்களை ஈடுபடுத்துகின்ற அளவு ஆகியவற்றிற்குத் தக்கவாறு இருக்கும்.

**உழைப்பின் அளிப்பு** : ஒரு நாட்டின் உழைப்பின் அளிப்புப் பின்வரும் காரணிகளைச் சார்ந்துள்ளது :

(1) நாட்டு மக்கள்தொகை;

(2) மக்கள்தொகையில் உழைக்கும் வயதில் இருப்பவர் களுடைய எண்ணிக்கை;

(3) வேலை நேரம்;

(4) உழைக்கும் ஆற்றல்;

(5) குடியேறிய மக்கள்தொகை.

உழைப்பின் அளிப்பை ஒட்டியே பொருளியலாளர்கள் பல மக்கள்தொகைக் கோட்பாடுகளைத் தந்திருக்கிறார்கள்.

## II. மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாடு (Malthusian Theory of Population)

1798ஆம் ஆண்டு தாமஸ் ராபர்ட் மால்தஸ் (Thomas Robert Malthus, 1766–1834) என்ற தொன்மைப் பொருளிய லறிஞர் 'மக்கள்தொகைத் தத்துவம்பற்றிய கட்டுரை' (Essay on the Principle of Population) என்னும் தன்னுடைய நூலில், கட்டுப்பாடில்லாத விரைவான மக்கள்தொகைப் பெருக்கம் பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவிக்குமெனக் குறிப்பிட் டார். மால்தஸ், அவருடைய தந்தைக்குப் பிறந்த பதினாறு குழந்தைகளில் கடைசியாகப் பிறந்தவர்.

தொழிற்புரட்சியின் காரணமாக இங்கிலாந்து நாட்டில் 1770ஆம் ஆண்டு முதல் விலையுயர்வு, உணவுப் பற்றாக்குறை, இட நெருக்கடி, வேலை வாய்ப்பின்மை ஆகியவற்றால் மக்கள் அல்லலுற்றனர். அப்போது இங்கிலாந்தின் மக்கள்தொகையும் பெருகியது. எனவே, மால்தஸ் மக்களின் அவதிகளுக்கு மக்கள் பெருக்கமே காரணம் என்ற முடிவுக்கு வந்தார். 1798-ல் வெளிவந்த அவரது நூல் பல கண்டனங்களுக்கும் பாராட்டுதல் களுக்கும் ஆளானது. மால்தஸ் இந் நூலைச் சில திருத்தங்களோடு தன் பெயரையும் குறிப்பிட்டு 1803-ல் இரண்டாவது முறையாக வெளியிட்டார்.

இங்கிலாந்தில் விலங்குகளின் இனப்பெருக்கம் கட்டுப்பாட் டோடும் கவனத்தோடும் கண்காணிக்கப்பட்டபோது மனித

இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படாமல் விடப்பட்டதை மால்தஸ் குறைகூறினார். மனித இனப்பெருக்கத்தால் ஏற்படும் இன்னல்களைத் தெரிந்துகொண்டு, 'தானியச் சேமிப்புக் களஞ்சியங்களில் கணக்கற்ற குட்டிகள் போடும் சுண்டெலிகளைப்போல நடந்துகொள்ளக் கூடாது' என அவர் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

உடல்நலம் வாய்ந்த ஒரு சமூகத்தின் மக்கள் பெருக்கம் 25 ஆண்டுகளில் இரு மடங்காகிறது. வால்ரஸ் (Walras) என்ற புள்ளியியல் நிபுணரின் கணக்குப்படி, 'நான்கே குழந்தைகளைப் பெறப்போகும் ஒரு திருமண நிகழ்ச்சி 1,213 ஆண்டுகளுக்குப் பிறகு 4,120 இலட்சம் மக்களைப் பெருக்கும் திறன் பெற்றது.' இப் புள்ளி விவரங்கள் உயிரியல் கோட்பாடுகளின் ஆதாரத்தில், புள்ளியியலின் உதவியோடு சேகரிக்கப்பட்டவையாகும்.

'இயற்கையில் மனித உணவின் உற்பத்தி மெதுவாகக் கூட்டெண் வீதத்தில் (arithmetical ratio) பெருகும்போது, கட்டுப்படுத்தப்படாத மக்கள்தொகை விரைவாக மடிப்பெண் வீதத்தில் (geometrical ratio) அதிகரிக்கிறது' என்பதையே மால்தஸின் விதி கூறுகிறது. அதாவது உணவு உற்பத்தி 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்ற கூட்டெண் வீதத்திலும், மக்கள்பெருக்கம் 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256 என்ற மடிப்பெண் வீதத்திலும் அமைகின்றன. இவ் வீதங்களின்படி கணக்கிட்டால், 200 ஆண்டுகளில் மக்கள்தொகைக்கும் உணவு உற்பத்திக்கும் உள்ள வீதம் 256 : 9 ஆகவும், 300 ஆண்டுகளில் 4069 : 13 ஆகவும் பெருகுமென அவர் குறிப்பிடுகிறார். வெவ்வேறு காரணங்களால் மக்கள்தொகையின் விரைவான பெருக்கத்திற்கேற்ப உணவுப் பொருள்களின் உற்பத்தி வேகம் அமைவதில்லை. 100 ஆண்டுகளில் மக்கள்தொகை 16 மடங்கு பெருகும்போது உணவு உற்பத்தி 5 மடங்கு மட்டுமே அதிகரிக்கும்.


இக் காரணங்களால், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியே உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்க வேண்டுமென மால்தஸ் அறிவுறுத்துகிறார். மக்கள்பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் போர், பஞ்சம், பட்டினிச்சாவு, வறுமை, பற்றாக்குறை, நோய், கொலை, கொள்ளை போன்ற 'இயல்புத் தடைகளால்' (positive checks) மக்கள் இறந்து மக்கள்தொகை சம நிலையை அடையுமென அவர் விளக்குகிறார். இச் சீர்கேடுகளைத் தவிர்க்க மனிதன் திருமணம் செய்யாதிருத்தல், திருமணத்தை

ஒத்தி வைத்தல், திருமணத்திற்குப் பிறகு புலனடக்கத்தைக் கடைப்பிடித்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற 'தவிர்ப்புத் தடைகளைப்' (preventive checks) பின்பற்றவேண்டும்.

மக்கள்பெருக்கம் மனிதனுல் தவிர்ப்புத் தடைகளால் கட்டுப் படுத்தப்படாவிடில், இயற்கை இயல்புத் தடைகளால் அதைக் கட்டுப்படுத்திவிடும். தவிர்க்கமுடியாத காரணங்களால், மனிதன் இனவிருத்தியைக் கட்டுப்படுத்தத் தவிர்ப்புத் தடைகளைக் கைக்கொள்ள வேண்டுமென மார்ஷல் கூறுகின்ருர்.

**மால்தஸின் சுழல்** (Malthusian cycle)

மக்கள்பெருக்கம் தவிர்ப்புத் தடைகளால் கட்டுப்படுத்தப் படாவிட்டால் 'சமநிலை மக்கள்தொகை' மடிப்பெண் விகித 'இனப்பெருக்கத்தால்' 'மிகையான மக்கள்தொகையாக' அதி கரிக்கும். பிறகு 'இயல்புத் தடைகளான' பஞ்சம், பட்டினி, போர், நோய் முதலியவற்றுல் மக்கள் பலரும் மடிந்து, மக்கள் தொகை மறுபடியும் சமநிலையை அடையும். இந் நிலைகள் தொடர்ச்சியாக நிகழுமென மால்தஸின் கோட்பாடு குறிப்பிடு கிறது. இதையே மால்தஸின் சுழல் எனக் கூறுகிறேம்.




படம் 19

மால்தஸின் காலத்திற்கு முன், 'வாணிக வாதக் கருத்தி னர்' (Mercantilists) பெருகும் மக்கள்தொகை நாட்டுக்கு

நன்மை பயக்கும் என்றே கருதி வந்தனர். ஆனால், பிளாட்டோவின் நூல்களில் இருந்து பண்டைய கிரேக்க நாட்டில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காகத் திருமணங்களைத் தள்ளி வைத்தல், கருவழிப்பு, குடியிறக்கக் கட்டுப்பாடு போன்றவை செயல்படுத்தப்பட்டன என்பதை அறிகிறோம்.

## திறனாய்வு

பொருளியலாளர்களால் அதிக அளவுக்குக் குறைகூறப்பட்டதும், ஆய்வு செய்யப்பட்டதும் மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடே. கானன் என்பவர் மால்தஸை ஓர் 'இருட்டுத் தீர்க்கதரிசி' (Gloomy Prophet) எனவும், 'திகைப்பூட்டும் பொருளியலறிஞர்' (Dismal Economist) எனவும் குறிப்பிடுகிறார்.

### 1. கணக்கெடுப்பில் தவறு

மடிப்பெண் விகிதத்தில் மக்கள்பெருக்கமும், கூட்டெண் விகிதத்தில் உணவு உற்பத்திப் பெருக்கமும் உள்ளன என்ற மால்தஸின் கூற்றுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. அவருடைய விவரங்கள் மிகைப்படுத்திக் கூறப்படுபவையே.

### 2. குறைந்து செல் விளைவு விதி

வேளாண்மையில் செயல்படும் குறைந்துசெல் விளைவு விதியின் அடிப்படையிலேயே மால்தஸின் கோட்பாடு அமைந்துள்ளது. ஆனால், இயந்திரங்களைக் கொண்டு விஞ்ஞான முறையில் சாகுபடி செய்யும்போது உற்பத்தியைப் பல மடங்கு பெருக்கலாம். குறைந்துசெல் விளைவு விதி காலம் தாழ்த்தியே செயல்படத் துவங்கும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இவ் விதி செயல்படும் அளவுக்கு ஓர் ஏக்கருக்கான உற்பத்தி உயர்ந்திருக்கவில்லை.

### 3. சோர்வு மனப்பாங்கு

மால்தஸின் கோட்பாடு எதிர்காலம் இருள்மயமானது என்று எண்ணும் சோர்வு மனப்பாங்கைத் தருகிறது. 'உழைக்கும் கரங்களே உருவாக்கும் கரங்கள்' என்பதை மக்கள் உணர்ந்து, கடின உழைப்பைத் தந்தால் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறலாம். இன்று பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு வசதிகள் ஏராளமாகப் பெருகியுள்ளன.

### 4. பொருளாதார வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டில் உலகின் பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் பூரிப்பு நிலை தோன்றுமென்பதை மால்தஸ்

எதிர்நோக்கவில்லை. அந்த நூற்றாண்டில் பல மேலை நாடுகளில் வேளாண்மை வளர்ச்சி, தொழிற்புரட்சி, இயந்திர உற்பத்தி முறை, போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளில் மேம்பாடு, வாணிக முன்னேற்றம் ஆகியவற்றால், மக்கள்தொகை விரைவாகப் பெருகியும்கூட, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே சென்றது.

## 5. உணவுப் பொருள்களின் இறக்குமதி

மால்தஸ், உணவுப்பொருள்களின் உற்பத்திக்குத் தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் தருகிறார். இன்று 'பன்னாட்டு வேலைப் பகுப்பின்' அடிப்படையில் வெவ்வேறு வகைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழில் வளர்ச்சி பெற்ற இங்கிலாந்து நாடு தொழிற் பொருள்களை ஏற்றுமதி செய்து, தேவையான உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்துகொள்ளலாம். மால்தஸ், மக்கள் பெருக்கத்தை ஒரு நாட்டின் மொத்த ஆக்க அளவோடு ஒப்பிட்டு நோக்குவதே சரியானது.

## 6. வாழ்க்கைத் தர உயர்வு

நாகரிக வளர்ச்சியாலும், வாழ்க்கைத்தர உயர்வாலும் பிறப்பு விகிதம் குறைந்து மக்கள்பெருக்கம் தாழ்வடையுமென்பதை மால்தஸ் உணரவில்லை. பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல ஆண்டுகளாக மக்கள்தொகையில் அதிக உயர்வு தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய நவநாகரிக தம்பதியர் எவரும் திருமணமான ஒரு ஆண்டுக்குள்ளாகவே குழந்தையைப் பெற்றுக்கொள்ள விரும்புவதில்லை. கல்வியறிவு பெற்றவர்களும், நாகரிகத்தைக் கடைப்பிடிப்பவர்களும், செல்வந்தர்களும், நகர மக்களின் பெரும்பாலானவர்களும் 'திட்டமிட்ட குடும்பத்தையே தெவிட்டாத இன்பமாகக்' கருதுபவர்களாவர்.

## 7. உணவுப் பகிர்வு

உணவுப் பொருள்களையும், மற்றவற்றையும் திறமையோடு உற்பத்தி செய்து சிறப்பாகப் பகிர்வு செய்தால் மக்கள்தொகைப் பிரச்சினை தோன்றாது என செலிக்மேன் குறிப்பிடுகிறார். மக்கள் தொகைப் பிரச்சினை உணவை மட்டும் பொருத்ததல்ல. அது நாட்டின் வளத்தையும், செல்வத்தையும், மக்களின் ஆக்கத் திறனையும் பொருத்து அமையக்கூடும்.

## 8. உழைப்பின் முக்கியத்துவம்

மனிதன் உழைப்பின்மூலம் எப் பொருள்களையும் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்யமுடியும் என முற்

போக்குவாதிகள் வாதிடுகின்றனர். மால்தஸின் கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்தவர்களில் கானன் குறிப்பிடத்தக்கவராவார். அவர் கூறுவதாவது, 'பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒரு வாயோடு இரண்டு கைகளையும் கொண்டு பிறக்கின்றன; எனவே, மக்கள் பெருக்கத்தால் உற்பத்தி அதிகரிக்கும்'. ஆனால், கட்டுக்கடங்காத மக்கள் பெருக்கத்தால் உற்பத்தியில் குறைந்து செல் விளைவே தோன்றும். தவிர, பிறந்த குழந்தையின் கைகள் சற்றெறுப்ப 20 ஆண்டுகளுக்குப் பிறகே உற்பத்திப் பணியில் ஈடுபடும்போது, வாயானது பிறந்தவுடனேயே செயல்படத் தொடங்குகிறது என்று மால்தஸின் கருத்தை ஆதரிப்பவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## 9. நாடுகளுக்கிடையே வேறுபாடு

மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, சீனா போன்ற வளர்ச்சி பெறும் நாடுகளுக்கு ஓரளவு பொருந்தும்போது, ரஷ்யா, கனடா, ஆஸ்திரெலியா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேம்பாடடைந்த நாடுகளுக்குப் பொருந்தவில்லை.

## 10. புதிய சாகுபடி நிலம்

புதிய நிலத்தை வேளாண்மையில் ஈடுபடுத்துவதன்மூலமும், வேளாண்மைத் தொழிலைச் சீரமைத்து அறிவியல் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் ஆக்கத்தின் அளவு பல மடங்கு பெருகும் என்பதை மால்தஸ் அறிந்திருக்கவில்லை. இந்தியா போன்ற நாடுகளின் வேளாண்மையில் இயந்திரக் கலப்பை, இரசாயன உரங்கள், தரமான விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்திச் செய்தால் உற்பத்தி வளர்ந்து செல் நிலையில் அமையும்.

## 11. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள்

மால்தஸ் குறிப்பிடும் தவிர்ப்புத் தடைகளைப் பின்பற்றுவது கடினம். இன்றைய நிலையில் பிறப்பைத் தவிர்க்க உதவும் கருத்தடை மாத்திரைகளும், களிம்புகளும், இரப்பர் உறைகளும், 'லூப்' வளையங்களும் உள்ளன. கருத்தடை அறுவை சிகிச்சையாலும் பிறப்புக் கட்டுப்படுத்தப்படுகிறது. மால்தஸின் காலத்திற்குப் பின்வந்த திருமதி மார்கரெட் சாங்கர் (Mrs. Margaret Sanger), திருமதி மேரி ஸ்டோப்ஸ் (Mrs. Mary Stopes) போன்றவர்கள் நவீன கருத்தடை முறைகளை ஆதரித்துக் கூறியிருக்கின்றனர்.

### 12. தவருன எடுத்துக் காட்டு

மால்தஸ் அவருடைய காலத்தில் பல்வேறு காரணங்களால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மக்கள்தொகை விரைவாகப் பெருகியதைச் சான்ருகக் கொண்டு, மக்கள் எண்ணிக்கை 25 ஆண்டுகளில் இரட்டிப்பாகும் எனக் கூறுகிறர். உலக நாடுகளின் வரலாறு இக் கூற்று தவருனது என்பதை மெய்ப்பித்துள்ளது.

### சிறப்பு

மால்தஸின் கோட்பாட்டில் பல குறைகள் இருப்பினும், அதன் உட்கருத்தைக் குறைகூற இயலாது. ஆனல், அவர் தரும் ஆதாரங்களும் புள்ளி விவரங்களும் தவருனவையே. மார்ஷல், பேட்டன், டாசிக், வாக்கர், இலி, கிளார்க் போன்றவர்கள் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். உணவு உற்பத்திப் பெருக்க வீதத்தைவிட மக்கள்பெருக்க வீதம் அதிகமாக இருக்கும் நிலை பல வளரும் ஆசிய நாடுகளில் அமைந்துள்ளது.

விரைவான மக்கள் பெருக்கத்தால் பல பின்தங்கிய நாடுகளில் பஞ்சம், பட்டினி, நோய், வகுப்புவாதக் கலவரம், கொலை, கொள்ளை போன்றவை தோன்றுவதை நாம் கண்கூடாகக் காண்கிறேம்.


## III. உத்தம அளவு மக்கள் தொகைக் கோட்பாடு (Optimum Theory of Population)

மால்தஸின் கோட்பாட்டுக்கு மறுப்பாக எட்வின் கானன் என்பவர் இக் கோட்பாட்டை உருவாக்கினர். இதை ராபின்ஸ், டால்டன், சாண்டர்ஸ் முதலியோர் பிரபலப்படுத்தினர். மால்தஸ் மக்கள்தொகையை உணவு உற்பத்தியோடு மட்டும் ஒப்பிட்டுப் பார்த்தார். ஒரு நாட்டின் செல்வம், உற்பத்தி, வருமானம் ஆகியவையே மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிக்கின்றன என்பதைக் கானன் அறிவுறுத்தினர்.

'உச்சநிலைத் தலா வருமானத்தை அளிக்கவல்ல மக்கள் தொகையே உத்தம மக்கள் தொகையாகும்.' மக்கள்தொகை இதற்குக் குறைவாக இருந்தால், 'போதா மக்கள்தொகை' (under population) எனவும், அதிகமாக இருந்தால் 'எச்ச மக்கள் தொகை' (over population) எனவும் கானன் விளக்கினர்.

ஒரு நாட்டில் போதா மக்கள்தொகை இருந்தால், நாட்டு வளங்கள் அனைத்தையும் உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்த முடியாது. இதனால், நாட்டு வருமானமும், தலா வருமானமும் குறைவாக அமையும். ஆனால், உத்தம அளவைக்காட்டிலும் அதிக அளவில் எச்ச மக்கள்தொகை அமைந்திருந்தால் பயன் படுத்திய வள வசதிகளையே திரும்பவும் பயன்படுத்த நேரிடும். இதனால், பொருள் உற்பத்தி குறைந்துசெல் வீதத்தில் அமைந்து, தலா வருமானமும் குறையும்.

இக் கோட்பாட்டைப் பின்வரும் வரைபடத்தின் உதவி யோடு விளக்கலாம் :





படம் 20

வரைபடத்தின் X அச்சில் மக்கள்தொகையின் அளவும், Y அச்சில் சராசரி உற்பத்தியோடு தலாவருமானமும் அளவிடப் படுகின்றன. AR வளைகோடு தலா வருமானத்தைக் காட்டுகிறது.

மக்கள்தொகை $OP_1$ அளவில் போதா நிலையில் இருக்கும்போது தலா வருமானம் $N_1P_1$ ஆகும். மக்கள்தொகை OP வரை பெருகும்போது தலாவருமானம் கூடுகிறது. OP அளவு மக்கள் தொகையில் உச்சநிலைத் தலாவருமானம் NP அளவுக்குப் பெறப் படுவதால், அதுவே உத்தம மக்கள் தொகையாகும். மக்கள் தொகை OP அளவுக்கு மேலாக அதிகரிக்கும்போது, தலா வருமான வளைகோடு சரியத் தொடங்குகிறது. எனவே, தலா வருமானம் குறைகிறது. $OP_2$ என்ற மிகையான மக்கள் தொகையில் தலா வருமானம் $N_2P_2$ ஆகும்.

ஒரு நாட்டின் உத்தம அளவு மக்கள்தொகை நிலையான தல்ல. புதிய உற்பத்தி வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலோ, புதிய ஆக்க முறைகள் கைக்கொள்ளப்பட்டாலோ, உற்பத்திக் கான மூலப் பொருள்களின் அளவு கூடினாலோ உத்தம மக்கள் தொகை அதிகரிக்கும். சராசரி உற்பத்தி (தலா வருமானம்)




படம் 21

குறைந்தால் உத்தம மக்கள்தொகையின் அளவும் குறையும். ஒரு நாட்டின் கல்வி, பயிற்சி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், மூலதனம் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படும்போது தலாவருமான வளைகோட்டிலும் மாற்றம் தோன்றும். இதனால், உத்தம மக்கள் தொகையின் அளவும் மாறுபடும். இதை விளக்கப் பக்கம் 169ல் காணும் வரைபடம் உதவும்.

OX அச்சில் மக்கள்தொகையின் அளவும், OY அச்சில் சராசரி உற்பத்தியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. AR என்பது தலா வருமான வளைகோடு. அதில் N என்ற புள்ளி உயர் மட்டத்தில் இருப்பதால், OP உத்தம மக்கள்தொகையாகிறது. உச்ச நிலைத் தலாவருமானம் NP ஆகும். மூலதனப் பெருக்கம் அல்லது புதிய உற்பத்தி முறைகளால் சராசரி உற்பத்தி கூடும்போது, தலா வருமான வளைகோடு $A_2R_2$ என்ற உயர்நிலைக்கு மாறி அமைகிறது. இந் நிலையில் பெறப்படும் உச்சநிலைத் தலாவருமானம் $N_2P_2$ ஆகவிருப்பதால், உத்தம மக்கள்தொகையின் அளவு $OP_2$ ஆக மாறிவிடுகிறது. காரணி மாற்றங்களால் சராசரி உற்பத்தி குறையும்போது தலாவருமான வளைகோடு $A_1R_1$ என்ற நிலைக்குத் தாழ்ந்து அமைகிறது. இதனால், உச்சநிலைத் தலா வருமானம் $N_1P_1$ ஆகக் குறைந்து, உத்தம மக்கள்தொகையின் அளவும் $OP_1$ ஆக மாறுகிறது.

கானனின் உத்தம மக்கள்தொகைக் கோட்பாட்டைப் பாராட்டிய டாக்டர் டால்டன் ஒரு நாட்டின் மக்கள்தொகை உத்தம அளவில் இருக்கின்றதா அல்லது அதனின்றும் எந்த அளவிற்கு மாறுபட்டிருக்கிறது என்பதை அறியக் கீழ்க்காணும் சூத்திரத்தைத் தந்துள்ளார்.

$$M = \frac{A - O}{O}$$

இதில் M என்பது மக்கள்தொகையின் பொருத்தமின்மை வீதத்தையும் (degree of maladjustment), A என்பது நடப்பு மக்கள் தொகையையும், O என்பது உத்தம மக்கள்தொகையையும் குறிக்கும். M எதிர்கணியமாக (negative) இருந்தால் போதா மக்கள்தொகை எனவும், M நேர்கணியமாக (positive) இருந்தால் எச்ச மக்கள் எனவும் கொள்ளவேண்டும்.

### சிறப்பியல்புகள்

மால்தஸின் கோட்பாட்டோடு ஒப்பிடும்போது, உத்தம மக்கள்தொகைக் கோட்பாட்டின் சிறப்புகளைப் புரிந்து கொள்ளலாம்.

1. மால்தஸின் கோட்பாடு சோர்வு மனப்பாங்கையும், கானனின் கோட்பாடு நம்பிக்கைக் கொண்ட திட மனப்பாங்கையும் தருகின்றன. மக்கள்தொகை அதிகரித்தாலும் பிற காரணிகளில் ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தி கூடி தலா வருமானம் உயரும் என கானன் கூறுகிறார்.

2. மால்தஸின் கோட்பாடு நுகர்வைச் சார்ந்தது. ஏனெனில், அதில் உணவுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. கானனின் கோட்பாடு ஆக்கத்தின் புறமானது. உச்சநிலைத் தலா வருமானத்தைப் பெறும் மக்கள்தொகையே உத்தம மக்கள் தொகை எனக் குறிப்பிட்டு, கானன், உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்.

3. மால்தஸின் கோட்பாடு சமூக-பொருளாதார நிலைகளில் மாற்றங்கள் தோன்றுத 'தேக்கநிலைப் பொருளாதாரத்திற்கும்' (static economy), கானனின் கோட்பாடு மாற்றங்கள் ஏற்படும் 'இயங்குநிலைப் பொருளாதாரத்திற்கும்' (dynamic economy) ஏற்புடையதாகும்.

4. மக்களின் வாழ்க்கைத்தரம் தலா வருமானத்தைக் கணிப்பதன்மூலம் கானனின் கோட்பாட்டில் கருதப்படுகிறது. மால்தஸ் மக்கள்நலனைப் பற்றிக் கருதாமல் உணவு உற்பத்தியைப் பற்றியே அதிகமாகச் சிந்திக்கின்றார்.

5. குறைந்துசெல் விளைவு விதி நிலத்தில் செயல்படுவதை ஆதாரமாகக் கொண்டு மால்தஸ் தன் கோட்பாட்டை எழுதியுள்ளார். நிலத்தில் வளர்ந்துசெல் விளைவை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது என்பதை உத்தம மக்கள்தொகைக் கோட்பாடு விளக்குகிறது.

6. மால்தஸின் கோட்பாட்டில் மக்கள்தொகைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கானனின் கோட்பாட்டில் உத்தம மக்கள்தொகையின் அளவும்கூட நாட்டு வளங்கள் பயன்படுத்தப்படுவதற்கேற்ப மாறும் எனச் சொல்லப்படுகிறது.

7. கானனின் கோட்பாடு எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்போது, மால்தஸின் கோட்பாடு மிகையான மக்கள்தொகை கொண்ட நாடுகளுக்கு மட்டுமே பொருந்துகிறது.

8. தலா வருமானம் குறையும்போது ஒரு நாட்டில் அமித மக்கள்தொகை இருப்பதாகக் கொள்ளவேண்டுமென கானன்

குறிப்பிடுகிறார். பஞ்சம், பட்டினி, நோய், கொள்ளை போன்ற இயல்புத் தடைகள் தோன்றும்போது உச்ச மக்கள்தொகை இருப்பதாக மால்தஸ் கருதுகிறார். ஆனால், இவ்வித இயல்புத் தடைகள் பெரிதும் தோன்றுமல் தடுப்பதே இன்றைய பின்தங்கிய நாடுகளிலுள்ள அரசுகளின் முயற்சியாக உள்ளது.

**திறனாய்வு**

கானனின் கோட்பாட்டில் இருக்கும் சில குறைகளைப் பின் வருமாறு குறிப்பிடலாம்: (1) உத்தம மக்கள்தொகையைக் கணிப்பது எளிதாக இல்லை. (2) இது நடைமுறைச் சிக்கல் களுக்குத் தீர்வுகாணும் வழிமுறைகளைக் குறிப்பிடவில்லை. (3) உத்தம மக்கள்தொகையானது சமுதாய, அரசியல், பாது காப்புக் காரணிகளைக் கருத்திற்கொண்டு கணிக்கப்படவேண்டும். ஆனால், கானன் உத்தம மக்கள்தொகையைக் கணிப்பதில் பொரு ளாதாரக் காரணிகளை மட்டுமே கருதுகிறார். (4) உயர்வான தலா வருமானம் ஒரு நாட்டிலுள்ள மக்கள் எல்லோருடைய நலனையும் உணர்த்தாது. அந் நாட்டில் வருமானத்திலும் செல் வப் பங்கீட்டிலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடும். (5) பொரு ளாதாரக் கொள்கைகளை வகுக்க உதவுவதாக இக் கோட்பாடு இல்லை.

## IV. இந்தியாவின் மக்கள் தொகைப் பிரச்சினை

இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் மக்கள் தொகைச் சிக்கலே தலையானது. ஏனெனில், மற்ற பிரச்சினை கள் தோன்றுகின்றமைக்கு இதுவே அடிப்படையாகிறது. இந்தியா மிகையான மக்கள்தொகையைக் கொண்ட நாடு என்று சில பொருளியலாளர்கள் கருதுகின்றனர். இக் கூற்றை மறுப்பவர் களும் உள்ளனர். மக்களின் வறுமை, தாழ்வான வாழ்க்கைத் தரம், உணவுப் பற்றுக்குறை, அதிக அளவு மக்கள் வேளாண்மை யைச் சார்ந்திருத்தல், உயர்ந்த பிறப்பு வீதம் ஆகியவை இந்தியா அமித மக்கள் தொகையைக் கொண்ட நாடு என்பதை உணர்த்துகின்றன.

உலக நாடுகளிடையே சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா அதிக மக்கள்தொகை கொண்டது. மக்கள்தொகை சீனாவில் சுமார் 60 கோடியாகவும், இந்தியாவில் சுமார் 55 கோடி யாகவும் உள்ளது. உலக மக்களில் ஏழில் ஒருவர் இந்தியரே.

இந்தியாவின் எல்லா வளங்களையும் முற்றிலுமாகப் பயன் படுத்தி உற்பத்தியைப் பெருக்கினால்தான், மக்களின் வாழ்க்கைத்

தரம் உயரும். நம் நாட்டின் மக்கள்தொகையில் 15 வயதுக்குட்பட்டவர்கள் சுமார் 40 சதவீதம் ஆகும். சுமார் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வசிக்கின்றனர்; சுமார் 70 சதவீதத்தினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். திருமணம் செய்யாமலிருக்கும் பெண்டிர் சுமார் ஒரு சதவீதத்தினரே. இந்தியப் பெண்டிரின் சராசரித் திருமண வயது 15.6 ஆகும். பிரான்ஸ் நாட்டில் மூன்று பெண்களில் ஒருவர் 35 வயதான பிறகும் திருமணம் செய்துகொள்ளாதவராக இருக்கிறார்.

நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு விரைவான மக்கள் பெருக்கம் தடையாக உள்ளது. மால்தஸின் கோட்பாடு அல்லது உத்தம அளவு மக்கள்தொகைக் கோட்பாடு ஆகியவற்றில் எதை அடிப்படையாகக் கொண்டு நோக்கினாலும், இந்தியா மிகுதியான மக்கள்தொகையைக் கொண்ட நாடு என்பது எளிதில் புலப்படும்.

**மக்கள் பெருக்கத்திற்கான காரணங்கள்**

1. இந்தியாவில் பிறப்பு வீதம் 1,000 பேருக்கு 38 என்ற அளவிலும், இறப்பு வீதம் 1,000 பேருக்கு 18 என்ற அளவிலும் அமைந்துள்ளன. ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் சுகாதார-மருத்துவ வசதிகள் பெருக்கப்பட்டு காலரா, அம்மை, மலேரியா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் பெரிதும் தடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இறப்புவீதம் குறைக்கப்பட்டுப் பிறப்புவீதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்படாத நிலை விரைவான மக்கள் பெருக்கத்திற்கான முக்கியக் காரணமாகிறது.

2. ஓர் இந்தியனின் சராசரி ஆயுள்காலம் சுமார் 45 ஆண்டுகள். வளர்ச்சியடைந்த மேலைநாடுகளில் மக்களின் சராசரி வயது சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக அமைந்துள்ளது.

3. இந்தியாவில் நாளொன்றுக்குச் சுமார் 50,000 குழந்தைகள் பிறக்கின்றன.

4. நம் நாட்டில்தான், 'எல்லாம் அவன் கொடுத்தது! எல்லாம் அவன் செயல்' என்று பல குழந்தைகளைக் கொண்ட பெற்றோர் இறைவனின் மீது பழியையும் பாரத்தையும் சுமத்துகிறார்கள்.

5. குறைவான வருமானம் வறுமைக்குக் காரணமாகவும் விளைவாகவும் அமைகிறது. பிற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் தலா வருமானம் மிகக் குறைவாகவே (ரூ. 360)

உள்ளது. வறிய நிலையிலுள்ள பல இந்தியர்களின் ஒரே பொழுது போக்கு, குழந்தைகளைப் பெறுவதாகவே இருக்கிறது.

பண வருமானம் கூடியிருப்பினும், உண்மை வருமானம் உயராத நிலையிலிருந்தும், வேலையின்மைப் பிரச்சினையின்மூலமும் இந்தியா மிகையான மக்கள்தொகையைக் கொண்ட நாடு என்பதைப் புரிக்துகொள்ளலாம்.

**விரைவான மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளும், மக்கள் பெருக்கப் பிரச்சினையால் எழும் சிக்கல்களுக்குத் தீர்வுகளும்**

(1) வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதல்;

(2) தொழில்துறை ஆக்கத்தை அதிகரித்தல்;

(3) வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல்;

(4) வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்;

(5) அவசியப் பொருள்களைச் சிறப்பாகப் பங்கிடுதல்;

(6) குடும்ப நலத்திற்காகக் கருத்தடை முறைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்;

(7) மக்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுதல்;

(8) திருமண வயதை உயர்த்துதல்;

(9) மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கூட்டுதல்;

(10) அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெறுவதால் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் ஏற்படும் சுமைகளைக் கிராம மக்கள் உணருமாறு செய்தல்;

(11) உயர் வீதத்தில் மக்கள் வேளாண்மையைச் சார்ந்துள்ள நிலையைக் குறைத்தல்;

(12) முதலீட்டின் அளவைக் கூட்டுதல்;

(13) மக்களின் மூட நம்பிக்கையை ஒழித்தல்;

(14) திட்டமிடுவதால் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் மக்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்குமாறு செய்தல்;

(15) வாணிகத்தின்மூலம் தரகர்கள் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் சுரண்டும் நிலையை நீக்குதல்;

(16) அவசியப் பண்டங்களையும் பணிகளையும் சலுகை விலைகளில் எல்லோருக்கும் அளித்தல்;

(17) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்;

(18) செல்வப் பங்கீட்டிலும் வருமானத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்;

(19) சமூகநலப் பணிகளைப் பெருக்குதல்;

(20) உண்மையான சமதர்மத்தைப் பொதுவுடைமை முறைகளின்மூலம் பெறுதல்.

மேற்குறிப்பிடப்பட்ட தீர்வுகளைக் கருத்திற்கொண்டு, அரசு திறமையுடன் செயலாற்றினால் மக்கள்தொகைப் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள எல்லாச் சிக்கல்களையும் முடிவுக்குக் கொண்டு வரலாம்.

# 15. மூலதனம்
## (Capital)

## I. விளக்கம்

பேச்சுவழக்கில் வணிகர் அல்லது தொழிலதிபர் பயன்படுத்தும் பணமே மூலதனமாகக் கருதப்படுகிறது. ஆனால், பொருளியலில் மூலதனம் விரிந்த பொருளில் விளக்கப்படுகிறது. ஆடம் ஸ்மித், 'உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர்களைப் பேணுவதற்கான நுகர்வுப் பண்டங்களின் இருப்பே (stock) மூலதனம்' என்று குறிப்பிட்டுள்ளார். இது தொன்மைக்காலக் கருத்து. தொழிற்சாலைகள், கருவிகள், இயந்திரங்கள், போன்றவை மூலதனம் எனவும், அவை உழைப்பால் கிடைக்கப் பெறுபவை எனவும் மார்க்ஸ் 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மூலதனத்திற்கான புதிய விளக்கத்தைத் தந்தார். மனிதனால் உற்பத்தி செய்யப்படுவதே மூலதனம் என்ற கருத்தை பாம் பாவர்க் (Bohm Bawerk) ஆதரிக்கிறார்.

மூலதனம் என்னும் சொல்லுக்கான பிற விளக்கங்களை ரிக்கார்டோ, மால்தஸ், மில், சீனியர் போன்றவர்களும் தந்துள்ளனர். ஆக்கப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதே மூலதனம். சாப்மேன் (Chapman) கூற்றுப்படி, 'மூலதனச் செல்வம் வருமானத்தைத் தருகின்றது; அல்லது வருமான ஆக்கத்திற்குத் துணை புரிகின்றது'. எல்லாவகை மூலதனமும் செல்வமாக இருக்கும் போது எல்லாவகைச் செல்வங்களும் மூலதனமாக இருப்பதில்லை. உதாரணமாக, தொழில் முதலாளி ஒருவர் தன் காரைச் சொந்தப் பயனுக்கு உபயோகிக்கும்போது அதை மூலதனமாகக் கருத முடியாது. மாறாக, அக் காரானது தொழில் சம்பந்தமான நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்போது மூலதனமாகிறது.

தற்போதைய சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகளில், மூல தனம் மிக முக்கிய உற்பத்திக் காரணியாக உள்ளது. 'மூலதனம் இன்றி நிலத்தைச் சாகுபடி செய்ய இயலாது; உழைப்புப் பய னற்றதாக அமையும்; தொழிலமைப்பு உற்பத்தித் திறனின்றி இருக்கும்'. மூலதனம் உற்பத்திக்குப் பயன்படும் பணத்தையும் உற்பத்தி செய்யப் பயன்படும் சாதனங்களையும் குறிக்கிறது.

இன்றைய உலகில் மூலதனப் பெருக்கத்தின் காரணமாகவே பலவகைப் பண்டங்கள் ஏராளமான அளவில் உற்பத்தியாகின் றன. புதிய பல வசதிப் பணிகளை மனிதர்கள் பெறுவதற்கும் மூலதனமே உதவுகிறது. உழைப்பும் நிலமும் உற்பத்திப் பணி யில் ஈடுபட மூலதனத்தின் சேர்க்கை இன்றியமையாத ஒன்று கிறது.

## II. மூலதனத்தின் வகைகள்

ஆக்கக் காரணியாகிய மூலதனத்தை அதன் இயல்புகளுக்கு ஏற்ப பல வகைகளாகப் பிரிக்கலாம்.

(1) பலகாலம் பயனளித்து, பலமுறை தொடர்ந்து ஆக்கப் பணியில் ஈடுபடுத்தப்படும் கட்டடங்கள், கருவிகள், இயந்திரங்கள் 'நிரந்த மூலதனம்' (Fixed Capital) ஆகும்.

(2) குறுகிய காலத்தில் கூலியளிப்பதற்கும் மூலப் பொருள் களை வாங்குவதற்கும் பயன்படுவது 'சுழலும் மூல தனம்' (Circulating Capital).

(3) தொழிலை நடத்துவதற்குக் கையிருப்பாக வைத்திருக் கும் பணம் 'பணிசெய் மூலதனம்' (Working Capital).

(4) மின்சாரம், நிலக்கரி போன்ற பல வழிகளில் பயன் படத்தக்க நிலையிலிருப்பவை 'உருமாறும்' அல்லது 'அசையும் மூலதனம்' (Floating Capital).

(5) தட்டெழுத்துப் பொறி, தையல் இயந்திரம், கணக் கிடும் பொறி போன்று ஒரு வகையில் மட்டுமே பயன் படுபவை 'மீளா மூலதனம்' (Sunk Capital). இருப்புப் பாதைகளை இரயில்களை ஓட்டுவதற்கு மட்டுமே பயன் படுத்த முடியுமாதலால், அவற்றை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலதனம் மீளா மூலதனம் எனப்படும்.

(6) தனி மனிதர்கள் முதலீட்டிற்காக வைத்திருக்கக் கூடியது 'தனியார் மூலதனம்' (Individual Capital).

(7) சமுதாயத்திற்குச் சொந்தமான இருப்புப் பாதைகள், சாலைகள், தகவல் தொடர்புச் சாதனங்கள் போன்றவை 'சமுதாய மூலதனத்தில்' (Social Capital) அடங்கும்.

(8) தனியார் மூலதனம் மற்றும் சமுதாய மூலதனம் ஆகிய இரண்டின் மொத்தமே 'நாட்டு மூலதனம்' (National Capital).

(9) உழைப்பாளர்களுக்கும் கூலி அளிக்கப் பயன்படுத்தப் படுவது 'ஊதியமளிக்கும் மூலதனம்' (Remunerative Capital).

(10) ஆக்கப் பணிகளைச் செய்ய உதவும் கருவிகள், இயந்திரங்கள், மூலப் பொருள்கள் போன்றவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மூலதனம் 'துணை மூலதனம்' (Auxiliary Capital).

இறுதியில் குறிப்பிடப்பட்ட இரண்டு வகை மூலதனங்களும் சுழலும் மூலதனத்தின் கீழ் வருபவை.

முதலாளித்துவ நாடுகளிலும், வளர்ச்சியடைந்த மற்ற சம தர்ம நாடுகளிலும் 'மூலதனம் செறிந்த' (Capital Intensive) உற்பத்தி முறைகள் பின்பற்றப்படுகின்றன. இவ்வகை முறைகளில் மனித உழைப்புக் குறைக்கப்பட்டு இயந்திரச் சாதனங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பெறுகின்றன. பல பின்தங்கிய மக்கள்தொகை மிக்க நாடுகளில் வேலையின்மைச் சிக்கல் இருப்பதாலும், மூலதனப் பற்ருக்குறையாலும் 'உழைப்புச் செறிந்த' (Labour Intensive) உற்பத்தி முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளால் பல நன்மைகள் கிடைக்கின்றன.

(1) பேரளவு உற்பத்தி முறையின் அக-புறச் சிக்கனங்களைப் பெறலாம்.

(2) உற்பத்தியைப் பல மடங்கு குறுகிய காலத்திலேயே பெருக்கும் தொழில் நுணுக்கம் வாய்ந்த இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

(3) நிர்வாகத் திறமையாலும், தொழிற் சீரமைப்பாலும் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம்.

(4) உற்பத்தியும், வருமானமும், இலாபமும் கூடுகின்றன.

(5) ஆக்கக் காரணிகள் தக்க விகிதத்தில் சேர்க்கப்படுவதால் அவற்றின் ஆக்கத் திறன் அதிகரிக்கும்.

(6) திட்டமிட்டபடி உற்பத்தி நடவடிக்கைகளைச் செய்து முடிக்கலாம்.

## III. மூலதனத்தின் முக்கியத்துவமும் பணிகளும்

அதிக அளவு மூலதனத்தின் துணையைப் பெற்றிருப்பதால் தான் ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளில் உழைப்பாளர்களின் ஆக்கத்திறன், பின்தங்கிய நாடுகளிலுள்ள உழைப்பாளர்களின் ஆக்கத்திறனைவிடப் பல மடங்கு அதிகமாக உள்ளது. துரிதகதியில் பெருகிவரும் மக்களுக்குத் தேவையான பல பண்டங்களை இயந்திரங்களின் உதவி கொண்டே உற்பத்திசெய்ய வேண்டியுள்ளது. உற்பத்தியைப் பெருக்க தொழிற்சாலைகள், இரயில்வேக்கள், சாலைகள், கப்பல்கள், தகவல் தொடர்பு வசதிகள் போன்றவையும் தேவை. பொருளாதார முன்னேற்றம் புழக்கத்திலிருக்கும் மூலதனத்தின் அளவிற் கேற்ப அமையும்.

இவ்வித முக்கியத்துவத்தைக் கொண்டே மூலதனம் பின் வரும் பணிகளையும் ஆற்றுகிறது :

### 1. கச்சாப் பொருள்கள் வாங்குவதற்கு

உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருள்களை வாங்க மூலதனம் உதவுகிறது. மூலதனத்தில் பெருமளவு இவற்றை வாங்கவே பயன்படுகிறது.

### 2. இயந்திரங்களையும் கருவிகளையும் பெறுவதற்கு

நிரந்தர மூலதனம் தொழிற்கூடங்களை நிறுவவும், இயந்திரக் கருவிகள் வாங்கவும் பயன்படுத்தப்பெறுகின்றன.

### 3. உழைப்பாளர்களுக்கு ஊதியம் தருவதற்கு

உழைப்பவர்களுக்கு உடனுக்குடன் கூலியைத் தரவேண்டியுள்ளது. உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த பிறகு

உழைப்பாளர்களுக்கான கூலியைக் கொடுக்க முடியாது. தொழிலாளர்கள் தினக் கூலியையோ அல்லது மாத ஊதியத்தையோ பெறுகிறார்கள்.

### 4. விற்பனையைப் பெருக்குவதற்கு

ஆக்கப் பொருளுக்கான சந்தையை விரிவுபடுத்த விற்பனையாளர்களை நியமிக்கவேண்டும். விளம்பரங்கள் செய்வதும் அவசியமாகிறது. இவ்வகையான நடவடிக்கைகளையும் மூலதனம் நிறைவேற்றுகிறது.

### 5. போக்கு வரத்து வசதியைப் பெறுவதற்கு

கச்சாப் பொருள்களைத் தொழிற்கூடங்களுக்குக் கொண்டு வரவும், உற்பத்தியான பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும் ஆகின்ற செலவை மூலதனமே ஈடு செய்கிறது.

### 6. மூலதனத் திரட்சி

மூலதனத்தை முதலீடு செய்யும்போது உற்பத்தி அதிகரிக்கிறது. உழைப்பாளரின் வருமானமும், வாங்கும் திறனும் கூடுகின்றன. இதனால், பல பொருள்களின் தேவை பெருகி, அவை அதிகளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டு இலாபத்துடன் விற்கப்படுகின்றன. உயர்வான இலாபம் சேமிக்கப்பட்டுத் திரும்பவும் முதலீடாக்கப்படுகிறது. இவற்றால் பொருளாதாரத்தில் ஆக்கத் திறன் அதிகரிப்பதோடு வேலை வாய்ப்புகளும் பெருகுகின்றன.

### 7. தொடர்ச்சியான உற்பத்தி நடைபெறுவதற்கு

உற்பத்தி நடவடிக்கைகள் இடைவிடாமல் தொடர்ச்சியாக நடைபெற்றால்தான், ஒரு நாட்டின் மொத்த ஆக்கம்கூடி மக்கள் சுபிட்சமான வாழ்வைப் பெறுவர். உற்பத்தி தொடர்ந்து நடைபெற மூலதனம் உதவுகிறது.

## IV. மூலதனத் திரட்சி (Capital Formation)

கார்ல் மார்க்ஸ் உழைப்பால் உருவாக்கப்படுவதே மூலதனம் என்கிறார். அன்றைய நாள் முதல் இன்றைய நாள்வரை மனிதன் செல்வத்தையும் வருமானத்தையும் பல வழிகளில் சேமிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறான். ஏனெனில், சேமித்த செல்வம் அல்லது பணத்தைக் கொண்டு அவனால் எதிர்காலத்தில் தேவையானவற்றை வாங்க முடியும். நுகர்வைக் கட்டுப்படுத்திச்

சேமிக்கும் மூலதனம் உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. நுகர் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மின்சாரம், கருவி கள், இயந்திரங்கள், பிற ஆக்கச் சாதனங்கள் முதலிய மூலதனப் பொருள்களின் அளவைக் கூட்டுதல் மூலதனத் திரட்சியாகும்.

சேமிப்பின் மூலமே மூலதனத் திரட்சியைப் பெறலாம் என் பதை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்கலாம். கடலில் கட்டு மரத்தில் சென்று வலைவீசி மீன்பிடிக்கும் மீனவர் ஒருவர் தினசரி ரூ. 10 வருமானம் பெறுகிறார் என வைத்துக்கொள்வோம். அவர் அன்றுடம் அப் பணம் முழுவதையும் செலவழித்து விட்டால், அவருடைய வாழ்விலும் வருமானத்திலும் எவ்வித முன்னேற்றத் தையும் காண முடியாது. மாறாக, அவர் தினந்தோறும் ரூ. 5 சேமித்து ஓராண்டில் மீன்பிடிக்கும் படகு ஒன்றை வாங்கினால் அது மிக அதிகளவு மீன் பிடித்து வருமானத்தைப் பெருக்க உத வும். இந்த உதாரணத்தில் மீன்பிடிக்கும் படகு மீனவரின் மூலதனமாகிறது. அவர் தன்னுடைய நுகர்வைக் குறைத்து வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தமையால்தான் அம் மூல தனத்தைப் பெறமுடிந்தது.

மூலதன வளர்ச்சியும் திரட்சியும் பொருளாதார-சமூக-அரசியல் காரணிகளுக்கேற்ப அமைகின்றன. மூலதனத் திரட்சிக்கு ஆதாரமாக இருப்பது சேமிப்பு. சேமிப்பின் அளவு கீழ்க்காணும் காரணிகளின் நிலைக்குத்தக்கவாறு இருக்கும்:

(i) சேமிக்கும் திறன் (Ability to Save);

(ii) சேமிக்கும் விருப்பம் (Will to Save);

(iii) சேமிப்பதற்கான வசதிகளும் வாய்ப்புகளும்.

### (i) சேமிக்கும் திறன்

அதிகச் செல்வத்தையும் வருமானத்தையும் கொண்டிருப்ப வர் சேமிக்கும் திறனை அதிகளவில் பெற்றிருப்பர். தேசிய வரு மானத்தையும், தலா வருமானத்தையும் உயரளவில் கொண்டி ருக்கும் நாட்டில் மக்களுடைய சேமிக்கும் திறன் உயர்வாக அமையும். வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், வாணிகப் பெருக்கம், வருமானப் பங்கீடு, அரசின் வரிக்கொள்கை ஆகியவற்றை ஒட்டியும் சேமிக்கும் திறன் இருக்கும்.

### (ii) சேமிக்கும் விருப்பம்

சேமிக்கும் திறனைப் பெற்ற செல்வந்தர் ஒருவர் சேமிக்கும் விருப்பத்தைப் பெற்றிருக்காவிட்டால், வருமானம் நுகர்வுக்

காகவே செலவழிக்கப்படுகிறது. சேமிக்கும் விருப்பம் பின்வரும் நிலைகளைச் சார்ந்து அமையும் :

(1) சமுதாயத்தில் நல்ல செல்வாக்குடனும் அந்தஸ்துடனும் வாழச் செல்வந்தர்களாக வேண்டுமென்ற எண்ணத்தில் சிலர் சேமிக்கின்றனர்.

(2) சிலர் தங்களுடைய குடும்பத்தினர் வருங்காலத்தின் நலமான வாழ்வைப் பெறவேண்டுமென்ற விருப்பத்தில் சேமிக்கின்றனர்.

(3) புதிய தொழில்களில் முதலீடு செய்வதற்காகவும் வருமானத்தின் ஒரு பகுதி சேமிக்கப்படுகிறது.

(4) சேமிப்பதால் பணத்திற்கு வட்டி கிடைக்குமென்றும் சிலர் சேமிப்பில் ஈடுபடுகிறார்கள்.

(5) தேசப்பற்றின் காரணமாகச் சேமிப்பவர்கள் மிகச் சிலரே. தன்னல நோக்கே சேமிப்புக்கு அடிப்படையாகிறது.

(6) அமைதியான பொருளாதார-சமுதாய-அரசியல் சூழ்நிலைகள் சேமிக்கத் தூண்டுகின்றன.

(3) பலர் எதிர்கால இடர்களைத் தாங்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் சேமிப்பைச் செய்கிறார்கள்.

இவற்றுள் எந்த நோக்கத்துடன் சேமிக்கப்பட்டாலும், அச் சேமிப்புப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

### (iii) சேமிப்பதற்கான வசதிகளும் வாய்ப்புகளும்

வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தால்தான் சேமிப்புப் பெருகுகிறது.

(1) சேமிப்பின் அளவைக் கூட்ட வங்கிகள், அஞ்சலகச் சேமிப்பு முறை, காப்பீட்டு நிறுவனங்கள், யூனிட் டிரஸ்டுகள், சேமிப்புப் பத்திரங்கள், சீட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவை அதிக எண்ணிக்கையில் பெருகவேண்டும்.

(2) பணத்தின் வாங்கும் சக்திக்கேற்ப சேமிப்பின் அளவு மாறும். விலைகள் உயரும் பணவீக்கக் காலங்களில் சேமிப்பின் அளவு குறையும். எனவே, அரசு பணமதிப்பில் அதிக அளவு குறைவு ஏற்படாதவாறு கண்காணிக்கவேண்டும்.

(3) அமைதியான சூழ்நிலைகளில், அரசு சேமிப்புக்குப் பாதுகாப்பளிக்கும் என்ற நிலையில் மக்கள் அதிக அளவில் சேமிப்பார்கள்.

மூலதனத் திரட்சி ஏற்பட மக்களுடைய உண்மை வருமானம் உயரவேண்டும். அவர்களுடைய சேமிப்புகளைத் திரட்டக்கூடிய வங்கி போன்ற நிறுவனங்கள் கிராமங்களிலும்கூடப் பரவ வேண்டும். இறுதியாக, அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புகள் பல பொருளாதாரத் துறைகளிலும் முதலீடாக்கப்படவேண்டும்.

## V. இந்தியாவில் மூலதனத் திரட்சி

முன்னேற்றமடைந்த நாடுகளில் தேசிய வருமானத்தில், சேமிப்பின் அளவு 15 முதல் 20 சதவீதமாக இருக்கும்போது, அதன் அளவு வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் 5 முதல் 10 சதவீதமாக மட்டுமே அமைகிறது. இந்தியாவில் நாட்டு வருமானத்தின் 12 சதவீதமே சேமிக்கப்படுகிறது. நம் நாட்டில் மூலதனத் திரட்சி குறைவாக ஏற்படுகின்றமைக்கான காரணங்களைப் பின்வருமாறு விளக்கலாம்:

### 1. மக்களின் வறியநிலை

இந்திய மக்களின் பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளைக்கூட அவர்களால் முழுமையாகப் பூர்த்தி செய்து கொள்ள முடிவதில்லை. வேளாண்மை பழைய கால முறையிலேயே செய்யப்படுவதாலும், தொழில்துறை வளர்ச்சி ஏற்படாமையாலும் 'வறுமை வட்டத்திற்குள்ளாகவே' (vicious circle of poverty) அவர்கள் வாழ்ய வந்துகொண்டிருக்கின்றனர். பிற நாடுகளோடு ஒப்பிடும்போது நம்முடைய தலா வருமானமும் மிகக் குறைவானதாக இருக்கிறது.

### 2. வங்கிமுறை வளர்ச்சியின்மை

கிராமங்களில் வங்கிமுறை வளராததால், கிராம மக்களுக்கு வங்கிப் பழக்கம் இல்லை. நகர்ப்புறங்களில் மட்டுமே வங்கிகளின் கிளைகள் திறக்கப்படுகின்றன. கிராம லேவாதேவிக்காரர்களால் கிராமமக்கள் பலரும் கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனிலேயே இறக்கின்றனர். கடன் கொடுத்தவர்களின் வலியபிடியிலிருந்து அவர்களால் மீள முடிவதில்லை.

### 3. குறைவான எண்ணிக்கையில் பங்கு அங்காடிகள் (Share Markets)

இந்தியாவில் பங்கு அங்காடிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் மூலதனத் திரட்சி பெருகவில்லை. அரசின் உயர்வீத வரிவிதிப்பு முறையால் பங்கு அங்காடிகளில் புழங்கும் பணத்தின் அளவும் தாழ்வாகவே அமைகிறது. மேலும், உயர் கல்வியறிவு பெற்றவர்கள்கூட பங்கு, கடன்பத்திரம் (debenture) போன்றவை பற்றி அறிந்திருப்பதில்லை.

### 4. சேமிப்பு முதலீடாக மாறுதல் இல்லை

நம் நாட்டில் சேமிக்கப்படும் குறைந்தளவுப் பணம் முழுமையாக முதலீடாக்கப்படுவதில்லை. பணவீக்கம், வேலைநிறுத்தம், கதவடைப்பு, முற்றுகைப் போராட்டம், தொழில்களைத் தேசியமயமாக்குதல் ஆகியவற்றின் காரணமாகப் பலரும் முதலீட்டிற்குப் பதிலாக நுகர்விலேயே நாட்டம் கொள்கிறார்கள். செல்வந்தர்கள் பலரும் மேலைநாட்டு நாகரிக மோகம் கொண்டு ஆக்கத்திற்கு உதவாத நுகர்வில் ஈடுபடுகிறார்கள். வெளிநாட்டுத் திரைப்படங்கள், பத்திரிகைகள் போன்றவை புதுமை நாகரிகத்தைப் பரப்புகின்றன. அரண்மனை போன்ற அழகிய நவ நாகரிக வீடுகளைக் கட்டுவதையும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை வாங்குவதையும், ஆண்கள் நீண்ட தலைமுடி வளர்த்தலையும், 'பெல் பாட்டம் பேன்ட்ஸ்' அணிவதையும் மேலைநாட்டு நாகரிகம் இங்குப் பரவி வருவதற்கான உதாரணங்களாகக் கொள்ளலாம். இவற்றால் வருமானத்தின் பெரும் பகுதி நுகர்விலேயே செலவழிந்துவிடுகிறது.

### 5. கூட்டுக் குடும்பமுறை (Joint Family System)

செல்வ நாடுகளைப் போலன்றி இந்தியாவில் பன்னெடுங் காலமாகவே கூட்டுக் குடும்ப முறை அமைந்து வருகிறது. ஒரு குடும்பத்தில் ஒரு சிலர் மட்டும் ஆக்கப் பணிகளில் ஈடுபடும்போது மற்றவர்கள் வீணே பொழுதைக் கழிக்கின்றனர். நம் நாட்டின் கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், மத நம்பிக்கை போன்ற சமுதாயக் காரணிகளும் சேமிப்புக்கு உறுதுணையாக இல்லை.

மூலதனப் பற்றுக்குறையைத் தவிர்க்க இந்திய அரசு அயல் நாட்டு அரசுகளிடமிருந்தும், பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும் மூலதனத்தைக் கடனாகப் பெறுகிறது. நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கான முதலீட்டின் ஒரு பகுதி 'பற்றுக்குறை நிதியாக்கத்தாலும்' (deficit financing) ஈடுசெய்யப்பட்டது. மத்திய அரசும், மாநில அரசுகளும் வரிவிதிப்பின்மூலமே அதிக அளவு நிதியைத் திரட்டுகின்றன.

# 16. அமைப்பு

## (Organisation)

### I. தொழில் அமைப்பும் தொழில் முயல்வோரும்

தொழிலமைப்பைப் பிற உற்பத்திக் காரணிகளை இணைத்து ஆக்கத்தில் ஈடுபடச் செய்யும் காரணி எனலாம். பண்டைக் காலங்களில் தொழிலமைப்புக் காரணி செல்வாக்குப் பெற்றிருக்க வில்லை. ஏனெனில், அப்போது நிலவுடைமையாளரே தமது மூலதனத்தை முதலீடாக்கிச் சாகுபடி செய்ய தம்முடைய உழைப் பையும் பயன்படுத்தினர். ஆனால், இன்று மனித விருப்பங்கள் பெருகி, பேரளவில் உற்பத்தி செய்வது அவசியமாகிவிட்டது. ஆக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொழிலமைப்பை முக்கியமான ஆக்கக் காரணியாக மாற்றிவிட்டன. வெவ்வேறு இடங்களிலும், மனிதர்களிடையேயும் கிடைக்கக்கூடிய நிலம், மூலதனம், உழைப்பு, ஆகியவற்றை உரிய விகிதங்களில் சேர்த்து உற்பத்தியைப் பெருக்கி உற்பத்திச் செலவைக் குறைப்பது தொழில் அமைப்பாளரின் (entrepreneur) பணியாகும். அவர் உழைப் பாளரைப்போல ஊதியம் பெறுவதில்லை; செய்யும் பணிக்காக இலாபத்தைச் சன்மானமாக அடைகிறார்.

தொழில் முயல்வோர் தொழிலில் ஏற்படும் இலாப-நட்டங் களை ஏற்கின்றனர். பல இடர்களை ஏற்றுக்கொண்டே இலாபத்தை ஈட்டவேண்டுமென்பதால், அவர்களை 'இடர் தாங்குபவர்கள்' (risk takers) எனவும் அழைக்கலாம். சாதாரண உழைப் பாளருக்கும், தொழில் அமைப்பாளருக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. தொழிற்புரட்சிக் காலத்திற்குப் பின்னரே தொழில் அமைப்பாளருடைய பணிகளின் தேவை பெருமளவில் உணரப் பட்டது.

இன்று தொழில்கள் பேரளவிலும் அதிக எண்ணிக்கையிலும் பெருகியுள்ளன. பங்குகளை விற்பதன்மூலம் மூலதனம் திரட்டப்

பட்டுத் தொழில் நிர்வாகம் 'இயக்குநர் குழுவால்' (Board of Directors) செய்யப்படுகிறது. இயக்குநர் குழுவின் உறுப்பினர் களாயும் தொழில் முயல்வோர் எனலாம். மதிநுட்பமும், அறி வாற்றலும், சிந்தித்துச் செயலாற்றும் திறனும், வருங்கால நிலை களைக் கணிப்பதில் வல்லமையும், துணிச்சலும் உள்ளவரே வெற்றி கரமான தொழில் முயல்வோராகச் செயல்பட முடியும்.

**தொழில் முயல்வோரின் பணிகள்**

ஆக்கக் காரணிகள் நான்கும் இன்றியமையாதவை என்ற லும், பிற மூன்று காரணிகளையும் சரியான அளவில் திரட்டி உற்பத்திப் பணியில் ஈடுபடுத்துவதால் தொழிலமைப்பைச் செய் யும் தொழில் முயல்வோரின் பணிகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

**1. தொழிலை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் :** எந்தத் தொழிலை, எந்த இடத்தில், எவ்வாறு அமைக்கவேண்டு மென்பதைத் தொழில் முனைவர் தீர்மானிக்கிறார். ஆக்கக் காரணி கள் எவ்வீதத்தில் இணைக்கப்படவேண்டுமென்பதும் தீர்மானிக்கப் படுகிறது. தொழிலைத் தொடங்குவதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டுத் திட்டங்கள் வரையப்படுகின்றன.

**2. பொருளின் உற்பத்தி அளவை நிர்ணயித்தல் :** பொரு ளுக்கான தேவை எந்த அளவுக்குப் பெருகும் என்பதைக் கணித்து அதற்கேற்ப உற்பத்தி அளவைத் தீர்மானிப்பவர் தொழில் அமைப்பாளரே. பொருளின் தரத்தைப் பற்றிய முடிவும் எடுக்கப் படுகிறது.

**3. உற்பத்தி முறையைத் தீர்மானித்தல் :** அதிக அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதா அல்லது மனித உழைப்பை உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்துவதா என்பதைத் தொழில் அமைப்பாளர் தீர்மானிக்கிறார். திறமையும் ஆர்வமும் மிக்க உழைப்பாளர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்வதும் அவரது பொறுப்பாகிறது.

**4. நிர்வாக மேற்பார்வை :** தொழில் முன்னேற்றத்திற் கான நிர்வாக மேற்பார்வையைச் செய்பவரும் தொழில் அமைப் பாளரே ஆவார். எந்த வட்டியில் மூலதனத்தைத் திரட்டுவது, எந்த அளவில் கச்சாப் பொருள்களை வாங்குவது என்பவற்றைத் தீர்மானிப்பதோடு இயந்திரச் செயல்பாட்டையும், உழைப்பாள ரையும் அவர் கண்காணிக்கிறார். கணக்குவழக்குகளைச் சரி

பார்ப்பதும், கடிதப் போக்குவரத்தைக் கவனிப்பதும் அவருடைய பணிகளாகும்.

**5. விற்பனை :** உற்பத்திப் பண்டத்தின் தேவையைப் பெருக்க விளம்பரங்கள் செய்வதும், மாதிரிகள் அனுப்புவதும், விற்பனையாளர்களை நியமிப்பதும் அவசியமாகின்றன. தொழில் அமைப்பாளர் இவற்றைச் சீர்படுத்தி இலாபத்தைக் கூட்ட முனைகிறார்.

**6. வருமானப் பங்கீடு :** தொழிலின் மொத்த வருமானம் ஆக்கக் காரணிகளிடையே பகிரப்படுகிறது. ஆக்கத்தில் ஈடுபட்டிருக்கும் காரணிகளுக்கு ஊதியம் வழங்கும் மேலாளர் (Manager) ஆகவும் தொழில் அமைப்பாளர் செயல்படுகிறார். உழைப்பாளர்களுக்கான கூலியும், மூலதனத்திற்கான வட்டியும், நிலத்திற்கான வாரமும் அளிக்கப்பட்டு எஞ்சிய தொழில் வருமானம் தொழில் அமைப்பாளரால் இலாபமாகப் பெறப்படுகிறது.

**7. இடர் தாங்குதல் :** வருங்காலத்தில் உற்பத்திப் பொருளின் தேவை எவ்வாறு இருக்குமென்பதை அனுமானித்து, அதற்குத் தக்கவாறு ஆக்கத்தின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. தேவையின் அளவு எதிர்காலத்தில் எவ்வாறு அமையுமென்பதைத் தீர்மானிப்பதில் தவறுகள் நேர்ந்தால் இழப்பை ஏற்க வேண்டியுள்ளது. போட்டிகளால் தேவை குறையக்கூடும். புதிய பொருள்களை விற்பனை செய்வதில் இவ்வித இடர்ப்பாடுகள் உள்ளன. இந்த இடர்ப்பாடுகளை எல்லாம் ஏற்பதால்தான் தொழில் அமைப்பாளரை 'இடர் தாங்குபவர்' என்றும், 'தொழில் தலைவர்' (Captain of Industry) என்றும் அழைக்கிறோம்.

## II. வாணிக (தொழில்) அமைப்புகளின் வகைகள் (Types of Business Organisation)

பழைய காலங்களில் மனிதனுடைய தேவையும் உற்பத்தியும் குறைவாக இருந்ததால் வாணிக வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை. **தனி மனிதன்** தன்னுடைய நிலத்திலேயே தனது மூலதனத்தை முதலீடாக்கி, பெரும்பாலும் தனக்காகவோ அல்லது தன்னைச் சார்ந்த சிலருக்காகவோ உற்பத்தியைச் செய்தான். பிற்காலத்தில் மக்கள்தொகை பெருகி தேவைகள் கூடியமையால் **ஒரு** சிலர் ஒன்றுசேர்ந்து **கூட்டாளி முறையில்** தொழில் நடத்தி

னர். நாகரிக மேம்பாட்டாலும், விஞ்ஞான முன்னேற்றத்தாலும் இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்த பேரளவுத் தொழில் கள் தோன்றின. அதிக மூலதனத் தேவை **கூட்டு பங்கு** நிறு வனங்களைப் பெருக்கியது. இவ்வகைத் தொழிலமைப்புகள் இலாப நோக்கில் செயல்பட்டன. மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு சேவை மனப்பான்மையைப் பெற்ற **கூட்டுறவு நிறு வனங்கள்** அண்மைக்காலத்தில் தோன்றின. உற்பத்தியாளரும் வாணிகரும் மக்களைச் சுரண்டும் நிலையைத் தவிர்ப்பதற்காக **அரசு நிறுவனங்கள்** ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைத் தொழில் (வாணிக) அமைப்புகளைப் பின்வருமாறு விளக்கி ஆராயலாம்.

### (i) தனி உரிமைத் தொழில் முறை (Sole Proprietorship)

இதனைத் தனி மனிதத் தொழிலமைப்பு என்றும் கூறலாம். இம் முறையில் தொழில் அமைப்பாளர் தன் மூலதனத்தையே முதலீடு செய்து அக்கறையோடு உழைக்கிறார். அவர் ஒருவரே தொழிலின் முழு உரிமையையும் கொண்டிருக்கிறார். ஏற்படும் இலாப-நட்டங்களையும் அவர் ஒருவரே ஏற்கிறார். அவர் தனி யாகவே தொழில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துகிறார். பல வகைத் தொழில் அமைப்புகள் வளர்ந்த பிறகும் தனிமனிதத் தொழில்முறை செல்வாக்கை இழக்கவில்லை. வேளாண்மை, சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவை இன்றும் இம் முறையில் செய்யப்பட்டு வருகின்றன. இம் முறை அதற்கே உரிய பாரம்பரியத்தையும், பழைமைத் தன்மையையும் பெற் றுள்ளது.

#### சிறப்புகள்

**1. தொடங்குவதில் எளிமை :** மற்ற தொழிலமைப்பு களைப் போலன்றித் தனி உரிமைத் தொழிலை எளிதில் தொடங்க லாம். சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் இல்லாத இத் தொழிலை விரைவில் துவங்கவும் முடிவுக்குக் கொண்டுவரவும் முடியும்.

**2. தொழிலில் அக்கறை :** சொந்தத் தொழில் என்பதால் உரிமையாளர் பாடுபட்டு உழைத்து இலாபம் ஈட்ட முயலுகிறார். கிடைக்கும் இலாபம் அவரை மட்டுமே சேர்வதால், அவர் தொழிலைச் சிக்கனமாகவும் திறமையோடும் நடத்துகிறார். வீண் செலவுகள் குறைவதால் ஆக்கச் செலவும் குறைகிறது.

**3. தன்னிச்சை நிலை :** தொழில் அமைப்பாளர் சுதந் திரத்தோடு தன்னிச்சையாகச் செயல்படுகிறார். தொழிலுக்கு

அவர் மட்டுமே அதிபராக இருப்பதால், பிறர் குறுக்கீடு இன்றிச் சுயமாகச் செயலாற்றுகிறார்.

**4. விரைவான முடிவுகள்** : இவ்வகைத் தொழில் முறையில் குறுகிய காலத்தில் முடிவுகளை விரைவாக எடுக்க முடிகிறது. தொழில் முனைவர் உற்பத்தி, நிர்வாகம், மேற்பார்வை, விற்பனை ஆகிய எல்லா நிலைகளிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்கிறார். உற்பத்தி முறை பற்றிய இரகசியங்களும் காக்கப்படுகின்றன.

**5. அதிகளவு உற்பத்தியும் தரமான உற்பத்தியும்** : சிறிய அளவில் உற்பத்தி அமைவதால், உற்பத்தி நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்பார்வையிட்டு உற்பத்தியின் அளவையும் தரத்தையும் கூட்டலாம். இழப்புகள் ஏற்பட்டால் ஏற்க வேண்டியவர் தனித் தொழில் அமைப்பாளரே. எனவே, அவர் இரவு பகல் பாராமல் உழைத்து உற்பத்தித் திறனைப் பெருக்குகிறார்.

**6. சிறப்பான நிர்வாகம்** : இம் முறையில் தொழில் அதிபர் பொருளை வாங்குபவர்களோடும், உழைப்பாளர்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார். இதனால், வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப பொருள்களை உற்பத்தி செய்து விற்பனையாக்குகிறார். உழைப்பாளர்களும் உண்மையான உழைப்பைத் தருகின்றனர். விற்பனை முறையும் சிறப்பாக அமைகின்றது. வேலைநிறுத்தம், கதவடைப்பு ஆகியவையும் தனி உரிமைத் தொழில் முறையில் ஏற்படுவதில்லை. சிறிய கருவிகளும் இயந்திரங்களும் கவனத்துடன் கையாளப்படுகின்றன. கச்சாப் பொருள்கள் சேதப்படுத்தப்படுவதில்லை. வியாபாரத் தந்திரங்கள் இரகசியமாகக் காக்கப்படுகின்றன. தேவைக்கேற்ப பொருள் உற்பத்தியின் அளவை மாற்றிக்கொள்ள முடிகிறது.

தனி மனிதன் தொழில்முறையில் இவ்விதமான பல நன்மைகள் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக, மருத்துவர், வழக்குரைஞர், கொல்லர், தச்சர், தையல்காரர், சலவையாளர், முடிதிருத்துபவர், கடைக்காரர் போன்றோருடைய தொழில்களைக் குறிப்பிடலாம்.

**குறைகள்**

1. தனித் தொழில் அமைப்பாளர் குறைவான மூலதனத்தை மட்டுமே திரட்ட இயலும். கடன் பெறவேண்டிய நிலையில் அவர் தன் சொத்தை அடைமானமாக வைக்கவேண்டி வரும்.

பெரும் நட்டத்தினுல் அவர் சொத்து சுகங்களே இழக்கவும் நேரிடும். குறைந்த மூலதனத்தைக் கொண்டு தொழிலே விரிவாக்கி அளவுச் சிக்கனங்களேப் பெறமுடியாது.

2. இம் முறையில் தொழிலதிபர் வரையறையற்ற பொறுப்புகளேக் கொண்டிருக்கிறர். இலாபமடையும்போது நன்மையடையும் அவர் சிறுஇழப்பினுலும் பெரிதும் பாதிக்கப்படுவார்.

3. முன்னேற்றமான தொழில்நுட்பத்தையும், வேலேப் பகுப்பு முறையையும் சிறிய அளவுத் தனியார் உரிமை அமைப்பில் கைக்கொள்ள இயலாது. இதனுல், உற்பத்திச் செலவைக் குறைப்பது கடினமாகிறது. எனவே, பெரிய தொழில்களின் போட்டியால் தனி உரிமைத் தொழில் அழிந்துவிடக்கூடும்.

4. ஒரு தனி மனிதன் திறமையை மட்டும் சார்ந்து அமைவதால் தொழிலோ வாணிகமோ சிறப்பாக வளர வாய்ப்பில்லே. மேலும், தனிஒருவரே உற்பத்தி, மேற்பார்வை, விற்பனே, நிர்வாகம் ஆகிய யாவற்றையும் ஒருங்கே செய்வது கடினமானது.

5. தொழில் அமைப்பாளர் இறக்கும்போது தொழிலும் சீர்குலேந்துவிடும். அவருடைய வாரிசுதாரர்கள் அத் தொழிலே தொடர்ந்து நடத்த விரும்பாமல் இருக்கக்கூடும்.

6. இன்றைய வாணிகத்தில் விளம்பரம் செல்வாக்கைக் கொண்டுள்ளது. விளம்பரமின்றி எந்தப் பொருளேயும் விற்பனே செய்வது கடினம். தனியுரிமைத் தொழிலில் விளப்பரத்திற்குச் செலவு செய்யப் போதுமான நிதி வசதிகள் இருப்பதில்லே.

இவ்வாறு இடர்களேத் தனி உரிமைத் தொழிலமைப்பில் தொழில்முனேவர் ஏற்கவேண்டியுள்ளது.

### (ii) கூட்டாளித் தொழில்முறை (Partnership Firm)

தனி உரிமைத் தொழிலமைப்பில் உள்ள குறைபாடுகள் பல, கூட்டாளித் தொழில்முறை அல்லது கூட்டுத் தொழிலமைப் பின்மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இம் முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டாளிகள் ஒன்றுகூடி மூலதனத்தை அளித்துத் தொழிலேத் தொடங்குகின்றனர். இலாப-நட்டங்களே அவர்கள் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர். தங்களுடைய ஒப்பந்தங்களேப் பத்திரமாக எழுதி அரசாங்கத்தில் பதிவு செய்து, அவர்கள் தொழில் நடவடிக்கைகளே ஆரம்பிக்கின்றனர்.

பெரும்பாலும் உறவினர்களும் நண்பர்களும் கூட்டாளிகளாக இருப்பதுண்டு. தொழிலில் இழப்பு ஏற்படுமானால், கூட்டாளிகள் ஒவ்வொருவரும் தனித்தும் கூட்டாகவும் பொறுப்புள்ளவர்கள் ஆவர். கடனைத் தீர்க்கக் கூட்டாளிகளின் பொதுச் சொத்து போதுமானதாக இல்லாவிட்டால், கூட்டாளிகள் தங்களுடைய தனிச் சொத்தையும் விற்றுக் கடனைத் தீர்க்கவேண்டும்.

கூட்டாளித் தொழிலமைப்புச் சட்டத்தின்படி, வங்கித் தொழிலில் 10 பேர் வரையிலும், வாணிகத்தில் 20 பேருக்கு அதிகரிக்காமலும் கூட்டாளிகளாக இணைந்து தொழிலை மேற் கொள்ளலாம். போட்டியைத் தவிர்த்துத் திறமையைப் பெருக்க கூட்டாளித் தொழில் முறை தொடங்கப்படலாம். தொழிலின் நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் ஏற்றுச் செயல்படும் கூட்டாளிகள் 'உழைக்கும் பங்குதாரர்கள்' (Active Partners) ஆவர். நிர்வாகப் பொறுப்பை ஏற்காமல் இலாப-நட்டங்களை மட்டும் பகிர்ந்துகொள்பவர்கள் 'உழையாப் பங்குதாரர்கள்' (Sleeping Partners ) எனப்படுவர். தொழிலுக்குச் சமுதாயத்தில் மதிப்பை ஏற்படுத்தவேண்டி மூலதனத்தையும் உழைப்பையும் அளிக்காத சிலரும் 'பெயரளவுக் கூட்டாளிகளாகச்' (Nominal Partners) சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். கடன் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பங்குதாரர்களையும் (Limited Partners) சில கூட்டாளித் தொழிலமைப்புகள் சேர்த்துக்கொள்கின்றன. இவர்கள், நிர்வாகத்தில் பங்கேற்க இயலாது.

பேச்சு வார்த்தைகளிலேயே ஒப்பந்தங்கள் செய்துகொண்டு கூட்டாளித் தொழிலமைப்பை ஏற்படுத்தலாம். கூட்டு ஒப்பந்தப் பத்திரம் (Partnership Deed) எழுதித் தொழிலைப் பதிவுசெய்யத் தேவையில்லை. எனினும், சச்சரவுகளைத் தவிர்க்கப் பத்திரம் பதிவுசெய்யப்படுவது தேவையாகிறது.

**சிறப்புகள்**

**1. அதிக மூலதனம்** : தனி உரிமைத் தொழில் அமைப்போடு ஒப்பிடும்போது, இம் முறையில் மூலதனத்தைக் கணிசமான அளவில் திரட்ட வாய்ப்புள்ளது. கூட்டாளிகள் பலருடைய சிறிய அளவு மூலதனமும்கூட ஒன்றுகத் திரட்டப்படும் போது பெரிய அளவினதாகப் பெருகுகிறது. பங்காளிகள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திப் பெருமளவுக் கடனையும் நீண்டகாலத் தவணையில் பெறமுடியும்.

**2. எளிதாக அமைத்தல்** : அரசின் சட்டதிட்டங்களும் விதிமுறைகளும் கூட்டாளித் தொழிலமைப்பை அதிக அளவுக்குக்

கட்டுப்படுத்துவதில்லை. ஆகவே, இவ்வகை நிறுவனங்களை எளிதில் ஏற்படுத்தலாம். தொழிலைக் கலைப்பதும் எளிதானதே.

**3. நிர்வாகத் திறமை :** நிர்வாகத்தைத் திறம்பட நடத்தக் கூட்டாளிகள் தங்களுக்குள் கலந்து ஆலோசனை நடத்தலாம். கூட்டாளிகள் தங்களுடைய திறமைக்கேற்ப நிர்வாகப் பணிகளைப் பகிர்ந்துகொள்ளலாம். இவ்வகைத் தொழிலில் மூலதனத்தை மட்டும் அளித்து நிர்வாகத்தில் பங்கு பெறுத 'உழையாக் கூட்டாளிகளும்' இருக்கின்றனர். மூலதனத்தைப் பெற்றிருப்பவர்களும், நிர்வாகத் திறமையுள்ளவர்களும் இணைந்து கூட்டாளித் தொழிலமைப்பை ஏற்படுத்தலாம். இதனால் இவ்விரு பிரிவினருமே நன்மையடைவர்.

**4. வரையறையற்ற கடன் பொறுப்பு :** வரையறையற்ற கடன் பொறுப்பினால், கூட்டாளிகள், இழப்புகள் ஏற்படாத வகையில் திறமையுடனும், கவனத்துடனும், அக்கறையுடனும் செயல்படுகின்றனர். இதனால், கடன் அளிப்பவர்களும் கடன் தரத் தயங்குவதில்லை.

**5. விரைவான தொழில் வளர்ச்சி :** அதிக மூலதனம், திறமையான நிர்வாகம், கூட்டாளிகளின் ஊக்கம் ஆகியவற்றால் தொழில் விரைந்து வளரும். தவிர, ஊக வணிகம் (speculative trade) போன்ற நஷ்டம் தோன்றும் வாய்ப்புள்ள தொழில் நடவடிக்கைகளில் கூட்டாளிகள் ஈடுபடமாட்டார்கள். பெறப்படும் இலாபத்தையோ நஷ்டத்தையோ ஒவ்வொரு கூட்டாளியும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமாதலால், எல்லாக் கூட்டாளிகளும் தொழிலின் வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றனர்.

**6. விரைவாக முடிவெடுக்கும் நிலை :** கூட்டாளிகள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பதால், உற்பத்தி நடவடிக்கைகளின் பல சிக்கல்களுக்கும் விரைவில் தீர்வு காணமுடிகிறது. தடையின்றித் தீர்மானங்கள் குறுகிய காலத்தில் எடுக்கப்படுகின்றன.

**7. பேரளவு ஆக்கம் :** மூலதனத்தை அதிக அளவுக்குத் திரட்ட வாய்ப்பிருப்பதாலும் பேரளவு உற்பத்தி முறை மேற்கொள்ளப்படுகிறது. உறபத்தியில் இயந்திரங்களும் ஈடுபடுத்தப் பெறுகின்றன. இதனால் பெறப்படும் சிக்கனங்களால் உற்பத்திச் செலவு குறைகிறது.

**8. குறைவான இடர்கள் :** பேரளவில் இழப்பு ஏற்பட்டாலும்கூட, அது பல பங்குதாரர்களிடையே பரவலாகப் பங்கிடப்படுவதால், தனியொரு கூட்டாளி அதிக அளவுக்குப் பாதிக்கப்படுவதில்லை. விருப்பமுள்ளவர்கள் மட்டுமே நிர்வாகத்தில் பங்கேற்றல் போதுமானது. பிற கூட்டாளிகள் மூலதனத்தை அளித்து நிர்வாகப் பொறுப்புகளில் இருந்து விலகி இருக்கலாம்.

**குறைகள்**

1. வரையறுக்கப்படாத கடன்பொறுப்பு உள்ளதால் இவ்விதத் தொழிலமைப்பில் கூட்டாளியாகச்சேரப் பெருஞ் செல்வந்தர்கள் முன்வருவதில்லை. ஏனெனில், தொழில் நிறுவனத்தின் கடனுக்கு ஒவ்வொரு கூட்டாளியும் தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பைக் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாகவே, அதிக இலாபம் தரும் நிறுவனத்தில் பங்காளியாகச் சேருவதற்குக்கூடப் பலரும் தயங்குகின்றனர்.

2. கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் நிறுவன வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன. தொழிலானது தொடர்ந்து நீண்ட காலம் செயல்படத் தேவையான சுமுகமான கூட்டுறவு கூட்டாளிகளிடையே இருப்பதில்லை. மேலும், சிலர் குறைந்த பணிகளை ஆற்றி அதிகப் பலன்களை எதிர்பார்ப்பதும் உண்டு.

3. கூட்டாளித் தொழிலமைப்பு நிலையற்ற தன்மையைக் கொண்டது. பங்குதாரர்கள் விலகினாலோ, இறந்தாலோ, சித்த மிழந்தாலோ, திவாலானாலோ சட்டப்படி இத்தொழிலமைப்புக் கலைக்கப்படவேண்டும். ஆனால், அதன் பிறகு தொழிலை மாற்றியமைக்க வழியுண்டு.

4. கூட்டுப் பங்கு நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் கூட்டாளித் தொழிலமைப்பில் உற்பத்தியின் அளவு குறைவாகவே இருக்கிறது. கூட்டாளிகளின் கவனக் குறைவாலும் அக்கறையின்மையாலும் கூட்டாளித் தொழிலமைப்பின் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது.

5. கூட்டாளிகளின் உயர்ந்த பட்ச எண்ணிக்கை இருபதாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் மிகப் பெரிய தொழில்களுக்கான அதிக அளவு மூலதனத்தைக் கூட்டாளித் தொழில் முறையின் மூலம் திரட்ட இயலாது. இரும்பு–எஃகு உருக்காலைகள்,

நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள், சணல் ஆலைகள் போன்ற வற்றை நிறுவப் பல இலட்சம் ரூபாய் மூலதனமாகத் தேவைப்படு கிறது. இத்தொழில் ஆலைகளைக் கூட்டாளித் தொழில் முறையின் கீழ் அமைக்க முடியாது.

இவ்வகைத் தொழிலமைப்பு, சிறு தொழில்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், கடைகள் போன்ற சிலவற்றில் மட்டுமே ஏற்படுத்தப்படலாம். கனரகத் தொழில்களை இம் முறையின் கீழ் நிறுவஇயலாது.

**(iii) கூட்டுப் பங்கு நிறுவனம்** (Joint Stock Company)

பெரிய தொழில்களை நிறுவ அதிக மூலதனம் தேவை. அதிக மூலதனத்தைத் திரட்டக் கூட்டுப்பங்கு நிறுவனமுறை உதவு கிறது. பங்குகளை (Shares) வாங்கும் பங்குதாரர்கள் (Share holders) நிறுவனத்தை நிர்வகிக்கும் பொறுப்புடைய இயக்குநர் குழுவைத் (Board of Directors) தேர்ந்தெடுக்கின்றனர். உலக நாடுகள் பலவற்றிலும் செயல்படும் பல பெரிய தொழில்கள் கூட்டுப் பங்கு நிறுவனங்களாகவே உள்ளன. அரசின் அனுமதி பெற்று இந்நிறுவனங்கள் பங்குதாரர்களால் நடத்தப்படுகின்றன.

கூட்டாளித் தொழிலமைப்பு மனிதர்களின் கூட்டுறவால் நடைபெறுவதாகும். கூட்டுப் பங்கு நிறுவனங்கள் மூலதனத்தின் கூட்டுறவால் ஏற்படுபவை. நிறுவனத்தின் இலாபம், பங்குகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பங்குகளின் அளவிற் கேற்ப பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. கூட்டுப் பங்கு நிறுவனங்களை இரு வகைகளாகப் பிரிவு செய்யலாம். இரண்டுக்கு அதிகமாக ஐம்பதிற்குட்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு 'பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங் கள்' (Private Limited Companies) பங்குதாரர்களின் பங்கு களையோ, கடன் பத்திரங்களையோ பிறருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது. 'பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்கள்' (Public Limitted Companies) ஏழு பேருக்குக் குறையாத பங்குதாரர்களால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. ' பங்கு தாரர்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு ஏதுமில்லை. பங்கு களும் கடன் பத்திரங்களும் (debentures) பொது மக்களிடம் விற்கப்படுகின்றன. பங்குகளை மாற்றிக் கொள்ளலாம்.

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் பின்வரும் பல வகை மூல தனத்தைப் பெற்றுத் தொடங்கப்படுகின்றன. சாதாரணப் பங்கு கள் (Ordinary Shares), சலுகைப் பங்குகள் ((Preference Shares), மீட்புச் சலுகைப் பங்குகள் (Redeemable Preference Shares),

ஒதுக்கப்பட்ட பங்குகள் (Deferred Shares), குவியும் சலுகைப் பங்குகள் (Cumulative Preference Shares), பங்கு கொள்ளும் சலுகைப் பங்குகள் (Participating Preference Shares), கடன் பத்திரங்கள்.

**சிறப்புகள்**

கூட்டுப்பங்கு நிறுவனங்களால் பல நன்மைகள் விளைகின்றன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம் :

**1. மிக அதிக மூலதனம் :** உள் நாட்டிலும், வெளி நாடு களிலும் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் விற்றுக் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் அதிக அளவு மூலதனத்தை எளிதில் திரட்ட முடியும். பங்குகளின் விலை குறைவாக இருப்பதாலும், பங்குகளை மாற்றிக் கொள்ள முடிவதாலும், பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாலும் நடுத்தர வருமானம் பெறும் வகுப்பினரும் பங்கு களை வாங்குவதில் நாட்டம் கொள்கின்றனர்.

**2. நிலையாக நீடிக்கும் தன்மை :** கூட்டுப்பங்கு நிறுவனங் கள் நீண்ட காலம் தொடர்ந்து நிலைத்திருந்து செயல்படக் கூடி யவை. பங்குதாரர்கள், இயக்குநர்கள், மேலாளர்கள் மாறி னாலும் நிறுவனம் செயல்பட்டுக் கொண்டே இருக்கும். தொழி லமைப்புச் சட்டதிட்டங்களும் விதி முறைகளும் இதற்கு நிரந்தரத் தன்மையை அளிக்கின்றன.

**3. வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்பு :** வாங்கும் பங்குகளின் அளவிற்கேற்பவே கடன் பொறுப்பு வரையறுக்கப் பட்டுள்ளது. பங்குதாரர்களின் தனிச் சொத்து எவ்வகையிலும் பாதிக்கப்படாது. தொழில் திறமையற்றவர்களும் கூட பங்கு களை வாங்கி அதிக வருமானத்தைப் பெறலாம். ஏனெனில், நிர்வாகம் திறமை மிக்கச் சிலரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

**4. எளிய முறையில் முதலீடு செய்ய வசதி :** குறைந்த அளவில் மட்டுமே முதலீடு செய்யும் திறன் கொண்டவர்கள் கடன் பத்திரங்களை வாங்கலாம். அப்பத்திரங்களுக்கு ஆண்டு தோறும் நிலையான வட்டி தரப்படுகிறது. அதிகச் செல்வத்தை யும் வருமானத்தையும் கொண்டவர்கள் பங்குகளை வாங்கலாம்.

**5. ஜனநாயக முறையில் இயக்குநர் குழு தேர்ந்தெடுக்கப் படுதல் :** கூட்டுப்பங்கு நிறுவனத்தின் பங்குதாரர்கள் பொதுக் குழு உறுப்பினராவர். பொதுக் குழு, இயக்குநர் குழுவைத்

தேர்ந்தெடுக்கிறது. பங்குகளின் அளவுக்கேற்ப வாக்குரிமை அமையும்.

**6. திறமை மிக்க நிர்வாகம்:** நிறுவன நிர்வாகத்திற்கான கொள்கைகளைத் தீர்மானிப்பவர்கள் இயக்குநர்களாக இருப்பினும், தொழில் நடவடிக்கைகள் திறமையான தேர்ச்சி பெற்ற நிர்வாகிகளாலும் மேலாளர்களாலும் செய்யப்படுகின்றன.

**7. பங்குதாரர்களின் உரிமை:** தொழில் முன்னேற்றத்திற்கும், நிர்வாகம் திருத்தமாக நடைபெறவும் இயக்குநர் குழு பாடுபடுகிறது. ஆனால், இயக்குநர் குழுவின் தவறான கொள்கைகளால் இழப்புகள் தோன்றுமானால், பங்குதாரர்கள் இயக்குநர் குழுவை மாற்றியமைக்கலாம்.

**8. மிகப் பெரிய தொழில்களையும் அமைப்பதற்கான சாத்திய நிலை:** பெருமளவு மூலதனத்தைத் தேவையாகக் கொண்ட கார், ஸ்கூட்டர் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களைத் தொடங்கக் கூட்டுப்பங்கு நிறுவன முறை உதவுகிறது. எந்தத் தொழிலிலும், எந்த இடத்திலும், எக்காலத்திலும் கூட்டுப் பங்கு நிறுவனங்களை எளிதில் தோற்றுவிக்கலாம்.

**9. அரசின் கட்டுபாடு:** கூட்டுப்பங்கு நிறுவனங்கள் சட்டதிட்டங்களுக்குட்பட்டுச் செயலாற்றுகின்றனவா என்பதை அரசு கண்காணிக்கிறது. இதனால், மோசடிகளுக்கும் ஏமாற்று வேலைகளுக்கும் வாய்ப்பு இருப்பதில்லை.

**10. சேமிப்புப் பெருக்கம்:** சிறு சேமிப்புகளையும் கூட கூட்டுப்பங்கு நிறுவனங்களில் முதலீடாக்க முடிகிறது. இந்நிறுவனங்களால் மக்களிடையே சேமிக்கும் விருப்பமும், சேமிக்கும் திறனும் பெருகுகின்றன. அதிகரிக்கும் வருமானம் நுகரப்படாமல், இவ்வாறான முதலீடுகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால், நாட்டின் மொத்த ஆக்கமும் வருமானமும் கூடி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கின்றது.

**குறைகள்**

இவ்வகை அமைப்பில் நன்மைகள் பலவற்றோடு சில குறைபாடுகளும் காணப்படுகின்றன.

**1. நிறுவன வளர்ச்சியில் அக்கறையின்மை:** வெவ்வேறு இடங்களிலும் சிதறிக் கிடக்கும் பங்குதாரர்கள் தொழில் முன்

னேற்றத்தில் அக்கறை கொண்டிருப்பதில்லை. இவர்களுடைய நிலை சாகுபடியை நேரடியாகச் செய்யாத நிலக்கிழார்களுக்குச் சமமாக இருக்கிறது. நிறுவனத்திலிருந்து பங்குதாரர்கள் விலகி இருக்கிறார்கள்.

**2. சிலரிடம் அதிகாரக் குவிப்பு :** பங்குகளின் அடிப்படையில் வாக்குரிமை தரப்படுவதால், இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிகப் பங்குகளைப் பெற்றவர்களின் செல்வாக்கே ஓங்கி இருக்கிறது. எனவே, திறமை மிக்கவர்கள் இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாமற் போகலாம்.

**3. பங்குதாரர்களுக்கு நிர்வாகத்தில் உரிமையின்மை :** நிர்வாகத்திற்கான கொள்கை முடிவுகள் இயக்குநர் குழுவால் எடுக்கப்படுகின்றன. சிறிய அளவுப் பங்குதாரர்கள் நிர்வாகத்திலும் கொள்கைகளை வகுப்பதிலும் நேரடியாக ஈடுபட இயலாது.

**4. இயக்குநர்களின் சுயநலம் :** பெரும்பாலும் இயக்குநர்கள் தன்னலத்துடனே செயல்படுகின்றனர். அவர்கள் தங்களுக்கு வேண்டிய உறவினர்களையும், நண்பர்களையும் மேலாளர்களாகவும், நிர்வாகிகளாகவும் நியமிக்கின்றனர். அவர்கள் நிறுவனத்தின் நிதி வசதிகளையும் பிற வசதிகளையும் தாங்கள் உடனமையாகக் கொண்டுள்ள சிறு தொழில்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். தன்னல நோக்குள்ள இயக்குநர்கள் பங்குகளின் விலையைக் குறைத்தோ கூட்டியோ அதிக இலாபம் பெறுவர்.

**5. வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்பு :** பங்குதாரர்களின் கடன் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதால், தொழில் முன்னேற்றத்தில் அவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதில்லை. இயக்குநர்கள் தங்கள் விருப்பம் போல நிறுவனத்தை நடத்திச் செல்கின்றனர்.

**6. நிர்வாகத் திறமை குறைவு :** வாணிக அனுபவமில்லாத மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், பொறிஞர்கள் போன்றோர் இயக்குநர்களாக இருக்கக்கூடும். இவர்களால் சிறப்பான நீர்வாகத்தைச் செய்ய முடியாது. மேலும், பங்குதாரர்களுக்கும் உழைப்பாளர்களுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதில்லை. எனவே, வேலை நிறுத்தம், கதவடைப்புப் போன்றவை உழைப்பவர்களாலும் நிர்வாகத்தினராலும் செய்யப்படுகின்றன.

**7. முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் :** சில பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண்பது இன்றியமையாதது. ஆனால்,

இயக்குநர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்து முடிவெடுப்பதில் கால தாமதம் ஏற்படக்கூடும். இதனால், நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செம்மையாகச் செய்யமுடியாது.

**8. நிர்வாக மாற்றம் :** ஆண்டுதோறும் நிர்வாகிகள் மாறும்போது, புதிய நிர்வாகிகள் நிர்வாகக் கொள்கைகளை மாற்றக்கூடும். புதிய கொள்கைகளுக்கும் பழைய கொள்கைகளுக்கும் தொடர்பு குறைந்து நிர்வாக முறை சீர்குலைந்து தொழிலில் நஷ்டம் ஏற்படவும் வாய்ப்புண்டு.

**9. நிறுவன அமைப்புச் சிக்கல் :** பல சட்டதிட்டங்களுக்குட்பட்டே கூட்டுப்பங்கு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தனி உரிமைத் தொழில், கூட்டாளித் தொழில் ஆகியவை போன்று இவற்றை எளிதில் துவங்க முடியாது.

**10. செல்வமும் வருமானமும் ஒரு சிலரிடம் குவிதல் :** பங்கு அங்காடிகளில் செய்யப்படும் ஊக வியாபாரத்தால் சிலர் செல்வந்தர்களாகவும், பலர் வறியவர்களாகவும் மாறுகின்றனர். மேலும், கூட்டுப்பங்கு நிறுவன முறையில் முதலாளித்துவ முறையின் இயல்புகள் காணப்படுகின்றன. இம்முறை சமதர்மச் சமுதாயத்தை ஏற்படுத்த உதவாது. கூட்டுப்பங்கு நிறுவனங்களில் அமைந்திருக்கும் 'நிர்வாகப் பதிலாண்மை முறையும்' (managing agency system) வருமானத்தையும் செல்வத்தையும் ஒரு சிலரிடம் மட்டுமே குவிக்கிறது.

## கூட்டாளித் தொழிலையும் கூட்டுப்பங்கு நிறுவனத்தையும் ஒப்பிடுதல்

| கூட்டாளித் தொழிலமைப்பு | கூட்டுப்பங்கு நிறுவனம் |
|---|---|
| 1. ஒப்பந்தத்தின்மூலம் ஏற்படுத்தப்படுவது. | 1. சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்படுவது. |
| 2. கூட்டாளிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு கிடையாது. | 2. கூட்டாளிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு உண்டு. |
| 3. அதிக அளவு மூலதனத் திரட்டு. | 3. குறைந்த அளவு மூலதனம். |
| 4. நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குவது. | 4. நிறுவன விதிகளுக்குட்பட்டுச் செயல்படுவது. |
| 5. அமைப்பதும் கலைப்பதும் எளிது. | 5. நிறுவுவதும் கலைப்பதும் கடினம். |
| 6. பதிவு செய்வது கட்டாயமல்ல. | 6. கட்டாயமாகப் பதிவு செய்வது தேவை. |
| 7. கூட்டாளிகளின் நேரடி நிர்வாகம். | 7. பங்குதாரர்கள் நிறுவன நிர்வாகத்தில் நேரடியாக ஈடுபடுவதில்லை. |
| 8. வரையறுக்கப்படாத கடன் பொறுப்பு. | 8. வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்பு. |
| 9. கூட்டாளிகளின் ஒப்புதலின்றிப் பங்குகளை மாற்ற இயலாது. | 9. பங்குகளை எளிதில் மாற்றலாம். |
| 10. கணக்குகளைத் தணிக்கை செய்வது கட்டாயமல்ல. | 10. கட்டாயமாகக் கணக்குத் தணிக்கை செய்யவேண்டும். |

## iv. கூட்டுறவு அமைப்பு (Co-operative Organisation)

நாம் இதுவரை கண்ட தொழிலமைப்பின் மூன்று முறைகளிலும் இலாப நோக்கே முக்கியமானதாக அமைகிறது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் தரகர்களின் சுரண்டல்களில் இருந்து மீள கூட்டுறவு அமைப்பு உதவுகிறது. உற்பத்தியாளரிடம் பொருள்களைக் குறைந்த விலையில் கொள்முதல் செய்து, நுகர்வோரிடம் அப்பொருள்களை அதிக விலையில் விற்றுத் தரகர்கள் கொள்ளை இலாபம் பெறுகின்றனர். இவ்விதச் சுரண்டலில் இருந்துத் தங்களைக் காத்துக்கொள்ள உற்பத்தியாளரும் நுகர்வோரும் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

மூலதனத்தின் கூட்டால் மட்டும் கூட்டுறவு அமைப்பு ஏற்படாமல், பொது நல நோக்கம் கொண்ட பலரின் கூட்டுறவாலும் ஏற்படுவதாகும். 'எல்லோருக்காக ஒருவரும், ஒருவருக்காக எல்லோரும்' என்ற குறிக்கோளின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பு இயங்குகிறது. இம்முறையில் பங்கு மூலதனத்தின் அளவுக்கேற்ப வாக்குரிமை அமையாமல், ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்னும் வகையில் உண்மையான ஜனநாயகத் தேர்வு நிலை அமைந்துள்ளது.

1904ஆம் ஆண்டிலேயே இந்தியாவில் முதன் முதலாக வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. சமீப காலத்தில் எல்லாப் பொருளாதாரத் துறைகளிலும் வெவ்வேறு வகையில் கூட்டுறவு வளர்ந்துள்ளது. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் (Producers' co-operative societies), நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் (Consumers' co-operative societies), கூட்டுறவுக் கடன் சங்கங்களும் (Co-operative credit societies) போன்றவை அதிக எண்ணிக்கையில் பெருகியுள்ளன.

இம்முறையில் பொருள்கள் உற்பத்தியாளரிடமிருந்து நயமாக வாங்கப்பட்டு நுகர்வோரிடம் நியாயமான விலையில் விற்கப்படுகின்றன. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளருக்குத் தேவையான மூலப் பொருள்களைக் குறைந்த விலையில் அளிக்கின்றன. இன்று பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாளர்களாலும், விவசாயிகளாலும், அரசு ஊழியர்களாலும், கல்லூரி மாணவர்களாலும், பெண்டிராலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

### சிறப்புகள்

1. இலாபத்தைக் கருதாமல் 'பொது நலனையே' முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்

படுகிறது. இதனால், உறுப்பினர்களின் பண்பு உயர்ந்து, அவர்கள் சமூக நலனில் அக்கறை கொள்கிறார்கள்.

2. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறிதளவு இலாபத்தோடு பொருள்களைக் குறைந்த விலைகளில் விற்பனை செய்கின்றன.

3. நிர்வாகத்தில் எல்லா உறுப்பினர்களும் சரிசம உரிமையைப் பெறுகின்றனர். ஜனநாயக முறைப்படி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு. பங்கு மூலதனத்தை இடும் அளவுக்கேற்ப ஒருவருக்கான வாக்கு களின் எண்ணிக்கை மாறுவதில்லை.

4. வியாபாரிகள் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் சுரண்டும் நிலை தவிர்க்கப்படுகிறது.

5. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் குறைந்த வட்டியிலும் நீண்ட காலத் தவணை முறைகளிலும் உறுப்பினர்களுக்குக் கடன் களைத் தருகின்றன.

6. கூட்டுறவு அமைப்பில் முதலாளித்துவத்தின் சில நன்மைகளும், சமதர்மத்தின் சில நன்மைகளும் கூட்டாகக் கிடைக்கப் பெறுகின்றன.

7. உறுப்பினர்களின் மூலதன அளிப்பிற்கேற்ப, பெறப் படும் இலாபத்தின் அளவு அமைகிறது.

8. பிற தொழிலமைப்புகளைப் போலன்றிக் கூட்டுறவு அமைப்பில் முதலாளி – தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவுகள் அமைவதில்லை. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக் கும் தொழிலாளர்கள் ஊதியத்தோடு இலாபத்தில் பங்கையும் பெறுகின்றனர்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கிலாந்து நாட்டிலும், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பிரான்சிலும் தோன்றின. டென்மார்க்கில் கூட்டுறவு பால் பண்ணைகள் பெருமளவுக்கு வளர்ந்துள்ளன. நம் நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்குக் கூட்டுறவு முறை பெரிதும் உதவியுள்ளது. கூட்டுறவு நில அடமான வங்கிகள் கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள். கூட்டுறவு வீட்டு அடமான வங்கிகள், கூட்டுறவு சேவைச் சங்கங்கள், கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு சிறு தொழில்கள், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள், கூட்டுறவு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றால் மக்கள் பல நன்மைகளையும் அடைகின்றனர்.

**குறைகள்**

1. தற்காலத்திற்குரிய பேரளவுத் தொழில்களைக் கூட்டுறவு முறையில் அமைப்பது கடினம்.

2. சிறப்பான குறிக்கோள்களைக் கொண்டிருப்பினும், கூட்டுப்பங்கு நிறுவனங்களில் இருப்பது போலவே கூட்டுறவுச் சங்கங்களிலும் ஒரு சிலரின் ஆதிக்கம் நிலைபெற்றுவிடுகிறது.

3. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் சிறப்பாக அமைவ தில்லை. பணியாளர்கள் கடமையுணர்வோடு உழைப்பதில்லை.

4. சமீப காலமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய் யும் பொருள்களின் தரம் தாழ்வாக இருப்பதோடு, விலை மட்டங் களும் வெளிச் சந்தையோடு ஒப்பிடும்போது அதிகமாக உள்ளன.

5. கடன் சங்கங்கள் செல்வாக்கு உள்ளவர்களுக்கு மட்டுமே கடன்களை அளிக்கின்றன.

6. நிர்வாக ஊழல்களும் திறமைக் குறைவும் கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன.

## (v) அரசு நிறுவனம் (State Enterprise)

வளரும் நாடுகள் பலவற்றில் சமதர்மச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கம் இருந்து வருகிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்றவும், பொது மக்களின் நலனைக் கருதியும், வருமா னத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அரசு பல தொழில்களை ஏற்று நடத்துகிறது. நம் நாட்டில் மத்திய அரசும் மாநில அரசுகளும் எண்ணற்ற பெரிய தொழில்களையும் சிறிய தொழில்களையும் நடத்தி வருகின்றன.

முன்பு நாம் கண்ட நான்கு வகைத் தொழிலமைப்புகளும் தனியார் துறையைச் சேர்ந்தவை. மக்களுக்கு மிகுபயன் அளிக் கும் தபால், தந்தி, மின்சார அளிப்பு, இரயில்வே, குடிநீர் வழங்குதல், தொலைபேசி போன்ற பொதுப் பயன் பணிகளை அரசு ஏற்று நடத்துவது இன்றியமையாதது. இவற்றைத் தனி யார் துறையில் செயல்பட அனுமதித்தால் முற்றுரிமை நிலைகள் தோன்றும்.

குறுகிய காலத்தில் இலாபத்தைத் தராத துறைகளில் தனி யார் முதலீடு செய்யத் தயங்குவர். இவற்றோடு 'பொதுப் பயன் பணித்' (Public Utility Service) தொழில்களையும் அரசு நடத்த வேண்டும். சில துறைகளில் மிக அதிக மூலதனம் தேவை

யாக இருக்கும். உதாரணமாக, இரும்பு-எஃகுத் தொழில், சாலைகள் அமைத்தல், அணைகள் கட்டுதல், மின்சார உற்பத்தி, சுரங்கத் தொழில் போன்றவற்றை நடத்துவது அரசின் கடமையாகும்.

அத்தியாவசியமான பற்றுக்குறைப் பண்டங்களைக் கொள்முதல் செய்து, மக்களிடம் குறைந்த விலையில் அவற்றை விநியோகிக்கும் பணியையும் அரசு ஏற்க வேண்டும். இதற்கு உதாரணமாக, 'இந்திய உணவுக் கழகத்தைக்' (Food Corporation of India) குறிப்பிடலாம். அயல்நாடுகளின் தாக்குதலினின்றும் நாட்டைக் காக்கும் சில பாதுகாப்புத் தொழில்களையும், பணவெளியீட்டையும் அரசு ஏற்று நடத்துகிறது.

பஞ்சாயத்துகள், நகராட்சிகள், மாநில அரசுகள், மத்திய அரசு ஆகியவை ஏற்று நடத்தும் தொழில்களைப் 'பொது நிறுவனங்கள்' என்கிறோம். மக்களின் நலம் காக்க, அரசு குறைந்த விலையில் தரமான பொருள்களையும் பணிகளையும் தனது நிறுவனங்களின்மூலம் அளிக்கிறது. அரசு தொழில்களை அரசின் நிர்வாகத் துறை அல்லது அவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் நடத்துகின்றன. இந்திய ரிசர்வ் வங்கி, ஆவடி டாங்கித் தொழிற்சாலை, இந்திய ஆயுள் காப்புறுதிக்கழகம், பஸ் போக்குவரத்துக் கழகங்கள், சிந்திரி இரசாயன உர உற்பத்தித் தொழில், ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போன்ற பலவற்றைப் பொதுத்துறை அமைப்புகளாகக் கொள்ளலாம்.

**சிறப்புகள்**

**1. மிக அதிக அளவு மூலதனம் :** மற்றெல்லாத் தொழில் அமைப்புகளையும் விட அரசு நிறுவனங்களில் தேவையான மூலதனத்தை எளிதாகப் பெறலாம்.

**2. பொதுநல நோக்கு:** மக்களின் நலனுக்காகவே பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுகின்றன. இலாபத்தைப் பெறுவது நோக்கமாக இல்லை.

**3. நீண்ட காலத்தில் பயனளிக்கும் தொழில்களைத் தொடங்குதல் :** சில குறிப்பிட்ட தொழில்கள் முதலீடு செய்த பிறகு பல ஆண்டுகள் கழித்துப் பலனளிக்கின்றன. இத் தொழில்

களில் முதலீடு செய்யத் தனி மனிதர்கள் தயங்குவர். நாட்டு முன்னேற்றத்தைக் கருதி அரசு இவற்றை நடத்துகிறது.

**4. அரசு தொழில் அமைப்பாளராகப் பணியாற்றுதல் :** பின்தங்கிய நாடுகளில் தொழில்துறை வளர்ச்சி அரசு நிறுவனங்களாலேயே ஏற்படுகிறது. இந்த நாடுகளில் தொழில் முயல்வோருடைய எண்ணிக்கையும் குறைவாக உள்ளது.

**5. பொருளாதார முன்னேற்றம் :** வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் வளர அரசு நிறுவனங்கள் வகை செய்கின்றன. அரசு நிறுவனங்கள் பொருளாதார நடவடிக்கைகளைப் பெருக்குவதோடு ஊக்குவிக்கவும் செய்கின்றன. இதனால், வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன. இவற்றால் மூலதனத் திரட்சி விரைவடைந்து முதலீடுகள் அதிகரிக்கின்றன. பொருளாதார வளர்ச்சி வீதமும் உயர்கிறது.

**6. பேரளவு உற்பத்தியின் நன்மைகள் :** அரசின் பெரிய தொழில்களில் இயந்திரங்களைக்கொண்டு பேரளவில் உற்பத்தி நடைபெறுவதால், அகப்புறச் சிக்கனங்கள் பெறப்படுகின்றன. கிடைக்கும் இலாபம் திரும்பவும் பொதுநலனுக்காகவே செலவிடப்படுகிறது. மேலும், அரசு நிறுவனங்களைத் திறமைமிக்கவர்கள் நிர்வகிக்கின்றனர். அயல் நாட்டுத் தொழில்நுட்பமும் பயிற்சியும் எளிதில் கிடைக்கப்பெறுகின்றன.

**குறைகள்**

1. அனுபவமில்லாத அரசின் அதிகாரிகள் தொழில் அமைப்பாளர் பணிகளைத் திறம்பட நிறைவேற்ற முடியாது. அதிகார வர்க்கத்தினர் தங்கள் இச்சைப்படி செயல்படுவர். தவிர, அவர்கள் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படவேண்டும்.

2. குறைந்த மாத ஊதியம் பெறும் அரசாங்க நிறுவன அதிகாரிகளும் பணியாளர்களும் ஆர்வத்தோடு தொழில் முன்னேற்றத்திற்காக உழைக்கமாட்டார்கள்.

3. பொதுத்துறை நிறுவனங்களில் சிக்கனமின்மை காணப்படுவதால், உற்பத்திச் செலவு அதிகரித்துப் பொருள்களின் விலைகளும் கூடுகின்றன.

4. அரசு அமைப்புகளில் 'சிவப்புநாடா முறை' (red tapism) இருந்து வருவதால், உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

5. பெரும்பாலான அரசு நிறுவனங்களில் ஊழல்களும் கையூட்டுகளும் மலிந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

6. அரசின் அலுவலர்களும், நிர்வாகிகளும், அதிகாரிகளும், பணியாளர்களும் வெவ்வேறு துறைகளிடையே மாற்றப்படுவதால் நிர்வாக முறையிலும் மாறுதல் ஏற்பட்டுக் குறைபாடுகள் தோன்றும்.

7. அரசியல்வாதிகளின் குறுக்கீட்டினாலும் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

# 17. தொழில் பிரச்சினைகள்
## (Industrial Problems)

மனிதன் சந்திரனுக்குச் சென்று வரும் அளவுக்கு விஞ்ஞான மும் இயந்திரத் தொழில்நுட்பமும் வளர்ந்துள்ளன. பூமியில் இருந்துகொண்டே பிற கோள்களின் புவியமைப்பை அறியவும் அறிவியல் உதவுகிறது. வேளாண்மை, தொழில், வாணிகம், போக்குவரத்துப் போன்ற பல துறைகளிலும் இயந்திரங்களின் பயன் உயர்ந்து வருகிறது. கடின உடல் உழைப்பு இன்று தேவையற்றதாகிவிட்டது. மூளை உழைப்பைக் குறைக்கவும் 'கம்பியூட்டர்கள்' என்னும் கணக்கிடும் பொறிகள் உதவுகின்றன.

ஒரு தொழிலைத் தொடங்கும்போது தொழில் அமைப்பாளர் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியுள்ளது. எந்தப் பொருளை, எவ்விடத்தில், எந்த அளவில், எம் முறையில் உற்பத்தி செய்வது என்பதை அவர் தீர்மானிக்கிறார். வேலைப் பகுப்பு, இயந்திரங்களைப் பயன்படுத்துவது, தொழிலின் இடச் செறிவு, தொழில் உற்பத்தியளவுச் சீரமைப்புப் போன்றவை குறித்த முடிவு களையும் அவர் எடுக்கிறார். தொழில்களில் ஏற்படும் இவ்வகைச் சிக்கல்களைப் பின்வருமாறு விளக்கலாம்.

## I. வேலைப் பகுப்பு (Division of Labour)

உழைப்பாளர்கள் ஒரே பணியைத் தொடர்ந்து செய்யும் போது சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றனர். விவசாயி, சமையல் காரர், சலவைத் தொழிலாளி, கொல்லர், தச்சர், முடி திருத்து பவர் போன்றோர் அவரவர்களுடைய தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களாவர். இன்றைய பல தொழில்களில் உற்பத்தி நடவடிக்கை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஓர் உழைப்பாளியிடமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உழைப்

பாளர்களிடமோ ஒப்படைக்கப்படுகின்றது. இவ்வாறு ஒரு பொருளின் உற்பத்தி பல பிரிவுகளாகப் பகுத்துச் செய்யப்படுவதே வேலைப்பகுப்பு முறை எனப்படும். இதனால், ஒவ்வோர் உழைப்பாளியும் ஒவ்வோர் உற்பத்திப் பிரிவில் தனித்திறமை பெறுகிறார்.

வேலைப் பகுப்பு முறையால் உழைப்பாளியின் உற்பத்தித் திறனும், மொத்த ஆக்கத்தின் அளவும் கூடுமென்பதை ஆடம் ஸ்மித் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்குகிறார் : குண்டூசி உற்பத்தி செய்யும் தொழிலைக் கம்பிகளை நீட்டுதல், வெட்டுதல், கூராக்குதல், பளபளப்பேற்றுதல், துளையிடுதல் போன்ற பல பிரிவுகளாகப் பிரித்து 10 பேரிடம் ஒப்படைக்கும்போது, ஒரு நாளுக்கான உற்பத்தி 48,000 ஊசிகளாக இருக்கிறது. ஒருவரே எல்லா உற்பத்தி நிலைகளிலும் ஈடுபடும்போது, அதிக பட்சம் 20 ஊசிகளையே தயாரிக்க முடியும்.

வேலைப் பகுப்பை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். **முதலாவதாக,** ஒரு சமூகத்தின் சில தனித் தொழில்களை மக்கள் பகிர்ந்து கொள்வது 'எளிய முறை வேலைப் பகுப்பு' (simple division of labour). கொல்லர்கள், தச்சர்கள், குயவர்கள், சலவையாளர்கள், முடிதிருத்துபவர்கள் போன்றோர் எளிய முறை வேலைப் பகுப்பின் கீழ் வருகின்றனர். இவர்கள் பண்டம் அல்லது பணியின் மொத்த உற்பத்தியிலும் ஈடுபடுவார்கள். மருத்துவர்கள் பொது மருத்துவத்தைச் செய்வதும் இவ்வகைச் சாதாரண வேலைப் பகுப்பே ஆகும்.

**இரண்டாவதாக,** ஆடம்ஸ்மித் குறிப்பிடும் குண்டூசி உற்பத்தித் தொழிலையே 'கலப்புமுறை வேலைப் பகுப்புக்கு' (complex division of labour) உதாரணமாகக் கொள்ளலாம். இவ்வகை வேலைப் பகுப்பில் உற்பத்தி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனி உழைப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கார், ஸ்கூட்டர், சைக்கிள் உற்பத்தித் தொழில்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கார் உற்பத்தித் தொழில் பல நூறு உற்பத்திப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**மூன்றாவதாக,** ஒரு நாட்டின் வெவ்வேறு பகுதிகளிடையே காணப்படுவது 'வட்டார வேலைப் பகுப்பு' (territorial division of labour). மைசூர், பரைஸ், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பட்டு நெசவும், காஷ்மீரில் கம்பளித் துணி உற்பத்தியும், வங்காளத்தில் சணல் உற்பத்தியும், கோயம்புத்தூர்,

பம்பாய், பூனா ஆகிய இடங்களில் நெசவுத் தொழிலும், சிவகாசியில் தீப்பெட்டித் தொழிலும், திருப்பூரில் பனியன் நெசவும் வட்டார வேலைப் பகுப்பின் அடிப்படையில் அமைந்தவையாகும். சில இடங்களில் குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்திக்கான வசதிகள் பல இருப்பதால், அந்த இடங்களில் அவ்வகைப் பொருள்களே அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இதைத் 'தொழில்களின் இடச் செறிவு' (localisation of industries) எனலாம்.

**இறுதியாக,** வட்டார வேலைப் பகுப்பு உலக நாடுகளிடையேயும் அமைந்திருப்பதைப் 'பன்னாட்டு வேலைப் பகுப்பு' (international division of labour) என்கிறோம். ஜப்பானில் டிரான்சிஸ்டர், கைக்கடிகாரங்கள், பிற மின்னியற் பொருள்கள் உற்பத்தியும், அரபு நாடுகளில் எண்ணெய் உற்பத்தியும், ரஷ்யாவில் இயந்திரச் சாதனங்கள் உற்பத்தியும், ஸ்விட்சர்லாந்தில் கடிகார உற்பத்தியும் பன்னாட்டு வேலைப் பகுப்பிற்கான உதாரணங்கள் ஆகும்.

**வேலைப் பகுப்பின் நன்மைகள்**

**1. அதிக அளவு உற்பத்தி :** வேலைப் பகுப்பு முறை உற்பத்தியின் அளவைப் பெருக்குகிறது. ஸ்மித்தின் உதாரணத்தைக் கொண்டு இதை அறியலாம். குண்டூசி உற்பத்தியைப் பல பிரிவுகளாகப் பிரித்து 10 பேர் செய்யும்போது உற்பத்தி ஒரு நாளுக்கு 48,000 ஊசிகளாகும். தனி ஒருவரின் உற்பத்தியளவு 4,800 ஊசிகள். ஆனால், தனி ஒருவர் மட்டுமே உற்பத்தியின் எல்லா நிலைகளையும் செய்யும்போது, அவர் நாளொன்றுக்கு 20 ஊசிகளுக்கு அதிகமாக உற்பத்தி செய்யமுடியாது. இது போன்றே எல்லாத் தொழில்களிலும் வேலைப் பகுப்பினால் உற்பத்தியைப் பல மடங்கு கூட்டமுடியும்.

**2. உற்பத்தியில் இயந்திரங்களை ஈடுபடுத்துதல் :** பொருளின் உற்பத்தி பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருப்பதாலும், ஒவ்வொரு பிரிவும் தனித்துச் செயல்படுத்தப்படுவதாலும் இயந்திர உற்பத்தி முறையைப் பின்பற்றமுடிகிறது. உற்பத்திப் பணிகளை எளிதாகவும் விரைவாகவும் செய்ய இயந்திரங்கள் உதவுகின்றன.

**3. உழைப்பாளியின் கைத்திறன் வளர்ச்சி :** ஒருவர் தொடர்ந்து ஒரே உற்பத்திப் பணியைச் செய்வதால், அவரின் திறமை கூடுகிறது. அனுபவத்தால் கைத்திறன் பெருகுகிறது.

சிறப்புத் தேர்ச்சிப் பணிகள் உற்பத்தியின் அளவைப் பெருக்குகின்றன.

**4. புதிய கண்டுபிடிப்புகள்:** வேலைப் பகுப்பு முறையால் புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்புகள் தூண்டப்படுமென்பது ஆடம் ஸ்மித் கூற்று. ஒருவர் ஒரு பணியைத் தொடர்ந்து செய்யும்போது, அப்பணியை மேலும் சிறப்பாக எவ்வழியில் செய்யலாமென அவர் சிந்திக்கிறார். அதன் விளைவாகப் புதிய கண்டுபிடிப்புகள் தோன்றுகின்றன.

**5. காலச் சேமிப்பு :** ஒருவரே பல பணிகளை ஆற்றும்போது அவரது காலமும் திறமையும் வீணாகின்றன. குறுகிய காலத்தில் அதிக உற்பத்தியைப் பெற வேலைப் பகுப்புத் துணை செய்கிறது. மேலும், ஒருவர் தான் செய்யும் உற்பத்திப் பணியை மட்டுமே பயில்வதால் காலம் வீணாவதில்லை. உற்பத்தியின் பல நிலைகளையும் தெரிந்து கொள்வது தேவையற்றதாகிறது.

**6. ஆக்கக் கருவிகளில் சிக்கனம் :** உற்பத்தியை முழுமையாகச் செய்ய பல உற்பத்திக் கருவிகள் தேவை. ஆனால், உற்பத்தியின் சில பகுதிகளை மட்டும் செய்ய சில கருவிகள் மட்டுமே போதுமானது. ஒரு தொகுதி உற்பத்திக் கருவிகளைக் கொண்டு பலர் பணிபுரியலாம்.

**7. வேலைவாய்ப்புப் பெருக்கம் :** உற்பத்தி பல கிளைகளாகப் பகுக்கப்படுவதால், பலவகைப் பணிகளும் பெருகுகின்றன. அவரவர் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ப உற்பத்திப் பணிகள் பல இருக்கின்றன. வேலைப் பகுப்பால் உற்பத்தி பெருகி தொழில் முன்னேற்றமடைகிறது. இதனால், வேலை வாய்ப்புகள் மேலும் பெருகுகின்றன.

**8. மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு :** வேலைப் பகுப்பினால் விளையும் பல நன்மைகளால் மொத்த உற்பத்தி பெருகி வருமானமும் கூடுகிறது. உற்பத்திச் செலவு குறைந்து பொருள்கள் மலிவாகக் கிடைக்கின்றன. பலவகைப் பொருள்களை நுகரும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. உற்பத்தியின் வெவ்வேறு பிரிவுகளில் ஈடுபடும் உழைப்பாளர்கள் மகிழ்ச்சியோடும் மன நிறைவோடும் பணியாற்றுகின்றனர்.

**9. தரமான பொருள்கள் :** வேலைப் பகுப்பு முறை உற்பத்தியின் அளவைப் பெருக்குவதோடு, பொருள்களின் தரத்தை

மேம்படுத்தவும் உதவுகிறது. கைத்திறன் மிக்கத் தொழிலாளர் கள் தரமிகு பொருள்களை ஆக்குகின்றனர்.

**10. குறுகிய காலத்தில் பணியைப் பயிலுதல்:** உழைப் பாளர் உற்பத்தியின் ஒரு பிரிவை மட்டுமே செய்வதால், அப் பணியைக் குறுகிய காலப் பயிற்சியின் மூலம் பயில இயலும்.

**வேலைப் பகுப்பின் குறைகள்**

**1. குன்றிய ஆர்வம்:** ஒரே பணியைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது பணியாற்றும் ஆர்வம் குறைகிறது. ஒரு வேலையைத் தொடர்ச்சியாகச் செய்யும் நிலையில் அதிருப்தி தோன்று கிறது. காலப்போக்கில் தொழிலாளிக்குச் சலிப்பே ஏற்படு கிறது.

**2. பொறுப்பற்ற பணி:** ஒரு பொருளைப் பலரும் கூட் டாகச் செய்யும்போது ஏற்படும் குறைபாடுகளுக்கு எவரும் பொறுப்பேற்க மாட்டார்கள். பொறுப்பின்றிச் செய்யும் பணி திறமையானதாக இருக்காது.

**3. ஆலைமுறைத் தீமைகள்:** பெரிய ஆலைகளில் பேரளவில் உற்பத்தி செய்யப்படும்போது வேலை நிறுத்தம், கதவடைப்பு, முற்றுகைப் போராட்டம் போன்றவற்றோடு தொழில் ஆலைகளில் சுகாதாரமின்மை, ஒழுக்கமின்மை, அமைதியின்மை, சுரண்டல் ஆகிய குறைபாடுகளும் தோன்றுகின்றன.

**4. தொடர்பு இல்லாத நிலை:** தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இடையே தொடர்பு குறைகிறது. ஓர் உற்பத்திப் பிரிவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதில்லை. இதனால், வர்க்கப் போராட் டங்கள், சமூகக் கலவரங்கள் போன்றவை உருவாகின்றன.

**5. வேலை இழப்பு:** குறிப்பிட்ட தொழில் நசித்துவிட்டால், அதில் ஈடுபட்டிருந்தவர்கள் வேலையிழக்கின்றனர். அவர்களுக்கும் குறிப்பிட்ட பணிகளில் மட்டுமே தேர்ச்சி இருப்பதால், பிற தொழில்களில் வேலை செய்வது முடியாததாகிறது. பல தொழில் களையும் கற்ற தொழிலாளர்களே அதிக வேலை வாய்ப்பைப் பெற்றிருப்பர்.

**6. உழைப்பாளர்களின் பெயர்ச்சியின்மை:** காஷ்மீரின் கம்பளி நெசவாளர் தமிழ் நாட்டில் எத்தொழிலிலும் ஈடுபட

முடியாது. ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்பவர் பிற தொழில் ஆக்கமுறைகளை அறிந்திருப்பதில்லை. எனவே, அந்தந்தத் தொழில் களைத் தெரிந்தவர்கள், அவை அமைந்திடும் இடங்களிலேயே பணியாற்றுகின்றனர். வேலைப் பகுப்பு முறையும் உழைப்பைப் பெயர்ச்சியற்ற காரணியாக்குகிறது.

**7. குன்றிய திறமை :** வேலைப் பகுப்பு முறையைக் கொண்ட ஒரு தொழிலில் தொழிலாளி உற்பத்தியின் எல்லா நிலைகளையும் அறிந்திருப்பதில்லை. அவரிடம் பொருளை முழுமையாக ஆக்குவ தற்கான திறமை இருப்பதில்லை.

**8. பொது நலனும் குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்படுதல் :** வேலைப் பகுப்பினால் பெரிய தொழில்கள் பல பெருகுகின்றன. அவற்றில் சிறிய உற்பத்திப் பணிகளை ஆற்றப் பெண்டிரும் சிறுர்களும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். கல்வி கற்க வேண்டிய வயதில் சிறுர்கள் தொழிற்கூடங்களில் பணி புரிவது, அவர்களுடைய நலனைப் பாதிக்கிறது. பெண்டிர் தங்களுடைய திறனுக்கு அதிகமாக உழைக்க நேரும்போது குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

**9. உற்பத்தி நிலைகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் :** உற்பத்தியின் ஏதாவது ஒரு பிரிவில் ஆக்கம் தடைப்பட்டால், பொருளின் உற்பத்தியளவை அது பாதிக்கிறது. உதாரணமாக, சைக்கிள் உற்பத்தியில், சக்கரங்களின் உற்பத்தியில் முடக்கம் ஏற்பட்டால், பிற பகுதிகளின் உற்பத்தியும் பாதிக்கப்படும்.

**10. கைவினைப் பொருள்கள் :** இயந்திரங்களைக் கொண்டு வேலைப் பகுப்பு முறையில் உற்பத்தி செய்து கைவினைப் பொருள் களை ஆக்கமுடியாது. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாகும் துணிப் பொருள்கள், பொம் மைகள் போன்றவை கலைத்திறன் வாய்ந்தவை. இயந்திரங்களின் துணை கொண்டு அவற்றைப் படைக்க இயலாது.

வேலைப் பகுப்பின் குறைபாடுகள் தொழிற்சாலைச் சட்டங் களால் நிவர்த்தி செய்யப்படுகின்றன. பல பொருள்களுக்கான தேவையளவு பல மடங்கு பெருகியுள்ளமையால், வேலைப் பகுப்பு முறையைப் பின்பற்றுவது தவிர்க்கமுடியாதது.

## II. உற்பத்தியில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது

வேலைப் பகுப்பு முறையால் உற்பத்தியின் பல நிலைகளிலும் வெவ்வேறு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மனித

சக்தியைவிட இயந்திர சக்தி பல மடங்கு உற்பத்தியைப் பெருக்க வல்லது. மிகக் குறுகிய காலத்தில் கடினமான பணிகளையும் எளிதில் செய்வது இயந்திரமே. பெரிய தொழில்களில் மட்டு மன்றிச் சிறு தொழில்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் இயந்தி ரங்கள் வழி காட்டுகின்றன. பண்டங்களைத் துல்லியமாகவும், குறைபாடுகள் இன்றியும் உற்பத்தி செய்ய இயந்திரங்களால் இயலும். இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் விளையும் நன்மை தீமைகளைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்.

**நன்மைகள்**

**1. உற்பத்தித்திறன் உயர்வு :** மனித உழைப்பைக் காட் டிலும் இயந்திர உழைப்பு அதிக அளவு உற்பத்தியைத் தர வல்லது. அதிக அளவு உற்பத்தியால் பொருள்கள் பல நாடு களுக்கு இடையேயும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. உற்பத்திச் செலவு குறைந்து தாழ்ந்த விலையில் பொருள்கள் விற்கப்படு கின்றன.

**2. பணிகளை எளிதில் நிறைவேற்றுதல் :** மிகப் பாரமான பொருள்களைக் 'கிரேன்' உதவிகொண்டு எளிதில் இடம் மாற்றி வைக்கலாம். சில நிமிடங்களில் நிலத்தைச் சமன் செய்யும் 'புல்டோசர்களும்' உள்ளன. அச்சிடவும், வீடு கட்டவும், சாலைகள் அமைக்கவும், காடுகளை அழிக்கவும், கணக்கிடவும் பலவிதப் பொறிகளை நாம் பயன்படுத்துகிறோம். கனிப் பொருள் களை வெட்டி எடுக்கும் சுரங்கத் தொழிலிலும், பிற தொழில் களிலும் இயந்திரங்கள் எண்ணற்ற பணிகளை எளிதில் நிறைவேற்று கின்றன.

**3. பணிகளில் விரைவு :** இயந்திரங்களை ஓய்வு ஒழிச்ச லின்றிப் பல மணி நேரங்களுக்குத் தொடர்ந்து இயக்கமுடியும். அவை உற்பத்திப் பணிகளை விரைவாகவும் செய்து முடிக்கின்றன. அதிக அளவுப் பண்டங்களை மிகக் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்ய அவை உதவுகின்றன.

**4. பொருள்களின் தர உயர்வு :** கைவினைப் பொருள்கள் ஒரே அளவினதாகவும் தரமுள்ளதாகவும் இருப்பதில்லை. ஆனால், இயந்திரங்கள் ஒரே மாதிரியான பொருள்களை உயர்ந்த தரத் தோடு உற்பத்தி செய்கின்றன. மனித உழைப்பினால் மட்டும் ஆக்கப்படும் பொருள்களின் தரம் தாழ்வாகவே இருக்கிறது.

**5. வாழ்க்கை வசதிகள் பெருக்கம் :** பல பண்டங்கள் அதிக அளவில் ஆக்கப்படுவதோடு, இயந்திரங்களால் பல வாழ்க்கை

வசதிகளும் பெருகுகின்றன. போக்குவரத்து, தகவல் தொடர்பு, மின்சார உற்பத்தி முதலியவற்றில் இயந்திரங்களால் கிடைக்கும் வசதிகள் எண்ணற்றவை.

**6. இயற்கை வளங்களை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துதல்:** நிலத்தில் சாகுபடி செய்யவும், தொழில்களுக்கான மூலப் பொருள்களைத் தோண்டி எடுக்கவும், அணைகளைக் கட்டி நீரைத் தேக்கவும், மின்சார உற்பத்தியைச் செய்யவும் இயந்திரங்கள் பேருதவியாய் இருக்கின்றன.

**7. பரந்த சந்தை:** பொருள்களுக்கான தேவை பெருகவும் இயந்திரங்கள் உதவுகின்றன. பல போக்குவரத்து வசதிகளின் மூலம் பண்டங்கள் மிகக் குறுகிய காலத்தில் வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால், பண்டங்களுக்கான சந்தை விரிவடைகிறது.

**8. வேலை வாய்ப்புப் பெருக்கம்:** பேரளவு உற்பத்தி முறையால் இயந்திரங்களின் பயன் மிகுந்துள்ளது. விரைவான மக்கள் பெருக்கத்தால் தேவைகளின் அளவும் கூடியுள்ளன. தேவைக்கேற்ப அளிப்பைக் கூட்ட இயந்திர உற்பத்தி முறையைக் கைக்கொள்வது அவசியமாகிறது. பல்வேறு இயந்திரங்களை இயக்கி, உற்பத்தி நடவடிக்கைகளைக் கண்காணிக்க அதிக எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுவதால் வேலை வாய்ப்புப் பெருகுகிறது.

**9. வாழ்க்கைத் தர உயர்வு:** இயந்திர உற்பத்தி முறையால் பொருள்கள் மலிவான விலையில் கிடைக்கின்றன. பணத்தின் வாங்கும் திறன் கூடி, மக்கள் பல பொருள்களை அதிக அளவில் வாங்க முடிகிறது. இதனால், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்கின்றது.

**10. உழைப்பாளர்களின் அறிவாற்றல் பெருக்கம்:** இயந்திரங்களைக் கையாளும் உழைப்பாளர்கள் பரந்த கண்ணோட்டத்தையும், விரிந்த அறிவாற்றலையும் பெறுகிறார்கள். நாளடைவில் இயந்திரங்களைப் பழுதுபார்க்கவும் கற்றுக்கொண்டு, புதிய இயந்திரங்களையும் கண்டுபிடிக்கிறார்கள்.

**தீமைகள்**

**1. தொழிற்சாலைமுறைக் குறைபாடுகள்:** இயந்திர உற்பத்தி முறையால் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள்

பெருகுகின்றன. ஆரோக்கிய-சுகாதார வசதிகள், குடியிருப்பு வசதிகள் போன்றவை இன்றித் தொழிலாளர்கள் அல்லல் படுகின்றனர். தொழிற்கூடங்களில் பெண்டிரும் சிறுர்களும்கூட நீண்ட நேரங்களுக்கு உழைக்கின்றனர்.

**2. கைத்திறமைக் குறைவு :** மிகச் சிறிய தொழில்களும், கைவினைத் தொழில்களும் செல்வாக்கு இழந்தமைக்கு இயந்திர உற்பத்திமுறையே காரணமாகும். கைத்திறமை மிளிரும் கைவினைப் பொருள்களின் உற்பத்தியும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வகைப் பொருள்களை ஆக்கும் கைவினைஞர்கள் ஊக்கமிழந்து வேறு வேலைகளில் ஈடுபடுவதால், அவர்களின் திறமை குன்றுகிறது.

**3. வேலையின்மைச் சிக்கல்:** அதிக அளவு இயந்திரங்களைப் பயன்படுத்தினால், இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் வேலையின்மைச் சிக்கல் மேலும் தீவிரமடையும். மனித உழைப்பின் தேவை இயந்திரங்களால் குறைகிறது. இதன் காரணமாகவே மிகப் பெரிய இயந்திரங்களையும், கணக்கிடும் பொறிகளையும் பயன்படுத்துவதற்குத் தொழிலாளர் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. மனித உழைப்பை இயந்திரம் இரண்டாவது இடத்திற்குத் தாழ்த்திவிடுகிறது.

**4. தொழிலாளர்களின் சலிப்பு :** ஒரே உற்பத்திப்பணியை மேற்பார்வையிட்டு, ஒரே இயந்திரத்தைத் தொடர்ந்து இயக்கும் தொழிலாளர்கள் தங்கள் வேலையில் சலிப்படைகின்றனர். உற்பத்தியைச் செய்வதில் ஆர்வமிழந்து வெறுப்படைகின்றனர்.

**5. மற்றவர்களைச் சார்ந்திருத்தல் :** இயந்திர உற்பத்தி முறை விரிவாகப் பரவியுள்ள இந் நாள்களில் பெரும்பாலும் உற்பத்தி சந்தைக்காகவே செய்யப்படுகிறது. எல்லாப் பொருள்களும் ஓரிடத்திலேயே ஒரு சிலரால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எனவே, பல பொருள்களைப் பெற வெவ்வேறு இடங்களில் செயல்படும் எண்ணற்ற உற்பத்தியாளர்களை நாம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

**6. வர்க்கப் போராட்டம் :** இன்றைய இயந்திர யுகத்தில் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் என்னும் இரு வேறு வர்க்கங்கள் தோன்றியுள்ளன. இவ்விரு வர்க்கத்தினரிடையே முரண்பாடு ஏற்படும்போது வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவை செய்யப்படுகின்றன.

**7. அழிவுப் பாதையிலும் இயந்திரங்கள் :** ஆக்கத்தைப் பெருக்க உதவும் இயந்திரங்கள் அழிவுப் பணிகளிலும் ஈடுபடுத்தப் பெறுகின்றன. உதாரணமாகப் போர்க் கருவிகள், டாங்கிகள், போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் போன்றவற்றைக் குறிப் பிடலாம். ஆனால், நாட்டின் பாதுகாப்புக்கு இவை இன்றியமை யாதவையே. அணுக்குண்டை ஆக்கப் பணிகளுக்கும் பயன்படுத்த லாம்.

**8. கைத்தொழில்களின் சீர்குலைவு:** கதர், கைத்தறி ஆகிய தொழில்களும், பிற கைவினைத் தொழில்களும் இன்று சீர்குலைந் துள்ளமைக்கு இயந்திர உற்பத்திமுறையே பெரிதும் காரண மாகும். பெரிய தொழில்கள் தரமான பொருள்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றன. கைத்தொழில்களில் உற்பத்திச் செலவு உயர்மட்டத்தில் அமைகிறது. பேரளவுத் தொழில் களின் போட்டியால் கைவினைத் தொழில்கள் நசித்துவிடுகின்றன.

இயந்திர உற்பத்தி முறைகளால் சமுதாயத்தில் சில இன்னல் கள் தோன்றினாலும், இன்றைய வளரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயந்திரங்களைப் பயன்படுத்துவதே சாலச்சிறந்தது.

## III. தொழில்களின் இடச்செறிவு (Localisation of Industries)

வேலைப் பகுப்பு முறையின் வகைகளில் வட்டார வேலைப் பகுப்பும் ஒன்று. சில குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட தொழில்கள் வளர்வதற்கு மட்டுமே சாதகமான சூழ்நிலைகள் அமைந்துள்ளன. நெசவாலைகள் மஹாராஷ்டிரத்திலும், எஃகு உருக்காலைகள் பீஹாரிலும், சணல் ஆலைகள் வங்காளத்திலும், சர்க்கரை ஆலைகள் உத்திரப் பிரதேசத்திலும் அதிகமாக உள்ளன. இது போன்றே சில குறிப்பிட்ட ஊர்களும் குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தியில் புகழ் பெற்றுள்ளன. சிவகாசி தீப்பெட்டிகளும், பத்தமடைப் பாய்களும், திருபுவனம் புடவை களும், காஞ்சிபுரம் பட்டுத் துணிகளும், பவானி ஜமக்காளமும், காஷ்மீர் கம்பளமும், கான்பூர் காலணியும் கீர்த்தி பெற்றவை களாகும்.

இவ்வாறு, தொழில்கள் சில இடங்களில் செறிவு பெற்றிருக் கும் நிலை, தரமான பொருள்களைக் குறைந்த விலையில் விற்பதற்குத் துணைபுரிகிறது. தொழில்களின் இடச்செறிவுக்கான காரணி

களைக் கீழ்க்காணும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்: (i) இயற்கை நன்மைகள்; (ii) உருவாக்கப்பெற்ற நன்மைகள்; (iii) ஒப்பீட்டு நன்மைகள்; (iv) கூட்டு வளர்ச்சி நன்மைகள்.

### (i) இயற்கை நன்மைகள் (Natural Advantages)

குறிப்பிட்ட இடங்களில் சில தொழில்கள் வளர இயற்கைக் காரணிகள் உதவுகின்றன.

**1. கச்சாப் பொருள்கள் கிடைத்தல்:** மிகப் பெரிய தொழில்கள் அதிக அளவில் கச்சாப் பொருள்கள் கிடைக்கும் இடங்களிலேயே நிறுவப்படுகின்றன. குறிப்பாக, அதிகப் பளுவான மூலப்பொருள்களை நீண்ட தூரங்களுக்கு எடுத்துச்செல்லப் போக்குவரத்துச் செலவு அதிகம் பிடிக்கும். சர்க்கரை ஆலைகளைக் கரும்பு விளைவிக்கும் இடங்களிலும், எஃகு உருக்கு ஆலைகளை இரும்புக் கனி, நிலக்கரி ஆகியவை கிடைக்கும் இடங்களிலும் அமைக்கிறோம். வீடு கட்டுவதற்கான செங்கற்கள் அருகாமை இடங்களில் இருந்தே கொண்டு வரப்படுகின்றன.

**2. நிலவளம்:** தக்காண பீடபூமியின் கரிசல் மண் பருத்தி உற்பத்திக்கேற்றது. அங்கு நூற்பாலைகளும் நெசவாலைகளும் மிகுதியாக உள்ளன. இந்தியாவின் வடக்கு மாநிலங்கள் பலவற்றில் நிலவளம் கோதுமைச் சாகுபடிக்கு ஏற்ற நிலையைக் கொண்டிருப்பதால், அங்கு அதிக அளவில் கோதுமையே உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் நெல் சாகுபடிக்கேற்ற நில வளத்தைக் கொண்டிருக்கின்றன.

**3. சீதோஷ்ண நிலை:** பருத்தி நூற்பு–நெசவுத் தொழில்களுக்கு ஈரம் கலந்த வெப்பச் சூழ்நிலை ஏற்றது. பம்பாய், பூனா, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இவ்வகைத் தட்பவெப்ப நிலை அமைந்துள்ளமையால், அவ்விடங்களில் பருத்தி நூற்பு–நெசவு ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. ஊட்டியில் ஃபிலிம் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருப்பதற்கு, அங்குள்ள குளிர் நிலை அத்தொழிலுக்குச் சாதகமாக இருப்பதே காரணமாகும்.

**4. சந்தை அருகாமையில் அமைதல்:** விற்பனை செய்ய அல்லது ஏற்றுமதி செய்ய வசதிகள் உள்ள இடங்களில் சில தொழில்கள் செறிந்துள்ளன. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களைப் பம்பாய், கொச்சி, சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா போன்ற துறைமுகங்களுக்கு அருகாமையில்

அமைத்தால் போக்குவரத்துச் செலவைக் குறைக்கலாம். உணவுப் பொருள்களும் குளிர்ப்பானங்களும் சந்தைக்கு அருகிலேயே தயாரிக்கப்படுகின்றன. கட்டடங்கள் கட்டப்படும் இடங்களுக்கு அருகாமையிலேயே செங்கற் சூளைகள் அமைகின்றன.

**5. உழைப்பின் அளிப்பு :** குறிப்பிட்ட தொழில்களில் அனுபவ முதிர்ச்சியால் தேர்ச்சி பெற்ற உழைப்பாளர்கள் கிடைக்கும் இடங்களில், அவ்வகைத் தொழில்கள் நிறுவப்படுகின்றன. சிவகாசி உழைப்பாளர்கள் மத்தாப்பு–வெடி வகைகளையும் தீப்பெட்டிகளையும் உற்பத்தி செய்வதில் தேர்ந்தவர்கள். எனவே, அங்கு மேலும் சில தீப்பெட்டித் தொழிற்கூடங்களை அமைப்பது எளிது.

**6. இயக்கச் சக்தி :** மின்சார வசதி கிடைக்கும் இடங்களிலேயே இன்றைய தொழில்கள் பலவும் அமைக்கப்பெறுகின்றன. இரும்புக் கனிப் பொருள்களை உருக்க நிலக்கரி தேவை. ஆகவே, நிலக்கரி கிடைக்கும் இடங்களில் எஃகு உருக்குத் தொழிற்சாலைகள் அமைகின்றன.

**7. சமய நிலை :** சமயக் காரணியும் தொழிற் செறிவை நிர்ணயிக்கின்ற ஒன்று. பழநி பஞ்சாமிர்தமும், திருப்பதி லட்டும், காசிக் கயிறும் புகழ் பெற்றவை. இவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களில் ஒரு சிலர் ஈடுபட்டுள்ளனர்.

### (ii) உருவாக்கப்பெற்ற நன்மைகள் (Acquired Advantages)

மேற்குறிப்பிடப்பட்ட இயற்கைக் காரணிகளோடு, சில செயற்கைக் காரணிகளும் தொழிற் செறிவுக்குக் காரணங்களாக அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட தொழிலை நிறுவிய பிறகு, அப்பகுதியில் தோன்றும் புதிய சூழ்நிலைகள் அத்தொழிலை மேலும் செழிக்கச் செய்கின்றன.

**1. தேர்ச்சி பெற்ற உழைப்பாளர்கள் :** காஞ்சிபுரத்தின் பட்டு நெசவாளர்கள், கோயம்புத்தூரின் நெசவாளத் தொழிலாளர்கள், சின்னாளப்பட்டியின் சேலை நெசவாளர்கள் அவரவர் தொழில்களில் திறமை பெற்றவர்களாக இருக்கின்றனர். நாளடைவில் அவ்விடங்களில் உள்ள மற்ற பலரும் அந்தந்தத் தொழில் உற்பத்தி முறைகளில் தேர்ச்சிபெற்று விடுகின்றனர். இதனாலும் தொழிற் செறிவு ஏற்படுகிறது.

**2. போக்குவரத்து — தகவல் தொடர்பு வசதிகள் :** தொழில்கள் அமையும் இடங்களில் போக்குவரத்து, தபால்–

தந்தி, தொலைபேசி போன்ற வசதிகள் பெருகுகின்றன. புதிய சாலைகள் அமைக்கப்படுகின்றன. இரயில்வே நிலையமும் தோற்று விக்கப்படலாம். பொருள்களைச் சேமித்து வைப்பதற்கான கிடங்கு வசதிகளும் அதிகரிக்கின்றன. மூலப் பொருள்களை வாங்கவும், உற்பத்தி செய்த பொருள்களை விற்கவும் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவது தேவையாகிறது.

**3. கடன் வசதிகள் :** வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், பண அங்காடிகள், பங்கு அங்காடிகள் போன்றவை தொழிற் செறிவுள்ள இடங்களில் சிறப்பாக வளர்கின்றன. இவற்றின் வளர்ச்சியால் மேலும் அதே பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் பல ஏற்படுத்தப்படுகின்றன.

**4. செறிவினால் தொழிலுக்குச் செல்வாக்கு :** குறிப்பிட்ட இடங்களில் ஆக்கப்படும் சில பொருள்கள் பெயர் பெற்றவைகளாக உள்ளன. பனாரஸ் பட்டு, சிவகாசி வண்ணப்படக் காலண்டர்கள், பட்டணம் பொடி, கும்பகோணம் வெற்றிலை, யாழ்ப்பாணம் தேங்காய் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கருதலாம். பெயர்ச் செல்வாக்கினால் அந்தந்தத் தொழில்கள் அந்தந்த இடங்களில் மேலும் வளர்கின்றன.

**5. பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழில் முயல்வோரின் கூட்டு முயற்சி :** ஒரு தொழிலைச் சேர்ந்த பல தொழில் நிறுவனங்கள் ஒரே இடத்தில் செறிந்திருப்பதால், நிறுவன உரிமையாளர்கள் ஒன்று கூடித் தொழிலில் தோன்றும் சிக்கல்களுக்கு எளிதில் தீர்வு காணமுடியும். உதாரணமாக, உற்பத்திச் செலவைக் குறைக்க அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

**6. துணைத் தொழில்கள்:** ஒரு பெரிய தொழில் ஓரிடத்தில் செறியும்போது, அதைச் சார்ந்த துணைத் தொழில்களும் அங்குப் பெருகுகின்றன. சர்க்கரை ஆலையிலிருந்து கழிவுப் பொருளாகக் கிடைக்கும் 'மொலாஸஸ்' ஒரு வகை அமிலம் தயாரிக்கும் தொழிலுக்கு மூலப் பொருளாகிறது. எனவே, அந்த அமிலத்தைத் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் பலவும் வளர்கின்றன.

**7. அரசின் ஊக்க உதவி:** சில தொழில்களைக் குறிப்பிட்ட இடங்களில் தொடங்க அரசு ஊக்க உதவிகளை அளிப்பதுண்டு. அரசு சில தொழில்களுக்கு 'வரி விடுமுறை' (tax holiday) அளிக்கலாம். அரசின் நிதி நிறுவனங்கள் சில பின்தங்கிய

இடங்களில் தொழில்களை அமைக்கக் கடன் வசதியை அளிக்கக் கூடும்.

இவ்வாறு மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கை வசதிகளும் தொழிற் செறிவுக்குக் காரணமாக அமைகின்றன.

### (iii) ஒப்பீட்டு நன்மைகள் (Comparative Advantages)

மற்ற இடங்களோடு ஒப்பிடும்போது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமையும் சூழ்நிலைகளின் காரணமாகக் குறிப்பிட்ட தொழிலின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அந்த இடத்தில் அமையும் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு வேறு சில புதிய தொழில்களும் தோன்றக்கூடும். போட்டிகளைச் சமாளிக்கும் திறனுடைய தொழில் விரைவாக வளர்கிறது. சில தொழில்களை நடத்துவதற்கு அதிக நிலப்பரப்பு தேவையாக இருந்தால், அவற்றைப் புறநகர்ப் பகுதிகளில் தோற்றுவிக்கலாம். 'பெட்ரோலியம்' பொருள்களை விநியோகிக்க சாலை மற்றும் இரயில் போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதவை. எனவே, எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளும், சேமிப்பு–விநியோக நிலையங்களும் பெரிதும் நகர்ப்புறங்களிலேயே அமைக்கப்படுகின்றன. பொது மக்களின் நலனுக்காகத் தொழில்களைப் பரவலாக்க வேண்டுமென்று கருதும் அரசு வசதிகள் குறைந்த பின்தங்கிய பகுதிகளிலும் தொழில்களை அமைக்கலாம். இவற்றாலும் சில இடங்களில் தொழில்கள் செறிந்துள்ளன.

### iv. கூட்டு வளர்ச்சி நன்மைகள் (Cumulative Advantages)

ஒரு தொழில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுவப்பட்டு நன்கு நிலை பெற்றுவிட்டால், அத்தொழிலின் செறிவு மேலும் விரிவடையும். இதனை ஆல்ஃபிரட் மார்ஷல் 'முதலில் துவங்கிய தால் பெறப்படும் தூண்டுதல் வேகம்' (Momentum of an early start) எனக் கூறுகிறார். குறைந்த வசதிகளோடு யாராலோ துவக்கப்பட்ட ஒரு தொழில் அந்த இடத்திலேயே சிறப்பாக வளர்ந்து விடுகிறது. சிவகாசி தீப்பெட்டித் தொழிலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கருதலாம். நாளாவட்டத்தில் தொழில் செறிந்துள்ள இடத்திற்கு உழைப்பு, மூலதனம் போன்றவை பிற இடங்களிலிருந்து பெயர்ந்து வருகின்றன. இவ்விதம் கூட்டு வளர்ச்சி நன்மைகளின் காரணமாகப் பலவகைத் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் பெருகுகின்றன.

தொழிற்செறிவினால் கிடைக்கப்பெறும் நன்மைகளைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம் :

1. தொழிற்செறிவு வட்டார வளர்ச்சியைப் பெருக்குவ தோடு வேலை வாய்ப்புகளையும் கூட்டுகிறது.

2. உற்பத்தியில் தேர்ச்சிபெற்ற திறமையான தொழிலா ளர்கள் ஆக்கத்தின் அளவையும் தரத்தையும் அதிகரிக்கின்றனர்.

3. தொழிற்செறிவினால் தொழில் நிறுவனங்களிடையே போட்டி ஏற்பட்டு உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதோடு பொருள்கள் குறைந்த விலையிலும் விற்கப்படுகின்றன.

4. பல்வேறு போக்குவரத்துத் தகவல் தொடர்பு வசதிகள் பெருகுகின்றன.

5. ஆக்கப் பொருள்களை எளிதில் விற்பனை செய்வதற்கான வசதிகள் கூடுகின்றன.

6. தொழிலாளர்கள் தங்களுடைய நலனைக் காத்துக் கொள்ள சங்கங்களை அமைத்துக்கொள்கின்றனர்.

7. முதலில் அமைக்கப்படும் தொழிலோடு அதைச் சார்ந்த துணைத் தொழில்களும் வளர்கின்றன.

8. தொழிற்செறிவால் குறிப்பிட்ட பகுதிகளில் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போன்றவை தோன்றிக் கடன் வசதிகள் அதிகரிக்கின்றன.

9. தொழில் நிறுவன அதிபர்கள் ஒன்றுகூடி பொதுவான சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்றனர்.

10. சில இடங்களில் குறிப்பிட்ட தொழில் நிறுவனங்கள் செறிவடைவதால், அவற்றிற்கு அரசின் ஆதரவும் உதவியும் கிடைக்கின்றன.

11. தொழில் செறிந்துள்ள இடங்களுக்குச் சென்று நிரந் தரமாகத் தங்கி தங்கள் உழைப்பைத் தரப் பலரும் முன் வருகிறார் கள். தொழிலின் வளர்ச்சியால் வேலை வாய்ப்பைத் தொடர்ச்சி யாகக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்திலேயே உழைப்பாளர் கள் அவ்விடங்களுக்குச் செல்கின்றனர்.

12. தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே சுமுக உறவு நீடிக்கிறது.

## தொழில்களின் இடச் செறிவால் ஏற்படும் தீமைகள்

1. தொழிற்செறிவினால் உழைப்பாளர்கள் குறிப்பிட்ட தொழிலைச் சார்ந்து வாழ்கின்றனர். அத்தொழிலில் மந்த நிலை

தோன்றினால் அவ்விடத்தைச் சார்ந்த உழைப்பாளர்களின் நிலை பெரிதும் பாதிக்கப்படும்.

2. தொழில் நிறுவனங்கள் ஓரிடத்தில் குவியும்போது ஆலைமுறைத் தீமைகள் தோன்றுகின்றன. சேரிகளும் குடிசைகளும் பெருகிச் சுகாதார வசதியின்மையும் வீட்டு நெருக்கடிகளும் உருவெடுக்கின்றன. உழைப்பாளர்களிடையே ஒழுக்கமின்மையும் சமுதாயச் சீர்கேடுகளும் கூடுகின்றன.

3. தொழிற் செறிவினால் சில பகுதிகள் மட்டும் போற்றத் தக்க வகையில் வளரும்போது, பல இடங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிவிடுகின்றன.

4. தொழிலாளர்களின் பெயர்ச்சி தொழிற்செறிவினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

5. போர்க் காலங்களில் தொழிற் செறிவுள்ள இடங்களையே பகைவர்கள் தாக்கி நாசம் விளைவிப்பர்.

6. குறிப்பிட்ட தொழிலில் பணியாற்றும் உழைப்பாளர் வேலை இழந்தால், அவர் பிற தொழில்களில் உழைப்பைத் தரும் திறமையைப் பெற்றிருப்பதில்லை.

7. தன்னிறைவு என்னும் உயர்ந்த இலட்சியத்தைத் தொழிற் செறிவுள்ள பகுதிகளால் எட்டமுடியாது. அப்பகுதிகளின் மக்கள் பல பொருள்களைப் பெற மற்றவர்களையே பெரிதும் சார்ந்திருக்கவேண்டும்.

'தொழில்களைப் பரவலாக்குதலையே' (decentralisation of industries) இன்றைய அரசுகள் அதிகமாக விரும்புகின்றன. நாட்டு மக்கள் எல்லோருடைய நலனையும் பெருக்கவும், அனைவருக்கும் சம வசதிகளையும் வாய்ப்புகளையும் தரவும் தொழில்களின் இடச்செறிவு உகந்ததல்ல. போக்குவரத்து முன்னேற்றமும், எல்லா இடங்களிலும் மின்சார வசதியைப் பெருக்கும் நிலையும் தொழில்களைப் பரவலாக்குவதற்கு உதவுகின்றன.

## IV. பேரளவு உற்பத்தியும் சிற்றளவு உற்பத்தியும்

இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சிக்குப் பிறகு, உலகின் பல நாடுகளிலும் பேரளவில் உற்பத்தியைச் செய்யும் பெரிய தொழில் நிறுவனங்கள் தோன்றின. அதிக அளவில் பெருகியுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பேரளவு

உற்பத்தி முறையைக் கைக்கொள்வதே வேண்டற்பாலது. தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவு வேறுபடுகிறது. 'ஓபராய்–ஷெராட்டன்' உணவகத்திற்கும் ஒரு சாதாரணத் தேநீர் விடுதிக்கும் நிரம்ப வேறுபாடுகள் உள்ளன.

உற்பத்தியைப் பேரளவிலோ சிற்றளவிலோ செய்யும்போது பல நன்மை-தீமைகள் விளைகின்றன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

### (i) பேரளவு உற்பத்தி (Large Scale Production)

அதிக மூலதனத்தை முதலீடாக்கி, மிகுந்த எண்ணிக்கையி லுள்ள தொழிலாளர்களின் உழைப்பைப் பெற்றுப் பேரளவில் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களால் உற்பத்திச் செலவைக் குறைக்கமுடிகிறது. அவை உயர்ந்த இலாபத்தையும் பெறுகின்றன. ஒரு தொழில் நிறுவனம் விரிவடையும்போது 'புறச் சிக்கனங்கள்' (external economies) கிடைக்கப் பெறு கின்றன. பல நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு தொழில் முன் னேற்றமடையும்போது கிடைப்பவை 'அகச் சிக்கனங்களாகும்' (internal economies).

**நன்மைகள்**

**1. இயந்திரங்களின் பயன்பாடு** பேரளவு உற்பத்தி முறையில் பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆக்கச் செலவைக் குறைக்கலாம். இதனால், தரம் மிக்க பொருள்களை அதிக அளவில், குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யமுடியும்.

**2. நுகர்வோர் நலன்:** குறைந்த விலைகளில் பல பண்டங் கள் கிடைப்பதால், நுகர்வோருடைய நலன் பெருகும். மக்க ளுடைய வாழ்வின் தரமுயரப் பேரளவு உற்பத்தி வகை செய்கிறது.

**3. வேலைப் பகுப்பு முறையைப் பின்பற்றுதல்:** பேரளவு உற்பத்தியில் வேலைப் பகுப்பு முறை பின்பற்றப்படுவதால், தனித் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் தரம் மிக்கப் பொருள்களை உருவாக்குகின்றனர்.

**4. தொழிலாளர்கள் நன்மையடைதல்:** பேரளவில் உற் பத்தியைச் செய்யும் பெரிய தொழில் நிறுவனங்கள் உழைப்பாளர் மருத்துவ வசதி, குடியிருப்பு வசதி, ஆரோக்கிய வசதி, பொழுது போக்கு வசதி முதலியவற்றை அளிக்கின்றன.

**5. குறைவான நிர்வாகச் செலவு :** பேரளவு உற்பத்தி நிறுவனங்களில் செயல்படும் அதிகாரிகள், கணக்காளர்கள், எழுத்தர்கள், தட்டெழுத்தர்கள் போன்றோர் மாத ஊதியம் பெறுபவர்கள். உற்பத்தியின் அளவைக் கூட்டும்போது அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தத் தேவையில்லை. உற்பத்தியின் அளவைக் கூட்டிப் பணியாளர்களிடம் இருந்து உண்மையான பணியைப் பெற்றால் நிர்வாகச் செலவு குறைந்து இலாபம் பெருகும்.

**6. விற்பனை பெருக விளம்பரம் :** பேரளவு உற்பத்தி நிறுவனங்கள் பத்திரிகைகள், வானொலி, தொலைநோக்கி, திரைப்படம், சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் போன்றவற்றின் மூலம் விளம்பரம் செய்து விற்பனையைப் பெருக்கலாம். பொருள்களின் தேவையைப் பெருக்க விளம்பரம் ஒரு சாதனமாக அமைகிறது. விற்பனையாளர்களை நியமித்தும் விற்பனையளவைக் கூட்டலாம்.

**7. ஆராய்ச்சிக்காகச் செலவிடுதல் :** பெரிய தொழில் நிறுவனங்கள் செலவைக் குறைப்பதற்கான உற்பத்தி முறைகளைக் கண்டறிய ஆராய்ச்சிப் பணிகளுக்காகச் செலவிட இயலும். உதாரணமாக, கோயம்புத்தூரில் நெசவாலை முதலாளிகள் பலரும் சேர்ந்து 'சித்ரா' (SITRA—South India Textile Research Institute) என்னும் ஆராய்ச்சி நிலையத்தை நெசவாலைத் தொழில் நுட்பங்களை ஆராய்வதற்கென அமைத்திருப்பதைக் குறிப்பிடலாம்.

**8. கடன் வசதிகளை எளிதில் பெறுதல் :** பேரளவுத் தொழில்களுக்கு அரசின் ஆதரவோடு, நிதி நிறுவனங்களிடம் இருந்து எளிதில் கடன் பெறவும் வசதிகள் உள்ளன. இவற்றிற்குக் கடன் தர வங்கிகள் தயங்குவதில்லை.

**9. இழப்பைத் தாங்கும் திறன் :** பேரளவு உற்பத்தி நிறுவனத்தின் வளர்ச்சி சிறிய அளவில் ஏற்படும் நஷ்டங்களால் பாதிக்கப்படமாட்டாது. எப்போதாவது ஏற்படும் சிறிய அளவு நஷ்டங்களைப் பிற காலங்களில் பெறும் அதிக அளவு இலாபங்கள் ஈடுசெய்கின்றன.

**10. உற்பத்திச் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் :** தொழிற்சாலைக் கட்டடங்கள், இயந்திரங்கள், லாரிகள் போன்றவை பேரளவு உற்பத்தி முறையால் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**11. மூலப்பொருள்களை வாங்குவதிலும் உற்பத்திப் பொருள்களை விற்பதிலும் சிக்கனம் :** பேரளவுத் தொழில் நிறுவனங்கள்

மூலப்பொருள்களை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாகக் குறைந்த விலைக்கு வாங்கலாம். இதனால், உற்பத்தி முடிந்த பொருள்களைக் குறைவான விலைக்குச் சந்தையில் நுகர்வோரிடம் விற்பனை செய்யலாம். இதன் விளைவாகத் தேவை பெருகும். பொருள்களின் விற்பனையில் ஓர் அலகுக்கான இலாபம் குறைவாக இருப்பினும், மொத்த இலாபத்தின் அளவு உயரளவிலேயே அமையும்.

**12. துணைப் பொருள்களின் உற்பத்தி :** பேரளவு உற்பத்தி முறையால் கிடைக்கும் கழிவுகளைத் துணைப் பொருள்களாக உற்பத்தி செய்யலாம்.

**13. இடர்களைத் தவிர்த்தல் :** பெரிய தொழில் நிறுவனங்கள் தொழிலில் தோன்றக்கூடிய இடர்களை ஓரளவு முன்னதாகவே கணித்து, அதற்கேற்ப முடிவுகளை மாற்றிக்கொள்ள இயலும். சந்தை நிலவரங்களுக்குத் தக்கவாறு அவை உற்பத்தியையும் விற்பனையையும் கட்டுப்படுத்துகின்றன. மேலும், அவை 'விபத்து ஈட்டுறுதி' (Accident Insurance), 'தீ ஈட்டுறுதி' (Fire Insurance), 'கடல் ஈட்டுறுதி' (Marine Insurance) முதலியவற்றின் மூலம் ஏற்படும் சாத்தியமான இடர்களைத் தவிர்க்கின்றன.

**தீமைகள்**

**1. தொழில் மந்தம் :** பேரளவில் உற்பத்தி செய்யும் தொழிலில் மந்த நிலை ஏற்பட்டால், பொருளின் விற்பனை பாதிக்கப்படும். தொழிலாளர்கள் வேலைவாய்ப்புகளை இழப்பர்.

**2. அதிக நஷ்டம் :** உற்பத்தி, நிர்வாகம், விற்பனை ஆகியவற்றில் கைக்கொள்ளப்படும் கொள்கைகளில் சிறு தவறு ஏற்பட்டாலும்கூட, அது பேரளவில் இழப்பைத் தோற்றுவிக்கும்.

**3. நிர்வாகப் பிரச்சினை :** பேரளவில் உற்பத்தி செய்யப்படும் போது, எல்லா உற்பத்தி நடவடிக்கைகளையும் நிர்வாகிகளால் சரிவரக் கண்காணிக்க இயலாது. பெரிய தொழிலை நன்னெறிப்படுத்துவதும் மேற்பார்வையிடுவதும் எளிதல்ல.

**4. உற்பத்தியின் அளவை எளிதில் மாற்றமுடியாத நிலை :** பேரளவு ஆக்கத் தொழில்களில், பொருள் உற்பத்தியின் அளவைத் தேவைக்கேற்ப குறைக்கவோ கூட்டவோ முடியாது.

**5. சர்வாதீன நிலை :** பேரளவு உற்பத்தியால் ஒரு தொழில் நிறுவனம் சர்வாதீன நிலையைப் பெற வாய்ப்புண்டு. சர்வாதீன

நிலையால் அந்நிறுவனம் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் விலையை உயர்த்த முடியும். இதனால், பொது மக்களுடைய நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

**6. வெளிச் சந்தைகளைச் சார்ந்திருத்தல் :** சில பெரிய தொழில்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக உற்பத்தியைச் செய்கின்றன. போரினால் ஏற்றுமதி செய்ய இயலாத நிலை தோன்றும்போது தொழிலின் வளர்ச்சி சீர்குலைகிறது.

**7. வேலை நிறுத்தம் - கதவடைப்பு :** பேரளவு உற்பத்தித் தொழிலில் தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபருக்கும் இடையே சுமுகமான உறவு அமைவதில்லை. தொழிலாளர் சங்கங்கள் கூலி உயர்வுக்காகத் தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யத் தூண்டுகின்றன. அதிகச் செல்வத்தையும் வருமானத்தையும் பெறும் தொழில் அதிபர் தொழிலைக் கவனிக்கிறார்; அல்லது கதவடைப்புச் செய்கிறார். இவற்றால் பாதிக்கப்படுபவர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களே.

**8. போட்டியால் சில நிறுவனங்கள் நசித்தல் :** பேரளவில் ஆக்கத்தை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கிடையே தோன்றும் போட்டியால் சில நிறுவனங்கள் நசித்து விடுகின்றன.

**9. எல்லா மனித விருப்பங்களையும் நிறைவு செய்ய முடியாமை :** பல வகைப்பட்ட பொருள்களைப் பெற முயல்வதே மனித இயல்பு. எல்லா வகைப் பொருள்களையும் பேரளவில் உற்பத்தி செய்ய இயலாது. மேலும், பேரளவு உற்பத்திப் பொருள்கள் ஒரே மாதிரியான தன்மையையும் தரத்தையும் கொண்டுள்ளன.

**10. வளர்ந்து செல்லும் செலவு நிலை :** பேரளவு உற்பத்தி ஒரு குறிப்பிட்ட எல்லை வரைதான் அக-புறச் சிக்கனங்களை அளிக்க இயலும். அந்த எல்லையைத் தாண்டிய பிறகு உற்பத்திச் செலவுகள் கூடுகின்றன.

**11. நிதிப் பற்றாக்குறை :** உற்பத்தியைப் பேரளவில் செய்ய அதிக நிதி தேவை. எல்லாக் காலங்களிலும் தொடர்ச்சியாக நிதி வசதி கிடைப்பது கடினம். நிதிப் பற்றாக்குறையால் உற்பத்தி தடைப்படுகிறது.

**12. ஆக்கக் காரணிகளின் பற்றாக்குறை :** ஆக்கக் காரணிகளில் ஏதாவது ஒரு காரணியின் அளிப்பில் பற்றாக்குறை ஏற்பட்டாலும்கூட உற்பத்தி பாதிக்கப்படும்.

**13. வாணிகக் குறியீட்டுக்கேற்ப விற்பனை :** எல்லாப் பொருள்களையும் பேரளவில் உற்பத்தி செய்வது இயலாது. சில பொருள்கள் வாணிகக் குறியீட்டினாலேயே விற்பனையாகின்றன. 'கோல்கேட், பிளாகா, ஃபோர்ஹான்ஸ், மக்ளீன்ஸ், சிக்னல்' போன்ற பற்பசைகள் அதிகத் தேவையைக் கொண்டுள்ளன. புதிய பற்பசையை புதியதொரு வாணிகக் குறியீட்டுப் பெயரில் பேரளவில் உற்பத்தி செய்து, அதன் விற்பனையைப் பெருக்குவது கடினமானது.

### (ii) சிற்றளவு உற்பத்தி (Small Scale Production)

மனிதனின் எண்ணற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்ய, சிற்றளவில் உற்பத்தியைச் செய்யும் சிறிய தொழில்கள் உதவுகின்றன. ஜப்பானில் பல மின்னியல் சாதனப் பொருள்கள் கூடச் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேளாண்மை, உணவகம், கடை போன்றவற்றில் சிற்றளவு உற்பத்தியும் காணப்படுகிறது. கைவினைத் தொழில்களும், குடிசைத் தொழில்களும், பிற சிறு தொழில்களும் சிறிய அளவிலேயே உற்பத்தியைச் செய்கின்றன. சிற்றளவு உற்பத்தி முறையின் முன்னேற்றத்தால் தான், உலகின் பல நாடுகளிலும் ஜப்பானியத் தொழிற் பொருள்களுக்கு அதிகக் கிராக்கி உள்ளது.

**நன்மைகள்**

**1. குறைந்த தேவையுள்ள பொருள்கள் :** உற்பத்திப் பொருள்களுக்கான தேவை குறைவாக இருந்தால், சிற்றளவு உற்பத்தி முறையையே கையாள வேண்டும். குறைவான முதலீட்டைக் கொண்டே தேவையான அளவில் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும்.

**2. சிறப்பான வளர்ச்சி :** சிற்றளவுத் தொழிலைத் திறமையாக நிர்வகிப்பது எளிது. உற்பத்திச் செயல்களைக் கண்காணிப்பதும், மேற்பார்வையிடுவதும் சுலபமாகின்றன. இவற்றால் தொழில் வளர்ச்சி சிறப்பாக அமைகிறது.

**3. உற்பத்தியளவை எளிதில் மாற்றுதல் :** சிறிய தொழில்களில் தேவை மாற்றத்திற்கேற்ப உற்பத்தியளவு மாற்றத்தைச் செய்வது சுலபம். இதனால், ஏற்படக்கூடும் சாத்தியமான இழப்புகள் தவிர்க்கப்படுகின்றன.

**4. நுகர்வோருடன் நெருங்கிய தொடர்பு :** சிறு தொழில் உற்பத்தியாளர்கள் நுகர்வோருடன் நெருங்கிய தொடர்பைக்

கொண்டிருக்கிறார்கள். எனவே, நுகர்வோருடைய விருப்பங்களைத் தெரிந்து, அதற்கேற்ப பொருள்களை உற்பத்தி செய்யலாம். இதனால், தேவை பெருகும்.

**5. சிக்கன நடவடிக்கைகள் :** சிறு தொழில் அமைப்பாளர்களால் ஆக்கச் சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, உற்பத்திச் செலவைக் குறைக்கமுடியும். குறைந்த விலையில் பொருள்களை விற்பது இதனால் சாத்தியமாகிறது.

**6. பெருமளவு இலாபம் :** சிற்றளவு உற்பத்தி பெரும்பாலும் தனி மனிதத் தொழில் அமைப்பாலேயே செய்யப்படுகிறது. இழப்பு அல்லது இலாபம் ஒருவரையோ அல்லது ஒரு சிலரையோ மட்டும் சேர்கிறது. இதன் காரணமாகத் தொழில் அமைப்பாளர் கவனத்துடன் உற்பத்தியைச் செய்து அதிக இலாபத்தைப் பெறுகிறார்.

**7. முதலாளி - தொழிலாளர்களுக்கு இடையே நல்லுறவு :** சிற்றளவுத் தொழில்களில் முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் சுமுக உறவும் நிலவுவதால், வேலை நிறுத்தம் – கதவடைப்புப் போன்றவை ஏற்படுவதில்லை.

**8. வேலை வாய்ப்புப் பெருக்கம் :** சிற்றளவு உற்பத்தி முறையில் மிகப் பெரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமையால், மனித உழைப்பே அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதனால், பலருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

**9. விரைவில் அழியும் தன்மை கொண்ட பொருள்கள் :** காய்கறிகள், பழங்கள், பால், தயிர், முட்டை, இறைச்சி, மலர்கள் போன்ற குறுகிய காலத்தில் அழியும் இயல்பு பெற்ற பொருள்களைச் சிற்றளவில் உற்பத்தி செய்து விற்பதே சிறந்தது.

**தீமைகள்**

1. சிற்றளவு உற்பத்தியில் வேலைப் பகுப்பு முறையின் நன்மைகள் கிடைக்கப் பெறுவதில்லை.

2. இயந்திரங்களையும், தொழில் நுட்பம் வாய்ந்த கருவிகளையும் பயன்படுத்துவது இயலாததாகிறது.

3. தேவை திடீரெனக் கூடும்போது உற்பத்தியை அந்த அளவுக்கு விரைவாகப் பெருக்கமுடியாது.

4. உற்பத்தியில் கிடைக்கும் கழிவுகளை உபயோகித்துத் துணைப் பொருள்களை உற்பத்தி செய்ய இயலாது. ஏனெனில், முக்கியப் பொருளின் உற்பத்தியளவே குறைவாக உள்ளது.

5. சிற்றளவுத் தொழிலில் அமைப்பு - நிர்வாகச் செலவுகள் உயர்வாக அமைகின்றன. முதலீட்டின் அளவுக்குத் தக்க வீதத்தில் இலாபம் கிடைக்குமெனக் கருதமுடியாது.

6. நஷ்டம் ஏற்படும்போது சிறு தொழில்கள் தொடர்ந்து செயல்பட முடிவதில்லை.

7. குறைந்த வட்டியில், நீண்ட காலத் தவணை முறையில் சிற்றளவுத் தொழில்கள் கடனைப் பெறுவது கடினம்.

8. மூலப் பொருள்களை வாங்குவதிலும், உற்பத்திப் பொருள்களை விற்பதிலும் சிக்கனங்களைப் பெற இயலுவதில்லை.

9. சிறிய தொழில் நிறுவனங்களால் ஆராய்ச்சிக்கென நிதி ஒதுக்கம் செய்வது இயலாதது.

10. பேரளவு உற்பத்தி முறையோடு ஒப்பிடும்போது சிற்றளவு உற்பத்தி முறையில் சராசரிச் செலவு மற்றும் பொருள்களின் விலை ஆகியவை உயர் மட்டத்திலேயே அமைகின்றன.

பொதுவாகப் பேரளவு உற்பத்தியின் நன்மைகள் சிற்றளவு உற்பத்தியின் தீமைகளாக இருக்கின்றன.

## V. கூட்டுறவுப் பண்ணை (Co-operative Farming)

பேரளவு உற்பத்தியின் நன்மைகளை வேளாண்மையில் பெற கூட்டுறவுப் பண்ணை உதவுகிறது. இதன் மூலம் சிறிய அளவில் உள்ள துண்டு நிலங்கள் இணைக்கப்பட்டுப் பெரிய அளவு நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளின் வறிய நிலையைத் துடைத்துச் சமதர்ம சமுதாயத்தை அமைக்கக் கூட்டுறவுப் பண்ணை முறை வழிகோலுகிறது. கூட்டுறவுப் பண்ணையை கூட்டுப் பண்ணை, சிறப்புப் பண்ணை, இணைப்புப் பண்ணை, குத்தகைப்பண்ணை என நான்கு வகைகளாகப் பகுக்கலாம்.

இந்திய அரசு கூட்டுறவுப் பண்ணைகளைப் பெருக்க எடுத்த முயற்சிகள் அதிக வெற்றியைப் பெறவில்லை. பல மாநிலங்களிலும் நிலச் சீர்திருத்தங்களின் மூலம் வேளாண்மையில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுப் பண்ணை முறையால்

ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம் :

**நன்மைகள்**

1. சிறிய அளவில் உள்ள நிலங்கள் சேர்க்கப்படுவதால் பேரளவு உற்பத்தி முறையைப் பின்பற்ற பல அகப்புறச் சிக்கனங்களைப் பெறலாம். இதனால், ஓர் ஏக்கருக்கான உற்பத்தியும் தனி ஒருவருக்கான உற்பத்தியும் அதிகரிக்கின்றன.

2. சாகுபடி நிலத்தின் பரப்பு விரிவடைவதால் பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்திச் சாகுபடியைச் செய்யலாம். இதன் காரணமாகச் சாகுபடி நடவடிக்கைகளை விரைவாகவும் குறுகிய காலத்திலும் செய்துமுடிக்க இயலும்.

3. விஞ்ஞான அடிப்படையில் சாகுபடி செய்யப்படுவதால் உற்பத்தியின் அளவு கூடுகிறது. நல்ல விதைகளும் உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன.

4. நிலத்தின் மீதான உரிமையை எல்லா விவசாயிகளும் பெற்றிருப்பதால், அவர்கள் ஊக்கத்தோடு உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள்.

5. நிலத்தில் நிரந்தர வசதிகளைப் பெறுவதற்கான கடனைப் பெறுவது எளிதாகிறது. கிணறுகள் தோண்டவும் பம்பு செட்டுகளை அமைக்கவும் எளிதில் கடன் கிடைக்கின்றது.

6. கூட்டுறவுப் பண்ணையின் உறுப்பினரிடையே கூட்டுறவு மனப்பான்மையும் சமுதாய உணர்வும் பெருகும். அவர்கள் பரந்து விரிந்த கண்ணோட்டத்தைப் பெறுகிறார்கள்.

7. கூட்டுறவுப் பண்ணையின் வளர்ச்சிக்கு அரசின் ஆதரவும் உதவிகளும் கிடைக்கின்றன.

8. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உற்பத்திச் சாதனப் பொருள்களைச் சகாய விலைகளில் மொத்தமாக வாங்குகின்றனர். விளை பொருள்களை உயர் விலைகளில் விற்று அதிக இலாபத்தைப் பெறுகின்றனர்.

9. கூட்டுறவுப் பண்ணை முறையால் வேளாண்மை உற்பத்தி பெருகி விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதோடு தேசிய வருமானமும் அதிகரிக்கிறது.

10. தானியங்களைச் சேமித்து வைக்கும் கிடங்கு வசதிகளைக் கூட்டுறவுப் பண்ணை முறையில் எளிதாகப் பெறலாம்.

**தீமைகள்**

1. கூட்டுறவுப் பண்ணை முறையில், நிலவுடைமைகளின் மீதான விவசாயிகளின் உரிமை காக்கப்பட்டாலும், அதை விவசாயிகள் விரும்புவதில்லை.

2. கூட்டுறவுப் பண்ணையை நிர்வகிக்கத் தேவையான திறமை மிக்க தலைமை அமைந்திருக்கவில்லை. பெரிய பண்ணைகளை நிர்வகிக்கத் தனித் திறமை தேவை.

3. கூட்டுறவுப் பண்ணை முறை செயல்படுத்தத் தக்கதாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும் அமையவில்லை.

4. தனிப்பட்ட நிலவுடைமையாளர்கள் ஊக்கமிழக்கின்றனர். அவர்கள் நிலத்தின் மீது முழு உரிமையைக் கொண்டிருப்பதில்லை.

5. கூட்டுறவுப் பண்ணைகள் இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் கிராமங்களில் வேலையின்மைச் சிக்கல் தீவிரமாகும்.

6. விவசாயிகள் பழமை நோக்குக் கொண்டவர்களாதலால், கூட்டுறவுப் பண்ணை முறை செல்வாக்குப் பெற முடியாது.

7. கூட்டுறவுப் பண்ணை முறையில் எந்தெந்த உறுப்பினர்களுக்கு எவ்வகைப் பணிகளை அளிப்பது என்பதைத் தீர்மானிப்பது கடினமாகிறது.

8. வேலைப் பகுப்பு முறையை முழுமையாகப் புகுத்த முடியாது; சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதும் இயலாது.

9. உறுப்பினர்களிடையே ஊக்கமின்மை, ஒற்றுமையின்மை, நேர்மையின்மை, பொருத்தமின்மை, அமைதியின்மை, ஒழுக்கமின்மை ஆகியவை அமைந்துள்ளன.

10. கூட்டுறவுப் பண்ணை முறையில் எதிர்பார்க்கும் வகையில் நிதி வசதிகள் கிடைக்கமாட்டா.

ரஷ்யா போன்ற பொதுவுடைமை நாடுகளில் கூட்டுறவுப் பண்ணைகள் வளர்ந்துள்ளன. நம் நாட்டின் நெகிழ்வுள்ள அரசியல் அமைப்பு கூட்டுறவுப் பண்ணை முறையின் வளர்ச்சிக்குச் சாதக

மாக இல்லை. விவசாயிகளைக் கட்டாயப்படுத்தியே இம் முறையை மேம்படுத்த இயலும். இதன் மூலம் ஏற்படும் நன்மைகளைப் பரிசோதனைப் பண்ணைகளின் வாயிலாக மக்களுக்கு உணர்த்த வேண்டும். புறம்போக்கு நிலங்களிலும், புதிய நிலங்களிலும் கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்கலாம். அவற்றை நிர்வகிப்பதற் கான பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் அவசியம்.

மக்களுடைய ஒத்துழைப்பு, அரசின் ஆதரவு, நிலச் சீர் திருத்தங்கள் ஆகியவற்றின் மூலமே கூட்டுறவுப் பண்ணை முறையை இந்தியாவில் வளர்க்கமுடியும்.

# 18. மதிப்பு
## (Value)

பொருளியலில் 'மாற்று' (Exchange) என்னும் பகுதியில் பண்டங்களின் 'மதிப்பு' பற்றிய நிலைகள் ஆராயப்படுகின்றன. ஒரு பொருளின் மதிப்பு விலையினின்றும் வேறுபட்டதாகும். மதிப்பு என்பது ஒரு பொருளின் மாற்றுச் சக்தி. பொருளின் மதிப்பைப் பண அளவில் குறிப்பிடுவதே விலை ஆகும். பொருளியலில் பொருளின் 'மாற்று மதிப்பையே' (exchange value) மதிப்பு எனக் குறிப்பிடுகிறோம். பொருளின் மதிப்பு எதைச் சார்ந்துள்ளது என்பதை விளக்கப் பொருளியலாளர்கள் வெவ் வேறு கோட்பாடுகளைத் தந்துள்ளார்கள்.

## I. மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகள்
## (Theories of value)

ஒரு பொருளின் மதிப்பு அதிகரிக்கும்போது, மாற்றுப் பொருள்களின் மதிப்புக் குறைகிறது. ஓர் ஆட்டிற்குப் பத்துக் கோழிகள் சமம் என வைத்துக் கொள்ளலாம். அப்பொழுது ஆட்டின் விலை 20 ரூபாயாகவும் கோழியின் விலை 2 ரூபாயாகவும் இருக்கிறது. கோழியின் விலை மாறுதபோது ஆட்டின் விலை மட்டும் 30 ரூபாயாக உயர்ந்தால் ஓர் ஆட்டிற்குப் பதினைந்து கோழிகள் சமமாகின்றன. இதன் மூலம் ஆட்டின் மதிப்பு அதிகரிப்பதையும் கோழிகளின் மதிப்புக் குறைவதையும் அறிகிறோம். மாறாக, ஆட்டின் விலை 30 ரூபாயாக உயரும்போது, அதே விகிதத்தில் கோழியின் விலை 3 ரூபாயாக அதிகரித்தால் இரண்டின் மதிப்பும் மாறாது.

### (1) மதிப்பின் உழைப்புக் கோட்பாடு (Labour theory of value)

இது மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகளுள் மிகவும் தொன்மை யானது. ஆடம் ஸ்மித் (Adam Smith), டேவிட் ரிக்கார்டோ

(David Ricardo), கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆகியோர் இதன் ஆசிரியர்களாகக் கருதப்படுகின்றனர். இக்கோட்பாட்டின் படி, ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவே அதன் மதிப்பை நிர்ணயிக்கிறது. 'உழைப்பே மதிப்பை உருவாக்குகிறது; எனவே, நீண்ட காலத்தில் ஒரு பொருளின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பின் அளவே அப்பொருளின் மதிப்பை நிர்ணயிக்கிறது.' என்று ரிக்கார்டோ குறிப்பிடுகிறார். இயற்கையின் அன்பளிப்பாகிய நிலத்திற்குச் சன்மானம் கொடுக்க வேண்டியதில்லை என அவர் கூறுகிறார்.

மார்க்ஸ் தன்னுடைய பொதுவுடைமைக் கொள்கைக்கு ஆதரவாக இக்கோட்பாட்டை எடுத்துக்கொண்டார். அவருடைய கருத்துப்படி பொருளின் மதிப்பு முழுவதும் உழைப்பாளருக்கே சொந்தம். உழைப்பாளரைச் சுரண்டுவதன் மூலமே இலாபம், வட்டி ஆகியவை கிடைக்கின்றன. இக்கோட்பாடு தவறானது என்பதைப் பல விளக்கங்களால் இனிதுணரலாம். பிற ஆக்கக் காரணிகளோடு இணைந்து செயல்படும்போதுதான் உழைப்பு உற்பத்தியைச் செய்யும் திறனைப் பெறுகிறது. பொருள்களை உற்பத்தி செய்யத் தொழில் அமைப்பாளர் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை இணைக்கிறார். எந்த ஒரு தனி ஆக்கக் காரணியாலும் தனித்து நின்று உற்பத்தியைச் செய்ய இயலாது. உழைத்து உற்பத்தி செய்த பொருளை எவரும் வாங்க முன்வராவிட்டால், அப்பொருள் மதிப்பை இழந்துவிடுகிறது. உழைப்பில் பல வகைகள் இருப்பதை இது விளக்கவில்லை. ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் உழைப்பு எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கணிப்பதும் கடினமானது. இக்கோட்பாடு அளிப்பின் புறத்திலிருந்து எழுதப்பட்டது. தேவையின்புறம் புறக்கணிக்கப்படுகிறது.

### (2) ஆக்கச் செலவுக் கோட்பாடு (Cost of production theory)

ஒரு பொருளின் மதிப்பு அதை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுக்குச் சமம் எனச் சில பொருளியலாளர்கள் கருதினர். ஆக்கச் செலவில் நிலத்திற்கான வாரம், மூலதனத்திற்கான வட்டி, உழைப்பிற்கான ஊதியம், தொழில் அமைப்பாளருக்கான நியாயமான இலாபம் ஆகிய யாவும் அடங்குகின்றன என மில் கூறுகின்றார். 'நியாயமான இலாபத்தோடு சேர்ந்த உற்பத்திச் செலவு அப்பண்டத்தின் மதிப்பு அல்லது விலை', என்றும் அவர் குறிப்பிடுகின்றார். சந்தையில் நிலவும் விலையும் உண்மை விலையும் வேறுபடக்கூடும். ஆனால், போட்டி ஏற்படும்போது சந்தை விலை உற்பத்திச் செலவை நோக்கிச் செல்லும்.

இக்கோட்பாடு உழைப்பின் மதிப்புக் கோட்பாட்டைவிடத் திருத்தமானது என்றாலும், சில குறைபாடுகளையும் கொண்டுள்ளது. இதுவும் அளிப்பின் பக்கத்திலிருந்தே பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது. பொருளுக்கான தேவை மாற்றம் அதன் மதிப்பில் மாற்றத்தைத் தோற்றுவிக்கும் என்பதை இது குறிப்பிடவில்லை. மீண்டும் உருவாக்க இயலாத பிகாஸோ, ரவி வர்மா ஆகியோருடைய ஓவியங்கள் மதிப்பு மிக்கவை. இவற்றின் மதிப்பு ஆக்கச் செலவைவிட மிக அதிகமாக இருக்கிறது. மேலும், கூட்டு உற்பத்திப் பொருள்களின் விலையை இக்கோட்பாட்டின் உதவி கொண்டு விளக்கமுடியாது. உற்பத்திச் செலவினால் மட்டுமே ஒரு பொருளின் மதிப்பு நிர்ணயமாகிறது என்று கூறுவதால், இதை ஒரு முழுமையான கோட்பாடாகக் கொள்ள இயலாது.


### (3) பயன்பாட்டுக் கோட்பாடு (Utility theory)

இக்கோட்பாட்டிற்கு முழு வடிவம் தந்தவர் ஜெவான்ஸ் ஆவார். ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் பயன்பாட்டிற்குச் சமமாக இருக்குமென அவர் குறிப்பிட்டார். அதிகப் பயன்பாடு கொண்ட பொருள் அதிக மதிப்பையும், குறைந்த பயன்பாடு கொண்ட பொருள் தாழ்ந்த மதிப்பையும் பெற்றிருக்கும். இக்கோட்பாடு ஆக்கச் செலவுக் கோட்பாட்டிற்கு நேர்எதிரானது. நுகர்வோர் ஒரு பொருளினின்றும் பெறுகின்ற பயன்பாடே, அதன் மதிப்பை நிர்ணயிக்கும் என இது கூறுகின்றது. இதில் பொருளின் தேவைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அளிப்பு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறது. நிறைவுப் போட்டியில், ஒரு பொருளின் விலை அதன் இறுதி நிலைப் பயன்பாட்டிற்குச் சமமாக இருக்குமென்றாலும், அளிப்பின் பக்கம் புறக்கணிக்கப்படுவது சரியன்று.

### (4) தேவை-அளிப்புக் கோட்பாடு (Demand and supply theory)

நாம் இதுவரை கண்ட மூன்று கோட்பாடுகளும், பண்டத்தின் மதிப்பை நிர்ணயிப்பதில் முழுமையான கோட்பாடுகளாக இல்லை. தேவை, அளிப்பு ஆகிய இரு காரணிகளாலும் ஒரு பொருளின் மதிப்பு நிர்ணயமாவதாக மார்ஷல் குறிப்பிடுகின்றார். அதை விளக்க தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் ஒரு கத்திரிக்கோலின் இரண்டு கத்திகளுடன் ஒப்பிடுகின்றார். இரண்டு கத்திகளும் சேர்ந்து ஒரு காகிதத்தை வெட்டுவது போல, தேவை-அளிப்பு ஆகிய இரு காரணிகளும் இணைந்து பொருளின் மதிப்பை நிர்ணயிக்கின்றன.

உற்பத்தியாளர் அதிக விலையில் விற்கவும், நுகர்பவர் குறைந்த விலையில் வாங்கவும் முனைகின்றனர். நுகர்பவரின் தேவை பொருளின் பயன்பாட்டிற்கேற்பவும், உற்பத்தியாளரின் அளிப்பு உற்பத்திச் செலவிற்கேற்பவும் அமையும். தேவையும் அளிப்பும் ஒன்றுபடும் இடத்தில் சமன்பாட்டு விலை நிர்ணயமாகிறது. கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் 'விலைச் சமநிலை' எவ்வாறு ஏற்படுகிறது என்பது காட்டப்பட்டுள்ளது.




படம் 22

X அச்சில் தேவை அல்லது அளிப்பும், Y அச்சில் விலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. $DD_1$ தேவை வளைகோடாகவும், $SS_1$ அளிப்பு வளைகோடாகவும் அமைகின்றன. PQ விலையில் தேவையும் அளிப்பும் ஒன்றிற்கொன்று சமமாக OQ என்ற அளவில் இருக்கின்றன. இதையே சமநிலை என்கிறோம். ஆனால், விலை $P_1 Q_1$ ஆக உயரும்போது, தேவை $OQ_1$ ஆகக் குறைவதையும் அளிப்பு $OQ_2$ ஆக அதிகரிப்பதையும் காண்கிறோம். மாறாக விலை $R_1Q_1$ ஆகக் குறையும்போது, தேவை $OQ_2$ ஆகப் பெருகுவதையும் அளிப்பு $OQ_1$ ஆகச் சுருங்குவதையும் அறிகிறோம்.

$P_1Q_1$ விலையும், $R_1Q_1$ விலையும் தேவையும் அளிப்பும் இணைகின்ற சமநிலை விலைகள் அல்ல. எனவே, இவ் விலைகள் விரைவில் மாறி PQ சமநிலை விலையாகின்றன.

**சந்தை** (Market)

சாதாரண வழக்கில் பொருள்கள் விற்கப்படும் அல்லது வாங்கப்படும் இடத்தைச் சந்தை என்கிறோம். ஆனால், பொருளியலில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் தொடர்பு ஏற்படுகின்ற நிலையைச் 'சந்தை' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறோம். சந்தை என்பது ஓர் இடத்தையோ பகுதியையோ குறிப்பதில்லை. விற்கப்படும் அல்லது வாங்கப்படும் பண்டம் அல்லது பண்டங்களின் அளவையே அது குறிக்கின்றது. சான்றாக, 'பங்கு அங்காடி' (share market) என்பது பங்குகள் விற்கப்படுவதையும் வாங்கப்படுவதையும் குறிக்கின்றதே தவிர எந்த இடத்தையும் குறிக்கவில்லை. ஒரு பண்டத்திற்கான அங்காடியின் இலக்கணம், அப்பண்டத்திற்கு அவ் வங்காடியில் ஒரே விலை அமைந்திருப்பதாகும்.

சந்தையில் அமையும் சூழ்நிலைகளுக்கேற்ப பொருள்களின் விலை நிர்ணயமாகின்றது. உற்பத்தியான பொருள்களை விற்பதிலும் வாங்குவதிலும் போட்டி நிலவுவது போலவே உற்பத்திக்குத் தேவையான காரணிகளை விற்பதிலும் வாங்குவதிலும் போட்டி நிலவுகிறது. நிறைவுப் போட்டி, நிறைகுறைப் போட்டி, முன்னுரிமை ஆகியவற்றிற்கேற்ப பொருளின் விலை சந்தையில் எவ்வாறு நிர்ணயமாகிறது என்பதை அறிவது அவசியம்.

## II. நிறைவுப் போட்டி (Perfect competition)

சந்தையில் நிறைவுப் போட்டி நிலவும்போது பொருளின் விலையை வாங்குபவரோ விற்பவரோ தம்முடைய விருப்பம்போல மாற்ற இயலாது. பொருளை அவ்விலைக்குக் குறைவாக வேறெங்கும் வாங்க இயலாது. உற்பத்தியாளர் அவ்விலைக்கு அதிகமான விலையில் பொருளை விற்கமுடியாது. இந்நிலையைத் 'தூய போட்டி' (pure competition) என்றும் குறிப்பிடலாம். நிறைவுப் போட்டி நிலவும் சந்தையில் பின்வரும் இயல்புகள் அமைந்திருக்க வேண்டும்.

### 1. எண்ணற்ற விற்பனையாளரும் வாங்குவோரும்

சந்தையின் மொத்த அளிப்பும் மொத்தத்தேவையும் பொருளின் விலையை நிர்ணயிக்கின்றன. எனவே, பொருளை வாங்கு

பவர்களும் விற்பவர்களும் அதிக எண்ணிக்கையில் இருக்க வேண்டும். மொத்தப் பொருளின் அளவில் தனியொருவர் விற் பதோ வாங்குவதோ மிகக் குறைந்த அளவினதாகவே அமையும். விற்பனையாளர் விற்பனையின் அளவைக் குறைத்து விலையை உயர்த்தவோ வாங்குபவர் வாங்கும் அளவைக் குறைத்து விலையைத் தாழ்த்தவோ இயலாது.

**2. ஒரியல்பான பொருள** (Homogenous product)

விற்பனைப் பொருள் ஒரே அளவினதாகவும் தரத்தினதாக வும் தன்மையினதாகவும் இருத்தல் வேண்டும். வாங்குபவர் எந்த விற்பனையாளரிடம் இருந்தும் பொருளை வாங்கலாம். வாங்கு பவர்கள் குறிப்பிட்ட விற்பனையாளர்களிடம் இருந்து பொருளை வாங்க வேண்டுமென்று எண்ண மாட்டார்கள். விற்பனையாளர் ஒருவர் விலையை அதிகரித்தால் அவருடைய விற்பனை பாதிக்கப் படும்.

**3. தடைகளற்ற நிலை**

நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் விற்பனையாளர் களும் வாங்குபவர்களும் எப்போது வேண்டுமானாலும் நுழையவும் வெளியேறவும் தடைகளற்ற வாய்ப்பு இருக்கிறது. புதிதாக நுழைபவர்களாலோ வெளியேறுபவர்களாலோ விலை பாதிக்கப்பட மாட்டாது.

**4. ஆக்கக் காரணிகளின் தடைகளற்ற இடப்பெயர்ச்சி**

ஆக்கக் காரணிகள் அதிக ஊதியம் பெறும் இடங்களுக்குப் பெயர்ந்து செல்லத் தடைகள் இருக்கக்கூடாது. அதிக ஊதி யத்தைப் பெறும் வகையில் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய வற்றின் பெயர்ச்சி தடையின்றி அமையவேண்டும்.

**5. விற்பனையாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் சந்தையைப் பற்றிய முழுமையான அறிவு**

வாங்குபவர்களும் விற்பவர்களும் சந்தை நிலவரத்தையும் விலையையும் அறிந்திருக்க வேண்டும். வாங்குபவர் அனைவருக்கும் பொருளின் தரம், விலை ஆகியவை பற்றிய முழுமையான அறிவு இருந்தால், விற்பனையாளர்கள் மாறுபாடான விலைகளில் பொருளை விற்கமுடியாது.

**6. சலுகை அமையாத நிலை**

விற்பனையாளர்கள் பொருளை வாங்குபவர்களில் சிலருக்கு மட்டும் குறைந்த விலையில் விற்கமாட்டார்கள். அதுபோன்றே

வாங்குபவர்களும் குறிப்பிட்ட சில விற்பனையாளர்களிடம் இருந்து பொருளை வாங்க வேண்டுமென்று விரும்பமாட்டார்கள்.

### 7. போக்குவரத்து வசதிகள்

விற்பனையாளர்கள் தங்கள் விருப்பப்படிப் பொருளை இடம் மாற்றுவதற்கு உகந்த எளிய, சிக்கனமான போக்குவரத்து வசதிகள் தேவை. உதாரணமாகக் குறைவான அளிப்பால் சென்னையில் உளுந்தின் விலை அதிகரிக்கும்போது, அதிக அளிப்பைக் கொண்டுள்ள செங்கல்பட்டில் இருந்து உளுந்தைக் கொண்டுவர விரைவான, எளிய போக்குவரத்து வசதிகள் அவசியமாகின்றன.

### 8. சோம்பலின்மை

குறைவான விலையில் பொருள்கள் விற்கக்கூடிய இடங்களுக்குச் சென்று வாங்குவதற்கு நுகர்வோர் தயங்கக்கூடாது. விலை நிலவரம் தெரிந்தும் சிலர் சோம்பலின் காரணமாக உயர் விலையில் பொருள்களை வாங்குவதால் விலை வேறுபாடுகள் தோன்றக்கூடும்.

நம்முடைய அன்றாட வாழ்வில், மேற்குறிப்பிடப்பட்ட நிறைவுப் போட்டிக்கான சூழ்நிலைகள் அமைவதில்லை. பொருளின் தரங்கள் வேறுபடுகின்றன. விலையில் வேறுபாடுகள் உள்ளன. விளம்பரத்தின் மூலம் பொருள்கள் வேறுபடுத்தி விற்கப்படுகின்றன.

### நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயம்

தேவை விதி, குறைந்து செல் பயன்பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறது. விலை குறையும்போது மிகுதியான பொருள்கள் வாங்கப்படுகின்றன. தேவைக்கும் விலைக்கும் இடையே தலைகீழ்த் தொடர்பு உள்ளது. நுகர்வோர் அதிக அளவு மொத்தப் பயன்பாட்டைப் (total utility) பெற இறுதிநிலைப் பயன்பாடும் (marginal utility) விலையும் சமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வர். பொருளின் விலை, விற்பனையாளர் பெறும் சராசரி வருவாய் (average revenue), இறுதிநிலை வருவாய் (marginal revenue) ஆகியவை பொருளில் இருந்து நுகர்வோருக்குக் கிடைக்கும் பயன்பாட்டிற்கு ஏற்ப அமையும்.

விலை உயரும்போது உற்பத்தியாளர்கள் அதிக அளவுப் பொருள்களை விற்கின்றனர். விலை குறையும்போது அளிப்பைக் குறைத்துக் கொள்கின்றனர். உற்பத்திச் செலவு ஒரு பொருளின்

அளிப்பை நிர்ணயிக்கிறது. எவ்வகைப் போட்டியாக இருந் தாலும், இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவுக்குச் (marginal cost) சமமாக இருக்கும் போதே சமநிலை (equilibrium) ஏற் படுகிறது.

மொத்தச் செலவிற்கும் (total cost) மொத்த வருவாய்க்கும் (total revenue) உள்ள வேறுபாடே உற்பத்தியாளர் பெறுகின்ற இலாபமாகும். இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாக இருக்கும்போது, மொத்தச் செலவிற்கும் மொத்த வரு வாய்க்கும் உள்ள வேறுபாடு மிகுதியாக உள்ளது. நிறைவுப் போட்டியில் தனிப்பட்ட உற்பத்தியாளரால் இறுதிநிலை வரு வாயை மாற்ற இயலாது. இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்குச் சமமாகும் வரை உற்பத்தியை அதிகரிப்பது இலாபத்தைத் தரும். அதற்குப் பிறகு உற்பத்தியைச் செய்வது நஷ்டத்தையே ஏற்படுத்தும்.


தொழில் என்பது உற்பத்தி நிறுவனங்கள் பலவற்றை உள் ளடக்கியது. நிறைவுப் போட்டியில் குறுகிய காலத்தில் ஓர் உற்பத்தி நிறுவனம் உபரி இலாபத்தைப் பெறக்கூடும். ஆனால், நீண்ட காலத்தில் ஒரு தொழிலானது இயல்பு இலாபத்தையே (normal profit) பெறுகிறது. சந்தை விலை சராசரிச் செலவை விட உயர்வாக இருந்தால், சில உற்பத்தி நிறுவனங்கள் இயல்பு இலாபத்தைவிட அதிக இலாபத்தைப் பெறுகின்றன. இது குறுகிய காலத்திலேயே சாத்தியமாகும். தொழிலில் உபரி இலாபம் கிடைப்பதால் புதிய உற்பத்தி நிறுவனங்கள் தோன்று கின்றன. நீண்ட காலத்தில் தேவை நிலையாக இருக்கும்போது அளிப்பு அதிகரிக்கிறது; விலையும் சராசரிச் செலவும் சமமா கின்றன.

### குறுகிய காலத்தில் தொழில் நிறுவனச் சமநிலை

ஒரு தொழில் நிறுவனம் உத்தம நிலையை அடைய, இறுதி நிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்குச் சமமாகும் வரை உற் பத்தியைப் பெருக்கவேண்டும். அந்நிலையில் சராசரிச் செலவை விட விலை உயர்வாக இருந்தால் உபரி இலாபம் கிடைக்கும். சராசரிச் செலவைக் காட்டிலும் விலை குறைவாக இருந்தால் இழப்புத் தோன்றும். இதைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

OX அச்சில் உற்பத்தியின் அளவும், OY அச்சில் வருவாய் அல்லது செலவும் கணக்கிடப்படுகின்றன. விலை OP ஆக

இருக்கும்போது, இறுதிநிலைச் செலவு வளைகோடு MC விலைக் கோட்டை N என்ற புள்ளியில் வெட்டுகிறது. அந்நிலையில் இறுதிநிலைச் செலவு, விலை, சராசரி வருவாய், இறுதிநிலை வருவாய் ஆகியவை ஒன்றிற்கொன்று சமமாக இருக்கின்றன. விலையானது சராசரிச் செலவை விட உயர்வாக இருப்பதால், ஓர் அலகு





படம் 23

பண்டத்திற்கு MN அளவு இலாபம் கிடைக்கிறது. உற்பத்தி OQ ஆக இருப்பதால் மொத்த இலாபம் PLMN (MN × OQ) ஆக அமையும். $OP_1$ ஆக விலை குறைகிறது என வைத்துக் கொள்ளும் போது, S என்ற புள்ளியில் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சமமாக உள்ளன. இவ்விலையில் $OQ_1$ அளவுக்கு உற்பத்தியைச் செய்தால் இழப்பின் அளவு குறைவாக அமையும். ஓர் அலகு பொருளை விற்பனை செய்வதால் ஏற்படும் நஷ்டம் RS ஆகும். உற்பத்தி $OQ_1$ ஆக இருப்பதால், மொத்த நஷ்டம் $LP_1SR$ (RS × $OQ_1$) ஆக இருக்கும்.

**நீண்ட காலத்தில் தொழில் சமநிலை**

குறுகிய காலத்தில் சில நிறுவனங்கள் உபரி இலாபத்தைப் பெறுவதால், புதிய உற்பத்தி நிறுவனங்களும் அத்தொழிலில் புகுந்து உற்பத்தி செய்கின்றன. எனவே, நீண்ட காலத்தில் இவ்வகைப் போட்டியால் விலை குறைந்து சராசரிச் செலவிற்குச் சமமாகிறது. இதைப் பின்வரும் வரைபடம் விளக்கும் :




படம் 24

நீண்ட காலத்தில் OP விலையில் OQ அளவு உற்பத்தி செய்து விற்பனை செய்யும்போது இறுதிநிலை வருவாய் = இறுதி நிலைச் செலவு = விலை = சராசரி வருவாய் = சராசரிச் செலவு என்ற நிலை ஏற்படுகிறது. செலவோடு ஒரு குறிப்பிட்ட இலாபத் தொகையும் சேர்க்கப்பட்டிருப்பதால், நீண்ட காலத்தில் இயல்பு இலாபம் பெறப்படுகிறது. வரை படத்தில் R என்ற புள்ளியில் சமநிலை ஏற்படுகிறது.

**விலை நிர்ணயத்தில் கால அளவின் முக்கியத்துவம்**

ஒரு பொருளின் விலை நிர்ணயத்தில் கால அளவு முக்கிய மானதாக இருக்கிறது. தேவை, அளிப்பு ஆகியவற்றுல் விலை

தீர்மானிக்கப்படுகிறது என்று கூறுவது பொதுப்படையான கூற்று. சில நேரங்களில் விலை நிர்ணயத்தில் தேவை செல்வாக்கு உடையதாகவும், வேறு சில நேரங்களில் அளிப்பு, செல்வாக்கு உடையதாகவும் இருக்கக்கூடும். தேவை, அளிப்பு ஆகியவற்றில் எது அதிகச் செல்வாக்குள்ளது என்பதைச் சந்தையின் கால அளவே தீர்மானிக்கிறது. குறுகிய கால விலை 'சந்தை விலை' என்றும், நீண்ட காலத்தில் நிர்ணயமாகும் விலை 'இயல்பு விலை' என்றும் சொல்லப்படுகின்றன.

**சந்தை விலை** (Market price) : ஒரு குறிப்பிட்டக் காலத்தில் நிலவும் விலையைச் 'சந்தை விலை' என்று வரையறை செய்யலாம். அவ்விலையில் பொருளுக்கான தேவையும் அளிப்பும் சமமாக இருக்கின்றன. சந்தை விலை அடிக்கடி மாறும் தன்மையுடையது. குறுகிய காலத்தில் அளிப்பு, நிலையானது. எனவே, விலையானது பெரும்பாலும் தேவைக்கேற்பவே அமையும். தேவை குறைவாக இருக்கும்போது விலை தாழ்வாகவும், தேவை அதிகமாக இருக்கும்போது விலை உயர்வாகவும் அமைகின்றன. விரைவில் அழியும் தன்மை கொண்ட பால், முட்டை, மீன், இறைச்சி, காய்கறிகள், பழங்கள், மலர்கள் போன்றவற்றின் விலை நிர்ணயத்தில் தேவையே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இவற்றின் தேவை மாற்றத்திற்கேற்ப விலை மாறுகின்றது. ஆனால், விரைவில் அழியாத பொருள்களின் அளிப்பை ஓரளவு கட்டுப்படுத்தலாம். குறுகிய காலத்தில் உற்பத்தியின் அளவைக் குறைக்கவோ அல்லது கூட்டவோ முடியாவிட்டாலும், பொதுவாக அளிப்பை அதிகரிப்பதும் குறைப்பதும் சாத்தியமானதே.

**இயல்பு விலை** (Normal price) : நீண்ட காலத்தில் நின்று நிலவும் விலையே 'இயல்பு விலை' எனப்படுகிறது. காலத்தின் அளவு கூடுதலாகும்போது, தேவைக்கேற்ப அளிப்பையும் மாற்ற முடியும். ஆகவே, இயல்பு விலை நிர்ணயத்தில் அளிப்பே முக்கிய நிலையைக் கொண்டுள்ளது. உற்பத்தியாளரிடையே போட்டி நீடிக்கும்போது, இயல்பு விலை உற்பத்திச் செலவிற்கேற்ப அமையும். உற்பத்திச் செலவில் இலாபத் தொகையும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. உற்பத்திச் செலவை விட விலை அதிகமாக இருந்து நிறைவுப் போட்டியும் நிலவினால், குறிப்பிட்ட அத்தொழிலில் புதிய நிறுவனங்களும் உற்பத்தியைத் தொடங்குகின்றன. இதனால், மொத்த உற்பத்தியும் அளிப்பும் அதிகரித்து விலை குறைகிறது. மாறாக, உற்பத்திச் செலவைவிட விலை குறைந்தால், அளிப்புச் சுருங்கி விலை அதிகரிக்கும்.

சந்தை விலை இயல்பு விலையை விட அதிகமாக இருந்தால், விலை குறையும் வரை உற்பத்தி உயர்த்தப்படவேண்டும். சந்தை விலை இயல்பு விலையை விடக் குறைவாக இருந்தால் உற்பத்தி குறைக்கப்பட வேண்டும். நீண்ட காலத்தில் புதிய நிறுவனங்கள் தோன்றுவதுடன், பழைய நிறுவனங்கள் விரிவாக்கப்படவும் கூடும். சந்தை விலையைத் 'தற்காலிகச் சமநிலை விலை' என்றும் கருதலாம். இயல்பு விலையைவிடச் சந்தை விலை குறைவாக இருந்தால் அளிப்புக் குறையும்; விலை உயரும். இயல்பு விலையை விடச் சந்தை விலை உயர்வாக இருந்தால் அளிப்பு அதிகரிக்கும்; விலை குறையும். பெரும்பாலும் சந்தை விலை இயல்பு விலையை நோக்கி நகருகின்றது.

## III. முற்றுரிமை (Monopoly)

உற்பத்தியாளரிடையே நிலவும் போட்டியற்ற நிலையே முற்றுரிமை ஆகும். நெருங்கிய பதிலிப் பொருள்கள் இல்லாத ஒரு பண்டத்தை முற்றுரிமையாளர் ஒருவரோ அல்லது ஒரு சிலர் மட்டுமோ விற்பனை செய்கின்றனர். இந்தியாவில் இரயில் வேக்களை இந்திய அரசு முற்றுரிமையாகக் கொண்டுள்ளது. நிறைவுப் போட்டியில் எண்ணற்ற விற்பனையாளர்களும் வாங்கு பவர்களும் இருக்கும்போது முற்றுரிமையில் ஒருவரோ அல்லது ஒரு சில விற்பனையாளரோ மட்டுமே இருக்கின்றார்கள். நிறைவுப் போட்டியில் அமைந்துள்ள ஒரு தொழிலில் (industry) கணக்கற்ற நிறுவனங்கள் (firms) இருக்கின்றன. முற்றுரிமையில் நிறுவனத் திற்கும் தொழிலுக்கும் வேறுபாடு கிடையாது. ஒரு முற்றுரிமை யாளரின் திறன், அவர் அளிப்பைக் கட்டுப்படுத்துவதற்கேற்ப அமையும்.

முற்றுரிமை, நிறைவுப் போட்டிக்கு நேர் எதிரான இயல்பு களைக் கொண்டிருக்கிறது. முற்றுரிமையாளர் விலையை நிர்ணயிக் கலாம்; அல்லது அளிப்பைக் கட்டுப்படுத்தலாம். பொருளை வாங்குபவர் ஒருவர் மட்டுமே இருந்து, சந்தையின் மொத்தத் தேவை முழுவதையும் அவர் கட்டுப்படுத்தக் கூடிய நிலை 'வாங்கு தல் முற்றுரிமை' (Monopsony) எனப்படுகிறது. நம்முடைய அன்றாட வாழ்வில் 'தூய போட்டியோ' அல்லது 'தூய முற்றுரி மையோ' அமைந்திருக்கவில்லை. ஆனால், சில பொருள்களுக்குச் சந்தையில் ஓரளவு போட்டி அல்லது குறைந்தளவு முற்றுரிமை நிலை அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

**முற்றுரிமைக்கான காரணங்கள் :**

1. அதிகளவு மூலதனத்தைத் தேவையாகக் கொண்ட தொழிலில் பலரும் ஈடுபட மாட்டார்கள். போட்டியைத் தவிர்க்கத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு சிலர் முற்றுரிமை நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

2. தொழிற் செறிவின் காரணமாக ஓரிடத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைந்து ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு முற்றுரிமையைப் பெறக்கூடும்.

3. ஒரு தொழில் நிறுவனம் அளிப்பின் பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டிருந்தால், அது முற்றுரிமை பெற்று அமையும்.

4. அரசு சுங்க வரிகளின் மூலம் இறக்குமதியைக் குறைக்கும்போது, சில பொருள்களை உற்பத்தி செய்யும் உள் நாட்டுத்தொழில்கள் முற்றுரிமை பெறுகின்றன.

5. உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்கள் தனி இயல்பைக் கொண்டவை என்று நுகர்வோரை நம்பச் செய்வதன் மூலமும் முற்றுரிமை ஏற்படும். வாணிகக் குறியைப் பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய பொருள்களை இனம் பிரித்துக் காட்டுகின்றனர். நம் நாட்டில் காலணிகளில் 'பாட்டாவும்', கழுத்துப் பட்டைகளில் 'ஸோடியாக்கும்', பற்பசைகளில் 'கோல்கேட்டும்', பேனாக்களில் 'பைலட்டும்', ஸ்டீல் சாமான்களில் 'கோத்ரெஜ்ஜும்' அழகுச் சாதனப் பொருள்களில் 'பாண்ட்ஸ்ஸும்', சைக்கிள்களில் 'அட்லஸ்ஸும்' ஓரளவு முற்றுரிமை பெற்றவை எனக் கருதலாம்.

6. புத்தகங்களுக்குப் பதிப்புரிமை பெற்று, அவற்றை வெளியிடுவதில் முற்றுரிமை பெறப்படுகிறது. உதாரணமாக, ரஸ்ஸல், பெர்னார்டு ஷா, ஹாட்லி சேஸ், எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் போன்றோருடைய நூல்களுக்கு உலகெங்கும் மதிப்பும் தேவையும் இருப்பதால், அவற்றை வெளியிடுபவர்கள் முற்றுரிமை நிலையைப் பெற்றுள்ளனர்.

7. சில புதிய வகைக் கண்டுபிடிப்புப் பொருள்களை 'உற்பத்தி செய்யும் உரிமை' (patent right) அரசால் வழங்கப்படும் போது, அவற்றை உற்பத்தி செய்பவர்கள் முற்றுரிமை பெறுகின்றனர்.

8. பொருள்களை உற்பத்தி செய்யும் இரகசியங்கள் காக்கப் படுவதாலும் முற்றுரிமை நிலை தோன்றுகிறது. ஹார்லிக்ஸ் போன்று வீவாவும், போர்ன்விடா போன்று ஓவல்டின்னும் இருப்பதில்லை. இவற்றின் சுவை வேறுபாடுகளுக்கு உற்பத்தி முறை இரகசியங்களே காரணமாகும்.

9. நீண்ட தொலைவில் இருந்து சில பொருள்களைக் கொண்டு வர அதிக போக்குவரத்துச் செலவு பிடிக்குமாகையாலும், அவை உள்ளூரிலேயே வாங்கப்பட்டு அவற்றின் உற்பத்தியாளர் முற்றுரிமை அடைகின்றனர்.

10. கூட்டுப்பங்கு நிறுவனங்களின் வளர்ச்சியும் முற்றுரிமையைத் தோற்றுவிக்கிறது. இவை மிக அதிக அளவு மூலதனத்தைத் திரட்ட முடிவதால், இவற்றோடு சிறிய தொழில் நிறுவனங்கள் போட்டியிட இயலுவதில்லை.

**முற்றுரிமையின் வகைகள்**

முற்றுரிமையை அதன் தன்மைக்கேற்ப ஐந்து வகைகளாகப் பகுக்கலாம்.

**1. இயற்கை முற்றுரிமை** (Natural Monopoly) : வளவைப்புகளுக்கு ஏற்ப முற்றுரிமை ஏற்படுவதுண்டு. அரபு நாடுகளில் பெட்ரோலியப் பொருள்களின் உற்பத்தியும், இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் சணல் உற்பத்தியும், மலேசிய நாட்டில் தகர உற்பத்தியும் இயற்கை முற்றுரிமைக்கான உதாரணங்களாகும். மற்ற நாடுகளில் இவ்வகைப் பொருள்களின் உற்பத்தியை அதிகளவில் செய்வதற்கு இயற்கை வளங்கள் அமைந்திருக்கவில்லை.

**2. சட்டரீதியான முற்றுரிமை** (Legal Monopoly) : சில பொருள்களைக் குறிப்பிட்ட வகையில் உற்பத்தி செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையை அரசு உற்பத்தி நிறுவனங்களுக்கு அளிப்பதுண்டு. வாணிகக் குறியீட்டுச் சட்டம், பதிப்புரிமைச் சட்டம் போன்றவையும் முற்றுரிமையைத் தோற்றுவிக்கின்றன. தமிழ் நாடு அரசு வெவ்வேறு போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தியுள்ள நிலை சட்டமுறை முற்றுரிமையையே சாரும்.

**3. தனி விருப்ப முற்றுரிமை** (Voluntary Monopoly) : உற்பத்தியாளார்கள் ஒன்று சேர்ந்து போட்டியைத் தவிர்க்கும் நிலையை இது உணர்த்துகிறது. தொழிற் தொகுப்புகள்

(Industrial combinations) இவ்வகையைச் சேர்ந்தவை. 1936ஆம் ஆண்டு இந்திய சிமென்ட் உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைந்து 'அசோஸியேட்டட் சிமென்ட் நிறுவனத்தை' (Associated cement company) ஏற்படுத்தியமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**4. சமுதாய முற்றுரிமை** (Social Monopoly) : இரயில் வேக்கள், தபால் - தந்தி, தொலைபேசி, மின்சார விநியோகம், ஆயுள் காப்புறுதி போன்றவற்றைச் சமுதாய நலனைக் கருதி அரசே ஏற்று நடத்துகிறது. சமுதாய முற்றுரிமைகளைப் பெரும் பாலும் அரசு தன் உடைமையாக்கிக் கொண்டு நிர்வாகம் செய் கிறது. சமுதாய முற்றுரிமையை அரசு முற்றுரிமை என்றும் கூறலாம். பொதுப் பயனுடைய துறைமுகங்களையும், இந்திய ரிசர்வ் வங்கியையும், ஸ்டேட் வங்கியையும் அரசே நடத்துகிறது. இவை தனியார் துறையில் அமைந்தால் சமூகநலன் பாதிக்கப் படும்.

**5. பணிகளில் முற்றுரிமை** (Monopoly of Services) : உற் பத்திப் பணிகளில் தனித் தேர்ச்சி ஏற்பட்டாலும் முற்றுரிமை தோன்றும். சான்றாக, நகரங்களில் உள்ள புகழ்பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்களைக் கூறலாம். ஆக்கப் பணி முறைகளின் இரகசியங்கள் காக்கப்படுவதாலும் உற்பத்தி முறை முற்றுரிமை ஏற்படும். தரம் மிக்க 'பாண்ட்ஸ்' முகப் பௌடரை உற்பத்தி செய்பவர்கள் சில தொழில் முறை இரகசியங்களைக் காப்பதால் தான் முற்றுரிமையைப் பெற்றிருக்கிறார்கள்.

**முற்றுரிமையில் விலை நிர்ணயம்**

முற்றுரிமையாளரின் நோக்கம் மிக அதிகளவு இலாபத்தைப் பெறுவதாக உள்ளது. நிறைவுப் போட்டியிலும் கூட உற்பத்தி யாளர் இலாப நோக்கையே கொண்டுள்ளார். ஆனால், மிகையான இலாபத்தை முற்றுரிமையில் மட்டுமே பெற இயலும். நுகர்வோர் முற்றுரிமையாளரிடம் பொருளை வாங்குவது தவிர்க்க முடியாத தாகிறது. முற்றுரிமையிலும் தேவையும், அளிப்புமே விலையை நிர்ணயிக்கின்றன. எனினும், பொருளின் அளிப்பை முற்றுரிமை யாளர் கட்டுப்படுத்தலாம். எண்ணற்ற வாங்குபவர்கள் இருப்ப தால் அவர் தேவையைக் கட்டுப்படுத்தமுடியாது.

இரு வழிகளில் முற்றுரிமையாளர் அதிக இலாபத்தைப் பெறலாம். **முதலாவதாக,** அவர் தன்னுடைய பொருளின் அளிப்பைக் கட்டுப்படுத்தி, விலையானது சந்தையில் இருக்கும் தேவைக்கேற்ப அமையுமாறு விட்டுவிடலாம். அல்லது **இரண்டா**

**வதாக,** அவர் தன்னுடைய பொருளின் விலையை நிர்ணயித்து, விற்பனையைச் சந்தையில் அமையும் தேவையின் அளவுக்கேற்ப நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆனால், அவர் விலையையும் நிர்ணயித்து, அளிப்பையும் கட்டுப்படுத்த முடியாது. அவர் இரண்டையும் செய்தால் நஷ்டத்தையே அடைவார்.


முற்றுரிமை விலை உயர்வாகவே இருக்குமெனக் கருதுவது தவறு. விலையை மிக அதிகமாக உயர்த்தி விட்டால் தேவை சுருங்கும்; நுகர்வோர் ஓரளவுப் பதிலியான பொருள்களை வாங்குவர். எனவே, முற்றுரிமையாளர் விலையைச் சற்றுக் குறைத்துத் தேவையைக் கூட்டி, இலாபத்தைப் பெருக்க முயலுவார்.

**தேவையைப்** பொறுத்த வரை, முற்றுரிமை உற்பத்தியாளர் தேவையின் நெகிழ்வுத் தன்மையை அறிய வேண்டும். தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும்போது, விலையை அதிகரித்தாலும் நுகர்வு குறையாது. விலையைக் குறைத்தாலும் நுகர்வு கூடாது. இந்நிலையில் முற்றுரிமையாளர் விலையை உயர்த்தி அதிக இலாபம் பெறுவார். தேவை நெகிழ்ச்சியுடையதாக அமைந்திருந்தால், விலையை அதிகரிக்கும்போது நுகர்வு குறைகிறது. இந்நிலையில் முற்றுரிமையாளர் விற்பனையைப் பெருக்கி அதிக இலாபத்தை அடைய விலையைக் குறைக்கவேண்டும்.

**அளிப்பைப்** பொறுத்த வரை, உற்பத்தி வளர்ந்துசெல் விளைவைக் கொண்டிருந்தால், உற்பத்தியை அதிகரிக்கும்போது ஆக்கச் செலவு குறைகிறது. எனவே, உற்பத்தியைப் பெருக்கிக் குறைந்த விலையில் விற்பனை செய்வது அதிக இலாபத்தைத் தரும். உற்பத்தி மாறு விளைவு நிலையைக் கொண்டிருந்தால், உற்பத்தியைக் கூட்டினாலும் குறைத்தாலும் ஆக்கச் செலவில் மாற்றம் ஏற்படாது. தேவை நெகிழ்ச்சியுடையதாக இருந்தால், ஓரளவு விலையைக் குறைத்து விற்பனையை அதிகமாக்கி இலாபம் பெறலாம். உற்பத்தி குறைந்துசெல் விளைவு நிலையில் இருந்தால், உற்பத்தியைப் பெருக்கும்போது ஆக்கச் செலவும் அதிகரிக்கும். இந்நிலையில் உற்பத்தியைக் குறைத்து, விலையை உயர்த்தி விற்பனை செய்வதன் மூலமே அதிக இலாபத்தைப் பெற இயலும்.

வளர்ந்துசெல் விளைவு மற்றும் மாறு விளைவு நிலைகளில் தேவை நெகிழ்வற்றதாக இருந்தால் உயர்ந்த விலையும், தேவை நெகிழ்வுடையதாக இருந்தால் குறைந்த விலையும் நிர்ணயிக்கப் படுகின்றன. மாறுக் குறைந்துசெல் விளைவு ஏற்பட்டால், தேவை நெகிழ்வுடையதாக இருந்தாலும் நெகிழ்வற்றதாக இருந்தாலும் உயர் விலையே நிர்ணயிக்கப்படும்.

இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவுக்குச் சமமாக இருக்கும் போது, முற்றுரிமையாளர் உச்சநிலை இலாபத்தைப் பெறுகிறார். முற்றுரிமை விலை நிர்ணயத்தைக் கீழ்க்காணும் வரைபடத்தின் உதவியோடு விளக்கலாம்.




படம் 25

முற்றுரிமை விலை சராசரிச் செலவைவிட உயர்வாக இருந்தால் இலாபமும், குறைவாக இருந்தால் நஷ்டமும் ஏற்படும். சராசரிச் செலவின் அளவுக்கு முற்றுரிமை விலை அமைந்திருந்தால் இயல்பு இலாபம் பெறப்படும். சராசரிச் செலவில் இயல்பு இலாபம் சேர்க்கப்பட்டிருக்கிறது. வரைபடத்தில் சராசரிச் செலவைக் காட்டிலும் முற்றுரிமை விலை உயர்வாக உள்ளமை காட்டப்பட்டுள்ளது. முற்றுரிமை விலை OP ஆக அமையும் போது உற்பத்தியின் அளவு OQ ஆக இருக்கிறது. R என்ற புள்ளியில் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சமமாகின்றன. அப்போது அமையக்கூடிய OQ அளவு உற்பத்தியே அதிக இலாபத்தைத் தரக்கூடியது. OQ அளவு உற்பத்தி OP விலையில் விற்கப்படும்போது கிடைக்கும் மொத்தவருவாய் OPNQ; மொத்தச் செலவு OLMQ; மொத்த இலாபம் PLMN. ஓர்

அலகுப் பொருளை விற்பதால் கிடைக்கும் சராசரி வருவாய் MN ஆகும். ஓர் அலகுக்கான உற்பத்திச் செலவு MQ ஆக இருக்கிறது.

குறுகிய காலத்தில் முற்றுரிமையாளர் எப்போதாவது நஷ்டத்தை அடையவும் நேரிடும். முற்றுரிமை விலை சராசரிச் செலவைவிடக் குறைவாக அமையும்போது இந்நிலை தோன்றுகிறது. நீண்ட காலத்தில் சராசரிச் செலவைக் காட்டிலும் முற்றுரிமை விலை அதிகமாக இருக்கும்; அல்லது சராசரிச் செலவுக்குச் சமமாக அமையும். ஆனால், உறுதியாக முற்றுரிமை விலை சராசரிச் செலவைவிடக் குறைவாக அமையாது.

## முற்றுரிமையால் ஏற்படும் குறைபாடுகள்

1. முற்றுரிமை நிறுவனங்கள் மிகுந்த இலாப நோக்கால் உயர் விலையை நிர்ணயிப்பதால் பொது மக்களுடைய நலன் பாதிக்கப்படுகிறது.

2. தொழில் அமைப்புகளில் அதிகப் பங்குகளை வாங்கிச் சிலர் தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளுகிறார்கள்; தொழில் நிர்வாகத்தைத் தங்கள் விருப்பம் போல மாற்றி அமைக்கிறார்கள்.

3. பதிலீட்டுப் பொருள்கள் இல்லாத அவசியப் பொருள்களை உற்பத்தி செய்யும் முற்றுரிமையாளர்கள் அளிப்பைக் கட்டுப்படுத்தி உயர் விலையைப் பெறுகிறார்கள்.

4. உற்பத்தியைக் கட்டுப்படுத்தி உயர் விலையைப் பெறுவதே முற்றுரிமையாளரின் நோக்கமாக இருப்பதால், உற்பத்திக்கான சாதனங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. கிடைப்பருமைக் காரணிகளைத் தவறுகப் பயன்படுத்தும்போது நாட்டின் ஆக்கத்திறன் பாதிக்கப்படுகிறது.

5. கொள்ளை இலாபத்தைப் பெற முற்றுரிமையாளர்கள் தவறான வாணிகமுறைகளில் ஈடுபடுகின்றனர். முதலில் விலையைக் குறைந்தளவில் நிர்ணயித்துத் தேவையைப் பெருக்கிக் கொள்கின்றனர். பிறகு, விலையை உயர்த்தியும், விலை பேதம் காட்டியும் அதிக இலாபத்தைப் பெறுகின்றனர்.

6. தொழில்களைத் தொடங்குவதற்கான உரிமம் (licence) பெறவும், முற்றுரிமை நிலையைப் பாதிக்கும் சட்டங்களைக்

கொண்டு வருவதைத் தடுப்பதற்கும் அரசின் உயர் அதிகாரி களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் கையூட்டுகள் அளிக்கப்படு கின்றன. அரசின் இறக்குமதிச் சுங்க வரிகளால் முற்றுரிமை பெற் றிருக்கும் தொழில் நிறுவனங்களும் இலஞ்சங்கள் தருகின்றன.

7. போட்டியின்மையால் உற்பத்திப் பணிகள் திறமை யுடனும் சிக்கனத்துடனும் அமையமாட்டா. இதனால், உற் பத்திச் செலவு கூடுகிறது.

8. முற்றுரிமையை அனுமதிப்பதால் சிலர் கோடீஸ்வரர் களாகவும், பலர் வறியவர்களாகவும் மாறுகின்றனர். உதாரணத்திற்குத் திரைப்பட நடிக - நடிகையரையோ, பெரிய தொழில் அதிபர்களையோ குறிப்பிடலாம். திரைப்பட நடிகர் களிடம் மிகக் குறுகிய காலத்தில் மிகுதியான செல்வம் குவிவதை நாமறிவோம். முற்றுரிமையால் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத் தாழ்வுகள் தோன்றுகின்றன.

9. தொழில் நுணுக்க முன்னேற்றத்தால் உற்பத்தி முறை யில் மாற்றங்கள் ஏற்படுவதை முற்றுரிமையாளர்கள் விரும்ப மாட்டார்கள்.

10. முற்றுரிமை நிறுவனங்கள் உழைப்பாளர்களுக்குக் குறைந்த ஊதியத்தையே அளிக்கின்றன. அவை போட்டியின்மை யால் பொருளின் தரத்தை உயர்த்துவதிலும், உற்பத்திச் செலவைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துவதில்லை.

**முற்றுரிமையால் விளையும் நன்மைகள்**

1. பொதுப் பயன் பணித் துறைகளை அரசு ஏற்று நடத்து வதால்தான் மக்களுடைய நலன் காக்கப்படுகிறது. தபால்-தந்தி, தொலைபேசி, இரயில்வே போன்றவற்றைத் தனியார் முற்றுரிமை யின் கீழ் அமைய அனுமதித்தால் பொது மக்கள் சுரண்டப்படு வார்கள்.

2. முற்றுரிமை நிறுவனங்கள் அதிக நிதி வசதியைக் கொண்டவை. உற்பத்தி பேரளவிலும், இயந்திரங்களைக் கொண்டும் செய்யப்படுவதால் ஆக்கச் செலவு குறைகிறது.

3. ஒரு பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஒருங் கிணைந்து முற்றுரிமையை ஏற்படுத்திக் கொண்டால், கூட்டாக

விளம்பரம் செய்தும், விற்பனை வசதியைப் பெருக்கியும் சந்தையை விரிவுபடுத்தலாம்.

4. தொழில் மந்தக் காலத்திலும் முற்றுரிமை நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன. குறுகிய கால இழப்புக்களைச் சமாளிக்கும் அளவுக்கு அவை மூலதன வசதியைக் கொண்டுள்ளன.

5. முற்றுரிமையைக் கொண்டுள்ள பெரிய தொழில் நிறுவனங்களால்தான் வெளிநாட்டுப் பொருள்களின் போட்டிக்கு ஈடு கொடுக்க இயலும். பன்னாட்டுச் சந்தையிலும் போட்டியிடும் திறனையும் இவை பெற்றுள்ளன. உதாரணமாக, இந்தியாவில் டாடா நிறுவனம் உற்பத்தி செய்யும் பல பொருள்களுக்கு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தேவை மிகுதியாக இருப்பதைக் குறிப்பிடலாம்.

6. தொழிற் சீரமைப்பு, உற்பத்தி, பகிர்வு போன்றவை முற்றுரிமை நிறுவனங்களால் திறம்படச் செய்யப்படுகின்றன.

**முற்றுரிமையைக் கட்டுபடுத்துதல்**

முற்றுரிமையைக் கட்டுப்படுத்தப் பலவிதமான முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன.

1. உற்பத்தி நிறுவனங்களுக்கிடையே போட்டி ஏற்படும் வகையில் அரசு தொழில்களைத் தொடங்குவதற்கான உரிமங்களை வழங்குகிறது.

2. முற்றுரிமைத் தொழில்களை அரசின் நிதிக் கொள்கை கட்டுப்படுத்துகிறது. தவிர, புதிய நிறுவனங்கள் தோன்றிப் போட்டி வளர அரசு உதவித் தொகைகள் வழங்க முன்வரலாம்.

3. முற்றுரிமையைக் கட்டுப்படுத்த அரசு சட்டங்களையும் நிறைவேற்றலாம்.

4. முற்றுரிமைத் தொழிலின் நிர்வாகத்தில் அரசும் பங்கேற்பதால் பல நன்மைகள் விளையும்.

5. முற்றுரிமை நிறுவனங்கள் இழைக்கும் தவறுகளை விளம்பரங்களின் மூலம் பொது மக்கள் உணருமாறு செய்யலாமென்று பிகு (Pigou) கூறுகிறார். இதனால், அந்த நிறுவனங்கள் நுகர்வோருக்கும், அரசுக்கும் அஞ்சி ஓரளவு நேர்மையாகச் செயல்படக்கூடும்.

6. நுகர்வோர் கூட்டமைப்புகளின் மூலம் முற்றுரிமையாள ருடைய சுரண்டும் நிலையைத் தவிர்க்கலாம்.

7. அரசு முற்றுரிமைத் தொழில்களின் உற்பத்தியையும், பொருள்களின் விலையையும் நிர்ணயிக்கலாம்.

முற்றுரிமையாளர்கள் அதிக இலாபத்தைப் பெற, பொருளை வாங்குபவர்களிடம் வெவ்வேறான விலைகளில் விற்பனை செய் கின்றனர். இது 'விலை வேறுபாடு காட்டும் முற்றுரிமை' (discriminating monopoly) எனப்படுகிறது. வெளிநாட்டுச் சந்தையில் போட்டியைக் குறைக்க முற்றுரிமையாளர்கள் குறைந்த விலையில் மிகையான பொருள்களை அளிப்பதைக் 'குவித்தல்' (dumping) என்கிறோம். பொருள்களின் உற்பத்தியிலும் விற்பனையிலும் 'சிலர் முற்றுரிமை' (oligopoly) நிலையும் அமைந்துள்ளது.

## IV. நிறைகுறைப் போட்டி (Imperfect Competition)

நடைமுறை வாழ்வில் நாம் முற்றுரிமையையும் நிறைவுப் போட்டியையும் காண முடிவதில்லை. இவ்விரண்டுக்கும் இடைப் பட்ட நிறைகுறைப் போட்டியே சந்தைகளில் நிலவுகின்றது. சந்தைகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தனிப்பட்ட வாணிகர் கள் அப்பகுதிகளில் முற்றுரிமை நிலையைக் கொண்டுள்ளனர். நுகர்வோரின் அறியாமை, பொருள்களின் தர வேறுபாடு, விளம் பரம், வாடிக்கை போன்றவற்றால் விலை உயர்வாக இருந்தாலும் சிலர் குறிப்பிட்ட கடைகளில் இருந்தே பொருள்களை வாங்கு கின்றனர். இவ்விதமான நிறைகுறைப் போட்டியில் 'முற்றுரிமைப் போட்டி' (monopolistic competition) ஒரு வகையாக அமைகிறது.

நிறைகுறைப் போட்டியில் நிறைவுப் போட்டியின் சில இயல்புகளும், முற்றுரிமையின் சில இயல்புகளும் காணப்படு கின்றன. உதாரணத்திற்கு மின் விசிறிகள் உற்பத்தியை எடுத்துக் கொள்ளலாம். 'உஷா, கிராம்டன், ஓரியண்ட், கூல் ஹோம்' போன்ற வாணிகக் குறியீட்டுப் பெயர்களுடன் பல மின் விசிறிகள் விற்கப்படுகின்றன. இவற்றை வாங்குபவர்களும் எண்ணற்றவர் களாக உள்ளனர். ஒவ்வொரு மின் விசிறி உற்பத்தியாளரும் தம்முடையதே தரமுயர்ந்தது என்ற எண்ணத்தை வாங்குபவ ரிடையே ஏற்படுத்த விளம்பரங்களின் மூலம் முயலுகின்றனர். அவர்கள் அம்முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டால் முற்றுரிமை நிலையைப் பெறுகின்றனர். விலையை உற்பத்தியாளரே நிர்ணயிக்

கிறார். இதைத் திருமதி ஜோன் ராபின்சன் (Mrs. Joan Robinson) நிறைகுறைப் போட்டி எனவும், பேராசிரியர் சேம்பர்லின் (Professor Chamberlin) முற்றுரிமைப் போட்டி எனவும் அழைக்கின்றனர்.

பொருள்களை வேற்றுமைப்படுத்துவதே இப் போட்டியின் அடிப்படை. முற்றுரிமைப் போட்டியின் இயல்புகள் பின்வருமாறு அமைகின்றன :

**1. பல உற்பத்தி நிறுவனங்கள் :** முற்றுரிமைப் போட்டியில் எண்ணற்ற நிறுவனங்கள் அமைந்துள்ளன. மொத்த உற்பத்தியில் ஒவ்வொரு நிறுவனத்தின் உற்பத்தியளவு மிகக் குறைவானதே. அவை யாவும் அவற்றின் விருப்பங்களுக்கேற்பச் செயல்படுகின்றன. ஒன்றின் செயற்பாடுகள் மற்ற நிறுவனங்களைப் பாதிப்பதில்லை. உதாரணமாக உணவகங்கள், மளிகைக் கடைகள், ஜவுளிக் கடைகள், காய்கறிக் கடைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**2. நிறுவனங்கள் வெளியேறவும் நுழையவும் தடையற்றநிலை :** ஒரு குறிப்பிட்ட தொழிலில் புதிய நிறுவனங்கள் தோன்றலாம்; அல்லது அமைந்திருக்கும் நிறுவனங்கள் தொழிலைவிட்டு வெளியேறலாம்.

**3. வெவ்வேறு விலைகள் :** ஒரேவகைப் பொருளை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்கள் வெவ்வேறு விலைகளில் அதை விற்கின்றன. பொருளானது வேறுபடுத்திக் காட்டப்படுவதால் இது சாத்தியமாகிறது. வெவ்வேறு விலைகளில் பல நிறுவனங்களின் சைக்கிள்கள் விற்கப்படுவதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**4. பொருள்களை வேறுபடுத்திக் காட்டுதல் :** பஜாஜ் ஸ்கூட்டரும், ஜாவா மோட்டார் சைக்கிளும், பிரிமியர் பிரசிடெண்ட் காரும், ப்ளூ ஸ்டார் குளிர்ச் சாதனப் பெட்டியும் பலராலும் விரும்பி வாங்கப்படுகின்றன. இப்பொருள்களின் தரம் பிற பொருள்களினின்றும் வேற்றுமைப்படுத்திக் காட்டப்படுகிறது. கவர்ச்சி, தரம், உறுதிப்பாடு, விளம்பரம், விற்பனைக்குப் பிறகு செய்து தரப்படும் பணிகள், பொருள்களை இல்லங்களுக்குக் கொண்டு சென்று அளிப்பது, விற்பனையாளர் திறமை ஆகியவற்றிற்கேற்ப பொருள்களின் விற்பனையளவு மாறுபடுகிறது. முற்றுரிமைப் போட்டியில் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருளை

சிறந்தது என்று நுகர்வோர் எண்ணுவதற்காகப் பல விளம்பர முறைகளைக் கையாளுகின்றனர்.

**5. நீண்டகாலத்தில் இயல்பு இலாபம் :** முற்றுரிமைப் போட்டியில் உற்பத்தியாளர்கள் குறுகிய காலத்தில் அதிக இலாபத்தைப் பெற வாய்ப்புள்ளது. ஆனால், நீண்ட காலத்தில் புதிய நிறுவனங்கள் தோன்றத் தடையில்லையாகையால் இயல்பு இலாபமே பெறப்படுகிறது.

**6. சில விற்பனையாளர்களிடம் நுகர்வோர் வாடிக்கையாகப் பொருள்களை வாங்குதல் :** முற்றுரிமைப் போட்டி நிலவுவதால் சிலர் சில குறிப்பிட்ட வாணிகக் குறியிட்ட பொருள்களையே விரும்புவர்; சிலர் குறிப்பிட்ட விற்பனையாளரிடமே பொருள்கள் வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கலாம். தரம் மிக்கப் பொருள்கள் கிடைப்பதால் சென்னையின் 'ஸ்பென்சர்' நிறுவனத்தில் அதிக விற்பனை ஆகின்றது. கோயம்புத்தூரில் 'சிந்தாமணி சிறப்பு அங்காடிக்குச்' சென்று பொருள்கள் வாங்குவதைப் பலர் விரும்புகின்றனர்.

**7. போக்குவரத்துச் செலவு :** உற்பத்தி செய்யப்படும் இடங்களிலேயே பொருள்கள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. நீண்ட தொலைவில் அமைந்துள்ள சந்தைகளில் பொருள்களை விற்பனை செய்ய அதிகப் போக்குவரத்துச் செலவு பிடிக்கின்றது. இதனால், வட்டார முற்றுரிமைகள் ஏற்படுகின்றன. ஒரு பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பல்வேறு இடங்களில் அமைந்துள்ளன.

**8. சந்தை நிலவரத்தை அறியாத நிலை :** பொதுவாக, விற்பவர்களும் வாங்குபவர்களும் சந்தையைப் பற்றிய விவரங்களை அறிந்திருப்பதில்லை. இதனால், நுகர்பவர்களில் சிலர் அதிக விலை கொடுத்து அருகாமையிலுள்ள கடைகளில் பொருள்களை வாங்குகின்றனர்.

**9. நிறுவனங்களின் குழு :** முற்றுரிமைப் போட்டியில் பல நிறுவனங்களைக் கொண்ட ஒரு தொழில் அமைந்திருப்பதாக நாம் கருதுவதில்லை. மாறுகப் பல நிறுவனங்கள் அமைந்த ஒரு குழு இருப்பதாகக் கொள்கிறோம். ஏனெனில், அவை ஒரே பொருளை உற்பத்தி செய்தாலும் அதன் தன்மை வேறுபடுகிறது.

**10 விளம்பரங்கள் :** நடைமுறையில் அமைந்துள்ள முற்றுரிமைப் போட்டியால், உற்பத்தியாளர்கள் தங்களுடைய

பொருள் உயர்வானது என்று நம்பச்செய்ய விளம்பரங்கள் தேவைப்படுகின்றன. எந்நிலையிலும் போட்டி நிலவும் இன்றைய உலகில் விளம்பரங்கள் இன்றிப் பொருள்களின் விற்பனையைப் பெருக்கமுடியாது. தரம் மிக்கப் பொருள்களை விற்பனை செய்வ தாலும், கண்ணைக் கவரும் விளம்பரங்களைச் செய்வதாலும் 'பாம்பே டையிங்', 'டி.சி.எம்.', 'மபத்லால்' நிறுவனங்கள் சிறப்பாக வளர்ந்துள்ளன.

### நிறைகுறைப் போட்டியில் விலை நிர்ணயம்


முற்றுரிமைப் போட்டியில் (நிறைகுறைப் போட்டியில்) பொருள்களைக் குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே விற்கமுடியும். தேவை நெகிழ்ச்சியுடையதாக இருப்பதே இதற்குக் காரணமாகும். ஆக்க நிறுவனங்கள் ஒரே வகையான பொருளை உற்பத்தி செய் தாலும் உற்பத்திச் செலவுகள் வேறுபடுகின்றன. நிறைகுறைப் போட்டியில் நிர்ணயமாகும் விலை முற்றுரிமை விலையைவிடக் குறைவாகவும், நிறைவுப் போட்டி விலையைவிட அதிகமாகவும் அமையும்.

### குறுகிய காலத்தில் விலை நிர்ணயம்

புதிய வகைப் பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனம் முற்றுரிமைப் போட்டி நிலவும்போது குறுகிய காலத்தில் மிகுதி யான இலாபத்தைப் பெறலாம். ஆனால், நீண்ட காலத்தில் அதே வகைப் பொருளைப் பல நிறுவனங்களும் உற்பத்தி செய்வ தால் இயல்பு இலாபமே பெறப்படும். முற்றுரிமைப் போட்டியில் அமைந்துள்ள நிறுவனங்களின் சராசரி வருவாய்க் கோடும், இறுதி நிலை வருவாய்க் கோடும் மேலிருந்து கீழ்நோக்கி இடது புறத்தி லிருந்து வலது புறமாகச் சரிகின்றன. குறைந்த விலையில்தான் அதிகப் பொருள்களை விற்க இயலும் என்ற நிலையே இதற்குக் காரணமாகும்.

இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்குக் குறைவாக இருந்தால் உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது. இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாகும் வரை உற்பத்தியைக் கூட்டினால் அதிக இலாபத்தைப் பெறலாம். வரைபடத்தில் R என்ற புள்ளி யில் SMR, SMC ஆகியவை ஒன்றிற்கொன்று சமமாக இருக் கின்றன. அப்போதைய உற்பத்தியளவு OQ ஆகவும் விலை OP ஆகவும் உள்ளன. ஓரலகுப் பொருளை உற்பத்தி செய்வதற்கான சராசரிச் செலவு MQ ஆகவும் மொத்த உற்பத்தி OQ ஆகவும் இருப்பதால் மொத்த ஆக்கச் செலவு OLMQ ஆகும். ஓரலகுப்

பொருளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் சராசரி வருவாய் NQ ஆக இருப்பதால் மொத்த வருவாய் OPNQ ஆக அமை கிறது. எனவே, ஓரலகுக்குக் கிடைக்கும் சராசரி இலாபம் MN





படம் 26

ஆகவும், OQ அளவுப் பொருளை விற்கும்போது கிடைக்கும் மொத்த இலாபம் PLMN ஆகவும் இருக்கிறது. இது குறுகிய காலத்தில் கிடைக்கும் மிகையான இலாபமாகும்.

### நீண்ட காலத்தில் விலை நிர்ணயம்

முற்றுரிமைப் போட்டியில் உபரி இலாபம் பெறும் நிறுவனம் மிகவும் கவனத்துடன் இருப்பது அவசியம். நீண்ட காலத்தில் நிறைவுப் போட்டியில் இருப்பது போன்றே முற்றுரிமைப் போட்டி யிலும் புதிய நிறுவனங்கள் தொழிலில் புகுவதால் உபரி இலாபம் குறைந்து இயல்பு இலாபமே கிடைக்கப் பெறுகிறது. குறுகிய

காலத்தில் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருக்கும். ஆனால், நீண்ட காலத்தில் போட்டி உற்பத்தியாளர்கள் பெருகிவிடுவதால் தேவை நெகிழ்ச்சியுள்ளதாக மாறும். இதைக் குறுகிய கால தேவைக் கோட்டையும் (SAR), நீண்ட காலத் தேவைக்கோட்டையும் (LAR) ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் அறியலாம்.




படம் 27

தொழிலில் புதிய நிறுவனங்கள் நுழைவதால் அளிப்பு அதிகரித்து விலை குறையும். இதன் காரணமாகச் சராசரி வருவாய்க் கோடு (LAR) கீழாகத் தாழ்ந்து சராசரிச் செலவுக் கோட்டிற்குத் (LAC) தொடுகோடாக அமைகிறது. அந்நிலையில் சராசரி வருவாயும். சராசரிச் செலவும் சமமாவதால் உபரி இலாபம் மறைகிறது. அதற்குப் பிறகு புதிய நிறுவனங்கள் அத்தொழிலில் ஈடுபடமாட்டா. இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவுக்குச் சமமாகும் நிலையில் உற்பத்தியின் அளவு OQ ஆகக் கணிக்கப்பட்டு, விலை OP ஆக இருக்கிறது. இவ்விலை சராசரி வருவாய்க்குச் சமமாகும். எனவே, நீண்டகால முற்றுரிமைப் போட்டியில் சராசரி வருவாய், சராசரிச் செலவு, விலை ஆகியவை ஒன்றிற்கு

ஒன்று சமமாகவும், இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவுக்குச் சமமாகவும் அமைகின்றன. செலவிலேயே இலாபத் தொகை சேர்க்கப்படுவதால், தொழில் அமைப்பு இயல்பு இலாபத்தைப் பெறுகின்றது. விலையும், சராசரிச் செலவும் சமமாக இருப்பதால் அபரிமித இலாபம் கிடைப்பதில்லை.


**விற்பனைச் செலவுகள்** (Selling Costs)

முற்றுரிமைப் போட்டியில் ஓர் உற்பத்தி நிறுவனம் அதனுடைய பொருளை மற்றவைகளினின்றும் வேறுபட்டது என்று நுகர்வோர் நம்புமாறு செய்யவும், விற்பனையைப் பெருக்கவும் ஆகின்ற செலவுகளே விற்பனைச் செலவுகளாகும். இலவசமாக மாதிரிப் பொருளை அளிப்பது, விளம்பரம் செய்வது, விற்பனையாளரை நியமிப்பது, முக்கிய இடங்களில் பொது மக்களின் பார்வைக்குப் பொருளை அழகுபடுத்தி வைப்பது போன்றவற்றிற்கு ஆகும் செலவுகள் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன. துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், பத்திரிகைகள், திரைப்படங்கள், வானொலி, தொலைநோக்கி போன்றவை மூலம் விளம்பரங்கள் அதிகளவில் செய்யப்படுகின்றன. போட்டிகள் மிகுந்த இன்றைய நிலையில் விளம்பரமில்லாமல் எந்த ஒரு பொருளையும் மிகுதியாக விற்க இயலாது. இதன் காரணமாகவே விளம்பரங்களுக்காக அதிகச் செலவுகள் செய்யப்படுகின்றன. பொருள்களையும், பணிகளையும் அதிகளவில் விற்பனை செய்ய விமானப் பணிப் பெண்களும், வரவேற்பு நங்கையரும், விற்பனைப் பெண்டிரும் கவர்ச்சிகரமான நளினத்தோடு உதவுவதை நாமறிவோம்.

## V. கூட்டுத் தேவை (Joint Demand)

சில விருப்பங்களை நிறைவுசெய்ய ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் கூட்டாகத் தேவைப்படுகின்றன. கார் - பெட்ரோல், பேனா-மை, வண்டி-குதிரை போன்றவை கூட்டுத் தேவைப்பொருள்கள். இவ்வகைக் கூட்டுத் தேவைப் பொருள்களில் ஏதாவது ஒரு பொருளின் தேவை கூடும்போது, மற்ற பொருளின்தேவையும் அதிகரிக்கும். கார்களின் தேவைஅதிகரிக்கும் போது பெட்ரோலின் தேவையும் பெருகும். தேநீர் தயாரிக்கத் தேநீர்த் தூள், சர்க்கரை, பால் ஆகியவை கூட்டாகத் தேவைப்படுகின்றன. இது போன்றே சில பொருள்களை உருவாக்குவதற்குச் சில பண்டங்களும் பணிகளும் கூட்டுத் தேவைகளாகின்றன. உதாரணத்திற்கு வீடு கட்டுவதை எடுத்துக் கொள்ளலாம். வீடு கட்ட சிமெண்ட், செங்கல், மணல், சுண்ணாம்பு, இரும்புக்

கம்பிகள், ஜல்லிகள், மரச் சாமான்கள் போன்ற பொருள்களோடு பொறியாளர், தச்சர், கொத்தர் ஆகியோருடைய பணிகளும் இணைப்பாகத் தேவைப்படுகின்றன. இவ்வகைப் பொருள்களும், பணிகளும் கூட்டுத் தேவையைக் கொண்டுள்ளன.





படம் 28

ஹாக்கி விளையாட மட்டை, பந்து, வலை, மைதானம் ஆகியவை கூட்டாகத் தேவைப்படுகின்றன. இது போன்றே வெண்ணெய் - ரொட்டி, ஊசி - நூல் போன்றவையும் கூட்டுத் தேவைப் பண்டங்களே.

## VI. கூட்டு அளிப்பு (Joint Supply)

சில பொருள்களே உற்பத்தி செய்யும்போது அவற்றைச் சார்ந்த பொருள்களும் உற்பத்தியாகின்றன. அப்பொருள்கள் கூட்டு அளிப்பைக் கொண்டுள்ளன. நெல் - வைக்கோல், தயிர் - மோர், கம்பளி - தோல் - இறைச்சி, பருத்தி - பருத்தி வித்துகள், கரி - வாயு ஆகியவை கூட்டு அளிப்புக்கான சில உதாரணங்களாகும். நெல்லையும் வைக்கோலையும் தனித்தனியே உற்பத்தி செய்ய இயலாது. இதைப் போன்றே முக்கியப் பொருளாகிய பருத்தியோடு பருத்தி விதைகளும் உற்பத்தியாகின்றன. கூட்டு அளிப்புப் பொருள்களில் ஏதாவது ஒரு பொருளின் விலை கூடினால் அப்பொருளின் அளிப்புக் கூடுவதோடு மற்ற துணைப் பண்டத்தின்

அளிப்பும் அதிகரிக்கும். இதன் விளைவாக துணைப் பண்டத்தின் விலை குறைவடையும். எடுத்துக்காட்டாக, நெல் உற்பத்தி கூடும்போது வைக்கோல் விளைவும் அதிகரிக்கும். வைக்கோலின் தேவை நிலையாக இருக்கும்போது அளிப்பு அதிகரிப்பதால், அதன் விலை வீழ்ச்சியடையும். எனவே, கூட்டு அளிப்புப் பொருள்களின் விலைகள், அவற்றின் தேவை - அளிப்பு நிலைகளுக்கேற்ப அமைகின்றன. ஒன்றின் விலை மற்றதைச் சார்ந்தும் அமைகிறது.




படம் 29

சில கூட்டுப் பொருள்கள் ஓரளவு குறிப்பிட்ட விகிதங்களுக் கேற்ப உற்பத்தியாகின்றன. பருத்தியையும் பருத்தி விதைகளையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். ஆனால், மற்ற கூட்டு அளிப்புப் பொருள்களில் விகிதாச்சாரம் மாறக்கூடும். எடுத்துக்காட்டாக, கம்பளி உற்பத்திக்காக 'மெரினோ' போன்ற உயரின ஆடுகள் வளர்க்கப்படும்போது, இறைச்சி உற்பத்திக்காக வேறுவகை ஆடுகள் வளர்க்கப்பெறுகின்றன.

## VII. கலவைத் தேவை (Composite Demand)

பல பயன்களைத் தரும் ஒரு பொருள் கலவைத் தேவையைக் கொண்டிருக்கும். உதாரணமாக, மின்சாரம் விளக்கெரிக்கவும், சூடேற்றவும், இயந்திரங்களை இயக்கவும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும் உதவுகிறது. தொழிற்சாலைகளுக்கான மின்சாரத் தேவை கூடும்போது, இல்லங்களில் அதைப் பயன்படுத்தும்

அளவு குறைக்கப்படுகிறது. பொதுவாக மின்சாரத்தின் தேவை, அதனால் கிடைக்கும் பயன்களுக்கேற்ப அமைகிறது.





படம் 30

இரும்பு, நிலக்கரி, மரம் போன்றவையும் கலவைத் தேவை யுடைய பொருள்களே. இரும்பு - எஃகைக் கொண்டு கார், இயந்திரங்கள், கருவிகள் போன்ற பலவற்றை உருவாக்கலாம். மரமானது மேஜை, நாற்காலி, பீரோ, கட்டில், தொட்டில் போன்றவற்றைச் செய்ய உதவுகிறது. நிலக்கரியை நீராவி எஞ்சினை இயக்கவோ, இரும்பை உருக்கவோ, இல்லங்களில் எரி பொருளாகவோ பயன்படுத்தலாம். நிலக்கரியின் விலை உயர்வாக இருப்பதால், அது இரயில்வேக்களிலும் தொழிற்சாலைகளிலும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

## VII. கலவை அளிப்பு (Composite Supply)

ஒரு பொருளுக்கான தேவை பல வழிகளில் நிறைவு செய்யப் படுமானால், அந்நிலையைக் கலவை அளிப்பு எனலாம். ஓரிடத் திற்குச் செல்ல சைக்கிள், ஸ்கூட்டர், கார், பஸ், இரயில் போன்ற வசதிகளில் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இல்லங்களில் இரவு நேரங்களில் ஒளியைப் பெற மின்சாரம்,

வாயு விளக்கு, மண்ணெண்ணெய் விளக்கு, மெழுகுவர்த்தி, குத்து விளக்கு, பாட்டரி விளக்கு போன்றவற்றில் எதை வேண்டு மானாலும் உபயோகிக்கலாம்.




படம் 31

கலவை அளிப்புப் பொருள்களில் விலை குறைவானதும், சிக்கனமானதுமான பொருள்கள் முதலில் வாங்கப்படுகின்றன. மண்ணெண்ணெய், மின்சாரம், லீக்கோ கரி ஆகியவற்றின் விலை உயர்வாக இருப்பதால், 'இண்டேன்' வாயு போன்றவை இல்லங் களில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. தாகத்தைத் தணித்துக்கொள்ள கோகோ-கோலா, ஃபாண்டா, கோல்ட்ஸ்பாட் போன்ற பல குளிர் பானங்கள் உள்ளன. சூடான பானங்களில் காப்பி, தேநீர், போர்ன்விட்டா, ஓவல்டின், ஹார்லிக்ஸ், விவா போன்றவை பல இருக்கின்றன. மாமிச உணவாக மாட்டிறைச்சி யும் ஆட்டிறைச்சியும் உள்ளன. உப்பு, கலவை அளிப்புப் பொருளே. உப்பு மலைகளில் இருந்து வெட்டி எடுக்கப்படலாம். அல்லது கடல் நீரைச் ஆவியாக்கியும் உப்பை உற்பத்தி செய்யலாம். கலவை அளிப்புப் பொருள்கள் பெரும்பாலும் ஒன்றிற்கொன்று பதிலிகளாக உள்ளன.

# 19. பணம்

## (Money)

இன்றையப் பொருளாதார அமைப்பு முறைக்குப் பணமே ஆதாரமாக உள்ளது. பணம் வருமானமாகப் பெறப்படுகிறது. நுகர்வு, உற்பத்தி, மாற்று, பகிர்வு ஆகியவற்றிலும் பணம் செல்வாக்குப் பெற்றுள்ளது. இன்று பொருளாதார நடவடிக்கைகள் பல மடங்கு பெருகியுள்ளமைக்குப் பணமே காரணம். மனிதனின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் பணமும் ஒன்று. இன்றையப் பொருளாதாரம் பணப் பொருளாதாரமாகக் கருதப் படுகிறது. பணமின்றிப் பொருளாதார நடவடிக்கைகள் செயல் பட மாட்டா. பொருள்கள் மற்றும் பணிகளின் மதிப்பைத் தீர் மானிக்கும் அளவுகோலாகவும் பணம் திகழ்கிறது. மக்களுடைய வாழ்க்கையை எளிதாக்குவது பணமே. 'பணம் பாதாளம் வரை பாயும்', 'பணம் இல்லாதவன் பிணத்திற்குச் சமம்' போன்ற பழமொழிகள் பணத்தின் முக்கியத்துவத்தை உணாத்து கின்றன.

## I. பண்டமாற்று முறை (Barter System)

பணம் கண்டுபிடிக்கப்படாத பண்டைக் காலத்தில் பண்ட மாற்று முறையிலேயே பேரங்கள் செய்யப்பட்டன. முதலில் குடும்ப அளவில் அல்லது கிராம அளவில் உற்பத்தி தன்னிறைவுக் காகச் செய்யப்பட்டது. பிறகு வேளாண்மை வளர்ச்சியாலும், வேலைப் பகுப்பு முறையாலும் சமுதாயத்தில் விவசாயிகள், தொழி லாளர்கள், வாணிகர்கள் போன்றோர் அவரவர் தொழில் நடவடிக் கைகளில் மட்டுமே ஈடுபட்டனர். முதன் முதலாகப் பண்ட மாற்று முறையின் மூலமே பொருள்கள் மாற்றிக் கொள்ளப் பட்டன. அம்முறையில் பணத்தின் பயன் கிடைக்கப் பெறவில்லை. தொன்மைக் காலத்தில் மனித விருப்பங்கள் குறைவாக இருந்த

மையால்தான் அம்முறை சிறப்பாகச் செயல்பட்டது. உதாரண மாக, விவசாயி நெல்லைக் கொடுத்து நெசவாளியிடமிருந்து துணியைப் பெற்றார். கொல்லரிடமிருந்து உலோகப் பொருள் களைப் பெற்றுக்கொண்டு சக்கிலியர் காலணிகளைக் கொடுத்தனர்.

காலப்போக்கில் பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் தோன்றியமையால், அம் முறை செல்வாக்கிழந்தது. மனிதன் வேட்டையாடி, மீன்பிடித்து, கால்நடைகளை மேய்த்து வந்த காலத்திற்குப் பொருந்திய பண்டமாற்று முறை, தற்பொழுது பொருத்தமற்றதாகிவிட்டது. ஒருவர் தன்னிடம் அதிகமாக இருக் கும் பொருளை வேறு ஒருவரிடம் கொடுத்து, அதற்குப் பதிலாக அவரிடமிருந்து தனக்குத் தேவையான மற்றொரு பொருளைப் பெறுவதே பண்டமாற்று முறையாகும்.

**குறைபாடுகள்**

மனிதனின் தேவைகள் பெருகிய பிறகு பண்டமாற்று முறை பல வசதிக் குறைவுகளைத் தோற்றுவித்தது. அவ் வசதிக் குறைவு களைப் பணத்தின் கண்டுபிடிப்பு நீக்கியது.

**1. இரு முனைத் தேவைப் பொருத்தம்** (Double Coincidence of Wants) **இல்லாமை** : ஒரே சமயத்தில் இருவர் தங்க ளுடைய பொருள்களை மாற்றிக்கொள்ள விரும்பினால் மட்டுமே பண்டமாற்று முறை செயல்படும். ஆட்டைக் கொடுத்து அதற் குப் பதிலாகக் கோதுமையைப்பெற விரும்பும் ஒருவர், ஆட்டைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாகக் கோதுமையைக் கொடுக்கத் தயாராக இருக்கும் வேறொருவரைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. கோதுமையை உற்பத்தி செய்யும் விவசாயி துணியைத் தனது தேவையாகக் கொண்டிருக்கக்கூடும். துணியை நெய்யும் நெச வாளி அதைக் கொடுத்துத் தனது அன்பு மனைவிக்காக வெள்ளிக் கொலுசைப்பெற விரும்பலாம். கொலுசை அளிக்க முன்வரும் கொல்லருக்குத் துணி தேவையானதாக இருந்தால்தான் பண்ட மாற்றை எளிதில் செய்யமுடியும். இக் குறைபாட்டைப் பணம் நிவர்த்தி செய்கிறது. ஒருவர் தன்னிடம் இருக்கும் மிகுதியான பொருளைப் பணத்திற்கு விற்று, அப் பணத்தைக்கொண்டு தேவை யான பொருள்களை எளிதில் வாங்கலாம்.

**2. பொது மதிப்பளவு** (Common Measure of Value) **இல்லாமை** : பண்டமாற்று முறையில் பொருள்களின் மதிப் பைத் தீர்மானிப்பது கடினமாகிறது. எவ்வீதத்தில் பொருள்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதும் எளிதல்ல.

பொருள்களும் பணிகளும் தரத்திலும் வேறுபடுகின்றன. பொருள்களின் மதிப்பை ஒப்பீடு செய்ய உதவும் பணத்தைப் போன்ற கருவி பண்டமாற்று முறையில் இல்லை. பொது மதிப்பளவை இல்லாமையால் சிக்கல்கள் தோன்றுகின்றன. பண்டமாற்று முறையில் ஒரு பசுவிற்கு இரண்டு காளைகள் சமம்; ஒரு ஆட்டிற்குப் பத்து கோழிகள் சமம் என்பது போன்று பொருள்களின் மதிப்புத் தோராயமாக நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், இரு பொருள்கள் சம மதிப்பைக் கொண்டிருக்காவிட்டாலும், பண்டமாற்று கடினமாகிறது. பல்வேறு பொருள்களின் வாணிகத்திற்குப் பண்டமாற்று முறை ஏற்றதல்ல.

**3. பகுக்க இயலாத பொருள்கள் :** அதிக மதிப்புடைய ஒரு பொருளைக் கொடுத்துக் குறைந்த மதிப்புடைய பொருள்களை வாங்குவதில் சிக்கல் தோன்றுகிறது. ஒரு மாட்டைக் கொடுத்து ஒருவர் நெல், துணி, பால், முட்டை போன்ற பொருள்களை வாங்க விரும்பலாம். ஆனால், மாட்டைப் பகுத்து அவர் வெவ்வேறு பொருள்களையும் வாங்க இயலாது. எளிதில் பகுக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு பண்டமாற்றைச் செய்யலாம். ஆனால், சிறிய அளவுகளில் பகுக்க முடியாத பண்டங்களை மாற்றுவது கடினமாகிறது.

**4. செல்வச் சேமிப்பில் இடர்ப்பாடு :** பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, மீன் போன்ற எளிதில் அழியும் தன்மை கொண்ட பொருள்களை நீண்ட காலத்திற்குச் சேமித்துவைக்க இயலாது. ஆனால், பண்டமாற்று முறையில் செல்வத்தைப் பண்டங்களாக மட்டுமே சேர்த்துவைக்கமுடியும். விரைவில் அழியும் தன்மைகொண்ட பொருள்களை விரைவில் அழியாத பொருள்களாக மாற்றிச் செல்வச் சேமிப்பைச் செய்தல் எளிதானதல்ல. பல பொருள்கள் காலப்போக்கில் மதிப்பை இழக்கக் கூடியவைகளாகவும் அழியும் இயல்பைக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன.

**5. உழைப்பிற்கான ஊதியம் அளிப்பதில் சிக்கல் :** வேளாண்மை உழைப்பாளர்களுக்கு நெல்லைக் கூலியாகக் கொடுக்கும் முறை இன்றும் நம் நாட்டில் அமைந்துள்ளது ஆனால், ஆசிரியர், தொழிலாளி, மருத்துவர் ஆகியோருக்குப் பொருள்களாக ஊதியம் வழங்கப்பட்டால், அவர்களுடைய நிலை பாதிக்கப்படும். உதாரணமாக, அவர்களுக்கு ஆடுகளாகவும் கோழிகளாகவும் ஊதியம் தரப்பட்டால், அவர்கள் அவற்றால் அதிகப் பயனைப் பெற இயலாது.

**6. செல்வத்தை இடம் மாற்றுவதில் இடர்ப்பாடு :** மாட்டு மந்தையைச் செல்வமாகக்கொண்ட ஒருவர், மாடுகளை வேறு இடத்திற்குக் கொண்டுசெல்வது சுலபமல்ல. அதுபோன்றே நிலம், வீடு, தோப்பு முதலிய செல்வங்களை இடம் மாற்றுவதிலும் இடையூறுகள் தோன்றுகின்றன. பண்ட மாற்று முறையில் இவற்றை வேறு இடங்களுக்கு மாற்ற முதலில் இவை மாற்றத் தக்கப் பொருள்களாக மாற்றப்படவேண்டும். பிறகு அப் பொருள்களைக் கொடுத்துத் தேவையான இடத்தில் நிலம், வீடு, தோப்பு போன்றவற்றை வாங்கவேண்டும்.

**7. கடன் கொடுப்பதிலும் கடனைத்திரும்பப் பெறுவதிலும் சிக்கல் :** பண்டமாற்று முறையில் ஒருவர் இரண்டு ஜதை மாடுகளை மற்றொருவருக்கு ஐந்தாண்டுகளுக்குக் கடனாகத் தருகிறார் என வைத்துக்கொண்டால், ஐந்தாண்டுகள் கழிந்த பிறகு, அதே மாதிரியான மாடுகளை அவர் திரும்பத் தருவார் என்று கூற இயலாது. பொருள்களின் தரத்தையும் மதிப்பையும் பண்ட மாற்று முறையில் நிர்ணயிப்பது கடினம்.

### பணத்தின் தோற்றம்

தேவை பணத்தின் கண்டுபிடிப்புக்குக் காரணமாக அமைந்தது. பண்டமாற்று முறையின் குறைபாடுகள் பணத்தைத் தோற்றுவித்தன. மிகப் பழைய காலங்களில் ஆடுமாடுகள் மற்றும் சில வீட்டுப் பிராணிகள் செல்வமாகக் கருதப்பட்டுப் பணம் போலவும் பயன்படுத்தப்பட்டன. பிறகு சிலகாலம் தோல், புகையிலை, சிப்பி, தந்தம் போன்றவற்றைப் பண்டை மனிதர்கள் பணமாகப் பயன்படுத்தினர். உலோகங்களின் பயனை உணர்ந்த மனிதன் அவற்றைப் பணமாகப் பயன்படுத்தத் தொடங்கினான். தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு, பித்தளை ஆகியவற்றால் ஆன முத்திரை நாணயங்கள் செய்யப்பட்டன. பலகாலம் 'உள்ளார்ந்த மதிப்புடைய' (intrinsic value) வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. இன்று, பல காரணங்களால் நிக்கல் போன்ற உலோகங்களால் ஆன நாணயங்களை உலக நாடுகளின் அரசுகள் வெளியிடுகின்றன. காகிதப் பணத்தின் கண்டுபிடிப்பே பண வளர்ச்சியில் முக்கியமான திருப்பு முனையாக அமைந்தது.

## II. பணத்தின் பணிகள் (Functions of Money)

வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பணம் பேருதவி புரிகிறது. 'பொறியியலில் சக்கரமும், அறிவியலில் நெருப்பும், அரசியலில் வாக்குச்சீட்டும் அடிப்படை

யான கண்டுபிடிப்புகள். அவை போன்றே பொருளியல், மனித வாழ்வியல், வாணிகவியல் ஆகியவற்றில் முக்கியமான கண்டு பிடிப்புப் பணம் ஆகும்', என்று பேராசிரியர் கிரெளதர் குறிப் பிடுகிறார். பண்டமாற்று முறையில் இருந்த குறைகள் பணத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளன. பணம் கண்டுபிடிக்கப்படாமல் இருந் தால், உலக நாடுகள் இன்று நாம் காண்கின்ற அளவுக்கு வியத்தகு வளர்ச்சியைப் பெற்றிருக்க இயலாது.

'பணம் என்பது பணம் எதைச் செய்கிறதோ அதுதான்', என்று வாக்கர் குறிப்பிடுகிறார். கிரெளதர் பணத்திற்குத் தரும் இலக்கணமாவது, 'எந்தப் பொருளாக இருந்தாலும், பொதுவாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பலவகைப் பண்டங்களையும் பணி களையும் வாங்கப் பயன்படுமென்றால் அது பணமாகும்'. பணத்தின் முக்கியப் பணிகளைப் பின்வருமாறு விளக்கலாம் :

## 1. மாற்று இடையீட்டுக் கருவி (Medium of Exchange)

விற்பதிலும் வாங்குவதிலும் ஓர் இடையீட்டுக் கருவியாகச் செயல்படுவதே பணத்தின் தலையாய பணியாகும். பொருள்களை மாற்றும்போது பணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பண்டமாற்று முறையின் 'இருமுனைத் தேவைப் பொருத்தம் இல்லாத' குறையைப் பணத்தின் இப் பணி நீக்கிவிடுகிறது. ஒருவர் தன்னிடம் மிகுதியாக இருக்கும் பொருளைப் பணத்திற்கு விற்று, அப் பணத்தைக்கொண்டு தனக்குத் தேவையான பிற பொருள்களை வாங்கமுடியும். உற்பத்தியாளர்கள், நுகர்வோர், வாணிகர்கள், நிலக்கிழார்கள், வேளாண்மைக் கூலியாள்கள், தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர் கள், பொறியாளர்கள், வழக்குரைஞர்கள், நடிகர்கள், ஓவியர்கள், சிற்பிகள், பாடகர்கள் போன்ற பல்வேறு தொழில்களைச் சார்ந்த வர்களும் பணத்தைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் அப் பணத்தைக்கொண்டு தங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளலாம் என்பதே இதற்குக் காரணமாகும்.

## 2. தராதர மதிப்பை அளக்கும் அளவை (Measure of Value)

பொருள்களின் மதிப்பை நிர்ணயிப்பது கடினமாக இருப்பி னும், பணம் அப் பணியினை எளிதில் நிறைவேற்றுகிறது. பொருள் களின் விலைகளை ஒப்பிட்டு நோக்கி அவற்றின் மதிப்பைச் சுலப மாக உணரலாம். தூரத்தை மீட்டரிலும், எடையைக் கிராமிலும் அளவிடுவதுபோல பொருள்களின் மதிப்பைப் பணம் என்னும் கருவியைக்கொண்டு அளவிடுகிறோம். ஒருவர் தன்னுடைய வரு

மானத்திற்கேற்ப எந்தெந்தப் பொருள்களை எந்த அளவில் வாங்குவது என்பதைத் தீர்மானிக்கவும் பணம் உதவுகிறது.

### 3. மதிப்பின் நிலைக்களன் (Store of Value)

பொருள்களைச் சேமித்து வைப்பது கடினம். பல பொருள்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அழியும் தன்மை கொண்டவையாக உள்ளன. எனினும், பொருள்களை விற்றுக் கிடைக்கும் பணத்தைச் சேமிப்பது எளிது. சேமிக்கின்ற பணத்திற்கு வட்டியும் கிடைக்கும். பண்டங்களின் மதிப்பைக் கணக்கிடும் பணத்தின் மதிப்பும்கூட நீண்டகாலத்தில் குறைவது குறிப்பிடத்தக்கது. செல்வத்தைப் பணமாகச் சேமிக்கலாம். செல்வச் சேமிப்பால் எதிர்காலத்தில் வள வாழ்வைப் பெறலாம். தற்பொழுது நம் நாட்டில் பணவீக்கத்தின் காரணமாகப் பொருள்களின் விலைகள் 1939ஆம் ஆண்டு விலைகளைவிட நான்கு மடங்கு பெருகியுள்ளன. பணத்தின் மதிப்புக் குறைந்துள்ளது. பணச் சேமிப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### 4. கடன் பொறுப்பளவு (Standard of Deferred Payment)

கடன் அளிப்பதும் பெறுவதும், அதற்கான வட்டியைப் பெறுவதும் அளிப்பதும், ஒப்பந்தங்கள் செய்யப்படுவதும் பணக் கணக்கின் அடிப்படையிலேயே கைக்கொள்ளப்படுகின்றன. எளிய முறையில் கடனைக் கொடுக்கவும் வாங்கவும் பணம் துணைபுரிகிறது. வங்கிக் கடன்முறையும் பணக் கணக்கீட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. கடன்முறையால்தான் இன்றைய வாணிகம் பன்மடங்கு வளர்ந்துள்ளது. கடன் அளிப்பால் மூலதனத் திரட்சி ஏற்படுகிறது. உற்பத்தியாளர்கள் ஆக்கப் பணிகளில் ஈடுபடத் தேவையான பணத்தைக் கடனாகப் பெறுகின்றனர்.

இந் நான்கு பணிகளோடு பணம் சில துணைப் பணிகளையும் செய்கிறது.

### 5. நீர்மைத் தன்மை

உடனடியாகத் தேவைகளை நிறைவு செய்யப் பணத்தைப் பயன்படுத்தலாம். ஆனால், மற்றவகைச் செல்வங்களைக்கொண்டு விருப்பங்களை விரைவாகப் பூர்த்திசெய்ய இயலாது. எனினும், செல்வங்களைப் பணமாக மாற்றி, பணத்தின் நீர்மைத் தன்மையின்மூலம் தேவையானவற்றை உடனடியாக வாங்கலாம்.

### 6. சொத்துக்களை மாற்றுதல்

சொத்துகளை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றவும், நபர்களுக்கிடையே மாற்றவும் பணம் வகை செய்கிறது. ஒருவர் ஓரிடத்தில் உள்ள தனது நிலத்தைப் பணமாக்கி, அப் பணத்தைக் கொண்டு வேறோர் இடத்தில் வீடு வாங்கலாம்.

### 7. ஆக்கக் காரணிகளுக்குச் சன்மானம் அளித்தல்

உற்பத்தியைச் செய்வதில் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு காரணிகளும் ஈடுபடுகின்றன. அவற்றின் பணிகளுக்கேற்ற சன்மானத்தை வழங்கப் பணம் உதவுகிறது.

இவ்வாறு பல பணிகளைச் செய்வதால்தான் பலரும் பணத்தைச் சேமிப்பதில் விருப்பம் கொண்டவர்களாக உள்ளனர்.

### பணத்தின் முக்கியத்துவம்

மனித நலனைப் பெருக்கப் பணம் . உதவுவதாகப் பேராசிரியர் பிகு கூறுகிறார். உற்பத்திப் பணிக்குத் துணை நிற்பது பணமே. உற்பத்தியாளர் உற்பத்தியைத் துவங்கவும் தொடரவும் பணம் உதவுகிறது. உற்பத்தியைச் செய்யும் தொழிலாளர்களுக்குப் பொருளை விற்பனை செய்த பிறகு ஊதியம் அளிக்கமுடியாது. கூலியானது அவ்வப்போது பணமாகத் தரப்படுகிறது. வியாபாரிகளும் பண இலாபத்தைப் பெற வாணிகத்தில் ஈடுபடுகின்றனர். அதிக இலாபம் கிடைத்தால் முதலீட்டின் அளவும் கூடி வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன. புதிய பல பொருள்களும் உற்பத்தியாகின்றன.

நுகர்வோர் தமது பண வருமானத்தைக்கொண்டு விருப்பங்களைப் பூர்த்திசெய்து கொள்கிறார்கள். உற்பத்தியாளரிடம் இருந்து நுகர்வோருக்குப் பொருள்கள் சென்று சேருவதைப் பணம் எளிதாக்குகிறது. பலரும் பணத்தைப் பெறும் நோக்கத்துடனேயே உழைக்கின்றனர். பணத்தின் அளவையும், பணம் சுழலும் வேகத்தையும் கட்டுப்படுத்தி ஓர் அரசு பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம். இதனால் சமூக நலன் பெருகும்.

## II. பணத்தின் வகைகள் (Kinds of Money)

பணத்தின் பல வகைகள் வழக்கத்தில் இருந்துள்ளன. அவற்றில் சில இன்றும் புழக்கத்தில் உள்ளன. முக்கியமான பணத்தின் வகைகளைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்.

### 1. உலோகப் பணம் (Metallic Money)

இவ்வகைப் பணம் ஏதாவது ஓர் உலோகத்தால் ஆனது. பழைய காலங்களில் நாணயங்கள் மதிப்பு மிக்க பொன், வெள்ளி போன்ற உலோகங்களில் செய்யப்பட்டன. இப்பொழுது பல நாடுகளிலும் நிக்கல் நாணயங்களே பெருமளவில் புழக்கத்தில் உள்ளன.

### 2. காகிதப் பணம் (Paper Money)

காகிதப் பணத்தின் ஒருவகை தங்கமாகவோ வெள்ளி யாகவோ மாற்றக்கூடியது. மற்றொருவகை அடையாளப் பண மாகும். சமீப காலமாக உலோகப் பணத்திற்குப் பதிலாக அதிக அளவில் காகிதப் பணமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. காகிதப் பணம் ஒரு நாட்டின் மத்திய வங்கியால் வெளியிடப்படுகிறது. இந்திய ரிசர்வு வங்கி நம் நாட்டில் ரூபாய் நோட்டுகளை (ரூ. 10,000, ரூ. 5,000, ரூ. 1,000 ரூ. 100, ரூ. 50, ரூ. 20, ரூ. 10, ரூ. 5, ரூ. 2) அச்சிடுகிறது. ஒரு ரூபாய் நோட்டுகளை மட்டும் மத்திய அரசின் நிதி அமைச்சகம் அச்சிட்டு வெளியிடுகிறது.

### 3. சட்ட முறைப் பணம் (Legal Tender Money)

இந்தியாவில் ரூபாயும், ரஷ்யாவில் ரூபிளும், அமெரிக்காவில் டாலரும், ஜெர்மனியில் மார்க்கும், ஜப்பானில் யென்னும் சட்ட முறைப் பணங்களாக உள்ளன. கடன்களைக் கொடுத்தல், வாங்கு தல் ஆகியவற்றில் சட்டப்படிக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப் பட வேண்டியது சட்டமுறைப் பணம். பணத்தின் மதிப்புக்கு அரசு சட்டத்தின்மூலம் உறுதியளிக்கிறது.

### 4. அடையாளப் பணம் (Token Money)

உள்ளார்ந்த மதிப்பின்றிப் புழக்கத்தில் இருக்கும் நாணயங் களையும், காகிதப் பணத்தையும் அடையாளப் பணம் என்கிறோம். அரசு அச்சிட்டு வெளியிடும் சட்டமுறைப் பணமாகிய நாணயங் களும், காகிதப்பணமும் பெரும்பாலும் அடையாளப் பணமாகவே அமைகின்றன.

### 5. பிரதிப் பணம் (Representative Money)

உலோக நாணயத்திற்குப் பிரதியாகக் காகிதச் செலாவணி பணிபுரிவதைப் பிரதிப்பணம் என்கிறோம். தேவையானபோது தங்கமாக மாற்றிக் கொள்ளத்தக்க அடையாளப் பணமே பிரதிப் பணமாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு சில நாடுகளின் அரசுகள்

வெளியிடும் பணத்தின் மதிப்பிற்குச் சமமாகத் தங்கத்தை இருப் பாக வைத்துக்கொள்வதுண்டு. ஆனால், தற்பொழுது இம் முறை செல்வாக்கு இழந்துவிட்டது.

## 6. கணக்கீட்டுப் பணம் (Money of Account)

ஒவ்வொரு நாட்டிலும் பொருள்களின் விலை, உழைப்பாளர் களின் ஊதியம், கடன் கொடுத்தல்—வாங்குதல் போன்றவற்றைக் குறிப்பிட்ட பணத்தின் கணக்கில் மதிப்பிடுகின்றனர். இந்தியா வில் ரூபாயும், இங்கிலாந்தில் ஸ்டெர்லிங்கும், பிரான்ஸில் ஃபிரான்கும் கணக்கீட்டுப் பணங்களாக இருக்கின்றன. பொது வாக, ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் கணக்கு கள் எந்தப் பண அளவில் அமைந்துள்ளனவோ, அந்தப் பணத் தைக் கணக்கீட்டுப் பணம் எனலாம்.

## 7. பண்டப் பணம் (Commodity Money)

ஒரு குறிப்பிட்ட பொருள் பணமாகக் கையாளப்பட்டால், அது பண்டப்பணமாகும். மிகத் தொன்மைக் காலங்களில் ஆப்பிரிக்கர்கள் யானைத் தந்தங்களையும், சிவப்பிந்தியர்கள் புகை யிலையையும், கிரேக்கர்கள் எருதுகளையும் பணமாகக் கையாண் டதை வரலாறு உணர்த்துகிறது. பட்டுப்பூச்சி, ஆடுகள், மாடுகள், சிப்பிகள், தானியங்கள் போன்றவையும் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. இறுதியாகப் பித்தளை, இரும்பு, தோல், செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களில் செய்த நாணயங் களும் வழக்கிழந்தன. இன்று தங்கமும் பணமாகக் கையாளப் படுவதால், அதைப் பண்டப் பணத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

## 8. வங்கிப் பணம் (Bank Money)

பணம் செய்கின்ற பணியை வங்கிப் பணம் நிறைவேற்று கிறது. இது சட்டமுறைப் பணமல்ல. வங்கிப் பணத்தைச் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. காசோலை (cheque), டிராஃப்ட் (draft), மெயில் டிரான்ஸ்ஃபர் (mail transfer) போன்றவற்றுல் வங்கிப் பணம் செயல்படுகிறது. காசோலை, டிராஃப்ட் போன்றவை கடன் கருவிகளே (credit instruments). இவற்றை வங்கிப் பணமெனக் கருதக்கூடாது. காசோலை மூலம் ஒருவர் கணக்கில் இருந்து மற்றொருவர் கணக்கிற்குப் பணம் மாற்றப்பட்டுக் கொடுக்கல்-வாங்கல் தீர்வு செய்யப்படுவது வங்கிப் பணத்தால் ஆகும்.

### 9. நடைமுறைப் பணம் (Money proper)

மக்களிடையே புழங்கும் பணமே நடைமுறைப் பணம் ஆகும். பொருள்களை விற்கும்போதும் வாங்கும்போதும் நடைமுறைப் பணத்தில் பேரங்கள் முடிக்கப்பெறுகின்றன. இந்தியாவில் ரூபாய் நோட்டுகளையும், பைசா காசுகளையும் நடைமுறைப் பணமாகக் கருதவேண்டும்.

## IV. நல்ல பணத்தின் இயல்புகள் (Characteristics of Good Money)

இன்றைய நிலைகளில் வங்கிப் பணமும், காகிதப் பணமும் அதிக அளவுப் புழக்கத்தில் உள்ளன. உள்ளார்ந்த மதிப்பில்லாத காகிதப் பணம் தற்போது எல்லா உலக நாடுகளிலும் கையாளப் பட்டு வருகின்றது. இப் பணமானது எல்லோராலும் மறுப் பின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பழைய காலங்களில் தங்க மானது நல்ல பணத்திற்கான இயல்புகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. இன்று இந்த நல்லியல்புகளின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. சிறந்த பணத்திற்கு அமைய வேண்டிய இயல்புகளைப் பின்வருமாறு விளக்கலாம் :

### 1. எல்லோரும் ஏற்றுக்கொள்ளல் (General Acceptability)

பணத்தின் பணிகள் செவ்வனே நடைபெற, அது எல்லோராலும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மக்கள் அனைவரும் பணமென ஏற்றுக்கொள்ளப்படும் பொருளே பணமாக இயலும். அப் பணத்திற்கு அவர்கள் தங்களுடைய பொருள்களை மாற்றிக்கொள்ளத் தயாராக இருத்தல்வேண்டும். மதிப்பு மிக்க உலோகங்களான பொன், வெள்ளி போன்றவை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்றைய நிலைகளில் காகிதப் பணத்தின் மதிப்பிற்கு அரசு உறுதியளிப்பதால், அதையும் மக்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார்கள்.

### 2. சுலபமாக எடுத்துச் செல்லுதல் (Portability)

ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்கு எளிதில் எடுத்துச்செல்லும் தன்மையைப் பணம் கொண்டிருக்கவேண்டும். செம்பு, இரும்பு, பித்தளை ஆகியவற்றுலான பணத்திற்கு இத் தன்மை இல்லை. பணமாக இருக்கக்கூடிய பொருள் குறைந்தளவில் மிகையான மதிப்பைப் பெற்றிருத்தல் அவசியம். காகிதப்பணம் இவ் வியல்பைக் கொண்டிருக்கிறது. தங்கத்தையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

### 3. எளிதில் அறியத் தக்க தன்மை (Cognisability)

பணமாகப் பயன்படுத்தப்படும் பொருள் எளிதில் இனம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். காகிதப்பணம் வெவ்வேறு வண்ணங்களிலும், அளவுகளிலும், உலோகப் பணம் வெவ்வேறு வடிவங்களிலும் செய்யப்படுவதற்கு இதுவே காரண மாகும். பார்த்த உடனேயே மதிப்பைத் தெரிந்து கொள்ளக் கூடிய தெளிவுடைமைத் தன்மையைப் பணம் பெற்றிருக்கவேண் டும்.

### 4, விரைவில் அழியாத தன்மை (Durability)

விரைவில் அழியும் தன்மை பெற்ற பொருள்களைப் பண மாகப் பயன்படுத்த இயலாது. பணம் விரைவில் கைமாறக் கூடியது. எளிதில் அழிக்கமுடியாத தன்மையைப் பணம் பெற் றிருத்தல் அவசியம். இரும்பு துருப்பிடிக்கக்கூடியது; ஈயம் நசுங்கக் கூடியது; அலுமினியம் தேயக்கூடியது. காற்று, நீர், நெருப்பு ஆகியவற்றுல்கூட அழிக்க முடியாத இயல்பைப் பொன் மற்றும் வெள்ளிப் பணம் கொண்டுள்ளது. இன்று புழக்கத்தில் இருக்கும் காகிதப் பணத்தை விலையுயர்ந்த, தரம்மிக்க காகிதங்களால் செய்கிறார்கள். எனினும், காலப்போக்கில் கறைபடிந்து, அழுக் கடைந்து, கிழிந்துபோன காகிதப்பணம் புதிய காகிதப் பணமாக மாற்றப்படுவதற்கு ஒரு நாட்டின் மத்திய வங்கி உதவுகிறது.

### 5. பகுபடும் இயல்பு (Divisibility)

வெவ்வேறு மதிப்புடைய அளவுகளில், பிரிக்கத்தக்க இயல்புடைய பொருளே நல்ல பணமாகக் கொள்ளப்படும். வெள்ளி, தங்கம் போன்றவற்றை வெவ்வேறு மதிப்பளவுகளில் எளிதில் பகுக்கலாம். ஆனல், பகுக்கப்பட்ட வைரத்தின் மதிப்பு குறைந்துவிடும். எளிதில் பகுபடும் தன்மையைப் பணத்திற்கு அளிக்கவே வெவ்வேறு மதிப்புடைய நாணயங்களும், காகிதப் பணங்களும் வெளியிடப்படுகின்றன.

### 6. ஒரியல்புத் தன்மை (Homogeneity)

ஒரே மதிப்புடைய நாணயங்கள் அனைத்தும் ஒருமைத் தன் மையைக் கொண்டிருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட மதிப்புடைய பணம் எடையிலும் அளவிலும் வேறுபட்டால் குழப்பங்கள் தோன்றும்.

### 7. நெகிழ்வினக்கத் தன்மை (Malleability)

பணமாக உருவாக்கப்படும் உலோகம் எந்த அளவிலும் எளிதில் நீட்டவோ, தட்டையாக்கவோ, வளைக்கவோ, வெட்டவோ

சாத்தியமாகும் இயல்பைக் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு இருந்தால்தான் வெவ்வேறு அளவுகளிலும் உருவங்களிலும் நாணயங்களை உருவாக்க முடியும்.

### 8. நிலையான மதிப்பு (Stability of value)

பொருள்களின் தராதர மதிப்பைக் காட்டும் ஓர் இடையீட்டுக் கருவியாகப் பணம் அமைந்துள்ளது. எனவே, மதிப்பை அளக்க உதவும் பணத்தின் மதிப்பு மாறுதபடி அரசு பார்த்துக் கொள்ளவேண்டும். தங்கம் இத் தன்மையைக் கொண்டுள்ளது. காகிதப் பணத்தின் மதிப்பு மாறக்கூடியது.

### 9. பயன்பாடு (Utility)

பணமானது மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பயன்பாட்டைக் கொண்டிருக்கவேண்டும். செல்லாத பணம் பயன்பாடு இல்லாதது; அதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### 10. மதிப்பு (Value)

நல்ல பணமானது உள்ளார்ந்த மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும். தங்கமும் வெள்ளியும் மதிப்பைக் கொண்டிருப்பதால்தான் உலகின் பல நாடுகள் அவற்றைப் பணமாக ஏற்றுக் கொள்கின்றன. காகிதப் பணத்தின் மதிப்புக்கு அரசு உறுதியளிப்பதால்தான், அதை மக்கள் மறுக்காமல் ஏற்றுக்கொள்கிறார்கள்.

# 20. பணத் திட்டங்கள்

## (Monetary Standards)

ஒரு நாட்டின் பணமுறை (Monetary System) எந்த அடிப் படையில் அமைந்துள்ளது என்பதையே பணத்திட்டம் குறிக் கிறது. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் உலகின் பல நாடுகள் வெள்ளியையே பணமாகப் பயன்படுத்தின. முதன்முதலாக இங்கிலாந்து 1816ஆம் ஆண்டு பொன் திட்டத்தைப் பின்பற்றி யது. அதற்குப் பிறகு வேறு சில நாடுகளும் அம் முறையைப் பின்பற்றின. பொருளாதார வளர்ச்சியின் மாறுபட்ட சூழ்நிலை களில் வெவ்வேறு பணத் திட்டங்கள் வழக்கில் இருந்து வந்துள் ளன. அவற்றை உலோகப் பணத்திட்டம் (Metallic Standard), காகிதப் பணத்திட்டம் (Paper Currency Standard) என இரு பெரும் பிரிவுகளாக்கலாம். உலோகப் பணத்திட்டத்தில் ஓர் உலோகமுறை, இரு உலோகமுறை என்னும் இரு வகைகள் உள்ளன.

## I. ஓர் உலோக முறை (Mono-metalism)

ஏதாவது ஓர் உலோகத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் பணமுறை அமைந்திருந்தால், அது ஓர் உலோக முறை எனப்படும். அம் முறையில் பணம் ஒரே உலோகத் தால் ஆன நாணயங்களாக இருக்கும். உலோக அடிப்படையில் காகிதப் பணமும் வெளியிடப்படுவதுண்டு. ஓர் உலோகப் பணத் திட்ட முறையில் தங்கம் பயன்படுத்தப்படும்போது பொன் திட்டம் (Gold Standard) எனவும், வெள்ளி பயன்படுத்தப்படும் போது வெள்ளித்திட்டம் (Silver Standard) எனவும் குறிப் பிடுகிறோம். இந்தியாவில் 1835ஆம் ஆண்டு முதல் 1893ஆம் ஆண்டு வரை வெள்ளித் திட்டம் அமுலில் இருந்தது.

ஓர் உலோகத் திட்டத்தில் சில சிறப்புத் தன்மைகள் உள்ளன:

1. பணமுறை ஓர் உலோகத்தை மட்டும் சார்ந்துள்ள தால், இது மிகவும் எளிதானதும் தெளிவானதுமான முறையாக அமைகிறது.

2. பொன் அல்லது வெள்ளி அடிப்படை உலோகமாக இருப்பதால், மக்களுக்குப் பணத்தின் மீது நம்பிக்கை ஏற்படும்.

3. காகிதப் பணத்தை வரையறையின்றி வெளியிட இய லாது.

4. இரு உலோக முறையில் ஏற்படுவதுபோன்று, இரு வேறு உலோக நாணயங்களின் மாற்று மதிப்பு விகி தத்தை நிர்ணயிப்பது குறித்த சிக்கல் எழாது.

5. பணவீக்கம் தோன்றுது.

6. உலக நாடுகள் பலவற்றிலும் இம் முறை பின்பற்றப் பட்டால் உலக வாணிகம் செழிக்கும்.

சில குறைபாடுகளையும் இத் திட்டம் கொண்டுள்ளது :

1. உலோகப் பற்றுக்குறை தோன்றக்கூடிய ஒன்றாகும்.

2. இம் முறை பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமையும்.

3. உலோகப் பற்றுக்குறையால் தேவைக்கேற்ப பணத்தை வெளியிட இயலாத நிலை 'பணவாட்டத்தை' (deflation) ஏற்படுத்தும்.

## II. இரு உலோக முறை (Bimetallism)

இருவித உலோகங்கள் சட்டமுறைப் பணமாக இருப்ப தையே இது குறிக்கின்றது. பெரும்பாலும், பொன், வெள்ளி ஆகிய உலோகங்களின் அடிப்படையில் இம் முறையின்கீழ்க் காகிதப்பணம் வெளியிடப்பட்டது. பொன், வெள்ளி நாணயங்களை எவ் விகிதத்தில் மாற்றுவது என்பதை அரசு சட்டத்தின்மூலம் வரையறுக்கும். அமெரிக்காவில் 1873ஆம் ஆண்டு வரையும் பிரான்ஸில் 1803ஆம் ஆண்டு முதல் 1874ஆம் ஆண்டு வரை யும், 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தைத் தவிர்த்த வேறு பல நாடுகளிலும் இரு உலோக முறை செயல்பட்டது. 1871ஆம் ஆண்டு அமெரிக்காவில் புதிய வெள்ளிச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. வெள்ளி உற்பத்திப் பெருகியதால் அமெரிக்கா

ஜெர்மனி போன்ற நாடுகள் இரு உலோக முறையைக் கைவிட்டுப் பொன் திட்டத்தை மேற்கொண்டன. மேலும், மதிப்பு மிகுந்த பொற்காசுகள் மக்களால் பதுக்கப்பட்டன. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அநேகமாக எல்லா நாடுகளுமே இம் முறையைக் கைவிட்டு விட்டன.

**சிறப்பியல்புகள்**

1. இரு உலோகத் திட்டத்தில் உலோகப் பற்றாக்குறை ஏற்படாது. எனவே, பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்கேற்ப பணத்தின் அளவைப் பெருக்கலாம். பொன் பற்றாக்குறை நிலையில் இருந்தால், அதை ஈடுசெய்ய வெள்ளியைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, 'பொன் திட்டத்தை' உலகின் பல நாடுகளும் பின்பற்றினால் பொன் பற்றாக்குறை தோன்றும்.

2. அதிக மதிப்புடைய நாணயங்களைப் பொன்னிலும், தாழ்ந்த மதிப்புடைய நாணயங்களை வெள்ளியிலும் வெளியிடலாம்.

3. இம் முறையின் கீழ் பொருள்களின் விலைகளும், பணத்தின் மதிப்பும் மாறுமல் உள்ளன.

4. வெளிநாடுகளோடு நாணய மாற்று விகிதத்தை எளிதில் நிர்ணயிக்கலாம்.

5. தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களின் உற்பத்தியும் அளிப்பும் திடீரெனக்கூடாது. எனவே, பணத்தின் வாங்கும் திறனில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதில்லை.

6. பொன் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டோடு பொன்னிலும், வெள்ளித் திட்டத்தைக் கடைபிடிக்கும் நாட்டோடு வெள்ளியிலும் தொடர்புகொள்வது இரு உலோக முறையைக் கைக்கொண்டுள்ள ஒரு நாட்டிற்கு எளிதாகிறது.

7. ஓர் உலோகத்தின் மதிப்புக் குறைந்தால் மற்ற உலோகத்தின் மதிப்புத் தானாகவே அதிகரித்து விடுவதால், பணத்தின் வெளிநாட்டு மதிப்பு மாறுவதில்லை.

**குறைபாடுகள்**

1. கிரஷாம் விதிப்படி, இரு உலோக முறையில் குறைந்த மதிப்புடைய நாணயங்கள் பெருமளவில் புழக்கத்தில் இருக்கும் போது உயர் மதிப்புடைய நாணயங்கள் பதுக்கப்படுகின்றன. பதுக்கப்படும் நாணயங்களை வெளிக்கொண்டுவர இரு உலோக

நாணயங்களுக்கும் இடையேயான மாற்று வீதத்தை மாற்ற வேண்டும்.

2. தங்கம், வெள்ளி ஆகியவற்றின் நாணயச்சாலை மாற்று விகிதம் சரியாகச் செயல்பட, அவ் விகிதம் சந்தை விகிதத்தி லிருந்து மாறுமல் இருக்கவேண்டும். இரண்டு விகிதங்களுக்கும் இடையே வேறுபாடு இருந்தால் மதிப்புக் குறைந்த நாணயம் மதிப்பு மிகுந்த நாணயத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டி விடும்.

3. எப்போதுமே ஓர் உலோகத்தின் பற்றுக்குறையை இன்னோர் உலோகத்தின் அளிப்பு ஈடுசெய்யும் என்று கருதுவது தவறு.

4. இம் முறை சிறப்பாகச் செயல்பட பல நாடுகளும் இதைப் பின்பற்றவேண்டும்.

5. நாணயச்சாலை மாற்று வீதமும், சந்தை மாற்று வீத மும் வேறுபடும்போது கொடுக்கல்-வாங்கல் சிக்கல்கள் தோன்று கின்றன. உதாரணமாக, கடனைப் பெற்றவர் தான் பெற்ற கடனை மதிப்புக் குறைந்த உலோகப் பணத்தில் அடைக்க விரும்பு வார். ஆனால், கடன் கொடுத்தவர் மதிப்பு மிகுந்த உலோகப் பணத்தில் கடனைத் திரும்பப்பெற எண்ணுவார். தவிர, நாணயச் சாலை விகிதம் ஒரு தங்க நாணயத்திற்கு 16 வெள்ளி நாணயங் களாகவும், சந்தை விகிதம் ஒரு தங்க நாணயத்திற்கு 15 வெள்ளி நாணயங்களாகவும் இருந்தால், 15 வெள்ளி நாணயங்களுக்கு ஒரு தங்க நாணயத்தைச் சந்தையில் பெற்று, அதை நாணயச் சாலையில் 16 வெள்ளி நாணயங்களாக மாற்றி ஒரு வெள்ளி நாணயத்தை இலாபமாகப் பெறமுடியும்.

இக் குறைபாடுகளால்தான் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரு உலோக முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

## III. காகிதப் பண முறை
## (Paper Currency Standard)

காகிதப் பணத்தின் கண்டுபிடிப்பே பண வரலாற்றில் முக் கியமான திருப்பமாகும். தற்பொழுது உலகின் எல்லா நாடு களிலும் காகிதப் பணமுறை அமைந்துள்ளது. இது உள்ளார்ந்த மதிப்பற்றதாகவும், அடையாளப் பணமாகவும் அமைகிறது. நல்ல பணத்திற்கு இருக்கவேண்டிய பல இயல்புகள் காகிதப் பணத்தில் உள்ளன. ஒரு நாட்டில் அரசின் மத்திய வங்கி காகிதப் பணத்தை

வெளியிட்டு நிர்வகிக்கிறது. அரசு உறுதி கூறுவதால்தான் பணம் மதிப்பைப் பெற்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பியல்புகள்**

காகிதப் பண முறை பிற முறைகளில் இல்லாத சில சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கிறது.

1. வெவ்வேறு இடங்களுக்கும் காகிதப் பணத்தை எடுத்துச் செல்வது எளிதாக இருக்கிறது. நம் நாட்டில் சமீபத்தில் புதிதாக 50 ரூபாய், 20 ரூபாய் நோட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. மதிப்புக்கேற்ப பல அளவுகளில் காகிதப் பணம் வெளியிடப்படுகிறது.

2. அரசின் சிறப்பான நிர்வாகத்தால் பணத்தின் மதிப்பில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள இயலும்.

3. போர்க் காலங்களிலும், நிதிப் பற்றுக்குறை ஏற்படும் போதும் காகிதப் பணத்தைத் தேவைக்கேற்ப பெருக்கிக் கொள்ளலாம். காகிதப் பணத்தை அச்சிடுவதற்கான செலவும் குறைவானதே.

4. சீரிய பண நிர்வாக முறையால், பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப காகிதப் பணத்தைக் கூட்டவோ குறைக்கவோ இயலும்.

5. காகிதப் பணத்தால் தேசிய ஒருமைப்பாடும், தேசியத் தன்மையும் காக்கப்படுகின்றன.

6. ஒரு நாடு ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் சமன்பாட்டைப்பெற அந்நியச் செலாவணி வீதத்தை (foreign exchange rate) மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

7. இன்றையப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து நெறிப்படுத்தவும், உயர்வான வளர்ச்சி வீதத்தைப் பெறவும் காகிதப் பண முறையே ஏற்றது.

8. பொருள்களின் விலைகள் சீராக உயர்ந்தால் பல பொருளாதார நன்மைகள் விளையும். பணத்தின் அளிப்பையும், பணத்தின் சுழலும் வேகத்தையும் படிப்படியாக அதிகரிப்பதால், வேலைவாய்ப்புகள் பெருகும்; உற்பத்தி கூடும்; வருமானம் பெருகும்; சேமிப்பு அதிகரிக்கும்; முதலீடு உயர்வடையும். இவை

யாவற்றிற்கும் உறுதுணையாக இருப்பது காகிதப் பண முறையே யாகும்.

9. இம் முறையால் பணவாட்டம் ஏற்படுவதும் தடுக்கப் படுகிறது.

**குறைபாடுகள்**

பல நன்மைகளைத் தரும் காகிதப் பணமுறை சில குறைகளை யும் பெற்றிருக்கிறது.

1. தேவைக்கு அதிகமாகக் காகிதப் பணம் அச்சிட்டு வெளியிடப்படுவதால் பணவீக்கம் தோன்றுகிறது. அதன் விளை வாகப் பொருள்களின் விலைகள் கூடுகின்றன; பணத்தின் மதிப்புக் குறைகிறது; உண்மை வருமானத்தின் அளவு பாதிக்கப்படு கிறது; சேமிப்பு, முதலீடு ஆகியவை தாழ்வடைகின்றன; வேலை வாய்ப்புகள் குறைவடைகின்றன.

2. பண நிர்வாகத்தில் அமையும் குறைபாடுகளினால் எண் ணற்ற பொருளாதார – சமுதாயச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இயற்கை வளங்களும், ஆக்கக் காரணிகளும் சரிவரப் பயன்படுத்தப் படாமையால் எங்கும் – எதிலும் பற்றாக்குறை நிலையே நீடிக்கிறது.

3. விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதில் அரசின் நடவடிக்கைகள் வெற்றி பெறுவதில்லை. கள்ளப்பணமும் கறுப்புப் பணமும் பெருகியுள்ளமைக்குக் காகிதப் பண முறையே காரணமாகும்.

4. அந்நியச் செலாவணியின் நிலையற்ற மாற்று விகிதத் தால் அயல்நாட்டு வாணிகம் பாதிக்கப்படுகிறது.

5. அந்நிய நாடுகள் அவற்றின் செல்வாக்கைப் பயன் படுத்தி ஒரு நாட்டின் பணமதிப்பைக் குறைக்கக்கூடும்.

பின்தங்கிய பொருளாதாரத்தில் முதலீட்டையும் வேலை வாய்ப்புகளையும் பெருக்கக் காகிதப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று ஜான்மேனார்டு கெயின்ஸ் குறிப்பிட்டுள்ளார். அளவோடு வெளியிடப்பட்டுச் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டால் காகிதப் பண முறை பல நன்மைகளை நல்கும்.

## IV. கிரஷாம் விதி (Gresham's Law)

சர் தாமஸ் கிரஷாம், 'கெட்ட நாணயம் நல்ல நாண யத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டுகிறது' என்னும் ஒரு விதியை

உருவாக்கித் தந்தார். முதல் எலிசபெத் அரசியிடம் பொருளாதார ஆலோசகராக இருந்தவர் கிரஷாம். அரசியார் காலத்தில் ஓரங்கள் மழுங்கிய, நிறை குறைந்த, தோற்றம் மாறுபட்ட, தேய்மானம் அடைந்த நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்தன. இந்த நிலையைத் தவிர்க்கப் புதிய நாணயங்கள் வெளியிடப்பட்டன. ஆனால், அப் புதிய நாணயங்கள் பதுக்கப்பட்டுக் குறைபாடுகளைக் கொண்ட பழைய நாணயங்களே புழக்கத்தில் இருந்தன. இந்த நிலைக்கான காரணங்களை ஆய்வு செய்த கிரஷாம், 'நல்ல பணமும் கெட்ட பணமும் முழு அளவில் ஒரே நேரத்தில் சட்டமுறைப் பணமாக இருக்கும்போது, கெட்ட பணம் நல்ல பணத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டிவிடும்' என்ற முடிவுக்கு வந்தார்.

ஒருவரிடம் ஒரே மதிப்புடைய நல்ல பணமும் கெட்ட பணமும் இருக்கின்றன என வைத்துக்கொண்டால், அவர் முதலில் கெட்ட பணத்தையே செலவிடுவார். கெட்ட பணம் என்பது கள்ளப்பணமோ போலிப் பணமோ கறுப்புப் பணமோ அல்ல. அது பழுதடைந்த, தேய்வுற்ற, மழுங்கிய, மோசமான நிலையில் உள்ள பணத்தையே குறிக்கும். நம்முடைய நடைமுறை வாழ்வில் கிரஷாம் விதி செயல்படுவதை எளிதில் உணரலாம். நம்மிடம் புதிய காகிதப் பண நோட்டுகளும், அழுக்கடைந்து கசங்கிய பழைய பண நோட்டுகளும் இருந்தால், நாம் முதலில் செலவிடுவது அழுக்கடைந்த பழைய நோட்டுகளாகவே இருக்கும்.

**கிரஷாம் விதி செயல்படுவதற்கான காரணங்கள்**

1. நாணயங்களைச் சேமிப்பவர்கள் நல்லியல்புகளை உடைய புதிய நாணயங்களையே விரும்புவர்.

2. உலோகப் பயனுக்காக நல்ல நாணயங்கள் மக்களால் உருக்கப்படும்.

3. உயர்ந்த விலையைப் பெறுவதற்காக நல்ல பணம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடும். அயல் நாடுகளுக்கு நிறையின் அடிப்படையிலேயே தங்கத்தைத் தரவேண்டுமாதலால், ஏற்றுமதியாளர்கள் தேய்மானமடையாத புதிய நாணயங்களையே அனுப்புவர்.

4. நல்ல பணத்தையும் கெட்ட பணத்தையும் கொண்டிருக்கும் ஒருவர், முதலில் கெட்ட பணத்தைச் செலவிடுவது இயல்பானதாகும்.

**வரையறைகள்**

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கிரஷாம் விதி செயல் படுகிறது :

1. ஒரு நாட்டில் பணத்தின் அளவு பற்றுக்குறை நிலையில் இருந்தால், கெட்ட பணத்தோடு நல்ல பணமும் புழக்கத்தில் அமைந்திருக்கும். அப்போது கிரஷாம் விதி செயல்படாது.

2. கெட்ட பணமென்பது மிகவும் மோசமானதாக இருந் தால், அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள். அவ்வகைப் பணம் புழக்கத்தில் அமையாது. மோசமான பணம் எதுவென் பதை மக்கள் அறிந்துகொண்டால் இவ் விதி செயல்படாது.

3. பணமானது சேமிக்கப்பட்டு வங்கிகளில் வைப்பு நிதி யாக்கப்படும் பழக்கம் இன்று பெருகியுள்ளது. வங்கிகளில் நல்ல பணம், கெட்ட பணம் என்ற வித்தியாசம் கருதப்படுவதில்லை.

4. உள்நாட்டில் பணப் பற்றுக்குறை இருக்கும்போது, நல்ல பணம் பதுக்கப்படுவதோ அல்லது ஏற்றுமதி செய்யப்படு வதோ இல்லை.

5. பணத்தின் மதிப்பு குறைவதை மக்கள் அறிந்தால், இவ் விதி செயல்படாது.

கிரஷாம் விதி இரு உலோக முறைக்கு மட்டுமே மிகப் பொருத்தமுடையதாக இருக்கிறது. வெள்ளி நாணயங்களும் தங்க நாணயங்களும் புழக்கத்தில் இருக்கும்போது தங்க நாண யங்கள் பதுக்கப்படும். இவ் விதியானது பொன் திட்டத்திலோ அல்லது காகிதப்பண முறையிலோ அதிகச் செல்வாக்கைப் பெற் றிருக்கவில்லை. இவ் விதி பொருளியலில் ஒரு போக்குரைக் கூற்றாக அமைந்துள்ளது. பழைய காகிதப் பண நோட்டுகளையும், பழு தடைந்த நாணயங்களையும் முதலில் செலவழிப்பது மனித இயல்பு. இவ் வடிப்படையில் ஒரு பொதுப்படையான உண்மை கிரஷாம் விதியின்மூலம் வெளிப்படுகிறது.

# 21. பொன் திட்டம்
## (Gold Standard)

பொன்திட்டமென்பது, ஒரு நாட்டின் செலாவணி பொன் உலோகத்தின் அடிப்படையில் அமைவதைக் குறிக்கும். இத் திட்டத்தை முதன்முதலில் இங்கிலாந்து நாட்டில் 1816ஆம் ஆண்டு பின்பற்றினர். அதன் பிறகு 1914ஆம் ஆண்டு வரை உலகின் பல நாடுகள் பொன் திட்டத்தைப் பின்பற்றின. 19ஆம் நூற்றாண்டில் உலக நாடுகள் பலவற்றிலும் போரும் புரட்சியுமே மலிந்திருந்தன. ஐரோப்பிய நாடுகளில் சில காகிதப் பணச் செலாவணியைக் கொண்டிருந்தபோது, தூரக் கிழக்கு நாடுகள் வெள்ளித் திட்டத்தைப் பின்பற்றி வந்தன. இவ்வாறு பலவகைப் பணத் திட்டங்கள் செயல்பட்டமையால் பன்னாட்டு வாணிகம் பாதிக்கப்பட்டது. அப் பணத்திட்டங்களின் குறைபாடுகளைக் களையவே பொன்திட்டம் தோற்றம் பெற்றது.

ஜெர்மனி, ரஷ்யா, ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து, நார்வே, பிரான்ஸ் ஆகிய பல ஐரோப்பிய நாடுகள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் பொன்திட்டத்தை அமுலில்கொண்டு வந்தன. அமெரிக்க ஐக்கிய நாடு 1900ஆம் ஆண்டில் பொன் திட்டத்தைத் தொடங்கியது. 1917ஆம் ஆண்டில் கடைசியாகப் பொன்திட்டத்தைக் கைவிட்ட நாடு அமெரிக்காவே. முதல் உலகப்போர்க் காலத்திலேயே பல நாடுகள் இத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தன.

**பணிகள்**

பொன்திட்டம் இருவிதமான முக்கியப் பணிகளைச் செய்கிறது. **முதலாவதாக,** ஒரு நாட்டுப் பணத்தின் உள் மதிப்பைப் பொன் திட்டம் நிலைநிறுத்துகிறது. **இரண்டாவதாக,** ஒரு நாட்டுப் பணத்திற்கு அயல்நாடுகளில் உள்ள புறமதிப்பையும்

பொன்திட்டம் நிலைப்படுத்துகிறது. இவற்றின் அடிப்படையில் பொன் திட்டத்தை 'உள்நாட்டுப் பொன் திட்டம்' (Domestic gold standard), 'பன்னாட்டுப் பொன்திட்டம்' (International gold standard) என்னும் இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**தன்மைகள்**

பொன்திட்டத்தின் முக்கிய இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. பொன் திட்டத்தின்கீழ் பொன் உலோகம் சட்டமுறைப் பணமாக அமைகிறது.

2. அரசு அல்லது அரசின் மத்திய வங்கி பொன்னை வாங்கவும் விற்கவும் தயாராக இருக்கவேண்டும். அதாவது, சட்ட முறைப் பணத்தைப் பொன்னாக மாற்றவும், பொன்னைப் பணமாக மாற்றவும் எவ்விதத் தடையும் இருக்கக்கூடாது.

3. பொன் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு நாட்டிலிருந்து தங்கத்தை ஏற்றுமதி செய்யவும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் எவ்விதத் தடைகளும் அமையக்கூடாது.

4. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின்மீது சுங்க வரிகளை விதிக்கக்கூடாது. அரசு பொருளாதார நடவடிக்கைகளில் இயன்றவரை தலையிடாமைக் கொள்கையைப் பின்பற்றவேண்டும்.

5. நாட்டிற்குள் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு தங்கத்தின் எடையில் நிர்ணயிக்கப்படவேண்டும்.

6. பொன் திட்டத்தில் தூய்மையானதும், நிலையான எடையைக் கொண்டதுமான தங்க நாணயங்கள் புழக்கத்தில் அமையும். காகிதப் பணமும், குறைந்த மதிப்புடைய அடையாள நாணயங்களும் பொன் மதிப்பைப் பெற்றவை. அவற்றைப் பொன்னாக மாற்ற இயலும்.

**பொன் திட்டத்தின் வகைகள்**

உலகின் வெவ்வேறு நாடுகளிலும் மூன்று வகையான பொன் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டுள்ளன. அவையாவன :

(i) பொன் நாணயத் திட்டம்;

(ii) பொன் கட்டித் திட்டம்;

(iii) பொன் மாற்றுத் திட்டம்.

**(i) பொன் நாணயத் திட்டம்** (Gold currency standard) : இது 1914ஆம் ஆண்டுவரை செயல்பட்ட திட்டமாகும். இத் திட்டத்தில் தூய பொன் நாணயங்களும், பொன்னை மாற்றத் தக்க மதிப்புடைய காகிதப் பணமும் புழக்கத்தில் இருந்தன. பொருள்களின் தராதர மதிப்பை அளவிடவும், பொருளாதார நடவடிக்கைகள் செயல்படவும் பொன் உதவியது. பொன்னும் பணமும் எந்த அளவில் வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளப் பட்டன. பொன்னின் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் தடை யேதும் அமையவில்லை. பண வெளியீடு பொன்னின் இருப்பிற்கு ஏற்ப அமைந்தது. எனவே, இதை 'முழுமையான பொன் திட்டம்' என்றும் குறிப்பிடலாம். காகிதப் பணத்தோடு நிக்கல், செம்பு, வெள்ளி போன்ற மதிப்புக் குறைந்த உலோகங்களால் ஆன நாணயங்களும் புழக்கத்தில் இருக்கலாம். ஆனால், அவற்றை எப்போது தேவையானாலும் பொன்னை மாற்றிக் கொள்ளலாம்.

இத் திட்டத்தில் பணத்தின் மதிப்பு அதிகளவு மாறுவதில்லை. பணத்தின் அளவை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் பெருக்கிக் கொள்ள முடியாத நிலை இதில் உள்ளது. இதனால், பணவீக்க நிலை தவிர்க்கப்படுகிறது. தங்கத்தை இருப்பாக வைத்துக் கொண்டு, அதன் மதிப்பிற்குச் சமமான காகிதப் பணத்தை மட்டுமே வெளியிடலாம். தங்கத்தின் ஏற்றுமதி-இறக்குமதி அளவுகளுக்கேற்ப பணத்தின் அளவு மாறும். 1914ஆம் ஆண்டில் உலகப் போர் மூண்டதும், போரில் ஈடுபட்டிருந்த நாடுகள் பொன் நாணயத் திட்டத்தின்கீழ்த் தேவையான போர் நிதியைப் பெற முடியவில்லை. ஆகவே, இங்கிலாந்தும் அதைத் தொடர்ந்து மற்ற சில நாடுகளும் இத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன.

**(ii) பொன் கட்டித் திட்டம்** (Gold bullion standard) : தங்கத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இத் திட்டத்தைப் பின்பற்றினர். இதன்படி வெளிநாட்டு வாணிகத் தில் ஈடுபடுவதற்கு மட்டுமே தங்கம் பயன்படுத்தப்பட்டது. உள் நாட்டுப் புழக்கத்தில் தங்க நாணயங்களுக்குப் பதிலாக வேறு உலோகங்களால் ஆன அடையாள நாணயங்களும் காகிதப் பணமும் அமைந்திருந்தன. கட்டணமின்றி நாணயம் அச்சுப் பொறித்துக் கொடுக்கும் முறை கைவிடப்பட்டது. ஒரு குறிப் பிட்ட பெருந்தொகைக்கு மேற்பட்ட அடையாள நாணயங்களை யும் காகிதப் பணத்தையும் மட்டுமே தங்கக் கட்டியாக மாற்ற முடிந்தது. புழக்கத்தில் இருந்த பணத்தின் மதிப்புத் தங்கத்தின்

அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. தங்கத்தின் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் கட்டுப்பாடுகள் இல்லை. உள்நாட்டுப் பணப் புழக்கத்திற்குத் தங்கம் பயன்படுத்தப்படவில்லை. இரு உலகப் போர்களுக்கு இடையே உலக நாடுகள் பல இத் திட்டத்தைப் பின்பற்றின. நம் நாட்டில் 1927 முதல் 1931ஆம் ஆண்டு வரை இத் திட்டம் அமலில் இருந்தது.

**(iii) பொன் மாற்றுத் திட்டம்** (Gold exchange standard): இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பிறகு, பல நாடுகளிலும் தங்கத் தட்டுப்பாடு தோன்றியது. தங்கத்தின் இருப்பை அமெரிக்கா மட்டுமே அதிக அளவில் கொண்டிருந்தது. எனவே, குறைவான அளவு தங்கத்தைப் பயன்படுத்தி, பொன் திட்டத்தின் நன்மைகளைப் பெற இத் திட்டம் கைக்கொள்ளப்பட்டது. இதன் படி வெளிநாட்டுச் செலுத்துகைக்கு மட்டுமே தங்கம் பயன் படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் புழக்கத்தில் இருக்கும் பணத்தைத் தங்கமாக மாற்ற இயலாது. ஆனால், தங்கமாக மாற்ற விரும்புபவர்கள் அவர்களது பணத்தை வேறொரு நாட்டுப் பணத்திற்கு மாற்றிப் பிறகு தங்கத்தைப் பெறவேண்டும். இத் திட்டத்தைப் பின்பற்றிய நாடுகளின் இடையே பணமாற்று விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மிகக் குறைந்தளவு தங்கத்தை இருப்பாகக் கொண்ட நாடுகளும்கூட இம் முறையைப் பின்பற்ற முடிந்தது. நம் நாட்டில் இத் திட்டம் 1926ஆம் ஆண்டில் கைவிடப்பட்டு பொன் கட்டித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலில் இத் திட்டம் 1877ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டில் துவங்கப்பெற்று வளர்ந்தது. பல நாடுகளும் 1929ஆம் ஆண்டு இத் திட்டத்தைக் கைவிட்டன.

**பொன் திட்டத்தின் விதிகள்** (Rules of the Gold Standard)

பொன் திட்டம் சரிவரச் செயல்பட வேண்டுமானால் பின் வரும் சில முக்கிய விதிகள் அனுசரிக்கப்படவேண்டும்:

1. உலகின் பல நாடுகள் இத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்; அவைகளுடைய தங்கத்தின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் எந்தத் தடையையும் விதிக்கக்கூடாது.

2. இந் நாடுகளில் தங்கத்தின் இருப்பு அதிகமாக இருந்தால்தான் பொன்திட்டம் வெற்றிபெறும்.

3. புழக்கப் பணத்தின் அளவை நாட்டிலுள்ள தங்க இருப்பின் அளவுக்கு ஏற்ப மாற்றவேண்டும்.

4. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் நாடுகளின் கூட்டான ஒத்துழைப்பும் சம்மதமும் தேவைப்படுகின்றன.

5. பண்டங்களின் ஏற்றுமதி – இறக்குமதி ஆகியவற்றில் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது.

6. தங்கத்தின் ஏற்றுமதி – இறக்குமதி அளவுகளுக்கேற்ப பொருள்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் அமையவேண்டும்.

**பொன் திட்டம் முறிந்தமைக்கான காரணங்கள்**

பொன்திட்டத்தில் இருந்த பல குறைபாடுகளால், 1936ஆம் ஆண்டோடு அது முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. உலகின் எல்லா நாடுகளிலும் ஏற்பட்ட விரைவான பொருளாதார மாற்றங்களும் இதற்குக் காரணமாகும்.

**1. தங்கத்தின் பகிர்வில் ஏற்றத் தாழ்வு:** முதல் உலகப் போர்க் காலத்தில் இங்கிலாந்து அதிகளவு தங்கத்தின் இருப்பை இழந்தது. அதன் பிறகு அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் தங்கத்தின் அளவு கூடியது. உலகத் தங்க இருப்பில் சுமார் மூன்றில் இரு பங்கை அமெரிக்கா மட்டுமே கொண்டிருந்தது. இதனால், தங்கத்தைப் பற்றுக்குறையாகப் பெற்றிருந்த நாடுகள் பொன் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது.

**2. பொன் திட்ட விதிகள் சரிவர அனுசரிக்கப்படாமை:** முதல் உலகப் போருக்குப் பிறகு பல நாடுகள் பொன் இருப்பிற்கேற்ப காகிதப் பணத்தை வெளியிடவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள் போர்க்காலக் கடன்களைத் திருப்பித் தர முடியாத அளவுக்குத் தங்கத்தின் பற்றுக்குறை இருந்தது. பொருள்களின் விலை ஏற்ற – இறக்கங்கள் தங்கத்தின் இருப்பிற்குத் தக்கவாறு அமையவில்லை. பொன் திட்டத்தின் பல விதிமுறைகள் புறக்கணிக்கப்பட்டமையால், அத் திட்டம் தொடர்ந்து நீடிக்கவில்லை.

**3. தடையிலா வாணிகம் கைவிடப்பட்டமை:** போரினால் வெளிநாட்டு வாணிகத்தில் பல கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. மிக அதிக அளவில் பொன்னை இருப்பாகக் கொண்டிருந்த அமெரிக்காவிலும்கூட இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. போரினால் சீர்குலைந்த பொருளாதாரத்தைப் புனரமைக்க, ஜெர்மனி உயரளவில் இறக்குமதி வரிகளை விதித்து இறக்குமதிப் பொருள்களைத் தடை செய்தது. முதல் உலகப்போர் தொடங்கு

வதற்கு முன்பு வரைதான் பல நாடுகளும் தடையிலா வாணிகத் தைக் கைக்கொண்டிருந்தன.

**4. பண மாற்று வீதத்தில் வேறுபாடு:** சில நாடுகளின் பணம் உயர்வாக மதிப்பிடப்பட்டபோது, மற்ற நாடுகளின் பணம் குறைவாக மதிப்பிடப்பட்டது. செலாவணியின் பொன் மதிப்பை நிர்ணயிப்பதில் தவறுகள் நேர்ந்தமையால் பல நாடு களில் பணத்தின் உண்மை மதிப்பு, சந்தை மதிப்பினின்றும் வேறுபட்டதாக இருந்தது.

**5. பன்னாட்டு நிதியமைப்பு இல்லாமை :** முதல் உலகப் போருக்கு முன்பு இலண்டன் பல நாடுகளின் மையப் பணச் சந்தையாகச் செயல்பட்டது. அதன்பிறகு இந்நிலை மாறியது. பன்னாட்டளவில் பணங்களை மாற்றிக்கொள்வதற்கான நிதி யமைப்பு இல்லாமையால் கொடுக்கல் – வாங்கல் சிக்கல்கள் தோன் றின. பொன் மாற்றுத் திட்டத்தில் அமைந்திருந்த நாடுகளுக்கு இடையே இங்கிலாந்து இணைப்பை ஏற்படுத்தியது. பல நாடுகள் லண்டனில் காப்பு நிதியை வைத்திருந்தன. அந்த நாடுகள் ஒரே நேரத்தில் காப்பு நிதியை எடுக்க நேரிட்டமையால், இங்கிலாந் தின் நிலை பாதிக்கப்பட்டது.

**6. ஆட்சியாளர்கள் விலை நிலைப் பேருக்கத்தைப் பெற முயன்றமை:** பல நாடுகளின் அரசுகள், பன்னாட்டு மாற்று வீதத்தை நிலைப்படுத்துவதைவிட உள்நாட்டில் பொருள்களின் விலைகளை நிலைப்படுத்துவதே முக்கியமானதாகக் கருதின. இதன் காரணமாகப் பன்னாட்டளவில் செலாவணி மாற்று வீதத்தில் நிலை யற்ற போக்குத் தோன்றிப் பொன்திட்டம் கைவிடப்பட்டது.

**7. உலகப் பொருளாதாரப் பெரு மந்தம் :** உலக நாடுகள் பலவும் 1929 முதல் 1933 வரை நிலவிய பொருளாதார மந்த நிலையினால் பெரிதும் பாதிக்கப்பட்டன. உற்பத்தி குறைந்தது; வேலையின்மை தோன்றியது; வருமானம், சேமிப்பு, முதலீடு ஆகியவை மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தன. இச் சீர்குலைவு களைத் தவிர்க்கப் பொன் திட்டத்தைக் கைவிடுவதே சிறந்த வழியாக இருந்தது.

**8. போர்க்கடன் :** ஜெர்மனி போன்ற போரினால் பாதிக் கப்பட்ட நாடுகள், போர்க்கடனைத் தீர்க்க அவற்றிடமிருந்த தங்கத்தின் இருப்பில் பெரும்பகுதியைச் செலவழித்துவிட்டன. மிகக் குறைந்தளவு தங்கத்தைக் கொண்டு அவற்றால் பொன் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியவில்லை.

**9. விலை மாற்றங்கள் :** பொன் திட்டத்தைப் பின்பற்றிய நாடுகளில் பொன்னின் ஏற்றுமதி - இறக்குமதி அளவுகளால் உள் நாட்டுப் பண்டங்களின் விலைகளில் பெரிய மாற்றங்கள் தோன்ற வில்லை. பொன்திட்டம் சிறப்பாகச் செயல்படாத நிலையையே இந் நிலை உணர்த்தியது.

**10. பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் :** பொருளா தார மந்த நிலையைத் தவிர்ப்பதும், விலைச்சரிவைக் குறைப்பதும், வேலைவாய்ப்பைப் பெருக்குவதும் அரசுகளின் நோக்கங்களாக அமைந்தன. எனவே, பல நாடுகள் பொன் இருப்பின் அளவு குறைந்தாலும், காகிதப் பண வெளியீட்டின் அளவைக் குறைக்க முன்வரவில்லை.

இவ்வாறு பொன்திட்டத்தின் பல விதிகள் மீறப்பட்டமையே அதன் முறிவுக்குக் காரணமாயிற்று.

## பொன் திட்டத்தின் சிறப்புகள்

பொன்திட்டத்தில் பின்வரும் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு கள் அமைந்துள்ளன:

1. மதிப்புடைய உலோகமாகிய பொன்னைப் பல நாடுகளும் பணமாக ஏற்றுக்கொள்ள முன்வருகின்றன.

2. பொன்திட்டம் செயல்படும் நாட்டில் மக்களும் பணத் தின் மீது நம்பிக்கைக் கொள்கிறார்கள். புழக்கத்தில் இருக்கும் அடையாளப் பணத்திற்கு ஈடாகத் தங்கம் இருப்பாக வைக்கப் படுவதே இதற்குக் காரணமாகும்.

3. இது தானே இயங்கும் திட்டமாக இருக்கிறது. எளிமை யான திட்டமாக இருப்பதால் இதைச் சாதாரண மனிதர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

4. பொன் திட்டத்தால் பணவீக்கம் தோன்றுவதில்லை; பொருள்களின் விலைகள் திடீரெனப் பெருமளவுக்கு உயருவதில்லை.

5. நாடுகளுக்கிடையே பொருள்களை விற்பதும் வாங்கு வதும் எளிது.

6. பொன் திட்டத்தைக் கைக்கொண்டுள்ள நாடுகள் அவற்றின் விருப்பத்திற்கேற்ற பணக்கொள்கையைப் பின்பற்ற லாம்.

7. நாடுகளிடையே செலாவணி மாற்றுவீதம் நிலையான தாக இருப்பதால் வெளிநாட்டு வாணிகம் வளர்கிறது.

8. பொன் திட்டம் வெளிநாட்டு வாணிகத்தில் சம நிலையை ஏற்படுத்துகிறது. ஒரு நாடு தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்குப் பாதக வாணிகத்தையோ சாதக வாணிகத்தையோ கொண்டிருக்கமுடியாது. வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் தோன்றும் விலைமாற்றங்கள் 'சமநிலை' நிலையை ஏற் படுத்துகின்றன.

## பொன் திட்டத்தின் குறைபாடுகள்

19ஆம் நூற்றாண்டிற்கு ஓரளவு ஏற்புடையதாக இருந்த பொன் திட்டம், தற்பொழுதுள்ள சூழ்நிலைகளுக்குப் பொருத்த மற்றதாகும்.

1. இத் திட்டத்தின் விதிமுறைகளை அனைத்து நாடுகளும் பின்பற்றவிட்டால், இதனால் கிடைக்கும் நன்மைகளைப் பெற இயலாது.

2. பொன் ஏற்றுமதியால் ஒரு நாட்டில் பணவாட்டம் (deflation) ஏற்பட்டுப் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப் படும். பொன் அளவு சாதக வாணிகத்தால் பெருகும்போது பணவீக்கம் ஏற்பட்டுப் பொருள்களின் விலைகள் உயருகின்றன. இதனால், மக்களுடைய நலன் பாதிக்கப்படுகிறது.

3. பொன் திட்டத்தால் பணத்தின் அயல்நாட்டு மதிப்புக் காக்கப்படும்போது உள்நாட்டு மதிப்புப் பெரிதும் சீர்குலைகிறது.

4. ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பு, வளர்ச்சி, சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்ப மாற்றிக்கொள்ளத்தக்க இணக்க மான நெகிழ்வுத் தன்மையைப் பொன் திட்டம் கொண்டிருக்க வில்லை. முதல் உலகப்போர் வரை பின்பற்றப்பட்ட பொன் திட்டம், அதற்குப் பிறகு செயல்படுத்த முடியாததாக மாறி விட்டது.

5. பொன்திட்டத்தைக் கையாளுகின்ற நாடுகளிடையே பணவீக்கமும் பணவாட்டமும் எளிதில் பரவுகின்றன. அந் நாடுகளில் பொன் இருப்பின் அடிப்படையில் அடையாளப் பணம் வெளியிடப்படும். ஏற்றுமதி - இறக்குமதியால் பொன்னின் இருப்பளவு மாறிக்கொண்டே இருக்குமாகையால், அடையாளப் பண வெளியீட்டின் அளவையும் மாற்றவேண்டியது அவசிய மாகிறது.

6. பொன்னை அதிகளவுக்குப் பெறுகின்ற நாடு புழக்கத்தி லுள்ள பணத்தின் அளவைப் பெருக்கவேண்டுமென்பது அவசிய மில்லை. ஆனால், பாதக வாணிகத்தால் பொன்னை இழக்கும் நாடு அடையாளப் பண வெளியீட்டைச் சுருக்கவேண்டும். அவ்வாறு செய்யும்போது பல பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்று கின்றன.

7. பொன் திட்டத்தைப் பின்பற்றும் ஒரு நாடு தன் இச்சைப்படிச் சுதந்திரமாக உள்நாட்டுப் பணக் கொள்கையைத் தீர்மானிக்கமுடியாது. பொன்னின் அளவுக்குத் தக்கவாறு புழங்கும் பணத்தின் அளவு நிர்ணயிக்கப்படுவதால், திட்டக் காலங்களிலும் போர்க் காலங்களிலும் தேவைக்கேற்ப பணத்தின் அளவைப் பெருக்கஇயலாது.

8. அதிக அளவுப் பொன்னை உற்பத்தி செய்கின்ற நாடு களும், பெருமளவுப் பொன்னை இருப்பாக வைத்துள்ள நாடு களும் மட்டுமே பொன் திட்டத்தைக் கைக்கொள்வதால் நன்மை களை அடையமுடியும்.

9. காகிதப் பண முறையால் கிடைக்கப்பெறும் நல்மைகள் கணக்கற்றவையாகும். குறைந்த செலவில் இம் முறையை நிர் வகிக்க இயலும். ஆனால், பொன் திட்டம் மிகுந்த செலவு பிடிக் கும் தேவையற்ற திட்டமாகும். மேலும், பொன் திட்டத்தில் பெருகும் வாணிகத் தேவைகளுக்கேற்பப் புழங்கும் பணத்தின் அளவைக் கூட்டமுடியாது.

10. பொன் திட்டத்தின்மூலம் ஒரு நாட்டில் உருவாகும் வாணிகச் சுழல் எளிதில் பிற நாடுகளுக்கும் பரவுகிறது.

பொன் திட்டத்தில் சில நன்மைகள் இருந்தாலும் குறை பாடுகளே மிகுதியாக உள்ளன. இத் திட்டம் இன்றையச் சூழ் நிலைகளுக்குத் தேவையற்றதும் பொருத்தமற்றதும் ஆகும்.

# 22. பணத்தின் மதிப்பு
## (Value of Money)

### I. விளக்கம்

பொருள்களின் தராதர மதிப்பை அளவிட உதவும் ஒரு கருவியாகப் பணம் அமைகிறது. விலையின்மூலம் பொருள்களின் மதிப்பை அறிய பணம் உதவுகிறது. பொருள்களின் மதிப்பை அறிய உதவும் பணத்தின் மதிப்பு, அதன் 'வாங்கும் திறனுக்கு' (purchasing power) ஏற்ப இருக்கிறது. பொருள்களின் விலை குறையும்போது பணத்தின் மதிப்புக் கூடும்; பொருள்களின் விலை அதிகரிக்கும்போது பணத்தின் மதிப்புக் குறையும்.

பணமானது பயன் மதிப்பைக் கொண்டிருக்கவில்லை; எனினும் அது 'பரிவர்த்தனை மதிப்பைக்' (exchange value) கொண்டுள்ளது. பணத்தைக்கொண்டு நம்மால் பல்வேறு பண்டங்களையும் பணிகளையும் பெற முடிகிறது. பொதுவிலை மட்டத்திற்கும் பணத்தின் மதிப்பிற்கும் தலைகீழ்த் தொடர்பு அமைந்துள்ளது. பொருள்களின் விலைகள் மாறிக்கொண்டிருப்பதால் பணத்தின் மதிப்பும் மாறிக்கொண்டே இருக்கிறது. பணத்தின் மதிப்புக் குறையும்போது ஏழைகளும், நிலையான குறைந்த வருமானத்தைப் பெறும் நடுத்தர வகுப்பினரும் பாதிக்கப்படுகின்றனர்.

### II. குறியீட்டு எண்கள் (Index Numbers)

குறியீட்டு எண்களின்மூலம் வெவ்வேறு காலங்களில் பணத்தின் வாங்கும் திறனை அளவிடலாம். பல்வேறு பண்டங்களை நாம் நுகருகிறோம். அவற்றின் விலைமாற்றங்கள் யாவும் ஒரே விகிதத்தில் அமைவதில்லை. உணவுப் பண்டங்களின் விலை 70 சதவீதம் உயரலாம்; அழகுச் சாதனப் பொருள்களின் விலை 50

சதவீதம் கூடலாம்; மற்ற சில நுகர்பொருள்களின் விலை 20 சதவீதம் மட்டுமே அதிகரிக்கலாம். வேறு சில பொருள்களின் விலை 30 சதவீதம் குறையவும்கூடும்.

சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு பிரிவு மக்கள் ஒரே வகையான பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதில்லை. குளிர் சாதனப்பெட்டியின் விலை 100 சதவீதம் அதிகரித்தால், அதன் மூலம் ஒரு சாதாரணத் தொழிலாளி பாதிக்கப்படமாட்டார். செய்திப் பத்திரிகை, உப்பு, தீப்பெட்டி ஆகியவற்றின் விலைகள் 3 மடங்கு அதிகரித்தாலும், அதனால், செல்வந்தர்கள் பாதிக்கப் படுவதில்லை. ஒவ்வொரு பிரிவு மக்களும் குறிப்பிட்டவகைப் பொருள்களின் விலை மாற்றங்களில் அக்கறை கொண்டுள்ளனர். அதிக வருமானம்பெறும் செல்வந்தர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், கூலியாள்கள், வாணிகர்கள், நடுத்தர வருமானம் பெறுபவர்கள் போன்றோர் பொருள்களின் விலை உயர்வால் வெவ்வேறு வகைகளில் பாதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பிரிவினரும் தாம் நுகர்கின்ற பொருள்களில் பணத்தின் வாங்கும் திறன் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதை அறிய விரும்புகின்றனர். எனவே, பல்வேறு பொருள்களுக்கும் வெவ்வேறு குறியீட்டு எண்களை அமைக்கவேண்டியது அவசியமாகிறது. தேவைக்கேற்ப 'வாழ்க்கைச் செல்வுக் குறியீட்டு எண்' (Cost of Living Index), 'சில்லரை விலைக் குறியீட்டு எண்' (Retail Price Index), 'மொத்த விலைக் குறியீட்டு எண்' (Wholesale Price Index), 'பன்னாட்டு விலைக் குறியீட்டு எண்' (International Price Index) போன்ற பலவகையான குறியீட்டு எண்கள் அமைக்கப்படுகின்றன.

## குறியீட்டு எண்களை அமைக்கும் முறை

குறியீட்டு எண்கள் என்னும் புள்ளியியல் முறையின்மூலம் இருவேறு காலங்களில் பணத்தின் வாங்கும் திறனில் தோன்றும் மாற்றங்கள் கணிக்கப்படுகின்றன. குறியீட்டு எண்களை அமைக்க **முதலில்** 'அடிப்படை ஆண்டைத்' (base year) தெரிந்தெடுக்க வேண்டும். அந்த ஆண்டு சாதாரண இயல்புகளைக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளைப் பெற்றதாக இருத்தல் அவசியம். போர் நிகழ்ந்த ஆண்டையும், விலைகளில் அதிக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட ஆண்டையும் அடிப்படை ஆண்டாகக் கொள்ளுதல் கூடாது.

**இரண்டாவதாக,** எந்த நோக்கத்திற்காகக் குறியீட்டு எண் அமைக்கப்படுகிறதோ, அதற்கு ஏற்றதும் பொருத்தமானதுமான

பொருள்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணைத் தயாரிக்கும்போது, அட்டவணையில் அன்றாடம் சாதாரண மக்களால் பயன்படுத்தப்படும் பொருள்களைச் சேர்த்தல் தேவையானதாகும்.

**இறுதியாக,** தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்களின் அடிப்படை ஆண்டு விலைகளும், நடப்பு ஆண்டு விலைகளும் சேகரிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு விலை விவரங்களை அடிப்படை ஆண்டில் அமைந்திருந்த விலைகளின் சதவீதமாகக் கூறுதல்வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பொருளின் விலை அடிப்படை ஆண்டில் 10 ரூபாயாகவும், நடப்பு ஆண்டில் 25 ரூபாயாகவும் இருந்தால், அவற்றை முறையே 100 எண்களாகவும் 250 எண்களாகவும் குறிக்கவேண்டும்.

பின்வரும் அட்டவணை வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணை உணர்த்துகிறது. இவ்வகைக் குறியீட்டு எண்ணை அமைக்கும்போது, சாதாரண மக்களின் செலவினங்களாகிய உணவுப் பொருள்கள், வீட்டு வாடகை, துணி, போக்குவரத்து, பொழுதுபோக்கு போன்றவை கருதப்படவேண்டும். திட்டம் தொடங்கிய 1951ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்**

| வரிசை எண் | செலவினம் | 1951-ல் விலை (ரூபாயில்) | சதவீதம் | 1975-ல் விலை (ரூபாயில்) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. | உணவுப்பொருள்கள் .. | 100 | 100 | 400 | 400 |
| 2. | வீட்டுவாடகை .. | 50 | 100 | 100 | 200 |
| 3. | எரிபொருள் .. | 20 | 100 | 70 | 350 |
| 4. | துணி .. | 20 | 100 | 80 | 400 |
| 5. | போக்குவரத்து .. | 10 | 100 | 25 | 250 |
| 6. | பொழுதுபோக்கு .. | 15 | 100 | 30 | 200 |
| | | | 600 | | 1,800 |
| | சராசரி | $\frac{600}{6}$ = | 100 | $\frac{1800}{6}$ = | 300 |

அட்டவணையிலிருந்து மக்களின் வாழ்க்கைச் செலவு கடந்த 25 ஆண்டுகளில் 200 சதவீதம் உயர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். செலவினங்களின் விலை உயர்வு 200 சதவீதமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். பணத்தின் வாங்கும் திறனும் இந்த அளவுக்குக் குறைந்துள்ளது. குறியீட்டு எண்ணை மேலும் சிறப்பாக அமைக்க, செலவினங்களுக்குத் தராதர முக்கியத்துவம் தரவேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் குறியீட்டு எண் 'நிறையிட்ட குறியீட்டு எண்' (weighted index number) என அழைக்கப்படுகிறது. இம் முறையில் முக்கியச் செலவினமாகிய உணவுப் பொருள்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. செலவினங்களின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப நிறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. உதாரணமாக, உணவுப் பொருள்களுக்கு 10 நிறையும் (weight), வீட்டு வாடகைக்கு 7 நிறையும், எரி பொருளுக்கு 5 நிறையும், துணிப் பொருள்களுக்கு 3 நிறையும், போக்குவரத்திற்கு 2 நிறையும், பொழுதுபோக்கிற்கு 1 நிறையும் நிர்ணயித்துக்கொள்ளலாம்.

சில பொருள்களும் பணிகளும் மிக முக்கியமானவையாகவும் வேறு சில முக்கியத் தன்மை குறைந்ததாகவும் இருப்பதால்தான் நிறையிட்ட குறியீட்டு எண் அமைக்கப்படுகிறது. இதன்மூலம் பெறப்படும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரம், சாதாரண முறையின்மூலம் பெறப்படும் புள்ளி விவரத்தினின்றும் வேறுபடும்.

## குறியீட்டு எண்களைத் தயாரிப்பதில் உள்ள இடர்ப்பாடுகள்

1. அடிப்படை ஆண்டைத் தீர்மானிப்பது கடினமாகிறது.

2. குறியீட்டு எண்களைத் தயாரிக்கும்போது எவ்வகைப் பொருள்களை அல்லது செலவினங்களைச் சேர்த்துக்கொள்வது என்பதைத் தீர்மானிப்பது எளிதல்ல.

3. பொருள்கள் அல்லது செலவினங்களின் தரமும் தன்மையும் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே இருக்கின்றன.

4. நிறையிட்ட குறியீட்டு எண்களில் செலவினங்களுக்கான நிறைகள் (எடைகள்) தோராயமாக நிர்ணயிக்கப்படுவதால், இம் முறையைச் சிறப்பானதாகக் கருத இயலாது.

5. குறியீட்டு எண்களைத் தயாரிக்க உதவும் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களின் விலைகள் பெரும்பாலும்

மொத்த விலைகளாவே இருக்கின்றன. வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணைக் கணக்கிடும்போது சில்லரை விலைகளைப் பயன்படுத்துவது நல்லது.

6. சில நிலைகளில் அடிப்படை ஆண்டில் பயன்படுத்தப்படாத சில பொருள்கள் நடப்பு ஆண்டில் பயன்படுத்தப்படக் கூடும். அப்போது குறியீட்டு எண்களை அமைப்பது கடினமாகிறது.

## குறியீட்டு எண்களால் விளையும் நன்மைகள்

புள்ளியியலின் உதவியால் கணக்கிடப்படும் குறியீட்டு எண்களால் சில பயன்கள் விளைகின்றன.

(1) மொத்தவிலைக் குறியீட்டு எண் நாட்டிற்குத் தேவையான பணத்தின் அளவைக் குறிப்பிடுகிறது. இதற்கேற்ப அரசு அதனுடைய பணக் கொள்கையையும், பண வெளியீட்டின் அளவையும் தீர்மானித்துக்கொள்ளலாம்.

(2) பன்னாட்டு விலைக் குறியீட்டு எண்களால் உலக நாடுகளின் பொருளாதார நிலைகளைப் புரிந்துகொள்ளலாம். ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகளைத் தீர்மானிக்கவும் இது உதவுகிறது.

(3) சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு பிரிவு மக்களின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்களின் அடிப்படையிலேயே கூலி, ஊதியம், பஞ்சப்படி போன்றவை உயர்த்தப்படுகின்றன. பல வங்கிகளில் ஊழியர்களுக்கான ஊதியம் இக் குறியீட்டு எண்கள் மாறுவதற்கேற்ப உயர்த்தப்பட்டு வருவதை உதாரணமாகக் கொள்ளலாம்.

(4) வருமான வரியினின்றும் விலக்கு அளிக்கப்படும் தொகையைத் தீர்மானிக்க விலைமட்டக் குறியீட்டு எண் மத்திய நிதி அமைச்சகத்தால் ஆராயப்படுகிறது.

(5) இருவேறு இடங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட்டு நோக்க வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்கள் பயன்படுகின்றன.

(6) ஒரு நாட்டில் பொருள்களின் தேவை, உற்பத்தி, நுகர்வு, பகிர்வு போன்றவற்றைக் கணக்கிட்டு, மக்களின் நலனுக்கு உகந்த வழிகளில் நடவடிக்கைகளை எடுக்கக் குறியீட்டு எண்கள் அரசுக்குப் பேருதவி புரிகின்றன.

# III. பண அளவுக் கோட்பாடு
## (Quantity Theory of Money)

புழக்கத்தில் இருக்கும் பணத்திற்கும் அதன் மதிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அமெரிக்கப் பொருளியலறிஞர் பேராசிரியர் இர்விங் ஃபிஷர், பணத்தின் மதிப்பு அதன் அளிப்பின் அளவைச் சார்ந்திருப்பதாகக் குறிப்பிட்டார். பணத்தின் மதிப்பை அளவிட உதவும் பல கோட்பாடுகளில், ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடே மிகவும் தொன்மையானது.

விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் பணத்தின் அளவுக்கேற்ப அமையுமென்பதைத் தொன்மைப் பொருளாதார நிபுணர்களும் குறிப்பிட்டுள்ளனர். எனினும், பணமதிப்பைக் கண்டறியும் கோட்பாட்டிலைத் திருத்திய வகையில் முதன்முதலாகத் தந்தவர் ஃபிஷர் ஆவார். அதன் பிறகு அக் கோட்பாடு பல பொருளியலறிஞர்களால் மேலும் வளர்க்கப்பட்டுள்ளது.

### பணத்தின் மதிப்பு (Value of Money)

பொருள்களின் மதிப்பை அவற்றிற்கான தேவையும் அளிப்பும் நிர்ணயிப்பதுபோல, பணத்தின் மதிப்பை அதன் தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன. பொருளுக்கும் பணத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. பண மதிப்பை அறிய எல்லாப் பொருள்களின் விலை மட்டத்தையும் அறிதல் அவசியம். பணத்தின் அளிப்பு 50 சதவீதம் கூடினால், அதன் மதிப்பு 50 சதவீதம் குறைகிறது. ஆனால், ஒரு பண்டத்தின் அளிப்பானது 20 சதவீதம் அதிகரிக்கும்போது அதன் விலை எந்தச் சதவீத அளவுக்குக் குறையும் என்பதை உறுதியாகக் கணிக்க இயலாது.

### பணத்தின் அளிப்பு (Supply of Money)

இது ஒரு நாட்டில் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவையே குறிக்கிறது. புழக்கத்தில் நாணயங்கள், காகிதப்பணம், வங்கிப்பணம் ஆகியவை அமைந்துள்ளன. பணத்தின் அளிப்பானது, அதன் அளவோடு சுழலும் வேகத்தைச் சார்ந்தும் அமையும். ஒரு நூறுரூபாய் நோட்டானது பொருள்களை வாங்குவதற்குப் பத்து முறை பயன்படுத்தப்பட்டால், அதன்மூலம் ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பேரம் நடைபெறுகிறது என்பதை உணர வேண்டும். பணத்தின் மொத்த அளிப்பை அறியப் பண அளவை குறிப்பிட்ட காலத்தில் அமைந்திருக்கும் பணத்தின் சுழலும் வேகத்தால் பெருக்கவேண்டும்.

**பணத்திற்கான தேவை** (Demand for Money)

பண்டங்களை வாங்கும் திறனைக் கொண்டிருப்பதால், எல்லோரும் பணத்தின் தேவையைக் கொண்டுள்ளார்கள். பண்டங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் உதவக்கூடிய இடையீட்டுக் கருவியாகப் பணம் செயல்படுகிறது. பண்டங்களின் தேவையே பணத்தேவையைத் தோற்றுவிக்கிறது. பண்டங்கள் மற்றும் பணிகளுக்குக் கொடுப்பதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைக் குறிப்பிட்ட காலத்தில் அமைந்திருக்கும் 'வாணிக அளவி'லிருந்து' (volume of transaction) அறியலாம்.

**∴பிஷரின் மாற்றுச் சமன்பாடு** (Fisher's Equation of Exchange)

பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றம் பணமதிப்பில் தோற்றுவிக்கும் மாற்றத்தைப் ஃபிஷர் ஒரு மாற்றுச் சமன்பாட்டின் வாயிலாக விளக்குகிறார். பணத்தின் தேவை அல்லது அளிப்பில் தோன்றும் மாற்றம் பணமதிப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பொருள்களின் அளவு அதிகரித்துப் பண அளவு மாறுமல் இருந்தால், பணமதிப்பு உயரும். பொருள்களின் அளவு மாறுமல் பண அளவு கூடினால், பணமதிப்புக் குறையும். பண அளவு மாறுமல் பொருள்களின் அளவு குறைந்தால், பண மதிப்புக் குறையும்.

ஃபிஷரின் மாற்றுச் சமன்பாடு $P = \frac{MV}{T}$ என்றவாறு அமைகிறது. இச் சமன்பாட்டில் P பொருள்களின் சராசரி விலையையும், M புழக்கத்தில் இருக்கும் எல்லாவகைப் பணத்தின் மொத்த அளவையும், V பணத்தின் சுழலும் வேகத்தையும் T மொத்த வாணிக அளவையும் குறிக்கின்றன. (M = Quantity of Money. V = Velocity of circulation of Money, T = Volume of Trade, P = Price). இச் சமன்பாட்டை PT = MV என்ற வகையிலும் குறிப்பிடலாம். PT என்பது பணத்திற்கான தேவையையும், MV என்பது பணத்தின் அளிப்பையும் குறிக்கின்றன. ஃபிஷரின் சமன்பாடு பணத்திற்கான தேவையும், பணத்தின் அளிப்பும் சமமாக இருக்குமெனக் கருதுகிறது.

சராசரி விலை மட்டத்தை அறியவும் இச் சமன்பாடு உதவுகிறது. வாணிக அளவும், பணத்தின் சுழலும் வேகமும் மாறுதிருந்தால் பணத்தின் அளவை அதிகரிக்கும் விகிதத்திற்கேற்ப விலை உயரும். பண அளவை இரு மடங்காகப் பெருக்கினால், விலைகள் இரு மடங்கு கூடும்; பணமதிப்புப் பாதியாகக் குறையும்.

ஃபிஷரின் சமன்பாட்டில் பண அளிப்பு, காகிதப் பணத்தையும் நாணயங்களையும் மட்டுமே உள்ளடக்கியதாகும். ஆனால், இவ்

வகைப் பணம் செய்யக்கூடிய பணிகளைக் கடன் பணமாகிய (credit money) காசோலைகள் (cheques), உண்டியல்கள் (bills) போன்றவையும் செய்கின்றன. பொருள்களை வாங்கக் கடன் பணத்தையும் பயன்படுத்தலாம். எனவே, ஃபிஷரின் மாற்றுச் சமன்பாடு பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டது.

$$PT = MV + M^1V^1 \text{ அல்லது } P = \frac{MV + M^1V^1}{T}$$

$M^1$ என்பது கடன் பணத்தையும், $V^1$ என்பது கடன் பணத்தின் சுழற்சி வேகத்தையும் குறிக்கும். கடன் பணத்தை வங்கிப் பணம் எனவும் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட சமன்பாடுகளில் M என்ற பணத்தின் அளவே பணமதிப்பை நிர்ணயிப்பதில் முக்கியமானது என ஃபிஷர் கூறுகிறார். V,T, $M^1$,$V^1$ ஆகியவை குறுகியகாலத்தில் அதிக மாற்றம் அடைவதில்லை. விலை மாற்றத்திற்குப் பண அளவில் ஏற்படும் மாற்றமே முக்கியக் காரணமாக அமைகிறது என்பது ஃபிஷரின் கூற்று.

### ஃபிஷரின் கோட்பாட்டிலுள்ள குறைபாடுகள்

பண அளவுக் கோட்பாடுகளில் பழைமையானதாக இருப்பதாலும் பிறகாரணங்களாலும் ஃபிஷரின் கோட்பாட்டில் பின்வரும் குறைபாடுகள் உள்ளன.

**1. புதிய கருத்து அல்ல :** பணத்தின் மதிப்பு அதன் அளவுக்கேற்ப அமையுமென்பதை ஃபிஷர் காலத்திற்கு முந்திய பொருளியலாளர்களே குறிப்பிட்டுள்ளனர். புதிய கோட்பாடு எதையும் ஃபிஷர் தரவில்லை. யாவரும் அறிந்த ஓர் அடிப்படை உண்மையையே அவர் கோட்பாடாகத் தந்திருக்கிறார்.

**2. பொருத்த மில்லாத வரையறைகள் :** ஃபிஷரின் கோட்பாடு V,M,$V^1$,T ஆகியவை குறுகிய காலத்தில் மாறுவதில்லை என்னும் எடுகோளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அது பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றம் பணத்தின் சுழலும் வேகத்தையும், வாணிக அளவையும் பாதிக்காது என்று குறிப்பிடுகிறது. இவ்வித அனுமானங்கள் நடைமுறைக்குப் பொருத்தமற்றவையாக உள்ளன.

**3. சரிவிகித மாற்றம் :** பணத்தின் அளவில் ஏற்படும் விகிதாச்சார மாற்றத்திற்கேற்ப பண மதிப்பில் ஏற்படும் விகி

தாச்சார மாற்றம் அமையுமென்று ஃபிஷரின் கோட்பாடு குறிப் பிடுகிறது. இது உண்மைக்குப் புறம்பானது. அளிப்பில் இருக்கும் பணம் முழுவதும் மக்களால் செலவிடப்படுமென்று கருதுவது தவறு.

**4. பண்டத்தின் சுழலும் வேகம்:** இன்றைய சூழ்நிலைகளில் போக்குவரத்துத் தகவல் தொடர்பு வசதிகள் பெருகியுள்ளமை யால், வாணிகம் வளர்ந்து பொருள்களின் சுழலும் வேகம் அதி கரித்துள்ளது. ஃபிஷர் பணத்தின் சுழலும் வேகத்தை மட்டுமே தன்னுடைய சமன்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

**5. பொருளாதார மந்த நிலை :** பணத்தின் அளிப்பைக் கூட்டினால் பொருள்களின் விலை உயருமென்ற ஃபிஷரின் கூற்று உண்மையானால், பொருளாதார மந்த நிலைக்கு எளிதில் நீர்வு காண முடியும். பொருளாதார மந்த நிலையில் விலைகள் வீழ்ச்சி யடைந்து எண்ணற்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஃபிஷரின் கோட்பாட்டின்படி, இந் நிலையைத் தவிர்க்க அதிக அளவில் பணத்தைப் பெருக்கலாம். பண அளிப்பைப் பெருக்கி மந்த நிலையை நீக்கலாம் என்ற கருத்துத் தவறானதாகும்.

**6. முழுமையான கோட்பாடு அல்ல :** பண அளவில் ஏற் படும் மாற்றத்தால் வட்டி வீதத்தில் மாறுதல் தோன்றுவதைப் பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் இக் கோட் பாடு குறிப்பிடவில்லை. பணத்தின் மதிப்போடு தொடர்பு கொண்ட பல காரணிகளையும் விளக்கமாக ஆராயாத காரணத்தி னால், இதை முழுமையான கோட்பாடாக ஏற்றுக்கொள்ள இயல வில்லை.

**7. விலைமாற்றம் குறித்தத் தவறான விளக்கம்:** விலைமாற்றம் ஏற்படுவதற்கான பிற காரணிகளை (வருமானம், செலவு, சேமிப்பு, முதலீடு) இக் கோட்பாடு கருதவில்லை. விலைமாற்றம் அல்லது பணமதிப்பு, பணத்தின் அளவுக்கேற்ப மட்டுமே அமையும் என்று குறிப்பிடுவது தவறானது.

**8. உற்பத்தி வசதிகளைப் பயன்படுத்துதல் :** உற்பத்தி வசதிகள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்திய பிறகுதான் பணத்தின் அளவு அதிகரிப்பதால் விலை உயருமென கெயின்ஸ் குறிப்பிடுகிறார். ஆக்கத்திற்கான வசதிகள் முழுமையாகப் பயன் படுத்தப்படாத நிலையில் பணத்தின் அளவு அதிகரித்தால் விலைகள் உயராமல் உற்பத்தியே பெருகும்.

**9. பணமதிப்பை எளிதில் விளக்க முடியாமை :** பணத்தின் மதிப்பை ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு போன்ற சாதாரணக் கோட்பாட்டின்மூலம் முழுமையாக விளக்க இயலாது என்று இராபர்ட்சன் கூறுகிறார்.

**10. வரலாற்றுச் சான்று :** 1929ஆம் ஆண்டு அமெரிக்காவில் பொருளாதாரப் பெருமந்தம் உருவெடுத்தபோது, புழக்கத்திற்கான பணத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது. எனினும், பொருள்களின் விலைகள் உயரவே இல்லை. ஃபிஷரின் கோட்பாடு அமெரிக்கப் பொருளாதாரத்தின் வரலாற்று நிகழ்ச்சியால் இவ்வாறு பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

பல குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும், ஃபிஷரின் கோட்பாட்டை முற்றிலும் பயனற்றது என்று ஒதுக்கிவிட முடியாது. பணத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்காக உருவாக்கப்பட்ட சமீப காலக் கோட்பாடுகளுக்கு அக் கோட்பாடே அடிப்படையாக அமைந்தது. பணவீக்கம், பண அளவு, பணமதிப்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பையும் அது உணர்த்துகிறது.

## IV. பண வீக்கம் (Inflation)

ஏராளமான காகிதப் பணமும் வங்கிப் பணமும் புழங்குகின்ற இன்றைய நிலையில் பண நிர்வாகக் குறைபாடுகளால் பண வீக்கம், பணவாட்டம் போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. பொருள்களின் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், சமுதாயத்தில் உள்ள பல பிரிவு மக்களை வெவ்வேறு வகைகளில் பாதிக்கின்றன.

பொருள்களின் மதிப்பை ஒப்பிட்டு நோக்க உதவும் ஒரு கருவியாகப் பணம் திகழ்கிறது. பணத்தின் மதிப்பு மாறுமல் இருந்தால்தான் பொருள்களின் உண்மையான மதிப்பைத் தெரிந்துகொள்ளமுடியும். பணவீக்கத்தால் பணத்தின் மதிப்புக் குறையும்போது பணவாட்டத்தால் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது.

'அதிக அளவுப் பணம் குறைந்த அளவுப் பொருள்களைத் துரத்துவதையே' (too much money chases too few goods) பணவீக்கம் என்று டால்டன் குறிப்பிடுகிறார். புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு அதிகரிப்பதற்கு ஏற்ப பொருள்களின் உற்பத்தி அளவு பெருகாவிட்டால் பணவீக்கம் ஏற்படுகிறது.

அதனால், பொருள்களின் விலைகள் உயர்ந்து பணத்தின் மதிப்புக் குறைகிறது. பண அளவுக் கோட்பாடு உணர்த்து கின்ற அடிப்படை உண்மை இதன் வாயிலாக நிலைநிறுத்தப் படுகிறது.

**பணவீக்கத்திற்கான காரணங்கள்**

பின்வரும் காரணங்களால் பணவீக்கம் ஏற்பட்டுப் பொருள் களின் விலைகள் அதிகரிக்கின்றன.

**1. திட்டம் :** பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு அரசு திட்டங்களைத் தீட்டுகிறது. அவற்றைச் செயல்படுத்தப் போதுமான நிதிவசதியை வரி வருவாயின்மூலம் பெறமுடியாத நிலையில் 'பற்றுக்குறை நிதியாக்கம்' (deficit financing) கைக் கொள்ளப்படுகிறது. இதன் காரணமாகப் பண அளவு அதிகரித்து விலைகள் உயர்கின்றன.

**2. போர் :** போர்க் காலங்களில் ஒரு நாட்டின் அரசு திடீரென நிதி வசதியைப் பெருக்கிக்கொள்வது அவசியமாகிறது. பிற வழிகளில் அதிக நிதியைப் பெற முடியாதாகையால், காகிதப் பணம் மிக அதிக அளவுக்கு வெளியிடப்படுகிறது. பொதுவாகப் போர்க் காலங்களில் நாட்டு உற்பத்தியின் அளவு குறையும். அப் போது பண அளவு அதிகரிப்பதால் பணவீக்கம் தோன்றுகிறது.

**3. ஆக்கத் திறன் குறைவு :** ஒரு நாட்டின் வளங்கள் சிறப்பாக உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்படாவிட்டால், உற் பத்தித் திறன் குறைவாக இருக்கும். உற்பத்தியைப் பெருக்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறுதபோது பணவீக்கம் ஏற்படுகிறது.

**4. அதிக நுகர்வு :** அதிகரிக்கின்ற வருமானத்தின் பெரும் பகுதி நுகர்வுக்காகவே செலவிடப்பட்டால் உற்பத்தி உயராது. பணத்தின் அளிப்புக் கூடும்போது பொருள்களின் உற்பத்தி அளவும் அதிகரித்தால்தான் விலைகள் உயரமாட்டா.

**5. முதலாளித்துவம் :** ரஷ்யா, சீனா போன்ற பொது வுடைமை நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் அரசால் தீவிரமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த நாடுகளில் வாணிகச் சுழலால் தோன்றும் தீமைகள் எழுவதில்லை. மாறாக, முதலாளித் துவ நாடுகளில் அரசு பொருளாதார நடவடிக்கைகளை அதிக அளவில் கட்டுப்படுத்துவதில்லை. இதன் காரணமாக இந்த நாடு

களில் பணவீக்கம், பணவாட்டம், மந்தநிலை போன்றவை தோன்றி மறைகின்றன. உதாரணமாக, 1929–34 பொருளாதாரப் பெரு மந்தத்தால் அமெரிக்கப் பொருளாதாரம் சீர்குலைந்தபோது ரஷ்யப் பொருளாதாரம் எவ் வகையிலும் பாதிக்கப்படவில்லை.

**6. தொழிலாளர் சங்கங்கள் :** தொழிலாளர் சங்க நடவடிக்கைகளால் உழைப்பாளருக்கான ஊதிய வீதங்கள் உயர்த்தப் படுகின்றன. உற்பத்தி பெருகாத நிலையில் பண ஊதியம் மட்டும் உயர்த்தப்படுவதால் பொருள்களின் விலைகள் கூடுகின்றன.

**7. அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை :** வருமானத்தைக்காட்டிலும் அரசின் செலவு அதிகரிப்பதாலும் பணவீக்கம் ஏற்படும். நிதிப் பற்றுக்குறையைத் தவிர்க்க அரசு வெவ்வேறு நிதிப் பெருக்க முறைகளைப் பின்பற்றும்.

**8. நீண்ட காலத்தில் பயன்தரும் திட்டங்களில் முதலீடு :** அணைகள் கட்டுதல், இரயில்வேக்கள், பெருந் தொழில்கள், மின் சார உற்பத்தி ஆகியவற்றிற்கு அதிக முதலீடு தேவையாகின்றது. ஆனால், அவை நீண்ட காலத்திலேயே உற்பத்தியைத் தொடங்குகின்றன. இதனாலும் பணவீக்கம் ஏற்படலாம்.

**9. மக்கள் தொகைப் பெருக்கம்:** எப்போதுமே அதிகப் பணப் புழக்கத்தால்தான் பணவீக்கம் ஏற்படும் என்று கருதுவது தவறு. பண அளவு மாறுமல் இருக்கும்போது மக்கள்பெருக்கம் ஏற்பட்டுத் தேவை பெருகினாலும் பணவீக்கம் தோன்றும்.

**10. உற்பத்திச் செலவில் உயர்வு :** கச்சாப் பொருள்களின் விலை, கூலி, மின்சாரக் கட்டணம், போக்குவரத்துச் செலவு போன்றவற்றின் உயர்வால் பொருள்களின் உற்பத்திச் செலவும் விலையும் அதிகரிக்கின்றன.

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் :**

பணவீக்கத்தால் பணத்தின் வாங்கும் திறன் குறைந்து மக்கள் அவதிப்படுவார்கள். சமுதாயத்தில் விலை உயர்வாலும், பொருள்களின் பற்றுக்குறையாலும் அமைதியின்மை தோன்றும். பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதன்மூலமே பணவீக்கத்தைக் குறைக்கமுடியும். அரசின் பண-நிதிக் கொள்கைகளைச் சிறப்பாக வகுப்பதன் வாயிலாக விலை உயர்வைத் தடுக்கலாம்.

(1) அரசு **பணவியல் நடவடிக்கைகளின்** மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். காகிதப்பண வெளியீட்டைக் குறைத்து வங்கிகளில் கடனுக்கான வட்டி வீதத்தை உயர்த்தி, வங்கிகளின் ரொக்க இருப்பு வீதத்தை அதிகரித்து விலைகளைக் குறைக்கலாம்.

(2) **நிதியியல் நடவடிக்கைகளாலும்** அரசு விலைஉயர்வைத் தடுக்கலாம். அரசு அதனுடைய செலவைக் குறைத்துச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மக்களுடைய வாங்கும் திறனைக் குறைக்கப் பொருள்களின் மீது அரசு அதிக வரிகளை விதிக்கலாம். சிறு சேமிப்பு, கட்டாயச் சேமிப்பு, பரிசுப் பத்திரங்கள் போன்றவற்றின் மூலம் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவைக் குறைக்கலாம்.

(3) **பிற நடவடிக்கைகளின்** மூலமாகவும் விலைகளைக் கட்டுப்படுத்தலாம். அவசியமான பொருள்களின் விலைகளை அரசு நிர்மானிக்கலாம். அல்லது அவற்றை அரசு நியாய விலைகளில் பங்கீடு செய்யலாம். இன்றியமையாத பொருள்களின் இறக்குமதியைக் கூட்டி ஏற்றுமதியைக் குறைக்கவேண்டும். நியாயவிலைக் கடைகளை அரசே நடத்தலாம்; அல்லது கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் ஏற்படுவதை ஊக்குவிக்கலாம். உழைப்பாளருடைய ஊதியங்களைக் கட்டுப்படுத்துவதும் நன்மை பயக்கும். பற்றாக் குறைப் பண்டங்களை 'பங்கீட்டு முறையில்' (rationing) அளிக்கலாம்.

## இந்தியாவில் பணவீக்கம்

சுதந்திரம் அடைந்த பிறகு நம் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாகப் பல பிரச்சினைகள் தோன்றின. சீன ஊடுருவல், பாகிஸ்தான் படையெடுப்பு, பங்களாதேஷ் விடுதலைப் போர் ஆகியவற்றால் பாதுகாப்புச் செலவு கூடியது. விரைவான மக்கள் பெருக்கத்தால் எண்ணற்ற சிக்கல்கள் உருவாயின. வேளாண்மை வளர்ச்சி, திட்டமிட்டபடி அமையவில்லை. தொழில் முன்னேற்றம் தடைப்பட்டது. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் மேம்பாடு போதுமானதாக இல்லை. ஆக்கமற்ற நுகர்வின் அளவு கூடியது. அரசின் பண - நிதிக் கொள்கைகள் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிபெற வில்லை. கறுப்புப் பணத்தின் அளவு எல்லையில்லாமல் பெருகியுள்ளது. கள்ளச் சந்தைகள் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன. கள்ளக்கடத்தலைத் தடுக்க இப்போதுதான் முயற்சிகள் குறைந்தளவு வெற்றியுடன் எடுக்கப்பட்டு வருகின்றன. இலஞ்சமும் ஊழலும் இல்லாத இடமே இல்லை என்று சொல்லுமளவுக்குப் பெருகியுள்ளன. இவ்

விதமான பல சிக்கல்களுக்கும் ஒருங்கே தீர்வு காண்பதன்மூலமே மக்கள் நியாய விலையில் பொருள்களைப் பெறுவார்கள்; பணவீக்கத்தையும் கட்டுப்படுத்தமுடியும்.

நம் நாட்டில் பணவீக்கம் உள்ளமைக்குக் காரணமாக அமைந்தது அரசின் அதிகளவுக் காகிதப் பண வெளியீடேயாகும். இன்று ரூபாயின் மதிப்பு சுமார் 25 பைசாவாக மட்டுமே உள்ளது. பணவீக்கத்தைக் குறைக்க அரசு ஆக்க நடவடிக்கைகளுக்கு ஊக்க மளிக்கிறது. எனினும், விலைகளைக் கட்டுப்படுத்துவதில் அரசின் நடவடிக்கைகள் மிகக் குறைந்த அளவுக்கே வெற்றி பெற்றுள்ளன.

## V. பணவாட்டம் (Deflation)

பணவீக்கத்திற்கு எதிரான இயல்புகளைப் பணவாட்டத்தில் காணலாம். பணவாட்டத்தால் விலைகள் வீழ்ச்சியடைந்து இலாபம் குறைகிறது; முதலீடு சுருங்குவதால் உற்பத்தியின் அளவு பாதிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பும் வருமானமும் குறைகின்றன; தொழில்மந்தம் ஏற்படுகிறது. ஆக்கக் காரணிகள் செயலிழக்கின்றன; ஏற்றுமதிப் பெருக்கத்தால் உள்நாட்டில் பண்டங்களின் பற்றுக்குறை நிலவுகிறது. இவ்வாறு பணவீக்கத்தைவிடப் பெரிய சீர்கேடுகளை இது தோற்றுவிக்கிறது.

பணவாட்டத்தில் விலைகள்குறைந்து பணமதிப்புக் கூடினாலும், அதன்மூலம் மக்கள் நன்மை பெறுவதில்லை. பணவாட்டத்தை நீக்கப் பணத்தின் அளவைக் கூட்டவேண்டும். இன்றைய நிலையில் உலகின் பல நாடுகளிலும் பணவீக்கமே அமைந்துள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது கடினமானதாக இருக்கிறது. ஆனால், பணவாட்டத்தைப் போக்குவது எளிதானதேயாகும்.

## VI. விலை மாற்றத்தின் விளைவுகள்
## (Effects of changes in prices)

விலை ஏற்ற – இறக்கங்களால் சமுதாயத்தில் உள்ள பல பிரிவு மக்களும் ஒரே மாதிரியாகப் பாதிக்கப்படுவதில்லை. விலை ஏற்றத்தில் பலர் பாதிக்கப்படும்போது சிலர் நன்மையடைகின்றனர். இது போன்றே விலைமாற்றம் பொருளாதார நடவடிக்கைகளிலும் சில விளைவுகளைத் தோற்றுவிக்கிறது. விலைமாற்றத்தின் விளைவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம் :

### 1. அரசின் செலவினம்

விலைகள் உயரும்போது பொதுத்துறை முதலீடுகளுக்கான செலவு கூடுகிறது; அரசு ஊழியர்கள் அதிக ஊதியம் வேண்டுகிறார்கள். நம் நாட்டில் திட்டச் செலவுகள் பல மடங்கு கூடியுள்ளமைக்கு விலை உயர்வு முக்கியக் காரணமாகும். அரசின் செலவு கூடுவதால் வரி வீதங்கள் உயர்த்தப்படுவதோடு, புதிய வரிகளும் விதிக்கப்படுகின்றன. விலைகள் குறையும்போது அரசின் செலவு ஓரளவு குறையும். செலவு குறைந்தாலும் அரசு வரிகளைக் குறைக்க முன்வருவதில்லை. பணத்தை வெளியிடும் உரிமையைப் பெற்றிருப்பதாலும், பண நிர்வாகத்தைச் செய்வதாலும் விலை மாற்றத்தால் அரசு அதிக அளவுக்குப் பாதிக்கப்படுவதில்லை.

### 2. தொழில் — வாணிகம்

விலைகள் கூடும்போது தொழிலும் வாணிகமும் செழிக்கின்றன. தேவைப் பெருக்கத்தால் விலைகள் அதிகரிக்கும்போது உயர் அளவில் இலாபம் கிடைக்கிறது. இலாபத்தின் பெரும்பகுதி மறு முதலீடு செய்யப்படுகிறது. இதனால், உற்பத்தி மேலும் உயர்கிறது. விலைகளின் வீழ்ச்சியால் தொழில் உற்பத்தியாளர்களும் வாணிகர்களும் பாதிக்கப்படுகின்றனர். தேவைக் குறைவால் விலைகள் சரிந்து இலாபத்தின் அளவு சுருங்குகிறது. உற்பத்திக் காரணிகள் வேலை இழக்கின்றன. பொருள்களை விற்பனை செய்ய முடியாமையால் வாணிக அளவு குறைகிறது. விற்பனைக்கான பொருள்கள் தேங்குவதால் உற்பத்தி நிறுத்தப்படுகிறது. தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தொழிலாளர்கள் வேலை இழக்கிறார்கள்.

### 3. நுகர்வோர்

விலைகள் குறையும்போது பொருள்களை வாங்கும் நுகர்வோர் நன்மையடைவர். பணத்தின் வாங்கும்திறன் அதிகரிக்கும். குறைந்தளவு பணத்தைக் கொண்டு மிகுதியான அளவில் பல பொருள்களையும் வாங்கமுடிவதால் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்கிறது. விலைகள் உயர் மட்டத்தில் அமையும்போது நுகர்வோர் நலன் பாதிக்கப்படுகிறது. அவர்கள் பை நிறைய பணத்தைக் கொண்டு சென்றாலும் கையளவு பொருள்களை மட்டுமே பெற முடிகிறது.

### 4. நிலையான வருமானம் பெறுவோர்

கூலியாள்களும், நிலையான ஊதியம் பெறும் ஊழியர்களும், நிலையான வருமானம் பெறும் மற்றவர்களும் விலையேற்றத்தால்

பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். விலைகளின் உயர்வுக்கேற்ப இவர்களின் வருமானம் கூடுவதில்லை. ஊதிய உயர்வைப் போராடிப் பெற்றாலும், அது குறைந்த அளவினதாகவே அமையும். விலைக் குறைவால் நிலையான வருமானம் பெறுவோர் நன்மையடைகின்றனர். விலைக் குறைவினால் அவர்களுடைய 'உண்மை வருமானம்' (real income) உயர்ந்துவிடுகிறது.

### 5. விவசாயிகள்

வேளாண்மை விளைபொருள்களின் விலை உயர்வு விவசாயிகளுக்கு நல்வாழ்வை நல்கும். நம் நாட்டில் தொழில் அதிபர்களும் வாணிகர்களும் பெறும் பெருமளவு கொள்ளை இலாபத்தை உழுது பாடுபடும் விவசாயிகள் பெறுவதில்லை. மேலும், தொழில் துறைப் பொருள்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்திருக்கும் போது, வேளாண்மைப் பொருள்களின் விலைகள் அதிகளவுக்கு உயரவில்லை. விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் விலைகள் கூடியுள்ளமையால், வேளாண்மையில் சாகுபடிச் செலவு அதிகரித்துள்ளது. விளைபொருள்களின் விலை குறைந்தால் சிறிய விவசாயிகளின் நிலை பெரிதும் பாதிக்கப்படும்.

### 6. முதலீட்டாளர்கள்

பணவீக்கக் காலத்தில் வங்கிகளில் வைப்பு நிதிகளை வைத்திருப்பதும், தொழில் நிறுவனங்களின் கடன்பத்திரங்களை வாங்குவதும், நீண்டகாலக் காப்பீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வதும் முதலீட்டாளர்களுக்கு நன்மையளிப்பதில்லை. பணவீக்கத்தால் பணத்தின் மதிப்புக் குறைந்துகொண்டே செல்லும். குறைவான பண மதிப்போடு ஒப்பிடும்போது, இவ்வகை முதலீடுகளுக்கு அளிக்கப்படும் நிலையான வட்டி மிகக் குறைவானதே யாகும். ஆனால், அதிக இலாபத்தைப் பெற்றுவரும் தொழில் நிறுவனத்தின் பங்குகளை வாங்கும் முதலீட்டாளர் பணவீக்கக் காலத்தில் இலாபமடைகிறார். இதைத் தவிர்த்த பிற முதலீடுகளால் அதிக நன்மையடைய விலைகள் குறைவது நல்லது. ஏனெனில், அப்போதுதான் முதலீட்டின் மதிப்பும், அதன்மூலம் பெறப்படும் பண வருமானத்தின் மதிப்பும் உயர்வாக இருக்கும்.

### 7. கடனாளிகளும் கடனளித்தோரும்

கடன் வாங்கியவர்கள் பணவீக்கத்தால் நன்மையடைகின்றனர். விலைகளின் உயர்வு கடன் தந்தவர்களுக்குப் பாதகமாக அமைகிறது. பணவீக்கத்தால் பணத்தின் மதிப்புக் குறைவதே இதற்குக் காரணமாகும். எனினும், வட்டிக்கு வட்டி வாங்கும்

லேவாதேவிக்காரர்கள், மிக உயர்ந்த வட்டி வீதத்தை வாங்குவ தால் எக் காலத்திலும் நன்மையடைகின்றனர். பணவாட்டத்தில் கடனளித்தோர் இலாபமடையும்போது, கடனாளிகளுக்குக் கடனின் சுமை கூடும்.

பொதுவாக, விலையேற்றத்தால் உற்பத்தியாளர்களும் விலைச் சரிவால் நுகர்வோரும் நன்மையடைகின்றனர். ஒரு நாட்டில் உற்பத்தி, முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவை பெருக பொருள் களின் விலை சீராக உயரலாம். ஆனால், அவ் விலை உயர்வு பண வீக்கம் என்று சொல்லத்தக்க அளவுக்கு அதிகமாக அமைதல் கூடாது.

# 23. கடனும் கடன் கருவிகளும்
## (Credit and Credit Instruments)

இன்றையத் தொழில் – வாணிக நடவடிக்கைகள் கடன் கருவிகளின் உதவியைக்கொண்டு நடைபெறுகின்றன. பணத்தின்மூலம் வாங்கல், விற்றல் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் செயல்படுகின்றன. பணத்தின் இடையீடு இன்றிக் 'கடன்' (credit) மூலமும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடலாம். பணத்தைக் கொடுத்துப் பொருளை வாங்குவது 'ரொக்க நடவடிக்கையாகும்' (cash transaction). ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பணத்தைத் தருவதாக உறுதியளித்துப் பொருளை வாங்குவது 'கடன் நடவடிக்கை' (credit transaction) எனப்படும். கடனுக்கு அடிப்படையாக அமையவேண்டியது நம்பிக்கையே.

வாணிக வங்கிகளைக் கடன் உற்பத்தி செய்யும் கூடங்கள் எனப் பேராசிரியர் சேயர்ஸ் குறிப்பிடுகின்றார். காசோலை, மாற்று உண்டியல், வாக்குறுதிப் பத்திரம் போன்ற கடன் கருவிகளின்மூலம் பெருமளவு மொத்த வாணிகமும், ஓரளவு சில்லறை வாணிகமும் நடைபெறுகின்றன. வளர்ச்சியடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளில் கடன் கருவிகள் அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றன. அந்த நாடுகளில் பணத்தின் பல பணிகளைக் கடன் கருவிகளே ஆற்றுகின்றன.

வாணிகம் வளர ரொக்க விற்பனையோடு கடன் விற்பனையும் தேவை. நாணயமானவர்களுக்கும், கடனைத் திருப்பித் தரத்தக்க திறனைக் கொண்டிருப்பவர்களுக்கும் கடன்கள் தரப்படுகின்றன. கால அளவுக்கேற்ப கடனுக்கான வட்டி நிர்ணயிக்கப்படுகிறது. வாக்குறுதி அளிப்பதன்மூலமே கடனைப்பெற முடியும். கடன் நடவடிக்கை பேச்சு வார்த்தைமூலமாகவோ எழுத்துமூலமாகவோ

நடைபெறலாம். எழுத்தில் அமைந்திருக்கும் கடன் உறுதிகளைக் கடன் கருவிகள் அல்லது கடன் பத்திரங்கள் என்கிறோம்.

**கடனால் ஏற்படும் நன்மைகள்**

கடனில்லாத இன்றைய வாணிகம் ஸ்தம்பித்துவிடும். கடனின் உதவியால்தான் பொருளாதார நடவடிக்கைகள் பெருகியுள்ளன. பல நாடுகளின் வளர்ச்சிக்குக் கடன் பெரிதும் உதவியுள்ளது.

1. திறமைமிக்க தொழில் அமைப்பாளர்கள் கடனின் உதவியால் தொழில்களைத் தொடங்கலாம்.

2. சிக்கனமாக மொத்த வாணிகப் பேரங்கள் கடன் கருவிகளின்மூலம் செய்யப்படுவதால், காகிதப்பணம் – உலோகப் பணம் ஆகியவற்றிற்கான தேவை குறைகிறது.

3. கடனானது தொழில் வாணிக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு நுகர்வோருக்கும் பயனளிக்கிறது. வாடகைக் கொள்முதல், தவணைக் கடன்முறை போன்றவற்றால், குறைந்த வருமானம் பெறுபவர்களும் பல நுகர் பொருள்களை வாங்கிப் பயன்படுத்த முடிகிறது.

4. பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சிக்கனத்துடனும் செலவுக் குறைவுடனும் அனுப்பக் கடன் கருவிகள் உதவுகின்றன.

5. கடன் முறையால் வளரும் பேரளவுத் தொழில்களால் பல நன்மைகள் தோன்றுகின்றன. பேரளவு உற்பத்தியால் அக - புறச் சிக்கனங்கள் பெறப்பட்டு, உற்பத்திச் செலவு குறைகிறது. பொருள்கள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

6. பன்னாட்டு வாணிகத்தின் ஏற்றுமதி – இறக்குமதி நடவடிக்கைகளுக்குக் கடன் கருவியான 'மாற்று உண்டியல்கள்' (bills of exchange) பெரிதும் உதவுகின்றன.

7. நெருக்கடியான காலங்களில் தொழில் அமைப்பாளருக்கும் வாணிகர்களுக்கும் கைகொடுத்து உதவுவது கடனேயாகும்.

8. சிறிய அளவுச் சேமிப்புகளும்கூடக் கடனின் மூலம் பேரளவு மூலதனமாகத் திரட்டப்படுகின்றன.

9. வருங்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் கடன் உதவுகிறது.

10. கடன் கருவிகள் பணத்திற்குப் பதிலியாக அமைவதால், பணத்தின் அவசியம் குறைந்த பணிகள் தவிர்க்கப்படுகின்றன. வாணிக வளர்ச்சிக்குப் பணப் பேரத்தைவிடக் கடன்பேரமே சிறந்தது.

11. பொருளாதார மந்தக் காலத்தில் பணஅளிப்பைக் கூட்டவும், பூரிப்புக் காலத்தில் பணஅளிப்பைக் குறைக்கவும் கடன் உதவுகிறது.

12. நாட்டின் தேவைக்கேற்ப வங்கிக் கடனளவைக் குறைப்பதும் கூட்டுவதும் எளிது.

**கடனுல் விளையும் தீமைகள்**

எண்ணற்ற நன்மைகளைக் கொண்ட கடனுல் சில தீமைகளும் தோன்றுகின்றன. அவற்றைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம் :

1. கடன் வசதியால் திறமையற்றவர்களும் பணத்தைப் பெற்றுத் தொழிலைத் தொடங்குவர். திறமையற்ற தொழில் அமைப்பாளரால் நட்டமே ஏற்படும்.

2. அளவுக்கு அதிகமான கடன் பெருக்கம், பணவீக்கம் போன்ற பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். இதனுல், பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைகின்றன. விலைகளின் உயர்வால் மக்களுடைய நலன் பாதிக்கப்படுகிறது.

3. கடன் வாங்கும் ஒருவர், ஆக்கப் பணிகளுக்கு அதைப் பயன்படுத்தாமல் நுகர்வுக்காகச் செலவிடலாம். கடனுல் ஆக்க மற்ற நுகர்வு பெருகும்.

4. எளிதில் பெற்ற கடனைக்கொண்டு ஒரு தொழில் அமைப்பாளர் சிக்கனமற்ற முதலீடுகளைச் செய்யக்கூடும். வீணை செலவுகள் அதிகரிக்கின்றன. பொறுப்பின்மை, அக்கறை யின்மை ஆகியவை தொழில் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

5. எந்த அளவுக்கு வேண்டுமானுலும் கடனைப் பெருக்க முடிவதால், உற்பத்தி பல மடங்கு பெருகிப் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படுகிறது. அமெரிக்காவை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அங்குக் கடன் பெருக்கத்தால் பொருள்களின் உற்பத்தியளவு தேவையைவிட மிக அதிகமாக உள்ளது. சில தொழில்களில் இதனுல் மந்தநிலை உள்ளது.

6. பெரிய தொழில் நிறுவனங்கள் கடனின்மூலம் அதிக மூலதனத்தைப் பெற்று முற்றுரிமையை ஏற்படுத்திக் கொள்ளுகின்றன.

7. கடன் வசதியால் 'ஊக வாணிகம்' (speculation) பெருகிப் பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைகின்றன.

**கடன் கருவிகள்**

கடனைப் பெறுவதற்கும் அளிப்பதற்கும் துணையாக இருப்பவையே கடன் கருவிகள். எழுத்தில் இருக்கும் கடன் உறுதிமொழி கடன் பத்திரங்களில் காணப்படுகிறது. கடன் பத்திரங்களைச் செலாவணிப் பத்திரங்கள் (negotiable instruments), செலாவணித் தன்மையற்ற பத்திரங்கள் (non-negotiable instruments) என இரு வகைகளாகப் பிரிக்கலாம். காசோலை, வாக்குறுதிப் பத்திரம், மாற்று உண்டியல், டிராஃப்ட் ஆகியவற்றைச் செலாவணிப் பத்திரங்கள் என்கின்றோம். அஞ்சல் ஆணைகள் (postal orders), இங்கிலாந்தில் புழக்கத்தில் இருக்கும் ஐ. ஓ. யு. (I.O.U. = I Owe You) ஆகியவை செலாவணித் தன்மையற்ற பத்திரங்களாகும்.

செலாவணித் தன்மையுள்ள பத்திரங்களே செலாவணித் தன்மையற்ற பத்திரங்களைக் காட்டிலும் சிறப்புடையவை. அவற்றை எளிதில் கைமாற்ற இயலுவதோடு, அவற்றில் கண்ட உரிமையை நீதிமன்றங்களிலும் நிலைநாட்டலாம்.

**காசோலை** (Cheque)

கடன் கருவிகளுள் அதிகச் செல்வாக்கைக் கொண்டது காசோலை ஆகும். வங்கியில் வைப்புநிதியைக் கொண்டுள்ள ஒருவர், குறிப்பிட்ட வேறொருவருக்கு அல்லது அவரது ஆணையாளருக்குக் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கும்படி வங்கிக்கு வரையப்பட்ட உத்தரவே காசோலை எனப்படுகிறது. காசோலை மூலம் வங்கியிலுள்ள பணம் பெறப்படுகிறது. காசோலை எழுதப்பட்ட நாளில் இருந்து ஆறு மாத காலத்திற்குள் வங்கியில் பணமாக மாற்றப்படவேண்டும். காசோலை யாருடைய பெயருக்கு வரையப்படுகிறதோ, அவர் அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டு வங்கியிலிருந்து பணத்தைப் பெறுகிறார். கோடிட்ட காசோலைகளுக்கு (crossed cheques) வங்கியில் ரொக்கம் தரப்படமாட்டாது. வங்கிக் கணக்கின்மூலமோ அல்லது மற்றொரு வங்கிமூலமோ அல்லது மற்றொரு வாடிக்கையாளரின் கணக்கு மூலமோ கோடிட்ட காசோலைகளைப் பணமாக மாற்றலாம்.

**வாக்குறுதிப் பத்திரம்** (Promissory Note)

கடன் பெறுபவர் கடன் அளிப்பவருக்கு எழுதித்தரும் உறுதி மொழிச் சீட்டே வாக்குறுதிப் பத்திரமாகும். காலக் கடன் பத்திரங்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு திருப்பித் தருவதற் கென எழுதப்படுபவையாகும். கடன் கருவிகளில் மிக எளிய தன்மையைக் கொண்டிருப்பது வாக்குறுதிப் பத்திரமேயாரும். இதில் குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகக் கடன் அளித்தவரிடம் அசலையும் வட்டியையும் தருவதாகக் கடன் பெற்றவர் உறுதி கூறியிருப்பர். கடன் பெற்றதற்கும் அளித்த தற்கும் அத்தாட்சியாக இருப்பதே வாக்குறுதிப் பத்திரம். கட் ஞனது கடன் அளித்தவரிடமோ அல்லது அவரது ஆணையைப் பெற்றவரிடமோ திருப்பித்தரப்படலாம். ஒருவரோ இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ கூட்டாகவும் கடன்பத்தி ரங்களை எழுதித்தரலாம்.

வாக்குறுதிப் பத்திரங்கள் மூன்றாண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடி ஆகத்தக்கவை. இக் கால வரையறைக்குள், கடன் திரும்பத் தரப்படாவிட்டால் கடன் அளித்தவர் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். வாக்குறுதிப் பத்திரம் முத்திரைப் பத்திரத்திலோ அல்லது முத்திரை ஒட்டிய காகிதத்திலோ எழுதப் பட்டுக் கடன் வாங்குபவரால் கையொப்பம் இடப்பட வேண்டும்.

**மாற்று உண்டியல்** (Bill of Exchange)

மாற்று உண்டியலில் குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒருவருக்கு அல்லது அவரது ஆணையாள ருக்குக் கொடுக்கும்படி எழுத்துமூலம் கட்டளையிடப்படுகிறது. உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை உடனே செலுத்த வேண்டியிருந்தால், அது 'கட்டளை உண்டியல்' (demand bill) எனப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவேண்டிய தொகை குறிப்பிடப்பட்டுள்ள உண்டியல் 'கால உண்டியல்' (time bill) ஆகும். உள்நாட்டு வாணிகத்தில் பயன்படுத்தப் படுவது 'உள்நாட்டு உண்டியல்' (inland bill); வெளிநாட்டு வாணிகத்தில் பயன்படுத்தப்படுவது 'வெளிநாட்டு உண்டியல்' (foreign bill). வங்கிகள் கழிவு செய்து உண்டியல்களுக்குப் பணம் தருகின்றன.

மேற்கண்டவையோடு வங்கிகளின் டிராஃப்ட், அஞ்சல் மாற்றம் (mail transfer) போன்றவையும் கடன் கருவிகளேயாகும்.

# 24. வங்கியியல்

## (Banking)

உலக நாடுகள் அனைத்தும் பணப் பொருளாதாரங்களையே கொண்டுள்ளன. பண நிர்வாகத்தில் வங்கிகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. வங்கியியலில், வங்கிகளின் அமைப்பு, வகைகள், நிர்வாகம், பணிகள் ஆகியவை ஆராயப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு வங்கிகள் பெருமளவில் உதவுகின்றன. வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்கு மூலதனம் தேவைப்படுகிறது. அவற்றிற்கான மூலதனத் தேவையின் ஒரு பகுதியை வங்கிகள் ஈடுசெய்கின்றன.

வருமானத்தின் ஒரு பகுதி மக்களால் சேமிக்கப்பட்டு வங்கிகளில் வைப்புநிதியாக்கப்படுகிறது. வைப்பு நிதிகளுக்கு வங்கிகள் குறிப்பிட்ட அளவு வட்டியை அளிக்கின்றன. இவ் வைப்பு நிதிகளைக் கொண்டு வங்கிகள் தொழில் அதிபர்களுக்கும், வாணிகர்களுக்கும், ஏனையோருக்கும் உயர்வட்டி வீதத்தில் கடன் தருகின்றன. வங்கியியலில் ஏற்பட்டுள்ள வியத்தகு வளர்ச்சி சமீப காலத்தில் ஏற்பட்டதே.

கூட்டுப்பங்கு நிறுவன முறையிலேயே பலவகை வங்கிகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான 'மூலதனத் திரட்சியைப்' (Capital formation) பெற வங்கிகள் உதவுகின்றன. ஒரு நாட்டில் வங்கிகளின் முன்னேற்றத்தின்மூலமே சேமிப்பின் அளவைப் பெருக்கமுடியும். சேமிப்பிற்கான வசதிகளை வங்கிகள் அளிக்கின்றன. சேமிக்கப்பட்ட மூலதனம் ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு அவை வகை செய்கின்றன.

விற்பனைப் பொருள்கள் எளிதில் மாற்றப்படுவதற்கும் வங்கிகள் உதவுகின்றன. 'கடனை' உற்பத்தி செய்யும் தொழிலாக

வங்கிமுறை அமைந்நதுள்ளது. எதிர்காலத் தேவையின் அளவைத் தோராயமாகக் கணித்தே உற்பத்தியின் அளவு நிர்ணயிக்கப்படு கிறது. வங்கிக் கடன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகள் ஊக்கு விக்கப்படுகின்றன.

நம் நாட்டில் விவசாயிகளின் கடன் தேவையைக் கூட்டுறவு வங்கிகளும், நில அடைமான வங்கிகளும் தீர்த்து வைக்கின்றன. வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் வங்கிகளிலிருந்து குறுகியகாலக் கடன்களைப் பெறுகின்றனர். அமெரிக்கா போன்ற நாடுகளில் முதலீட்டுக்குத் தேவையான மூலதனத்தை அளிக்க 'முதலீட்டு வங்கிகள்' (Investment Banks) இருக்கின்றன.

இவற்றின் வாயிலாக, வங்கிகள் பல்வேறு பொருளாதாரப் பணிகளுக்குத் தேவையான கடனை அளிக்கின்றன என்பதை அறிய லாம். ஆகவே, ஒரு நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை உயர் வீதத்தில் பெற, நன்கு மேம்படுத்தப்பட்ட வங்கிமுறை இன்றியமையாததாகும்.

## I. வங்கிகளின் வகைகள் (Types of Banks)

பலவகை வங்கிகள் வெவ்வேறு துறைகளின் முன்னேற்றத் திற்கு உதவுகின்றன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம் :

### 1. வாணிக வங்கிகள் (Commercial Banks)

மக்களுடைய எஞ்சிய வருமானத்தை வைப்பு நிதிகளாகப் பெற்று, அப் பணத்தைக்கொண்டு வாணிகர்களுக்கும் மற்றவர் களுக்கும் குறுகியகாலக் கடன்களை வழங்குபவையே வாணிக வங்கிகள். நம் நாட்டில் இவ்வகை வங்கிகளே அதிக எண்ணிக் கையில் உள்ளன. உதாரணமாக, இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், கனரா பாங்க், விஜயா பாங்க், சிண்டிகேட் பாங்க், பாங்க் ஆப் மதுரை போன்றவற்றைக் குறிப்பிடலாம். கடன் வாங்குவதையும் கொடுப்பதையும் வாணிகமாகக் கொண் டிருப்பதால், இவை வாணிக வங்கிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றைக் கூட்டுப்பங்கு வங்கிகள் (Joint Stock Banks) என் றும் குறிப்பிடலாம். ஜெர்மனி, ஜப்பான், சுவிட்சர்லாந்து போன்ற சில நாடுகளின் வாணிக வங்கிகள் முதலீட்டிற்குத் தேவையான நீண்டகாலக் கடன்களையும் அளிக்கின்றன.

## 2. தொழில் அல்லது முதலீட்டு வங்கிகள் (Industrial or Investment Banks)

முதலீட்டு வங்கிகள் தொழிலுக்கான நிலையான மூலதனத்தை (Fixed Capital) அளிக்கும்போது, வாணிக வங்கிகள் பணிசெய் மூலதனத்தைத் (Working Capital) தருகின்றன. ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு முதலீட்டு வங்கிகள் பெரிதும் உதவியுள்ளன. நம் நாட்டில் இந்தியத் தொழில் நிதிக் கழகம், இந்தியத் தொழிற்கடன் முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, யூனிட் டிரஸ்ட் போன்றவை முதலீட்டு வங்கிகளின் பணிகளைச் செய்கின்றன. பல ஐரோப்பிய நாடுகளிலும் அமைந்திருப்பதைப் போன்ற தொழில் வங்கிகள் இந்தியாவிலில்லை. ஆனால், இக் குறையானது மேற்கண்ட அரசின் தொழில் நிதி உதவிக் கழகங்களின் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்யப்படுகிறது.

## 3. அந்நியச் செலாவணி வங்கிகள் (Foreign Exchange Banks)

சில வாணிக வங்கிகள், அவற்றிற்கே உரித்தான பல பணிகளோடு அந்நியச் செலாவணி மாற்றங்களுக்கும் உதவுகின்றன. வெளிநாடுகளில் அயல்நாட்டு வாணிகத்திற்கு மட்டும் உதவக் கூடிய அந்நியச் செலாவணி வங்கிகள் உள்ளன. இவை வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்கு மதியாளர்களுக்கும் நிதியுதவி அளிக்கின்றன. பன்னாட்டு வாணிகத்திற்குப் பயன்படும் 'மாற்று உண்டியல்களை' வாங்குவதையும் விற்பதையும் இவை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளன. இவ்வகை வங்கிகள் பல நாடுகளின் முக்கிய நகரங்களில் கிளைகளைப் பெற்றிருக்கின்றன. நம் நாட்டில் லாயிட்ஸ் பாங்க், பாங்க் ஆஃப் டோக்கியோ, நியூயார்க் சிட்டி பாங்க், கிரிண்ட்லேஸ் பாங்க் போன்றவை அந்நியச் செலாவணி வங்கிகளின் பணிகளை ஆற்றுகின்றன.

## 4. வேளாண்மை வங்கிகள் (Agricultural Banks)

விவசாயிகளுக்கு டிராக்டர்கள் போன்ற பெரிய இயந்திரங்களை வாங்குவதற்கு நீண்டகாலக் கடனும், பம்பு செட்டுகள், வேளாண்மைக் கருவிகள், கால்நடைகள் போன்றவற்றை வாங்கி, கிணறுதோண்டுதல் போன்ற நிரந்தர வசதிகளைப் பெருக்கிக் கொள்ள நடுத்தரக் காலக்கடனும், விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றை வாங்கக் குறுகிய காலக் கடனும் தேவைப்படுகின்றன. மேலைநாடுகளில் இவ் வங்கிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. இந்தியாவில் கூட்டுறவு வங்கிகள் (Co-operative

Banks) விவசாயிகளுக்குக் குறுகிய கால–இடைக்காலக் கடன்களையும், நில அடைமான வங்கிகள் (Land Mortgage Banks) நீண்ட காலக் கடன்களையும் அளிக்கின்றன. ஆனால், இவை அளிக்கும் கடனளவு மிகக் குறைவாக இருப்பதால், இந்திய விவசாயிகள் கிராம லேவாதேவிக்காரர்களிடமிருந்தும், பெரிய நிலச்சுவான்தாரர்களிடமிருந்தும் கொடிய உயர்வட்டி வீதத்தில் கடனைப் பெறுகின்றனர். கனடா, அமெரிக்கா போன்ற சில நாடுகளில் வாணிக வங்கிகள் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனையும் அளிப்பது குறிப்பிடத்தக்கது.

### 5. சேமிப்பு வங்கிகள் (Savings Banks)

உலகின் பல நாடுகளில் சேமிப்பு வங்கிகளாகச் செயல்படுபவை அஞ்சலகங்களும் வாணிக வங்கிகளும் ஆகும். வாணிக வங்கிகளின் 'சேமிப்பு வைப்பு' (Savings Deposit) முறை மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. பாங்க் ஆஃப் மதுரை போன்ற வாணிக வங்கிகளிலும், அஞ்சலகச் சேமிப்பு முறையிலும் பரிசு திட்டங்கள் புகுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சிறுசேமிப்பின் அளவு பெருகும் என நம்பலாம்.

### 6. மத்திய வங்கி (Central Bank)

மற்ற எல்லாவகை வங்கிகளையும் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி, வழிப்படுத்துவது மத்திய வங்கியாகும். இது அரசின் வங்கியாக அமைந்து நாட்டிற்கான பணக்கொள்கையைச் செயல்படுத்தும். மற்றவகை வங்கிகளைப்போல மத்திய வங்கி இலாப நோக்கோடு செயல்படுவதில்லை. நாட்டிலுள்ள எல்லா வங்கிகளுக்கும் தலைமை வங்கியாக இருப்பது மத்திய வங்கியே. இதுவே அரசின் பண நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்றுக் காகிதப் பணத்தையும் வெளியிடுகிறது.

### 7. உலக வங்கி (World Bank)

'புனரமைப்பிற்கும் வளர்ச்சிக்குமான பன்னாட்டு வங்கி' (International Bank for Reconstruction and Development) என்ற பெயரை உடைய உலக வங்கி பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. இதுபோன்று வேறு பல பன்னாட்டு நிதி நிறுவனங்களும் வளரும் நாடுகளுக்குக் கடனுதவி செய்கின்றன.

பணச் சந்தையில் இவ் வகை வங்கிகளோடு சீட்டு நிதி நிறுவனங்கள் போன்றவையும் பங்கு வகிக்கின்றன. லேவாதேவிக்

காரர்கள், நிலக்கிழார்கள் போன்றோரும் உயர்வட்டியில் கடன் அளிக்கின்றனர்.

## II. வாணிக வங்கியின் பணிகள்

பலவகை வங்கிகள் இருந்தாலும் வாணிக வங்கிகளே அதிக எண்ணிக்கையில் நிறைந்த செல்வாக்குடன் திகழ்கின்றன. ஒரு நாட்டின் மொத்தப் பண அளிப்பில் வங்கிப் பணத்தின் வீதம் அதிகமாக உள்ளது. எனவே, பொருளாதாரப் போக்கையே மாற்றியமைக்கும் திறனை வங்கிகள் பெற்றுள்ளன. வாணிக வங்கியின் பணிகளை முதன்மைப் பணிகள் (primary functions), துணைப் பணிகள் (subsidiary functions) என இரு பிரிவுகளாகப் பகுத்து விளக்கலாம்.

### முதன்மைப் பணிகள்

**1. வைப்பு நிதிகளை ஏற்பது :** மக்களிடமிருந்து வைப்பு நிதிகளை ஏற்பதே வாணிக வங்கியின் முக்கியப் பணியாகும். வாணிக வங்கியில் 'நடப்பு வைப்பு' (current deposit) நிதியைக் கொண்டிருப்பவர் எப்போது வேண்டுமானாலும் பணத்தைத் திரும்பப் பெறலாம். சிறிய அளவுச் சேமிப்பை வங்கியில் இட்டுத் தேவையானபோது திரும்பப்பெற 'சேமிப்பு வைப்பு' (savings deposit) உதவும். வங்கியானது 'நிலை வைப்புக்கு' (fixed deposit) உயர்வட்டி வீதத்தை அளிக்கிறது. இவ்வகை வைப்பில் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகுதான் பணத்தைத் திரும்பப்பெற முடியும். 'தொடரும் வைப்பில்' (recurring deposit) குறிப்பிட்ட அளவுப் பணத்தை வாரந்தோறும் அல்லது மாதம்தோறும் செலுத்தி, இறுதியில் கூட்டுவட்டியுடன் மொத்தப் பணத்தைத் திரும்பப் பெறலாம். இவ்வாறு பலவகை வைப்புகளின்மூலம் பணத்தைப் பெற்ற வங்கி, அதை உயர்வட்டி வீதத்தில் வாணிகர்களுக்கும், தொழில் முயல்வோருக்கும் கடனாகத் தருகிறது. காசோலை முறை பணத்தைத் திரும்பப் பெறவும், பிறருக்குக் கொடுக்கவும் உதவுகிறது. நம் நாட்டில் சில வாணிக வங்கிகள் நடப்பு வைப்பிற்குக் கூட குறைந்தவீத வட்டியைத்தரத் தொடங்கியுள்ளன. ஆனால், 'அழைப்பு வைப்புக்கு' (deposit at call) ஸ்டேட் பாங்கில் வட்டி தரப்படுவதில்லை. பிற வாணிக வங்கிகளில் மிகக் குறைந்த வட்டி அளிக்கப்படுகிறது.

**2. கடன்களை அளிப்பது :** வாணிக வங்கிகள் இலாப நோக்குடனே செயல்படுகின்றன. அவை குறைந்த வட்டி வீதத்தில் பொதுமக்களிடமிருந்து பணத்தை வைப்பு நிதிகளாகப்

பெற்று, அதை உயர்வட்டி வீதத்தில் வாணிகர்களுக்கும், தொழில் அமைப்பாளர்களுக்கும் கடனுகத் தருகின்றன. இந்தியாவில் வாணிக வங்கிகளிடையே போட்டி நிலவுவதால், அவை சிறப் பாகவே செயல்படுகின்றன. இலாபத்தைப் பெறுவது நோக்க மாக இருப்பினும், இவற்றின் பணியால் ஆக்க நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பெரும்பாலும் அடைமானத்தின் பேரில் கடன்கள் தரப்படுகின்றன.

**3. வாணிக மாற்று உண்டியல்களைக் கழிவு செய்து தருதல்** (Discounting of Bills of Exchange) : உள்நாட்டு வாணிகமும், வெளிநாட்டு வாணிகமும் மாற்று உண்டியல்களின்மூலமே நடைபெறுகின்றன. குறிப்பிட்ட காலம் கடந்த பிறகுதான் மாற்று உண்டியல்களைப் பணமாக்க முடியும். ஆனல், மாற்று உண்டியலை வைத்திருப்பவருக்கு உடனடியாகப் பணம் தேவைப் பட்டால், அதை வங்கியிடம் கொடுத்துப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறு, உண்டியல்களைக் கழிவு செய்து தருவ தன்மூலம் வங்கி இலாபமடைகிறது.

**4. குறைந்த செலவில் பணத்தை அனுப்புதல்** : காசோலை வங்கிப் பேற்றுரிமைச் சீட்டு (bank draft), அஞ்சல்மாற்றம் (mail transfer) போன்றவற்றின் உதவியால் ஓரிடத்திலிருந்து வேறேர் இடத்திற்குப் பணத்தைக் குறைந்த செலவில் அனுப்ப லாம். இவ்வாறு சிக்கனப் பணமாற்று முறைகளையும் வாணிக வங்கிகள் செயல்படுத்துகின்றன.

**துணைப் பணிகள்**

வங்கியோடு தொடர்பு கொண்டிருக்கும் வாடிக்கையாளர் களின் வசதிக்காகச் சில பணிகளை வாணிக வங்கி செய்கின்றது :

1. வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட காலங்களில் கட்ட வேண்டிய ஆயுள் காப்பீட்டுப் பணம், மற்றக் கட்டணங்கள் போன்றவற்றை வங்கி செலுத்துகிறது.

2. வாடிக்கையாளர்களின் பங்குகளுக்கான இலாப ஈவை யும், கடன் பத்திரங்களுக்கான வட்டியையும் வசூலிக்கின்றது.

3. வாடிக்கையாளர்களின் பொறுப்பாளராகவும் சார் பாளராகவும் செயல்படுகிறது.

4. வாடிக்கையாளர்களுக்காகப் பங்குகள், கடன் பத்தி ரங்கள் ஆகியவற்றை வாங்கும் பணியிலும் ஈடுபடுகிறது.

வாணிக வங்கிகள் வேறு சில பொதுவான பணிகளையும் ஆற்றுகின்றன.

1. விலையுயர்ந்த நகைகளையும் பொருள்களையும் பத்திரங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான வசதிகள் வாணிக வங்கிகளில் உள்ளன.

2. வாடிக்கையாளரின் நிதி நிலைமை பற்றிச் சான்றிதழ்கள் தருகின்றன.

3. அயல்நாட்டு வாணிகத்தில் வெளிநாட்டு வியாபாரிக்குப் பணத்தை அனுப்பும் பொறுப்பை வாடிக்கையாளருக்காக ஏற்கின்றன.

4. வங்கி முறை, தொழில்நிலை, வாணிக நிலவரம் போன்றவை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டித் தேவையானவர்களுக்கு அளிக்கின்றன.

இவ் வகைகளில் வாணிக வங்கியின் பணிகள் பல துறையைச் சார்ந்தவர்களுக்கும் பயனளிக்கின்றன. நகர்ப்புறங்களில் பெரும் பாலோர் வாணிக வங்கிகளின் வாடிக்கையாளர்களாகவே உள்ளனர்.

## III. மத்திய வங்கி (Central Bank)

அரசின் வங்கியாகச் செயல்படவும், நாட்டில் இருக்கும் வங்கிகளைக் கண்காணிக்கவும், சட்டமுறைக் காகிதப் பணத்தை வெளியிட்டு நிர்வகிக்கவும் மத்திய வங்கி உதவுகிறது. இன்று உலகில் மத்திய வங்கி இல்லாத நாடே இல்லை எனலாம். 1609ஆம் ஆண்டு டென்மார்க்கில் அமைக்கப்பட்ட ஆம்ஸ்டர்டாம் வங்கியும், 1656-ல் ஸ்வீடனில் அமைக்கப்பட்ட ரிக்ஸ் வங்கியும், 1688-ல் ஸ்வீடன் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு வங்கியும் முதன்முதலில் நிறுவப்பட்ட சில மத்திய வங்கிகளாகும். எனினும் 1694-ல் வில்லியம் பேட்டர்சன் என்னும் ஸ்காட்லாந்து வாணிகர் தனியார்துறையில் அமைத்த 'பாங்க் ஆஃப் இங்கிலாந்தே' பிற நாடுகளில் மத்திய வங்கி தோன்றுவதற்கான முன்மாதிரியாக இருந்தது. பிரான்ஸ் நாட்டில் மத்திய வங்கி 1800-ல் நெப்போலியனால் துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல ஐரோப்பிய நாடுகளும் மத்திய வங்கியை ஏற்படுத்தின.

இந்திய ரிசர்வு வங்கி நம் நாட்டின் மத்திய வங்கியாகும். ஃபெடரல் ரிசர்வு வங்கிகள் அமெரிக்காவில் மத்திய வங்கிகளாகச்

செயல்படுகின்றன. ரஷ்யாவிலும் மத்திய வங்கி உள்ளது. மத்திய வங்கி பிற வங்கிகளினின்றும் பல வகைகளில் வேறுபட்டிருக்கிறது. மத்திய வங்கியைத் தவிர்த்த எல்லா வங்கிகளும் இலாப நோக்குடன் செயலாற்றுகின்றன. பொதுமக்களுடைய நலனுக்கேற்றபடி மத்திய வங்கி பணிகளை ஆற்றுகிறது. அரசின் பணக் கொள்கைக்கேற்ப மத்திய வங்கி செயல்படும். அதன் பணிகளைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கூறலாம்:

## 1. மத்திய அரசின் வங்கி

உலகின் அனைத்து நாடுகளிலும் மத்திய வங்கி அரசின் வங்கியாகவே செயல்படுகிறது. அது அரசு பொதுக் கடனைத் திரட்டுவதற்கு உதவுகிறது. நிதித் தொடர்பான நடவடிக்கைகளில் அரசுக்கு ஆலோசனை கூறுகிறது. அரசின் நிதி நடவடிக்கைகள் மத்திய வங்கியின்மூலமே செயல்படுத்தப்படுகின்றன. இது அரசின் நிதி நிர்வாகப் பதிலாளராகவும் (agent) பணியாற்றுகிறது; மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கடன் அளிக்கிறது. அரசுக்கும் மத்திய வங்கிக்கும் இடையே சுமுக உறவு இருந்தால்தான் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறஇயலும். அரசின் பண, நிதி, வங்கிக் கொள்கைகளை நிறைவேற்றுவதும் மத்திய வங்கியே. கடன்பத்திரங்களை விற்று அரசுக்குத் தேவையான கடனைப் பெற்றுத் தருகிறது. இவற்றுல் பணத்துறைக்கும் அரசின் நிதித்துறை நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. அரசின் வைப்புகள் (deposits) மத்திய வங்கியிலேயே வைக்கப்படுகின்றன.

## 2. புழக்கப் பண வெளியீடு

காகிதப் பணத்தை வெளியிடும் பொறுப்பு மத்திய வங்கியையே சாரும். பண வெளியீட்டில் முற்றுரிமை நிலையைக் கொண்டிருப்பதால்தான், மத்திய வங்கி நாட்டிலுள்ள மொத்தப் பணம் மற்றும் கடன்மீது சிறப்பான கட்டுப்பாட்டைச் செலுத்த முடிகிறது. மிகப் பழைய காலங்களில் சில நாடுகளின் வாணிக வங்கிகள் பணத்தை வெளியிடும் உரிமையைப் பெற்றிருந்தன. ஆனல், தற்பொழுது இப் பணியை மத்திய வங்கியே செய்கிறது. பல அதிகாரங்களைக் கொண்ட மத்திய வங்கி பிறவகை வங்கிகளை எளிதில் கட்டுப்படுத்துகிறது. இதன் நடவடிக்கைகளால் பணத்தின் உள்நாட்டு-வெளிநாட்டு மதிப்புகளை நிலைநிறுத்த முடியும். பணப் புழக்கத்தில் ஒரியல்பான தன்மை அமையவே, பணத்தை வெளியிடும் உரிமை மத்திய வங்கிக்கு மட்டும் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி அரசின் வங்கியாக இருப்பதால், அது

பெறுகின்ற இலாபம் அரசையே சேர்கின்றது. நாட்டில் நிலவும் பொருளாதார-சமுதாய-அரசியல்-வாணிகச் சூழ்நிலைகளுக்கேற்ப மத்திய அரசு புழக்கப் பணத்தை வெளியிடுகிறது.

### 3. வங்கிகளின் வங்கி

மற்றெல்லா வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகச் செயல் படுவது மத்திய வங்கியே. இது பிற வங்கிகள் யாவற்றின் வளர்ச் சிக்கும் உதவுகிறது. வங்கிகளைக் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்து கிறது. வாணிக வங்கிகளோடு மத்திய வங்கி போட்டியிடுவதில்லை. ஒரு நாட்டில் வங்கி முறையைச் சிறப்பாக நிர்வகிக்கும் பொறுப்பு மத்திய வங்கியையே சாரும். கீழ்க்காணும் மூன்று வழிகளில் மத்திய வங்கி வங்கிகளின் வங்கியாகச் செயல்படுகிறது :

**(i) வங்கிகளின் ரொக்க இருப்புக் காவலன்:** நாட்டிலுள்ள எல்லா வங்கிகளும் அவற்றின் ரொக்கத்தில் ஒரு பகுதியை மத்திய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும். மத்திய வங்கியில் பிற வங்கிகள் ரொக்க இருப்பைக் கொண்டிருப்பது கட்டாய மானதால், அவ் வங்கிகளின் மீது மக்கள் நம்பிக்கைக் கொள் கிறார்கள்.

**(ii) இறுதி நிலைக் கடன் கொடுப்பவன்** (Lender of the last Resort) : மத்திய வங்கி பிற வங்கிகளுக்கு உற்ற நண்பனாக வும் பணியாற்றுகிறது. வங்கிகளுக்குப் பணப்பற்றுக்குறை ஏற் படும்போது மத்திய வங்கி உதவுகிறது. இவ்வித நெருக்கடி நிலைகளில் மத்திய வங்கி பணத்தை அளித்து வங்கிகள் சிறப்பாகத் தொடர்ந்து செயல்பட வகை செய்கிறது.

**(iii) வங்கிகளின் தீர்வகம்** (Clearing House) : மத்திய வங்கி நாடு முழுவதும் தீர்வகங்களை அமைத்துள்ளது. அனைத்து வங்கிகளும் மத்திய வங்கியில் ரொக்க இருப்பைக் கொண்டுள்ளன. பணமின்றியே வங்கிகளுக்கு இடையேயான கொடுக்கல்-வாங்கல் மத்திய வங்கியின் மீதான காசோலைகள்மூலம் நடத்தப்படுகிறது. மத்திய வங்கியின் தீர்வகங்களுக்கு வெவ்வேறு வங்கிகளின் சார் பாளர்கள் சென்று காசோலைகளை மாற்றிக்கொள்கிறார்கள்.

### 4. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு

ஏற்றுமதியைக் குறைவாகவும், இறக்குமதியை மிகுதியாக வும் கொண்டுள்ள பின்தங்கிய நாடுகளில் அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்துவது அவசியம். மிக அவசியமான இறக்குமதி களுக்கு மட்டுமே அந்நியச் செலாவணி அளிக்கப்படவேண்டும்.

ஏற்றுமதியின் அளவைப் பெருக்குவதன்மூலம் அந்நியச் செலாவணியை அதிகளவில் ஈட்டலாம். அரசு அந்நியச் செலாவணி நிர்வாகத்தை மத்திய வங்கியிடம் ஒப்படைத்துள்ளது. இதைத் தவிர, பணத்தின் வெளிநாட்டு மதிப்பை நிலைநிறுத்தும் பொறுப்பும் மத்திய வங்கியையே சேரும். நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்பவும், அரசியல் கொள்கைகளுக்குத் தக்கவாறும் பண மதிப்பு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மாறும். எனினும் பணத்தின் மதிப்பில் அதிக மாற்றம் ஏற்படாத வகையில் மத்திய வங்கி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மேலும், அரசு குறிப்பிடும் அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலை பெறச் செய்து நிர்வகிப்பதும் மத்திய வங்கியே.

### 5. கடன் கட்டுப்பாடு (Credit Control)

வங்கிகள் வைப்பு நிதிகளின் அளவைக்காட்டிலும் அதிகக் கடனைத் தருவதும் உண்டு. கடன் கருவிகளின் பெருக்கத்தால் வங்கிப் பணம் அளவில்கூடி பணவீக்கம் தோன்றக்கூடும். வங்கிகள் கடன் அளவைக் குறைப்பதால், பணவாட்டம் ஏற்படவும் வாய்ப்புண்டு. இலாபத்தைக் கூட்ட வங்கிகள் பெரும்பாலும் கடன் அளவைப் பெருக்குகின்றன. இதைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி வெளிச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது; வட்டி வீதத்தை மாற்றி அமைக்கிறது; வங்கிகளுக்கான கடன்முறையை வகுத்துத் தருகிறது. மத்திய வங்கி பிற வங்கிகளுக்குப் பல ஆலோசனைகளைக் கூறி நல்வழிப்படுத்துகிறது. மத்திய அரசின் வெவ்வேறு நடவடிக்கைகளால் கடன் பணத்தின் அளவைக் கட்டுப்படுத்த முடியும்.

### 6. மற்ற பணிகள்

மாறுபடும் பொருளாதார நிலைகளுக்குத் தக்கவாறு மத்திய வங்கி அதனுடைய கொள்கைகளை மாற்றிக்கொள்கிறது. அதிகளவு அதிகாரங்களைக் கொண்டுள்ளமையால், மத்திய வங்கி பணச் சந்தையைக் கட்டுப்படுத்துவதில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. வளரும் நாடுகளின் மத்திய வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன்களை அளிக்கின்றன; வேளாண்மைப் புனரமைப்புக்கு ஊக்கம் தருகின்றன; கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்றன; பொருளாதார முன்னேற்றத்திற்கான பண நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

## IV. இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India)

நம் நாட்டில் மத்திய வங்கியாகிய இந்திய ரிசர்வு வங்கி அண்மைக் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. 1934ஆம்

ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, 1935ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று இந்திய ரிசர்வு வங்கி செயல்படத் துவங்கியது. 1948ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அது 1949 ஜனவரி முதல் நாள் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டுக்கு முன்பு, 1921ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா என்னும் வாணிக வங்கியே நம் நாட்டின் மத்திய வங்கியாகச் செயல்பட்டு வந்தது.

ரிசர்வ் வங்கியின் அதிகாரங்களும் பணிகளும் மற்ற நாடுகளின் மத்திய வங்கிகளில் உள்ளதைப் போன்றே அமைந்துள்ளன. அரசு வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கிய பிறகு, ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள் பெருகிவிட்டன. வேளாண்மை வளர்ச்சிக்கான தனியானதொரு துறை ரிசர்வ் வங்கியில் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் பல தொழில் நிதியுதவிக் கழகங்கள் இதன் ஆதரவிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1939ஆம் ஆண்டு ஆகஸ்டு அந்நியச் செலாவணி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை அரசு ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைத்தது. இதற்கான 'அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறையும்' (Exchange Control Department) ரிசர்வ் வங்கியில் செயல்பட்டு வருகிறது.

ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தை மத்திய–வட்டாரக் குழுக்கள் (Central and Local Boards) செய்கின்றன. இது குறைந்தளவுக் காப்பீட்டு முறைப்படி பணத்தை வெளியிடுகிறது. ஒரு ரூபாய் நோட்டை மட்டும் மத்திய நிதியமைச்சகம் வெளியிடும் போது, பிற மதிப்புள்ள நோட்டுகளை ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது. முன்பு நாம் கண்ட மத்திய வங்கியின் பணிகளை ரிசர்வ் வங்கி செய்கிறது. இது வேளாண்மை, தொழில், வாணிகம், வங்கி முறை, போக்குவரத்து போன்ற பல துறைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துப் புத்தகமாக வெளியிடுகிறது.

1969ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாளிலிருந்து வங்கிகளின் மீது சமுதாயக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு 14 பெரிய வங்கிகள் தேசியவுடைமை ஆக்கப்பட்டன. இவற்றின் காரணமாக இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் மேலும் பெருகியுள்ளன.

## V. பண வெளியீட்டு முறைகள்

காகிதப் பணத்தை வெளியிடும் உரிமை அரசைச் சேரும். அப் பணியை அரசின் வங்கியாக மத்திய வங்கி செய்கிறது.

சிறந்த நன்மையைப் பெறக் காகிதப் பணம் திறமையாகக் கையாளப்படவேண்டும். வெவ்வேறு தத்துவங்களின் அடிப்படையில் பல்வேறு பண வெளியீட்டு முறைகள் அமைந்துள்ளன. காகிதப் பண அளவின் மதிப்பிற்கு ஈடாகத் தங்கத்தையும் வெள்ளியையும் இருப்பாக வைத்துக்கொள்வது 'முழு வைப்பு நிதிமுறை' (Simple Deposit System) ஆகும். ஓர் உலோகமுறை, இரு உலோக முறை, பொன்திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்ட பண்டைக் காலத்தில் ஓரளவு இம் முறை அமைந்திருந்தது. வெளியிடும் காகிதப் பண அளவின் ஒரு பகுதி மதிப்பை மட்டும் பொன்-வெள்ளியாக வைத்திருப்பது 'பகுதி வைப்பு நிதிமுறை' (Partial Deposit System) எனப்படும். மாறுபாடான இயல்புகளைக் கொண்ட பண வெளியீட்டு முறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

**(1) உச்ச வரம்பு நம்பிக்கைத் திட்டம்** (Maximum Fiduciary System)

இத் திட்டத்தின்படி மத்திய வங்கி ஒரு குறிப்பிட்ட உச்ச அளவுவரை உலோகக் காப்பீடு இன்றிக் காகிதப் பணத்தை வெளியிடலாம். அதற்குப் பொன், வெள்ளி போன்ற உலோகங்களைக் காப்பாக வைத்திருக்கத் தேவையில்லை. உலோகக் காப்பீட்டிற்கும் பண அளவுக்கும் தொடர்பு இருப்பதில்லை. அரசு பணத்தின் அளவைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ள முடிவதால், இத் திட்டம் நெகிழ்வுடையது எனலாம். அளவுக்கு அதிகமாகப் பணம் வெளியிடப்பட்டால், பணவீக்கம் தோன்றும். ஆனால், அரசு அந்த அளவுக்கு அதிகப் பணத்தை வெளியிட அனுமதிக்காது. மேலும், குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாகக் காகிதப் பணத்தை வெளியிட, உலோகக் காப்பீட்டை வைப்பது அவசியமாகிறது. ஜப்பானிலும் (1939 முதல் 1941 வரை), பிரான்ஸிலும் (1870 முதல் 1928 வரை) இத் திட்டம் அமலில் இருந்தது.

**(2) வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டம்** (Fixed Fiduciary System)

ஒரு குறிப்பிட்ட அளவுவரை பொன் காப்பீடு இன்றிக் காகிதப் பணத்தை வெளியிடலாம். ஆனால், அந்த அளவுக்கு அரசின் கடன்பத்திரங்களைக் (securities) காப்பீடாக வைத்திருக்கவேண்டும். அந்த அளவை 'நம்பிக்கை மட்டம்' (fiduciary limit) எனக் குறிப்பிடலாம். நம்பிக்கை மட்டத்திற்கு அதிகமாகப் பணத்தை வெளியிட விரும்பினால், அதிகரிக்கின்ற பண அளவுக்குச் சமமான மதிப்புடைய பொன்னைக் காப்பீடாக

வைக்கவேண்டும். எனவே, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிக மாகப் பணத்தை வெளியிடப் பொன் தேவைப்படுகிறது. இதனால், அமித அளவில் காகிதப் பணம் வெளியிடப்படுவது தடுக்கப்படு கிறது. இத் திட்டத்தால் பணவீக்கம் ஏற்படாது. எனினும், பொருளாதார மாற்றங்களுக்கேற்ப பணத்தின் அளிப்பைப் பெருக்க முடிவதில்லையாகையால், இத் திட்டம் நெகிழ்வற்ற தன்மையைக் கொண்டுள்ளது எனலாம். 1844 முதல் 1928 வரை இங்கிலாந்திலும், 1861 முதல் 1920 வரை இந்தியாவிலும் இம் முறை பின்பற்றப்பட்டது.

**(3) வீதாச்சாரக் காப்புத் திட்டம்** (Proportional Reserve System)

இத் திட்டத்தின்படி வெளியிடப்படும் பணத்தின் அளவில், அரசு குறிப்பிடும் சதவீத அளவுக்கு ஈடாகப் பொன் அல்லது வெள்ளியை இருப்பாக வைத்திருக்கவேண்டும். சமீபகாலம் வரை உலோகக் காப்பீடு அமெரிக்காவில் 25 சதவீதமாகவும், ஜெர்மனியில் 40 சதவீதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதை ஓரளவு நெகிழ்வுத் தன்மையுடைய முறை எனலாம். ஏனெனில், அரசு அது விரும்பும் வீதத்தில் உலோகக் காப்பீட்டை நிர்ணயிக்கலாம். ஆனால், தங்கம் அல்லது வெள்ளி குறைந்தளவில் நாட்டை விட்டு வெளியேறினாலும், பெருமளவில் காகிதப் பணத் தின் அளவைக் குறைக்கவேண்டிவரும். இம் முறை இந்தியாவில் 1934 முதல் 1956 வரை செயல்படுத்தப்பட்டது.

**(4) குறைந்த அளவுக் காப்புத் திட்டம்** (Minimum Reserve System)

இத் திட்டத்தின்மூலம் திட்டக் காலங்களிலும் பண வெளி யீட்டைப் பெருக்கி நன்மையடையலாம். இதன்படி ஒரு குறிப் பிட்ட குறைந்தளவுப் பொன் மற்றும் வெளிநாட்டுக் கடன்பத்தி ரங்களைக் காப்பாக வைத்துக்கொண்டு, எந்த உயர் அளவிலும் காகிதப் பணத்தை வெளியிடலாம். இம் முறையில் சட்டப்படி குறிப்பிட்ட குறைந்தளவுத் தங்கம் மட்டுமே காப்பாக வைக்கப் படுகிறது. பணத்தின் அளவுப் படிப்படியாக அதிகரித்தால்தான் பொருளாதார வளர்ச்சியை எளிதில் பெறமுடியும் என்பதைக் கருத்திற்கொண்டு நம் நாட்டில் 1956-ல் இம்முறை கைக்கொள்ளப் பட்டது. மிகவும் நெகிழ்ச்சியுடைய முறையாக இருந்தாலும், இன்று பணவீக்க நிலை ஏற்பட்டுள்ளமைக்கு இதுவே காரண மாகும். எனினும், மற்றவகைப் பண வெளியீட்டுத் திட்டங்கள் நம் நாட்டிற்குப் பொருத்தமுடையவையாக இல்லை. வேறு

வழிகளில் நிதிவசதியைப் பெருக்க அதிக வாய்ப்பில்லாமையால், திட்ட காலங்களில் அதிகக் காகிதப் பணத்தை வெளியிட்டு நிதியைத் திரட்ட இம் முறையே உதவியது.

### 5. மிகையூதிய வைப்புத் திட்டம் (Bonus Deposit System)

இத் திட்டத்தின்மூலம் உலோகக் காப்பு இல்லாமலேயே காகிதப் பணத்தை வெளியிடலாம். காப்பாக வைத்துக்கொள்ள அரசின் கருவூல உண்டியல்களைப் (treasury bills) பயன்படுத்தலாம். அமெரிக்காவில் 1913ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்படி ஓரளவு காகிதப் பணம் வெளியிடப்பட்டது. ஒருசில நாடுகளில் சூழ்நிலைகளுக்கேற்ப இத் திட்டம் கைக்கொள்ளப்பட்டது. இன்று உலகில் எந்த ஒரு நாடும் இம் முறையைப் பின்பற்றவில்லை.

காகிதப் பணத்தை வெளியிடும்போது குறைந்த அளவிலாவது பொன்னை இருப்பாக வைத்திருப்பது நல்லது என்று பலரும் கருதுகின்றனர். பொன் காப்பின்றிப் பணத்தை வெளியிடுவது பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்பதே இதற்குக் காரணமாகும். ஆனால், இவ்வகைப் பொன் காப்பின்றியே, சிறப்பான பண நிர்வாகத்தின்மூலம் மத்திய வங்கி பணவீக்கத்தைத் தவிர்க்கலாம். பண வெளியீட்டு முறையானது நெகிழ்வுத் தன்மையுடையதாக இருந்தால்தான், பொருளாதார முன்னேற்ற நிலைகளில் தடைகள் ஏற்படமாட்டா.

# 25. பன்னாட்டு வாணிகம்
## (International Trade)

**முன்னுரை**

பொருளியலில் பன்னாட்டு வாணிகம் மிக முக்கிய நிலையையும் செல்வாக்கையும் கொண்டுள்ளது. உலகின் ஏந்த ஒரு நாடும் எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவு அடைவதில்லை. பன்னாட்டு வாணிகம் வளர்ந்துள்ளமைக்கு இயற்கைச் சார்வாதீனம் ஒரு முக்கியக் காரணியாகிறது. குறிப்பிட்ட சில கனிவளங்கள் குறிப்பிட்ட சில இடங்களிலேயே அமைந்துள்ளன. அதனால், அவ்விடங்கள் குறிப்பிட்ட பொருள்களை அதிகளவில் உற்பத்தி செய்கின்றன. எடுத்துக்காட்டாகத் தென்ஆப்பிரிக்காவின் வைர உற்பத்தியையும், மலேயாவின் தகர உற்பத்தியையும், கனடாவின் நிக்கல் உற்பத்தியையும், அரபுநாடுகளின் எண்ணெய் உற்பத்தியையும், இந்தியாவின் சணல் உற்பத்தியையும், ஸ்ரீலங்காவின் தேயிலை உற்பத்தியையும் குறிப்பிடலாம். மண்ணின் இயல்புக்கு ஏற்ப சில வேளாண்மைப் பொருள்கள் குறிப்பிட்ட பகுதிகளிலேயே மிகையாக விளைகின்றன. பிரேசில் நாட்டின் காப்பி உற்பத்தியை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

மேலும், குறிப்பிட்ட இடங்களில் வசிக்கும் மக்கள் சில வகைப் பொருள்களைச் செய்வதில் தேர்ச்சியும் திறமையும் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். ஸ்விட்சர்லாந்து நாட்டவர் கடிகாரங்கள் செய்வதில் திறமை பெற்றவர்களாகவும், ஜப்பானியர்கள் பலவகை மின்னியல் நுகர் பொருள்களை உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் உள்ளனர். ஆங்கிலேயர்களும் ஜெர்மனியர்களும் அமெரிக்கர்களும் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்வதில் வல்லவர்களாவர். இக் காரணங்களால் சில பொருள்களைக் குறிப்பிட்ட நாடுகள்தான் குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடியும். இவ்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யாத

நாடுகள், இவற்றோடு வாணிகத் தொடர்புகொண்டு தேவையான பொருள்களை வாங்குகின்றன.

**வாணிகத்திற்கான அடிப்படை**

வேலைப் பகுப்பு முறையே வாணிகத்திற்கு அடிப்படையாக அமைகிறது. தனிப் பயிற்சியாலும் தேர்ச்சியாலும் திறமை யாலும் சில இடங்களில் உள்ளவர்கள் தரமான பொருள்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்கிறார்கள். இதனால், உற்பத்தி யாளர்கள் நன்மையடைவதோடு நுகர்வோரும் பயனடைகின் றனர். தொழில் பகுப்பின் அடிப்படையில் உலக நாடுகளிடையே வாணிகம் நடைபெறுகிறது. குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அதிகளவில் பெற்றுள்ள ஒரு நாடு, அப் பொருளின் உற்பத்தியிலேயே கவனத்தைச் செலுத்தவேண் டும். அந் நாடு அப் பொருளைக் குறைந்த செலவில் அதிகமாக உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். அதற் குப் பதிலாக அந் நாடு பிற நாடுகளிலிருந்து தேவையான பொருள்களைக் குறைந்த செலவில் இறக்குமதி செய்துகொள்ள லாம். இதனால், எல்லா நாடுகளும் நன்மையடைகின்றன. பன் னாட்டு வாணிகத்தால் உலகின் மொத்த ஆக்கம் கூடி மக்கள் நல்வாழ்வைப் பெறுகின்றனர்.

**உள்நாட்டு வாணிகமும் பன்னாட்டு வாணிகமும்**

ஓர் அரசாட்சிக்கு உட்பட்ட எல்லைக்குள் வாழும் மக்க ளிடையே நடைபெறுவது உள்நாட்டு வாணிகம். வெவ்வேறு அரசாட்சிக்கு உட்பட்ட நாடுகளின் வாணிகரிடையே நடைபெறு வது பன்னாட்டு வாணிகம். உலக நாடுகளிடையே இயற்கை வளம், தொழில்வளர்ச்சி, வேளாண்மை முன்னேற்றம், தட்பவெப்ப நிலை, உழைப்பாளரின் திறமை, அறிவியல் மேம்பாடு ஆகியவற்றில் வேறுபாடுகள் இருப்பதால்தான் வேலைப்பகுப்பு, தொழிற்பகுப்பு முதலியவற்றின் அடிப்படையில் பன்னாட்டு வாணிகம் நடைபெறு கிறது.

உள்நாட்டு வாணிகத்திற்கும் பன்னாட்டு வாணிகத்திற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. உள்நாட்டு வாணிகத்தில் ஈடுபடுவது எளிது. பல்வேறு சிக்கல்கள் இருப்பதால்தான், பன்னாட்டு வாணிகத்தில் பல கோட்பாடுகள் உருவாகியுள்ளன. தொன்மைப் பொருளியலாளர்களான ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ ஆகியோர் முதல் அண்மைக்கால பொருளியலாளரான பெர்டில் ஓலின் (Bertil Ohlin) வரைப் பலரும் பலவகைப் பன்னாட்டு

வாணிகக் கோட்பாடுகளைத் தந்துள்ளனர். பன்னாட்டு வாணிகத் திற்கும் உள்நாட்டு வாணிகத்திற்கும் இடையே உள்ள வேறு பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

**1. உழைப்பாளரின் இடம் பெயரும் தன்மை:** ஒரு நாட்டின் வெவ்வேறு பகுதிகளிடையே, நிலத்தைத் தவிர்த்த பிற ஆக்கக் காரணிகள் எளிதில் இடம் பெயர்கின்றன. அதிகக் கூலி கிடைக் கும் இடங்களுக்குச் சென்று உழைப்பைத் தர உழைப்பாளர்கள் முன்வருகின்றனர். ஆனால், நாடுகளிடையே உழைப்பாளர்கள் இடம் பெயர்ந்து செல்வது அரிதே. இனம், மொழி, பழக்க வழக்கங்கள், சமயம், சட்டதிட்டங்கள், பாரம்பரியம், சமூக அமைப்பு, அரசியல் முறை ஆகியவை நாடுகளிடையே வேறுபடு வதால் பன்னாட்டளவில் உழைப்பு, பெயர்ச்சியற்ற காரணியா கிறது. ஆனால், மிக அதிக ஊதியம் கிடைக்கும்போது, மூன்ன உழைப்பைத் தருபவர்கள் நாடுகளிடையே இடம்பெயரத் தயா ராக உள்ளனர். உதாரணமாக, நம் நாட்டின் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குக் குடி பெயர்ந்துசெல்ல விருப்புக் கொண்டுள்ளனர். அவர்களுடைய உழைப்பிற்குத் தகுந்த ஊதி யம் இங்கு வழங்கப்படாமையே இதற்குக் காரணமாகும்.

**2. மூலதனப் பெயர்ச்சி :** நாட்டிற்குள்ளாக மூலதனம் எளிதில் இடம் பெயர்கின்றது. சென்னையைச் சேர்ந்த திரைப் படத் தயாரிப்பாளர் ஒருவர் பல வசதிகளின் காரணமாகப் பெங்க ளூரில் தன்னுடைய தொழிலை நடத்தலாம். கல்கத்தாவைச் சேர்ந்தவர் சென்னையில் முதலீடு செய்வதையும், ஹைதராபாத் தைச் சேர்ந்தவர் கேரளத்தில் முதலீடு செய்வதையும், பம்பாய் வாசி ஒருவர் டில்லியில் முதலீடு செய்வதையும் நாம் காண் கிறோம். இவ்வாறு ஒரு நாட்டிற்குள்ளாக மூலதனப் பெயர்ச்சி எளிதாக இருக்கும்போது, நாடுகளிடையே மூலதனப் பெயர்ச்சி மிகக் குறைந்த அளவிலேயே ஏற்படுகிறது. குடியிறக்கக் கட்டுப் பாடு, அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு ஆகியவற்றால் உழைப் பும் மூலதனமும் பன்னாட்டளவில் அதிகமாக இடம் பெயர்வ தில்லை.

**3. அரசின் கொள்கைகள் :** நாடுகளிடையே அரசின் பொருளாதார, சமுதாய, பண, நிதிக் கொள்கைகள் வேறுபடு கின்றன. ஆனால், ஒரு நாட்டிற்குள்ளாக இக் கொள்கைகள் ஒரே மாதிரியான இயல்புடையவை. இதன் காரணமாக உள்நாட்டு வாணிகத்தைச் செய்வது எளிதானதாகவும், வெளிநாட்டு வாணி

கத்தை மேற்கொள்வது கடினமானதாகவும் உள்ளது. அரசின் கொள்கைகள் நாடு முழுவதையும் ஒரே மாதிரியாகப் பாதிப்பதால் உள்நாட்டு வாணிகம் பிரச்சினையின்றி நடைபெறுகிறது. நாடுகளிடையே மத்திய வங்கிகளின் கொள்கையும், நிதி அமைச்சகங்களின் கொள்கையும் வேறுபடுமாகையால் பன்னாட்டு வாணிகத்தை மேற்கொள்வது பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

**4. உற்பத்திக்கான வசதிகள் :** ஒரு நாட்டின் போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகள், வாணிக நிலை, வரிவிதிப்பு, அரசின் விதிமுறைகள், சட்டதிட்டங்கள் ஆகியவற்றிற்கேற்ப உற்பத்தியின் அளவு அமைகிறது. மற்ற நாடுகளில் உற்பத்திக்கான இச் சூழ்நிலைகள் வேறுபடுகின்றன. மேலும், நாடுகளுக்கு இடையே தொழில் சட்டங்களும், வாணிகச் சட்டங்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆக்கத்திற்கான சூழ்நிலைகள் ஒரு நாட்டிற்குள் ஒரே இயல்பைக் கொண்டிருக்கும்போது, நாடுகளிடையே மாறுபடுகின்றன.

**5. நுகர்வோருடைய விருப்பத்தை அறிதல் :** வெளி நாட்டு நுகர்வோரின் பண்பாடு, நாகரிகம், விருப்பு ஆகியவற்றை அறிந்து அதற்கேற்ப உற்பத்தியையும் விற்பனையையும் செய்வது கடினம். ஆனால், ஒரு நாட்டிற்குள்ளாகவே வாழும் மக்களுடைய விருப்பு வெறுப்புகளை எளிதில் தெரிந்து கொள்ளலாம்; விருப்பங்களில் தோன்றும் மாற்றங்களுக்கேற்ப உற்பத்தியை மாற்றி அமைக்கலாம். உலக நாடுகளில் பலவும் எல்லாவகைப் பொருள்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவு பெறவே விரும்புகின்றன. ஆனால், அதற்கான வசதிகள் இல்லாமையால்தான், சில பொருள்களைப் பெறுவதற்கு அந்நிய நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

**6. செலாவணி :** உள்நாட்டு வாணிகத்தில் ஒரே மாதிரியான சட்டமுறைப் பணம் புழக்கத்தில் உள்ளது. வெளிநாட்டு வாணிகத்தில் பலவகைப் பணங்களும் இருப்பதால், ஒரு நாட்டுப் பணத்தை மற்றொரு நாட்டுப் பணமாக மாற்றவேண்டியது அவசியமாகிறது. அந்நியச் செலாவணி முறையில் மாற்றுவீதச் சிக்கல்கள் தோன்றுகின்றன.

**7. பண்டங்களின் இடப் பெயர்ச்சி :** ஒரு நாட்டிற்குள் வெவ்வேறு இடங்களுக்கும் அதிகத் தடைகளின்றிப் பண்டங்களை எடுத்துச் செல்லலாம். ஆனால், பன்னாட்டு வாணிகத்தில் சுங்க வரிகளின்மூலம் இறக்குமதியும் ஏற்றுமதியும் கட்டுப்படுத்தப்

படுகின்றன. வெளிநாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதிலும், வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்வதிலும் அரசின் கட்டுப்பாடுகள் அமைந்துள்ளன. வெளிநாட்டு வாணிகத்தில் பண்டங்களின் இடப்பெயர்ச்சி சுங்க வரிகள் (tariffs), மானியங்கள் (grants), பங்களவுகள் (quotas), ஒப்பந்தங்கள் (contracts) ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

**8. போக்குவரத்துச் செலவு :** உள்நாட்டில் பொருள்களை விற்பனை செய்வதற்கான செலவு குறைவாக இருக்கும். பன்னாட்டு வாணிகம் பெரும்பாலும் கப்பல்களின்மூலமே நடைபெறுகிறது. இதனால், பன்னாட்டுச் சந்தைகளுக்குப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பதற்கான போக்குவரத்துச் செலவு உயர்வாக அமைகிறது. விலையோடு போக்குவரத்துச் செலவும் சேர்க்கப்படுவதால் உள்நாட்டுப் பொருள்களின் விலைகள் குறைவாக இருக்கின்றன. அயல்நாட்டுப் பொருள்கள் மிகையான போக்குவரத்துச் செலவை கொண்டிருப்பதோடு, அவற்றின் மீது வரிகளும் விதிக்கப்படுவதால் விலைகள் உயரளவில் அமைகின்றன. அயல்நாட்டு வாணிகத்தில் 'கடல் காப்பீட்டு' வசதியைப் பெறுவதும் அவசியமாகிறது.

**9. வாணிக முறை :** உள்நாட்டு வாணிகத்தில் அதிகளவில் பணமே பயன்படுத்தப்படுகிறது. பன்னாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே செய்யப் பெறுகின்றது. ஒரு நாடு இறக்குமதி செய்யும் பொருள்களின் இறக்குமதி மதிப்பிற்கு ஈடாக வேறு பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையே தோன்றும் இடைவெளியைச் சரிசெய்யவே தங்கம் அல்லது அந்நியச் செலாவணி பயன்படுத்தப்படுகின்றது.

## பன்னாட்டு வாணிகத்தின் சிறப்புகள்

பன்னாட்டு வேலைப்பகுப்பின் அடிப்படையிலேயே பன்னாட்டு வாணிகம் செயல்படுகின்றது. பன்னாட்டு வாணிகத்தால் வட்டார வேலைப்பகுப்பு, தொழிற்செறிவு ஆகியவை சிறப்புப்பெற்று உற்பத்தியில் அகச்சிக்கனங்களும் புறச்சிக்கனங்களும் பெறப்படுகின்றன. 'விலைக்கு வாங்குவதைவிட உற்பத்தி செய்வதற்கு அதிகச் செலவு பிடிக்கும் பொருளை உற்பத்தி செய்யாமல் வாங்குதலே சிறந்தது', என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்த பன்னாட்டு வாணிகம் பின்வரும் நன்மைகளைப் பெற்றிருக்கிறது:

**1. எல்லோரும் பயனடைதல் :** ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட பொருள்களையே உயரளவில் உற்பத்தி செய்கின்றன.

அப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான பல இயற்கை வசதி களையும், உற்பத்தி செய்வதனால் சில அனுகூலங்களையும் அந் நாடு பெற்றிருக்கிறது. பன்னாட்டு வாணிகத்தால் உலக நாடுகளின் மொத்த ஆக்கம் கூடி மக்கள் நல்வாழ்வைப் பெறுகின்றனர்.

**2. பல பொருள்களையும் பெறுதல் :** நம் நாட்டில் பெரிய தொழில்களுக்குத் தேவையான இயந்திரச் சாதனங்களையும், கருவி களையும், இரசாயனப் பொருள்களையும் வளர்ச்சியடைந்த நாடு களிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவினின்றும் தேயிலை, காப்பி, சணல் முதலிய பொருள்களைப் பெறுகின்றன. மனித உயிரைக் காக்கும் மருந்துப் பொருள்களையும் நாம் சில அயல் நாடுகளிலிருந்து தருவிக் கிறோம். இன்றுள்ள சூழ்நிலைகளில் ஒரு நாடு பன்னாட்டு வாணி கத்தால் எவ்வகைப் பொருளையும் இறக்குமதி செய்ய இயலும்.

**3. பொருள்களின் விலை மலிவு :** பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகள் பலவகைப் பொருள்களைக் குறைந்த விலையில் பெறுகின்றன. இதனால், மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர் கிறது. உற்பத்திச் செலவுக் குறைவின் நன்மைகள் நாடுகளிடையே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. தரம் உயர்வானதும், விலை மலி வானதுமான பொருள்களை வெளிநாட்டு வாணிகத்தைச் செய் யும் மக்கள் பெறுகின்றனர்.

**4. நாடுகளிடையே நல்லுறவு :** பன்னாட்டு வாணிகம் நாடுகளிடையே நல்லுறவு, கூட்டுறவு, நல்லெண்ணம் ஆகியவற்றை வளர்க்கிறது. ஜெர்மனியப் பொருளியலறிஞர் குன்னர் மிர்டால் (Gunnar Myrdal) நாடுகளிடையே நட்புறவு நிலவ வேண்டியதன் அவசியத்தை விளக்கியுள்ளார். நாடுகளிடையே போர், பகைமை யுணர்ச்சி போன்றவை தோன்றுமலிருக்கப் பன்னாட்டு வாணி கம் உதவுகிறது.

**5. பஞ்சகாலநன்மை :** போர், புவியதிர்ச்சி, வெள்ளம், பாதக தட்ப-வெப்ப நிலை போன்றவற்றுல் ஒரு நாட்டில் பஞ்சம் தோன்றும்போது, வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்ளலாம். பங்களாதேஷ் விடுதலையடைந்த பிறகு உணவுப் பொருள்கள், துணிமணிகள், மருந்துகள் ஆகிய வற்றை இந்தியா அந் நாட்டு மக்களுக்கு அளித்ததை உதாரண மாகக் கொள்ளலாம். நம் நாட்டில் வறட்சியால் உணவுப் பற்றுக் குறை தோன்றியபோது, அமெரிக்கா பி. எல். 480 நிதியின் கீழ் கோதுமை, பார்லி ஆகியவற்றை நமக்கு அளித்து உதவியது.

**6. முற்றுரிமைத் தடுப்பு :** உள்நாட்டு வாணிகத்தில் சில உற்பத்தியாளர்கள் முற்றுரிமை நிலையைப் பெற்றிருப்பதால், பொருள்களின் விலைகளைப் பலமடங்குஉயர்த்திக் கொள்ளை இலாபம் பெறக்கூடும். இதைத் தடுக்க அவ்வகைப் பொருள்களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். பன்னாட்டு வாணிகத்தால் சர்வாதீன நிலை தடுக்கப்படுகிறது. பொருள்களைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யலாமென்ற அச்சத்தின் காரணமாக உள்நாட்டு வாணிகர்கள் விலையை உயர்த்தமாட்டார்கள். இதனால், நுகர்வோருடைய நலன் காக்கப்படுகிறது.

**7. பங்கீட்டுச் சிக்கல் இல்லாமை :** தனது தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யும் பொருள்களை ஒரு நாடு ஏற்றுமதி செய்கிறது. இதனால், பொருள்கள் விற்பனையாகாமல் தேங்குவதில்லை. உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படப் பன்னாட்டு வாணிகம் வகைசெய்கிறது. பொருள்களின் விலைகளில் திடீர்ச் சரிவும் ஏற்படாது. அரபுநாடுகளில் பெட்ரோலியப் பொருள்களும், பிரேசில் நாட்டில் காப்பிக்கொட்டையும், அமெரிக்காவில் கோதுமையும் மிகுதியாக உற்பத்தியாகின்றன. அப்பொருள்களை அந்த நாடுகள் ஏற்றுமதி செய்யாவிட்டால் விலைகளில் பெருமளவு வீழ்ச்சி தோன்றும்.

**8. கச்சாப் பொருள்கள் :** தொழிலில் மேம்பாடடைந்த நாடுகள் பிற நாடுகளினின்றும் கனிப் பொருள்களை இறக்குமதி செய்து உற்பத்தியில் ஈடுபட முடிகிறது. இயற்கை வளங்களைக் குறைந்தளவில் பெற்றிருக்கும் ஜப்பான், தேவையான மூலப் பொருள்களை அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து எண்ணிறைந்த நுகர்பொருள்களை உற்பத்தி செய்து உலகம் முழுவதும் விற்பனை செய்கிறது. வளர்ச்சி குன்றிய நாடுகள் சில, வேளாண்மைப் பொருள்களைத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, தமது தொழில் வளத்தைப் பெருக்குவதற்கான பெரிய இயந்திரச் சாதனங்களை இறக்குமதி செய்து கொள்கின்றன.

**9. போக்குவரத்து வசதிகளின் முன்னேற்றம் :** பன்னாட்டு வாணிகத்தால் உள்நாட்டிலும், நாடுகளுக்கு இடையேயும் போக்குவரத்து வசதிகள் பெருகி வளர்கின்றன. கப்பல், இருப்புப் பாதை, சாலைப் போக்குவரத்து வசதிகள் வெளிநாட்டு வாணிகத்திற்கு உதவுகின்றன. போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகள் இன்று காலத்தையும் தூரத்தையும் வெற்றி கொண்டுள்ளமைக்குப் பன்னாட்டு வாணிக வளர்ச்சி முக்கியக் காரணமாகிறது.

**10. முதலீட்டின் அளவு கூடுதல் :** பன்னாட்டு வாணிகத்தால், பொருள்களுக்கான தேவை உலகச் சந்தையில் நிர்ணயிக்கப்படுகிறது. உலகச் சந்தையில் பொருள்களின் தேவை மிகுதியாகவே அமையும். எனவே, உற்பத்தியாளர்கள் பொருள்களை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து விற்க இயலுமென்பதால், பலவகைத் தொழில்கள் வளர்கின்றன; முதலீட்டின் அளவு கூடுகிறது.

**பன்னாட்டு வாணிகத்தால் ஏற்படும் தீமைகள்**

பன்னாட்டு வாணிகத்தால் பல நன்மைகள் ஏற்பட்டாலும், அதனால் சில தீமைகளும் விளைகின்றன. கவனமான நடவடிக்கைகளின்மூலம் இத் தீமைகளைக் களையலாம்.

**1. தன்னிறைவுக்குத் தடை :** பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதால், ஒரு நாட்டில் குறிப்பிட்ட சில பண்டங்களே உற்பத்தி செய்யப்படுகின்றன. பலவகைப் பொருள்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவு பெறுவதே நன்மை பயப்பதாகும். ஒவ்வோர் உலக நாடும் இன்றியமையாத சில பொருள்களின் உற்பத்தியிலாவது தன்னிறைவைப் பெற்றிருக்கவேண்டும். பன்னாட்டு வாணிகம் தன்னிறைவு உற்பத்திக்குத் தடையாக உள்ளது.

**2. அந்நியர் ஆட்சி :** 'வாணிகம் வரும் முன்னே; கொடி வரும் பின்னே' என்று சொல்லப்படுவதுண்டு. ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியம் இந்திய மண்ணில் வேரூன்றியமைக்கு வாணிகமே அடிப்படையாக இருந்தது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில், பல பின்தங்கிய நாடுகளில் வாணிகம் செய்யவந்த அந்நியர்கள் அரசாட்சி செய்யத் தொடங்கினர். பன்னாட்டு வாணிகத்தால், வலிமை குன்றிய நாடுகள் வலிமை மிக்க நாடுகளுக்கு அடிமையாகின்றன. உலகின் சில நாடுகள் பல நாடுகளை வாணிகத்தின் மூலம் அடிமையாக்கிய நிலையை வரலாறு உணர்த்துகிறது.

**3. நாடுகளிடையே சச்சரவு :** அரசியல் காரணங்களோடு வாணிகக் காரணங்களும் உலக நாடுகளிடையே போரைத் தோற்றுவிக்கின்றன. இஸ்ரேலுக்கும் எகிப்திற்கும் நடந்த போரின் விளைவால், பெட்ரோலியப் பொருள்களின் விலைகளை அரபு நாடுகள் உயர்த்திவிட்டன. பெட்ரோலிய எண்ணெய்ப் பொருள்களின் விலைகளை மேலும் உயர்த்தி, அளிப்பைக் கட்டுப்படுத்துவோம் என்று கூறி அமெரிக்காவையே அச்சுறுத்தி அரபுநாடுகள் இஸ்ரேல் நாட்டை ஓரளவுக்கு அடிபணிய வைத்த நிலையையும் இங்குக் குறிப்பிடலாம்.

**4. போட்டியால் வளராத நாடுகள் பாதிக்கப்படுதல் :** பன்னாட்டு வாணிகத்தால் பின்தங்கிய நாடுகள் நட்டமடைகின்றன. உலகச் சந்தையில் வளர்ந்த நாடுகளின் பொருள்களோடு வளரும் நாடுகளின் பொருள்கள் போட்டியிட முடிவதில்லை. வளர்ந்த நாடுகளில், பேரளவு உற்பத்தி, தொழில் நுணுக்கத்தோடு இயந்திரங்களின் உதவிகொண்டு செய்யப்படுவதால், தரமான பொருள்கள் குறைந்த செலவில் உற்பத்தியாகின்றன. வளரும் நாடுகளின் தொழிற்துறைப் பொருள்கள் தரத்தில் தாழ்ந்தவையாகவும், விலையில் உயர்ந்தவையாகவும் இருப்பதால், விற்பனையில் வளர்ந்த நாடுகளோடு போட்டியிட இயலுவதில்லை. இதனால், பின்தங்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சி தடைப்படுகிறது.

**5. சுரண்டல் நிலை :** பின்தங்கிய நாடுகளிலிருந்து மூலப் பொருள்களைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்து, தொழில் முன்னேற்றமடைந்த நாடுகள் விளைமுடிந்த பொருள்களை உற்பத்தி செய்து உயர் விலையில் விற்றுக் கொள்ளை இலாபத்தைச் சம்பாதிக்கின்றன. வளராத நாடுகள் கனிவளங்களை இழப்பதால், அவற்றின் தொழில் முன்னேற்றம் பிற்காலத்தில் பாதிக்கப்படும். பன்னாட்டு வாணிகத்தால் செல்வமும் பொருளும் வருமானமும் ஒருசில நாடுகளையே சென்று சேருகின்றன. வெளிநாட்டு வாணிகத்தால் வளர்ச்சியடைந்த நாடுகள் வளரும் நாடுகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சுரண்டி இலாபமடைகின்றன. இறக்குமதி மதிப்புக்கேற்ப ஏற்றுமதியின் மதிப்பைக் கூட்ட, இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகள் கச்சாப் பொருள்களையும் கனிப்பொருள்களையும் ஏற்றுமதி செய்து பொருளாதாரத்தைச் சீர்குலைத்துக்கொள்கின்றன.

**6. மற்ற நாடுகளைச் சார்ந்திருத்தல் :** போரினால் பன்னாட்டு வாணிகம் பாதிக்கப்படும். அவசியப் பண்டங்களுக்குப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நாடுகளின் நிலை போர்க் காலத்தில் இரக்கத்திற்குரியதாகிவிடும். ஒரு நாடு பொருள்களைப் பெறுவதற்குப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை பன்னாட்டு வாணிகத்தாலேயே ஏற்படுகிறது.

**7. தொழில் வளர்ச்சியின்மை :** பல விளைமுடிந்த நுகர் பொருள்களுக்கு பிற நாடுகளையே நம்பியிருக்கும் ஒரு நாட்டில் தொழில்துறை வளர்ச்சியடையாது. சுங்க வரிகளை விதித்து இறக்குமதியைக் குறைக்காவிட்டால், ஒரு நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்கள் வளராமல் நசித்துவிடும்.

**8. குவிப்பு (Dumping) :** ஒரு நாட்டின் தொழிலைச் சீர்குலைப்பதற்காகத் தம்முடைய நாட்டின் பொருளை ஆக்கச் செலவைவிடக் குறைந்த விலைக்கு விற்றுத் தற்காலிக நட்டத்தை ஏற்பதே 'குவிப்பு' எனப்படும். கட்டுப்பாடற்ற வெளிநாட்டு வாணிகத்திலுள்ள முக்கியக் குறைபாடு இதுவேயாகும். இதனால், உள்நாட்டுத் தொழில்வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

**9. சந்தைகளில் பொருள்களின் தேக்கம் :** பேரளவு உற்பத்தி, சிறப்புத் தேர்ச்சி, அக-புறச் சிக்கனங்கள் ஆகியவற்றால் உற்பத்தி பல மடங்குப் பெருகி, அளிப்பு தேவையைக் காட்டிலும் அதிகமாக அமைய வாய்ப்புண்டு. இதனால், பொருள்கள் விற்பனை யாகாமல் தேங்குகின்றன. சில நேரங்களில் அளவுக்கு அதிகமான உற்பத்தியால் குறைந்து செல் விளைவு தோன்றி உற்பத்திச் செலவு அதிகரிக்கக்கூடும்.

பன்னாட்டு வாணிகத்தில் இவ்விதக் குறைபாடுகள் இருந்தாலும், இவற்றைக் கட்டுப்படுத்தப்பட்ட அயல்நாட்டு வாணிக முறையால் தவிர்க்க இயலும்.

# 26. ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு

## (Theory of Comparative Cost)

பன்னாட்டு வாணிகத்தின் பல கோட்பாடுகளில் மிகவும் பழைமையானது ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு ஆகும். இக் கோட்பாட்டைத் திருந்திய முறையில் தந்தவர் டேவிட் ரிக்கார்டோ. அவருக்கு முன்பாகவே இராபர்ட் டோரென்ஸ் (Robert Torrens) என்பவர் இக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதை மேலும் செம்மைப்படுத்தி யவர்கள் ஜே. எஸ். மில் (J. S. Mill), பாஸ்டபிள் (Bastable), கெயிர்ன்ஸ் (Cairnes), டாஸிக் (Taussig) ஆகியோராவர்.

இதை 'ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு' அல்லது 'தராதரச் செலவுக் கோட்பாடு' என்றும் குறிப்பிடலாம். பொருள்களின் ஆக்கச் செலவில் இருக்கும் வேறுபாடுகளால் பன்னாட்டு வாணிகம் கைக்கொள்ளப்படுவதாக இது கூறுகிறது. மார்ஷல், ஹேபர்லெர் (Haberler) ஆகியோரும் இக் கோட்பாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனர்.

சில நாடுகள் குறிப்பிட்ட பொருள்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றன. வேறு சில பொருள்களை உற்பத்தி செய் வதற்கான செலவு அந்த நாடுகளில் அதிகமாக இருக்கக்கூடும். உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும் பொருள்களை, அவை எந்த நாடுகளில் குறைந்த செலவில் ஆக்கப்படுகின்றனவோ அவற் றினின்றும் இறக்குமதி செய்வது நன்மை தரும்.

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மையைப் பற்றியும், நாடுகளிடையே பொருள்கள் எவ்வாறு மாற்றப் படுகின்றன என்பது பற்றியும் ரிக்கார்டோ மதிப்பின் உழைப்புக் கோட்பாட்டின் (Labour theory of value) உதவியோடு விளக்கினார். உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்படும் உழைப்பின்

அளவுக்கேற்ப பொருளின் மதிப்பு அமையுமென்று தொன்மைப் பொருளியலாளர்கள் கருதினர். உதாரணமாக, ஒருநாள் உழைப்பில் ஒரு நாற்காலியோ அல்லது இரண்டு ஸ்டூல்களோ செய்யப்பட்டால், ஒரு நாற்காலியின் மதிப்பு இரண்டு ஸ்டூல்களுக்குச் சமமாகும். உழைப்பிற்கான செலவைத்தான் அவர்கள் உற்பத்திச் செலவு என்று குறிப்பிட்டனர்.

ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டை விளக்குவதற்குமுன், 'உற்பத்தி உழைப்புச் செலவு' (Labour cost of production), 'உற்பத்திப் பணச் செலவு' (Money cost of production) ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொள்வது அவசியம். பொருளின் உற்பத்திச் செலவை, உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவில் கணக்கிடுவது உற்பத்தி உழைப்புச் செலவாகும். உதாரணமாக, ஒரு கிரிக்கெட் மட்டையைச் செய்ய ஒரு தொழிலாளிக்கு 5 நாள்களாகுமானால், அதன் உற்பத்திச் செலவு 5 நாள்கள் உழைப்பிற்குச் சமமாகும். மாறுக, உற்பத்திப் பணச் செலவு என்பது, உற்பத்திச் செய்வதற்குச் செலவழிக்கப்பட்ட பண அளவைக் குறிப்பதாகும். மேற்குறிப்பிட்ட உதாரணத்தில் தொழிலாளியின் தினக்கூலி 6 ரூபாய் என்று கொண்டால் கிரிக்கெட் மட்டையின் உற்பத்திப் பணச் செலவு 30 ரூபாய் ஆகும்.

'உற்பத்தி உழைப்புச் செலவின்' அடிப்படையிலேயே தொன்மைப் பொருளியலறிஞர்கள் ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டை விளக்கியுள்ளார்கள். இக் கோட்பாடு உணர்த்துவதுபடி, நாடுகளிடையே பொருள்களின் உற்பத்திச் செலவில் வேறுபாடுகள் உள்ளன. உற்பத்திச் செலவு வேறுபாடுகள் பின்வரும் மூன்று வகைகளில் அமையலாம் : (i) முழுநிலைச் செலவு வேறுபாடுகள்; (ii) சமநிலைச் செலவு வேறுபாடுகள்; (iii) ஒப்பீட்டுச் செலவு வேறுபாடுகள்.

### (i) முழு நிலைச் செலவு வேறுபாடுகள் (Absolute Differences in Cost)

ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டை விளக்க துணி, கோதுமை ஆகிய பொருள்கள் ஜப்பானிலும் இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்படுவதாகக் கொள்ளலாம். உற்பத்திச் செலவு உழைக்கும் நாள்களின் அளவில் அளவிடப்படுகிறது. இரு நாடுகளில் ஒரு நாடு ஒரு பொருளைக் குறைந்த செலவிலும், மற்றொரு பொருளை அதிகச் செலவிலும் உற்பத்தி செய்யக்கூடும். இரண்டாவது நாட்டில் இதற்கு நேர் எதிரான நிலை அமையலாம். இரு

நாடுகளும் எப் பொருள்களைக் குறைந்த செலவில் ஆக்க முடியுமோ அவற்றை உற்பத்தி செய்து பொருள்களை மாற்றிக்கொள்வதன் மூலம் நன்மை பெறலாம்.

ஜப்பான், இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் துணி, கோதுமை ஆகிய இரு பொருள்களும் உற்பத்தியாகின்றன. இரு நாடுகளிலும் உற்பத்தி அளவுகள் பின்வருமாறு இருப்பதாகக் கொள்ளலாம்.

| நாடு | மொத்த உற்பத்திச் செலவு | துணி (அலகுகள்) | கோதுமை (அலகுகள்) |
|---|---|---|---|
| ஜப்பான் .. | 5 நாள்கள் | 20 | 10 |
| இந்தியா .. | 5 நாள்கள் | 10 | 20 |

துணி ஜப்பானிலும், கோதுமை இந்தியாவிலும் குறைந்த செலவில் உற்பத்தியாகின்றன. ஜப்பானில் துணி, கோதுமை உற்பத்தி வீதம் 20 : 10 ஆகவும், செலவுவீதம் 1 : .5 ஆகவும் உள்ளன. இந்தியாவில் துணி, கோதுமை உற்பத்திவீதம் 10 : 20 ஆகவும், செலவுவீதம் 1 : 2 ஆகவும் இருக்கின்றன. ஜப்பான் அதிகளவுத் துணி உற்பத்தியிலும் இந்தியா அதிகளவுக் கோதுமை உற்பத்தியிலும் ஈடுபட்டு, எச்ச உற்பத்தியை மாற்றிக்கொண்டால் இரு நாடுகளும் நன்மையடையலாம்.

### (ii) சமநிலைச் செலவு வேறுபாடுகள் (Equal Differences in Cost)

இரு நாடுகளுக்கிடையே உற்பத்திச் செலவு வேறுபாடு சம நிலையில் இருப்பதாகக் கொண்டால், இரண்டு நாடுகளும் வாணிகத்தில் ஈடுபடுவதன்மூலம் நன்மை ஏற்படாது. நம்முடைய உதாரணத்தில் ஜப்பான், இந்தியா ஆகிய இரண்டு நாடுகளிலும் துணி, கோதுமை ஆகியவற்றின் உற்பத்திச் செலவு வேறுபாடுகள் சமநிலையில் இருப்பதாக வைத்துக்கொள்ளலாம்.

| நாடு | மொத்த உற்பத்திச் செலவு | துணி (அலகுகள்) | கோதுமை (அலகுகள்) |
|---|---|---|---|
| ஜப்பான் .. | 5 நாள்கள் | 20 | 40 |
| இந்தியா .. | 5 நாள்கள் | 10 | 20 |

ஜப்பானில் துணி, கோதுமை உற்பத்திவீதம் 20 : 40 ஆகவும், செலவுவீதம் 1 : 2 ஆகவும் இருக்கின்றன. இந்தியா

வில் துணி, கோதுமை உற்பத்தி வீதம் 10 : 20 ஆகவும், செலவு வீதம் 1 : 2 ஆகவும் உள்ளன. இரண்டு நாடுகளிலும் உற்பத்தி வீதங்கள் ஒரே அளவில் அமைவதால், அவை வாணிகத்தில் ஈடுபடுவதன்மூலம் இலாபம் ஏற்படாது.

ஜப்பான் ஒரு அலகுத் துணிக்கு இரண்டு அலகுகளுக்கு அதிகமான கோதுமை கிடைத்தால்தான் வாணிகம் செய்யும். ஆனால், இந்தியா ஒரு அலகுத் துணிக்கு கோதுமையை இரண்டு அலகுகளுக்கு அதிகமாகத் தர முன்வராது. எனவே, இரு நாடு களிலும் உற்பத்திச் செலவு வேறுபாடுகள் சமநிலையில் (1 : 2) இருப்பதால், இரண்டிற்குமிடையே வாணிகம் ஏற்படாது. வாணி கத்தில் ஈடுபடுவதன்மூலம் எவ்வித நன்மையையும் அவை பெற இயலாது.

### (iii) ஒப்பீட்டுச் செலவு வேறுபாடுகள் (Comparative Differences in cost)

எல்லாப் பொருள்களின் உற்பத்திச் செலவும் ஒரு நாட்டில் குறைவாகவும், மற்றொரு நாட்டில் உயர்வாகவும் அமைந்திருந்து பொருள்களின் உழைப்புச் செலவு வீதத்தில் இரு நாடுகளுக்கும் இடையே வேறுபாடு இருந்தால் வாணிகத்தின் வாயிலாக நன்மை கிடைக்கும். இதையே ரிக்கார்டோ தனது கோட்பாட்டில் தெளி வுற விளக்கியுள்ளார்.

| நாடு | மொத்த உற்பத்திச் செலவு | துணி (அலகுகள்) | கோதுமை (அலகுகள்) |
|---|---|---|---|
| ஜப்பான் .. | 5 நாள்கள் | 20 | 40 |
| இந்தியா .. | 5 நாள்கள் | 10 | 30 |

ஜப்பானில் 5 நாள்கள் உழைப்பு உற்பத்திச் செலவில் 20 அலகுகள் துணி அல்லது 40 அலகுகள் கோதுமை உற்பத்தி செய்யலாம். இந்தியாவில் 5 நாள்கள் உழைப்பில் 10 அலகுகள் துணி அல்லது 30 அலகுகள் கோதுமையை மட்டுமே உற்பத்தி செய்ய இயலும். ஜப்பானோடு ஒப்பிடும்போது இந்தியாவில் இரண்டு பொருள்களின் உற்பத்திச் செலவும் உயர்வாகவே உள் ளது. இந் நிலையில் ஜப்பான் துணியையும், இந்தியா கோதுமை யையும் உற்பத்தி செய்து மொத்த உற்பத்தியை இரு நாடுகளும் வாணிகத்தின்மூலம் பகிர்ந்துகொண்டால், இரண்டு நாடுகளுமே நன்மையடைகின்றன. ஜப்பானில் துணி, கோதுமை உற்பத்தி

வீதம் 20 : 40 ஆகவும், செலவுவீதம் 1 : 2 ஆகவும் இருக்கும் போது, இந்தியாவில் உற்பத்திவீதம் 10 : 30 ஆகவும், செலவு வீதம் 1 : 3 ஆகவும் அமைகின்றன. ஜப்பான் ஆதாயத்தைப் பெற 1 அலகுத் துணிக்கு 2 அலகுகளுக்கு அதிகமான கோதுமை கிடைக்கவேண்டும். இந்தியா 3 அலகுகள் கோதுமைக்கு 1 அல குக்கு அதிகமான துணியைப் பெற்றால் இலாபமடையும். இந்தியா 3 அலகுகள் கோதுமையைக் கொடுப்பதற்குப் பதிலாக ஜப்பான் 1.5 அலகுகள் வரை துணி அளிக்கும். ஜப்பான் 1 அலகு துணியை அளிப்பதற்குப் பதிலாக இந்தியா 3 அலகுகள் வரை கோதுமை தரும். இதனால், இரண்டு நாடுகளும் நன்மையடை கின்றன.

முழுநிலைச் செலவு வேறுபாடுகள் இருக்கும்போதும், ஒப் பீட்டுச் செலவு வேறுபாடுகள் அமையும்போதும் இவ்விரு நாடு களிடையே வாணிகம் நடைபெறுகிறது. சமநிலைச் செலவு வேறுபாடுகள் இருக்கையில் பன்னாட்டு வாணிகம் நடைபெறாது.

ஒரு நாடு இரு பொருள்களின் உற்பத்தியிலும் முழு அனு கூலத்தைப் பெற்றிருந்தாலும், எப் பொருளின் உற்பத்தியில் மிகையான அனுகூலம் இருக்கிறதோ அப் பொருளின் உற்பத்தியில் ஈடுபடுவதால் அதிக ஆதாயத்தைப் பெறலாம்.

## மதிப்பீடு

ஜாகப் வைனர் (Jacob Viner) போன்ற சில ஆசிரியர்கள் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டை ஆதரித்ததாலும், ஹெக்ஸ் செர் (Heckscher), ஹேபெர்லெர் (Haberler), கோர்னுட், பெர்டில் ஒலின் போன்றோர் இதிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். தற்பொழுது பெர்டில் ஒலின் தந்துள்ள 'பொதுச் சமநிலைக் கோட்பாடே' (General equilibrium theory) பன்னாட்டு வாணிகத்தின் சிறப்பானதொரு கோட்பாடாகக் கருதப்படுகிறது. ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டிலுள்ள குறைகளைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம் :

**1. உழைப்பின் திறனில் வேறுபாடுகள் :** நாடுகளிடையே உழைப்பாளர்களின் திறனில் வேறுபாடுகள் இருப்பதில்லை என்ற ஊகத்தின் அடிப்படையில் இக் கோட்பாடு எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், உழைப்பின் திறன் நாட்டிற்குள்ளாகவும் நாடுகளுக் கிடையேயும் மாறுபடுகிறது. மதிப்பின் உழைப்புக் கோட்பாட் டைச் சார்ந்துள்ளதால் இக் கோட்பாடு தவறுடையதாகிறது.

**2. குறைந்துசெல் விளைவு :** உற்பத்தியானது மாறு விளைவு அல்லது மாறுச் செலவின் அடிப்படையில் இருப்பதாக இக் கோட்பாடு கருதுகிறது. ஆனால், எவ்வகைத் தொழிலிலும் குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு குறைந்துசெல் விளைவு தோன்றும். எனவே, மிக நீண்ட காலத்தில் இரு நாடுகளிலும் பொருள்களின் ஆக்கச் செலவு சமமாக மாறுவதற்கு வாய்ப்புண்டு.

**3. உழைப்பைத் தவிர்த்தப் பிற ஆக்கக் காரணிகளின் புறக்கணிப்பு :** பொருள்களின் உற்பத்தியில் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு காரணிகளும் இணைந்து செயல்படுகின்றன. எனவே, உழைப்பின் அளவு அடிப்படையில் உற்பத்திச் செலவு கணக்கிடப்படும் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு குறைபாடு உடையதாகிறது.

**4. பல பொருள்களில் பன்னாட்டு வாணிகம் :** இக் கோட்பாடு இரு நாடுகளிடையே இரண்டு பொருள்களின் வாணிகம் நடைபெறுவதை மட்டுமே விளக்குகிறது. இன்றைய பன்னாட்டு வாணிகத்தில் எண்ணற்ற பொருள்கள் வெவ்வேறு நாடுகளிடையே மாற்றிக்கொள்ளப்படுகின்றன.

**5. கட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வாணிகம் :** பன்னாட்டு வாணிகத்தில் கணக்கற்ற அரசின் கட்டுப்பாடுகள் உள்ளன. ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு, நாடுகளிடையே தடையிலா வாணிகம் நடைபெறுகிறது என்ற தவறான அனுமானத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டதாகும்.

**6. ஆக்கக் காரணிகளின் இடப் பெயர்ச்சி :** இக் கோட்பாடு ஒரு நாட்டிற்குள்ளாக ஆக்கக் காரணிகள் இடம்பெயரு மெனவும், அவை நாடுகளிடையே இடப்பெயர்ச்சியற்று இருக்கு மெனவும் குறிப்பிடுகிறது. ஆனால், மூலதனம், உழைப்பு, அமைப்பு ஆகிய காரணிகள் பல நாடுகளுக்கு இடையே பெயர்ச்சி யடைகின்றன.

**7. ஆக்கப் பொருள்களின் தர வேறுபாடு :** வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் ஒரே வகைப் பொருளின் தரம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பொருளின் தரம் உயர் வாகவோ தாழ்வாகவோ அமையக்கூடும்.

**8. போக்குவரத்துச் செலவு :** ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு, பன்னாட்டு வாணிகத்தில் போக்குவரத்துச் செலவு பெற்றி

ருக்கும் முக்கிய நிலையை உணரவில்லை. நீண்ட தூரத்திலுள்ள நாடுகளிடையே வாணிகம் நடைபெறும்போது போக்குவரத்துச் செலவு உயர்வாகவும், அருகாமை நாடுகளிடையே குறைவாகவும் இருக்கும். உற்பத்திச் செலவில் போக்குவரத்துச் செலவும் அடங்கும் என்பதை இக் குறைபாடுள்ள கோட்பாடு விளக்கவில்லை.

**9. பன்னாட்டு வாணிக அளவை நிர்ணயிக்கும் பிற காரணிகளின் புறக்கணிப்பு :** பன்னாட்டு வாணிகத்தின் அளவு பொருள்களின் விலை, தேவை, அவற்றின் நெகிழ்வுத் தன்மை ஆகியவற்றிற் கேற்ப அமையும். இக் கோட்பாடு இக் காரணிகளைப் பற்றிக் கருதவில்லை.

**10. உழைப்பாளருக்கான ஊதியங்களில் வேறுபாடு :** நாடுகளிடையே உழைப்பின் திறன் வேறுபடுவதைப்போல, உழைப்பாளருக்கான ஊதிய மட்டங்களும் மாறுபடுகின்றன. உழைப்பாளருக்குச் சம ஊதியம் வழங்கப்படுகிறது என்ற எடுகோளின் அடிப்படையில் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு விளக்கப்படுகிறது.

பல குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும், இக் கோட்பாடே பல புதுமையான பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள் தோன்றுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தித் தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# 27. வாணிகக் கொள்கை

(Trade Policy)

## I. தடையிலா வாணிகமும் தொழில் பாதுகாப்பும்

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றக் கூடிய அளவுக்குப் பன்னாட்டு வாணிகம் செல்வாக்குக் கொண்டது. பன்னாட்டு வாணிகத்தால் ஏற்படும் நன்மை-தீமைகளை ஆய்ந்தறிந்து, உலக நாடுகளின் அரசுகள் வெளிநாட்டுக் வாணிகக் கொள்கையைத் தீர்மானிக்கின்றன. பன்னாட்டு வாணிகத்தில் அரசு பின்பற்றக்கூடிய கொள்கைகள் இரண்டாகும். அவையாவன : தடையிலா வாணிகக் கொள்கை (Free trade policy), தொழிற் பாதுகாப்புக் கொள்கை (Protectionist policy).

17, 18ஆம் நூற்றாண்டுகளில் 'வாணிக வாதக் கருத்தினர்' (Mercantilists) அரசு வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தினர். ஏற்று மதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைத்து மதிப்பு மிக்கப் பொன், வெள்ளி ஆகிய உலோகங்களை அதிக அளவில் ஒரு நாடு சேமிக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டனர். நாளடைவில் இக் கொள்கை செல்வாக்கிழந்து, 19ஆம் நூற்றாண்டு முழுவதும் பெரும்பாலான நாடுகள் தடையிலா வாணிகக் கொள்கையையே பின்பற்றின. 1930ஆம் ஆண்டில் பல நாடுகளையும் பாதித்த பொருளாதாரப் பெருமந்தம், திரும்பவும் கட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வாணிகம் செல்வாக்குப் பெறக் காரணமாக அமைந்தது. இன்று உலகின் எல்லா நாடுகளும் கட்டுப்பாடான வெளி நாட்டு வாணிக முறையையே கைக்கொண்டுள்ளன.

### தடையிலா வாணிகத்தால் ஏற்படும் நன்மைகள்

(1) எல்லா நாட்டு மக்களும் மலிவான விலையில் தரமான பல பொருள்களைப் பெறலாம்.

(2) நாடுகளிடையே நல்லெண்ணமும் கூட்டுறவும் வளர்கின்றன.

(3) உற்பத்திக் காரணிகள் முழுமையாகவும் சிறப்பாகவும் அதிக உற்பத்தியைப் பெறத்தக்க வகையிலும் பயன்படுத்தப்படுகின்றன.

(4) எல்லா நாடுகளும் எல்லாவகைப் பொருள்களையும் உற்பத்தி செய்ய இயலாது. இயற்கை வள வாய்ப்புகளின் வேறுபாடுகளே இதற்குக் காரணமாகிறது. தடையிலா வாணிகத்தால் வள நிலைகளுக்கேற்ப உலக நாடுகள் வெவ்வேறு பொருள்களை உற்பத்தி செய்து பரிமாறிக் கொள்ளலாம்.

(5) உலக நாடுகளின் மொத்த உற்பத்தியும் வருமானமும் உயர்வடைந்து மக்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்பாடடையும்.

(6) நிலம் நீங்கலாகப் பிற ஆக்கக் காரணிகள் அதிக ஊதியம் கிடைக்கும் இடங்களுக்கு எளிதில் பெயர்ந்துசெல்லத் தடையிலா வாணிகம் வகை செய்கிறது. இதனால், வேலையின்மைச் சிக்கல் தோன்றாது.

(7) ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு குறிப்பிடும் நன்மைகளைப் பெறவும், தொழிற் செறிவு – வேலைப் பகுப்பு முறை ஆகியவற்றின் நன்மைகளை எய்தவும் தடையிலா வாணிகம் உதவும்.

(8) உற்பத்தியாளர்கள் அல்லது வாணிகர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் முற்றுரிமை நிலை தடையிலா வாணிகத்தால் தகர்க்கப்படுகிறது.

(9) பல நாடுகளுக்கு இடையேயும் பண்டங்களின் விலையில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாது. பன்னாட்டளவில் விலைநிலைப் பேரூக்கத்தைப் பெறலாம்.

(10) உற்பத்தி பேரளவில் அமைந்து அக-புறச் சிக்கனங்கள் பெறப்படும். இயந்திர உற்பத்தி முறையும் உற்பத்திச் செலவைக் குறைக்க உதவும்.

(11) தொழில்களுக்குத் தேவையான கனிப்பொருள்களையும் பிறவகைக் கச்சாப் பொருள்களையும் மலிவாக இறக்குமதி செய்து கொள்ளலாம்.

(12) தடையிலா வாணிகத்தில் சுங்க வரியின்மூலம் இறக்குமதி ஏற்றுமதிகள் கட்டுப்படுத்தப்படவில்லை. இதனால், தொழில் துறை முன்னேற்றமும் வாணிக வளர்ச்சியும் ஏற்படுகின்றன.

**தடையிலா வாணிகத்தால் விளையும் தீமைகள்**

(1) தடையிலா வாணிக முறையில் மேம்பாடடைந்த நாடுகளோடு வளரும் நாடுகள் போட்டியிட இயலாது. பின்தங்கிய நாடுகளில் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் தொழில்கள், வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில்களால் ஏற்படும் போட்டியைச் சமாளிக்க முடியாமல் நசித்துவிடக் கூடும்.

(2) தடையிலா வாணிகத்தால்தான் 1929-ல் அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பற்றிய மந்தநிலை உலகின் வேறு பல நாடுகளுக்கும் பரவியது.

(3) எல்லா நாடுகளும், எல்லாப் பொருள்களையும், எல்லா நேரங்களிலும் இறக்குமதி செய்வது எளிதல்ல. போர்க்காலங்களிலும், பற்றுக்குறைக் காலங்களிலும் இறக்குமதி தடைப்படுகிறது. எனவே, சில இன்றியமையாத பண்டங்களின் உற்பத்தியிலாவது தன்னிறைவைப் பெறுவது அவசியமாகிறது.

(4) தடையிலா வாணிகத்தால் பொருளாதாரத்தில் சில துறைகள் மட்டும் வளரும்போது, பிற துறைகள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. ஒரு நாடு முழுமையான பொருளாதார வளர்ச்சியைப் பெற எல்லாத் துறைகளையும் மேம்படுத்துவது இன்றியமையாததாகும்.

(5) கனிப்பொருள்களையும் கச்சாப் பொருள்களையும் கட்டுப்பாடின்றி ஏற்றுமதி செய்யும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தொழில்துறை முன்னேற்றமும் நீண்ட காலத்தில் பாதிக்கப்படுகின்றன.

(6) தடையிலா வாணிகம் அமைந்திருந்த காலத்தில்தான் ஐரோப்பியர்கள் உலகின் பல நாடுகளின் அரசாட்சியைக் கைப்பற்றினர். ஒரு நாட்டின் பாதுகாப்புக்குத் தடையிலா வாணிகம் உகந்ததல்ல.

இவ்விதத் தீமைகளே தடையிலா வாணிகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமைக்கான காரணங்களாக அமைந்தன.

**கட்டுப்படுத்தப்பட்ட வாணிகத்தால் ஏற்படும் நன்மைகள்**

பல காரணங்களுக்காக இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அயல்நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்தச் சுங்க வரிகள் (tariffs), உரிமம் (licence) வழங்குதல், பங்களவு முறை (quota system), அந்நியச் செலாவணி கட்டுப்பாடு (foreign exchange control) ஆகியவை உதவு

கின்றன. தொழிற் பாதுகாப்புக் கொள்கைக்கு ஆதரவாகப் பின்வரும் வாதங்கள் (arguments) குறிப்பிடப்படுகின்றன.

**1. இளந்தொழில் பாதுகாப்பு வாதம் :** ஒரு நாட்டில் புதிதாகத் தொடங்கப்பெறும் தொழிலின் வளர்ச்சிக்குப் பாதுகாப்புத் தேவை. வளர்ச்சியடைந்த பிறகுதான் அத் தொழில் பிறநாட்டுத் தொழில்களோடு போட்டியிட இயலும். 'சிசுவைப் பேணி, குழந்தையைப் பராமரித்து, வயது வந்த பிறகு சுதந்திரமாக விட்டுவிடுவதைப்போல, இளந் தொழிலைப் பேணி, வளரும் வரைப் பாதுகாத்து, வளர்ந்த பிறகு சுதந்திரமாக விட்டு விடவேண்டும்,' என்று ஜே. எஸ். மில் கூறுகின்றார். இளந்தொழில்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரிகளை மக்கள் மனமுவந்து ஆதரிக்க வேண்டும்.

**2. வேலை வாய்ப்பு வாதம் :** உள்நாட்டுத் தொழில்கள் காக்கப்படுவதால், பல உழைப்பாளர்களும் வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். இதற்கு உதாரணமாக, இந்திய சர்க்கரை ஆலைத்தொழில் இலட்சோபஇலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை அளித்துள்ளமையைக் குறிப்பிடலாம். 1931ஆம் ஆண்டில் நம் நாட்டின் சர்க்கரை ஆலைத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஜெயின்ஸ் பிரபு இவ் வாதத்தை ஆதரித்துள்ளார்.

**3. பல தொழில்களின் வளர்ச்சி வாதம் :** ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பலவகைப்பட்ட தொழில்களும் வளர்க்கப்படவேண்டும். முக்கியமான சில பொருள்களை உற்பத்தி செய்வதை மட்டும் ஒரு நாடு நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடாது. பல பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடு பிற நாடுகளை அதிகளவுக்குச் சார்ந்திருக்கத் தேவையில்லை. ஒரு சில தொழில்களை மட்டுமே கொண்டுள்ள ஒரு நாடு பல இன்னல்களை ஏற்க நேரிடும்.

**4. பாதுகாப்பு வாதம் :** நாட்டின் பாதுகாப்பிற்காகச் சில தொழில்களை வளர்க்கவேண்டியது அவசியம். பாதுகாப்பிற்குத் தேவையான இரும்பு, நிலக்கரி, கந்தகம், வெடிமருந்து, டாங்கிகள்—துப்பாக்கிகள்—பீரங்கிகள் போன்ற போர்க் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஒரு நாடு தன்னிறைவைப் பெற்றிருக்கவேண்டும். 'செல்வத்தைவிட நாட்டின் பாதுகாப்பு முக்கியமானது' என்று ஆடம் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறைத் தொழில்களில் இராணுவ இரகசியங்களைக் காப்பதும் முக்கியமாகும்.

**5. தேசப்பற்று வாதம் :** ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களையே வாங்கவேண்டும். தேசப்பற்றுள்ள எவரும் இதையே செய்வார்கள். ஆனால், தரம் குறைந்த பொருள்களை உயர்விலையில் வாங்குவதைப் பலரும் விரும்புவதில்லை. ஆகவே, உள்நாட்டு உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்துவதோடு, உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் விலையைக் குறைப்பதும் அவசியமாகும். இந்த நிலையை எய்த உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். சுதேசிப் பொருள்களை வாங்கவேண்டியதன் அவசியத்தை அண்ணல் காந்தியும் அறிவுறுத்தினார்.

**6. அடிப்படைத் தொழில்கள் வாதம் :** இரும்பு–எஃகுத் தொழில், பொறியியற் தொழில் போன்ற அடிப்படைத் தொழில்களின் வளர்ச்சியே பிற தொழில்களை மேம்படுத்துகிறது. எனவே, அடிப்படைத் தொழில்களை மற்ற நாட்டுத் தொழில்களின் போட்டியினின்றும் பாதுகாக்கவேண்டும். நிலக்கரி, மின்சாரம், சிமெண்ட், மின்னியற் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களும் அடிப்படைத் தொழில்களே.

**7. வருமானப் பெருக்க வாதம் :** உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிப் பொருள்களின் மீது உயர்வீத சுங்கவரிகளை விதிப்பதன்மூலம் அரசு வருமானத்தையும் பெறுகிறது. நம் நாட்டில் சுங்க வரிகளின்மூலம் அதிக வருமானம் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. சில நாடுகள் வருமானத்திற்காகவே சுங்க வரிகளை விதிப்பதும் உண்டு.

**8. குவிப்புத் தடுப்பு வாதம் :** ஒரு நாடு ஏற்றுமதியைப் பெருக்கப் பணத்தின் மதிப்பைக் குறைக்கலாம்; அல்லது வெளி நாடுகளில் குறைந்த விலையில் பொருள்களைக் குவித்து விற்கக் கூடும். இவ்விதக் குவிப்பு முறை விற்பனையைத் தடுக்க இறக்கு மதிப் பொருள்களின் மீது சுங்க வரிகள் விதிக்கப்படுகின்றன. குவிப்பின் (dumping) தீய விளைவுகளிலிருந்து உள்நாட்டுத் தொழில்களைக் காக்க சுங்க வரி முறை உதவுகிறது.

**9. தன்னிறைவு வாதம் :** அரசின் பாதுகாப்போடு எல்லா வகைத் தொழில்களையும் வளர்ப்பதன்மூலமே ஒரு நாடு தன்னிறைவைப் பெறமுடியும். எந்த ஒரு நாடும் அவசியப்

பொருள்களைப் பெறுவதற்குப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கக் கூடாது. ஜெர்மானியப் பொருளியலாளரான ஃபிரடரிக் லிஸ்ட் என்பவர் தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பெற தொழில் களுக்குப் பாதுகாப்பு தேவை என்று கூறுகிறார்.

**10. வாணிக நிலை வாதம் :** அயல்நாட்டு வாணிகத்தில் சாதக நிலையைப் பெற, ஏற்றுமதிக்கான சில தொழில்களை முன்னேற்றம் பெறச் செய்வது அவசியம். சாதக வாணிகத் தால் அதிகளவுத் தங்கத்தையும், அந்நியச் செலாவணியையும் பெறலாம். அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள் களின் அளவைக் கட்டுப்படுத்துவதின் மூலம் உள்நாட்டுப் பணத்தின் வெளிமதிப்பைக் காக்கலாம்,

இவற்றோடு வேறு சில வாதங்களும் தொழிற் பாதுகாப் பிற்கான அவசியத்தை உணர்த்துகின்றன.

## கட்டுப்படுத்தப்பட்ட வாணிகத்தால் விளையும் தீமைகள்

தொழிற்காப்பினால் தீய விளைவுகளும் தோன்றுகின்றன. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. காப்பளிக்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சி திருப்தி கரமாக அமைவதில்லை. போட்டியின்மையால் அத் தொழில்கள் தரமான பொருள்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற் கான முயற்சிகளை எடுப்பதில்லை.

2. பாதுகாப்பைப் பெற்ற தொழில்கள் தரம் குறைந்த பொருள்களை உயர்விலையில் விற்பனை செய்கின்றன. உற்பத்தி யாளர்கள் தொழிற்காப்பினால் முற்றுரிமைநிலையைப் பெறுவ தால், நுகர்வோர் நலன் பாதிக்கப்படுகிறது.

3. அரசின் தொழிற்காப்புக் கொள்கையால், உயர்வீதச் சுங்கவரிகள் இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்படுகின் றன. இதனால் இறக்குமதியின் அளவும் சுருங்கி அரசின் சுங்கவரி வருமானமும் குறைகிறது. குறைவான வீதங்களில் இறக்குமதி வரிகளை விதிப்பதன்மூலமே அரசு உயர்ந்த வருமானத்தைப் பெற முடியும். இந்தியாவில் சுங்க வரிகளின் (customs taxes) மூலம் கிடைக்கும் வருமானம் குறைந்ததால்தான், ஆயத் தீர்வைகளின் (excise duties) வீதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

4. அரசின் அரவணைப்பில் பாதுகாக்கப்படும் இளந் தொழில்கள் விரைவான வேகத்தில் வளர்வதில்லை. அரசிட

மிருந்து சலுகைகளைப்பெற அவை இள நிலையிலேயே என்றும் இருக்க விரும்புகின்றன.

5. தொழிற்காப்பின் காரணமாக அரசியல் ஊழல், நேர்மையின்மை போன்றவை உருவாகின்றன. பாதுகாப்பைப் பெற்ற தொழில்களின் அதிபர்கள், தொடர்ந்து அப் பாதுகாப்பு நீடிப்பதற்காக அரசாங்க அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக் கும் கையூட்டு வழங்குவார்கள்.

6. அரசின் பாதுகாப்பு மூலம் நன்மைகளைப் பெற்ற தொழில்கள் வளர்ச்சியடைந்த பிறகும் தொழிற்காப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கவே விரும்புகின்றன.

7. தொழிற்காப்பினால் நாடுகளிடையே சச்சரவுகள் தோன்றுகின்றன. அவற்றிடையே சுமுக உறவு நீடிப்பதில்லை.

8. பாதுகாக்கப்படும் தொழில்களில் உற்பத்தியாளர்கள் உண்மையான உழைப்பைத் தருவதில்லை. அவர்களுடைய திறமையும் மழுங்குகிறது.

9. ஆக்கக் காரணிகள் முழுமையாகவும் திறமையாகவும் செயல்படுத்தப்படாமையால் நாட்டின் மொத்த ஆக்கம் குறை கிறது. குறைந்த வருமானத்தைப் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரம் தாழ்வாக அமைகிறது.

10. அரசின் தொழிற்காப்பினால் சில குறிப்பிட்ட இடங் களில் மட்டும் தொழில்கள் செறிவடைகின்றன. பிற இடங் களில் தொழில்கள் வளர்வதில்லை. நாட்டின் சில பகுதிகள் மட்டும் வளரும்போது, மற்ற பகுதிகள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன.

தொழிற்காப்பு முறையில் பல குறைபாடுகள் இருப்பினும், உலகின் அனைத்து நாடுகளும் இதையே பின்பற்றுகின்றன. தற் பொழுதுள்ள சூழ்நிலைகளுக்குத் தடையிலா வாணிகம் பொருத்த மற்றதாகும். முன்னேற்றமடைந்த நாடுகளைக் காட்டிலும் முன் னேறிவரும் நாடுகளில் தொழிற்காப்பைக் கைக்கொள்வது மிகவும் இன்றியமையாதது.

## II. வெளிநாட்டுச் செலுத்து நிலை (Balance of Payments)

'வாணிக நிலை' (Balance of Trade) என்பது ஒரு நாட் டின் ஏற்றுமதி-இறக்குமதி நிலையைக் குறிப்பதாகும். ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பும், இறக்குமதிப் பொருள்களின் மதிப்பும்

சமமாக இருப்பதைச் 'சமநிலை வாணிகம்' (Balanced Trade) என்கிறோம். ஏற்றுமதி மதிப்பைவிட இறக்குமதி மதிப்பு அதிக மாக இருப்பதைப் 'பாதக வாணிக நிலை' (Unfavourable or Adverse Balance of Trade) எனவும், இறக்குமதி மதிப்பை விட ஏற்றுமதி மதிப்பு மிகுதியாக இருப்பதை 'சாதக வாணிக நிலை' (Favourable Balance of Trade) எனவும் குறிப்பிடுகிறோம். ஏற்றுமதி – இறக்குமதியில் வெளிப்படையாகப் புலனாகும் (தெரியும்) (visible) இனங்கள் மட்டுமே 'வாணிக நிலையில்' அடங்குகின்றன.

'வெளிநாட்டுச் செலுத்து நிலையில்' புலனாகும் ஏற்றுமதி - இறக்குமதி இனங்களோடு கண்ணுக்குப் புலனாகாத (தெரியாத) (invisible) இனங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. ஓராண்டுக் காலத்தில் ஒரு நாடு மற்ற நாடுகளுக்குச் செலுத்தவேண்டிய பணத்தையும், பிற நாடுகளிலிருந்து பெற வேண்டிய பணத்தையும் 'வெளிநாட்டுச் செலுத்துநிலை' உணர்த்து கிறது. சிலவிதப் பணிகள் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக ஒரு நாடு பிற நாடுகளிலிருந்து பணத்தைப் பெறுகிறது; அல்லது பணத்தைச் செலுத்துகிறது. உதாரணமாக, ஒரு நாடு அதன் பொருளை வெளிநாட்டுக் கப்பலில் கொண்டு செல்வதற் கான கட்டணத்தை வெளிநாட்டிற்குச் செலுத்தவேண்டும். இந் தியப் பொறியியல் மாணவர் ஒருவர் மேற்படிப்புக்காகக் கனடா செல்கிறார் என வைத்துக்கொண்டால், அதற்கான செலவுத் தொகையை இந்தியா கனடாவிற்கு அளிக்கவேண்டும். ரஷ்யர் ஒருவர் ஃபிரான்ஸ் நாட்டிற்குச் சுற்றுலா செல்லும்போது ஃபிரான்ஸில் அதற்கான செலவைச் செலுத்துகின்றார். இவை யாவும் புலனாகா இனங்களுக்கான உதாரணங்களாகும்.

### வெளிநாட்டுச் செலுத்து நிலையில் அடங்கும் வரவு - செலவு இனங்கள்

ஒரு நாட்டின் செலுத்துநிலைக் கணக்கில் அது செலுத்திய அல்லது பெற்றுக்கொண்ட எல்லா இனங்களும் அடங்குகின்றன. அந்த இனங்களில் எவை வரவாகவும், எவை செலவாகவும் அமைகின்றன என்பதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**1. ஏற்றுமதி – இறக்குமதி :** ஏற்றுமதி வரவினத்தில் சேர் வதால் அதற்குப் பணம் கிடைக்கும். இறக்குமதி ஒரு நாட்டின் பற்றாக (செலவாக) அமையும். அதற்குப் பணம் அளிக்க வேண்டும்.

**2. சுற்றுலாச் செலவு :** அயல்நாடுகளில் பயணம் செல்லும்போது பணம் தருதல்வேண்டும். அந்நியர்கள் இந்தியாவிற்குச் சுற்றுலா வரும்போது, நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

**3. போக்குவரத்தும் பிற வசதிகளும் :** ஒரு நாட்டின் விமானம் மற்றும் கப்பல் போன்றவற்றை மற்றொரு நாடு பயன்படுத்தும்போது கட்டணம் செலுத்தவேண்டும். பிற நாடுகளுக்குச் செலுத்தும் காப்பீட்டுக் கட்டணம் பற்று (செலவு) ஆகும். உலகெங்கும் பல நாட்டு வங்கிகளும், காப்புறுதி நிறுவனங்களும் செயல்படுகின்றன.

**4. முதலீடுகள் :** அயல்நாட்டு முதலீடுகளின்மூலம் கிடைக்கும் இலாபமும் வட்டியும் ஒரு நாட்டின் வரவினத்தில் சேரும்.

**5. தூதுவரகச் செலவு :** அயல்நாடுகளில் இருக்கும் இந்தியத் தூதுவரகங்களுக்கு ஆன செலவு பற்றாகும். இந்தியாவில் இருக்கும் பிற நாடுகளின் தூதுவரகங்களுக்கான செலவு, நம் நாட்டின் வரவில் சேரும்.

**6. கடன்கள் :** வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடன்களுக்கான வட்டியும், அசலும் பற்றாகும். பிற நாடுகளுக்கு அளித்துள்ள மூலதனத்திற்கான வட்டி வரவினத்தில் அடங்கும்.

**7. கொடைகளும் அன்பளிப்புகளும் :** அயல்நாட்டவருக்குக் கொடுக்கும் அன்பளிப்புகள் பற்றாகவும், வெளிநாடுகளில் இருந்து பெறும் கொடைகள் வரவாகவும் அமைகின்றன.

**8. வெளிநாட்டுக் கல்வி :** நம் நாட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் உயர்கல்விக்காகவும், பயிற்சிக்காகவும் வெளிநாடுகள் செல்வது செலவாகிறது. பிற நாட்டவர் நம் நாட்டிற்குக் கல்வி கற்க வந்தால், நமக்கு அயலகச் செலாவணி கிடைக்கிறது.

**9. தங்கம் :** ஏற்றுமதியாகும் தங்கத்திற்கு ஈடாக அந்நியச் செலாவணியைப் பெறலாம். இறக்குமதியாகும் தங்கத்திற்குப் பதிலாகப் பணத்தைச் செலுத்தவேண்டும்.

**10. குடி பெயர்பவர்களின் சொத்துகள் :** அயல்நாடுகளுக்குக் குடியேறுபவர்களின் சொத்துகளுடைய மதிப்பு

வரவினத்தில் அடங்கும். வெளிநாடுகளில் இருந்து வந்து நம் நாட்டில் குடியிறங்குபவர்களின் சொத்துகளுடைய மதிப்புப் பற்றினத்தில் அமையும்.

செலுத்து நிலைச் சமன்கேடு (Disequilibrium in Balance of Payments)

மேலே குறிப்பிடப்பட்ட புலனுகா இனங்களினுல் பற்று (செலவு) அதிகரித்து, புலனுகின்ற இனங்களின் ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருந்தால் செலுத்துநிலைச் சமன்கேடு அடைகிறது. ஒரு நாட்டின் பற்றுகளைவிட வரவுகள் அதிகமாக இருந்தால்தான் 'சாதகச் செலுத்துநிலை' ஏற்படும். ஒரு நாடு நீண்ட காலத்திற்குப் 'பாதகச் செலுத்து நிலையைக்' கொண்டிருப்பது நல்லதல்ல.

**செலுத்து நிலைச் சமன்கேட்டிற்கான காரணங்கள்**

1. நாட்டின் உற்பத்தி குறைந்து ஏற்றுமதிகளின் அளவு தாழ்வடையும்போது பாதகச் செலுத்துநிலை தோன்றுகிறது.

2. பணவீக்கத்தால் ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்திச் செலவு உயர்ந்து விலை கூடும்போது ஏற்றுமதியின் அளவு குறைகிறது.

3. வளரும் நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தின் முதற்சில நிலைகளில் 'மூலதனப் பொருள்களை' (Capital goods) அதிகளவில் இறக்குமதி செய்வதாலும் செலுத்துநிலையில் சமன்கேடு ஏற்படலாம்.

4. உள்நாட்டில் நிலவும் கலகம், சச்சரவு, அரசின் ஆதரவின்மை ஆகியவற்றுல் மூலதனம் பிற நாடுகளுக்குப் பெயர்ச்சியடையக்கூடும்.

5. பஞ்சக் காலங்களில் மிகையான அளவில் உணவுப் பண்டங்களையும், போர்க் காலங்களில் போர் தளவாடங்களையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்வதால் பாதகச் செலுத்து நிலை தோன்றும்.

6. அவசியம் குறைந்த ஆடம்பரப் பொருள்களையும், வசதிப் பண்டங்களையும் அதிகளவில் இறக்குமதி செய்வதால் செலுத்துநிலைச் சமன்கேடு ஏற்படும்.

7. அயல்நாடுகளில் ஏற்படும் பொருளாதார மந்த நிலையால் ஒரு நாட்டின் ஏற்றுமதி குறையும்.

8. வளரும் நிலையில் பின்தங்கிய ஒரு நாடு வெளிநாட்டுக் கடன்களை மிகுதியாகப் பெறுவதால் செலுத்து நிலையில் சமன் கேடு தோன்றும்.

9. ஆக்கக் காரணிகள் முழுமையாகவும் சிறப்பாகவும் பயன்படுத்தப்படாத ஒரு நாட்டில் உற்பத்தித் திறனும் ஏற்று மதித் திறனும் குறைவாகவே அமைகின்றன.

10. ஒரு நாட்டின் உற்பத்தியில் பெரும்பகுதி நுகரப்பட் டாலும், ஏற்றுமதிக்கான பொருள்களின் அளவு குறைகிறது.

**செலுத்து நிலைச் சமன்கேட்டைத் திருத்துவதற்கான வழி முறைகள்**

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமன்கேடு காலப்போக்கில் அதுவே சீர்படும். பல காரணங்களால் நீண்ட காலத்திலும்கூட சமன்கேட்டைச் சீர்செய்வது கடினமாக இருக்கக்கூடும். அதனால், பொருளாதாரப் பிரச்சினைகள் பல உரு வாகும். இதன் காரணமாகப் பற்றுகளைக் குறைத்து, வரவுகளை அதிகரிக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றலாம்:

**1. செலாவணி மதிப்புக் குறைப்பு** (Exchange Depreciation) : ஒரு நாட்டின் பணத்திற்கும் இன்னொரு நாட்டின் பணத்திற்கும் உள்ள மாற்று மதிப்பைக் குறைப்பதே செலாவணி மதிப்புக் குறைப்பு ஆகும். இதன்மூலம் ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறையும். எந்த நாடுகளோடு பாதக வாணிக நிலை இருக்கின்றதோ, அந்த நாடுகளின் பணத்தோடு மட்டும் செலாவணி மாற்று மதிப்புக் குறைக்கப்படுகிறது. பிற நாடுகளின் பணத்தோடு செலாவணி மதிப்பு மாற்றப்படுவதில்லை. செலாவணி மதிப்புக் குறைப்பால் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன; ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் குறைகின்றன.

**2. பண மதிப்புக் குறைப்பு** (Devalution) : ஒரு நாடு அதனுடைய பணத்தின் மதிப்பைக் குறைத்துச் செலுத்துநிலைச் சமன்கேட்டைச் சரிசெய்யலாம். பிற நாடுகளின் பணங்களோடு அதை மாற்றும் வீதத்தைக் குறைக்கலாம்; அல்லது பணத்தின் பொன் மாற்று வீதத்தைக் குறைக்கலாம். மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்ட பணம், பிற நாடுகளின் பணங்களோடு ஒப்பிடும் போது மதிப்புக் குறைந்ததாகிறது. இதனால், பிற நாட்டவர் குறைந்தளவுப் பணத்தைக் கொடுத்துப் பண மதிப்புக் குறைப்புச் செய்த நாட்டிலிருந்து அதிகளவுப் பொருள்களை வாங்க இயலும்.

எனவே, அயல்நாட்டவர் பெருமளவு இறக்குமதியைச் செய்யுமாறு தூண்டப்படுகிறார்கள். இந்நிலை இறக்குமதி குறைந்து ஏற்றுமதி பெருகுவதற்கு உதவி, செலுத்துநிலைச் சமன்கேட்டைச் சீர்படுத்துகிறது. ஒரு நாடு பண மதிப்பைக் குறைத்தவுடனேயே பிற நாடுகளும் பணமதிப்பைக் குறைத்தால் எவ்வித நன்மையையும் பெற இயலாது. இந்தியாவில் ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைச் சுருக்குவதற்காக ரூபாயின் மதிப்பு 1949, 1966ஆம் ஆண்டுகளில் குறைக்கப்பட்டது.

**3. அயலகச் செலாவணிக் கட்டுப்பாடு** (Exchange Control) : பல நாடுகளிலும் அந்நியச் செலாவணியை மத்திய வங்கியே கட்டுப்படுத்துகிறது. ஏற்றுமதியின்மூலம் ஈட்டப்பெற்ற அந்நியச் செலாவணி, மத்திய வங்கியால் முக்கியமான இறக்குமதிப் பொருள்களுக்கு மட்டும் அளிக்கப்படலாம். பொருள்களின் முக்கியத்துவத்திற்கேற்ப, அவற்றின் இறக்குமதிக்காக அரசு அல்லது மத்திய வங்கி அந்நியச் செலாவணியை ஒதுக்குகிறது. இதனால், அவசியமற்ற இறக்குமதி, வெளிநாட்டுப் பயணம், அன்பளிப்பு வழங்குதல், அயல்நாட்டுக் கல்வி ஆகியவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

**4. பண வடிப்பு** (Deflation) : பணவீக்க நிலையால் செலுத்துநிலைச் சமன்கேடு தோன்றினால், அதைச் சீர்படுத்த ஓர் அரசு பணவடிப்பு முறையைப் பின்பற்றலாம். ஒரு நாட்டில் புழங்குகின்ற பணத்தின் அளவைக் குறைப்பதன்மூலம், பொருள்களின் விலைகள் குறையுமாறு செய்யலாம். இதனால், அயல்நாடுகளில் அதிகளவுப் பொருள்களை விற்கலாம். பண அளவைக் குறைக்க மத்திய வங்கி வட்டி வீதத்தை உயர்த்தலாம்; அல்லது வாணிக வங்கிகளின் கடன் அளவைக் கட்டுப்படுத்தலாம். பணவடிப்பினால் உள்நாட்டு விலைவாசிகள் குறைந்து ஏற்றுமதி பெருகுகிறது. குறைந்த விலையில் பொருள்களை விற்க அயல்நாட்டவரும் முன்வர மாட்டார்கள். இது இறக்குமதியின் அளவைக் குறைக்க உதவும். இவை சாதக வாணிகநிலை தோன்ற வகை செய்கின்றன.

**5. ஏற்றுமதி முன்னேற்றம்** (Export Promotion) : செலுத்துநிலைச் சமன்கேட்டைத் திருத்த ஏற்றுமதிப் பெருக்கத்திற்கான ஊக்கங்களை அரசு அளிக்கிறது. ஏற்றுமதித் தொழில்களுக்கு வரி விதிப்பினின்றும் விலக்கு அளிக்கப்படுகிறது. சில வற்றிற்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஏற்றுமதிப் பொருள்களின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

இவற்றுல் உற்பத்திச் செலவு குறைந்து, ஏற்றுமதிப் பொருள் களுக்கான வெளிச்சந்தை விரிவடைகிறது.

**6. இறக்குமதிக் கட்டுப்பாடு** (Import Restriction) : பொதுவாக, இறக்குமதியைக் குறைக்க, இறக்குமதிப் பொருள் களின் மீது சுங்க வரிகள் விதிக்கப்படுகின்றன. இறக்குமதிப் பதிலீடு (Import Subsititution) செய்யப்படுவதும் உண்டு. இறக்குமதியாகும் பொருள்களைக் கட்டுப்படுத்தி, அவற்றை உள் நாட்டில் உற்பத்தி செய்வதே இறக்குமதிப் பதிலீடு ஆகும். அவசியமான பொருள்களை இறக்குமதி செய்ய 'உரிமங்கள்' (licences) வழங்கப்படுகின்றன. பொருள்களை எந்த அள வுக்கு இறக்குமதி செய்யலாம் என்பதற்குப் 'பங்களவுகள்' (quotas) நிர்ணயிக்கப்படுகின்றன.

**7. வெளிநாட்டுக் கடன்கள்** (Foreign Loans) : பாதகச் செலுத்துநிலையைச் சரிப்படுத்த நட்பு நாடுகளிடமிருந்தோ அல்லது பன்னுட்டுப் பண நிதி நிறுவனத்திடமிருந்தோ (I. M. F.) கடன்களைப் பெறலாம். ஆனுல், அந்நியக் கடன்களைத் திருப்பித் தர வேண்டியிருப்பதால், இம் முறையை நிரந்தரத் தீர்வாகக் கொள்ளமுடியாது. நீண்டகாலத்தில் வெளிநாட்டுக் கடன்கள் பெரிய சுமையாக மாறக்கூடும்.

இவற்றேடு, சில வறிய நாடுகளுக்குச் செல்வ நாடுகள் மூலதனத்தைக் கொடையாகவும் அளிக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா பல ஐரோப்பிய நாடு களுக்கு அன்பளிப்புகளை வழங்கியுள்ளது. இவ்வகை அன்பளிப்பு களும் செலுத்துநிலைச் சமன்கேட்டைத் திருத்த உதவுகின்றன. தரத்தில் உயர்ந்த பொருள்களின் உற்பத்தியைக் கூட்டி, அவற்றைக் கவர்ச்சிகரமான முறையில் வெளிநாட்டுச் சந்தைகளில் நியாயமான விலையில் விற்பதன்மூலம் பாதகச் செலுத்துநிலைக்கு ஓரளவு நிரந்தரத் தீர்வு காணலாம்.

## III. இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம்

மிகப் பழமையான காலத்திலிருந்தே இந்தியா பல நாடு களோடும் வாணிகத் தொடர்பைக் கொண்டிருக்கிறது. ஆங்கி லேயருடைய ஆட்சிக் காலத்தில் இந்தியா உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், தோட்டப் பயிர்ப் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து துணிப் பொருள்களையும், பிறவகை நுகர் பொருள்களையும் இறக்குமதி செய்தது. உதாரணமாக, 1939ஆம்

ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி அளவில் வேளாண்மைப் பொருள்கள், தொழில்களுக்கான கச்சாப் பொருள்கள் ஆகியவை 71 சதவீதமாக இருந்தன. அதே ஆண்டில் நம் நாட்டின் மொத்த இறக்குமதியில் விணைமுடிந்த பொருள்களின் அளவு 62 சதவீதமாக இருந்தது. கச்சாச் சணல், கச்சாப் பருத்தி, காப்பி, தேயிலை, வாசனைப் பொருள்கள், தோல், தோல் பொருள்கள், எண்ணெய், எண்ணெய் வித்துகள் ஆகியவை நாம் பாரம்பரியமாக ஏற்றுமதி செய்துவரும் முக்கியப் பண்டங்களாகும். 1930ஆம் ஆண்டு வரை இந்தியா சாதகமான வாணிக நிலையையே கொண்டிருந்தது.

**இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு** இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்தில் மாற்றம் ஏற்பட்டது. தொழில் துறை வளர்ச்சியால் விணைமுடிந்த நுகர் பொருள்களின் இறக்குமதி குறைந்தது. பெரிய தொழில்கள் நிறுவப்பட்டமையால், மூலப் பொருள்களை இறக்குமதி செய்வது அவசியமாயிற்று. இங்கிலாந்து நாட்டோடும் அமெரிக்காவுடனும் வாணிகத் தொடர்பு பெருகியது. இரண்டாவது உலகப் போர்க் காலத்திலும், அதற்குப் பிறகு சிலகாலம் வரையிலும் இந்தியா சாதக வாணிக நிலையையே பெற்றிருந்தது. இங்கிலாந்திலும் பிற நாடுகளிலும் இந்தியப் பொருள்களுக்கான தேவை கூடியமையே இதற்குக் காரணமாகும். அதோடுகூட, பல நாடுகளும் போரில் ஈடுபட்டிருந்தன. அக் காலத்திலேயே தொழில்களுக்கான மூலப்பொருள்களை இறக்குமதி செய்ததும், விணைமுடிந்த சில பொருள்களை ஏற்றுமதி செய்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

**சுதந்திரமடைந்த பிறகு** நம் நாட்டின் அயல்நாட்டு வாணிகத்தில் மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்தமையால் சணல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. கச்சாச் சணல் உற்பத்தி செய்யும் பகுதிகள் பாகிஸ்தான் வசம் அமைந்தன. ஆனால், சணல் உற்பத்தி ஆலைகள் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் இருந்தன. சுதந்திர மடைவதற்கு முன்பு நாம் கச்சாச் சணலை ஏற்றுமதிசெய்து வந்தோம். அதற்குப் பிறகு அதை இறக்குமதி செய்வது அவசியமாயிற்று.

கொரியப் போரினாலும், 1949ஆம் ஆண்டில் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டமையாலும் நம்முடைய ஏற்றுமதிகள் பெருகின. 1951ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதனால், இறக்குமதி அளவும், ஏற்றுமதி

அளவும் பல மடங்கு கூடின. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கிய பிறகு மூலதனப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரி ரூ. 724 கோடி மதிப்புக்கு இறக்குமதி செய்யப்பட்டது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன் அளவு ரூ. 1,274 கோடியாக உயர்ந்தது.

சமீப காலமாக, உணவுத் தானியங்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதகமாக அமைந்துள்ளது. மற்றொரு புறத்தில், நமது ஏற்றுமதிப் பெருக்க நடவடிக்கைகள் குறைந்தளவு வெற்றியையே பெற்றுள்ளன. இந்தியாவின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களாகிய தேயிலை, சணல் பொருள்கள், புகையிலை, பருத்தித் துணிப் பொருள்கள் போன்றவற்றில் ஏற்றுமதி அபிவிருத்தி காணப்படவில்லை. எனினும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து மின்விசிறிகள், சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள், தட்டெழுத்துப் பொறிகள் போன்ற பொறியியல் தொழில் உற்பத்தி செய்யும் நுகர்பொருள்களை ஏற்றுமதி செய்து வருகிறோம். ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இரும்புக் கனியும் ஏற்றுமதியாகின்றது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டில் ஏற்றுமதி குறைந்தமைக்கு, வானம் பொய்த்தமையால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டமையே முக்கியமான காரணமாகும். 1965–66ஆம் ஆண்டின் ஏற்றுமதிக் குறைவுக்கு இந்தியா–பாகிஸ்தான் போர் காரணமாயிற்று. பொதுவாக, உற்பத்திச் செலவு பல பொருள்களிலும் உயர்வாக இருப்பதால்தான் ஏற்றுமதியின் அளவு குறைவாக அமைகிறது. பொருள்களை விற்பதில் ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் போட்டியை இந்தியாவால் சமாளிக்க முடியவில்லை.

மேலும், நாம் பொருளாதார முன்னேற்றத்தைக் கணிசமாகப் பெற்றுள்ளமையால், உள்நாட்டு நுகர்வின் அளவும் கூடியுள்ளது. இதனால், ஏற்றுமதி செய்வதற்கான உபரியின் அளவு குறைந்துள்ளது. 1951ஆம் ஆண்டிற்கும் 1961ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் உலக வாணிகம் இரு மடங்காகி உள்ளது. உலகின் மொத்த ஏற்றுமதி அளவில் இந்திய ஏற்றுமதியின் அளவு 1960-ல் 1.2 சதவீதமாக இருந்து, 1965-ல் 1.0 சதவீதமாகக் குறைந்திருக்கிறது.

தற்பொழுது சணல் பொருள்கள், பருத்தித் துணி வகைகள், சிமெண்ட், பொறியியற் பொருள்கள், மைக்கா, சர்க்கரை, தேயிலை, தோல் பொருள்கள், காய்கறி, எண்ணெய், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்து இயந்திரங்கள், பெட்ரோலிய எண்ணெய்ப் பொருள்கள், கச்சாப் பருத்தி, காகிதம், இரசாயனப் பொருள்கள், மருந்துகள், உணவுத் தானியங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து வருகிறோம். 1951 முதல் 1971 வரையான இருபதாண்டுக் காலத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள பாதக வாணிக இருப்பு நிலை ரூ. 7,653 கோடியாகும். இதில் புலஞகா இனங்களின் பற்று-வரவைக் கணக்கிட்டுக் கழித்தால், நம்முடைய பாதக அயல்நாட்டு வாணிகச் செலுத்து இருப்புநிலை சுமார் ரூ. 6,150 கோடியாகும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்பட்ட பாதகச் செலுத்து நிலை ரூ. 42 கோடி மட்டுமேயாகும்.

1968–69-ல் ரூ. 1,358 கோடியாக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு, 1969–70-ல் ரூ. 1,413 கோடியாகவும், 1970-71-ல் ரூ. 1,535 கோடியாகவும், 1971–72-ல் ரூ. 1,608 கோடியாகவும், 1972–73-ல் ரூ. 1,961 கோடியாகவும், 1973–74-ல் ரூ. 2,000 கோடிக்கு அதிகமாகவும் உயர்ந்துள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1969-70 முதல் 1974-75 வரை) இறக்குமதித் தேவைகளின் மதிப்பளவு ரூ. 9,7,0 கோடிக்குச் சமமாக இருக்குமென்று மதிப்பிடப் பட்டது.

## இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்து நிலை

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 42 கோடியாக மட்டுமே இருந்த பாதகச் செலுத்துநிலை, இரண்டாவது திட்ட காலத்தில் ரு. 1,722 கோடியாகவும், மூன்றாவது திட்ட காலத்தில் ரூ. 4,600 கோடியாகவும் அதிகரித்தது. திட்டக்குழு 1974–75ஆம் ஆண்டிற்கான பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலை சுமார் ரூ. 378 கோடியாக இருக்குமெனக் குறிப்பிட்டுள்ளது. இது குறைபாடுள்ள மதிப்பீடாகும் என்று டாக்டர் பி. எஸ். மின்ஹாஸ் (Dr. B. S. Minhas) கூறுகிறார். சுத்திகரிக்கப்படாத பெட்ரோலியம் எண்ணெய், நைட்ரஜன் மற்றும் பல இறக்குமதிப் பொருள்களின் விலைகள் உயர்த்தப் பட்டுள்ளமையால், 1974-75-ல் பற்றாக்குறைச் செலுத்து நிலை ரு. 1,000 கோடிக்கும் அதிகமாக இருக்குமென்று அவர் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது திட்ட காலத்திலிருந்து அயல்நாட்டுச் செலுத்துநிலை மிகவும் பாதகமாக மாறி வருகின்றமைக்கான பல காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**இறக்குமதிப் பெருக்கத்திற்கான காரணங்கள்**

1. பன்னாட்டளவில் நிலவும் பணவீக்க நிலையால் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் கூடியுள்ளன.

2. ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் தொழில்துறை வளர்ச்சிக்காக இயந்திரங்களையும் மூலப் பொருள்களையும் அதிகளவில் இறக்குமதி செய்வது அவசியமாயிற்று.

3. பாகிஸ்தான், சீனா ஆகியவற்றோடு போர் மூண்டமையால் பாதுகாப்புச் செலவுகள் கூடின. டாங்கிகளும், போர்த் தளவாடங்களும் – கருவிகளும் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

4. பங்களாதேஷ் நாட்டிற்கு விடுதலை வாங்கித்தர பாகிஸ்தானோடு போரில் ஈடுபட்டமையால், இலட்சோப இலட்சம் அகதிகள் இந்தியாவிற்கு வந்தனர். நம் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இதனால், உணவுத் தானியங்கள் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்றன.

5. நம் நாட்டில் போதுமான அளவுக்கு மூலதனத் திரட்சி ஏற்படாமையால், நாம் அயல்நாட்டு மூலதனத்தைக் கடனாகப் பெறுகிறோம்.

6. அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபடுவதற்கு உதவும் கப்பல்களின் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

7. இரசாயன உரங்கள், இரசாயனப் பொருள்கள், பெட்ரோலியம் பொருள்கள், நெட்டிழைப் பருத்தி, இயந்திரங்களின் பராமரிப்பிற்குத் தேவையான தனி பாகங்கள் ஆகியவற்றின் இறக்குமதி கூடியுள்ளது. அவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன.

**ஏற்றுமதி பெருகாமைக்கான காரணங்கள்**

1. பணவீக்க நிலையால் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இதனால், வெளிநாட்டுச் சந்தைகளில் நம்முடைய பொருள்களுக்கான தேவை பெருகவில்லை.

2. சணல், தேயிலை, எண்ணெய் வித்துகள் போன்ற பாரம்பரியப் பொருள்களையே நாம் ஏற்றுமதி செய்கிறோம். இவ்

வகைப் பொருள்களின் விற்பனையில், வளரும் நாடுகளிடையே போட்டி நிலவுகிறது.

3. வேளாண்மை வளர்ச்சி குறைந்த வேகத்தில் இருப்பதாலும், மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் ஏற்றுமதிக்கான உபரி குறைவாகவே இருக்கிறது.

4. ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் ஏற்றுமதிப் பெருக்கத்திற்கான நடவடிக்கைகளில் ஆர்வத்தோடும் தீவிரமாகவும் ஈடுபடுவதில்லை.

5. பிற நாடுகளும் இந்தியப் பொருள்களின் மீது சுங்க வரிகளை உயரளவில் விதிக்கின்றன; கட்டுப்பாட்டு முறைகளால் இறக்குமதியைக் குறைக்கின்றன.

6. தேவை நெகிழ்ச்சியற்ற சில பொருள்களையே இந்தியா ஏற்றுமதி செய்கிறது. தேவை நெகிழ்ச்சியுள்ள புதிய வகைத் தொழிற்பொருள்களை ஏற்றுமதி செய்வதன்மூலமே நாம் நன்மையடையலாம்.

7. ஏற்றுமதியாளர்களிடையே நேர்மையற்ற நிலை நிலவி வருகிறது. முந்திரி ஏற்றுமதி பாதிக்கப்பட்டதும், 'ப்ளீடிங் மதராஸ்' துணியின் தேவை குறைவுபட்டதும் ஏற்றுமதியாளர்களின் நேர்மைக் குறைவினால் ஆகும்.

8. பொருளாதாரத்தின் பல துறைகளும் முன்னேறவில்லை. அரசின் எல்லாத் துறைகளும் இணைந்து செயலாற்றுமையாலும் ஏற்றுமதி பெருகவில்லை.

9. சணல், மைக்கா, இண்டிகோ போன்ற இந்தியாவின் ஏற்றுமதித் தொழில்கள் பதிலிப் பொருள்களின் கண்டுபிடிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன.

10. 'பற்றுக்குறை நிதியாக்கம்' பின்பற்றப்பட்டமையால் பணவீக்கம் ஏற்பட்டு உள்நாட்டிலேயே பொருள்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளமையால், உற்பத்தியாளர்கள் ஏற்றுமதி செய்ய விரும்புவதில்லை.

11. நமது திட்டங்களில் ஏற்றுமதிக் கொள்கைக்கு முக்கிய இடமளிக்கப்படவில்லை. மூன்றாவது திட்டத்தில்தான் தெளிவான ஏற்றுமதிக் கொள்கை தேவையென உணரப்பட்டது.

12. மற்ற நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு ஈடாக நாம் தொழில் வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. உலகச் சந்தையில் இந்தியப் பொருள்களுக்கு நிலையான கிராக்கி இருப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, பாகிஸ்தானில் சணல் பொருள்களின் தரம் உயர்வாக உள்ளமைக்கு, அங்குச் சணல் ஆலைகள் சமீபத்தில் நிறுவப்பட்டமையே காரணமாகும். இந்தியாவின் சணல் ஆலைகள் மிகப் பழங்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை. இதனால், உற்பத்திச் செலவைக் குறைப்பதும், உயர்தரமான உற்பத்தியைப் பெறுவதும் கடினமாகிறது.

**தீர்வுகள்**

பாதகச் செலுத்துநிலையைச் சீர்செய்யக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏற்றுமதி அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. இறக்குமதியைக் குறைக்க அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பங்களவு முறை, உரிமம் வழங்குதல், சுங்கவரி விதிப்பு ஆகிய பலவும் பின்பற்றப்படுகின்றன.

3. பன்னாட்டு வாணிக நன்மைகளைப் பெற இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளோடு 'இருமுக வாணிக ஒப்பந்தங்களைச்' (Bilateral trade agreements) செய்து கொண்டுள்ளது.

4. ஏற்றுமதி அளவையும் மதிப்பையும் கூட்ட 1966ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் நாள் ரூபாயின் மதிப்பு 36.5 சதவீதம் குறைக்கப்பட்டது.

5. பெருமளவு 'ஸ்டெர்லிங்' நிதி பயன்படுத்தப்பட்டு விட்டதால், பாதகச் செலுத்துநிலையைச் சரிசெய்ய வெளிநாட்டுக் கடன்களையும் பெறுகிறோம்.

6. சரியான வாணிகக் கொள்கையைத் தீர்மானிக்க, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இறக்குமதி – ஏற்றுமதி நிலைகள் ஆராயப்படுகின்றன.

7. பணவீக்கத்தைக் குறைத்து ஏற்றுமதிப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசு பல ஊக்கங்களை ஏற்றுமதியாளர்களுக்கு அளித்து வருகிறது.

8. அரசு நேரடியாகச் சில வகைப் பண்டங்களின் வாணிகத்தில் ஈடுபட்டுச் செலுத்துநிலைச் சமன்கேட்டைத் திருத்துகிறது.

இவ்வாறு பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றினால்தான், இந்தியா பாதகச் செலுத்து நிலையினின்றும் நீண்ட காலத்திலாவது மீள இயலும்.

# 28. பொது நிதி
## (Public Finance)

அரசு ஆற்றவேண்டிய பணிகள் எண்ணற்றவையாகும். பிற நாடுகளின் தாக்குதலினின்று நாட்டைக் காப்பதும், பொருளாதாரம்–தொழில்–வாணிகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதும், சமுதாய நலப் பணிகளைக் கைக்கொள்வதும் அரசின் முக்கியப் பணிகளாகும். பண்டைக் காலத்தில் அரசு 'காவல் அரசாக' (Police State) மட்டுமே இருந்தது. இன்று கணக்கற்றப் பணிகளை ஆற்றுவதன்மூலம் அது மக்களுடைய 'நலம் காக்கும் அரசாக' (Welfare State) மாறியுள்ளது. அரசு பல்வேறு பணிகளை ஆற்ற 'நிதி' தேவைப்படுகிறது.

பொது நிதியியலில் ஓர் அரசு எவ் வழிகளில் வருமானங்களைப் பெற்று, அவற்றை எவ்வாறு செலவிடுகிறது என்பதை ஆராய்கிறோம். சமீப காலமாக, அரசுகளின் வரவினங்களும் செலவினங்களும் அதிகரித்துள்ளன. பொதுநிதியியலைக் கீழ்க்காணும் ஐந்து பிரிவுகளாகப் பகுக்கலாம் :

(i) பொது வருவாய்;

(ii) பொதுச் செலவு;

(iii) பொதுக் கடன்;

(iv) நிதி நிர்வாகம்;

(v) பொருளாதார நிலைப் பேரூக்கம்.

## I. பொது வருவாய் (Public Revenue)

அரசு பல்வேறு வழிகளில் வருவாயைப் பெறுகிறது. வரிகள், நிர்வாகம், வாணிகம், கொடைகள் போன்றவை அரசின் முக்கிய

வருவாய் வகைகளாகும். அரசு எவ் வகைகளில் வருவாயைப் பெறுகிறது என்பதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

### 1. வரிகள் (Taxes)

அரசின் வருவாயில் பெரும் பகுதி வரிவிதிப்பின்மூலமே கிடைக்கிறது. பொருள்களின் உற்பத்தி, நுகர்வு, மாற்று, பங்கீடு ஆகிய பல நிலைகளிலும் வரிகள் விதிக்கப்படுகின்றன. வருமானவரி, விற்பனை வரி, சொத்து வரி, கேளிக்கை வரி, செலவு வரி போன்ற பல வரிகளின்மூலம் அரசு அதிக வருவாயைப் பெறுகிறது. அரசால் விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்துவது கட்டாயமானதாகும். வரிகளின்மூலம் கிடைக்கும் வருவாயை அரசு மக்களின் நலனிற்காகச் செலவிடுகிறது. நாட்டின் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வரிவிதிப்பு முறை உதவுகிறது.

### 2. தனித் தீர்வைகள் (Special Assessments)

அரசு கைக்கொள்ளும் சில நடவடிக்கைகளால், தனியாரோ அல்லது தனியார் சொத்துகளோ நன்மையடைந்தால் தனித் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. உதாரணமாக ஆற்றைக் கடக்க உதவும் பாலத்தை அரசு கட்டுவதன்மூலம் மக்கள் நன்மையடைகிறார்கள். குறிப்பிட்ட காலம் வரை அப் பாலத்தைப் பயன்படுத்துபவர்களிடம் இருந்து 'சுங்கம்' (toll) வசூலிக்கப்படலாம். அணையைக் கட்டுவதன்மூலம் குறிப்பிட்ட இடங்களில் உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடும். அந்நிலங்களை உடைமையாகக் கொண்டவர்களிடம் இருந்து 'தண்ணீர்த் தீர்வை' பெறப்படலாம்.

### 3. கட்டணங்கள் (Fees)

சிலவிதமான பணிகளை நிறைவேற்ற அரசு கட்டணங்களை வசூலிக்கிறது. இதற்கு உதாரணமாகப் பதிவுக் கட்டணம், முத்திரைக் கட்டணம், உரிமைக் கட்டணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அரசு சில பணிகளுக்காக விலைகளை நிர்ணயித்து வருவாயைப் பெறுகிறது. தபால்-தந்தி, தொலைபேசி, இரயில்வே முதலியவற்றின் பயனைப்பெற வெவ்வேறு அளவுக் கட்டணங்களை விலையாக அளிக்க வேண்டியுள்ளது.

### 4. மற்ற வருவாய்கள்

அரசியலமைப்புச் சட்டங்களை மீறுபவர்கள் தண்டிக்கப்பட்டு அவர்களிடமிருந்து அபராதத் தொகைகள் வசூலிக்கப்படுகின்றன.

உள்நாட்டுக் கடனும் வெளிநாட்டுக் கடனும் அரசின் வருவாயே ஆகும். நிதிப் பற்றுக் குறையைத் தவிர்க்க அரசு காகிதப் பணத்தை வெளியிட்டுப் பற்றுக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுவதும் உண்டு. சில தொழில் நிறுவனங்களையும் வங்கிகளையும் தேசியவுடைமை ஆக்குவதன்மூலம் அரசுக்கு வருவாய்க் கிடைக்கிறது. பரிசுச் சீட்டு முறையைக் கைக்கொள்வதாலும் அரசுக்கு வருவாய்ப் பெருகும். மத்திய அரசு மாநில அரசுக்கும், மாநில அரசு உள்ளாட்சித்துறை அமைப்புக்கும் 'மானியங்களை' (grants) வழங்குகின்றன.

## II. பொதுச் செலவு (Public Expenditure)

அரசின் செலவினங்கள் பல காரணங்களால் பெருகிக் கொண்டே இருக்கின்றன. பொருளாதார வளர்ச்சி, சமூக நலன், நிர்வாகம், பாதுகாப்பு, வாணிகம் ஆகியவற்றிற்கான அரசின் செலவுகள் முக்கியமானவைகளாகும். சில கொள்கைகளின் அடிப்படையில் அரசு செலவுகளைச் செய்யவேண்டும். அக் கொள்கைகளைப் பின்வருமாறு விளக்கலாம் :

### (i) உச்சநிலை சமுதாய நன்மை (Maximum Social Benefit)

அரசின் செலவீடு சமுதாயத்திற்கு அதிகளவு நன்மையைத் தருவதாய் அமையவேண்டும். தனிப்பட்டவர்கள் பலரும் தங்களுடைய நலனிற்காகவே செயல்படுகின்றனர். அரசு மக்கள் எல்லோருடைய நலனிற்காகவும் செலவிடவேண்டும். அரசின் செலவீட்டால் சமுதாயத்திலுள்ள மக்கள் எந்த அளவுக்கு நன்மையடைவர் என்பதை நிதியமைச்சர் அறிந்திருப்பது அவசியம். எவ்வகைச் செலவுகளின்மூலம் சமுதாயம் உச்ச அளவில் நன்மையைப்பெறும் என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ப அரசின் செலவுகளை அமைத்தல் இன்றியமையாதது.

### (ii) சிக்கனம் (Economy)

அரசு தான் பெற்ற வருவாயைச் சிக்கனத்துடன் செலவு செய்யவேண்டும். தேவையற்ற செலவினங்களைக் குறைத்தல் முக்கியமாகும். செலவிடுகின்ற நிதிக்குத் தக்க வீதத்தில் நன்மை கிடைக்கப்பெறுதல் அவசியம். உதாரணமாக, ஓர் அரசு நிர்வாகப் பணிகளுக்காகத் தேவைக்கு அதிகமான ஊழியர்களை வேலையில் அமர்த்திக்கொள்வது தவருனதாகும். இதனால், வீணான செலவுகள் கூடுகின்றன.

**(iii) நெகிழ்வுத் தன்மை** (Elasticity)

சில காலங்களில் அரசின் வருவாய்க் குறைவதுண்டு. அரசின் பொதுச்செலவீடு வருவாய்க்கேற்ப மாற்றிக்கொள்ளத்தக்க நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கவேண்டும். அரசின் வருவாய் மாறுவதற்குத் தக்கவாறு, அதனுடைய செலவும் எளிதில் மாற்றத்தக்கதாக அமைதல் அவசியம்.

**(iv) ஒப்பளிப்பு** (Sanction)

குறிப்பிட்ட பொதுச் செலவினங்களை அங்கீகரித்து ஒப்பளிப்புச் செய்வதற்குப் பொறுப்பான நிர்வாக அமைப்புத் தேவை. அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒப்பளிப்புத் தருவது சட்டமன்றம் (Legislature) ஆகும். அரசின் வெவ்வேறு துறைகளுக்கும் குறிப்பிட்ட அளவுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

**(v) நன்மை விளைவு** (Beneficial Effect)

பொதுச்செலவு உற்பத்தியிலும் நுகர்விலும் அதிகச் செல்வாக்கைக் கொண்டுள்ளது. உடல் நலத்திற்கும் மனநிலைக்கும் நன்மை பயக்காத பொருள்களின் நுகர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும். ஆனால், மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில், நுகர்வில் ஈடுபடுவதை அரசு தடுத்தல் கூடாது. அரசின் செலவீடு ஆக்க நடவடிக்கைகளை ஊக்குவிப்பதாகவும் அமைதல் அவசியம். வாணிக நடவடிக்கைகள் வளர்க்கப்படவேண்டும். மக்களுடைய உழைக்கும் திறனும், சேமிக்கும் திறனும் அரசின் செலவீடுகளால் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது.

**(vi) சிறப்பான நிதி நிர்வாகம்** (Sound Financial Administration)

ஒரு நாட்டில் சிறப்பான நிதி நிர்வாகம் அமைவது அவசியமாகும். நிதி நிர்வாகம் சிறப்பாக அமைய சரியான கணக்குகளை வைத்திருப்பதும், அவற்றைத் தணிக்கை செய்வதும் இன்றியமையாததாகும். நிதி நிர்வாகக் குறைபாடுகளால் அரசியல் ஊழல்கள் மலிந்துவிடுகின்றன.

இக் கொள்கைகளைக் கவனத்தில் கொண்டு, அரசு செலவுகளைச் செய்தால், ஒரு நாட்டில் விரைவான பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதோடு மக்களும் நலமான வாழ்வைப் பெறுவர்.

**பொதுச் செலவுகளின் பெருக்கம்**

அண்மைக் காலத்தில் அரசின் பொருளாதார—சமுதாய—அரசியல்—பாதுகாப்பு நடவடிக்கைகள் பெருகியுள்ளமையால்

பொதுச் செலவினங்களும் எண்ணிக்கையில் கூடியுள்ளன. பொதுச் செலவு கூடியுள்ளமைக்கான காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. விரைவான மக்கள்தொகைப் பெருக்கத்தால் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, ஆரோக்கியம், மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற வசதிகளை அதிகரிப்பதற்காக அரசு உயரளவில் செலவிடுகிறது.

2. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் தொழில்—வாணிக அமைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்படுவதால், அவற்றை நிர்வகிப்பதற்கான செலவு கூடுகிறது.

3. அயல்நாடுகளின் தாக்குதல்களைச் சமாளிக்க உலகின் பல அரசுகள் பாதுகாப்பிற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்றன.

4. விஞ்ஞான வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் அரசு அதிக அளவுப் பணத்தைச் செலவு செய்கிறது.

5. பணவீக்க நிலையால் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செலவுகளும், அரசுத் துறைகளுக்கான நிர்வாகச் செலவுகளும் கூடியுள்ளன.

6. தொழில்களின் செறிவான வளர்ச்சியால் நகரங்கள் தோன்றும்போது, அவற்றிற்கான பல வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகிறது.

7. இலவசப் பள்ளிக் கல்வி, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உபகாரச் சம்பளம், சுகாதார—மருத்துவ வசதிகள், நோய்த்-தடுப்பு நடவடிக்கைகள், கிராமப்புற வளர்ச்சி போன்ற சமுதாயப் பணிகளுக்கான அரசின் செலவு அதிகரித்துள்ளது.

8. ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களை நடத்தவும், சட்டமன்ற-பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும், அமைச்சர்களுக்காகவும், அரசின் உயர் அதிகாரிகளுக்காகவும் அரசு மிகுதியான செலவுகளை ஏற்கவேண்டியுள்ளது.

9. வெளிநாடுகளின் நட்புறவைப் பெற தூதுவரகங்கள் அமைத்து நிர்வகிப்பதற்கான செலவுகள் உயர்ந்துள்ளன.

10. உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களுக்கான அசலையும் வட்டியையும் அரசு செலுத்துகிறது.

நம் நாட்டில் அரசு விண்வெளி ஆராய்ச்சிக்கும், அணுக்குண்டைத் தயாரித்து வெடித்து ஆராய்ச்சி செய்வதற்கும், எண்ணெய்

கண்டுபிடிப்பதற்கும், குடும்பநலத் திட்டத்திற்கும் கோடிக் கணக்கில் ரூபாயைச் செலவிடுகிறது. பொதுவாக நோக்குமிடத்து, இந்திய அரசின் செலவீடுகளில் சிக்கன நிலை அமைந்திருக்கவில்லை. அரசின் நிதியானது, குறிப்பிட்ட பணிகளில் முழுமையாகச் செலவிடப்படுவதில்லை.

## III. இந்திய அரசின் பொதுநிதி

இரண்டாவது உலகப் போர்க் காலத்திலிருந்து இந்திய அரசின் வருவாயும், செலவும் விரைவாக அதிகரித்து, தற்பொழுது மிக அதிகளவுக்கு உயர்ந்துள்ளன. இதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் உணர்த்தும்.

| | 1938–39 (கோடி ரூபாயில்) | 1973–74 (கோடி ரூபாயில்) |
|---|---|---|
| வருவாய் .. | 84 | 5,102 |
| செலவு .. | 85 | 4,954 |

### இந்திய அரசின் வருவாய்

இந்திய அரசுக்கு வரிவிதிப்பே வருவாயை அளிக்கும் முக்கிய இனமாக உள்ளது. நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும் இந்திய வரி முறையில் முக்கிய நிலையைக் கொண்டுள்ளன. நம் நாட்டில் செல்வந்தர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால், அரசு வருவாயைப் பெற நேர்முக வரிகளை மட்டும் நம்பியிருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டால், மக்கள் சேமிக்கும் விருப்பத்தை இழந்துவிடுவார்கள். இதனால், சேமிப்பும் மூலதனத் திரட்சியும் குறைந்து பொருளாதார முன்னேற்றம் தடைப்படும்.

நம் நாட்டில் வரி ஏய்ப்பு இருப்பதற்கு உயரளவு வரிவிதிப்பு முறையும் காரணமாகிறது. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பேராசிரியர் கால்டர் (Professor Kaldor) பரிந்துரைப்படி, புதிய நேர்முக வரிகள் பல விதிக்கப்பட்டன. நாட்டின் பலகோடி மக்கள் வறுமையால் வாடுகின்றனர். இதனால், குறைந்த எண்ணிக்கையில் உள்ள மிகுந்த வருமானம் பெறும் மேட்டுக் குடியினரிடம் இருந்து உயரளவில்

கட்டாயமாக வரிகள் வசூலிக்கப்படவேண்டும். இது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வகைசெய்யும்.

சுங்கத் தீர்வைகள் (customs duties), ஆயத் தீர்வைகள் (excise duties), வருமான வரி, தொழில் நிறுவன் வரி (corporation tax), செல்வ வரி, அன்பளிப்பு வரி, பண்ணை வரி போன்றவை மத்திய அரசின் முக்கிய வரி வருவாய்களாகும். இரயில் போக்குவரத்து, தபால்—தந்தி—தொலைபேசி, காகிதப் பண வெளியீடு, ரிசர்வ் வங்கியின் இலாபம் முதலியவையும் இந்திய அரசுக்கு வருவாயைத் தருகின்றன. இந்திய எண்ணெய்க் கழகம், ஹிந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனம், பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் போன்ற பொதுத்துறைத் தொழில்களும் அரசுக்கு வருவாயை அளிக்கின்றன. ஆயத் தீர்வைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மீதும், சுங்கத் தீர்வைகள் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு இறக்குமதியாகும் பொருள்கள் மீதும் விதிக்கப்படுகின்றன.

கார், பெட்ரோல், மண்ணெண்ணெய், சர்க்கரை, பருத்தி புகையிலை, சிமெண்ட், பிற நுகர் பொருள்கள் போன்றவை மீது உயர்வீதத்தில் ஆயத் தீர்வைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் சராசரி சுமார் ரூ. 1,500 கோடி வருவாய் கிடைக்கிறது. அதிக வருவாயைப் பெற அரசு மறைமுக வரிகளையே நம்பியுள்ளது.

இந்தியாவின் மொத்த வருவாயில் சுமார் 14 சதவீதம் வரிகளாக உள்ளன. மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் சுமார் 35 சதவீதம் வருமான வரியின்மூலம் பெறப்படுகிறது. வருமான வரி வருவாயை மத்திய அரசும் மாநில அரசுகளும் பங்கிட்டுக் கொள்கின்றன. தொழில்—வாணிக நிறுவனங்களின் இலாபத்தின்மீது வளர்வீத வரி விதிக்கப்படுகிறது. காடுகள், சுரங்கங்கள், விமானப் போக்குவரத்து போன்றவையும் அரசுக்கு வருவாயை அளிக்கின்றன. அரசின் மருந்து மற்றும் காகித உற்பத்தி நிறுவனங்கள் இலாபத்தைப் பெறுகின்றன. மாநில அரசுகளுக்கு அளித்த கடன்களுக்கான உயர் வட்டியையும் மத்திய அரசு பெறுகிறது.

## இந்திய அரசின் செலவு

மக்கள்தொகைப் பெருக்கம், பாதுகாப்பு நடவடிக்கைகள், நிர்வாகச் செலவு உயர்வு, சமுதாய நலப் பணிகள், வளர்ச்சிக்கான திட்டங்கள் ஆகியவற்றுல் மத்திய அரசின் செலவுகள் கூடியுள்ளன.

1899–1900-ல் 6.88 கோடியாகவும், 1950–51-ல் ரூ. 347 கோடியாகவும் இருந்த இந்திய அரசின் செலவு 1973–74-ல் ரூ. 4,954 கோடியாக உயர்ந்துள்ளது. சீனு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தாக்குதலைச் சமாளிக்க, அரசு மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பங்கைப் பாதுகாப்பிற்காகச் செலவிடுகிறது. தரைப் படை, கப்பல்படை, விமானப்படை ஆகியவற்றிற்காக ஆண்டு தோறும் பலகோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

மத்திய அரசு அதன் பல துறைகளை நிர்வகிக்கவும், வெளி நாட்டு–உள்நாட்டுக் கடன்களுக்கான அசலையும் வட்டியையும் தருவதற்கும், அகதிகளின் புனர்வாழ்விற்காகவும் அதிகச் செலவு களைச் செய்கிறது. பொதுத்துறை நிறுவனங்களையும், பொதுப் பயன் பணித்துறைத் தொழில்களையும் நிர்வகிப்பது மத்திய அரசேயாகும். 1973 – 74ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக மட்டும் ரூ. 1,600 கோடி ஒதுக்கப் பட்டது. பொது ஆரோக்கியம், குடும்பநலத் திட்டம், கல்வி, உழைப்பாளர் நலன் போன்ற சமூக நலப் பணிகளுக்கான செலவும் கூடிவருகிறது.

பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்த வேளாண்மை, கூட்டுறவு, கிராமப்புற மேம்பாடு, நீர்ப்பாசனம், விஞ்ஞான ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி, அணுப் பரிசோதனை போன்றவற்றிற்காகவும் இந்திய அரசு அதிக அளவில் செலவுகளைச் செய்துவருகிறது.

## IV. இந்தியாவிலுள்ள மாநில அரசுகளின் பொதுநிதி

தற்பொழுது நம் நாட்டில் 22 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநில அரசும் வரிகளின்மூலமும் பிற வழிகளிலும் வருவாயைப் பெற்று, மாநிலத்தின் வளர்ச்சிக்காகச் செலவு செய் கின்றன. ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட மாநில அரசுகள் அதிக அளவு நிதியை ஒதுக்குகின்றன. 1973–74ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்படி, நமது மாநில அரசின் வரவு ரூ. 465.56 கோடியாகவும், செலவு ரூ. 465.07 கோடி யாகவும் அமைந்திருந்தன. அவ்வாண்டில் இலவசக் கல்விக்காக வும் நெசவுத் தொழில் வளர்ச்சிக்காகவும் ரூ. 93.23 கோடி ஒதுக்கப்பட்டது.

**மாநில அரசுகளின் வருவாய்**

**(i) வருமானத்தின் மீதான வரிகள் :** வேளாண்மை வருமான வரி, தொழில்வரி, மத்திய அரசு வசூலிக்கும் வருமான

வரியில் பங்கு பெறுதல் ஆகியவற்றின்மூலம் மாநில அரசுகள் வருவாயைப் பெறுகின்றன.

**(ii) சொத்தின் மீதான வரிகள்:** மாநில அரசுகள் சொத்து மற்றும் சொத்துப் பரிவர்த்தனை ஆகியவற்றின் வாயிலாக வருவாயை அடைகின்றன. நிலவரி, முத்திரைப் பத்திரங்கள், பத்திரங்களைப் பதிவு செய்தல், நகர்ப்புற சொத்துகளின் மீதான வரி ஆகியவற்றின்மூலம் மாநில அரசுகள் அதிக வருவாயைப் பெறுகின்றன. பழைய காலங்களில் நிலவரி முக்கிய வருவாயாக இருந்தது. இன்று பல மாநில அரசுகள் சிறு விவசாயிகளுக்கு உதவ நிலவரியை நீக்கக் கருதியுள்ளன.

**(iii) பண்டங்கள் – பணிகள் மீதான வரிகள்:** மத்திய அரசு வரிவிதித்த சில பொருள்களின் மீது மாநில அரசுகள் வரியை விதிக்கலாம். மத்திய அரசு வசூலிக்கும் ஆயத் தீர்வைகளின் ஒரு பகுதியை மாநில அரசுகள் பெறுகின்றன. கேளிக்கை வரி, சூதாட்ட வரி, மின்சாரக் கட்டணம் போன்றவைமூலமும் அவை வருவாயை அடைகின்றன. மாநில அரசுகளின் மிக முக்கியமான விற்பனை வரியின் வாயிலாக, அவற்றிற்கு அதிக வருவாய்க் கிடைக்கிறது.

**(iv) வரியல்லாத வருவாய்கள்:** வரிகளைத் தவிர்த்த பிற வழிகளிலும் மாநில அரசுகள் வருவாயைப் பெறுகின்றன. நீர்ப்பாசனத் திட்டம், மின்சார விநியோகம், சாலைப்போக்குவரத்து, காடுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பரிசுச் சீட்டு முறை ஆகியவையும் மாநில அரசுகளுக்கு வருவாயை நல்குகின்றன. மாநில அரசின் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள், மின்சார வாரியம் போன்றவை அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருகின்றன. மக்களின் நலனிற்காக மதுவிலக்கு செயல்படுத்தப் படுகிறது. குதிரைப் பந்தயம் நீக்கப்பட்டு விட்டது. பரிசுச் சீட்டு முறையும் நீக்கப்படவிருக்கிறது.

1951–52ஆம் ஆண்டில் ரூ. 396 கோடியாக இருந்த மாநில அரசுகளின் வருவாய், 1971-72-ல் ரூ. 3787.7 கோடியாக ஒன்பது மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

மாநில அரசுகள் மோட்டார் வாகனங்கள், பெட்ரோலியம், பொருள்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றின் மீது விற்பனை வரியை விதிக்கின்றன. கேரளா, இராஜஸ்தான், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், ஒரிஸா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களின் அரசுகள் வேளாண்மை வருமான வரியின்மூலம் உயர்

வருவாயைப் பெறுகின்றன. இரயில்வேப் போக்குவரத்தால் மத்திய அரசுக்குக் கிடைக்கும் இலாபத்தின் குறிப்பிட்ட அளவு மாநில அரசுகளைச் சேருகிறது. பண்ணை வரியை மத்திய அரசு வசூலித்தாலும், அது பெரும்பாலும் மாநில அரசுகளுக்கே அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு, குஜராத் ஆகிய இரு மாநிலங்களில் மட்டுமே மதுவிலக்கு அமல் செய்யப்பெறுகின்றது. இதனால், இவ்விரு மாநில அரசுகளின் வருவாய் பாதிக்கப்படுகின்றது.

**மாநில அரசுகளின் செலவு**

மாநில அரசு அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டக் காவல்துறையைக் கொண்டுள்ளது. தொழில் தகராறுகளைத் தீர்ப்பது மாநில அரசின் பொறுப்பாகும். கல்வி, பொது ஆரோக்கியம், மக்களின் நலஞ்சார் நடவடிக்கைகள், பிற நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்தல் முதலியவைகளுக்காக மாநில அரசுகள் செலவுகளைச் செய்கின்றன. அவை சமூகநலப் பணிகளையும் நிறைவேற்றுகின்றன. நீதித் துறைக்கான செலவை அவை ஏற்கின்றன.

பொதுவாக, மத்திய அரசு மிகச் சிறப்பான அளவில் நிதி வசதியைக் கொண்டுள்ளபோது, மாநில அரசுகளின் நிதி வசதிகள் பற்றாக்குறை நிலையிலேயே அமைகின்றன. மத்திய அரசோடு ஒப்பிடும்போது, மாநில அரசுகள் நிதித் துறையில் குறைந்தளவு அதிகாரங்களையே பெற்றுள்ளன.

வேளாண்மை வளர்ச்சி, கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு முன்னேற்றம், சிறு தொழில்களின் மேம்பாடு ஆகியவற்றிலும் மாநில அரசுகள் முதலீட்டைச் செய்கின்றன. பஞ்சக் காலங்களில் மத்திய அரசின் ஆதரவோடு மக்களின் துயரைத் துடைப்பது அவற்றின் கடமையாகும். அவை மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனுக்கான அசலையும் வட்டியையும் செலுத்துகின்றன. வரிகளை வசூலிப்பதற்கான செலவுகளும் அமைந்துள்ளன.

1951–52ஆம் ஆண்டில் ரூ. 392 கோடியாக இருந்த மாநில அரசுகளின் செலவு, 1971–72-ல் ரூ. 3729.4 கோடியாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக் காலத்தில் மாநில அரசுகள் சமுதாயநலப் பணிகளுக்காகவும், வளர்ச்சிப் பணிகளுக்காகவும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் அதிகச் செலவை ஏற்றுள்ளன.

# 29. வரி விதிப்பு

ஒரு நல்ல வரிவிதிப்பு முறையானது சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். அந்த நிபந்தனைகளுக்கான 'விதிகளைப்' (canons) பொருளியலாளர்கள் தந்துள்ளனர். இவ் விதிகளைத் தருவதில் முன்னோடியாக இருந்தவர் பொருளியலின் தந்தை எனப் போற்றப்படும் ஆடம் ஸ்மித் ஆவார். அவர் தந்த வரி விதிப்பிற்கான விதிகள் இன்றும் ஏற்புடையதாக இருக்கின்றன. 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்ற தன்னுடைய நூலில் ஸ்மித் இவ் விதிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

## I. வரி விதிகள் (Canons of Taxation)

வரிகளை விதிப்பதில் எவ்வகை விதிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை இன்றைய அரசுகள் கவனத்துடன் ஆராய்கின்றன. அதற்கு வரி விதிகள் உதவுகின்றன. ஆடம் ஸ்மித் நான்கு வகையான விதிகளைக் கூறுகின்றார். எளிமையான தன்மையைக் கொண்ட அவற்றைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்:

### 1. சமத்துவ விதி (Canon of Equity or Equality)

ஓர் அரசின் குடிமக்கள் அனைவரும் அவரவருடைய சக்திகளுக்கேற்ப வரிகளைச் செலுத்தவேண்டும். சமத்துவம் என்பது எல்லோரும் ஒரே அளவில் வரிகளைச் செலுத்தவேண்டுமென்பதைக் குறிக்கவில்லை. வருமானத்தையும் செல்வத்தையும் மிகுதியாகக் கொண்டவர்கள் வளர்வீதத்தில் வரிகளைச் செலுத்துவதே நியாயமானது. ஒருவருடைய வரியளிக்கும் திறனுக்கேற்ப, அவர்மீது வரி விதிப்பைச் செய்தல்வேண்டும். இது நீதியின் அடிப்படையில் அமைந்த விதியாகும். இந்திய வருமான வரி முறை இவ் விதிகேற்பவே அமைந்துள்ளது.

## 2. தெளிவு விதி (Canon of Certainty)

வரியைச் செலுத்துபவருக்கு வரியை அளிக்கும் காலம், வரியின் அளவு, வரியைச் செலுத்தும் முறை போன்றவை குறித்து எவ்வித ஐயப்பாடும் எழாதவாறு, வரிவிதிப்பு முறை தெளிவாக வரையறுக்கப்படவேண்டும். 'தான்தோன்றித் தனமான' வரிகளை விதிப்பது தவறு. நம் நாட்டில் விற்பனை வரியும் நகர்ப்புறச் சொத்து வரியும் இவ்வாறே அமைந்துள்ளன. வரி விதிப்பில் தெளிவுநிலை இருந்தால்தான் தனியாரும் அரசும் செலவுகளைச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ள இயலும். ஆடம் ஸ்மித்தின் இவ் விதியை அமெரிக்கப் பொருளியலாளர்கள் புகழ்ந்துள்ளனர்.

## 3. வசதி விதி (Canon of Convenience)

வரி முறையானது செலுத்துவதற்கான வசதிகளைத் தருவதாக அமைவது அவசியம். நம் நாட்டில் அறுவடைக்குப் பிறகு நிலவரி வசூலிப்பதையும், சம்பள தினத்தன்று தொழில் வரி வசூலிப்பதையும், வருமான வரியைத் தவணை முறையில் வசூலிப்பதையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். பண்டங்களின் மீதான மறைமுக வரிகளையும் மறைமுகக் கேளிக்கை வரிகளையும் வரியைச் செலுத்துபவர்கள் உணர்வதில்லை. அவை விலையோடு சேர்க்கப்பட்டு விடுவதே இதற்குக் காரணமாகும். வருமான வரி செலுத்துவதைப் பலரும் விரும்புவதில்லை. வரி விதிப்பு முறை வரிச் செலுத்துகைக்கு எளிமையானதாகவும் வசதியானதாகவும் இருத்தல்வேண்டும்.

## 4. சிக்கன விதி (Canons of Economy)

வரிகளை வசூலிப்பதற்கான செலவு சிக்கனமாக அமைவது அவசியம். அவற்றிற்கான செலவு வருவாயைவிட மிகுதியாக இருந்தால், வரிவிதிப்பே அர்த்தமில்லாத ஒன்றாகிவிடும். எனவே, ஓர் அரசு வரி வசூலிப்பதற்கான செலவை இயன்ற அளவு குறைக்கவேண்டும். வரி முறையானது வரி செலுத்துவதற்கான செலவைக் குறைப்பதும் தேவையாகிறது. மிகவும் வளர்ந்த நிலைகளில் சில வரிகள் விதிக்கப்படும்போது, சேமிப்புக் குறைந்து மூலதனத் திரட்சியும் பாதிக்கப்படுகிறது. இதனால், உற்பத்தி குறைந்து மக்களின் வாழ்க்கைத் தரம் தாழ்வடையும். இவ்வகை வரிகளைச் சிக்கனமானவை என்று கருதமுடியாது.

ஆடம் ஸ்மித் காலத்திற்குப் பின்வந்த பொருளியலாளர்கள், வேறு சில வரி விதிகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

### 5. உற்பத்தித்திறன் (Productivity)

பாஸ்டாபிள் (Bastable) குறிப்பிடும் இவ் விதியின்படி, வரிவிதிப்பு முறை அரசுக்கு அதிக வருவாய்த் தரக்கூடியதாக இருக்கவேண்டும். குறைந்த வருவாயைத் தரக்கூடிய பல வரிகளை விட, அதிக வருவாயை அளிக்கவல்ல சில வரிகளே வேண்டற் பாலதாகும். ஒரு வரியானது ஆடம் ஸ்மித்தின் விதிகளுக்கேற்ப அமைந்தாலும், அது அரசுக்கு வருமானத்தைத் தராவிட்டால் எந்தப் பயனும் ஏற்படாது.

### 6. இணக்கமுடைமை (Flexibility)

சூழ்நிலைகள் மாறும்போது, அதற்கேற்ப வரிகளும் மாறத் தக்க வகையில் வரி முறையில் இணக்கத்தன்மை இருக்கவேண்டும். வளர்வீத வருமான வரி முறையே இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

### 7. நெகிழ்வுடைமை (Elasticity)

தேவைக்கேற்ப எளிதில் மாற்றத்தக்க நெகிழ்வுடைமையைக் கொண்டதாக வரிவிதிப்பு முறை அமைதல் அவசியம். உதாரண மாக, போர்க்காலத்தில் அரசின் நிதித்தேவை கூடும்போது, சிறிதளவு வரிவீதத்தை உயர்த்துவதன்மூலமே வரிமுறை அதி களவு வருவாயைத் தருவதாக அமையவேண்டும்.

### 8. பல வகை (Diversity)

ஓர் அரசு பலவகை வரிகளை விதித்தால்தான் அதிக வரு வாயைப்பெற இயலும். மேலும், இவ்வித வரிமுறையின்மூலம் சமுதாயத்திலுள்ள ஒருசில பிரிவினர் மட்டும் பாதிக்கப்பட மாட்டார்கள். இதன் காரணமாகவே உலகின் பல அரசுகளும் நேர்முக வரிகள், மறைமுக வரிகள், ஆயத் தீர்வைகள், இறக்குமதி வரிகள், ஏற்றுமதி வரிகள் போன்ற பலவகை வரிகளை விதிக்கின்றன. பொதுவாக, ஆடம்பரப் பொருள்களின் மீது உயர்வீத வரிகளும், அவசியப் பொருள்களின் மீது குறைந்தளவு வரிகளும் விதிக்கப்பெறுகின்றன. ஒருசில வரிகளின்மூலம் அரசு அதிக வருவாயைப் பெருக்குவதைவிடப் பலவகை வரிகளின் வாயி லாக உயர் வருவாயைப் பெறுவது எளிது.

### 9. எளிமையுடைமை (Simplicity)

வரிவிதிப்பு முறை தெளிவாகவும், சாதாரண மக்களும் சுலபமாகப் புரிந்துகொள்ளக்கூடிய எளிமைத் தன்மையைக்

கொண்டதாகவும் இருக்கவேண்டும். இன்றைய குடியரசு ஆட்சி முறையில், ஒவ்வொரு குடிமகனும் வெவ்வேறு வரிகளைப் பற்றிய இயல்புகளை அறிந்திருப்பது அவசியம். வரிகளைச் செலுத்த வேண்டிய முறை, இடம், காலம், ஆகியவை தெளிவுற மக்களால் அறியப்படவேண்டும்.

### 10. நிலையான இயல்பு (Stability)

வரி முறையையும் வரி வீதங்களையும் அடிக்கடி மாற்றினால் வரி செலுத்துதல், வரி வசூலித்தல் ஆகியவற்றில் கடின நிலைகள் தோன்றும். வரிகளைப் பற்றி மக்கள் தெளிவுறத் தெரிந்துகொள்ள வரி முறையில் நிலையான தன்மை இருக்கவேண்டும்.

### 11. போதுமான நிதி வசதி (Fiscal Adequacy)

வரிவிதிப்பு முறையானது அரசுக்குப் போதுமான அளவில் நிதி வசதியை அளிப்பதாக அமையவேண்டும். உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன், காகிதப் பணத்தை வெளியிடுதல் ஆகிய முறைகளில் பல இடர்ப்பாடுகள் அமைந்துள்ளன.

மேற்கூறிய எல்லா விதிகளையும் வரி விதிப்பு முறையில் பின்பற்றுவது இயலாது. ஆனால், நல்ல வரி முறை இவ் விதிகளில் பலவற்றை உள்ளடக்கி இருத்தல் நல்லது. நம் நாட்டில் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத் தாழ்வுகள் இருப்பதால், மத்திய அரசும் மாநில அரசுகளும் மக்களுடைய நலனைப் பாதிக்காமல் வரி வருவாயை உயர்த்தும் முயற்சிகளில் வெற்றி பெறவில்லை.

## II. நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும் (Direct Taxes and Indirect Taxes)

அரசு விதிக்கக்கூடிய வரிகளை நேர்முக வரிகள், மறைமுக வரிகள் என இரு பிரிவுகளாகப் பகுக்கலாம். வரியானது விதிக்கப் படுபவர் மீதே நிலைப்பாடு (incidence) கொண்டு, வரிச் சுமையை அவரே ஏற்று வரியைச் செலுத்தினால், அது நேர்முக வரியாகும். ஒருவர் மீது விதிக்கப்படுகின்ற வரியை, அவர் வேறொருவர் மீது நிலைப்பாடு கொள்ளுமாறு செய்து வரிச் சுமையை மாற்றியமைக்க முடிந்தால், அது மறைமுக வரியாகும். நேர்முக வரியைப் பிறர்மீது மாற்றியமைக்க இயலாது. வரி எவர்மீது விதிக்கப்படுகின்றதோ, அவரே அதைச் செலுத்த வேண்டியுள்ளது. வருமான வரி, செல்வ வரி, பண்ணை வரி,

அன்பளிப்பு வரி, நிலவரி ஆகியவற்றை நேர்முக வரிக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

மறைமுக வரி எவர்மீது விதிக்கப்படுகின்றதோ அவர் அதைப் பிறரிடமிருந்து வசூலித்துச் செலுத்துவார். இதற்கு உதாரண மாக விற்பனை வரியைக் குறிப்பிடலாம். பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி விற்பனையாளர்களிடம் இருந்து வசூலிக்கப் படுகிறது. ஆனால், விற்பனையாளர்கள் வரியை விலையோடு சேர்த்து விடுவதால், வரியின் நிலைப்பாடு நுகர்வோரையே சேர்கிறது.

**நேர்முக வரிகளின் சிறப்புகள்**

நேர்முக வரிகளால் கீழ்வரும் நன்மைகள் பெறப்படுகின்றன.

**1. சமத்துவம் :** நேர்முக வரியின் நிலைப்பாட்டையும் சுமையையும் மாற்றியமைக்க இயலாது. இதனால், வரி செலுத்தும் திறனின் அடிப்படையில் வரிகளை விதிக்க முடிகிறது. குறைந் தளவு வருமானத்தைப் பெறுபவர்கள் மீது வரிகள் விதிப்பதைத் தவிர்க்கலாம். ஆனால், பண்டங்களின் மீதான வரிகளில் சமத்துவ விதியைக் கடைப்பிடிக்கமுடியாது. வரியால் பண்டத்தின் விலை உயர்கிறது. அவ் விலை ஏழைக்கும் பணக்காரருக்கும் ஒரே அள வினதாகவே அமைகிறது.

**2. அரசுக்கு அதிக வருவாய் :** நேர்முக வரிகள் அரசுக்கு அதிக வருவாயைத் தரக்கூடியவை. பொருளாதார வளர்ச்சி யடைந்த ஒரு நாட்டில் மக்கள் தரமான வாழ்வைப் பெற்றிருக் கிறார்கள். அவர்களுடைய செல்வம், வருமானம் ஆகியவை மீது நேர்முக வரிகளை விதிப்பதன்மூலம் அரசு மிகுதியான வரு வாயைப் பெறலாம்.

**3. வரி வசூலிப்பதில் சிக்கன நிலை :** நேர்முக வரிகளைக் குறைந்த செலவில் வசூலிக்கலாம். உதாரணமாக, அலுவலரின் சம்பளத்தில் இருந்தே வருமான வரி தவணை முறையில் கழித்துக் கொள்ளப்படுகிறது. இதனால், வசூலிப்புச் செலவு குறைகிறது. அலுவலகங்களிலேயே வருமான வரி வசூலிக்கப்பட்டுவிடுவதால், அரசு வரி வசூலிப்பிற்காகக் குறைந்த செலவையே ஏற்க நேரிடு கிறது.

**4. நெகிழ்ச்சியுடைய தன்மை :** நேர்முக வரிகளின்மூலம் அரசு தேவையான அளவுக்கு நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம். நிதித் தேவை பெருகும்போது வருமான வரி,

மரண வரி போன்றவற்றின் வீதங்களை உயர்த்தி அரசு அதிக வருவாயைப் பெறமுடியும். ஆனால், மரண வரி செலுத்த வேண்டுமென்ற அச்சத்தினால் எவரும் இறவா வரம் பெற்றுவிட முடியாது.

**5. வரி செலுத்துபவர்களின் பொது நல நோக்கு :** நேர்முக வரிகள் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. நேர்முக வரியைச் செலுத்தும் ஒருவர், தான் வரி செலுத்துவதை நன்கு உணர்கிறார். எனவே, அவர் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவும் விழைகிறார். அரசு எவ்வாறு வசூலித்த வரிப்பணத்தைச் செலவிடுகிறது என்பதை ஆழ்ந்து நோக்குகிறார். அவர் பொறுப்புள்ள ஒரு குடிமகனாக அமைந்து, மக்களுடைய நலனுக்காக அரசைச் செலவு செய்யுமாறு வற்புறுத்துகிறார்.

**6. தெளிவு நிலை .** வருமான வரி, பண்ணை வரி, செல்வ வரி, நிலவரி போன்ற நேர்முக வரிகளைச் செலுத்தவேண்டியவர்கள், எந்த அளவுக்கு அவற்றைச் செலுத்தவேண்டுமென்பதை அறிந்திருக்கிறார்கள். இதைப்போன்றே அரசும் நேர்முக வரிகளின் வாயிலாக எந்த அளவுக்கு வருவாயைப் பெறலாம் என்பதைக் கணக்கிட்டு அறியலாம். இதனால், வரிகளை வசூலிப்பதில் ஊழல்கள் குறைகின்றன.

**7. சமதர்மம் :** ஒரு நாட்டில் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துச் சமதர்மச் சமுதாயத்தை அமைக்க நேர்முக வரிகள் உதவுகின்றன.

### நேர்முக வரிகளின் குறைபாடுகள்

**1. வெறுப்புணர்ச்சி :** நேர்முக வரிகளைச் செலுத்துபவர்கள், வரிகள் செலுத்துவதை வெளிப்படையாக உணர்கிறார்கள். கடின உழைப்பினால் பெற்ற வருமானம் அல்லது சொத்தின் மீது அரசு வரிகளை விதிக்கும்போது, அவர்களுக்கு வெறுப்புணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது.

**2. வசதிக் குறைவு :** பெரும்பாலும் வளர்வீதங்களிலேயே நேர்முக வரிகள் அமைவதால், வரிகளைச் செலுத்துபவர்கள் அதிக அளவுப் பணத்தை வரிகளாக அளிக்க வேண்டியிருக்கிறது. இதனால், அவர்கள் தங்களுக்குத் தேவையான பல வசதிகளையும் சுருக்கிக் கொள்கிறார்கள்.

**3. வரி ஏய்ப்பு** (Tax Evasion) : பொய்யான கணக்குகளைக் காட்டி பலரும் வருமான வரி போன்ற நேர்முக வரிகளை ஏய்க்கிறார்கள். இதன் காரணமாகவே நேர்முக வரி 'நேர்மையின் மீது விதிக்கப்படுகின்ற வரி' என்று சொல்லப்படுகிறது. தங்களுடைய உண்மையான வருமானத்தை ஒப்புக்கொள்ளும் தொழில் அதிபர்களும், திரைப்பட நடிக-நடிகையரும், மருத்துவர்களும், அரசியல்வாதிகளும் இலர். ஆனால், கடின உழைப்பைத் தந்து மாதந்தோறும் ஊதியம் பெறும் ஊழியர்கள் வருமான வரி ஏய்ப்பைச் செய்ய இயலாது.

**4. ஐயப்பாட்டிற்குரிய அடிப்படை :** வளர் வீதங்களில் நேர்முக வரிகள் விதிக்கப்படுகின்றன. வரி வீதங்களின் நிர்ணயத்தில் தவறுகள் ஏற்படக்கூடும். வீதாச்சார முறையில் நேர்முக வரிகளை விதிப்பது கூடாது. அவ்வாறு விதித்தால், அவை குறைந்த வருமானம் பெறுபவர்களைப் பாதிக்கும். நிதியமைச்சர் தன்னுடைய விருப்பு-வெறுப்புகளுக்கேற்ப வரிவிதங்களை நிர்ணயிக்கவும் வாய்ப்புண்டு.

**5. சேமிப்புக் குறைவு:** நேர்முக வரிகள் உயர்வீதத்தில் இருப்பதால் சேமிப்பும் முதலீடும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மூலதனத் திரட்சி (Capital formation) குறைந்து பொருளாதார முன்னேற்றம் தடைப்படுகிறது.

**6. மிகையான வசூலிப்புச் செலவு :** நேர்முக வரிகளை வசூலிப்பதற்காகப் பல அரசு துறை நிறுவனங்கள் செயல்படுகின்றன. நேர்முக வரிகளை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும் சிக்கலானவையாக உள்ளன. எனவே, மறைமுக வரிகளைக் காட்டிலும் நேர்முக வரிகளை வசூலிப்பதற்கான செலவே மிகுதியாக இருக்கிறது.

**7 உழைக்கும் விருப்பம் குறைதல் :** கடின உழைப்பிற்குப் பிறகு பெற்ற வருமானம், சொத்து ஆகியவை மீது உயர்ந்த நேர்முக வரிகள் விதிக்கப்படுவதால், பலரும் உழைக்கும் விருப்பத்தை இழக்கிறார்கள்.

நேர்முக வரிகளின்மூலம் விளையக்கூடிய தீமைகளைவிட நன்மைகளே மிகுதியாக உள்ளன. அரசு தனது பணிகளை ஆற்ற அதிக நிதி தேவை. எனவே, அது நேர்முக வரிகளின் விதிப்பைத் தவிர்க்க இயலாது.

**மறைமுக வரிகளின் சிறப்புகள்**

மறைமுக வரிகள், அவற்றிற்கே உரித்தான சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. அவற்றைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கூறலாம்.

**1 பரந்த அடிப்படை :** மறைமுக வரிகள் செல்வர்களையும் வறியவர்களையும் ஒரே மாதிரியாகப் பாதிக்கின்றன. ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுல் இயன்ற வரியை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்ற கொள்கையின் ஆதாரத்திலும் மறைமுக வரிகள் விதிக்கப்படுகின்றன. குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் மீது நேர்முக வரிகள் விதிக்கப்படுவதில்லை. நம் நாட்டில் சமத்துவத்தையும் சமதர்மத்தையும் மறைமுக வரிகளில்தான் காண முடிகிறது.

**2. விரிந்த நீட்சி :** அதிகளவு நேர்முக வரிகளை வசூலிப்பது பொருளாதார-சமுதாயத் தீங்குகளை விளைவிக்கும். மறைமுக வரிகளை எந்த அளவுக்கு நீட்டித்தாலும், அதை வரி செலுத்துபவர்கள் அறிவதில்லை.

**3. வசதி :** மறைமுக வரிகளைச் செலுத்துவதிலும் வசூலிப்பதிலும் வசதிக் குறைவு அமைந்திருக்கவில்லை. மறைமுக வரிகள் குறைந்த வீதங்களில் பல பண்டங்களின் மீது விதிக்கப்படுகின்றன. இதனுல், நுகர்வோர் பெருமளவுக்குப் பாதிக்கப்படுவதில்லை. மறைமுகவரி, விலையோடு பூசி மெழுகப்பட்டுவிடுகிறது. இதன் காரணமாக வரி செலுத்துவது உணரப்படுவதில்லை.

**4. நெகிழ்ச்சித் தன்மை :** வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் நெகிழ்ச்சியற்ற தேவையைக் கொண்டுள்ளன. அவற்றின் மீது அரசு மறைமுக வரிகளை உயர் வீதங்களில் விதிப்பதன் மூலம், எந்த உயரளவுக்கும் நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம். வரிவிதிப்பால் விலை உயர்ந்து விட்டாலும், மருந்துப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் வாங்குவதைத் தவிர்க்க முடியாது.

**5. குறைவான வசூலிப்புச் செலவு :** மறைமுக வரிகளை எளிதில் வசூலிக்கலாம். பொருள்கள் விற்று-வாங்கப்படும்போதே வரிகள் வசூலாகி விடுகின்றன. எளிமையான தன்மை கொண்ட மறைமுக வரிகளைக் குறைந்த செலவில் வசூலிக்க இயலும்,

**6. தீங்கு விளைவிக்கும் பொருள்களின் நுகர்வைக் கட்டுப்படுத்துதல் :** உடலுக்கும் மனத்திற்கும் ஊறு விளைவிக்கும்

சிகரெட், புகையிலை, மதுப் பொருள்கள், பிற போதைத் தரும் பண்டங்கள் ஆகியவற்றின் மீது வரிகளை விதிப்பதால், அவற்றின் நுகர்வு ஓரளவாவது குறைகிறது.

**7. வரி ஏய்ப்பைத் தவிர்த்தல் :** மறைமுக வரிகளை ஏய்ப்பது இயலாது. ஏனெனில், அவை விலையோடு சேர்க்கப்பட்டு விடுகின்றன. பொருள்களை வாங்காமல் நிறுத்தினால்தான், வரிகளைத் தவிர்க்க முடியும்.

**8. சமத்துவ நிலை :** ஆடம்பரப் பொருள்களின் மீது உயர்வீத மறைமுக வரிகளும், அவசியப் பொருள்களின் மீது குறைந்த வீத மறைமுக வரிகளும் விதிக்கப்படுகின்றன. பெரும்பாலும் செல்வந்தர்களே ஆடம்பரப் பொருள்களை வாங்குகின்றனர். வரி அளிக்கும் திறனுக்கேற்ப மறைமுக வரிகளை விதிக்க இயலும்.

**மறைமுக வரிகளின் குறைபாடுகள்**

பின்வரும் சில தீமைகளையும் மறைமுக வரிகள் பெற்றுள்ளன :

**1. குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் பாதிக்கப்படுதல் :** மறைமுக வரிகள் சமத்துவ விதிக்குப் புறம்பானவை. உதாரணமாக, இந்தியாவில் உப்பின் மீதான வரி செல்வந்தர்களைக் காட்டிலும் ஏழைகளையே மிகுதியாகப் பாதிக்கிறது. இரு வேறு பிரிவினரும் ஒரே அளவிலேயே வரியைச் செலுத்துகின்றனர். செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் தனித்தனியான கடைகள் இருப்பதில்லை. சந்தையில் பொருள்களுக்கான விலையை ஒரே வீதத்திலேயே இவ்விரு பிரிவினரும் தருகின்றார்கள்.

**2. சிக்கனமற்ற வசூலிப்பு முறை :** மறைமுக வரிகளை வசூலிப்பதற்கு அதிகச் செலவு பிடிக்கிறது. இவற்றை விதிப்பதிலும் வசூலிப்பதிலும் ஊழல்கள் மிகுந்துள்ளன. மறைமுக வரிகளை வசூலிப்பதற்காகச் சில காலங்களில் அதிக நிர்வாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டியுள்ளது. இதனால், வரி வசூலிப்புச் செலவு கூடுகிறது.

**3. அரசுக்கு வருவாய் அளிப்பதில் உறுதியற்ற நிலை :** அவசியப் பண்டங்களின் மீது மறைமுக வரிகளை விதிப்பதன் மூலமே அரசு அதிக நிதியைப் பெறலாம். வசதிப் பொருள்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்களின் தேவை நெகிழ்ச்சியுடையதாகும். எனவே, அவற்றின் மீதான வரியை உயர்த்துவதால்

விலைகூடி தேவைகுறையும். மறைமுக வரிகளின் வாயிலாக மட்டும் அரசு அதிக வருவாயைப் பெற்றுவிட முடியாது.

**4. விலைகளின் உயர்வு :** ஒரு பொருளின் விலையானது, அதன்மீது விதிக்கப்படும் வரியளவுக்கு அதிகமாகக் கூடுவதுண்டு. வியாபாரிகளும் தரகர்களும் வரி உயர்வு என்று சொல்லி விலையை மிகுதியாக உயர்த்திக் கொள்ளை இலாபம் பெறுகின்றனர். இதனால் நுகர்வோர் நலன் பாதிக்கப்படுகிறது.

**5. தொழில் துறை வளர்ச்சிக்குத் தடை:** பொருள்களின் உற்பத்தி, விற்பனை நிலைகளில் எண்ணற்ற பலமுனை வரிகள் விதிக்கப்படுகின்றன. தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களின் மீதும் வரிகள் அமைந்துள்ளன. மறைமுக வரிகளால் உற்பத்தியாளர்களும், நுகர்வோரும் பாதிக்கப்படும் போது வாணிகர்கள் கொள்ளை இலாபம் அடைகின்றனர்.

**6. சமுதாய உணர்வு தோன்றுமை :** மறைமுக வரிகள் சமுதாய உணர்வைத் தோற்றுவிப்பதில்லை. ஏனெனில், மறைமுக வரிகளைச் செலுத்துபவர்கள், தாங்கள் வரிகளை அளிக்கிறோம் என்பதையே அறிவதில்லை. மறைமுக வரி, விலையில் மறைக்கப் பட்டு விடுகிறது.

உலகின் எல்லா நாடுகளிலும் நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும் விதிக்கப்படுகின்றன. வரி விதிப்பு முறை இவ்விரு வகை வரிகளின் நன்மைகளையும்பெற முயலவேண்டும். அவற்றின் முக்கியத்துவம் வருவாய்ப் பங்கீடு, பொருளாதார அமைப்பு முறையின் இயல்பு, பொருளாதார வளர்ச்சி நிலை ஆகியவற்றிற் கேற்ப அமைகிறது.

## III. வீதாச்சார வரிகளும் வளர்வீத வரிகளும் (Proportional Taxes and Progressive Taxes)

அரசு விதிக்கக்கூடிய வரிகள் வீதாச்சார அளவிலோ, வளர் வீதத்திலோ, தேய்வு வீதத்திலோ (regressive), மித வளர்வீதத்திலோ (degressive) அமையக்கூடும். வருமானத் தின் அளவு எதுவாக இருந்தாலும், ஒரே வீதத்தில் வரி விதிக்கப் படுவது வீதாச்சார வரி முறையாகும். உதாரணமாக, எல்லா அளவு வருமானத்தின்மீதும் 5 சதவீத வரியை விதிப்பது வீதாச் சார வரி முறை. இவ்வகை வரிமுறை எளிதாகவும், கணக்கிட்டு

வசூலிப்பதற்குச் சுலபமாகவும் அமைகிறது. ஆனால், இம் முறையின்மூலம் அரசு அதிக வருவாயைப் பெற இயலாது. வரி செலுத்துவோரின் வரியளிக்கும் திறனை இது கருதவில்லை. வறிய நிலையிலுள்ள மக்களும் வீதாச்சார வரிகளால் பாதிக்கப் படுகிறார்கள்.

பெரும்பாலான நாடுகளின் அரசுகள் வளர்வீத வரிகளை விதிக்கவே விரும்புகின்றன. வளர்வீத வரி முறையில், வருமானம் அதிகரிக்கும்போது வரிவீதமும் கூடுகிறது. நம் நாட்டில் வருமான வரி, பண்ணை வரி, அன்பளிப்பு வரி, செல்வ வரி ஆகியவற்றை வளர்வீத வரிக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

**வீதாச்சார வரிகளின் சிறப்புகள்**

1. இவற்றை எல்லோரும் எளிமையாகப் புரிந்துகொள்ளலாம். கணக்கிட்டு வசூலிப்பதும் சுலபமாகிறது.

2. எல்லோரும் சம அளவில் வரி செலுத்த வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இவை அமைந்துள்ளன.

3. வரி விதிப்பிலும் வசூலிப்பிலும் ஊழல்களைத் தவிர்க்கலாம்.

4. அதிக வருமானத்தைப் பெறுபவர்கள் மிகுதியாகச் சேமித்து முதலீடு செய்வார்கள்.

5. வீதாச்சார வரிகள் அரசுக்குப் போதுமான வருவாயை அளிக்கின்றன.

6. இவற்றை வசூலிப்பதற்கான செலவு குறைவாகவே அமையும்.

**வீதாச்சார வரிகளின் குறைபாடுகள்**

1. இவ் வரிகள் சமத்துவ விதியின் அடிப்படையில் அமையவில்லை.

2. செல்வ நிலை, வருமானம், வரி செலுத்தும் திறன் ஆகியவற்றின் அளவுக்கேற்ப இவ் வரிகள் விதிக்கப்படவில்லை.

3. இவ்வகை வரிகளால் அதிக வருமானம் பெறும் மேட்டுக் குடியினர் நன்மையடையும்போது, குறைந்த வருமானம் பெறும் சாமானியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

**வளர்வீத வரிகளின் சிறப்புகள்**

உலகின் பல நாடுகளின் அரசுகளும் வளர்வீத வரிமுறையே சிறந்தது என்று கருதி, அதை ஏற்றுக் கொண்டுள்ளன. வளர்வீத வரிகள் பின்வரும் நன்மைகளை அளிக்கின்றன.

1. இவை நியாயமான வரிகளாக உள்ளன. அதிக வருமானத்தைப் பெறுபவர் மீது உயர் வீதத்தில் வரி வசூலிக்கப்படுகிறது. வளர்வீத வரிகள் வரி செலுத்தும் திறனின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவற்றின்மூலம் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கலாம் என்று மார்ஷல், பிகு போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. குறிப்பிட்ட வருமானத்திற்கு அதிகமான எச்ச வருமானத்தின்மீதுதான் வரி விதிக்கப்படுகிறது. இதனால், வரி செலுத்துபவரின் நலன் பாதிக்கப்படமாட்டாது.

3. வளர்வீத வரிகள் அரசுக்கு அதிக வருவாய்த் தரக்கூடிய வைகளாக இருக்கின்றன. அரசு அவ் வருவாயை வறியவர்களின் நலனுக்காகச் செலவிடலாம்.

4. இவ் வரிகளை வசூலிப்பது சிக்கனமாக அமைகிறது. ஏனெனில், வரி வீதங்கள் உயர்ந்தாலும், வரி வசூலிப்பிற்கான செலவு உயராது.

5. சமுதாய நீதியை நிலைநாட்டவும், சமதர்மத்தைத் தோற்றுவிக்கவும் வளர்வீத வரிகள் உதவுகின்றன.

6. செல்வந்தர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாகக் கிடைக்கும் செல்வமும் பணமும் பயன்பாடு குறைந்தவையாக உள்ளன. எனவே, வளர் வீதத்தில் வரிகளைச் செலுத்துவது அவர்களுக்குச் சுமையாக இருக்காது. பணத்திற்கும் குறைந்து செல் பயன்பாடு தோன்றும் என்பதை முன்னமேயே அறிந்தோம்.

7. அரசின் நடவடிக்கைகளாலும் பணிகளாலும் அதிக நன்மைகளைப் பெறுபவர்கள் செல்வந்தர்களே ஆவர். ஆகவே, அவர்களிடமிருந்து உயர்வீத வரிகளைப் பெறுவது தவறல்ல.

8. வளர்வீத வரிகள் நெகிழ்வுத் தன்மை கொண்டவை. அவற்றின் வீதங்களை மாற்றியமைத்து அரசு உயரளவு வருவாயையும் பெறலாம்.

9. செல்வந்தர்கள் மேலும் மேலும் செல்வத்தைச் சேர்ப்பதும், வருமானத்தைப் பெருக்குவதும் எளிதானது. எனவே, அவ்வகைச் செல்வம் மற்றும் வருமானத்தின்மீது வளர்வீத வரி

விதிப்பது இன்றியமையாதது என்று 'சமதர்ம வாதிகள்' (Socialists) வாதிடுகின்றனர்.

10. ஒரு நல்ல வரிவிதிப்பு முறைக்குத் தேவையான பல நிபந்தனைகளை வளர்வீத வரி முறை பூர்த்தி செய்கிறது. இம் முறை வரிவிதிப்பின் விதிகள் யாவற்றிற்கும் கட்டுப்பட்டதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

டாஸிக், வாக்கர், செலிக்மேன், ஹாப்சன், கெயின்ஸ் போன்ற பல பொருளியலறிஞர்களும் வளர்வீத வரிகள் நியாயமானவை என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**வளர்வீத வரிகளின் குறைபாடுகள்**

வளர்வீத வரிகளால் பல நன்மைகள் பெறப்பட்டாலும், சில தீமைகளும் விளைகின்றன.

1. வருமானம் பற்றிய கணக்குகளைத் தணிக்கை செய்பவர்களும், வருமான வரி அதிகாரிகளும் நேர்மையற்றவர்களாக இருக்கக்கூடும். அதிகாரிகள் தங்களுடைய மனம் போன போக்கில் வரிகளை விதிக்கவும் வாய்ப்புண்டு.

2. வளர்வீத வரிகள் சேமிப்பைக் குறைத்து மூலதனத் திரட்சியைப் பாதிக்கின்றன. இதனால், முதலீடு பாதிக்கப்பட்டு ஆக்கம் குறைவடைகிறது.

3. சட்டத்தின் உதவியோடு வளர்வீத வரிகள் என்ற பெயரில் அரசு பகற்கொள்ளை செய்கிறது என்று முதலாளித்துவ முறையை ஆதரிக்கும் சிலரும் செல்வந்தர்களும் வளர்வீத வரி முறையைக் குறைகூறுகின்றனர்.

4. இந்தியாவில் பணத்தின் மதிப்பு மிகவும் குறைந்துள்ளது. எனினும், வருமான வரி முறையில், வரியினின்றும் விலக்களிக்கப்படும் வருமான அளவு விலைகளின் உயர்வுக்கேற்ப உயர்த்தப்படவில்லை. நம் நாட்டில் ஆண்டுதோறும் பலகோடி ரூபாய்க்கு வருமானவரி ஏய்ப்புச் செய்யப்படுவதற்கு வளர்வீத வரி முறையே காரணமாகும்.

5. தொழில் நிறுவனங்களின் இலாபத்தின் மீது வளர்வீத வரிகள் விதிக்கப்பட்டால், உள்நாட்டில் முதலீடு செய்யப் பலரும் தயங்குவர். மூலதனம் வெளிநாடுகளுக்குப் பெயர்ச்சியடையும்.

6. வளர்வீத வரிகளே கறுப்புப் பணத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன.

7. வளர்வீத வரிகள் உத்தேசமாக நிர்ணயிக்கப்படுவதால், அவற்றை நியாயமானவை என்று கொள்ள இயலாது.

சில குறைபாடுகளைக் கொண்டிருப்பினும், பல நாடுகள் வளர்வீத வரி முறையையும் கைக்கொண்டுள்ளன. வரி விதிப்பிலும் வரி வசூலிப்பதிலும் உள்ள குறைபாடுகளைக் களைவதன்மூலம், வளர்வீத வரிகளில் உள்ள குறைபாடுகளை நீக்கிவிடலாம்.

# 30. தேசிய வருமானம்

ஓராண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பே தேசிய வருமானம் அல்லது நாட்டு வருமானம் ஆகும். நாட்டின் செல்வம் ஆண்டுதோறும் தேசிய வருமானத்தால் கூட்டப்படுகிறது. தேசிய வருமானம் உயர்வாக இருந்தால்தான், நாட்டிலுள்ள மக்கள் நலமான வாழ்வைப் பெறுவர். நிகர தேசிய வருமானத்தைக் (Net National Income) கணக்கிட பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பண மதிப்பினின்றும், ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட இயந்திரங்களின் தேய்மானச் செலவைக் கழிக்கவேண்டும்.

தேசிய வருமானம் ஆக்கக் காரணிகளிடையே வாரம், கூலி, வட்டி, இலாபம் என்ற வகைகளில் பிரித்தளிக்கப்படுகிறது. ஆக்கக் காரணிகளை முழுமையாகவும் சிறப்பாகவும் பயன்படுத்தினால் தேசிய வருமானம் அதிகரிக்கும். தேசிய வருமான அதிகரிப்பும், ஆக்கக் காரணிகளை அதிக உற்பத்தியைப் பெறும் வகையில் பயன்படுத்த உதவுகிறது.

எட்வின் நிவின் வரையறைப்படி, 'ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு, மக்களிடையே பங்கிடப்பட்டு, அவர்களால் நுகரப்பட்ட பொருள்களின் அளவே தேசிய வருமானம்' ஆகும். நாட்டுச் செல்வத்தில் (National Wealth) இருந்து ஓராண்டில் மக்கள் பெறும் வருமானத்தையும் தேசிய வருமானம் எனலாம்.

தேசிய வருமானத்தை நாட்டிலுள்ள மக்களின் எண்ணிக்கையால் வகுக்கும்போது தலா வருமானம் (per capita income) கிடைக்கிறது. ஒரு நாட்டில் தேசிய வருமானம் கூடும்போது மக்கள்தொகையும் அதிகரித்தால், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் தாழ்வாகவே அமையும். ஏனெனில், கூடு

கின்ற தேசிய வருமானத்தை அதிகரித்த மக்கள்தொகை பகிர்ந்து கொள்ளும்போது தலா வருமானம் சரிகிறது.

நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகள் ஓராண்டில் ஈட்டிய வருமானங்களின் மொத்தக் கூடுதலையும் தேசிய வருமானம் என்று குறிப்பிடலாம்.

**தேசிய வருமானத்தின் கூறுபாடுகள்**

தேசிய வருமானத்தில் அடங்கும் பல்வேறு இனங்களைத் துறைவாரியாகக் கூறலாம்.

**(i) வேளாண்மை:** இதில் சாகுபடியில் கிடைக்கும் வருமானத்தோடு கால்நடை வளர்ப்பு, காடுகள், மீனளம் ஆகியவற்றின் வருமானமும், அவற்றின் துணை நடவடிக்கைகளால் கிடைக்கும் வருமானமும் சேர்க்கப்படுகின்றன.

**(ii) சுரங்க, கட்டுமான, கைவினைத் தொழில்கள் :** இதில் சுரங்கத்தொழில், பெருந் தொழில்கள், சிறு தொழில்கள், கட்டுமானப் பணிகள் ஆகியவற்றின் வருமானம் அடங்குகிறது,

**(iii) வாணிகம், போக்குவரத்து – தகவல் தொடர்பு :** இருப்புப்பாதை, விமானம், கப்பல் ஆகிய போக்குவரத்துகளின் வருமானமும், தபால்-தந்தி-தொலைபேசி போன்ற தகவல் தொடர்பு வசதிகளின் வருமானமும், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், பிற வாணிக அமைப்புகள் ஆகியவற்றின் வருமானமும் இதில் சேருகின்றன.

**(iv) பிற பணிகள் :** அரசுத்துறைப் பணியாளர்கள், பிற துறைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள், நிர்வாக ஊழியர்கள், கலைப் பொருள்களை உருவாக்குபவர்கள், சொத்துகளைப் பராமரிப்பவர்கள் ஆகியோருடைய வருமானம் இப் பிரிவில் அடங்குகின்றது.

தேசிய வருமானம் குறித்துத் தெளிவான அறிவைப் பெற, பின்வரும் சொற்களுக்கு இடையேயான வேறுபாடுகளை அறிதல் அவசியம்.

**1. மொத்த தேசிய உற்பத்தி** (Gross National Product - GNP) : ஒரு நாட்டில் ஓராண்டிலோ அல்லது குறிப்பிட்ட காலத்திலோ பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும்

உற்பத்தி செய்த விளைமுடிந்த பண்டங்களின் மொத்த மதிப்பே மொத்த தேசிய உற்பத்தியாகும். இதிலிருந்து ஆக்கத்திலுல் ஏற்படும் தேய்மானச் செலவுகள் கழிக்கப்படுவதில்லை. ஒரு பொருளின் மதிப்பு இருமுறை கணக்கிடப்படுவதில்லை. உற்பத்தி முடிவடைந்த பொருள்களே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. உற்பத்தியின் இடைநிலைகளில் உள்ள பொருள்களின் மதிப்பு இதில் சேர்க்கப்படுவதில்லை. மொத்த தேசிய உற்பத்தி யைப் பணமதிப்பில் குறிப்பிடுவதே மொத்த தேசிய வருமானம் ஆகும்.

**2. நிகர தேசிய வருமானம்** (Net National Income) : மொத்த தேசிய வருமானத்திலிருந்து கீழ்வரும் இனங்களைக் கழிப்பதன்மூலம் நிகர தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

(i) ஓராண்டிற்கான மூலதனப் பொருள்களின் தேய் மானச் செலவுகள்.

(ii) மூலதனப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்குமான செலவு கள்.

(iii) மறைமுக வரிகளின்மூலம் அரசுக்குக் கிடைக்கும் வரு மானம்.

(iv) சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையின் பண மதிப்பு.

(v) ஓராண்டுக் காலத்தில் ஆக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் பணமதிப்பு.

(vi) ஒரு நாட்டில் வெளிநாட்டுக் கடன்களில் ஏற்படும் நிகர உயர்வு அல்லது ஒரு நாடு வெளிநாடுகளுக்கு அளித்திருக்கும் கடன்களின் நிகரக் குறைவு.

**3. செலவிடத்தக்க வருமானம்** (Disposable Income) : தனி மனிதர்களின் வருமானத்தில் நேர்முக வரிகளை அளித்த பிறகு எஞ்சுவதே செலவிடத்தக்க வருமானமாகும். இதையே அவர்கள் சேமிப்பிற்கும் நுகர்வுக்கும் பயன்படுத்து கிறார்கள்

**தேசிய வருமானத்தைக் கணக்கிடும் முறைகள்**

தேசிய வருமானத்தைக் கணக்கிடுவதில் முக்கியமாக மூன்று முறைகள் குறிப்பிடப்படுகின்றன.

**(i) உற்பத்தி முறை** (Production Method) : இம் முறையில் நிலவும் சந்தை விலைகளுக்கேற்ப ஓராண்டில் நுகரப் படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பளவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. வேளாண்மை, தொழில், காடுகள், மீனளம் போன்ற பொருளாதாரத் துறைகளில் உற்பத்தி செய்யப் படும் பொருள்களின் மதிப்பும், பணிகளின் மதிப்பும் கருதப் படுகின்றன. அவற்றின் மொத்தப் பண மதிப்பிலிருந்து கச்சாப் பொருள்களுக்கான செலவு, மூலதனப் பொருள்களுக்கான தேய் மானச் செலவு ஆகியவை கழிக்கப்படுகின்றன. இதன்மூலம் நிகர தேசிய வருமானம் அறியப்பெறுகின்றது. உற்பத்தி குறித்த புள்ளிவிவரங்கள் முழுமையாகக் கிடைத்தால்தான், இம் முறையின் உதவியைக் கொண்டு தேசிய வருமானத்தைச் சரி யாகக் கணக்கிட இயலும்.

நம் நாட்டில் சில பொருள்களின் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் மட்டுமே கிடைக்கின்றன. பிற பொருள்களின் உற் பத்தி தோராயமாக மதிப்பிடப்படுகிறது. உற்பத்தி முறையில் விணமுடிந்த பொருள்களின் பணமதிப்புக் கணக்கிடப்படுகிறது. பிற தொழில்களின் பொருள்கள் மூலப் பொருள்களாகப் பயன் படுத்தப்பட்டால், அவற்றின் மதிப்பைக் கழித்துவிடவேண்டும்; பொறியாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்றோ ருடைய பணிகளுக்குக் கிடைக்கும் வருமானமும், குடியிருப்பு வாடகை வருமானமும், பிற வாடகை வருமானங்களும் தேசிய வருமானக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

விணமுடியாத இடைநிலைப் பொருள்களின் மதிப்பைச் சேர்த்துக்கொள்வது தவறு. உதாரணமாகப் புத்தக வெளியீட்டுச் செலவைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, புத்தகங்களை உருவாக்குவதற்குப் பயன்பட்ட காகிதத்தின் மதிப்பைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. இதைப்போன்றே, கோதுமை மாவின் மதிப்பைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, அதன் அளவுக்கான கோதுமையைக் கணக்கிடக்கூடாது.

விவசாயிகள், மீனவர்கள் போன்றோர் உற்பத்தியின் ஒரு பகுதியைத் தங்களுடைய நுகர்வுக்குப் பயன்படுத்துகின்றனர். அதன் மதிப்பு, சந்தை விலையில் தீர்மானிக்கப்பட்டு மொத்த தேசிய வருமானத்தோடு சேர்க்கப்படவேண்டும். சொந்த வீடு களில் வசித்தாலும், அவற்றிற்கான வாடகையும் தேசிய வரு மானத்தில் அடங்கும். தாய்மார், மனைவியர் ஆகியோருடைய அன்புப் பணிகளின் மதிப்புத் தேசிய வருமானத்தில் சேரும்.

எனினும், இவர்களுடைய பணி தேசிய வருமானத்தில் சேர்க்கப் படுவதில்லை.

நம் நாட்டில் வேளாண்மை, தொழில், சுரங்கம், காடுகள் ஆகிய துறைகளின் உற்பத்தி பற்றிய புள்ளிவிவரங்களை அரசு வெளியிடுகிறது. ஆயினும், பால் மற்றும் பாற் பண்டங்கள் குறித்த புள்ளி விவரங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

**(ii) வருமான முறை** (Income Method) : நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு ஆகியவற்றிற்குக் கிடைக்கக் கூடிய வாரம், கூலி, வட்டி, இலாபம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையே தேசிய வருமானமாகும். எனவே, மக்கள் எல் லோருடைய வருமானத்தையும் கூட்டித் தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம். ஆக்கக் காரணிகளின் மொத்த வருமானமே தேசிய வருமானமாகும். இம் முறை வருமான வரி புள்ளி விவ ரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அப் புள்ளி விவரங் களோடு, பல பிரிவு உழைப்பாளர்களின் சராசரி வருமானப் புள்ளி விவரங்களும் கருதப்படுகின்றன. வருமான வரியைச் செலுத்துபவர்களுடைய எண்ணிக்கை மிகுதியாக உள்ள நாடு களுக்கு இம் முறை ஏற்றது. நம் நாட்டில் வருமான வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. எனவே, பலவகை உழைப்பாளர்கள், சில்லரை வாணிகர்கள், சிறு தொழில்களைச் செய்பவர்கள் போன்றவர்களுடைய வருமானப் புள்ளி விவரங்கள் நம் நாட்டில் சேகரிக்கப்பட வேண்டும்.

இம் முறையில் நாட்டின் எல்லாவகைப் பண வருமானங் களும் கூட்டப்படுகின்றன. இவற்றோடு, உற்பத்தியாளர்கள் தாங்களே நுகர்கின்ற பொருள்களின் பண மதிப்பும், தொழில் நிறுவனங்கள் ஆக்கக் காரணிகளுக்கு அளித்தது போக எச்ச மாகக் கொண்டிருக்கும் இலாபமும் சேர்க்கப்படவேண்டும். நாட் டிலுள்ள ஒவ்வொரு குடிமகனின் வருமானமும் தேசிய வருமானத் தில் உள்ளடங்கி இருத்தல் அவசியம். இதிலும்கூட ஒருவருடைய வருமானம் இருமுறை சேர்க்கப்படுதல் கூடாது. வெளிநாடு களிலிருந்து பெறப்படும் வருமானமும் இதில் சேர்க்கப்பட வேண்டும்.

அரசாங்க உதவிப்பணம், ஓய்வு ஊதியம், நாட்டுக் கட னுக்கான வட்டி ஆகியவற்றைத் தேசிய வருமானத்தில் சேர்த்தல் கூடாது. இவை தனிப்பட்டவர்களுடைய வருமானமாக இருப்

பினும், அரசு இவற்றை மக்கள் தங்களுடைய வருமானத்திலிருந்து அளித்த வரிகளின் வருவாயில் இருந்தே தருகிறது.

**(iii) செலவு முறை** (Expenditure Method) : தேசிய வருமானத்தின் பெரும்பகுதி நுகரப்பட்டு, எஞ்சியது சேமிக்கப்படுகிறது. எனவே, பண்டங்களுக்காகவும் பணிகளுக்காகவும் செலவிடப்படும் தொகையும், இயந்திரங்கள், கச்சாப்பொருள்கள் போன்ற மூலதனப் பொருள்களுக்காகச் செலவிடப்படும் தொகையும் தேசிய வருமானத்தில் சேரும். பொதுவாக, வருவாய்த் தரக்கூடிய எல்லாச் செலவுகளும் இதில் சேர்கின்றன.

இம் முறையில் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பைக் கூட்டி, இறக்குமதிப் பொருள்களின் மதிப்பைக் குறைக்கவேண்டும். தனியாரின் நுகர்வுச் செலவு, வெவ்வேறு துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான அரசின் நிர்வாகச் செலவு, இராணுவச் செலவு, முதலீட்டுச் செலவு ஆகியவை தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட வேண்டியவையாகும். பண்டங்கள் மற்றும் பணிகளின் மீதான செலவோடு, மொத்தச் சேமிப்பு சேர்க்கப்பட்டுத் தேசிய வருமானம் கணக்கிடப்படுகிறது.

செலவுமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. ஏனெனில், ஒரு நாட்டில் நுகர்பொருள்களின் மதிப்பைத் தீர்மானிப்பது எளிதல்ல. மேலும், இந்தியா போன்ற நாடுகளில் மக்கள் சேமிப்பைப் பணமாக வைத்துக்கொள்வதும் உண்டு.

**(iv) வேலை முறை** (Occupation Method) : இம் முறையில் தனிப்பட்டவர்களின் வேலை அடிப்படையில் வருமானங்கள் கூட்டப்படுகின்றன. வெவ்வேறு வகைத் துறைகளிலும், தொழில்களிலும் பணியாற்றுபவர்களின் வருமானங்கள் கணக்கில் கொள்ளப்படுகின்றன. உற்பத்தி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கான பட்டியலும், வருமான முறையில் வருமானங்களுக்கான பட்டியலும் அமைக்கப்படுகின்றன. இம் முறையில் வேலைகளின் அடிப்படையில் பட்டியல் அமைக்கப்பட்டு வருமான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அன்பளிப்பு, ஆக்கமற்ற கடன்களின்மீதான வட்டி, கள்ளப்பணம் ஆகியவற்றைத் தேசிய வருமானத்தில் சேர்க்கக்கூடாது.

**(v) உற்பத்தி - வருமான முறை** (Production and Income Method) : இந்திய தேசிய வருமானத்தைக் கணக்கிட்டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இம் முறையை முதன்முதலில்

பின்பற்றினர். இதைத் 'தேசிய வருமானக் குழுவும்' (National Income Committee) பிறகு ஏற்றுக்கொண்டது. இம் முறையில் உற்பத்தி முறை, வருமான முறை ஆகிய இரண்டும் கூட்டாகப் பின்பற்றப்படுகின்றன. இதில் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் கிடைக்கக்கூடிய துறைகளில் உற்பத்தி முறையும், பிற துறைகளில் வருமான முறையும் கைக்கொள்ளப்பெறுகின்றன.

தேசிய வருமானத்தைக் கணக்கிட இவ்வாறு பல முறைகள் இருந்தாலும், அவற்றுள் எம் முறை சிறந்தது என்பதைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது. எனினும், உலகின் பல நாடுகளிலும் உற்பத்தி முறையே பின்பற்றப்படுவதால், அதையே பிற முறைகளைவிடச் சிறந்தது எனக் கொள்ளலாம்.

## தேசிய வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்கள்

தேசிய வருமானத்தைக் கணக்கிடும்போது பல பிரச்சினைகள் உருவாகின்றன. அவற்றைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்:

1. பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிலும் நம்பகமான புள்ளி விவரங்கள் கிடைப்பதில்லை. எனவே, நாட்டளவில் உற்பத்தி, செலவு, வருமானம் ஆகியவற்றைக் கணக்கிடுவது கடினமாக அமைகிறது.

2. வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பொருந்தும் வருமான முறை வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பொருந்துவதில்லை. எவ்வித முறையைப் பின்பற்றித் தேசிய வருமானத்தைக் கணக்கிடுவது என்பதும் பிரச்சினையாகிறது.

3. பின்தங்கிய நாடுகளில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்குப் பணமதிப்பைத் தீர்மானிப்பது எளிதல்ல. வளர்ந்த பொருளாதாரங்களில் மட்டுமே பணப்புழக்கம் மிகுதியாக இருக்கிறது.

4. அடிக்கடி பொருளாதாரநடவடிக்கைகள், பொருள்கள், பணிகள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பது எளிதாக இல்லை.

5. மொத்த தேசிய வருமானத்திலிருந்து நிகர தேசிய வருமானத்தைக் கணக்கிடுவதும் சுலபமல்ல. இயந்திரங்களின் தேய்மானச் செலவு, பழுதுபார்க்கும் செலவு போன்ற இனங்களை மொத்த தேசிய வருமானத்திலிருந்து கழிப்பதும் கடினமாக உள்ளது.

6. கறுப்புப் பணம், கள்ளப்பணம், கையூட்டுப் பணம் போன்றவை பொருளாதார நடவடிக்கைகளை மாற்றும் தன்மை கொண்டவை. சமூகச் சீர்கேடுகளைத் தோற்றுவிக்கும் இவ்வகைப் பணங்களுக்கும் தேசிய வருமானத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை.

7. தேசிய வருமானக் கணக்கெடுப்பில், ஒரு சில பொருள்கள் இருமுறை கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுவதும் உண்டு.

8. தாய், மனைவி போன்றோருடைய பணிகளுக்குப் பண மதிப்புத் தர இயலாது. அரசின் சமுதாய நலப் பணிகளுக்கான பணமதிப்பைத் தருவதும் கடினமாக உள்ளது.

9. வேளாண்மைத் துறையிலும், கிராமப் புறங்களிலும் எழுத்தறிவில்லாத மக்கள் உற்பத்தி, விற்பனை, நுகர்வு, செலவு ஆகியவை குறித்த கணக்குகளை வைத்திருப்பதில்லை.

10. பலரும் தங்களுடைய உண்மையான வருமானத்தைக் குறிப்பிடுவதில்லை. புள்ளி விவரங்களின் சேகரிப்புக்குப் பொது மக்களின் ஆதரவு இருப்பதில்லை.

11. தேசிய வருமானக் கணக்கெடுப்பில் பலருடைய பணிகளின் பணமதிப்பைத் துல்லியமாக அளவிட இயலாது. துப்புரவாளர், மருத்துவர், ஆசிரியர், அமைச்சர், நடிகர், பாடகர், ஓவியர் போன்றோருடைய பணிகளின் பணமதிப்பை எளிதில் தீர்மானிக்கமுடியாது.

12. சிற்றளவில் உற்பத்தியைச் செய்யும் தொழில் அமைப்பாளர் ஒருவர் தனது சிறு தொழிலோடு வேளாண்மைச் சாகுபடியிலும் ஈடுபட்டிருக்கக்கூடும். இவ்வாறு ஒருவரே பல பணிகளைச் செய்து வெவ்வேறு வருமானங்களை ஈட்டும்போது தேசிய வருமானத்தைக் கணக்கிடுவது கடினமாகிறது.

இச் சிக்கல்களில் பலவும் இந்தியாவிற்கும் பிற பின்தங்கிய நாடுகளுக்கும் பொருந்துகின்றன.

## தேசிய வருமான ஆய்வின் முக்கியத்துவம்

தேசிய வருமானக் கணக்கெடுப்பும் ஆய்வும் பல வழிகளில் நன்மையளிக்கின்றன. இவை வருமானப் பெருக்கத்திற்கும், மக்களுடைய நலமான வாழ்வுக்கும் வகைசெய்கின்றன.

**1. பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதல் :** தேசிய மட்டத்தில் பேரளவுப் பொருளாதாரக் கொள்கைகளைத்

தீர்மானிக்கத் தேசிய வருமானப் புள்ளிவிவரங்கள் உதவுகின்றன. அவை பொருளாதாரச் சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, அதற் கேற்ப வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுக்க வகை செய்கின்றன. சரியான கொள்கைகளை உருவாக்குவதன்மூலமே தேசிய வரு மானத்தைப் பெருக்க இயலும்.

**2. வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டுதல்:** திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற தேசிய வருமானப் புள்ளிவிவரங்கள் தேவை. இப் புள்ளிவிவரங்கள் இன்றித் திட்ட மிடுவதோ, திட்டத்தைச் செயல்படுத்துவதோ முறையாகாது.

**3. பொருளாதாரத்தைப் பற்றிய பரந்த கண்ணோட்டம்:** ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி எளிதில் புரிந்து கொள்ளத் தேசிய வருமானம் உதவுகிறது. வருமானம் எவ்வாறு பெறப்பட்டு எவ் வழிகளில் செலவிடப்படுகிறது என்பதை அறிய தேசிய வருமானக் கணக்கெடுப்பு வகை செய்கிறது. அது மக்க ளுடைய சேமிக்கும் திறன், வரி செலுத்தும் திறன் ஆகிய வற்றை அறிவுறுத்துகிறது. ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பதை அறியவும் அது உதவும்.

**4. வருமானப் பங்கீடு :** தேசிய வருமான மதிப்பீடுகள் நாட்டிலுள்ள வெவ்வேறு பிரிவு மக்களும் எந்த அளவுகளில் வருமானத்தைப் பெறுகின்றனர் என்பதை அறியச் செய்கின்றன. இதன்மூலம் அரசு வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க லாம்.

**5. வரவு - செலவுத் திட்டங்களைத் தயாரிக்க உதவுதல் :** அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தைத் தீட்டி, நிதிக் கொள் கையைத் தீர்மானிக்க தேசிய வருமானக் கணக்கெடுப்பு உதவு கிறது. தேசிய வருமானத்தை உயர்வாகக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அரசு தனது வருவாயைப் பெருக்க அதிக வரிகளை விதிக்கலாம். குறைவான தேசிய வருமானத்தைப் பெற்றுள்ள நாட்டில் மக்கள் குறைந்தளவு வரி செலுத்தும் திறனையே கொண் டிருப்பார்கள். எனவே, அந் நாட்டின் அரசு வரி முறையை அதிகம் சார்ந்திராமல், பிற வழிகளில் நிதி வருவாயைப் பெருக்க முயல வேண்டும்.

**6. பணவீக்கத்தையும் பணவாட்டத்தையும் தடுத்தல் :** தேசிய வருமானக் கணக்கெடுப்புகள் பொருளாதாரத்தில் அமைந்

துள்ள பணவீக்க நிலையையோ அல்லது பணவாட்ட நிலையையோ உணர்த்துகின்றன. அந்நிலைகளைத் தடுத்துப் பொருளாதார நிலைப் பேருக்கத்தைப் பெறுவதற்கான அரசின் நடவடிக்கைகளுக்கு அவை உதவுகின்றன.

**7. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கடன் அளிப்பு :** ஐக்கிய நாடுகள் சங்கம் (U. N. O.), பன்னாட்டுப் பண நிதி (I. M. F.), உலக வங்கி (I. B. R. D.) போன்ற பன்னாட்டு அமைப்புகள் வெவ்வேறு வளரும் நாடுகளின் பொருளாதார நிலையைத் தேசிய வருமான அளவுகளிலிருந்து அறிந்து, அதற்கேற்ப நிதி உதவிகளைச் செய்கின்றன.

**8. நாடுகளின் வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்தல் :** உலக நாடுகள் பலவற்றின் பொருளாதார வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டு நோக்கத் தேசிய வருமானக் கணக்கெடுப்புகள் வகை செய்கின்றன. அவற்றின் வாயிலாக அந்நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறியமுடிகிறது.

**9. பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிடையே வளர்ச்சியை ஒப்பிட்டு நோக்குதல் :** தேசிய வருமானப் புள்ளி விவரங்கள் பொருளாதாரத்தின் பல துறைகளின் வளர்ச்சி நிலைகளை அறியச் செய்கின்றன. இதன்மூலம் அரசு வளர்ச்சிக் குன்றியுள்ள துறைகளில் அதிக முதலீட்டைச் செய்ய இயலும்.

**10. எதிர்காலப் பொருளாதார மாற்றங்களை ஊகிக்க உதவுதல் :** வருங்கால வாணிக நடவடிக்கைகளின் மாற்றங்களை ஊகித்தறியவும் தேசிய வருமான ஆய்வு உதவுகிறது. எதிர்காலத்தில் வெவ்வேறு துறைகளிலும் உற்பத்தியும் நுகர்வும் எவ்வாறு அமையுமென்பதையும் அது அறிவுறுத்துகிறது. தேசிய வருமான ஆய்வின் முன்மதிப்பீட்டுக்கேற்ப உற்பத்தியாளர்களும் வாணிகர்களும் முதலீடுகளைச் செய்கிறார்கள்.

### தேசிய வருமானத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

ஒரு நாட்டின் தேசிய வருமானம் பின்வரும் காரணிகளுக்கேற்ப அமையும் :

(i) நிலவளம்–வேளாண்மை உற்பத்தித் திறன்;

(ii) தொழில்துறை வளர்ச்சி;

(iii) வாணிகத்துறை மேம்பாடு;

(iv) வங்கிகளின் முன்னேற்றம்;

(v) போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளின் வளர்ச்சி நிலை;

(vi) கனிவளம், வனவளம், மலை வளம், நீர் வளம் போன்ற இயற்கை வளங்கள்;

(vii) உழைக்கும் திறன், உழைக்கும் விருப்பம் ஆகிய வற்றைக் கொண்ட மக்கள் வளம்;

(viii) சமுதாய-அரசியல் அமைப்புகள்;

(ix) பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசின் நடவடிக்கைகள்;

(x) பொதுக் கல்வி-தொழில்நுட்பக் கல்வி;

(xi) சுகாதார மருத்துவ வசதிகள்;

(xii) உற்பத்தி நடவடிக்கைகளில் இயந்திரங்களைப் பயன் படுத்துதல்.

## இந்தியாவின் தேசிய வருமானம்

நம் நாட்டில் மக்கள்தொகை விரைவாகப் பெருகுவதாலும் பணத்தின் மதிப்பு வேகமாகக் குறைவதாலும் நீண்ட காலங் களிடையே தேசிய வருமானம் அல்லது தலாவருமானம் ஆகிய வற்றை ஒப்பிட்டு நோக்குவது தவறு. 1868-ல் இந்தியாவின் தலா வருமானம் ரூ. 20 என்று தாதாபாய் நௌரோஜி குறிப் பிட்டார். ஃபின்ட்லே ஷிர்ராஸ் (Findlay Shirras) கணக்குப்படி 1911-ல் நம் நாட்டின் சராசரி வருமானம் ரூ. 49 ஆகும். டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் 1931–32-ல் தலா வருமானம் ரூ. 65 எனவும், 1942-43-ல் ரூ. 114 எனவும் மதிப்பிட்டார். மஹலானோபிஸ் தலைமையில் அரசு 1949-ல் தேசிய வருமானக் குழுவை அமைத்தது.

வெவ்வேறு ஆண்டுகளில் இந்திய தேசிய வருமானமும், மக்கள்தொகையும், தலாவருமானமும் எவ்வாறு மாறுபடும் என் பதை மூன்றாவது திட்ட ஆவணம் பின்வருமாறு குறிப்பிட்டது:

| | 1960–61 | 1965–66 | 1970–71 | 1975–76 |
|---|---|---|---|---|
| தேசிய வருமானம் (1960–61 விலைகளின் அடிப்படையில், ரூ. கோடியில்) | 14,500 | 19,000 | 25,000 | 33,000 |
| மக்கள்தொகை (மில்லியனில்) | 438 | 492 | 555 | 625 |
| ஓர் ஆண்டுக்கான தலா வருமானம் (ரூபாயில்) | 330 | 385 | 450 | 530 |

1950–51-ல் ரூ. 9,580 கோடியாக இருந்த இந்திய தேசிய வருமானம் 1955–56-ல் ரூ. 9,980 கோடியாகவும், 1960–61-ல் ரூ. 14,140 கோடியாகவும், 1965–66-ல் ரூ. 15,930 கோடியாகவும், 1971–72-ல் ரூ. 19,411 கோடியாகவும் உயர்ந்தது. 1950–51-ல் ரூ. 247.5 ஆக இருந்த தலா வருமானம், 1960–61-ல் ரூ. 293.2 ஆகவும், 1965–66-ல் ரூ. 301.8 ஆகவும், 1971–72-ல் ரூ. 350 ஆகவும் அதிகரித்தது. திட்டக் குழுவின் இலக்குகளுக்கேற்ப தேசிய வருமானமும், தலா வருமானமும் அமையவில்லை என்பதை இப் புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

## இந்திய தேசிய வருமானம் குறைவாக உள்ளமைக்கான காரணங்களும், அதற்கான தீர்வுகளும்

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளோடு ஒப்பிடும் போது இந்தியாவில் தேசிய வருமானமும், தலா வருமானமும் தாழ்வாகவே உள்ளன. அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. இந்தியாவில் பெரும்பகுதி மக்கள் வேளாண்மையிலேயே ஈடுபட்டுள்ளனர். சாகுபடி முறைகளில் முன்னேற்றமில்லை, நிலவுடைமை முறையிலுள்ள குறைபாடுகளாலும், சிறிய அளவுச்

சாகுபடி நிலங்களாலும் 'தனி ஒருவருக்கான உற்பத்தியும்', 'ஓர் ஏக்கருக்கான உற்பத்தியும்' குறைவாக உள்ளன. நீர்ப்பாசன வசதிகள் போதுமான அளவில் அமைந்திருக்கவில்லை.

2. விரைவான தொழில்துறை முன்னேற்றம் இல்லாமையாலும் தேசிய வருமானத்தின் அளவு குறைவாக உள்ளது. மூலதனப் பற்றுக்குறை, பயிற்சியின்மை, தொழில்நுட்ப வளர்ச்சியின்மை, மின்சாரப் பற்றுக்குறை போன்றவை தொழில் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைகின்றன.

3. போக்குவரத்து-தகவல் தொடர்பு, வங்கிகள் போன்ற 'உள்ளமைப்பு' (Infrastructure) வசதிகள் குறைவாக உள்ளன.

4. உற்பத்திப் பெருக்க வீதத்தைவிட மக்கள் பெருக்க வீதம் உயர்வாக உள்ளது. உணவுப் பற்றுக்குறைக்கு இதுவே காரணமாகும்.

5. சாதிமுறை, கூட்டுக் குடும்ப முறை, கல்வியறிவின்மை, மூடப்பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கை, பாரம்பரியம் போன்றவை உற்பத்தியை உயர்த்த உதவவில்லை.

6. சமீபகாலம் வரை இந்தியா அந்நியர் ஆட்சியின்கீழ் இருந்தமையால், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கான அடிப்படை வசதிகள் இப்பொழுதுதான் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**தீர்வுகள் :** வறுமை என்னும் கொடிய அரக்கனின் பிடிகளில் சிக்கித் திணறும் இந்தியாவை மீட்கத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நம் நாட்டில் இயற்கை வளங்களோடு மனித வளமும் உள்ளது. எனவே, உற்பத்தியைப் பெருக்க இயற்கை வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். வேளாண்மையில் மிகையாக அமைந்திருக்கும் மக்கள்தொகையில் ஒரு பகுதியைத் தொழில்துறைக்கு மாற்றியமைக்கவேண்டும். பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் தனியார் முதலீடும், அரசின் முதலீடும் அதிகரிக்கவேண்டும். ஒரு சிலரிடம் பதுங்கிக் கிடக்கும் கோடிக்கணக்கான ரூபாய்க் கறுப்புப்பணத்தைவெளிக்கொணர்தல் அவசியம். உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்குவதும், வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதும், வாணிக வளர்ச்சியை ஊக்குவிப்பதும், விலைகளைக் கட்டுப்படுத்துவதும், வீணை நுகர்வுகளைக் குறைப்பதும் தேசிய வருமான உயர்வுக்கு இன்றியமையாதவையாகும்.

# 31. பகிர்வு
## (Distribution)

பொருளியலின் பகிர்வுப் பிரிவு ஆக்கக் காரணிகளிடையே தேசிய வருமானம் எவ்வாறு பங்கிட்டு அளிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு காரணிகளும் இணைந்து உற்பத்தியைச் செய்கின்றன. இவற்றில் ஏதாவது ஓர் ஆக்கக் காரணி இல்லாவிட்டாலும் கூட உற்பத்தியைச் செய்ய முடியாது. உற்பத்திமூலம் பெறப்படும் வருமானம் ஆக்கக் காரணிகளின் பணிகளுக்குச் சன்மானமாக அளிக்கப்படுகிறது. நிலத்திற்கு வாரமும், உழைப்பிற்கு ஊதியமும், மூலதனத்திற்கு வட்டியும், தொழில் அமைப்பிற்கு இலாபமும் கிடைக்கின்றன. ஆக்கக் காரணிகள் சன்மானத்தைப் பெறுவதால்தான் உற்பத்திப் பணிகளில் ஈடுபடுகின்றன.

பகிர்வுக் கோட்பாடுகளில் ஒவ்வோர் ஆக்கக் காரணிக்கும் எந்த அளவுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதை ஆராய்கிறோம். ஒருவர் தன்னுடைய நிலத்திலேயே, தனது உழைப்பையும் மூலதனத்தையும் முதலீடாக்கி உற்பத்தியைச் செய்வதற்கான அமைப்புப் பணியில் ஈடுபடலாம். மற்றொருவர் குத்தகை முறையில் நிலத்தைப் பெற்றுத் தன்னுடைய உழைப்பையும், மூலதனத்தையும் முதலீடாக்கலாம். வேறொருவர் தொழில் அமைப்பாளராக மட்டுமே இருந்து நிலத்தை வாரத்திற்கும், உழைப்பைக் கூலிக்கும், மூலதனத்தை வட்டிக்கும் பெறக்கூடும். மொத்த வருமானத்திலிருந்து நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றிற்குச் சன்மானத்தை அளித்த பிறகு எஞ்சிய தொகையைத் தொழில் அமைப்பாளர் இலாபமாகப் பெறுகிறார்.

வாரம், கூலி, வட்டி, இலாபம் ஆகியவை எவ்வாறு நிர்ணயமாகின்றன என்பதை விளக்கப் பொருளியலாளர்கள் பல

கோட்பாடுகளைத் தந்துள்ளார்கள். அவற்றுள் 'இறுதிநிலை ஆக்கத் திறன் கோட்பாடு' முக்கியமானதாக அமைகிறது. ஆக்கக் காரணிகள் கிடைப்பருமை கொண்டவையாக இருப்பதால், அவற் றிற்கு விலை அளிப்பது அவசியமாகிறது.

பண்டைக்காலப் பொருளியலாளர்கள் உற்பத்தி விதிகளுக் கும், கோட்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். தற்பொழுது பகிர்வும் பொருளியலின் முக்கியப் பிரிவாகக் கருதப் படுகிறது.

**இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு** (Marginal Productivity Theory)

எதன் அடிப்படையில் ஆக்கக் காரணிகளுக்கான விலை நிர்ண யிக்கப்படுகிறது என்பதை இக் கோட்பாடு உணர்த்துகிறது. இதைப் 'பகிர்வுப் பொதுக் கோட்பாடு' (General thoery of distribution) என்றும் குறிப்பிடலாம். இக் கோட்பாட்டின்படி, ஒவ்வோர் உற்பத்திக் காரணியும் அதனதன் இறுதிநிலை ஆக்கத் திறனிற்கேற்ப சன்மானத்தைப் பெறுகின்றன. இதை முதன் முதலில் தந்தவர் அமெரிக்கப் பொருளியலறிஞரான ஜே. பி. கிளார்க் ஆவார். உற்பத்திக் காரணியின் அதிக ஆக்கத் திறனுக்கு உயர்ந்த ஊதியமும், குறைந்த ஆக்கத் திறனுக்குத் தாழ்ந்த ஊதியமும் தரப்படுகின்றன.

ஓர் உற்பத்திக் காரணியின் இறுதிநிலை ஆக்கத் திறன் என்பது, மற்ற மூன்று காரணிகளின் அளவில் மாற்றம் இல்லா மல் இருக்கும்போது, அதன் ஓர் அலகைக் கூட்டுவதால் மொத்த உற்பத்தியில் தோன்றும் பெருக்கமாகும். ஒரு காரணியை உற் பத்தியில் ஈடுபடுத்துவதற்கு ஆகும் இறுதிநிலைச் செலவு, அதன் இறுதிநிலை ஆக்கத்தைவிடக் குறைவாக இருக்குமானால், அக் காரணியின் அலகுகள் உயர்த்தப்படும். இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை ஆக்கமும் சமமாகும் வரை, அக் காரணியின் அளவு அதிகரிக்கப்படுகிறது.

இக் கோட்பாடு மொத்த உற்பத்தியில் ஓர் ஆக்கக் காரணி யால் உற்பத்தி எவ்வளவு பெருகுகின்றது என்பதற்கும், அதன் விலைக்கும் உள்ள தொடர்பை உணர்த்துகிறது. உற்பத்திக் கார ணிக்கான ஊதியம், அதன் இறுதிநிலை ஆக்கத் திறனுக்குச் சமமாக இருக்கும். தொழில் அமைப்பாளர் உற்பத்திக் காரணிக்கு அளிக் கின்ற ஊதியம், அதனுடைய இறுதிநிலை ஆக்கத் திறனுக்கு அதிக மாக இருந்தால், இலாபத்தைப்பெற இயலாது.

உழைப்பின் இறுதிநிலை ஆக்கத் திறனை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். ஒரு நிலவுடைமையாளர் தன்னுடைய 3 ஏக்கர் நிலத்தில் 2,000 ரூபாயை முதலீடு செய்து 10 உழைப்பாளர்களைச் சாகுபடிப் பணிகளில் ஈடுபடுத்தும்போது நெல் உற்பத்தி 100 மூட்டையாக இருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாம். அதே அளவு நிலத்தில் அதே அளவு முதலீட்டைச் செய்து 11 உழைப்பாளர்களைச் சாகுபடிப் பணிகளுக்குப் பயன்படுத்தும்போது, நெல் உற்பத்தி 105 மூட்டைகளாகக் கூடுகிறது என ஊகிக்கலாம். இந்த உதாரணத்தில் பதினோராவது உழைப்பாளியின் உழைப்பால் உற்பத்தி 5 மூட்டைகள் அளவுக்குக் கூடியுள்ளது. எனவே, உழைப்பின் இறுதிநிலை ஆக்கத்திறன் 5 மூட்டைகள் நெல்லுக்குச் சமம். பதினோராவது உழைப்பாளியின் கூலி 5 மூட்டைகள் நெல்லின் விலைக்குச் சமமாக இருக்குமென்று இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு கூறுகிறது.

இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாட்டை வளம்பெறச் செய்தவர்கள் மார்ஷல், ஹிக்ஸ், டாஸிக், விக்ஸ்டீட் ஆகியோராவர்.

**அனுமானங்கள்**

இந்தக் கோட்பாடு பின்வரும் எடுகோள்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

1. ஆக்கக் காரணிகளின் அலகுகள் ஒரியல்பானவை என்று கருதப்படுகிறது. காரணியின் வெவ்வேறு அலகுகளும் ஒரே அளவுத் திறன்கொண்டவை என்று கொள்ளப்படுகிறது.

2. உற்பத்திக் காரணிகள் பெயர்ச்சி உடையவை. அவற்றை வெவ்வேறு வகைப் பயன்களுக்கிடையே மாற்றிப் பயன்படுத்தலாம்.

3. ஆக்கக் காரணிகளுக்கான சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது. அவற்றின் விலைகள் ஒரே அளவில் இருக்கின்றன. உதாரணமாக, உழைப்பாளர்களுக்கான கூலிமட்டம் ஒரே அளவிலும், மூலதனத்திற்கான வட்டி ஒரே வீதத்திலும் அமைகின்றன.

4. இக் கோட்பாடு குறைந்துசெல் விளைவு விதியின் அடிப்படையில் அமைந்துள்ளது. திரும்பத் திரும்ப ஓர் ஆக்கக் காரணியின் அலகுகளை அதிகமாகப் பயன்படுத்தும்போது, அதன் இறுதிநிலை உற்பத்தி குறைகிறது.

5. உற்பத்தியாளர்கள் இறுதிநிலை ஆக்கத் திறனுக்கேற்ப உற்பத்திக் காரணிகளைப் பதிலீடு செய்வதற்கு அவருடைய இலாப நோக்கமே காரணமாகும்.

6. எல்லா ஆக்கக் காரணிகளும் உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது.

7. உற்பத்திக் காரணிகள் சிறிய அலகுகளில் பயன்படுத்தப் படுகின்றமையால்தான், இறுதிநிலை ஆக்கத் திறனுக்கேற்ப அவற் றைப் பதிலீடு செய்ய இயலுகிறது.

8. குறைந்துசெல் வீளைவு விதி தொழில்துறையிலும், வாணிகத்திலும்கூட செல்வாக்கைக் கொண்டுள்ளது.

## திறனாய்வு

இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு பல தவறான ஊகங் களின் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது. இதிலுள்ள குறை பாடுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

**1. ஆக்கக்காரணியின் அலகுகள் ஒரியல்பைப் பெற்றிருக்க வில்லை :** ஆக்கக் காரணியின் எல்லா அலகுகளும் ஒரே தன்மை யைக் கொண்டிருப்பதில்லை. உதாரணமாக, ஒரு தொழிலைச் செய்யும் பல உழைப்பாளர்களின் திறமைகளில் வேறுபாடுகள் உள்ளன.

**2. ஆக்கக்காரணிகளின் குறைந்தளவுப் பெயர்ச்சி:** வெவ் வேறு இடங்களிலேயே உற்பத்திக் காரணிகள் எளிதில் பெயர்ச்சி யடைவதில்லை. மொழி, இனம், பழக்கவழக்கங்கள், பாரம்பரி யம், சமுதாயநிலை, அரசியல் அமைப்புப் போன்றவைகளில் உள்ள வேறுபாடுகளால் உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய காரணி கள் பெயர்ச்சியைக் குறைந்தளவே கொண்டுள்ளன.

**3. நிறைவுப்போட்டி நிலவாமை :** இக் கோட்பாடு ஆக்கக் காரணிகளை அளிப்பதிலும் பெறுவதிலும் நிறைவுப் போட்டி நிலையே நிலவுவதாகக் கருதுகிறது. ஆனால், நடைமுறையில் ஆக்கக் காரணிகளின் சந்தையில் நிறைகுறைப் போட்டியே அமைந்துள்ளது. இதன் காரணமாகத் தொழில் அமைப்பாளர் ஆக்கக் காரணிகளுக்கு, அவற்றின் இறுதிநிலை ஆக்கத் திறனுக்குக் குறைவான சன்மானத்தையே வழங்குகிறார்.

**4. உற்பத்திக் காரணிகளைப் பதிலீடு செய்தல் எளிதல்ல :** உற்பத்திக் காரணிகளின் இறுதிநிலை ஆக்கத் திறனைக் கணக்கிடுவது கடினம். இறுதிநிலை ஆக்கத்திறனைக் கணக்கிட்டு, அதற்கேற்ப உற்பத்திக் காரணிகளை உரிய விகிதத்தில் இணைத்து உற்பத்தியில் ஈடுபடுவது எளிதானதல்ல.

**5. ஆக்கக் காரணிகள் இணைந்து செயலாற்றுதல் :** ஆக்கக் காரணிகள் தனித்துச் செயல்பட முடியாது. உற்பத்தியைச் செய்ய அவற்றைக் கூட்டாக இணைக்கவேண்டும். ஒரு காரணியை அதிகரிப்பதால் கிடைக்கும் உற்பத்தியை அதன் இறுதிநிலை ஆக்கம் எனக் கொள்வது தவறு. பிற காரணிகளின் உதவியோடுதான் ஒரு காரணியால் உற்பத்தியை அதிகரிக்க இயலும். எனவே, இறுதிநிலை உற்பத்தியில் பிற காரணிகளுக்கும் பங்குண்டு.

**6. ஆக்கக் காரணிகளின் அளிப்புப் புறக்கணிக்கப்படுதல்:** இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு ஆக்கக் காரணிகளுக்கான சன்மானத்தை, அவற்றின் தேவைப் புறத்திலிருந்து மட்டுமே ஆய்வு செய்கிறது. உழைப்பு, மூலதனம் ஆகியவற்றின் அளிப்புக் குறையும்போது முறையே கூலியும், வட்டியும் கூடுகின்றன. ஆக்கக் காரணிகளின் அளிப்பு மாறக்கூடியது. எனவே, அவற்றின் ஊதிய நிர்ணயத்தில் தேவை, அளிப்பு ஆகிய இரண்டுமே கருதப்படவேண்டும்.

**7. வேலை வாய்ப்பு :** இக் கோட்பாட்டின்படி, உழைப்பாளருக்கான கூலி உயர்ந்தால், வேலை வாய்ப்புகள் குறையும்; கூலி குறைந்தால், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். இது நடைமுறைக்குப் பொருந்தவில்லை. வேலைவாய்ப்புப் பல காரணிகளைச் சார்ந்து அமையும்.

**8. ஓர் உற்பத்திக் காரணியைக் குறைப்பதால் உற்பத்திப் பாதிப்பு :** ஆக்கக் காரணிகளில் ஏதாவது ஒன்றின் அலகுகளைக் குறைக்கும்போது உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படலாம். அதனால், குறிப்பிட்ட தொழில் சீர்குலையக்கூடும். ஆகவே, அக் காரணியின் இறுதிநிலை ஆக்கம், உற்பத்தியில் காணும் குறைவுக்குச் சமமானது எனக் கருதுதல் கூடாது.

**9. மொத்த உற்பத்தி :** ஆக்கக் காரணிகளின் உற்பத்தித் திறனைத் தனித்தனியே கணக்கிட்டுக் கூட்டினால், அது உண்மையான மொத்த உற்பத்தியை விடக் குறைவாக இருக்கும்.

**10. இறுதி நிலை ஆக்கத் திறனை அளவிட இயலாமை :** ஹிக்ஸ், திருமதி ஜோன் இராபின்சன் போன்றோர் இறுதிநிலை ஆக்கத்திறனைத் துல்லியமாக அளவிட இயலாது என்று குறிப் பிடுகின்றனர். ஏனெனில், ஆக்கக் காரணிகளின் அலகுகள் ஓரியல்பானவை அல்ல.

இறுதிநிலை ஆக்கத்திறனுக்கும், ஆக்கக் காரணிகளின் விலைக் கும் தொடர்பு உள்ளது. எனினும், இறுதிநிலை ஆக்கத் திறன் மட்டுமே ஆக்கக் காரணிகளின் ஊதியங்களை நிர்ணயிக்கின்றன என்று கொள்வது தவறானதாகும்.

# 32. வாரம்

## (Rent)

### I. விளக்கம்

சாதாரணப் பேச்சு வழக்கில் வாரம் என்பது வீட்டிற்குக் கொடுக்கும் வாடகையையோ, வாடகைக்காரருக்குக் கொடுக்கும் கட்டணத்தையோ மட்டுமே குறிக்கிறது. ஆனால், பொருளியலில் நிலத்தின் பணிகளுக்காகக் கொடுக்கப்படுவதே வாரமெனப்படுகிறது. ஆக்கக் காரணியாகிய நிலத்தின் பயனுக்கு அளிக்கும் சன்மானமே வாரமாகும். நிலத்தின் உடைமையாளருக்குக் குத்தகைச் சாகுபடியாளர் தருகின்ற குத்தகை ரிக்கார்டோ குறிப்பிடும் வாரத்தினின்றும் வேறுபட்டது. குத்தகையாளர் அளிக்கும் குத்தகை என்னும் வாரம் பல இனங்களை உள்ளடக்கியது. அதில் நிலத்தைப் பயன்படுத்துவதற்காகத் தரப்படும் 'பொருளாதார வாரமும்' (economic rent), சாகுபடிக்காகச் செலவிடப்படும் மூலதனத்திற்கான வட்டியும், உழைப்பாளர்களுக்குக் கொடுக்கப்பெறும் கூலியும் அடங்கியுள்ளன.

ஒரு தொழிற்கூடத்தை ஒருவர் ரூ. 50,000 செலுத்தி ஆறு மாதக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டால், அது 'ஒப்பந்த வாரமாகும்' (contractual rent). அதில் தொழிற் கூடம் அமைந்துள்ள இடம், கட்டடம் ஆகியவற்றிற்கான வாடகை, இயந்திரங்கள்-மூலப் பொருள்கள்-உழைப்பு போன்றவற்றை வாங்குவதற்காகப் பெறப்பட்ட மூலதனத்திற்கான வட்டி போன்றவையும் அடங்குகின்றன. நிலத்தின் உபயோகத்திற்கு மட்டும் அளிக்கப்படும் சன்மானம் பொருளாதார வாரமாகிறது.

### II. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு

வாரக் கோட்பாட்டை முதன் முதலில் தந்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த தொன்மைப் பொருளியலறிஞராகிய டேவிட்

ரிக்கார்டோ (David Ricardo) ஆவார். அவர், 'நிலக்கிழாருக்கு, நிலத்தின் அழிக்கமுடியாத இயற்கைச் சக்தியைப் பயன்படுத்துவதற்காக, நிலத்தின் உற்பத்தியினின்றும் கொடுக்கப்படும் ஒரு பகுதியே வாரம்' (Rent is that portion of the produce of the earth which is paid to the land-lord for the original and indestructible powers of the soil) என்று குறிப்பிடுகின்றார். நிலத்திற்கு இயற்கையில் அமைந்த, அழிக்க முடியாத சக்தி இருப்பதாகவும், அதைப் பயன்படுத்துவதற்காகவே வாரம் தரப்படுவதாகவும் ரிக்கார்டோ கூறுகின்றார்.


நிலங்களிடையே வள வேறுபாடுகள் உள்ளன. நிலங்களின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்ப வாரம் வேறுபடுகிறது. நிலத்தின் இட அமைப்பிற்கு ஏற்பவும் வாரம் அமையக்கூடும். நிலமானது கிடைப்பருமை கொண்ட ஆக்கக் காரணியாக இருப்பதாலும் வாரத்தைப் பெறுகின்றது.

ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். புதியதொரு தீவில் குடியேறும் மக்கள் முதலில் அதிக வளமுடைய நிலத்திலேயே சாகுபடி செய்வார்கள். அவ்வகை முதல்தர நிலத்திலிருந்து பெறப்படும் விளைச்சல் அம் மக்களுக்குப் போதுமானதாக இருந்தால், நிலத்தில் வாரம் தோன்றாது. காலப்போக்கில் மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் குடியிறக்கத்தாலும் உற்பத்திப் பொருளுக்குப் பற்றாக்குறை ஏற்படுவதால் செறிந்த சாகுபடிமுறை கைக்கொள்ளப்படுகிறது. குறைந்துசெல் விளைவு விதி நிலத்தில் செயல்படுவதால், ஒரு குறிப்பிட்ட அளவு வரைதான் உற்பத்தியைப் பெருக்க இயலும். நிலத்தின் உற்பத்தித் திறன் ஓர் எல்லைக்குட்பட்டது. எனவே, அதிக உற்பத்தியைப் பெற இரண்டாம் தர நிலம் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முதல்தர நிலத்தில் ஏக்கருக்கு 40 மூட்டை நெல்லும், இரண்டாம்தர நிலத்தில் ஏக்கருக்கு 30 மூட்டை நெல்லும் விளைவதாக வைத்துக்கொள்ளலாம். இந் நிலையில் முதல்தர நிலம் 10 மூட்டை நெல்லை வாரமாகப் பெறும்போது, இண்டாவது தர நிலம் 'வாரம் இல்லாத நிலமாக' (no rent land) அமைகின்றது. மேலும், மக்கள்பெருக்கம் ஏற்பட்டுக் குடியிறக்கமும் நீடிப்பதாக வைத்துக்கொண்டால் மூன்றாவது, நான்காவது தர நிலங்களும் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மூன்றாவதுதர நிலத்தில் ஏக்கருக்கு 20 மூட்டையும், நான்காவது தர நிலத்தில் ஏக்கருக்குப் 10 மூட்டையும் நெல் விளைவதாகக்

கொள்ளும்போது, நான்காவது தர நிலம் 'இறுதிநிலை நிலமாக' (marginal land) அல்லது 'வாரம் இல்லாத நிலமாக' அமைகிறது; பிற மூன்று வகை நிலங்களும் வாரத்தைப் பெறுகின்றன. முதல்தர நிலம் வளம் மிக்கதாக இருப்பதால் 30 மூட்டை நெல்லை வாரமாகப் பெறுகிறது. இரண்டாம்தர நிலம் 20 மூட்டை நெல்லையும், மூன்றாம்தர நிலம் 10 மூட்டை நெல்லையும் வாரமாக அடைகின்றன. உற்பத்திச் செலவு 10 மூட்டை நெல்லின் மதிப்பிற்குச் சமமாக இருக்கும்.

நான்குவகைத் தரத்தைக் கொண்ட நிலங்களில் கிடைக்கும் உற்பத்தியையும், அவற்றின் வாரத்தையும் கீழ்க்காணும் வரைபடத்தின் வாயிலாக எளிதில் அறியலாம்.




படம் 32

வரைபடத்தின் X அச்சில் வெவ்வேறு தரத்தைக்கொண்ட நிலங்கள் குறிப்பிடப்படுகின்றன. Y அச்சில் நிலங்களின் உற்பத்தித் திறன் அளவிடப்படுகிறது. நம்முடைய உதாரணத்தில்

A பிரிவு நிலத்தை முதல்தர நிலமாகவும், B பிரிவு நிலத்தை இரண்டாம் தர நிலமாகவும், C பிரிவு நிலத்தை மூன்றும்தர நிலமாகவும், D பிரிவு நிலத்தை நான்காம் தர நிலமாகவும் கொள்ளலாம். முதல்தர நிலத்தில் ஏக்கருக்கான விளைச்சல் 40 மூட்டையாகவும், நான்காம்தர இறுதிநிலை நிலத்தில் ஏக்க ருக்கான விளைச்சல் 10 மூட்டையாகவும் இருப்பதால், முதல் தர நிலம் 30 (40–10) மூட்டை நெல்லை வாரமாகப் பெறுகிறது. இதுபோன்றே இரண்டாம் தர நிலம் 20 (30–10) மூட்டை நெல்லையும், மூன்றும்தர நிலம் 10 (20–10) மூட்டை நெல்லையும் வாரமாக அடைகின்றன.

வளம் மிக்க நிலங்களில் உற்பத்திச் செலவு குறைவாகவும், விளைச்சல் மிகுதியாகவும் இருப்பதால் வாரம் தோன்றுகிறது. நிலங்களின் விளைச்சல் அளவுகள் வேறுபடுவதால் வாரம் கொடுக்கப் படுகிறது. மண்ணில் இயற்கையாக அமைந்த, அழிக்க முடியாத சக்தியை வளமான நிலங்கள் உயரளவில் கொண்டுள்ளன. வாரம் தோன்றுவதற்கு வளமான நிலங்களின் பற்றுக்குறையும் காரணமாகிறது. எவ்வித உழைப்பையும் தராமல் நிலக்கிழார் நிலத்திற்கான வாரத்தைப் பெறுகிறார். ரிக்கார்டோவின் கூற்றுப் படி, 'வாரம் விலையைத் தீர்மானிப்பதில்லை; விலையே வாரத்தை நிர்ணயிக்கிறது.' விளைபொருள்களின் விலை அதிகரிக்கும்போது, தரம் தாழ்ந்த நிலமும் சாகுபடி செய்யப் பயன்படுத்தப்படும். இட அமைப்பிற்கேற்பவும் நிலத்திற்கான வாரம் மாறலாம். சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள நிலம் அதிக வாரத்தைப் பெறுகின்றது.

**எடுகோள்கள்**

ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு கீழ்வரும் அனுமானங் களின் அடிப்படையில் அமைந்துள்ளது :

1. இறுதிநிலை நிலத்தின் அடிப்படையில் வளம் உயர்ந்த நிலங்களின் வாரம் கணக்கிடப்படுகிறது.

2. வேளாண்மைச் சாகுபடியில் குறைந்துசெல் விளைவு விதி செயல்படுகிறது.

3. ஒரு நாட்டின் மக்கள்தொகை வெவ்வேறு காரணங்க களால் பெருகிக் கொண்டிருக்கிறது.

4. நிலத்திற்கான வாரம் நீண்ட காலத்திற் நிர்ணய மாகிறது.

5. நிலத்தில் இயற்கையான அழிக்க இயலாத சக்திகள் உள்ளன.

6. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நாட்டில் தரம் மிக்க நிலம் முதலில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

7. இயற்கையின் அன்பளிப்பாகிய நிலத்திற்கு மட்டுமே வாரம் கிடைக்கின்றது. மனிதனின் கண்டுபிடிப்பாகிய மூலதனத்திற்கு வாரம் கிடைக்காது.

8. நிலத்தின் வள வேறுபாட்டிற்காகவோ அல்லது இட அமைப்பு வேறுபாட்டிற்காகவோ வாரம் தரப்படுகிறது.

**மதிப்பீடு**

ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டிலுள்ள குறைகளைப் பிற்காலப் பொருளியலறிஞர்கள் விளக்கியுள்ளனர் :

**1. இயற்கையில் அமைந்த, அழிக்க முடியாத சக்தி நிலத்திற்கு இல்லை :** நிலமானது இயற்கை வளத்தையும், அழியாச் சக்தியையும் பெற்றுள்ளது என்ற ரிக்கார்டோவின் கூற்று தவறானது. நல்ல விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், இயந்திரங்கள், நீர்ப்பாசன வசதிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வளம் குறைந்த நிலத்தினின்றும் அதிக விளைச்சலைப் பெறலாம். ஆனால், மழை, சூரிய ஒளி, தட்ப-வெப்ப நிலை ஆகியவற்றை மாற்ற இயலாது. இவ்வகை இயற்கைக் காரணிகளின் ஒத்துழைப்போடு, உற்பத்தியைப் பெருக்க உதவும் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டால் வளமிழந்த நிலத்தையும் வளம் பெறச் செய்யலாம். குறுகிய காலத்தில் அணுக்குண்டு நிலத்தின் உற்பத்தித் திறனை அழிக்கவல்லது.

**2. வாரமில்லாத நிலம் இல்லை :** ரிக்கார்டோ இறுதிநிலை நிலத்தை வாரமில்லாத நிலம் என்று குறிப்பிட்டார். நடைமுறையில் இறுதிநிலை நிலம் என்று ஏதுமில்லை. எல்லாவகை நிலங்களும் வாரம் பெறுகின்றன. உற்பத்தித் திறன் மிகக் குறைவாகக் கொண்டுள்ள நிலம், பிற உபயோகங்களில் ஈடுபடுத்தப்படும்போது வாரத்தை அடைகின்றது. வாரமற்ற நிலமென்பது கற்பனையானதே.

**3. நில வள வேறுபாட்டால் வாரம் தோன்றுவதில்லை :** ஒரே தரமான வளத்தைக் கொண்ட நிலங்களில் வாரத்தின் அளவு ஒரே மாதிரியாக இருப்பதில்லை. விளைபொருள்களின்

அளிப்பு, தேவையைவிடக் குறைவாக இருப்பதால் அவற்றின் விலை உயர்ந்து நிலத்திற்குக் கிராக்கி தோன்றுவதால் வாரம் கிடைக்கிறது என்று தற்காலப் பொருளியலாளர்கள் கூறுகின்றனர். வள வேறுபாடுகளுக்கேற்ப நிலத்தின் வாரம் வேறுபடுகிறது என்று ரிக்கார்டோ தவறான கருத்தைக் கொண்டுள்ளார்.

**4. வளம் மிக்க நிலம் முதலில் சாகுபடிக்காக எடுத்துக் கொள்ளப் படுவதில்லை :** புதிதாகக் குடியேற்றம் நிகழும் ஒரு நாட்டில் வளம் மிக்க நிலமே சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதுவது தவறு. வளம் மிக்க நிலம் குடியேறிய இடத்திற்கு அருகாமையில் அமையாமல் இருக்கக்கூடும்; அல்லது அவ்வகை நிலத்தில் புல்பூண்டுகள், காட்டுப் பயிர்கள், மூங்கில்கள், களைகள் போன்றவை அடர்ந்திருக்க வாய்ப்புண்டு. எனவே, அந்த நிலத்தில் சாகுபடி செய்ய இயலாது. ரிக்கார்டோவின் கோட்பாட்டிலுள்ள இக் குறைபாட்டை அமெரிக்கப் பொருளியலறிஞராகிய கேரே (Carey) குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கக் குடியேற்றத்தையே இதை விளக்கப் பயன்படுத்தலாம். ஐரோப்பிய நாடுகளிலிருந்து சென்ற மக்கள் முதலில் அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளிலேயே குடியேறினர்கள். கிழக்குப் பகுதிகளின் நிலம் அதிக வேளாண்மை உற்பத்தியைத் தரத்தக்கதாக இல்லை. எனினும், அங்குச்சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிலகாலம் சென்ற பிறகு மக்கள் மேற்கு நோக்கி நகரத் தொடங்கினர்கள். அங்கிருந்த நிலமே அதிக விளைச்சலைத் தரத்தக்க வளத்தை மிகுதியாகப் பெற்றிருந்தது. எனவே, பிற்காலத்தில் கிழக்குப் பிரதேசங்கள் தொழில்துறை முன்னேற்றத்தில் கவனத்தைச் செலுத்தியபோது, மேற்குப் பகுதிகள் வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டன.

**5. வாரத்திற்குத் தனிக்கோட்பாடு அவசியமில்லை :** நிலத்தில் தோன்றும் வாரத்தைத் தேவை, அளிப்புக் காரணிகளைக் கொண்டே விளக்கிவிடலாம். அதை விளக்கத் தனியான கோட்பாடு தேவையில்லை எனத் தற்காலப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர். பிற உற்பத்திக் காரணிகள் கிடைப்பருமையால் சன்மானம் பெறுகின்றன. நிலமும் வாரத்தைப் பெறுவதற்குக் கிடைப்பருமையே காரணமாகும்.

**6. பொருள்களின் கிடைப்பருமையால் வாரமும் விலையும் நிர்ணயமாதல் :** ரிக்கார்டோவின் கூற்றுப்படி, 'வாரம் அளிக்கப்படுவதனால் தானியத்தின் விலை உயர்வதில்லை; ஆனால், தானியத்தின் விலை உயர்ந்திருப்பதால் வாரம் அளிக்கப்படுகிறது' (Corn

is not high because rent is paid; but rent is paid because corn is high). நடைமுறையில் வாரத்தால் விளைபொருளின் விலை நிர்ணயமாவதோ, விளைபொருளின் விலையால் வாரம் நிர்ணய மாவதோ இல்லை. விளைபொருள்களின் கிடைப்பருமை காரண மாகவே வாரமும் விலையும் நிர்ணயமாகின்றன. வாரத்தால் விலை அதிகரிக்கலாம்; விலையில் வாரமும் அடங்கும்.

**7. திறன் வேறுபாடுகள் எல்லா ஆக்கக் காரணிகளிலும் உள்ளமை :** வள வேறுபாடுகள் நிலத்தில் இருப்பதுபோல, உற்பத்தித் திறன் வேறுபாடுகள் பிற ஆக்கக் காரணிகளிலும் உள்ளன. உழைப்பாளர்களிடையே திறமை வேறுபாடு உள்ளது. மூலதனத்தின் உற்பத்தித் திறன் எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

**8. நிறைவுப் போட்டி நிலவாமை :** ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு, நிலத்தை அளிப்பதிலும் பெறுவதிலும் நிலக் கிழார்களிடையேயும் சாகுபடியாளர்களிடையேயும் நிறைவுப் போட்டி நிலவுவதாகக் கருதுகிறது. நிலங்கள் வெவ்வேறு அளவில் வாரத்தைப் பெறுவதிலிருந்தே நிறைகுறைப் போட்டி நிலவு வதைத் தெரிந்துகொள்ளலாம்.

ரிக்கார்டோ பல தவறான எடுகோள்களின் அடிப்படையில் வாரக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். எனினும், அக் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு புதிய வாரக் கோட்பாடு கள் வரையப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே, 'போலி வாரம்', 'மாற்று வருவாய்' ஆகியவை குறித்துப் புதிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

## III. வாரத்தின் புதுமைக் கோட்பாடு (Modern Theony of Rent)

நிலத்தின் அளிப்பும், நிலத்திற்கான தேவையும் நிலத்தைப் பயன்படுத்துவதற்காக அளிக்கப்படும் ஊதியமாகிய வாரத்தை நிர்ணயிப்பதாக புதுமைக் கோட்பாடு குறிப்பிடுகிறது. நிலத் திற்கான தேவை அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விளைபொருள் களின் தேவைக்கேற்ப அமையும். நிலத்தின் அளிப்பு முற்றிலும் நெகிழ்ச்சியற்றது. வெவ்வேறு தரத்தைக்கொண்ட நிலங்கள் தேவையையும் அளிப்பையும் வெவ்வேறு அளவுகளில் கொண்டு மாறுபட்ட வாரங்களைப் பெறுகின்றன. இவ்வகைத் தேவை

அளிப்புக் கோட்பாடு வாரங்கள் வேறுபடுவதற்கான காரணங்களையும் கூறுகிறது. தேவையோடு ஒப்பிடும்போது நிலத்தின் அளிப்புப் பற்றுக்குறை நிலையில் இருப்பதால்தான், நிலம் வாரத்தைப் பெறுகிறது என்று புதுமைப் பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

வாரத்தின் புதுமைக் கோட்பாட்டின்படி, 'வாரம்' என்னும் சொல் ஆக்கக் காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைக் குறிக்கும். ஆக்கக் காரணிகளின் அளிப்பு நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கிறது. எனவே, 'வாரம்' என்பது நிலத்தைப் பயன்படுத்துவதற்காகத் தரப்படும் தொகையோடு, மூலதனம் – உழைப்பு ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் சன்மானங்களும் சேர்ந்த ஒன்றாகும். நிலத்தோடு பிற ஆக்கக் காரணிகளிலும் வாரம் அமைந்துள்ளது. நிலத்தில் வள வேறுபாடுகள் இருப்பதுபோலவே உழைப்பாளர்களுடைய உற்பத்தித் திறனிலும் வேறுபாடுகள் உள்ளன. அதிக ஆக்கத் திறனைக் கொண்ட மனிதர்கள் அவர்களுடைய திறமை மிக்கப் பணிகளின்மூலம் உயர்ந்த வருமானத்தைப் பெறுகிறார்கள். உதாரணமாக எம். எஸ். பட்டம் பெற்ற அறுவை வைத்திய நிபுணர் ஒருவர் மிக உயர்ந்த வருமானத்தைப் பெறக்கூடும். அவருடைய எச்ச வருமானத்தை வாரம் எனலாம். இது திறமையின் அடிப்படையில் எழுகின்ற வாரமாகும்.

வாரம் என்பது உண்மை வருவாய்க்கும் மாற்று வருவாய்க்கும் உள்ள வேறுபாடு ஆகும். உண்மை வருவாய் என்பது ஒரு காரணியின் உபயோகித்திற்குத் தரப்பட்ட தொகையையும், 'மாற்று வருவாய்' (transfer earnings) என்பது அக் காரணி அந்த உற்பத்தியிலிருந்து அடுத்துச் சிறந்த உற்பத்தியில் ஈடுபடுவதனால், பெறக்கூடிய வருவாயையும் குறிக்கின்றன. இதை எடுத்துக்காட்டு ஒன்றின்மூலம் விளக்கலாம். ஒருவர் 5 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்து ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 வருமானம் பெறுகிறார் என்று வைத்துக்கொள்ளலாம். அதே 5 ஏக்கர் நிலம் கரும்பு விளைவிக்கும்போது ஆண்டொன்றுக்கு ரூ. 8,000 வருமானத்தைத் தரக்கூடும். இந்த உதாரணத்தில் நிலத்தின் மாற்று வருவாய் ரூ. 8,000 ஆகும். எனவே, அந்த நிலத்திற்கான வாரம் ரூ. 2,000 ஆக அமைகிறது.

திருமதி ஜோன் இராபின்சன் வாரத்தின் புதுமைக் கோட்பாட்டைத் தெளிவுற விளக்கியுள்ளார். பற்றுக்குறை அல்லது கிடைப்பருமையின் காரணமாக நிலம், உழைப்பு, மூலதனம்,

அமைப்பு ஆகிய யாவுமே வாரத்தைப் பெறுகின்றன. உண்மை வருவாய்க்கும் மாற்று வருவாய்க்கும் உள்ள வேறுபாடாகிய எச்ச வருவாயே ஆக்கக் காரணியின் வாரமாக அமைகின்றது.

பொதுவாக நிலத்திற்கு ஓர் உபயோகம் மட்டுமே உண்டென்றும், அதனால் அதற்கு மாற்று வருவாய்க் கிடையாதென்றும் சில பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர். இதன் காரணமாக, நிலத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் முழுவதையும் வாரமாகக் கொள்ளலாம்.

## IV. போலி வாரம் (Quasi-Rent)

இதைப் பற்றிய விளக்கத்தை முதன்முதலாகத் தந்தவர் ஆல்ஃபிரட் மார்ஷல் ஆவார். நிலத்தைத் தவிர்த்த உற்பத்திச் சாதனங்களால் ஈட்டப்பெறும் உபரியே 'போலி வாரம்' எனப்படும். இயந்திரங்களால் பெறப்படும் வருமானத்தின் ஒரு பகுதி வாரமேயாகும். அவற்றின் அளிப்பு மாறக்கூடியது. எனவே, அவற்றிற்கான உபரி வாரமும் மாறுகின்றது.

குறுகிய காலத்தில் இயந்திரங்களுக்கும், மனிதனால் உருவாக்கப்பட்ட பிற கருவிகளுக்கும் கிடைக்கின்ற வருமானமே போலி வாரமாகும். நிலத்தின் விலைச்சலுக்கேற்ப வாரம் தோன்றுகிறது; பொருள்களின் விலைக்கேற்ப போலி வாரம் அமைகிறது. போலி வாரம் குறுகிய காலத்தில் மட்டுமே உபரியாகப் பெறப்படுகிறது. அதைத் தருகின்ற இயந்திரங்கள் போன்றவற்றின் அளிப்பை நீண்ட காலத்தில் அதிகரிக்கலாம். நீண்டகாலத்தில் போலி வாரம் மறைந்துவிடும்.

போலி வாரத்தை உதாரணங்களின்மூலம் விளக்கலாம். போரினால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீடுகள் இடிந்து நாசமாகின்றன என்று வைத்துக்கொள்வோம். குறுகிய காலத்தில் புதிய வீடுகளைக் கட்டுவது இயலாது. மேலும், போர்க்காலத்தில் கட்டுமானப் பொருள்கள் கிடைப்பதும் அரிது. எனவே, அப்பகுதியில் இருக்கும் வீடுகளின் வாடகை திடீரென உயர்கிறது. வீட்டு உடைமையாளர்கள் இதன்மூலம் உபரி வருமானத்தைப் பெறுகின்றனர். அந்த உபரி வருமானமே போலி வாரமாகும். நீண்டகாலத்தில் வீடுகள் கட்டப்பட்டு விடுவதால் போலி வாரம் மறைகிறது.

இரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் இரயில்வே போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுச் சரக்குகளை எடுத்துச் செல்வதற் கான லாரிக் கட்டணங்கள் உயர்த்தப்படலாம். கட்டணங் களின் திடீர் உயர்வால் லாரி உடைமையாளர்கள் உபரி வரு வாயைப் பெறுகின்றார்கள். அந்த உபரி வருவாயே போலி வாரம் எனப்படுகிறது. இரயில்வே போக்குவரத்துத் திரும்பவும் செயல் படத் துவங்கும்போது, கட்டணங்கள் பழைய அளவிலேயே வசூ லிக்கப்படுகின்றன. இதனால், லாரி உடைமையாளர்கள் பெறும் உபரி வருவாய் அல்லது போலி வாரம் மறைந்துவிடுகிறது.

# 33. கூலிகள்

## (Wages)

## I. விளக்கம்

உழைப்பாளருடைய உழைப்பிற்காகத் தரப்படும் சன்மானமே கூலி எனப்படும். 'உழைப்பு' என்பது பொருளியலில் பரந்த பொருளில் குறிப்பிடப்படுகின்றது. உழைப்பானது உடல் உழைப்பாகவோ அல்லது மூளை உழைப்பாகவோ இருக்கலாம். வருமானத்தைப் பெறுவதற்காக ஆண்களும் பெண்களும் உழைப்பைத் தருகிறார்கள். விவசாயி, தொழிலாளி, ஆசிரியர், பொறியாளர், மருத்துவர், வழக்குரைஞர், நடிகர், பாடகர், ஓவியர் போன்ற பலரும் வருமானம் ஈட்ட உழைப்பவர்களே ஆவர். வருமானம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் பணிகள் உழைப்பில் அடங்குகின்றன. உழைப்பிற்கான கூலி பெரும்பாலும் கால அளவின் அடிப்படையிலேயே தரப்படுகின்றது. அதை 'நேரக்கூலி' (time wage) என்கிறோம். செய்த பணியின் (உற்பத்தியின்) அடிப்படையில் தரப்படும் கூலி 'துண்டுக் கூலி' (piece wage) அல்லது அளவுக்கூலி எனப்படும். கூலிகள் பணமாகவும் பொருளாகவும் தரப்படுகின்றன.

## II. கூலியின் வகைகள்

பெயரளவுக் கூலி (Nominal wage), உண்மைக்கூலி (Real wage) ஆகியவை கூலியின் இரு வகைகளாகும். உழைப்பிற்குத் தரப்படுகின்ற பண அளவே பெயரளவுக் கூலியாகும். அதைப் பணக்கூலி (Money wage) என்றும் குறிப்பிடலாம். உழைப்பாளர் பெறுகின்ற பணக்கூலியின் அளவைக் கொண்டு, அவருடைய நிலையை அல்லது வாழ்க்கைத் தரத்தைப் புரிந்துகொள்ள இயலாது. உண்மைக்கூலி உயர்வாக இருந்தால்தான் உழைப்பாளர்

பல பொருள்களை நுகர்ந்து நலமான வாழ்வைப் பெற்றிருப் பார். இன்றைய நிலையில் நம் நாட்டில் பணவீக்கத்தால் பணத் தின் மதிப்புக் குறைந்துள்ளது. எனவே, இங்கு உழைப்பாளர் களுடைய பணக்கூலி உயர்ந்திருப்பினும் உண்மைக்கூலி அதிகரிக்க வில்லை.

## III. உண்மைக்கூலியை நிர்ணயிக்கும் காரணிகள்

உழைப்பாளர்கள் உயரளவில் உண்மைக் கூலியைப் பெறு கின்றார்களா என்பதை அறியப் பின்வரும் காரணிகளை ஆராய வேண்டியுள்ளது:

### 1. விலை மட்டம் அல்லது பணத்தின் வாங்கும் திறன்

உழைப்பாளர் பெறும் பணக்கூலி உயர்வாக இருப்பினும், அதைக்கொண்டு அதிகளவுப் பண்டங்களையும் பணிகளையும் வாங்க இயலாவிட்டால், அதை உண்மைக் கூலியாகக் கருதமுடியாது. இரண்டாவது உலகப் போருக்கு முன்பு இந்தியாவில் பொருள்கள் மலிவாகக் கிடைத்தன. ஆனால், இப்பொழுது விலைகள் சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. 1939ஆம் ஆண்டிற்கும் 1975ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ரூபாயின் மதிப்பு 20 பைசாவாகத் தாழ்ந்துள்ளது. இந்திய உழைப்பாளர்களுடைய ஊதியம் நான்கு மடங்கு உயரவில்லை. அவர்களுடைய பணக்கூலி அதிகரித்திருந்தாலும், உண்மைக்கூலியில் கணிசமான உயர்வு ஏற்படவில்லை.

### 2. வேலையின் தன்மை

ஆபத்துகள் நிறைந்த வேலைகளில் பணக்கூலி உயர்வாக இருந்தாலும் உண்மைக்கூலி குறைகிறது. உதாரணமாக விமானப் பணியாளர்களுக்கும், சுரங்கத் தொழிலாளர்களுக்கும் அதிக ஊதியம் வழங்கப்பட்டாலும் அவர்களுடைய உண்மைக்கூலி குறைவாகவே அமைகிறது.

### 3. பணியாற்றும் காலம்

பலமணி நேரம் பணியாற்றுவதற்கு அதிகப் பண ஊதியம் வழங்கப்பட்டாலும், உண்மைக்கூலி தாழ்வாகவே இருக்கும். நாள்தோறும் குறைந்த நேரத்திற்குப் பணியாற்றுபவர்களின் உண்மை ஊதியம் உயர்வாக அமையும்.

### 4. அதிகப் பணிக்குக் குறைந்த ஊதியம்

பல அதிகாரிகள், அலுவலகப் பணிகளை ஆற்றுவதற்காக நியமிக்கப்படும் கடைநிலை ஊழியர்களைத் தங்களுடைய இல்லப் பணிகளுக்கும் பயன்படுத்திக் கொள்வதுண்டு. அலுவலகப் பணிகளோடு, அதிகாரியின் இல்லப் பணிகளையும் செய்யும்போது ஊழியரின் உண்மை வருமானம் குறைகிறது.

### 5. துணை நன்மைகள்

கூலியோடு இருப்பிட வசதி, மருத்துவ வசதி, பொழுது போக்கு வசதி போன்றவை உழைப்பாளர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும்போது, அவர்களுடைய உண்மைக் கூலி உயர்கின்றது. இலவச உடை, உணவு போன்றவையும் உண்மைக் கூலியைக் கூட்டுகின்றன.

### 6. பணியாற்றுவதற்கான வசதிகள்

உற்பத்திப் பணிகளில் எளிதாக ஈடுபட வசதிகள் இருந்தால், உழைப்பாளர் சுலபமாக உற்பத்தியைச் செய்துமுடிக்க இயலும். வசதிக் குறைவான சூழ்நிலைகளில் பணியாற்றும்போது உழைப்பாளரின் நலன் பாதிக்கப்பட்டு, அவருடைய உண்மை ஊதியம் குறைகிறது. அலுவலகத்தில் மின்விசிறி இல்லாமலோ, வகுப்பறையில் கரும்பலகை இல்லாமலோ பணியாற்றுவது கடினம்.

### 7. துணை வருவாய்

சில உழைப்பாளர்கள் துணைப் பணிகளைச் செய்து அதிக வருவாயை ஈட்டலாம். உதாரணமாக, மருத்துவர்கள் மருத்துவமனைகளில் மாத ஊதியத்திற்குப் பணியாற்றும்போதே தங்களுடைய சொந்த மருத்துவ ஆலோசனை இடங்களில் மாலை நேரங்களில் பணியாற்றுவதன்மூலம் உயர் வருவாயைப் பெறலாம். இதனால், அவர்களுடைய உண்மை ஊதியம் கூடுகின்றது.

### 8. வேலை உயர்வுக்கான வாய்ப்பு

எதிர்காலத்தில் வேலை உயர்வுக்கான வாய்ப்புகள் இருக்கும் போது, ஒருவர் துவக்கத்தில் குறைந்த சம்பளத்தைப் பெற்றும் தன்னுடைய உழைப்பைத் தருவார். வருங்கால முன்னேற்றத்திற்கு வாய்ப்புகள் உள்ள வேலையில் உண்மை ஊதியம் உயர்வாக உள்ளது. இவ்வாறான வேலையை எவரும் தயங்காமல் ஏற்றுக் கொள்வர்.

### 9. சமுதாய மதிப்பு

சமுதாய மதிப்புடைய சில வேலைகளில் பண ஊதியம் குறைவாக இருப்பினும், உண்மை ஊதியம் உயர்வாக அமையும். இதற்கு உதாரணமாக அரசாங்க வேலைகளைக் குறிப்பிடலாம்.

### 10. வேலையின் நிரந்தரத் தன்மை

தற்காலிக வேலையின் உயர்ந்த ஊதியத்தைவிட, நிரந்தமான வேலையின் குறைந்த ஊதியம் விரும்பத்தக்கது. நிரந்தர வேலையில் உண்மை ஊதியம் உயர்வாகவும், தற்காலிக வேலையில் உண்மை ஊதியம் குறைவாகவும் அமைகின்றன.

## IV. கூலிக் கோட்பாடுகள் (Theory of wages)

உழைப்பிற்கான கூலி எவ்வாறு நிர்ணயமாகின்றது என்பதை விளக்கப் பல கோட்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்வருமாறு விளக்கலாம்:

### (i) பராமரிப்புக் கூலிக் கோட்பாடு (Subsistence Theory of Wages)

கூலி நிர்ணயம் குறித்த இக் கோட்பாட்டைத் தந்தவர்கள் 18ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த 'இயற்கை வாதக் கருத்தினர்' (physiocrats) ஆவர். டேவிட் ரிக்கார்டோ தந்த விளக்கமும் இது செல்வாக்குப் பெறக் காரணமாக அமைந்தது. பிறகு லாஸ்ஸேல் (Lassalle) என்ற ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த பொருளியலாளர் அதை மேலும் விளக்கி, அதற்குக் 'கூலியின் இரும்பு விதி' (iron law of wages) எனப் பெயரிட்டார். 19ஆம் நூற்றாண்டில் இக் கோட்பாடு பலராலும் எற்றுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையிலேயே கார்ல் மார்க்ஸ் தனது 'சுரண்டல் கோட்பாட்டைத்' (theory of exploitation) தந்துள்ளார்.

இக் கோட்பாட்டின்படி, உழைப்பாளர்களின் கூலி மட்டம் அவர்களைப் பராமரிப்பதற்கான செலவு மட்டத்திற்குச் சமமாக இருக்கும். தொழிலாளியும் அவனது குடும்பத்தினரும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவு, உடை, தங்குமிடம் ஆகிய தேவைகளைப் பெறுவதற்குரிய கூலியளவையே 'குறைந்தளவுப் பராமரிப்பு மட்டம்' என்பது குறிக்கும். இக் கோட்பாட்டில் உழைப்பின் அளிப்பு மட்டும் கருதப்படுகிறது.

கூலியானது பராமரிப்பு மட்டத்திற்கு அதிகமாக இருந்தால் உழைப்பாளர்களுடைய வாழ்க்கை வசதிகள் பெருகும். இதனால் இனப் பெருக்கம் ஏற்பட்டு மக்கள்தொகை அதிகரிக்கும். இதன் விளைவாக உழைப்பின் அளிப்புக் கூடி கூலியின் அளவு குறையும். கூலியானது பராமரிப்பு மட்டத்திற்குக் குறைவாக இருந்தால் வறுமை, பஞ்சம், பட்டினி, நோய் ஆகியவை தோன்றி மக்கள் தொகை குறைகிறது. இதன் காரணமாக உழைப்பின் அளிப்புக் குறைந்து, கூலியானது பராமரிப்பு மட்டத்திற்குச் சமமாக உயர்கின்றது.

குறுகிய காலத்தில் உழைப்பிற்கான கூலி பராமரிப்பு மட்டத்திற்குக் குறைவாகவோ அல்லது அதிகளவோ அமையக்கூடும். ஆனால், நீண்ட காலத்தில் மக்கள்தொகை மாற்றத்தால் கூலி மட்டம் பராமரிப்பு மட்டத்திற்குச் சமமாக இருக்கும்.

**திறனாய்வு :** தொன்மையான பராமரிப்புக் கூலிக் கோட்பாட்டில் உள்ள குறைபாடுகளைப் பின்புவந்த பொருளியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

1. இக் கோட்பாடு மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. உழைப்பாளர்களுக்கான கூலி அதிகரிக்கும்போது, அவர்கள் இனவிருத்தியில் ஈடுபடுவார்கள் என்று கருதுவது தவறு. கூலி அதிகரிப்பால் உழைப்பாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். வாழ்க்கைத் தரம் உயரும்போது பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையும்.

2. பின்தங்கிய நாடுகளில் கூலியானது பராமரிப்பு மட்டத்திற்குச் சற்றெறப்பச் சமமாக இருக்கிறது. எனினும், இக் கோட்பாடு வளர்ச்சியடைந்த அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் பொருத்தமுடையதாக இல்லை.

3. பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிலும் உள்ள பல்வேறு தொழில்களுக்கிடையே கூலி வேறுபாடுகள் உள்ளன. ஆனால், பராமரிப்புக் கூலிக் கோட்பாடு உழைப்பாளர்கள் யாவரும் ஒரே அளவுக் கூலியைப் பராமரிப்பு மட்டத்திற்குச் சமமாகப் பெறுவர் என்று கூறுகிறது.

4. இக் கோட்பாடு உழைப்பின் அளிப்பைமட்டுமே கருதித் தேவையைப் புறக்கணிக்கிறது. தேவையின் புறத்தில், தொழில் அதிபர் உழைப்பாளரின் உற்பத்தித் திறனுக்கேற்ப கூலி அளிப்

பார். உழைப்பாளரின் பராமரிப்பு மட்டம் பற்றி அவர் அக்கறை கொள்வதில்லை.

5. கூட்டுத் தொழிலமைப்புகள் பேரளவில் பெருகியுள்ள இன்றைய நிலையில், தொழிலாளர் சங்கங்கள் வேலைநிறுத்தம், முற்றுகைப் போராட்டம் போன்றவற்றில் ஈடுபட்டுக் கூலி உயர்வைப் பெறுகின்றன.

6. பல நாடுகளிலும் கூலி படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதோடு மக்கள்தொகையும் அந் நாடு களில் பெருகி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

7. இது நம்பிக்கையற்ற கோட்பாடாகவும் அமைகிறது. உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் உயர்ந்து உற்பத்திக் கூடும் போது தொழில் அதிபர் அதிக இலாபத்தைப் பெறுவார். இதன் மூலம் கூலியானது மேலும் உயர்ந்து உழைப்பாளர்கள் தரமான வாழ்வைப் பெறுவர். இதற்குச சான்றாக அமெரிக்கத் தொழிற் சாலைகளில் பணியாற்றும் நீக்ரோ தொழிலாளர்களின் உயர் வான வாழ்க்கைத் தரத்தைக் குறிப்பிடலாம்.

8. பராமரிப்பு மட்டத்தை அளவிடுவது எளிதல்ல. அது காலத்திற்கும் இடத்திற்கும் தொழிலுக்கும் வேலைக்கும் தக்கவாறு வெவ்வேறு அளவுகளில் வேறுபட்டதாக இருக்கும்.

இக் கோட்பாட்டில் பல குறைகள் இருப்பினும், இதிலுள்ள சில அடிப்படை உண்மைகள் பின்தங்கிய நாடுகளுக்கு ஓரளவு பொருந்துகின்றன.

### (ii) கூலி நிதிக் கோட்பாடு (Wages Fund Theory)

இக் கோட்பாட்டைத் தந்தவர் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) ஆவார். அதற்கு முன்பே ஆடம் ஸ்மித் இது பற்றிய கருத்தைத் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். மில்லின் கூற்றுப்படி, நாட்டு மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கு உழைப்பாளர்களுக்குக் கூலியளிப்பதற்கான நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதுவே கூலி நிதியாகும். கூலி மட்ட மானது கூலி நிதியிலுள்ள பணத்தின் அளவிற்கும், நாட்டிலுள்ள உழைப்பாளர்களின் எண்ணிக்கைக்கும் ஏற்ப அமையும். கூலி நிதியிலுள்ள பணத்தின் அளவு மாறாமலிருந்து, உழைப்பாளர் களின் எண்ணிக்கை கூடும்போது கூலி குறையும்.

கூலி நிதியின் அளவு உழைப்பின் தேவையைக் குறிக்கின் றது. கூலி நிதியை உழைப்பாளர்களின் எண்ணிக்கையால்

வகுத்துக் கூலி மட்டத்தை அறியலாம். குறுகிய காலத்தில் கூலி நிதியிலுள்ள பணத்தின் அளவு மாறுது. எனவே, உழைப்பாளர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கூலி மாறுபடும்.

**திறனாய்வு :** கூலிநிதிக் கோட்பாட்டிலுள்ள குறைபாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. மூலதனத்தின் ஒரு பகுதி கூலி நிதியாக வைக்கப்படுவதாக மில் கூறுகின்றார். ஆனால், நடைமுறையில் அவ்விதமான நிலையான நிதி ஏதும் அமைந்திருக்கவில்லை. கூலிநிதி இருப்பதாகக் கொண்டாலும், அது நிலையானதல்ல. இலாபத்தின் அளவுக்கேற்ப அது மாறிக்கொண்டே இருக்கவேண்டும்.

2. இக் கோட்பாடானது கூலிநிதி எவ்வாறு தோன்றுகிறது, அதை எவ்விதம் கணக்கிடுவது என்பவை பற்றி விளக்கவில்லை. கூலி நிதியை உழைப்பாளர்களின் எண்ணிக்கையால் வகுத்துக் கூலி மட்டத்தை அறியலாம் என்பதை மட்டுமே இது குறிப்பிடுகின்றது.

3. இக் கோட்பாட்டின்படி கூலி உயர்வு இலாபத்தின் அளவைக் குறைக்கும். ஆனால், நடைமுறையில் இவ்வாறான நிலையே எப்பொழுதும் அமைந்திருக்கும் எனக் கருதுவது தவறு. பொருளாதாரப் பூரிப்புக் காலங்களில் கூலி, இலாபம் ஆகியவை இரண்டுமே அதிகரிக்க வாய்ப்புண்டு.

4. இக் கோட்பாடு உழைப்பின் அளிப்பிற்கு அதிக முக்கியத்துவம் தந்து, உழைப்பிற்கான தேவை மாறுமலிருக்கும் என்று குறிப்பிடுகிறது.

5. கூலிநிதிக் கோட்பாட்டின்படி, உழைப்பாளர்கள் அனைவரும் ஒரே அளவுக் கூலியையே பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், கூலி மட்டம் ஒரு நாட்டிற்குள்ளேயே தொழிலுக்குத் தொழில், இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது.

6. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கக்கூடியது. உற்பத்திச் சாதனங்களுக்கேற்ப அது மாறுபடக்கூடும். உற்பத்தித் திறன் அதிகரிக்கும்போது உழைப்பாளர்களுக்கான தேவை கூடுமென்பதை இக் கோட்பாடு அறிந்திருக்கவில்லை.

7. பல நாடுகளுக்கிடையேயும் நிலவுகின்ற கூலி விகிதங்கள், ஆங்காங்கே கிடைக்கப்பெறும் மூலதனத்தின் அளவுக்கேற்ப அமைவதில்லை. சில புதிய நாடுகளில் மூலதனப் பற்றுக்குறை இருப்பினும், கூலி உயர்வாக உள்ளது. இந்தியா போன்ற

பழைய நாடுகளில் மிகுதியான மூலதனம் இருந்தாலும் கூலி மட்டம் தாழ்வாகவே இருக்கிறது.

8. கட்டாய முறையில் கூலியை உயர்த்தினால், மூலதனம் வெளிநாடுகளுக்குப் பெயர்ச்சியடையும் என இக் கோட்பாடு கருதுகிறது. இன்றைய சூழ்நிலைகளில், நாடுகளுக்கிடையே மூல தனப் பெயர்ச்சி எளிதானதாக இல்லை. மேலும், கூலி உயர்வால் மூலதனம் பெயர்ச்சியடையும் நிலைக்கு இலாபத்தின் அளவு சுருங்காது.

### (iii) மிச்ச உரிமையர் கோட்பாடு (Residual Claimant Theory)

இக் கோட்பாட்டைத் தந்தவர் அமெரிக்கப் பொருளியலறி ஞராகிய வாக்கர் (Walker) ஆவார். இதன்படி, நிலம், மூலதனம், தொழிலமைப்பு ஆகியவற்றிற்குச் சன்மானம் அளித்த பிறகு உற்பத்தியில் மிச்சமாக இருப்பது உழைப்பாளர்களுக்குக் கூலியாகக் கிடைக்கின்றது. எனவே, மொத்த உற்பத்தியிலிருந்து வாரம், வட்டி, இலாபம் ஆகியவற்றைக் கழித்துக் கூலியை அறிய லாம். வாரம், வட்டி, இலாபம் ஆகியவை கோட்பாடுகளின் அடிப்படையில் தெளிவாகக் கணக்கிடப்படுகின்றன என்பது வாக்கரின் கருத்தாகும். ஜெவான்ஸ் (Jevons) என்பவரும் இக் கோட்பாட்டை வளப்படுத்தியுள்ளார். தேசிய வருமானத்தி லிருந்து நிலத்திற்கான வாரம், மூலதனத்திற்கான வட்டி, தொழி லமைப்பிற்கான இலாபம் ஆகியவற்றைக் கழித்துவிட்டால், மிச்ச மிருப்பது உழைப்பாளர்களுக்கான கூலியாக அமையும்.

**திறனாய்வு :** 1. உற்பத்தி நடவடிக்கைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போதே உழைப்பாளர்களுக்குக் கூலியாக வழங்கப்படுகிறது. மொத்த உற்பத்தியின் மிச்சத்தைத் தொழில் அமைப்பாளரே இலாபமாகப் பெறுகிறார். கூலியைப் பெறுமல் எவரும் உழைப்பைத் தர முன்வரமாட்டார்கள்.

2. இக் கோட்பாடானது உழைப்பாளர் சங்கங்கள் கூலி உயர்வைப் பெறுவதில் எவ்வாறு வெற்றிபெறுகின்றன என்பதை விளக்கவில்லை.

3. இது உழைப்பிற்கான தேவையை மட்டும் கருதி உழைப் பின் அளிப்பைப் புறக்கணிக்கிறது.

4. நடைமுறையில் வாரம், வட்டி, இலாபம் ஆகியவை அதிகரிக்கும்போது கூலியும் கூடுகின்றது.

5. தேவை, அளிப்பு நிலைகளின் அடிப்படையில் பிற ஆக்கக் காரணிகளின் சன்மானம் நிர்ணயிக்கப்படுகிறது. அது போன்றே உழைப்பிற்கான ஊதியத்தையும் நிர்ணயிக்கலாம்.

மிச்ச உரிமையர் கோட்பாடு, உழைப்பாளர்கள் திறமை யாக உழைத்து உற்பத்தியைக் கூட்டினால் உயர்ந்த கூலியைப் பெறலாம் என்று குறிப்பிடுகிறது. இதனால், உழைப்பாளர்கள் கூலி உயர்வைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையைப் பெற்று ஊக்கத்தோடு உழைக்கிறார்கள்.

### (iv) வாழ்க்கைத் தரக் கோட்பாடு (Standard of Living Theory)

பராமரிப்புக் கூலிக் கோட்பாட்டின் திருந்திய வடிவமாக வாழ்க்கைத் தரக் கோட்பாடு அமைகிறது. இக் கோட்பாட்டில் 'பராமரிப்பு மட்டத்திற்குப்' பதிலாக 'வாழ்க்கைத்தரம்' கருதப் படுகிறது. இதன்படி, கூலியானது உழைப்பாளர்களின் வாழ்க் கைத் தரத்திற்குச் சமமாக அமையும். வாழ்க்கைத்தரமென்பது உழைப்பாளர்கள் பொதுவாக அனுபவிக்கும் வாழ்க்கை வசதி களைக் குறிக்கும். அதில் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றோடு சிலவகை வசதிப் பொருள்களும் ஆடம்பரப் பொருள்களும் அடங்குகின்றன. வாழ்க்கைத் தரச் செலவைவிடக் கூலி குறைவாக இருக்கும்போது உழைப்பாளர்களின் அளிப்புக் குறைகிறது. இதனால் கூலி உயரும். வாழ்க்கைத் தரச் செலவைவிடக் கூலி அதிகமாக அமையும்போது, மக்கள் பெருக்கம் ஏற்பட்டு உழைப்பாளர்களின் அளிப்புக் கூடு கிறது. இதன் காரணமாகக் கூலி குறையும். ஆகவே, நீண்ட காலத்தில் கூலியானது வாழ்க்கைத் தரத்திற்குச் சமமாக அமையும்.

**திறனாய்வு** : 1. வாழ்க்கைத்தரம் கூலியை நிர்ணயிக்கும் பல காரணிகளில் ஒன்றாக உள்ளது.

2. இக் கோட்பாடு அளிப்பின் புறத்திலிருந்து மட்டுமே கூலியை விளக்குகின்றது. உழைப்பிற்கான தேவையைப் புறக் கணிக்கின்றது.

3. தொழில் அதிபர்கள் உழைப்பவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப கூலியைத் தரமாட்டார்கள். பெரும்பாலும் உழைப்பாளரின் இறுதிநிலை ஆக்கத் திறனுக்கேற்பவே கூலி அமை கிறது.

4. நடைமுறையில், உழைப்பாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாதிருப்பினும், கூலியில் உயர்வு தோன்றுகின்றது.

5. ஒரேவகைத் தொழிலில் பணியாற்றும் உழைப்பாளர்களின் கூலிகளில் உள்ள வேறுபாட்டையும், தொழில்களுக்கு இடையேயான கூலிகளின் வேறுபாட்டையும் இக் கோட்பாடு விளக்கவில்லை.

6. வாழ்க்கைத் தரமும், கூலியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. இவற்றுள் எதைக் காரணமென்றும், எதை விளைவு என்றும் குறிப்பிட இயலாது.

7. உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றவர்கள் உயரளவு ஊதியங்களைப் பெறுகிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. தரமான வாழ்க்கைத் தரத்தைப் பெற்றவர்கள் கல்வி, பயிற்சி, திறமை, மதிநுட்பம் ஆகியவற்றில் தேர்ச்சி கொண்டவர்களாக உள்ளனர். அவ்வகைச் சிறப்புத் தேர்ச்சியால்தான் அவர்கள் உயர்ந்த ஊதியத்தை அடைகிறார்கள். எனவே, வாழ்க்கைத் தரத்திற்கேற்ப கூலி அமையுமென்பது தவறான கூற்று.

8. வாழ்க்கைத் தரத்தைத் துல்லியமாக அளவிட முடியாது. அதை வரையறை செய்வதும் கடினமானது. கூலியை எளிதில் வரையறுத்துப் பணத்தின் உதவியைக் கொண்டு அளக்கவும் முடியும்.

கூலி நிர்ணயத்தில் உழைப்பவர்களின் வாழ்க்கைத் தரம் மறைமுகமான செல்வாக்கைக் கொண்டுள்ளது. உழைக்கும் திறன் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப அமைகிறது. இவ்வாறு வாழ்க்கைத் தரக் கோட்பாடு சில சிறப்புகளையும், பல குறைபாடுகளையும் பெற்றுள்ளது.

### v. இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு (Marginal Productivity Theory)

இக் கோட்பாட்டை முதலில் உருவாக்கியவர் வில்லியம் பெட்டி (William Petty) என்பவராவார். இது மேலும் சீர்படக் காரணமாக இருந்தவர்கள் ஜெவான்ஸ், லாங்க்ஃபீல்ட், விக்ஸ்டீட், கிளார்க் ஆகியோராவர். கூலி நிர்ணயக் கோட்பாடுகளில் இது முக்கியம் வாய்ந்ததாகத் திகழ்கின்றது. இக் கோட்பாட்டின்படி, கூலியானது உழைப்பின் இறுதிநிலை ஆக்கத் திறனுக்குச் சமமாக அமையும்.

உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளமையால்தான் உழைப் பாளர்களின் பணி வேண்டப்படுகிறது. வேலையளிப்பவர் உழைப் பாளரின் ஆக்கத் திறனுக்கு அதிகமான கூலியை அளிக்கமாட் டார். உழைப்பிற்கான செலவு (கூலி), அதன் ஆக்கத் திறனுக் குக் குறைவாக இருந்தால் மேலும் மேலும் உழைப்பாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். கூலியானது இறுதி நிலை ஆக்கத் திறனுக்குச் சமமாகும்வரை உழைப்பாளர்களின் எண்ணிக்கை கூட்டப்படுகிறது. அதற்கு அதிகமான எண்ணிக்கை யில் உழைப்பாளர்கள் நியமிக்கப்பட்டால், தொழில் அமைப்பா ளர் இழப்பையே ஏற்கவேண்டி வரும்.

இக் கோட்பாட்டில் எல்லா உழைப்பாளர்களும் சமமான திறனுடையவர்கள் என்று கருதப்படுவதால், கூலி மட்டம் ஒரே அளவிலேயே நிலவுகிறது. அக் கூலி மட்டம் இறுதிநிலை ஆக்கத் திறனால் தீர்மானிக்கப்படுகிறது. கூலியானது இறுதிநிலை ஆக்கத் திறனுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால், தொழில் முயல்வோர் உழைப்பாளரின் எண்ணிக்கையைக் குறைத்தோ அல்லது அதிகரித்தோ இரண்டையும் சமநிலைப் படுத்துகின்றார். இக் கோட்பாடு நிறைவுப் போட்டி நிலவுவதாகக் கருதுகிறது. இது குறைந்துசெல் விளைவு விதியின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள கோட்பாடாகும்.

**திறனாய்வு** : சிலவித எடுகோள்கள் உண்மையானவையாக இருந்தால் இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு சரியானதாக அமையும். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் இதன் எடுகோள் கள் தவறானவையாக உள்ளன. எனவே, இக் கோட்பாடு பின் வரும் குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

1. இது நிறைவுப் போட்டி நிலவுவதாகவும், வேலைகளுக் கிடையே உழைப்பின் பெயர்ச்சி இருப்பதாகவும் ஊகிக்கிறது. நிறைவுப்போட்டி நிலவாமையால், கூலியானது இறுதிநிலை ஆக்கத் திறனுக்குச் சமமாக இருக்குமெனக் கருத முடியாது. ஒரே மாதிரி யான திறமையும், உற்பத்தித் திறனையும் கொண்ட உழைப்பாளர் களின் கூலிகள் வேறுபடுகின்றன.

2. பொருளாதாரத்தில் இயக்கநிலை அமைந்துள்ளதை இக் கோட்பாடு அறிந்திருக்கவில்லை. மக்கள்தொகை, மூலதனம், தொழில்நுட்பம் போன்றவை இயக்கநிலைப் பொருளாதாரத்தில் மாறிக்கொண்டே இருக்கின்றன. இக் காரணிகளில் மாற்றம் ஏற்படுவதில்லை என்று இறுதிநிலை ஆக்கத் திறன் கோட்பாடு கருதுகின்றது.

3. வெவ்வேறு வகை உழைப்பும் ஓரியல்பானதாக இருப்பதில்லை. எனவே, எல்லா இடங்களிலும் கூலி மட்டம் ஒரே அளவில் அமைவதில்லை. வெவ்வேறு இடங்களிலும், வேலைகளிலும் கூலி விகிதங்கள் மாறுபடுகின்றன.

4. நடைமுறையில் அளிக்கப்படுகின்ற கூலியானது உழைப்பின் இறுதிநிலை ஆக்கத் திறனுக்குக் குறைவாகவே உள்ளது.

5. உழைப்பாளரின் திறன் மூலதனப் பொருள்கள், நிர்வாகம் போன்றவற்றிற்கேற்பவும் அமையும்.

6. உழைப்பாளர்கள் பெறுகின்ற கூலிக்கேற்பவும் அவருடைய ஆக்கத்திறன் அமைகிறது. குறைவான உற்பத்தித் திறனுக்குக் குறைந்த கூலியும் காரணமாகலாம். குறைந்த கூலி உழைப்பாளருடைய உடல் நலத்தையும், உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது.

7. இக் கோட்பாடு ஒரு போக்குரைக் கூற்றாகவே (statement of tendency) அமைந்துள்ளது. உண்மையில் கூலி நிர்ணயம் எவ்வாறு ஏற்படுகிறது என்பதை இது விளக்கவில்லை.

8. இக் கோட்பாடு உழைப்பின் அளிப்பை நிலையானதாகக் கொள்கிறது. ஆனால், கூலியில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப உழைப்பின் அளிப்பு மாறக்கூடும்.

9. உழைப்பாளரின் பேரத் திறன் குறைவானது. வேலையின்றி இருந்தால் பாதிக்கப்படுபவர் உழைப்பாளரே ஆவர். எனவே, அவர்கள் உற்பத்தித் திறனுக்குக் குறைவான கூலியையும் ஏற்றுக்கொள்கின்றனர்.

10. உழைப்பின் இறுதிநிலை ஆக்கத் திறன் பிற ஆக்கக் காரணிகளையும் சார்ந்து அமைகின்றது.

குறைபாடுகளைப் பெற்றிருப்பினும் இக் கோட்பாடு சில வகைகளில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

**(vi) தேவை - அளிப்புக் கோட்பாடு** (Demand and Supply Theory)

இதைக் கூலியின் புதுமைக் கோட்பாடு (modern theory of wages) என்றும் அழைக்கலாம். தேவை, அளிப்பு ஆகிய இரு காரணிகள் பண்டங்களின் விலைகளை நிர்ணயிக்கின்றன. அதுபோன்றே உழைப்பிற்குத் தரப்படும் விலையாகிய கூலியை

உழைப்பிற்கான தேவையும், உழைப்பின் அளிப்பும் நிர்ணயம் செய்கின்றன.

**உழைப்பிற்கான தேவை :** உழைப்பிற்கான தேவை, அதன் ஆக்கத் திறனால் ஏற்படுகின்றது. ஆக்கத்திறன் குறைவாக இருந்தால், உழைப்பிற்கான தேவையும் குறைவாக இருக்கும். உழைப்பின் தேவை பின்வரும் காரணிகளைச் சார்ந்து அமையும்.

1. பொருள்களுக்கான தேவையே உழைப்பிற்கான தேவையை நிர்ணயிக்கிறது. உழைப்பின் உதவியால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தேவை அதிகரிக்கும்போது, தொழில் அமைப்பாளர் அதிக எண்ணிக்கையில் உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துகிறார்.

2. உழைப்பிற்கான தேவை, பிற ஆக்கக் காரணிகளின் விலைகளுக்கேற்பவும் இருக்கும். அவற்றின் விலைகள் உயர்வாக இருந்தால் உற்பத்திச் செலவு கூடும். இதன் காரணமாகப் பொருள்களுக்கான தேவையும், உழைப்பிற்கான தேவையும் குறைகின்றன.

3. உழைப்பின் தேவை உற்பத்தி முறைகளுக்குத் தக்க வாறும் அமையலாம். உடல் உழைப்பை அதிகத் தேவையாகக் கொண்ட தொழில்களில் மிகுதியான எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் பணிபுரிவர். உற்பத்தியின் பல நிலைகளிலும் பணிகளிலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்போது, உடல் உழைப்புக்கான தேவை குறைகிறது.

4. உழைப்பிற்கான தேவை மூலதனத்தின் அளவுக்கேற்பவும், உழைப்பின் இறுதிநிலை ஆக்கத் திறனுக்கேற்பவும் அமையும்.

**உழைப்பின் அளிப்பு :** பின்வரும் காரணிகளுக்கேற்ப உழைப்பின் அளிப்பு அமைகிறது.

1. வெவ்வேறு தொழில்களில் நிலவும் கூலி மட்டங்களுக்கேற்ப அளிப்பு மாறும். உயர்ந்த கூலியைத் தரும் தொழில்களுக்குப் பெயர்ச்சியடைவது உழைப்பாளர்களின் இயல்பாகும்.

2. கூலி உயர்வாக இருக்கும்போது உழைப்பின் அளிப்புக் குறைவாகவும், கூலி குறைவாக இருக்கும்போது உழைப்பின் அளிப்பு அதிகமாகவும் வாய்ப்புண்டு.

3. திறமையான உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் மிகுதியாக இருக்கும். எனவே, அவர்களால் உழைப்பின்

அளிப்பு உயரும். திறமை குறைந்த உழைப்பாளர்களால் உழைப்பின் அளிப்புக் குறைகிறது.

4. பொருளாதாரம் முழுமைக்குமான உழைப்பின் அளிப்பு, பொருளாதார-சமுதாய-அரசியல் காரணிகளைச் சார்ந்து அமையும். மக்கள்தொகை, உழைக்கும் திறன், பெண்டிர்-சிறார் உழைப்பு, பழக்க வழக்கங்கள், உழைப்பதற்கான விருப்பம், ஓய்வு பெறுவதற்கான விருப்பம் ஆகியவற்றிற்கேற்பவும் உழைப்பின் அளிப்பு அமைகிறது.

5. வேலை நேரத்தைக் கூட்டுவதன் மூலமும் உழைப்பின் அளிப்பை அதிகரிக்கலாம்.

இவ்விதமான தேவை-அளிப்புக் காரணிகள் உழைப்பிற்கான கூலியை நிர்ணயிக்கின்றன. இன்றையச் சூழ்நிலைகளில் தொழிலாளர் சங்கங்கள், கூட்டான நடவடிக்கைகளின்மூலம், கூலி யுயர்வைப் பெறுவதில் ஓரளவு வெற்றிபெறுகின்றன. சுருங்கக் கூறினுல், கூலி மட்டமானது உழைப்பாளர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோரின் பேரம் பேசும் திறனுக்கேற்ப அமையும். பெரும்பாலும் கூலி அளவு உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்திக்குக் குறைவாகவும், அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்குச் சற்று அதிகமாகவும் இருக்கும்.

## V. கூலி வேறுபாடுகளுக்கான காரணங்கள்

உழைப்பிற்கான அளிப்பு, உழைப்பின் தேவை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களால் கூலியில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. வெவ்வேறு தொழில்களிலும் கூலி மட்டங்கள் வேறுபடுகின்றன. கிராமப் புறங்களைவிட நகர்ப் புறங்களிலும், பின்தங்கிய நாடுகளை விட வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூலி மட்டங்கள் உயர்வாக உள்ளன. கூலி வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்:

### 1. வேலையின் ஏற்புடைமை

மன மகிழ்வோடு எளிமையாகச் செயல்படக்கூடிய பணிகளுக்குக் குறைந்த ஊதியமே அளிக்கப்படுகிறது. அருவருப்போடு ஆற்றவேண்டிய பணிகளுக்கு அதிகக் கூலி தரவேண்டியுள்ளது. உதாரணத்திற்குச் சாக்கடையைச் சுத்திகரிக்கும் பணியாளர்கள் உயர்ந்த கூலி பெறுவதைக் கூறலாம்.

### 2. வேலையைக் கற்பதற்கான செலவு

பொறியாளராக ஆவதற்கு ஆருண்டுகள் கல்லூரியில் படித்துப் பயிற்சிபெற வேண்டியுள்ளது. அதற்கு அதிகச் செலவு பிடிப்பதால்தான் பொறியாளர்கள் உயரளவு ஊதியத்தைப் பெறுகின்றனர். கல்வியும் பயிற்சியும் தேவையில்லாத பணியில் ஒரு சாதாரண உழைப்பாளியின் கூலி மிகக் குறைவாகவே இருக்கும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் திறமை குறைந்த உழைப்பாளர்களின் எண்ணிக்கை மிகுதியாகவும், கூலி குறைவாகவும் அமையும்.

### 3. வேலையின் நிரந்தரத் தன்மை

ஒரு நிரந்தரமான தொழிலில் வேலையானது தொடர்ந்து நீடிக்கும்போது, உழைப்பாளர்கள் குறைந்த கூலியைப் பெற்றுக் கொள்ளவும் தயாராக உள்ளனர். இதன் காரணமாகவே, அரசாங்க உத்தியோகங்களைப் பலரும் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்கின்றனர். நிலையற்ற வேலைகளில் கூலியை உயரளவில் கொடுக்கவேண்டியுள்ளது.

### 4. உற்பத்திக்கான இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துதல்

உழைப்பின் இறுதிநிலை ஆக்கத்திறன், பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சார்ந்து அமையும். இந்திய வேளாண்மையில் குறைந்தளவு இயந்திர உற்பத்திமுறை கைக் கொள்ளப்படுவதால்தான் உற்பத்தியின் அளவும், உழைப்பாளருடைய கூலியும் தாழ்வாக உள்ளன. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் திறமை குறைந்த விவசாயிகள் கூட இயந்திரங்களின் உதவிகொண்டு உற்பத்தியை எளிதாகப் பல மடங்கு பெருக்கமுடிகிறது. அந்த நாடுகளில் கூலியும் கூடுதலாக உள்ளது.

### 5. இடர்களும் பொறுப்புகளும்

நிர்வாக உழைப்பிற்கான ஊதியம் உயரளவில் கொடுக்கப்படுகிறது. நிர்வாகிகள் பல இடர்களையும் பொறுப்புகளையும் ஏற்பதே இதற்குக் காரணமாகும். நாணயம், நேர்மை ஆகிய வற்றைக் கொண்ட நம்பிக்கையான தொழிலாளர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த கூலியைப் பெறுகிறார்கள். பொற் கொல்லர்கள் இவ் வகையைச் சேர்ந்தவர்களே. ஆபத்துகள் நிறைந்த சுரங்கத் தொழிலாளர்களும் அதிகக் கூலியைப் பெறுபவர்களே ஆவர்.

### 6. பதவி உயர்வு

சிலவகை வேலைகளில் குறுகிய காலத்திலேயே பதவி உயர்வு கிடைக்கக்கூடும். அது போன்ற வேலைகளில் குறைந்த ஊதியத் திற்குப் பணியாற்றவும் பலர் தயாராக இருப்பர்.

### 7. வருவாயைப் பெருக்குவதற்கான வாய்ப்பு

அதிக வருவாயைப் பெறத்தக்க வேலைகளில் ஈடுபடப் பலரும் விரும்புவதால், அவ்வகைப் பணிகளில் உழைப்பின் அளிப்புத் தேவையைவிட அதிகமாக இருக்கும். இதனால், வருவாய் அல்லது கூலி குறைகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக நம் நாட்டின் பொறியாளர்கள் மற்றும் வழக்குரைஞர்களின் நிலை யைக் கூறலாம்.

### 8. அரசின் குறைந்த மட்ட - உயர்ந்த மட்டக் கூலி நிர்ணயம்

தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க அரசு குறைந்தமட்டக் கூலியையோ அல்லது உயர்ந்த மட்டக் கூலியையோ நிர்ணயிப்பதுண்டு. இத னால், ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் அல்லது தொழி லில் ஒரே அளவுக் கூலி அமைகின்றது.

### 9. குறைந்த பணக் கூலியும் பிற வசதிகளும்

உயர்ந்த பணக் கூலியைப் பெறும் ஒருவரைவிட, குறைந்த பணக்கூலியோடு பிற வசதிகளையும் பெறும் வேறொர் உழைப்பாள ருடைய வாழ்க்கை நலன் சிறப்பாக இருக்கும். சமையல்காரர் ஒருவர் குறைந்த ஊதியத்தைப் பெற்றாலும் உணவு, உடை, இருப்பிடம் போன்ற வசதிகளை இலவசமாகப் பெறுகிறார். ஆனால், அலுவலகத்தில் பணியாற்றும் கடைநிலை ஊழியர் ஒருவர் பண ஊதியத்தை மட்டுமே பெறுகிறார். இவ்விருவரில் சமையல்கார ருடைய வாழ்க்கையே சிறப்பானதாக இருக்கும்.

### 10. திறமைத் தேர்ச்சி

சில கலைகளில் ஒரு சிலர் மட்டுமே தனித் திறமை பெற்றவர் களாகத் திகழ்கின்றனர். இதனால், அவர்கள் முற்றுரிமை நிலை யைக் கொண்டு மிக அதிக ஊதியத்தை ஈட்டுகின்றனர். உதா ரணத்திற்குத் திரைப்பட நடிக-நடிகையர், ஓவியர்கள், பாடகர்கள் ஆகியோரைக் கூறலாம்.

## VI. பெண்டிர் உழைப்புக்குக் குறைந்த கூலி

ஆண்களின் உழைப்போடு ஒப்பிடும்போது பெண்கள் உழைப் பின் திறன் குறைவானது என்று சொல்லப்படுகிறது. பெண்களுக்

கான கூலி குறைவாக இருப்பதற்கான காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. ஆண்பெண் உடலமைப்பிலிருந்தே பெண்கள் குறைந்த வலிமையைப் பெற்றவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உடல்திறன் தேவைப்படுகின்ற எல்லாப் பணிகளையும் ஆண்களே எளிதாகவும் விரைவாகவும் திறமையாகவும் செய்கிறார்கள். உடல் வலிமை குறைந்த பெண்டிரின் உற்பத்தித் திறன் தாழ்வாக இருப்பதால், அவர்கள் பெறும் கூலியும் குறைவாகவே உள்ளது.

2. பெண்களில் தற்காலிகமாக உழைப்பவர்களே மிகுந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர். பல காரணங்களால் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற முடிவதில்லை. எனவே, அவர்கள் குறைந்தளவுக் கூலியையும் ஏற்கின்றனர்.

3. எல்லாவகைத் தொழில்களிலும் பெண்களால் பணியாற்ற இயலாது. பணியாற்றும் ஒருசில தொழில்களிலும் அவர்கள் பெறும் கூலி குறைவாக அமைகிறது.

4. பெண் உழைப்பாளர்களுக்கெனத் தனியான சங்கங்கள் இல்லாமையால், அவர்களுடைய கூலி உயர்மட்டத்தில் அமையவில்லை.

5. குடும்பத்தின் வருவாய் ஆண்களால் ஈட்டப்படும் போது, செலவு செய்பவர்களாக மட்டுமே பெண்கள் இருப்பதுண்டு. சில குடும்பங்களில் குறைந்தளவுத் துணை வருவாயைப் பெண்கள் ஈட்டுகின்றார்கள்.

6. வேலையளிப்பவர்கள், பெண்களின் உழைப்பில் அதிக நம்பிக்கைக் கொள்வதில்லை. எனவே, அவர்கள் குறைந்த கூலியையே தருகின்றனர்.

7. பொதுவாகப் பெண்கள் துணைப் பணிகளை மட்டுமே செய்வதாலும் குறைவான ஊதியத்தைப் பெறுகின்றனர்.

8. பெண்களின் உழைப்பு, பெயர்ச்சியற்றதாக உள்ளது. உயர்ந்த கூலி கிடைக்கும் இடங்களுக்குச் சென்று அவர்கள் உழைப்பைத் தருவதில்லை.

உடல் உழைப்பைப் பொறுத்தவரை, ஆண்களுக்கு நிகரான வர்களாகப் பெண்கள் இருக்க இயலாது. ஆனால், மூளை உழைப்புத் தேவைப்படும் சில பணிகளில், பெண்கள் ஆண்களோடு போட்டியிடும் தகுதி பெற்றவர்களாகின்றனர்.

# 34. வட்டி

(Interest)

## I. விளக்கம்

உலகின் எல்லா நாடுகளும் பணப் பொருளாதாரத்தையே பெற்றுள்ளமையால், வட்டியின் முக்கியத்துவம் பெருகி வருகின்றது. மத்திய வங்கிகள் வட்டிவீதத்தை மாற்றி வாணிகத் தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றன. மூலதனத்திற்கான சன்மானமே வட்டியாகும். பணத்தைப் பயன்படுத்துவதற்காக வட்டி தரப்படுகிறது. பொதுவான சொல் வழக்கில், கடனைப் பெற்றவர் கடனை அளித்தவருக்குத் தருகின்ற ஒரு குறிப்பிட்ட தொகையே வட்டி எனப்படுகிறது. இது மொத்த வட்டி (gross interest) ஆகும். பொருளியலில் வட்டி என்பது நிகர வட்டி (net interest) அல்லது தூய வட்டியைக் (pure interest) குறிக்கும். மூலதனத்தைப் பயன்படுத்துவதற்காக மட்டும் தரப்படுவதே நிகர வட்டியாகும்.

பணத்திற்கும் மூலதனத்திற்கும் வேறுபாடு உண்டு. மூலதனத்தை வாங்குவதற்குப் பணம் பயன்படுத்தப்படுகிறது. பண்டைக் காலங்களில் வட்டியைப் பெறுவது பாவமாகக் கருதப்பட்டது. சில மதங்கள் வட்டி பெறுவதற்குத் தடை விதித்தன. ஆனால், தற்பொழுது வட்டியானது முக்கியப் பொருளாதாரப் பணியை ஆற்றும் நிலை அனைவராலும் உணரப்பட்டுள்ளது. அது ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் கருவியாக உள்ளது. வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் வட்டி வீத மாற்றம் உதவுகிறது.

## II. மொத்த வட்டியும் நிகர வட்டியும்

மூலதனத்தின் பணிகளுக்காக மட்டும் தரப்படும் கட்டணம் நிகர வட்டியாகும். சாதாரண வழக்கில் நாம் மொத்த வட்டி

யையே வட்டி எனக் குறிப்பிடுகிறோம். மொத்த வட்டியில் பின் வரும் இனங்கள் அடங்கியுள்ளன.

### 1. இடருக்கு எதிரான காப்பீடு (Insurance against Risk)

கடன் அளிப்பதில் சில இடர்கள் உள்ளன. கடனைப் பெற்றவர் வாணிக இழுட்பாலோ, நேர்மைக் குறைவாலோ கடனைத் திரும்பத் தராமல் இருக்கக்கூடும். கடன் அளித்தலில் உள்ள இவ்வகை இடருக்காகக் காப்பீட்டுத்தொகை போன்ற சிறிதளவு வட்டியும் நிகர வட்டியோடு சேர்த்து வாங்கப்படுகிறது.

### 2. வசதிக்குறைவுக்கான கட்டணம் (Payment for Inconvenience)

கடனுகப் பணத்தைக் கொடுத்தவர் சில நிலைகளில் வசதிக் குறைவுக்கு ஆளாகிறார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கடனுகக் கொடுத்த பணத்தைத் திரும்பப்பெற, ஒப்பந்தக் காலம் முடியும் வரை கடன் அளித்தவர் காத்திருக்கவேண்டியுள்ளது. அந்தக் காலத்திற்குள்ளாக அவருக்கு அவசரப் பணத் தேவைகள் ஏற்படும் போது சிரமத்தை ஏற்கின்றார். இவ்வாறன வசதிக் குறைவுக்கான ஒரு தொகையும் வட்டியில் சேர்ந்துள்ளது.

### 3. நிகர வட்டி அல்லது தூயவட்டி (Net Interest or Pure Interest)

நிகர வட்டி மொத்த வட்டியில் அடங்குகின்ற ஓர் இன மாகும். மூலதனத்தைப் பயன்படுத்துவதற்காக மட்டும் கொடுக்கப்படுவதே நிகர வட்டியாகும்.

### 4. பணிகளுக்கான சன்மானம் (Reward for Services)

பணத்தைக் கடனுக அளிப்பவர் சில பணிகளை ஆற்றுகின் றார். கடன் அளிப்பது அவரது தொழிலாகவும் இருக்கக்கூடும். அத் தொழிலின் கணக்கு வழக்குகளையும், நிர்வாகத்தையும் கவ னிப்பவர் அவரேயாவர். கடனை நிர்வகிக்க அவருக்குச் சில செலவுகள் பிடிக்கின்றன. அச் செலவுகளும், கடன் அளிப்பவரின் பணிகளுக்கான சன்மானமும் மொத்த வட்டியில் சேர்கின்றன.

உதாரணத்திற்கு ஒரு கிராம லேவாதேவிக்காரர் 18 சதவீத வட்டி வசூலிக்கிறார் என்று வைத்துக்கொள்ளலாம். அதில் 6 சதவீதம் இடருக்கு எதிரான காப்பீட்டுத் தொகையாகவும், 5 சதவீதம் வசதிக் குறைவுக்கான கட்டணமாகவும், 4 சதவீதம் தூய வட்டியாகவும், 3 சதவீதம் கடன் அளிப்பவருடைய பணி களுக்கான சன்மானமாகவும் அமையக்கூடும்.

அரசின் கடன்பத்திரங்களில் முதலீடு செய்பவர்கள் இடர் களை ஏற்கத் தேவையில்லை. தேவையானபோது அவற்றை விற்றுப் பணமாக்கிக்கொள்ள முடியும். கடனைத் திரும்பப் பெறுவதிலும், வட்டியை வசூலிப்பதிலும் எவ்வித இடரும் வசதிக் குறைவும் ஏற்படுவதில்லை. எனவே, இவ்வகைக் கடன்களில் மொத்த வட்டி யையும், நிகர வட்டியையும் வேறுபடுத்துவது அவசியமில்லை.

## III. வட்டிக் கோட்பாடுகள்

மூலதனத்திற்கான வட்டிவீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படு கிறது என்பதை விளக்கப் பொருளியலறிஞர்கள் பல கோட்பாடு களை உருவாக்கியுள்ளார்கள். வட்டியைப் பற்றிய முழுமையான அறிவைப் பெற எல்லாக் கோட்பாடுகளையும் அறிவது அவசிய மாகின்றது.

### (i) ஆக்கத்திறன் கோட்பாடு (Productivity Theory)

இக் கோட்பாட்டை முதலில் விளக்கியவர்கள் 'இயற்கை வாதக் கருத்தினர்' (physiocrats) ஆவர். லாடர்டேல் (Lauderdale) என்பவரும் இதனை வளம்பெறச் செய்தவ ராவார். நிலம், உழைப்பு போன்றவற்றிற்கு இருப்பதைப் போன்றே மூலதனத்திற்கும் ஆக்கத்திறன் உண்டு என இக் கோட்பாடு கூறுகிறது. அந்த ஆக்கத் திறனுக்காகவே மூலதனம் வட்டியைப் பெறுகிறது. இக் கோட்பாட்டை விளக்கியவர்களில் ஜே. பி. சே. (J. B. Say) முக்கியமானவராவார். மூலதனத்தைக் கடனாகப் பெறுபவர், அதனுடைய ஆக்கத் திறனால் அதிக வருமானத்தை ஈட்ட முடிகிறது. எனவே, அவர் மூலதனத்தைப் பயன்படுத்துவதற்காக வட்டி அளிக்கிறார். மீனவருக்கு வலையும், தையல்காரருக்குத் தையல் இயந்திரமும் மூலதனப்பொருள்களா கின்றன. அவற்றின்மூலம் அவர்கள் அதிக உற்பத்தியைச் செய்து வருமானத்தைப் பெருக்க முடிகிறது.

**குறைபாடுகள் :** 1. மூலதனம் இலவசமாகக் கிடைத்தால், அதற்கு வட்டி அளிக்கப்பட மாட்டாது. மூலதனமானது ஆக்கத் திறனோடு கிடைப்பருமையையும் கொண்டிருப்பதால்தான் வட்டி யைப் பெறுகிறது.

2. வட்டி வீதத்தை நிர்ணயிப்பது மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறனாகும். ஆக்கத்திறனால் மூலதனம் வட்டியைப் பெறுகிறது என்று பொதுப்படையாகக் கூறுவது தவறுனதாகும்.

3. மூலதனம் உழைப்பாளருடைய உற்பத்தித் திறனைப் பெருக்கி உற்பத்தியின் அளவைக் கூட்டுகிறது என்பது உண்மையே. ஆனால், எந்த அளவுக்கு உற்பத்தியின் அளவைக் கூட்ட மூலதனம் உதவுகிறது என்பதை அறிவது கடினம்.

4. இக் கோட்பாடு மூலதனத்தின் ஆக்கத் திறனுக்கேற்ப வட்டி அமையும் என்று கூறுகிறது. அது உண்மையானால் மூலதனத்தின் ஆக்கத் திறன் மாறும்போது வட்டிவீதத்திலும் மாற்றம் தோன்றவேண்டும். ஆனால், நடைமுறையில் மூலதனத்திற்கான வட்டி ஒரே மட்டத்திலேயே அமைகிறது.

5. இது மூலதனத்திற்கான தேவையை மட்டுமே கருதுகிறது; உழைப்பின் அளிப்பைப் புறக்கணிக்கிறது.

6. உற்பத்திப் பணிகளோடு நுகர்வுக்காகவும் கடன்கள் வாங்கப்படுகின்றன. நுகர்வுக்கான கடன்களுக்கும் வட்டி அளிக்கப் பெறுகின்றது.

7. இக் கோட்பாடு மூலதனத்திற்கு ஏன் வட்டி தரப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகின்றதே தவிர, எப்படி வட்டி நிர்ணயமாகின்றது என்பதை விளக்கவில்லை.

**(ii) துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு** (Abstinence or Waiting Theory)

இக் கோட்பாட்டைப் புனைந்தவர் சீனியர் என்பவராவார். இதன்படி, கடன் அளிப்பவர் மூலதனத்தின் துய்ப்பைத் தவிர்ப்பதற்காகவே வட்டி அளிக்கப்படுகிறது. அவர் மூலதனம் அல்லது செல்வத்தின் உடனடி நுகர்வைத் தவிர்க்கின்றார். கடனைத் தருபவர் மூலதனத்தின் பயனைப்பெற, கடனைத் திரும்பப் பெறும் வரை காத்திருக்கவேண்டியுள்ளது. இது மிகவும் பழைமையான வட்டிக் கோட்பாடாகும்.

இக் கோட்பாடு சேமிப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. மூலதனத்தைச் சேமிக்கத் துய்ப்பை ஒத்திவைக்கவேண்டும். நுகர்வை ஒத்திவைப்பதால் வசதிக் குறைவும் சிரமமும் தோன்றுகிறது. இவற்றிற்கு ஈடாகவே வட்டி அளிக்கப்படுகிறது. துய்ப்பைத் தவிர்க்கும்போது சில வசதிக் குறைவுகளை ஏற்றுத் தியாகத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. இது வட்டியை விளக்கும்போது, மூலதனத்தின் அளிப்பை மட்டுமே கருதுகிறது.

**குறைபாடுகள் :** *1.* செல்வந்தர்கள் சிரமத்தையும் வசதிக் குறைவையும் ஏற்காமல் சேமிப்பைச் செய்கிறார்கள். அதிக

வருவாய்ப் பெறும் பணக்காரர்கள் எவ்விதத் தியாகத்தையும் செய்யாமல் அதிக அளவு மூலதனத்தை எளிதில் சேமிக்க இயலும்.

2. வட்டி கிடைக்காவிட்டாலும்கூட சிலர் மூலதனத்தைச் சேமிக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். குக் கிராமங்களில் எழுத்தறிவில்லாத மக்களில் பலர் உண்டியல்களில் பணம் சேர்ப்பதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அவ் விதச் சேமிப்புப் பணத்திற்கு வட்டி கிடைப்பதில்லை.

3. இக் கோட்பாடு மூலதனத்திற்கான தேவையின் பக்கத் தைக் கருதாமல் புறக்கணிக்கிறது. இது சேமிப்பின் அளிப்பு நிலையை மட்டுமே ஆராய்கிறது. ஆனால், வட்டியானது மூல தனத்திற்கான தேவை, மூலதனத்தின் அளிப்பு ஆகிய இரண்டா லும் நிர்ணயமாகிறது.

4. துய்ப்புத் தவிர்ப்பினால் ஏற்படும் வசதிக் குறைவு எல் லோருக்கும் ஒரே அளவில் அமையாது. இக் கோட்பாட்டின்படி வசதிக் குறைவு நிலைகளில் வேறுபாடு இருக்கும்போது வட்டி வீதங்களிலும் வேறுபாடு இருக்கவேண்டும். ஆனால், நடைமுறை யில் ஒரே வட்டிவீதமே நிலவுகிறது.

5. நுகர்வைத் தவிர்ப்பதால் கிடைக்கும் மூலதனம் மூத லீடு செய்யப்பட்டால்தான் வட்டியைப் பெறும். பல காரணங் களுக்காகப் பதுக்கப்படும் கறுப்புப் பணம் வட்டியைப் பெறுவ தில்லை. எனவே, துய்ப்புத்த் தவிர்ப்பால் உருவாகும் சேமிப்பு, கடனாக அளிக்கப்பட்டால்தான், அதற்கு வட்டி கிடைக்கிறது.

### (iii) காலக்கழிவுக் கோட்பாடு (Agio Theory)

இக் கோட்பாட்டை ஜான் ரா (John Rae) என்பவர் 1834-ல் தந்தார். இதனை வளம்பெறச் செய்தவர் போம் பாவர்க் (Bohm Bawerk) ஆவார். ஃபிஷர் (Fisher) போன்றவர்களும் இது பற்றிய விளக்கங்களைத் தந்துள்ளனர். பொதுவாக, மக்கள் எதிர்கால நுகர்வைவிட நிகழ்கால நுகர் வையே பெரிதும் விரும்புகின்றனர். இதனால், நிகழ்காலத்தில் கிடைக்கும் பொருள்களின் நுகர்வே மிகுதியாக உள்ளது. இதற் கான காரணங்களையும் போம் பாவர்க் குறிப்பிடுகின்றார். எதிர் காலம் நிலையற்றதாக உள்ளது. நிகழ்கால விருப்பங்கள் எதிர்கால விருப்பங்களைவிடத் தீவிரமாக உணரப்படுகின்றன. நிகழ்கால உற்பத்திப் பொருள்கள் எதிர்கால உற்பத்திப் பொருள்களைவிட நுகர்வில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

'நாளை கிடைக்கும் பலாக் கனியை விட இன்று கிடைக்கும் களாக்கனியே சிறந்தது', 'புதரில் இருக்கும் இரு பறவைகளைவிடக் கையில் இருக்கும் ஒரு பறவையே விரும்பத்தக்கது' போன்ற பழ மொழிகளும் இக் கோட்பாட்டின் உட்கருத்தை உணர்த்து கின்றன.

பணத்தின் மதிப்பு எதிர்காலத்தில் குறையக்கூடும். மனிதன் பிறக்கும்போது எதையும் கொண்டு வருவதில்லை; இறக்கும்போது எதையும் கொண்டு செல்வதுமில்லை. இருக்கும்போது எல்லா வற்றையும் அனுபவிப்பதே மனிதனின் நோக்கமாக அமைகிறது. இதன் காரணமாக நிகழ்கால நுகர்விலேயே அவன் அதிக அக்கறை யும் விருப்பமும் கவனமும் கொண்டுள்ளான்.

தற்போதைய நுகர்வைத் தவிர்த்து வருங்காலத்தில் நுகர் வைச் செய்யுமாறு தூண்டுவதற்காகவே மூலதனத்திற்கு வட்டி தரப்படுகிறது.

**குறைபாடுகள்** : 1. இக் கோட்பாடு கடனின் **அளிப்பை** மட்டுமே குறிப்பிடுகிறது; கடனுனது ஏன் வாங்கப்படுகிறது என்ற கடனின் தேவையைப் பற்றி விளக்கவில்லை.

2. நுகர்வை எதிர்காலத்திற்குத் தள்ளி வைப்பதன்மூலம் தான் சேமிப்பு உருவாகவேண்டுமென்ற அவசியமில்லை. மக்களின் வருமானமும் வாழ்க்கைத் தரமும் உயரும்போது சேமிப்பைச் செய்வது எளிதாகிறது என்று கெயின்ஸ் குறிப்பிடுகின்றார்.

3. எதிர்காலத்தின் நன்மையைப் பெறவேண்டுமென்ற நோக்கிலேயே பலரும் சேமிப்பில் ஈடுபடுகின்றனர். எதிர்காலத்தில் பணத்தின் மதிப்புக் குறையுமென்பதையோ, எதிர்காலம் உறுதியற்றது என்பதையோ அவர்கள் உணர்ந்திருப்பதில்லை.

### (iv) கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory)

காலக் கழிவுக் கோட்பாட்டில் சில திருத்தங்களைச் செய்து ஃபிஷர் கால விருப்பக் கோட்பாட்டை உருவாக்கினார். எதிர் காலத்தைவிட நிகழ்காலத்திலேயே மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை அடிப்படையாகக் கொண்டே இக் கோட்பாடு விளக்கப்படுகிறது. உடனடியாக நுகர்வில் ஈடுபடுவது அல்லது நுகர்வைச் சிலகாலம் தள்ளிப்போடுவது பின்வரும் காரணிகளைச் சார்ந்து அமையும் :

(1) தனி மனித வருமானம்:

(2) காலப்போக்கில் மாறுகின்ற வருமானப் பங்கீட்டு முறை;

(3) எதிர்காலத்தில் பணத்திற்கு இருக்கக்கூடிய மதிப்பு;

(4) தனி மனித இயல்பு.

அதிக வருமானத்தைப் பெறுபவர்கள் பல விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் எதிர்காலத்திற்கான சேமிப்பைச் செய்கிறார்கள். எதிர்காலச் சேமிப்பிற்காக அவர்கள் நிகழ்கால நுகர்வைக் குறைக்கத் தேவையில்லை. இதற்கு மாறாக, குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் இன்றியமையாத தேவைகளையும் முழுமையாக நிறைவு செய்துகொள்ள முடிவதில்லை. எனவே, அவர்களுடைய எதிர்காலத்திற்கான சேமிப்பானது மிகக் குறைவாகவே இருக்கும்.

நிகழ்காலத்தைவிட எதிர்காலத்தில் வருமானம் பெருகுவதற்கான வாய்ப்புகள் இருந்தால், நிகழ்கால நுகர்வு அதிகரித்து சேமிப்புக் குறையும். எதிர்கால வருமானம் குறையுமெனத் தோன்றும்போது பலரும் சேமிக்கவே விரும்புவர்.

எதிர்காலத்தில் நன்மையைப் பெறப் பலரும் சேமிக்கின்றனர். வருங்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்கள் சேமிப்பைச் செய்வதில்லை.

இக் கோட்பாடு கால விருப்பத்தை வெல்வதற்காகக் கொடுக்கப்படும் ஊதியமே வட்டி என்று குறிப்பிடுகின்றது.

**குறைபாடுகள் :** 1. கால விருப்பக் கோட்பாடு காலக் கழிவுக் கோட்பாட்டைப் போன்றதே. அதன் குறைபாடுகள் இதற்கும் பொருந்துகின்றன.

2. இக் கோட்பாடு எதற்காக வட்டி தரப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது; ஆனால், எவ்வாறு வட்டி நிர்ணயமாகிறது என்பதை விளக்கவில்லை.

3. இக் கோட்பாட்டில் கடனின் அளிப்பு மட்டுமே ஆராயப்பட்டுக் கடனிற்கான தேவை புறக்கணிக்கப்படுகிறது.

இதுவரை நாம் கண்ட கோட்பாடுகள் மூலதனத்திற்கு வட்டி எதற்காகக் கொடுக்கப்படுகிறது என்பதையே விளக்கின. இனி விளக்க இருக்கும் கோட்பாடுகளின்மூலம் வட்டிவீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறியலாம்.

**(v) இறுதிநிலை ஆக்கத்தின் கோட்பாடு** (Marginal Productivity Theory)

இக் கோட்பாடு மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனுக் கேற்ப வட்டி அமையுமென்று கூறுகிறது. மிகுதியான மூலதனம் அதிக உற்பத்தியைத் தருகிறது. ஆனால், அளவுக்கு அதிகமான மூலதனம் குறைந்தளவு ஆக்கத்திறனையே பெற்றிருக்கும். குறைந்துசெல் விளைவு விதி செயல்படுவதே இதற்குக் காரண மாகும். இறுதிநிலை ஆக்கத் திறனைவிட வட்டிவீதம் குறைவாக இருக்கும்போது, மேலும் அதிக மூலதனத்தைக் கடனாகப் பெற்று முதலீடு செய்வது இலாபகரமாக அமையும். தொழில் அமைப் பாளர், மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனும் வட்டியும் சமமாகும் வரை முதலீட்டைப் பெருக்கலாம். மூலதனத்திற்கான தேவை அதனுடைய இறுதிநிலை ஆக்கத்திறனுக்கேற்ப இருக்கும்.

**குறைபாடுகள் :** 1. இக் கோட்பாடு வட்டியை விளக்கும் போது, மூலதனத்தின் தேவைக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் தருகின்றது. வட்டி நிர்ணயத்தில் மூலதனத்தின் அளிப்பைக் கருது வதும் அவசியமாகும்.

2, எல்லா ஆக்கக் காரணிகளும் இணைந்து செயல்பட்டால் தான் உற்பத்தி நடைபெறுகிறது. மூலதனத்தின் ஆக்கத்திறன் பிற ஆக்கக் காரணிகளுக்கேற்பவும் அமையும்.

3. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை அளத்தல் எளிதல்ல.

4. பகிர்வுப் பொதுக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிற குறைபாடுகளும் இதற்குப் பொருந்தும்.

**(vi) தேவை-அளிப்புக் கோட்பாடு** (Demand and Supply Theory)

தொன்மைப் பொருளாதார நிபுணர்களால் உருவாக்கப் பட்ட இக் கோட்பாடு இன்றும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இக் கோட்பாட்டை விளக்கியவர்கள் மார்ஷல், பிகு, டாஸிக், நைட், வால்ரஸ் போன்றோராவர். இதைச் சேமிப்பு–முதலீட்டுக் கோட்பாடு' (Saving and Investment Theory) என்றும் அழைக்கலாம். இக் கோட்பாட்டின்படி, மூலதனத்தின் தேவை யும் அளிப்பும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கின்றன.

மூலதனத்தின் பயனைப் பெறுவதற்காக அளிக்கப்படும் விலையே வட்டியாகும். மூலதனத்திற்கான தேவை, முதலீட்டு

அளவுக்கு ஏற்பவும், மூலதனத்தின் அளிப்பு, சேமிப்பு அளவுக்கு ஏற்பவும் அமைகின்றன.


**மூலதனத்திற்கான தேவை :** மூலதனமானது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் தேவைப்படுகிறது. மூலதனம் உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பதால் உற்பத்தியாளர்கள் கடன் பெறுகின்றனர். மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறனும் வட்டிவீதமும் சமமாக அமையும் வரை உற்பத்தியாளர்கள் கடனைப் பெற்று முதலீட்டைக் கூட்டுகின்றனர். வெவ்வேறு தொழில்களுக்கு இடையே மூலதனத்தின் ஆக்கத்திறன் வேறுபடக்கூடும். தொழில் அமைப்பாளர்கள் வட்டிவீதம் குறைவாக இருந்தால் முதலீட்டைப் பெருக்குகிறார்கள்; வட்டிவீதம் உயர்வாக இருந்தால் முதலீட்டைச் சுருக்குகிறார்கள். இதன் காரணமாக மூலதனத்திற்கான தேவை வளைகோடு இடது புறத்திலிருந்து வலது புறமாக, மேலிருந்து கீழ் நோக்கிச் சரிவாக அமைகிறது.

**மூலதனத்தின் அளிப்பு :** மூலதனத்தின் அளிப்பு, சேமிப்பைச் சார்ந்து இருக்கின்றது. வருமானத்தைப் பெறுபவர்கள் நுகர்வைக் கட்டுப்படுத்திப் பணத்தைச் சேமிக்கின்றனர். இதனால், சேமிப்பாளர் சில வசதிக் குறைவுகளை ஏற்கவேண்டியுள்ளது. வட்டியானது சேமிக்கத் தூண்டுவதற்கான கருவியாகச் செயல்படுகிறது. உயர்வான வட்டி வீதத்தில் சேமிப்பின் அளவு அதிகமாகவும், தாழ்வான வட்டிவீதத்தில் சேமிப்பின் அளவு குறைவாகவும் அமையும். இதனால், மூலதனத்தின் அளிப்பு வளைகோடு இடமிருந்து வலப்புறமாக, கீழிருந்து மேல்நோக்கி உயர்ந்து செல்கிறது. வருமானம், வாழ்க்கைத்தரம், குடும்பப் பற்று, வருங்கால நோக்கு, அரசின் கொள்கைகள் போன்றவை சேமிப்பின் அளவைத் தீர்மானிக்கின்றன.

சேமிக்கும் விருப்பம், சேமிக்கும் திறன், சேமிப்பிற்கான வசதிகள் ஆகியவற்றிற்கேற்ப ஒரு நாட்டில் மூலதனத் திரட்சி ஏற்படும். வட்டியின் தேவை-அளிப்புக் கோட்பாட்டைப் பின் வரும் வரைபடத்தின் (படம் 33) மூலமும் விளக்கலாம்.

வரைபடத்தின் OX அச்சில் மூலதனத்திற்கான தேவையும், மூலதனத்தின் அளிப்பும் அளவிடப்படுகின்றன. OY அச்சில் வட்டிவீதம் குறிக்கப்பட்டுள்ளது. II முதலீட்டு (மூலதனத்திற்கான தேவை) வளைகோடாகவும், SS சேமிப்பு (மூலதனத்தின் அளிப்பு) வளைகோடாகவும் அமைகின்றன. P என்ற புள்ளியில்

மூலதனத்திற்கான தேவையும், மூலதனத்தின் அளிப்பும் சமமாக உள்ளன. அச் சமநிலையின் வட்டிவீதம் OR ஆகும். வட்டிவீதம் $OR_2$ என்ற குறைந்த நிலையில் அமைந்தால் சமநிலை ஏற்படாது. ஏனெனில், $OR_2$ வட்டிவீதத்தில் மூலதனத்திற்கான தேவை $D_1R_2$ ஆகவும், மூலதனத்தின் அளிப்பு $R_2S_2$ ஆகவும் உள்ளன.




படம் 33

மூலதனத்தின் தேவை, அளிப்பைக்காட்டிலும் அதிகமாக இருப்பதால் வட்டிவீதம் உயரும். நீண்டகாலத்தில் அது OR ஆக அமையும். வட்டிவீதம் $OR_1$ ஆக இருந்தாலும் சமநிலைத் தோன்றுது. அவ் வட்டி வீதத்தில் மூலதனத்திற்கான தேவை $DR_1$ ஆகவும், மூலதனத்தின் அளிப்பு, $R_1S_1$ ஆகவும் இருக்கின்றன. மூலதனத்தின் அளிப்பு, தேவையைக் காட்டிலும், அதிகமாக இருப்பதால் வட்டிவீதம் குறையும். நீண்டகாலச் சமநிலையில் அது OR ஆக அமைகிறது.

**குறைபாடுகள் :** *1.* தொன்மைப் பொருளாதார நிபுணர்களால் வரையப்பட்ட வட்டியின் தேவை-அளிப்புக் கோட்

பாடு' முழு வேலை வாய்ப்பு' (full employment) நிலவுமென்ற தவறான எடுகோளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

2. இக் கோட்பாடு முதலீட்டினால் வருமானத்திலும் சேமிப்பிலும் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராயவில்லை. வட்டி வீதம் உயரும்போதெல்லாம் சேமிப்பு அதிகரிக்கும் என்று கருதுவது தவறு. ஏனெனில், வட்டி உயரும்போது முதலீடு குறைந்து வருமானமும் சேமிப்பும் தாழ்வடைகின்றன. வேலைவாய்ப்புகளும் குறைகின்றன.

3. வட்டிவீதத்தோடு 'காலவிருப்பம்', 'நீர்மை விருப்பம்' போன்றவையும் சேமிப்பின் அளவோடு தொடர்பு கொண்டுள்ளன.

4. வட்டிவீதம் குறையும்போதெல்லாம் முதலீடு அதிகரிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. தொழில் மந்தக் காலத்தில் வட்டிவீதம் குறைவாக இருப்பினும், முதலீடு பெருகாது.

5. இது நுகர்வுக்காக வாங்கப்பெறும் கடனைப்பற்றி விளக்கம் தரவில்லை.

6. வங்கிகளின் கடன் ஆக்கம் பணத்தின் அளிப்பையும், வட்டிவீதத்தையும் மாற்றும் ஆற்றல் கொண்டது. வட்டியின் தேவை-அளிப்புக் கோட்பாடு இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை.

### (vii) கடன் நிதிக் கோட்பாடு (Loanable Funds Theory)

இக் கோட்பாட்டை முதலில் தந்தவர் விக்செல் (Wicksell) ஆவார். இதை மேலும் விளக்கமாக ஆராய்ந்தவர்கள் பெர்டில் ஓலின், குன்னர் மிர்டால் போன்றவர்களாவர். இக் கோட்பாட்டின்படி கடன் நிதிக்கான தேவையும், கடன் நிதியின் அளிப்பும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கின்றன. குறிப்பிட்ட வட்டிவீதத்தில் கடன் அளிக்கவும், கடன் பெறவும் தயாராக உள்ள பணத்தின் அளவே கடன் நிதியாகும்.

நுகர்வு, ரொக்க இருப்பு, முதலீடு ஆகியவற்றினால் கடன் நிதிக்கான தேவை தோன்றுகிறது. கடன் நிதியின் அளிப்பானது சேமிப்பு, வங்கிக் கடன், சேமிப்புக் கலைப்பு (dishoarding), முதலீட்டுக் கலைப்பு ஆகியவற்றிற்கு ஏற்ப அமைகிறது.

**குறைபாடுகள்** : 'புதிய தொன்மைக் கோட்பாடு' (Neo-classical theory) என அழைக்கப்படும் கடன் நிதிக் கோட்பாட்டில் சில குறைபாடுகளும் உள்ளன.

1. சேமிப்பு, முதலீடு ஆகிய காரணிகளோடு ரொக்க விருப்பம், வங்கிக் கடன் போன்ற பணவியல் காரணிகளை இணைத்து விளக்கியிருக்கும் முறையைச் சிலர் தவறானது என்கின்றனர்.

2. இக் கோட்பாடு சில குறைபாடான எடுகோள்களின் மீது எழுப்பப்பட்டுள்ளது. இது சமூகத்தின் வருமானம் நிலையானது என்றும், முதலீடு வருமானத்தைப் பாதிப்பதில்லை என்றும் தவறாகக் கருதுகிறது.

3. குறைவான வட்டியிலோ அல்லது வட்டி இல்லாமலோ சிலர் அதிக அளவுச் சேமிப்பில் ஈடுபடுவதை இது விளக்கவில்லை.

4. வட்டி நிர்ணயம் பற்றிய தெளிவான விளக்கத்தை இது தரவில்லை.

### (viii) நீர்மை விருப்பக் கோட்பாடு (Liquidity Preference Theory)

பணவியல் காரணிகளின் அடிப்படையில் இக் கோட்பாட்டை உருவாக்கியவர் கெயின்ஸ் (Keynes) ஆவார். பிற வட்டி நிர்ணயக் கோட்பாடுகளுக்கு மறுப்புத் தெரிவித்த அவர் முக்கியமான இக் கோட்பாட்டைத் தந்துள்ளார். கெயின்ஸ் கூறுவது படி, வட்டியானது துய்ப்புத் தவிர்ப்புக்காகவோ, கால விருப்பத்திற்காகவோ தரப்படுவதில்லை. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனும் வட்டியைத் தீர்மானிப்பதில்லை. வட்டியைச் சேமிப்புக்கான சன்மானமாகவும் கருத இயலாது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 'நீர்மை விருப்பத்தை' விட்டுக் கொடுப்பதற்கான சன்மானமாக வட்டி அமைகிறது என்று கெயின்ஸ் குறிப்பிடுகிறார்.

பணத்தை ரொக்க இருப்பாக வைத்திருப்பதற்கான விருப்பமே நீர்மை விருப்பமாகும். எல்லோரும் தங்களுடைய வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்திருக்கவேண்டியது அவசியமாகிறது. பணமானது நீர்மைத் தன்மையுள்ள சொத்தாகும். பணத்தை வைத்திருப்பவர்கள் எதையும் செய்யலாம். பணத்தை ரொக்கமாக வைத்திருக்கும்போது பல நன்மைகளைப் பெறமுடிகிறது. நீர்மை விருப்பத்திற்கான மூன்று காரணங்களைக் கெயின்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். பணத்திற்கான தேவைக்குப் பின்வரும் நோக்கங்கள் காரணங்களாக இருக்கின்றன.

**1. பேர நோக்கம்** (Transactions Motive) : தினசரிச் செலவுகளை ஈடுகட்டப் பணத்தை ரொக்கமாக வைத்திருக்க வேண்டியுள்ளது. தனியார் பலரும் குறிப்பிட்ட காலத்திற் கொரு முறையே வருமானத்தைப் பெறுகின்றனர். உதாரணத்

திற்கு மாத ஊதியம் பெறுபவர்களை எடுத்துக்கொள்ளலாம். ஊதியம் வாங்குவது மாதத்தில் ஒருநாள்தான் என்றாலும், மாதத்திலுள்ள எல்லா நாள்களிலும் அவர்கள் பலவிதமான செலவுகளைச் செய்கிறார்கள். இதுபோன்றே தொழில் நிறுவனங்களும் பல செலவுகளைத் தினந்தோறும் செய்கின்றன. அச் செலவுகளுக்காக அவையும் பணத்தை ரொக்கமாகக் கொண்டுள்ளன.

**2. முன்னெச்சரிக்கை நோக்கம்** (Precautionary Motive): எதிர்பாராத செலவுகள் தோன்றக்கூடும் என்ற முன்னெச்சரிக்கை நோக்கத்திற்காகவும் பணம் ரொக்கமாக வைத்துக்கொள்ளப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக வைத்துக்கொள்ளப்படும் ரொக்கப் பணம் நபருக்கு நபர், தொழிலுக்குத் தொழில், காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. ரொக்கப் பணம் இல்லாவிட்டால் அவசரச் செலவுகளைச் சமாளிக்க இயலாது.


**3. ஊக நோக்கம்** (Speculative Motive) : பணமானது ஊக நோக்கத்திற்காகவும் ரொக்கக் கையிருப்பாக இருக்கிறது. எதிர்காலத்தில் வட்டி உயரும்போது முதலீடு செய்யலாம் என்ற எண்ணத்தில் பலர் பணத்தை ரொக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தொழில் நிறுவனப் பங்குகளின் விலை எதிர்காலத்தில் குறையுமென்று ஊகிக்கப்பட்டால் அப் பங்குகள் விற்கப்பட்டு பணமானது நீர்மை நிலையில் இருப்பாக அமைகிறது. கடன் பத்திரங்களின் விலை உயருமென எதிர்பார்க்கப்பட்டால், அவை விற்கப்படுவதில்லை. வருங்காலத்தில் மூலதனத்திற்கான வட்டி குறையுமென்று கருதப்பட்டால் பங்குகள், கடன் பத்திரங்கள் போன்றவற்றை வாங்குவதில் பணம் முதலீடாக்கப்படுகிறது. இவ்வாறு இலாப நோக்கத்தோடு முதலீடு செய்வதற்காக ரொக்கப் பணத்தை விரும்புவதே ஊக நோக்கம் ஆகும்.

இவற்றோடு வேறுசில நோக்கங்களுக்காகவும் பணம் ரொக்கமாக வைத்திருக்கப்படலாம். உதாரணமாகப் பொருளாதார மந்த நிலையில் பொருள்களின் விலைகள் குறைகின்றன. மேலும் விலைகள் குறையக்கூடும் என்ற எண்ணத்தில் சிலர் ரொக்கப் பணத்தைக் கையிருப்பாகக் கொள்கின்றனர்; சிலர் வசதிக்காகப் பணத்தை ரொக்கமாகக் கொண்டுள்ளனர். வேறு சிலர் வாணிக விரிவாக்கத்திற்காக ரொக்கப் பணத்தை வைத்திருக்கலாம்.

இந்த எல்லா நோக்கங்களிலும் ஊக நோக்கமே முக்கியமானது. ஏனெனில், அதுவே வட்டிவீதத்தை மாற்றக்கூடிய அதிகத் திறனைக் கொண்டுள்ளது.

பணத்தின் அளிப்பை ஓர் அரசு அதனுடைய மத்திய வங்கியால் கட்டுப்படுத்த முடியும். மக்கள் கையிலுள்ள பணத்தையே பணத்தின் அளிப்புக் குறிக்கின்றது. மத்திய வங்கி வட்டிவீதத்தை மாற்றியமைப்பதன்மூலம் நீர்மை விருப்பத்தைக் கட்டுப்படுத்தலாம்.

பணத் தேவை நீர்மை விருப்பத்திற்கேற்ப அமையும். வங்கிப் பணமும், புழக்கத்திலுள்ள சட்டமுறைப் பணமும், பணத்தின் அளிப்பை நிர்ணயிக்கின்றன. வட்டிவீதம் உயர்வாக இருக்கும்போது பணத்திற்கான தேவை குறைவாகவும், வட்டிவீதம் குறைவாக இருக்கும்போது பணத்திற்கான தேவை அதிகமாகவும் அமையும். இதைக் கீழ்க்காணும் வரைபடம் உணர்த்தும்.





படம் 34

LP நீர்மை விருப்ப வளைகோடு. முதல் நிலையில் வட்டி வீதம் OR ஆக இருக்கையில் பணத்திற்கான தேவை OM ஆக அமைகிறது. வட்டி, $OR_1$ ஆக உயரும்போது பணத் தேவை

$OM_1$ ஆகக் குறைகிறது. வட்டியானது $OR_2$ ஆகக் குறையும் போது பணத் தேவை $OM_2$ ஆக விரிகிறது.

நீர்மை விருப்பம் நிலையாக இருக்கும்போது பண அளிப்பு அதிகரித்தால் வட்டி குறையும்; பண அளிப்புக் குறைந்தால் வட்டி உயரும். இதை விளக்கவும் முன்கண்ட வரைபடத்தையே பயன் படுத்தலாம். நீர்மை விருப்பத்தில் மாற்றம் இல்லாமையால், LP என்ற நீர்மை விருப்ப வளைகோடு ஒன்று மட்டுமே காட்டப் பட்டுள்ளது. பணத்தின் அளிப்பு OM ஆக இருக்கும்போது வட்டி வீதம் OR ஆகும். அதன் அளிப்பு $OM_2$ ஆகக் கூடும்போது வட்டி $OR_2$ ஆகக் குறைகிறது. இதற்கு மாறுகப் பணத்தின் அளிப்பு $OM_1$ ஆகக் குறைகிறது என்று கொண்டால், வட்டிவீதம் $OR_1$ ஆக உயரும்.


நீர்மை விருப்பத்தில் மாற்றங்கள் தோன்றக்கூடும். பணத் தின் அளிப்பு நிலையாக இருக்கும்போது, நீர்மை விருப்பம் குறைந் தால் வட்டி குறையும்; நீர்மை விருப்பம் உயர்ந்தால் வட்டி அதி கரிக்கும். இதைப் பின்வரும் வரைபடத்தால் விளக்கலாம்.




படம் 35

பணத்தின் அளிப்பு நிலையாக உள்ளதை SQ கோடு காட்டுகின்றது. முதல் நிலையில் நீர்மை விருப்பக்கோடு, LP ஆக இருக்கும்போது, வட்டி OR ஆகும். நீர்மை விருப்பம் $L_2P_2$ ஆகக் குறையும்போது, வட்டி $OR_2$ ஆகத் தாழ்வடைகிறது. நீர்மை விருப்பம் $L_1P_1$ ஆக அதிகரிக்கிறது என்று வைத்துக்கொண்டால், வட்டியானது $OR_1$ ஆக உயரும்.

நீர்மை விருப்பத்தின் நெகிழ்ச்சி நிலைக்கேற்பவும் வட்டியில் மாற்றம் ஏற்படும். நீர்மை விருப்பம் குறைவான நெகிழ்வுடையதாக இருந்து பண அளிப்புக் கூடும்போது வட்டி அதிகளவில் குறையும். நீர்மை விருப்பம் அதிக நெகிழ்வுடையதாக அமைந்து பண அளிப்புக் கூடும்போது வட்டி குறையும். இதைக் கீழ்க் காணும் வரைபடங்கள் விளக்குகின்றன.




படம் 36

LP கோடு நெகிழ்ச்சி குறைந்த நீர்மை விருப்பத்தையும், $L_1P_1$ கோடு நெகிழ்ச்சி நிறைந்த நீர்மை விருப்பத்தையும் குறிக்கின்றன. இரு படங்களிலும் பணத்தின் அளிப்பு OQ என்ற அளவிலிருந்து $OQ_1$ அளவுக்கு ஒரே அளவிலேயே அதிகரிக்கிறது. முதல் வரைபடத்தில் நீர்மை விருப்பம் குறைந்த நெகிழ்ச்சியுடையதாக (LP) இருப்பதால், பண அளிப்பு அதிகரிக்கும் போது, வட்டி OR என்ற அளவிலிருந்து $OR_1$ என்ற அளவுக்கு மிகுதியாகக் குறைகிறது. இரண்டாவது வரைபடத்தில் நீர்மை விருப்பம் அதிக நெகிழ்ச்சியுடையதாக ($L_1P_1$) இருப்பதால்,

பண அளிப்புக் கூடும்போது, வட்டியானது $OR_2$ என்ற நிலையி லிருந்து $OR_3$ என்ற நிலைக்குக் குறைந்தளவில் தாழ்வடைகிறது.

**குறைபாடுகள் :** 1. இராபர்ட்சன் கருத்துப்படி, வங்கிக் கடன் உற்பத்தி நீர்மை விருப்பத்திற்கேற்ப அமைந்தாலும், தனி யார் அளிக்கும் பணமானது இறுதிநிலைக்கால விருப்பத்தையும் இறுதிநிலை நீர்மை விருப்பத்தையும் பொறுத்து அமையும்.

2. பேரம், முன்னெச்சரிக்கை, ஊகம் ஆகிய நோக்கங் களுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு ரொக்கமாக வைத்துக் கொள்ளப்படும் என்பதைக் கணக்கிடுவது கடினம் என்று ஹான்சென் கூறுகின்றார். மேலும், இவற்றிற்கான பணம் வரு மான மட்டத்திற்கேற்ப வேறுபடும்.

3. கெயின்ஸின் கோட்பாட்டில் மூலதனத்தின் உண்மைச் சக்திகளான அதன் சேமிப்பும் ஆக்கத் திறனும் கருதப்படவில்லை.

4. இது பணவியல் சார்பான கோட்பாடாக உள்ளது. வட்டியை நிர்ணயிக்கும் 'காலவிருப்பம்', மூலதனத்தின் ஆக்கத் திறன் போன்ற உண்மையான காரணிகள் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

5. வங்கிகளின் சேமிப்புக் கணக்கிலோ, நடப்புக் கணக் கிலோ வைக்கப்பட்டுள்ள பணம் நீர்மைத் தன்மை கொண்டது. அப் பணத்தை தேவையானபோது எடுத்துக்கொள்ளலாம். அது வட்டியையும் பெறுகிறது.

6. பணத்தை ரொக்கமாக வைத்திருப்பதற்கான மூன்று நோக்கங்களையே கெயின்ஸ் குறிப்பிடுகிறார். வேறு பல காரணங் களுக்காகவும் பணம் ரொக்கமாக வைத்திருக்கப்படலாம்.

7. இக் கோட்பாட்டின்படி, பண அளிப்பைக் கூட்டி வட்டி வீதத்தைக் குறைக்கலாம். ஆனால், பண அளிப்புக் கூடும்போது நீர்மை விருப்பமும் அதிகரித்தால் வட்டிவீதம் குறையாது.

8. ரொக்கப் பணத்தில் கடன் பணத்தைச் சேர்க்க வேண் டுமா என்பது தெளிவுற விளக்கப்படவில்லை.

## IV. வட்டி வீதங்களில் வேறுபாடு

பணச் சந்தையில் சர்வாதீனப் போட்டி நிலவுவதால், கடனுக்கான வட்டிவீதங்கள் வேறுபடுகின்றன. வட்டி வீதங் களின் வேறுபாட்டிற்கான காரணங்களைப் பின்வருமாறு குறிப் பிடலாம்:

### 1. மூலதனப் பெயர்ச்சி

பொதுவாக மக்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்கு அருகாமையிலேயே முதலீடுசெய்ய விரும்புகின்றனர். மூலதனத்தின் குறைந்தளவுப் பெயர்ச்சித் தன்மையால், அதனுடைய தேவையும் அளிப்பும் சமமாக அமைவதில்லை. இதன் காரணமாக வட்டிவீதங்களில் வேறுபாடு தோன்றலாம்.

### 2. கால அளவு

குறுகியகாலக் கடனுக்குக் குறைந்த வட்டியும், நீண்டகாலக் கடனுக்கு உயர்ந்த வட்டியும் தரப்படுகிறது.

### 3. கடன் அளவு

அதிகளவுக் கடனுக்குக் குறைந்த வட்டியும், குறைந்தளவுக் கடனுக்கு உயர்ந்த வட்டியும் அளிக்கப்படுகின்றது.

### 4. வெவ்வேறு வகைக் கடன்கள்

வேளாண்மை, தொழில், வாணிகம் போன்ற துறைகளுக்காக வெவ்வேறுவகைக் கடன்கள் தரப்படுவதாலும் வட்டிவீதங்கள் வேறுபடுகின்றன. கிராம-நகர லேவாதேவிக்காரர்கள், நிலக்கிழார்கள் ஆகியோரோடு வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு ஆகியவையும் கடன்களைத் தருகின்றன. வீடு, நிலம், நகை, பத்திரம் போன்றவற்றின் அடமானத்திற்கும் கடன்கள் தரப்படுகின்றன. மாறுபட்ட காரணங்களுக்காகப் பல்வேறு முறைகளில் கடன்கள் அளிக்கப்படுவதாலும் வட்டிவீதங்களில் வேறுபாடு உள்ளது.

### 5. தனிப்பட்டவர்களின் செல்வாக்கு

சிலர் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திக் குறைந்த வட்டிவீதத்தில் கடன் பெறுகின்றனர். சமுதாயத்தில் செல்வாக்கைப் பெற்றில்லாதவர்கள் உயர்ந்த வட்டி வீதத்திலேயே கடன்பெற வேண்டியிருக்கிறது.

### 6. மூலதனத்தின் உற்பத்தித் திறன்

மூலதனத்தின் அதிக உற்பத்தித் திறன் உயர்ந்த வட்டி வீதத்தையும், குறைந்த உற்பத்தித் திறன் தாழ்ந்த வட்டி வீதத்தையும் தருகின்றன.

### 7. கடன் மீட்சி

கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவது எளிதாக இருக்குமெனக் கருதப்பட்டால், கடனானது குறைந்த வட்டி வீதத்தில் தரப்படுகிறது. கடன் மீட்சி கடினமாக இருக்குமென எண்ணப் பெற்றால், உயர்வட்டிவீதம் வசூலிக்கப்படுகிறது.

இவ்விதமான பல காரணங்களால் பணச் சந்தையில் ஒரே வட்டிவீதம் நிலவாமல், வெவ்வேறு வட்டிவீதங்கள் அமைந்துள்ளன.

# 35. இலாபம்

(Profit)

## I. விளக்கம்

அமைப்புப் பணியைச் செய்கின்ற தொழில் முயல்வோருக்குக் கிடைக்கும் சன்மானமே இலாபமாகும். இடர் தாங்குதல், உறுதியின்மை தாங்குதல் போன்ற சிறப்புப் பணிகளுக்காகத் தொழில் அமைப்பாளர் இலாபத்தைப் பெறுகிறார். சாதாரணச் சொல் வழக்கில் உற்பத்திச் செலவுக்கும், விற்பனையால் கிடைக்கும் வருவாய்க்கும் உள்ள வேறுபாடாகிய மொத்த இலாபமே இலாபமெனக் கருதப்படுகிறது.

இலாபத்தைத் தொழில் அமைப்பாளருடைய நிர்வாகத்திற்கான கூலி என்றும் கூறலாம். உற்பத்தியைப் பெருக்கத் தூண்டுவது இலாபமேயாகும். வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகிய துறைகளைச் செழிக்கச் செய்வதில் இலாபம் முக்கிய நிலையைக் கொண்டுள்ளது. ஓர் உற்பத்தி நிறுவனத்தின் மொத்த வருவாயிலிருந்து நிலத்திற்கான வாரம், உழைப்பிற்கான ஊதியம், மூலதனத்திற்கான வட்டி ஆகிய செலவுகள் கழிக்கப்பட்டு எஞ்சியிருப்பது இலாபமாகப் பெறப்படுகிறது.

தொழில் அமைப்பாளர் பெறும் சன்மானமாகிய இலாபம், பிற ஆக்கக் காரணிகள் பெறக்கூடிய சன்மானங்களினின்றும் பின்வரும் நிலைகளில் வேறுபடுகிறது:

1. இலாபமானது உறுதித் தன்மை கொண்ட வருவாய் அல்ல. அது ஒப்பந்த ஊதியமாகவும் அமையவில்லை. பிற காரணிகளுக்கான ஊதியங்களில் உறுதித் தன்மை உள்ளது. அவற்றிற்கான **ஊதியங்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையிலானவை.**

2. பிற ஆக்கக் காரணிகள் பெறும் ஊதியங்களைப் போலன்றி, இலாபத்தின் அளவில் அதிக ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன.

3. வாரம், கூலி, வட்டி ஆகியவை எதிர்மறையில் அமைவ தில்லை. ஆனால், தொழில் அமைப்பாளர் நட்டத்தையும் ஏற்க வேண்டியுள்ளது.

## II. மொத்த இலாபமும் நிகர இலாபமும் (Gross Profit and Net Profit)

மொத்த இலாபத்தில் நிகர இலாபமும் ஓர் இனமாக அடங்குகிறது. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள, மொத்த இலாபத்தில் அடங்குகின்ற பின்வரும் இனங் களைப்பற்றி அறிவது அவசியமாகிறது.

### 1. தொழில் அமைப்பாளருடைய சொந்த மூலதனத்திற்கான வட்டி

மூலதனத்தைப் பெற்றுள்ள ஒருவர் பிற துறைகளில் அதை முதலீடு செய்து வட்டியைப் பெறலாம். அம் மூலதனத்தை அவர் தன்னுடைய தொழிலிலேயே முதலீடாக்கும்போது, அதற்கான வட்டியும் மொத்த இலாபத்தில் அடங்குகிறது.

### 2. தொழில் அமைப்பாளருடைய நிலத்திற்கான வாரம், உழைப்பிற்கான ஊதியம்

தொழில் முயல்வோர் தங்களுடைய சொந்த நிலத்திலேயே தொழிலைச் செய்யக்கூடும். உற்பத்தி, நிர்வாகம், விற்பனை ஆகிய வற்றிற்கான பணிகளையும் அவர்களே ஆற்றக்கூடும். மொத்த இலாபத்தில் தொழில் அமைப்பாளருடைய சொந்த நிலத்திற் கான வாரமும், அவர்களுடைய உழைப்பிற்கான ஊதியமும் அடங்குகின்றன.

### 3. தேய்மானச் செலவுகளும் பிற செலவுகளும்

உற்பத்தியானது தொடர்ந்து நடைபெற இயந்திரங்களின் பழுதுபட்ட பாகங்கள் மாற்றப்பட்டுப் புதுப்பிக்கப்படவேண்டும். தொழிற்சாலைக் கட்டடம், இயந்திரங்கள், மூலப்பொருள்கள், உற்பத்தி முடிந்த பொருள்கள் போன்றவை காப்பீடு செய்யப் படுவதுண்டு. இவற்றிற்கான செலவுகளும் மொத்த இலாபத்தில் சேர்ந்திருக்கின்றன.

### 4. எதிர்பாராத இலாபம்

சூழ்நிலை மாற்றங்களால் முற்றுரிமை நிலை தோன்றி தற் காலிக இலாபம் திடீரென அதிகரிப்பதும் உண்டு. போர்க் காலத் தில் உற்பத்தி பாதிக்கப்படுவதால் பொருள்களின் விலைகள் கூடி உபரி இலாபம் கிடைக்கிறது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் படும் நாளில் மாலைகளுக்கான தேவை கூடுகிறது. அதனால், மாலை கட்டுபவர்கள் அந்த நாளில் அதிக உபரி இலாபத்தைப் பெறு கிறார்கள். இவ்வாறாக இலாபம் தொழில் அமைப்பாளருடைய தனித் திறமைக்காகக் கிடைப்பதில்லை. இதைத் 'தூய இலா பத்தோடு' சேர்க்கக் கூடாது.

### 5. தூய இலாபம் அல்லது நிகர இலாபம்

மேற்குறிப்பிட்ட நான்கு இனங்களையும் மொத்த இலாபத்தி லிருந்து கழித்தால் நிகர இலாபம் தெரியவரும். தொழில் அமைப் பாளருடைய பணிகளுக்காக மட்டும் கிடைப்பதே நிகர இலாப மாகும். அவர் பிற ஆக்கக் காரணிகளை உரிய வீதத்தில் இணைத்து, உற்பத்தி நடைபெறக் காரணமாக அமைகிறார். உற்பத்தி, நிர்வாகம், விற்பனை போன்றவற்றோடு இடர்கள், உறுதியின்மை ஆகியவற்றை ஏற்கும் பணியையும் மேற்கொள்கிறார். உற்பத்தி முறைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்கிறார். நிகர இலாப மென்பது தொழில் அமைப்பாளரின் இவ்விதமான பணிகளுக்கு அளிக்கப்படுவதாகும்.

## III. இலாபக் கோட்பாடுகள்

இலாப நிர்ணயத்தைப் பற்றி பல கோட்பாடுகள் உள்ளன. ஆனால், எந்த ஒரு தனிக் கோட்பாட்டாலும் இலாப நிர்ணயத் தைத் தெளிவாக விளக்க இயலவில்லை. இலாபத்தைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள எல்லா கோட்பாடுகளையும் அறிவது அவசியமாகும்.

### (i) இடர் தாங்குக் கோட்பாடு (Risk-bearing Theory)

இக் கோட்பாட்டை 1907-ல் அமெரிக்கப் பொருளியலறிஞ ராகிய ஹாலே (Hawley) என்பவர் அளித்தார். இதனை ஆதரித்த வர்களில் ஆல்ஃபிரட் மார்ஷல் குறிப்பிடத்தக்கவராவார். தொழில் நிறுவனத்தை நடத்துவதில் பல இடர்ப்பாடுகள் அமைந் துள்ளன. இடர்ப்பாடுகளை ஏற்பதற்காகத் தொழில் அமைப் பாளர் பெறும் ஊதியமே இலாபமாகும். பிற உற்பத்திக் காரணி

கள் நிலையான வருமானத்தைப் பெறும்போது, தொழில் அமைப் பாளருடைய வருமானம் நிலையானதாகவும் உறுதித் தன்மை கொண்டதாகவும் இருப்பதில்லை. அவர் பலவிதமான இடர் களையும் தொல்லைகளையும் ஏற்கவேண்டியுள்ளது. வாணிகத்தி லும் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஊகத்தின் அடிப்படை யிலேயே தொழில்-வாணிக நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனையாகாவிட்டால் நட்டம் ஏற்படுகிறது. இடர்ப்பாடுகள் மிகுந்த தொழில்களிலும் வாணி கத்திலும் அதிக இலாபம் கிடைக்கின்றது.

**குறைபாடுகள்** : இடர்தாங்குக் கோட்பாட்டில் கீழ்வரும் குறைபாடுகள் அமைந்திருக்கின்றன.

1. இடர்தாங்குதல் தொழில் அமைப்பாளரின் பல பணி களுள் ஒன்றுகும். எனவே, இடர் தாங்குவதற்காக மட்டுமே இலாபம் கிடைக்கிறது என்று குறிப்பிடுவது தவருனதாகும்.

2. தொழில் அமைப்பாளர் இடரை ஏற்பதற்காக அல்லா மல், இடரைத் தவிர்ப்பதற்காகவே இலாபத்தைப் பெறுவ தாகப் பேராசிரியர் கார்வர் (Professor Carver) கூறுகின்றார்.

3. இடர்களை அறிவதும் அளிப்பதும் எளிதல்ல. மேலும், இடர் தாங்கும் அளவுக்கேற்ப இலாபத்தின் அளவு அமையு மென்று கருதமுடியாது.

4. சிலவகை இடர்களுக்கு எதிராகக் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று பேராசிரியர் நைட் (Professor Knight) குறிப்பிடுகின்றார். இடர்களில் சிலவற்றை முன்னமேயே எதிர் நோக்கிக் காப்பீடு செய்யலாம். எடுத்துக்காட்டாக, தீ, விபத்து ஆகியவற்றிற்கான காப்பீட்டு வசதிகள் உள்ளன. ஏனினும், சில இடர்களை முன்கூட்டியே அறிய இயலாது.

5. இடர்கள் மிக்கத் தொழில்களில் அதிக இலாபம் கிடைக்கும் என்று கருதமுடியாது.

### (ii) உறுதியின்மை தாங்குக் கோட்பாடு (Uncertainty - bearing Theory)

இக் கோட்பாட்டைத் தந்தவர் பேராசிரியர் நைட் ஆவார். இவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவரே. உறுதியின்மையைத் தாங்குவதே தொழில் அமைப்பாளரின் தலையாய பணி என்று அவர் குறிப்பிடுகிறார். எதிர்காலம் நிலையற்றதாகவும். உறுதி யற்றதாகவும் இருக்கிறது. வருங்காலத்தில் எவ்வகை மாற்றங்

கள் தோன்றும் என்பதை ஊகிக்க இயலாது. முன்கூட்டியே அறிய இயலும் இடர்ப்பாடுகளை ஈட்டுறுதி செய்து கொள்ளலாம்.

சில இடர்களை முன்னமேயே அறிய முடியாது. உதாரணமாக உற்பத்திப் பொருள்களுக்கான தேவை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்து அறிவது கடினமாகும். இவ்வகை இடர்களைக் காப்பீடு செய்யவும் இயலாது. குறிப்பிட்ட தொழிலில் புதிய நிறுவனங்கள் தோன்றிப் போட்டி ஏற்படும் இடர்ப்பாடுகளும் அமைந்துள்ளன. அந்த நிறுவனங்கள் புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றி, ஆக்கச் செலவைக் குறைத்து, பொருள்களைக் குறைந்த விலையில் விற்று அதிக இலாபம் ஈட்டக் கூடும். பொருளாதாரத்தில் மந்தநிலை தோன்றுவதால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படலாம். அரசு சில பொருள்களின் விலைகளைத் திடீரெனக் கட்டுப்படுத்துவதும் உண்டு. நுகர்வோரின் விருப்பு-வெறுப்புகளில் மாற்றம் தோன்றலாம். இவ்விதமான இடர்ப்பாடுகளைக் கணிப்பதோ, காப்பீடு செய்துகொள்வதோ முடியாது. காப்பீடு செய்துகொள்ள முடியாத இடர்களை ஏற்பதே உறுதியின்மை தாங்குதல் எனப்படுகிறது. இத்தகைய உறுதியின்மையைத் தாங்குவதற்கே தொழில் அமைப்பாளர் இலாபம் பெறுகின்றார். தொழில் அமைப்பாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு உறுதியின்மையும் ஒரு காரணமாகிறது.

முன்கூட்டியே அறிய இயலும் தொழில் ஆபத்துகளை 'இடர்கள்' எனவும், அவ்விதம் அறிய இயலாதவற்றை 'உறுதியின்மை' என்னவும் நைட் குறிப்பிடுகிறார்.

**குறைபாடுகள் :** உறுதியின்மை தாங்குக் கோட்பாடு பின்வரும் குறைபாடுகளைக் கொண்டுள்ளது:

1. தொழில் முயல்வோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு உறுதியின்மை மட்டும் காரணமாக அமைவதில்லை. நிதிப் பற்றாக்குறை, வாய்ப்பின்மை, திறமைக் குறைவு போன்றவையும் அதற்குக் காரணமாக அமைகின்றன.

2. உறுதியின்மையைத் தாங்குதல் மட்டுமே தொழில் முயல்வோருடைய பணியாக இல்லை. அமைப்பு, நிர்வாகம், மேற்பார்வை, விற்பனை போன்ற பணிகளுக்காகவும் அவர்கள் இலாபத்தைப் பெறுகின்றனர்.

3. புள்ளியியலின் உதவிகொண்டு சில உறுதியின்மை நிலைகளையும் கணிக்க இயலும். கடந்த காலப் புள்ளி விவரங்களின்

அடிப்படையில் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் மாற்றங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

4. உறுதியின்மையைத் தொழில் அமைப்பாளர்கள் ஏற்றுக் கொண்டாலும் சில தொழில் நிறுவனங்களுக்கு இலாபம் கிடைப்பதில்லை.

5. இக் கோட்பாடு உறுதியின்மையைத் தாங்குவதை ஓர் உற்பத்திக் காரணியைப் போன்றே கருதுகிறது. ஆனால், அது அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல.

6. இது இலாபத்தைப் பற்றிய முழுமையான விளக்கத்தைத் தரவில்லை.

### (iii) இயக்க நிலைக் கோட்பாடு (Dynamic Theory)

இதைத் தந்தவர் ஜே. பி. கிளார்க் (J. B. Clark) என்ற அமெரிக்கப் பொருளியலாளர் ஆவார். இக் கோட்பாட்டின்படி நிலையான பொருளாதாரத்தில் (static economy) இலாபம் தோன்றுது. பொருளாதாரம் இயக்க நிலையில் இருக்கும்போது, தொழில் அமைப்பாளர்கள் வருங்கால மாற்றங்களை ஊகித்துச் செயல்படுகின்றனர். அதற்கேற்ப அவர்களுடைய இலாபத்தின் அளவு அமைகின்றது. மாற்றங்கள் ஏற்படாத நிலையான பொருளாதாரத்தில் உறுதியற்ற தன்மையே இருக்காது. அவ்வகைப் பொருளாதாரத்தில் தொழில் அமைப்பாளர்கள் இடர்களை ஏற்கத் தேவையில்லை.

ஆனால், நடைமுறையில் பொருளாதாரம் இயக்கநிலையையே கொண்டுள்ளது. இயக்கநிலைப் பொருளாதாரத்தில் (i) மக்கள் தொகை அதிகரிக்கிறது; (ii) மூலதனத்தின் அளவு பெருகுகிறது; (iii) உற்பத்தி முறையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன; (iv) தொழில் அமைப்பு முறைகளில் மாற்றங்கள் தோன்றுகின்றன; (v) மக்களுடைய விருப்பங்கள் கூடிக்கொண்டே இருக்கின்றன. இவ்வித மாற்றங்கள் இல்லாவிட்டால் இலாபம் கிடைக்காது.

உற்பத்திச் செலவுக்கும் விற்பனைமூலம் கிடைக்கும் வருவாய்க்கும் இடையே உள்ள வேறுபாடே இலாபமாகும். பொருளாதாரம் இயக்க நிலையில் இருந்தால் மட்டுமே உற்பத்திச் செலவைக் குறைத்து இலாபத்தைப் பெறலாம் என்று கிளார்க் கூறுகிறார். பொருளாதார-முன்னேற்ற-மாற்றங்களாலும், கண்டிபிடிப்புகளாலும், பொருளாதாரத்தின் பிற இயக்க நிலைகளாலும் தொழில் அமைப்பாளர்கள் இலாபம் பெறுகின்றனர்.

**குறைபாடுகள் :** இயக்கநிலைக் கோட்பாட்டில் உள்ள குறை களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. பேராசிரியர் நைட் கூறுவதுபடி, பொருளாதாரத்தின் இயக்கநிலையால் ஏற்படும் எல்லா மாற்றங்களும் இலாபத்தைத் தருவதில்லை. சில மாற்றங்களை மட்டுமே ஊகித்தறியலாம். ஊகித் தறிய இயலாத மாற்றங்களே இலாப-நட்டங்களை ஏற்படுத்து வதாக நைட் கருதுகின்றார். உறுதியற்ற எதிர்காலத்தால் இலா பம் கிடைக்கிறது என்று அவர் குறிப்பிடுகின்றார்.

2. இக் கோட்பாடு தொழில் அமைப்பாளரின் நிர்வாகத் திற்கும், மேற்பார்வைக்குமான ஊதியம் இலாபமாகாது என்று குறிப்பிடுகிறது. இது தவறானது என்று டாஸிக் சுட்டிக்காட்டு கின்றார்.

3. நிலையான அல்லது தேக்க நிலையைக் கொண்ட பொரு ளாதாரம் எங்கும் அமைந்திருக்கவில்லை. தேக்கநிலைப் பொருளா தாரத்தில் இலாபமே கிடைக்காது என்று கூறுவது தவறாகும். ஏனெனில், அவ்வகைப் பொருளாதாரத்திலும் குறைந்தளவு இடர்ப்பாடுகளாவது அமையக்கூடும். அவற்றை ஏற்கும் தொழில் அமைப்பாளர்கள் தாழ்ந்த அளவிலாவது இலாபத்தைப் பெறுவர்.

4. இக் கோட்பாடு மூலதனத்தை அளிப்பவரே இடரை ஏற்பதாகக் கருதுகிறது. 'வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக்' கொண்ட பங்குதாரர்களின் எண்ணிக்கை பெருகியுள்ள இந் நாளில் இக் கருத்துத் தவறுடையதாகிறது. பொதுவாக, இடரை ஏற்கும் பணி தொழில் அமைப்பாளரையே சேரும்.

### (iv) இலாபத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Profit)

தொழில் அமைப்பாளருடைய இறுதிநிலை ஆக்கத் திறனுக் கேற்ப இலாபம் அமையுமென்று இக் கோட்பாடு குறிப்பிடுகிறது. ஆனால், அவருடைய இறுதிநிலை ஆக்கத்திறனை அளவிடுவது சிக்க லானதாக இருக்கிறது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் ஓர் அமைப்பாளர் மட்டுமே இருக்கிறார். எனவே, அவருடைய இறுதிநிலை ஆக்கத்திறனைக் கணக்கிட இயலாது. ஆயினும், ஒரு தொழிலில் பல உற்பத்தி நிறுவனங்கள் அடங்கு கின்றன. அந் நிறுவனங்களில் தொழில் அமைப்பாளர்கள் பலர் இருக்கின்றனர். இதன் காரணமாகக் குறிப்பிட்டதொரு தொழிலில் தொழில் முயல்வோரின் இறுதிநிலை ஆக்கத்திறனை அளவிட முடி யும். தொழில் முயல்வோரின் எண்ணிக்கையை மாற்றுவதன் மூலம் இது சாத்தியமாகிறது.

இக் கோட்பாட்டின்படி, தொழில் முயல்வோர் அனைவரும் ஒரே மாதிரியான திறமையைக் கொண்டவர்களாவர். நிறைவுப் போட்டி நிலவும்போது, இலாபமானது தொழில் அமைப்பாளரின் இறுதிநிலை ஆக்கத்திறனுக்குச் சமமாக உள்ளது. இக் கோட்பாடு தொழில் முயல்வோரின் பற்றுக்குறை (அளிப்பு) நிலைக்கும், அவர்களுக்கான தேவைக்கும் உள்ள தொடர்பை உணர்த்துகிறது. அவர்களுடைய எண்ணிக்கை பற்றுக்குறையாக இருக்கிறது. தொழில் முயல்வோருடைய எண்ணிக்கையைப் பெருக்குவதும் எளிதாக இல்லை.

சமீப காலமாக உற்பத்தியின் தேவை கூடியுள்ளமையால் தொழில் முயல்வோருக்கான தேவையும் அதிகரித்துள்ளது. தொழில் அமைப்பாளரின் பற்றுக்குறையால், அவர்கள் பெறும் இலாபத்தின் அளவும் உயர்வாக உள்ளது.

**குறைபாடுகள்** : 1. ஒரு தொழில் நிறுவனத்தில் ஒரு தொழில் அமைப்பாளர் மட்டுமே இருப்பதால், அவருடைய இறுதிநிலை ஆக்கத்திறனை அளவிட முடியாது.

2. தொழில் அமைப்பாளர்கள் திறமை, வாய்ப்பு ஆகியவற்றை ஒரே அளவில் கொண்டிருப்பதில்லை. அவர்கள் ஒரியல்பானவர்களாக இல்லாமையால், இறுதிநிலை ஆக்கத்திறனைச் சரியாகக் கணிக்க இயலாது.

3. இக் கோட்பாடு தொழில் அமைப்பாளர்களின் திறமை கேற்ப இலாபத்தின் அளவு வேறுபடுவதைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

4. போர், பஞ்சம் போன்ற சூழ்நிலை மாற்றங்களால் முற்றுரிமை ஏற்பட்டு உபரி இலாபம் பெறப்படுவதைப் பற்றி இது விளக்கவில்லை.

### (v) இலாபத்தின் வாரக் கோட்பாடு (Rent Theory of Profit)

இக் கோட்பாட்டைப் புனைந்தவர் எஃப். ஏ. வாக்கர் (F. A. Walkar) என்ற அமெரிக்கப் பொருளியலறிஞர் ஆவார். இக் கோட்பாடு இலாபமும் வாரத்தைப் போன்றதே என்று குறிப்பிடுகிறது. நிலத்தின் வள வேறுபாட்டிற்கு ஏற்ப வாரம் மாறுவதைப்போல, தொழில் அமைப்பாளர்களின் திறமை வேறுபாட்டிற்கேற்ப இலாபம் மாறுபடுகிறது. நிலத்தில் இறுதிநிலை நிலம் அல்லது வாரமில்லாத நிலம் இருப்பதைப் போன்று தொழில் அமைப்பாளர்களிலும் சிலர் இலாபம் பெறுதவர்களாக உள்ளனர். இவர்களை இறுதிநிலைத் தொழில் முயல்வோர் என்றும் கூறலாம்.

சீனியர், மில் போன்றவர்கள் இக் கோட்பாட்டிற்கான மூலக் கருத்தைத் தந்தவர்களாவர். இலாபம் விலையில் சேராது என்று வாக்கர் குறிப்பிடுகின்றார்.

**குறைபாடுகள்** : 1. திறமையான தொழில் அமைப்பாளரும் சில நிலைகளில் நட்டத்தை அடைகிறார்.

2. நீண்ட காலத்தில் இலாபம் பெறுமல் எவரும் தொழில் முயல்வோராக இருப்பதில்லை.

3. இக் கோட்பாடு இலாபம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்கவில்லை.

4. வாரத்தைப் போன்றதே இலாபம் என்று விளக்குவதும் தவறாகும். தொழில் அமைப்பாளர் நட்டத்தையும் ஏற்கவேண்டியுள்ளது. ஆனால், வாரம் எதிர்மறையில் அமைவதில்லை.

5. இலாபம் விலையில் சேராது என்ற கருத்தும் தவறானது. நீண்ட காலத்தில் இலாபம் விலையில் சேருகின்றது.

6. கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குதாரர்கள் நிர்வாகப் பணியில் ஈடுபடாமலேயே இலாபத்தில் பங்கு பெறுகின்ற நிலையை இது விளக்கவில்லை.

7. இடர்கள், உறுதியின்மை ஆகியவற்றை ஏற்பதாலும் தொழில் முயல்வோர் இலாபத்தைப் பெறுகின்றனர் என்பதை இக் கோட்பாடு ஏற்கவில்லை.

8. வாக்கர் 'எச்ச இலாபத்தை' (surplus profit) மட்டுமே விளக்குகின்றார். இலாபம் தோன்றுவதற்கான பல காரணங்களையும் அவர் ஆய்வு செய்யவில்லை.

### (vi) இலாபத்தின் கூலிக் கோட்பாடு (Wage Theory of Profit)

அமெரிக்கப் பொருளியலாளர்களான டாஸிக், டேவென்போர்ட் ஆகியோர் இலாபமும் கூலியைப் போன்றதே என்று கூறுகின்றனர். தொழிலாளர்கள் உடல் உழைப்பைத் தரும் போது, தொழில் முயல்வோர் மூளை உழைப்பைத் தருகின்றனர். உழைப்பிற்கேற்ப இரு பிரிவினரும் வருமானத்தைக் கூலியாகவும், இலாபமாகவும் பெறுகின்றனர். இக் கோட்பாடு உழைப்பாளரையும், தொழில் முயல்வோரையும் ஒப்பீடு செய்து கூலியைப் போன்றதே இலாபம் என்று குறிப்பிடுகிறது. கூலியும் இலாபமும் உழைப்பால்தான் தோன்றுகின்றன. எனவே, உடல் உழைப்பையும் மூளை உழைப்பையும் வேறுபடுத்தத் தேவையில்லை என்று இக் கோட்பாடு விளக்கம் தருகின்றது. எனினும், கூலிக்கும் இலாபத்திற்கும் சில அடிப்படை வேறுபாடுகள் உள்ளன.

**குறைபாடுகள்** : 1. உழைப்பாளர்கள் கூலியைப் பெற எவ்வித இடரையும் ஏற்பதில்லை. அளிக்கப்படுகின்ற உழைப்பின் அளவுக்கேற்ப அவர்களுடைய கூலி அமைகிறது. தொழிலிலும் வாணிகத்திலும் உள்ள இடர்களை ஏற்பதற்காகவே தொழில் முயல்வோர் இலாபம் பெறுகின்றனர்.

2. கூலியின்றி எவரும் உழைப்பைத்தர மாட்டார்கள். ஆனால், தொழில் முயல்வோர் நட்டத்தையும் ஏற்கின்றனர்.

3. இக் கோட்பாட்டில் உழைப்பிற்கும், தொழில் அமைப் பிற்கும் இடையே உள்ள அடிப்படை வேறுபாடுகள் புறக்கணிக்கப் படுகின்றன.

4. சூழ்நிலைகளில் ஏற்படும் திடீர் மாற்றங்களால் இலா பம் பல மடங்கு பெருகுவதுண்டு. கூலி மட்டமானது குறிப்பிடத் தக்க அதிக அளவுக்கு உயராது.

**(vii) இலாபத்தின் புத்தாக்கக் கோட்பாடு** (Innovation Theory of Profit)

இக் கோட்பாட்டை உருவாக்கியவர் ஷும்பீட்டர் (Schumpeter) ஆவார். இது பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங் களால் இலாபம் தோன்றுவதாகக் குறிப்பிடுகிறது. பல நிலைகளில் இது இயக்கநிலைக் கோட்பாட்டைப் போன்றுள்ளது. பொருள் களின் விலைக்கும், உற்பத்திச் செலவுக்கும் நடுவே உள்ள இடை வெளியைக் கூட்டப் புத்தாக்கக் கண்டுபிடிப்புகள் உதவுகின்றன. புதிய கண்டுபிடிப்புகளால் உற்பத்தி முறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு உற்பத்திச் செலவு குறைகிறது. குறுகிய காலத்தில் தான் புத்தாக்கங்களின்மூலம் உபரி இலாபம் கிடைக்கும். நீண்ட காலத்தில் பிற உற்பத்தி நிறுவனங்களும் அதே புத்தாக்க முறை களைப் பின்பற்றுவதால் உபரி இலாபம் மறைகிறது.

**குறைபாடுகள்** : 1. புத்தாக்கத்தினாலும் இலாபம் கிடைக்கக்கூடும். ஆனால், புத்தாக்கத்தினால் மட்டுமே இலாபம் கிடைக்கின்றது என்று கூறுவது தவறு.

2. இக் கோட்பாடு தொழில் முயல்வோரின் பணிகளைத் தாழ்வாக மதிப்பிடுகிறது. அவர்களைச் சாதாரண உழைப்பாளர் களோடு ஒப்பிடுவது தவறானதாகும்.

3. பலவிதமான இடர்களையும் உறுதியின்மை நிலைகளையும் ஏற்பதற்காகத் தொழில் முயல்வோர் இலாபத்தைப் பெறுகின்ற னர் என்பதை ஏற்க இக் கோட்பாடு தவறிவிடுகிறது.

# 36. பொருளாதார அமைப்பு முறைகள்

## I. விளக்கம்

மாறுபட்ட அரசியலமைப்பைக் கொண்ட உலக நாடுகளிடையே பொருளாதார அமைப்பு முறைகள் வேறுபடுகின்றன. முதலாளித்துவம், சமதர்மம் ஆகிய இரண்டும் முக்கியப் பொருளாதார அமைப்பு முறைகளாகும். பொதுவுடைமை முறை சமதர்மத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துகிறது. இந்தியா போன்ற நாடுகளில் கலப்புப் பொருளாதார முறையின் அடிப்படையில் சமதர்மம் பின்பற்றப்படுகிறது. அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் முதலாளித்துவமும், ரஷ்யா, சீனா, க்யூபா முதலிய நாடுகளில் பொதுவுடைமை முறையும் கைக்கொள்ளப்பட்டுள்ளன. முதலாளித்துவம், பொதுவுடைமை ஆகிய முறைகளின் நன்மைகளைப் பெற சமதர்ம அமைப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு நாட்டின் உற்பத்தி, நுகர்வு, மாற்று, பகிர்வு ஆகியவை பொருளாதார அமைப்பு முறைக்கேற்ப அமைகின்றன. அரசு பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் பொருளாதார அமைப்புமுறைகளுக்கேற்ப மாறுபடுகின்றன. சமுதாய-அரசியல் காரணிகள் பொருளாதார அமைப்பு முறையோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. வெவ்வேறு பொருளாதார அமைப்பு முறைகளைப் பின்வருமாறு ஆராயலாம்.

## II. முதலாளித்துவம் (Capitalisam)

முதலாளித்துவ முறையைச் 'சுதந்திர அமைப்புப் பொருளாதாரம்' (Free enterprise economy) என்றும் குறிப்பிடலாம். இம் முறையைக் குறைகூறுபவர்களில் கார்ல் மார்க்ஸ் முக்கியமானவர் ஆவார். முதலாளித்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள, அதன் இயல்புகளை அறிவது அவசியமாகிறது.

**இயல்புகள்:**

**1. தனியார் சொத்துடைமை :** முதலாளித்துவ முறையின் கீழ் ஒவ்வொரு குடிமகனுக்கும் நிலம், வீடு, தொழிற்கூடம், நகைகள், கார் போன்றவற்றைத் தனிவுடைமைச் சொத்துகளாகக் கொள்ளும் உரிமை அமைந்துள்ளது. பரம்பரைச் சொத்துகள் வாரிசுதாரர்களைச் சேருகின்றன. 'தனியார் சொத்துடைமை முறை மணிலையும் பொன்னுக மாற்றக் கூடியது'. இம் முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர்.

**2. தொழிலில் ஈடுபடும் சுதந்திரம்:** எல்லோரும் அவரவர் விரும்புகின்ற தொழில்களில் ஈடுபடலாம். அவர்கள் அரசின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு எத்தொழிலையும் தொடங்கி நடத்தலாம்.

**3. ஒப்பந்தச் சுதந்திரம் :** முதலாளித்துவ அமைப்பில் அரசின் குறுக்கீடின்றி, ஒருவர் மற்றவர்களோடு தொழில்-வாணிக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.

**4. நுகர்வோர் இறைமை** (Consumers' Sovereignty) **:** முதலாளித்துவ முறை பின்பற்றப்படும் ஒரு நாட்டில் நுகர்பவர் மன்னரைப்போல இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. நுகர்வோருடைய விருப்பங்களுக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றவாறு பொருள்கள் உற்பத்தியாகின்றன. அவர்கள் தங்களுக்கு விருப்பமான பொருள்களை எவ்விதத் தடையுமின்றி வாங்கிப் பயன்படுத்தலாம். இவ்விதமான உரிமையால் அவர்களுடைய நலன் பெருகுகின்றது.

**5. விலை நிர்ணயம் :** தேவை-அளிப்பு நிலைகளுக்கேற்ப விலை மட்டம் அமைகிறது. தேவை-அளிப்பு நிலைகளை அரசு பெரும்பாலும் கட்டுப்படுத்துவதில்லை. இதனால், குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கின்றன. இலாப அளவும் உயர்வாக உள்ளது. வாரம், கூலி, வட்டி ஆகியவையும் தேவை-அளிப்புச் சக்திகளுக்கேற்ப நிர்ணயமாகின்றன.

**6. இலாப நோக்கம் :** பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இலாப நோக்கின் அடிப்படையிலேயே அமைகின்றன. முதலாளித்துவத்தில் இலாப நோக்கமே பொருளாதாரத்தை இயக்குகின்றது.

**7. வர்க்கப் போராட்டம் :** முதலாளித்துவத்தில் முதலாளிகள், தொழிலாளர்கள் என்ற இரு வர்க்கங்கள் தோன்றி, அவர்

களிடையே போராட்டங்கள் நிகழ்கின்றன. முதலாளிகள் கொள்ளை இலாபத்தைப் பெறுவதற்காக உழைப்பாளர்களுக்குக் குறைந்த கூலி கொடுத்து, அவர்களைச் சுரண்டி வாழ்கின்றனர். உழைப்பாளர்கள் கூலி உயர்வுக்காகப் போராடுகின்றனர்.

**8. போட்டி :** உற்பத்தியாளர்களுக்கு இடையேயும், வாணிகர்களுக்கு இடையேயும் போட்டி நிலவுவதால் நுகர்வோர் குறைந்த விலையில் பொருள்களைப் பெறுகின்றனர். போட்டியினால் உற்பத்தியாளர்களும், வாணிகர்களும் நியாயமான இலாபத்தையே அடைகின்றனர்.

**சிறப்புகள்**

முதலாளித்துவ முறையால் பின்வரும் நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன.

**1. அதிக ஆக்கம் :** பிற பொருளாதார அமைப்பு முறைகளில் இருப்பதைவிட முதலாளித்துவத்திலேயே நாட்டு ஆக்கத்தின் மொத்த அளவு உயர்வாக உள்ளது. ஆக்கக் காரணிகள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படுவதற்கு இலாப நோக்கம் அடிப்படைக் காரணமாக அமைகிறது.

**2. மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு:** நாட்டின் மொத்த ஆக்கம் உயரும்போது மக்களின் உண்மை வருமானம் அதிகரிக்கிறது. பொருள்கள் குறைந்த விலையில் விற்கப்படுவதாலும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**3. விரைவான பொருளாதார முன்னேற்றம்:** முதலாளித்துவ முறையின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை எளிதாகவும் விரைவாகவும் குறுகிய காலத்திலும் பெறலாம்.

**4. தனித் திறமையில் வளர்ச்சி :** உற்பத்தி, நுகர்வு, மாற்று, பகிர்வு ஆகிய எல்லாவற்றிலும் போட்டி நிலவுவதால் திறமை முக்கியத்துவம் பெறுகிறது. போட்டி நிலைகளில் திறமையானவர்கள் மட்டுமே வெற்றிபெற இயலும்.

**5. திறமைக்கேற்ற வருமானம் :** திறமைக்கேற்ப வருமானம் ஈட்டப்படுவதாலும் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. உழைப்பின் திறன் அதிகமாக இருந்தால் வருமானமும் உயர்வாகப் பெறப்படுகிறது.

**6. கடின உழைப்பு :** இலாப நோக்கினுல் ஒவ்வொருவரும் கடின உழைப்பைத் தருகின்றனர். வருமானத்தை ஈட்டுவதிலும், செல்வத்தைச் சேமிப்பதிலும் அக்கறை கொண்ட மக்கள் கடின மாக உழைப்பைத் தருவதால் எல்லாத் துறைகளிலும் ஆக்கத் திறன் அளவு அதிகரிக்கிறது.

**7. அதிக மூலதனத் திரட்சி :** அதிக ஆக்கத்தினுல் வரு மானம் கூடும்போது சேமிப்புப் பெருகி முதலீட்டின் அளவு உயர் கிறது. இதனுல், மேலும் உற்பத்தி கூடி வருமானப் பெருக்கம் ஏற்படுவதால் மூலதனத் திரட்சி எளிதாகிறது.

**8. சுதந்திர உணர்வு :** அரசு தனியாருக்கு எல்லாவித உரிமைகளையும் அளிப்பதால், மக்கள் மனநிறைவான வாழ்க்கை யைக் கொண்டிருக்கிறார்கள். தனியாருடைய நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்துவதில்லை. இவ்விதச் சுதந்திர நிலையையே மக்கள் பெரிதும் விரும்புவர்.

**9. தொழில்நுட்ப மேம்பாடு :** இலாபத்தைப் பெருக்கு வதற்காக உற்பத்தி முறைகளில் சீரமைப்புகள் செய்யப்படு கின்றன. உற்பத்தி பேரளவில் கைக்கொள்ளப்படுகிறது. புதிய இயந்திரங்கள் ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதால், உற் பத்திச் செலவு குறைகிறது. பேரளவு உற்பத்தி முறை பின் பற்றப்படுவதால் அக, புறச் சிக்கனங்கள் கிடைக்கின்றன.

**10. உழைப்பாளர்களுக்கு உயர்ந்த கூலி:** தொழில் அதிபர் கள் அதிக இலாபத்தைப் பெறுவதால் உழைப்பாளர்களும் உயர் வான கூலியையே பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, அமெரிக் காவில் நீக்ரோ உழைப்பாளர்கள் பெறும் கூலி, பொதுவுடைமை நாடுகளில் உழைப்பாளர்கள் பெறும் கூலியைவிட அதிகமாக உள்ளது.

**குறைபாடுகள்**

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பால் கீழ்வரும் தீமைகளும் விளைகின்றன.

**1. வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத் தாழ்வுகள் :** சமுதாயத்தில் ஒரு சிலர் மட்டும் வளமான வாழ் வைப் பெற்றிருக்கும்போது பலர் வறுமையால் வாடுகின்றனர். சிலரிடமே அதிக அளவு நாட்டு வருமானமும் செல்வமும் அமை கின்றன. முதலாளித்துவ நாடுகளில் மக்கள் எல்லோரும் நலமான வாழ்வைப் பெறுவதில்லை.

**2. இலாப நோக்கிலேயே உற்பத்தி :** முதலாளித்துவப் பொருளாதாரங்களில் எங்கும் எதிலும் இலாப நோக்கமே அமைந்துள்ளது. உற்பத்தி நடவடிக்கைகள் இலாப நோக்கிலேயே அமைவதால் பொதுநலன் பாதிக்கப்படுகிறது. போட்டியால் வீணான விளம்பரச் செலவுகளும் உற்பத்தியாளர்களால் செய்யப்படுகின்றன.

**3. முற்றுரிமை நிலை :** அரசின் கட்டுப்பாடுகள் அதிகம் இல்லாமையால் உற்பத்தியாளர்களும் வாணிகர்களும் முற்றுரிமை நிலையை ஏற்படுத்திக்கொண்டு, பொருள்களை உயர் விலையில் விற்பதன்மூலம் கொள்ளை இலாபத்தைப் பெறுகின்றனர். இவ்வாறு நுகர்பவர்கள் சுரண்டப்படுகின்றனர்.

**4. தொழிலாளி - முதலாளி போராட்டம் :** முதலாளித்துவ நாடுகளில் வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவை சகஜமாக நிகழக் கூடியவையாகும். உழைப்பாளர்கள் உயர் கூலி வேண்டி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். தொழில் அதிபர்கள் கதவடைப்பின் மூலம் உழைப்பாளர்களின் கூலியை அதிகரிக்க அனுமதிப்பதில்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் உழைப்பாளர்களே ஆவர்.

**5. சுரண்டல் நிலை :** செல்வந்தர்கள் ஏழைகளையும், முதலாளிகள் உழைப்பாளர்களையும், உற்பத்தியாளர்கள் நுகர்வோரையும் சுரண்டி வாழ்கின்றனர். இதன் காரணமாகச் செல்வந்தர்கள் மேலும் அதிகச் செல்வத்தைச் சேர்க்கும்போது, ஏழைகள் மேலும் வறிய நிலையை அடைகிறார்கள்.

**6. பொருளாதாரம் வாணிகச்சுழலால் பாதிக்கப்படுதல் :** முதலாளித்துவ நாடுகளில் அரசு பொருளாதார நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கட்டுப்படுத்துவதில்லை. இதனால், பொருளாதாரத்தில் மந்தநிலை, வீழ்ச்சி நிலை போன்றவை தோன்றுகின்றன. இதன் விளைவாக உற்பத்தியாளர்கள், நுகர்வோர் ஆகிய இரு சாராரும் பாதிக்கப்படுகின்றனர்.

**7. அவசியம் குறைந்த பண்டங்களின் அதிக உற்பத்தி :** உற்பத்தியாளர்கள் இலாப நோக்கிலேயே செயல்படுவதால் ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தியிலேயே அதிகக் கவனத்தைச் செலுத்துகின்றனர். இலாபம் குறைவாகக் கிடைக்கக்கூடிய அவசியப் பொருள்களின் உற்பத்தி ஆர்வத்தோடு பெருக்கப்படுவதில்லை.

**8. வளர்ச்சிநிலையில் வட்டாரங்களுக்கிடையே வேறுபாடு:** முதலாளித்துவப் பொருளாதாரங்களின் சில வட்டாரங்களில் மட்டும் தொழிற்செறிவு ஏற்படுவதால், பிற வட்டாரங்கள் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளன.

**9. வேலையின்மைப் பிரச்சினை :** முதலாளித்துவ நாடுகளில் வாணிகச் சுழலால் வேலையின்மை தோன்றுகிறது. உற்பத்திப் பணிகள் பெரும்பாலும் பெரிய இயந்திரங்களால் செய்யப்படுவதாலும் மனித உழைப்பின் முக்கியத்துவம் குறைந்துவிடுகிறது.

**10. உழைக்காத வர்க்கத்தினரின் செல்வச் சேமிப்பு :** மூலதனத்தை மிகுதியாகக் கொண்டவர்கள், எவ்வித உழைப்பையும் தராமல் உயரளவில் வருமானத்தைப் பெற்றுச் செல்வத்தைச் சேர்க்கின்றனர். கடின உழைப்பைத் தருகின்ற உழைப்பாளர்கள் குறைந்த ஊதியத்தையே பெறுகின்றனர்.

இவ்வாறான குறைபாடுகளைக் கொண்டிருப்பினும், பல நாடுகளின் தொழில்-வாணிக வளர்ச்சிக்கு முதலாளித்துவ முறை உதவியுள்ளது.

## III. சமதர்மம் (Socialism)

முதலாளித்துவத்திலுள்ள குறைபாடுகள் சமதர்மப் பொருளாதார அமைப்பில் களையப்படுகின்றன. 'இல்லாமை' என்னும் நிலையே இல்லாத சமுதாயத்தைத் தோற்றுவிப்பதே சமதர்ம முறையின் நோக்கமாகும். சமதர்மச் சமுதாயத்தில் ஆக்கச் சாதனங்கள் யாவும் மக்கள் அனைவருக்கும் சொந்தமாக இருக்கும். மக்களுடைய முன்னேற்றத்திற்குச் சம வாய்ப்புத் தரப்படுகிறது. அவர்கள் சில அடிப்படை உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள்.

### இயல்புகள்

சமதர்ம முறையைப் பற்றித் தெளிவாக உணர, அதன் இயல்புகளை அறிவது அவசியமாகிறது.

**1. அரசுடைமை :** சமதர்மச் சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் அரசின் உடைமையாக இருக்கின்றன. அவற்றின் மீது தனி மனிதர்கள் உரிமை கொண்டாடமுடியாது.

**2. பொருளாதார நடவடிக்கைகள் அரசு கட்டுப்படுத்துதல்:** அரசு அதிக அதிகாரங்களைக் கொண்டிருப்பதால் உற்பத்தி, மாற்று

நுகர்வு, பகிர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முடிகிறது. இதனால், எவரும் கொள்ளை இலாபம் பெற இயலாது. செல்வச் சேமிப்பும் தடுக்கப்படுகிறது.

3. **சுய தேவைப் பூர்த்தி** : சமதர்ம நாட்டில் தேவையான எல்லா இன்றியமையாத பொருள்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவைப் பெறுவது நோக்கமாகிறது.

4. **சுரண்டல்கள் தவிர்க்கப்படுதல்** : சமுதாயத்தின் ஒரு பிரிவினர் மற்றப் பிரிவினரைச் சுரண்டி வாழ இயலாது. குறிப்பாகத் தொழில் அதிபர்கள் உழைப்பாளர்களைச் சுரண்டும் நிலை இருக்காது.

5. **சமத்துவம்** : நாட்டிலுள்ள மக்கள் யாவருக்கும் முன்னேறுவதற்கான சம வாய்ப்புகள் உள்ளன. திறமையான உழைப்பை அதிகமாகத் தருபவர்கள் உயர்ந்த வருமானத்தைப் பெறலாம்.

6. **திட்டமிட்ட வளர்ச்சி** : சமதர்ம நாட்டில் அரசு பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துகிறது. இதனால், குறுகிய காலத்தில் விரைவான முன்னேற்றத்தைப் பெறமுடிகிறது.

7. **பொது நலனுக்கான உற்பத்தி** : பொருள்களின் உற்பத்தி இலாப நோக்கோடு செய்யப்படுவதில்லை. மக்கள் நலனைப் பெருக்குவதற்குத் தேவையான பொருள்களின் உற்பத்தியைக் கூட்டுவதே இலக்காக அமைகிறது.

8. **போட்டியின்மையால் வீண் செலவுகள் குறைக்கப்படுதல்** : உற்பத்தி, விற்பனை போன்றவற்றில் அரசின் கட்டுப்பாடுகள் அமைந்துள்ளன. இதனால், போட்டி தவிர்க்கப்பட்டு 'விளம்பரம்' போன்ற வீண் செலவுகள் குறைக்கப்படுகின்றன.

9. **உற்பத்தி வசதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுதல்:** இயற்கை வளங்களும், பிற உற்பத்தி வசதிகளும் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்பட்டு ஆக்கத்தின் அளவு கூட்டப்படுகிறது.

10. **உழைப்பின் அதிகப் செல்வாக்கு** : திறனுக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பவற்றை அரசு மக்க

ளுக்கு உணர்த்தி உழைக்கும் திறனுடையோர் யாவருக்கும் வேலை யளிக்கிறது. பிற ஆக்கக் காரணிகளைவிட உழைப்பே முக்கியத் துவம் வாய்ந்த காரணியாகக் கருதப்படுகிறது.

**சிறப்புகள்**

சமதர்மச் சமுதாய அமைப்புப் பின்வரும் நன்மைகளைத் தருவதாக அமைகின்றது.

**1. வருமானத்திலும் செல்வப்பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படுதல் :** சமதர்மச் சமுதாயத்தின் அரசு மக்கள் எல்லோருடைய நலனிலும் அக்கறை கொண்டது. எனவே, அது தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கிறது.

**2. அடிப்படை உரிமைகள் :** மக்களின் நடவடிக்கைகள் ஓரளவுக் கட்டுப்படுத்தப்பட்டாலும், அவர்கள் அடிப்படை உரிமை களைப் பெற்றிருக்கிறார்கள்: சுதந்திரமான வாழ்க்கையை நடத்து கிறார்கள்.

**3. வேலை வாய்ப்பு :** உழைக்கும் திறனுடைய ஒவ்வொரு வருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பது அரசின் கடமையாகிறது. சமதர்மச் சமுதாயத்திலேயே மக்கள் வளம் முழுமையாகப் பயன் படுத்தப்பெறுகின்றது.

**4. வாணிகச்சுழலினால் பாதிக்கப்படாத நிலை :** தொழில், வாணிக, பண நடவடிக்கைகளை அரசு தீவிரமாகக் கட்டுப்படுத்து வதால் சமதர்ம அமைப்பில் வாணிகச் சுழல்கள் தோன்றுவதில்லை. பொருளாதாரத்தில் மந்த நிலை, வீழ்ச்சிநிலை போன்றவை ஏற்படுவ தில்லை.

**5. முற்றுரிமை நீக்கப்படுதல் :** உற்பத்தி, நுகர்வு, மாற்று, பகிர்வு ஆகியவற்றை அரசு கட்டுப்படுத்துகிறது. இதனால், விற் பனையாளர்களும் உற்பத்தியாளர்களும் முற்றுரிமை நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடிவதில்லை.

**6. வர்க்கப் போராட்டங்கள் இல்லாமை :** சமதர்மப் பொருளாதாரத்தில் தொழிலாளர் வர்க்கம், முதலாளி வர்க்கம் என்ற பாகுபாடு அமைந்திருப்பதில்லை. நாட்டுச் செல்வங்கள் மக்களுடைய பொதுவுடைமை ஆகின்றன. எனவே, எல்லோருக் கும் தேவைக்கேற்ப வசதிகள் அளிக்கப்படுகின்றன.

**7. மக்கள் நலனைப் பெருக்குவதற்கான உற்பத்தி :** பொருள்கள் இலாப நோக்குடன் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சமதர்ம முறையில் பொருள்சார் நலனே முக்கியமாகக் கருதப் படுகிறது. ஆகவே, மக்களுடைய வாழ்க்கை வசதிகளைக் கூட்டவே பலவகைப் பண்டங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**8. அரசின் வருமானம் நாட்டு முன்னேற்றத்திற்காக முதலீடாக்கப்படுதல் :** சமதர்ம நாட்டின் அரசு தொழிற்சாலைகளையும், பிற தொழில்-வாணிக அமைப்புகளையும் உடைமையாகப் பெற்றுள்ளது. அவற்றின் வாயிலாகக் கிடைக்கும் இலாபம் பொருளாதார வளர்ச்சிக்காகவும், மக்கள் நலனிற்காகவும் செலவிடப்படுகிறது.

**குறைபாடுகள்**

சமதர்ம அமைப்பு முறையால் தோன்றும் தீமைகளும் பொருளியலாளர்களால் குறிப்பிடப்படுகின்றன.

**1. அரசு துறைகளின் திறமைக் குறைவு :** ஒப்பந்த ஊதியத்திற்காக அரசின் தொழில்-வாணிக-நிர்வாகத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் ஆர்வத்தோடும் திறமையோடும் செயல்படமாட்டார்கள்.

**2. உழைப்பிற்கேற்ற வருமானம் இல்லாமை :** திறமையான உழைப்பாளருக்கும், திறமை குறைந்த உழைப்பாளருக்கும் ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. கடுமையாக உழைப்பவர்களும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாகச் சேமித்து எதிர்காலத்தில் நன்மையைப் பெறமுடியாது.

**3. மொத்த ஆக்கம் குறைவாக இருத்தல் :** முதலாளித்துவ முறையில் மொத்த ஆக்கத்தின் அளவு மிக அதிகமாக இருப்பதைப்போன்று சமதர்ம முறையில் இருப்பதில்லை. சமதர்ம அமைப்பில் பகிர்வுமுறை மட்டுமே சிறப்பாக அமைகின்றது என்று கூறலாம்.

**4. சுதந்திரமற்ற நிலை :** பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றையும் அரசு தீவிரமாகக் கட்டுப்படுத்துவதால், மக்களுடைய சுதந்திர நிலை பாதிக்கப்படுகிறது. சில அடிப்படை உரிமைகளை மட்டும் பெற்றிருக்கும் அவர்களுடைய சுதந்திரம் பல வழிகளிலும் பறிபோகின்றது.

**5. தனியார் சொத்துரிமை இன்மை :** சமதர்மச் சமூதாயங்களில் தனியார் சொத்துரிமை பெற்றிருப்பதில்லை. எனவே

கடினமாக உழைத்து வருமானத்தையும் செல்வத்தையும் அவர்களால் சேர்க்க இயலாது. இதனால், உழைக்கும் விருப்பத்தையும், ஆர்வத்தையும் அவர்கள் இழக்கிறார்கள்.

**6. நுகர்வோர் இறைமை இல்லாமை :** நுகர்வோர், பொருள்களை வாங்குவதில் சுதந்திரத்தைப் பெற்றிருப்பதில்லை. அரசின் ஆணைப்படி குறிப்பிட்ட பொருள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகின்றன.

**7. நிர்வாகச் சுமை :** அரசின் நிர்வாகப் பணிகள் பெருகிக் கொண்டே இருப்பதால், அரசு ஊழியர்களின் வேலைகளும் கூடுகின்றன. இதன் காரணமாக அவர்கள் திறமையாகப் பணியாற்ற முடிவதில்லை. 'சிவப்பு நாடாமுறை' (red tapism) போன்றவையும் உருவெடுக்கின்றன.

**8. குறைபாடுடைய திட்டங்களால் நாட்டு முன்னேற்றம் பாதிக்கப்படுதல் :** வளர்ச்சிக்கான திட்டங்களை வரைவதிலும், செயல்படுத்துவதிலும் ஏற்படக்கூடிய குறைபாடுகளால் நாட்டு முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

## IV. கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy)

கலப்புப் பொருளாதார முறையானது முதலாளித்துவ முறையின் சில நன்மைகளையும், சமதர்ம முறையின் சில தன்மைகளையும் கொண்டுள்ளது. இன்றைய முதலாளித்துவ நாடுகள் பலவும் கலப்புப் பொருளாதார முறையைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. இம் முறையில் தனியார் துறையோடு பொதுத்துறையும் இணைந்து செயலாற்றுகிறது. இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் இம் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன்மூலம் மக்களுடைய சுதந்திரம் காக்கப்பட்டுப் பொருளாதார முன்னேற்றம் சிறப்பான வழியில் பெறப்படுகின்றது.

**இயல்புகள்**

1. கலப்புப் பொருளாதாரத்தில் தனியார்துறை, அரசுத்துறை, தனியார்-அரசு கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவை அமைந்துள்ளன.

2. பொருளாதார முன்னேற்றம் திட்டமிட்டுப் பெறப்படுகிறது.

3. உற்பத்தி நிறுவனங்கள் இலாப நோக்கில் செயல்படுகின்றன.

4. பொதுநலனைக் காப்பதற்காகச் சில நிலைகளில் தனியார் உரிமைகள் குறைந்தளவிற்குக் கட்டுப்படுத்தப்படுகின்றன.

5. செல்வப் பங்கீட்டிலும் வருமானத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன.

6. தொழில்-வாணிக முற்றுரிமைகளை அரசு கட்டுப்படுத்துகின்றது.

7. வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களின் விலைகளை அரசு நிர்ணயிக்கிறது; அல்லது கட்டுப்படுத்துகிறது.

8. உற்பத்தியாளர்களும், வாணிகர்களும் கணிசமான குறைந்தளவு இலாபத்தைப் பெற அரசு அனுமதிக்கிறது.

**சிறப்புகள்**

1. சமுதாய நலனைக் காக்கும் வகையில் அரசு வேளாண்மை, தொழில், வாணிகக் கொள்கைகளைத் தீர்மானிக்கிறது.

2. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் அரசின் பண, நிதிக் கொள்கைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

3. பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான நிதி வசதிகள் குறைவாக இருப்பினும், அவை நாட்டின் இயற்கை வளங்களைச் சிறப்பாக உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பயன்படுத்துவதற்குச் செலவிடப்படுகின்றன.

4. சமதர்ம முறையைப் போலன்றி இம் முறையில் மக்கள் பல நிலைகளில் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பெற்றுள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கது அரசியல் சுதந்திரமாகும்.

5. தனியார் சொத்துரிமை அனுமதிக்கப்படுவதால், மக்களில் பலரும் கடின உழைப்பைத் தந்து அதிக வருமானத்தை ஈட்ட விழைகின்றனர்.

6. அவசியப் பண்டங்களின் விலையை அரசு நிர்ணயித்தாலும், பல ஆடம்பர-வசதிப் பொருள்களின் விலை சந்தையில் நிலவும் தேவை-அளிப்புச் சக்திகளுக்கேற்பவே அமைகிறது.

7. தனியார் துறை கொள்ளை இலாபம் பெறுவதை அரசு அனுமதிப்பதில்லை.

8. நாட்டின் தொழில் முன்னேற்றத்தின் ஒரு பகுதி தனியார் துறையால் ஏற்கப்படுகின்றது. இதனால், அரசின் நிர்வாகச் சுமையானது பெருமளவு குறைகிறது.

**குறைபாடுகள்**

1. கலப்புப் பொருளாதார முறையில் பொதுத்துறை படிப்படியாக வளர்ந்து, தனியார் துறையின் செல்வாக்குக் குறையும். ரஷ்யாவின் பொருளாதார வரலாறு இதை உணர்த்துகிறது.

2. இம் முறையின்மூலம் முதலாளித்துவத்தின் நன்மைகளைப் பெற இயலாது. தனியார் துறைக்குப் போதுமான சுதந்திரம் வழங்கப்படாமையே இதற்குக் காரணமாகும்.

3. அரசு துறை, தனியார் துறை, தனியார்-அரசு கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை போன்ற பல துறைகள் இருப்பதால் அரசின் நிர்வாகத்தில் குழப்பங்கள் தோன்றும். எவ்வகைத் தொழில்களை எத் துறையில் அனுமதிப்பது என்பது பற்றிய தீர்மானங்களை எடுப்பதில் சிக்கல் தோன்றுகிறது. வரிவிதிப்பு, வரி வசூலிப்பு, நிதி உதவி, கொடைகள் அளித்தல் போன்றவையும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

4. கலப்புப் பொருளாதார முறை நாளடைவில் பொதுவுடைமை முறை தோன்றுவதற்குத் தூண்டுகோலாக அமையும்.

## V. பொதுவுடைமை (Communism)

தீவிரமான சமதர்ம முறையைப் பொதுவுடைமை எனலாம். பொதுவுடைமை முறையின் தந்தை எனக் கருதத்தக்கவர் கார்ல் மார்க்ஸ் ஆவார். பொதுவுடைமை முறையில் பொருள்களின் உற்பத்தியும், பங்கீடும் அரசாலோ, அரசின் நிறுவனங்களாலோ செய்யப்படுகின்றன. ஆக்கக் காரணிகள் அனைத்தையும் அரசு உடைமையாக்கிக் கொள்கிறது. தனியார் அவற்றின் மீது உரிமை கொண்டாட முடியாது. விவசாயிகள் நிலத்தை உடைமையாகக் கொண்டிருப்பதில்லை. தொழிற்சாலைகளும் தொழிலாளர்களுக்குச் சொந்தமில்லை. எல்லோரும் அரசுக்காகப் பணி புரிகிறார்கள். உழைப்பாளர்களின் உற்பத்தி அளவுக்கேற்ப ஊதியம் அமைகின்றது.

செல்வந்தர்கள் வறியவர்கள் என்ற வகுப்புகளற்ற சமுதாயத்தை அமைப்பதே பொதுவுடைமை முறையின் முக்கிய

நோக்கமாகும். இம் முறையில் முதலாளித்துவத்தின் எல்லாக் குறைபாடுகளும் தீர்க்கப்படுகின்றன. உற்பத்தியாளர்களிடையேயும், வாணிகர்களிடையேயும் போட்டி நிலவுவதில்லை. ஆக்கக் காரணிகள் உற்பத்தியை மிக உச்ச அளவில் பெறும் வகையில் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. உழைப்பாளர்களைச் சுரண்டுதல், தொழிலாளி-முதலாளி போராட்டம், வேலையின்மை, வாணிகச் சுழல், வருமானத்தில் ஏற்றத்தாழ்வு ஆகியவை பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் அமைந்திருப்பதில்லை. இம் முறையின் முடிவான நோக்கம் மக்கள் நலனைப் பெருக்குவதேயாகும். சீனாவில் முழுமையான பொதுவுடைமை முறை பின்பற்றப்படுகிறது. ரஷ்யாவிலும், சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கைக்கொள்ளப்பட்டுள்ள பொதுவுடைமை முறையை முழுமையானதாகக் கருத இயலாது.

## VI. நலம் காக்கும் அரசு (Welfare State)

உலக நாடுகள் பலவும் மக்களுடைய நலம் காக்கும் அரசுகளாகவே உள்ளன. நலம் காக்கும் அரசின் பணிகள் எண்ணற்றவையாகும். நலம்சார் நடவடிக்கைகளின் தன்மை நாடுகளிடையே வேறுபடுகின்றது. இவ்வகை அரசின் பணிகளை வரையறை செய்வதும் கடினமானதாகும். மக்களுடைய நலத்தைப் பெருக்க அரசுகள் கணக்கற்ற நடவடிக்கைகளை எடுக்கின்றன. உதாரணத்திற்கு அரசின் சமுதாய நலப் பணிகளைக் குறிப்பிடலாம்.

பலவிதமான அரசின் காப்பீட்டுத் திட்டங்கள் மக்களின் நலத்தைக் கூட்டுகின்றன. முதுமைக்கால ஊதியம், விபத்துக்கு எதிரான காப்பீடு, வேலையின்மைக்கு எதிரான காப்பீடு, உடல் நலக் குறைவைத் தவிர்ப்பதற்கான இலவச மருத்துவ வசதி போன்றவை இன்றைய நலம் காக்கும் அரசுகளால் அளிக்கப் படுகின்றன. இவை சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும் விழிப்புணர்ச்சியையும் தோற்றுவிக்கின்றன. சமுதாய நல நடவடிக்கைகளுக்கும் அரசுகள் ஆதரவளிக்கின்றன.

மக்கள் நலனைப் பெருக்குகின்ற அரசை உருவாக்குவதே உலக நாடுகளின் முக்கியக் குறிக்கோள் ஆகும். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. நலம் காக்கும் அரசு நிலையான வருமானத்திற்கு உறுதியளிக்கிறது. அது இலவசக் கல்வி அளிக்கிறது; வறுமையால் வாடும் மக்களின் துயரைத் துடைக்கிறது. குழந்தைகள் நலமும், பெண்டிர் நலமும் பேணப்படுகின்றன.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் அரசுகளும் நலம் காக்கும் அரசுகளே ஆகும். இந்தியாவிலும் நலம் காக்கும் அரசே உள்ளது. இங்குக் கிராம முன்னேற்றம், தொழிலாளர் நல முன்னேற்றம் வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவை அரசின் கடமைகளாக உள்ளன. பொருளாதார-சமுதாய-அரசியல் நீதியைக் காக்க நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படுகின்றன.

சமத்துவம், சமூகப் பாதுகாப்பு, சமதர்ம ஜனநாயகம், முழு வேலைவாய்ப்பு, தனியார் சுதந்திரம் ஆகியவையும் நலம் காக்கும் அரசால் அளிக்கப் பெறுகின்றன. நலம் காக்கும் அரசு உழைப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் பஞ்சப்படி, கிராக்கிப் படி, மருத்துவ வசதி, வீட்டு வசதி, திருமணக் கடன், கல்வி பெறுவதற்கான கடன், வீடு கட்டக் கடன், வீடு வாங்கக் கடன், பண்டிகைச் செலவுக்கான முன்பணம் போன்ற பலவற்றை அளிக்கிறது. நம் நாட்டில் குடும்பநலத் திட்டத்தாலும் மக்கள் நலம் பெறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு, இலவசக் கல்வி-மருத்துவம், விதவை மறுமணம், அநாதைகளுக்கான பாதுகாப்புப் போன்றவை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நலம்சார் நடவடிக்கைகளில் சிலவாகும். நலம் காக்கும் அரசு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நல்ல வாழ்க்கைத் தரத்தை அளிக்க முயற்சிக்கிறது. ஓர் உண்மையான நலம் காக்கும் அரசை நிலைநிறுத்துவதற்கு ஈடான நன்மை எதுவுமில்லை.

# 37. பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல்

## I. விளக்கம்

இன்றைய உலக நாடுகள் யாவும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியையே பெற்று வருகின்றன. ஒரு நாடு விரைவான வளர்ச்சியைப் பெற திட்டங்களே வரைந்து செயல்படுத்துதல் அவசியமாகின்றது. சோவியத் ரஷ்யா திட்டத்தினால்தான் மிகக் குறுகிய காலத்தில் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றது. இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகள் திட்டமின்றி வளர்ச்சியைப் பெற இயலாது. இந்தியப் பொருளாதாரம் ஓரளவு வளர்ந்துள்ளமைக்கு நிறைவேற்றப்பட்ட திட்டங்களே முக்கியக் காரணமாக அமைகின்றன.

சமதர்ம நாடுகளில் அரசு எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செய்கின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற முதலாளித்துவ நாடுகளிலும் சமூக நலனைக் காக்கச் சில வகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உலக நாடுகள் அனைத்தும் மக்களுடைய நலனைக் காக்கும் அரசுகளைப் பெற்றுள்ளமையால், திட்டமிடுதல் முக்கியத்துவம் அடைகின்றது.

வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டிலுள்ள வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு மொத்த ஆக்கம் அதிகரிக்கின்றது. திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும் அரசு பல அதிகாரங்களைப் பெற்றுள்ளது. திட்டமிடுதலில் கீழ்வரும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்:

(i) திட்டத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் உருவாக்குதல்;

(ii) திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கால வரம்பை நிர்ணயித்தல்;

(iii) பொருளாதாரத்தின் துறைவாரி முக்கியத்துவத்தை ஆய்தல்;

(iv) புள்ளி விவரங்களைச் சேகரித்தல்;

(v) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அமைப்புகளை நிறுவுதல்;

(vi) திட்டம் செயல்படும் நிலையை மதிப்பிடுவதற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல்.

திட்டமிடுதலின்மூலம் அரசு ஆக்கத்தை அதிகரிக்கும் வகையில் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டிவிடுகிறது. மக்களின் நலனைக் காப்பதற்காகச் சில பொருளாதார நடவடிக்கைகள் அரசால் நெறிப்படுத்தி, வழிப்படுத்தப்படுகின்றன.

## II. திட்டமிடுதலின் நோக்கங்கள்

பொருளாதாரத்திலுள்ள குறைபாடுகள் என்ற நோயைத் தீர்க்கத் திட்டமென்னும் சஞ்சீவி பயன்படுத்தப்படுகிறது. பொதுவாகத் திட்டமிடுதலில் பின்வரும் முக்கிய நோக்கங்கள் அமைந்துள்ளன:

### 1. தேசிய வருமான உயர்வு

திட்டத்தின்மூலம் தேசிய வருமானத்தையும், தலா வருமானத்தையும் உயர்த்துவது நோக்கமாக உள்ளது. எல்லாத் துறைகளிலும் திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற முதலீடு உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. உற்பத்திப் பெருக்கம் தேசிய வருமான உயர்வைத் தருகிறது.

### 2. உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தன்னிறைவு

நாட்டு மக்களின் பசியைப் போக்குவது அரசின் கடமையாகும். தொழில்துறைக்குத் தேவையான மூலப்பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதும் அவசியமாகும். எனவே, திட்டங்களில் இவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

### 3. விரைவான தொழில்துறை முன்னேற்றம்

தொழில்துறையில் முன்னேறுத நாடுகள் திட்டங்களின்மூலம் பெரிய தொழில்களையும், அடிப்படைத் தொழில்களையும் வளர்க்-

கின்றன. நம் நாட்டைத் தொழில்மயமாக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக முதலீடுகள் செய்யப்பட்டன.

### 4. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்

பொதுநலனைப் பெருக்குவது திட்டமிடுதலின் முக்கிய நோக்க மாகும். அதை அடைய வருமானத்தில் உள்ள ஏற்றத் தாழ்வு களைக் குறைப்பது அவசியமாகும். ஏழைகளின் நிலையை மேம் படுத்த, பணக்காரர்களின் மிகையான வருமானத்தில் ஒரு பகுதி வரிகளாக வசூலிக்கப்படுகிறது.

### 5. முழு வேலைவாய்ப்பு

வளர்ச்சியடைந்த நாடுகளில் பல பொருளாதாரப் பிரச்சினை களும் தீர்க்கப்பட்டு விடுகின்றன. எனினும், அவை முழு வேலை வாய்ப்பைப் பெறத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. இந்தியா போன்ற மக்கள் வளம் மிகுந்த நாடுகளில் வேலையின்மைச் சிக்கலைத் தீர்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. அதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

### 6. பொருளாதாரத்தின் துறைகளுக்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்

சில நாடுகளில் வேளாண்மை வளர்ச்சியடைந்து செல்வாக் கைப் பெற்றிருக்கும்போது, தொழில்துறை பின்தங்கி இருக்கக் கூடும். பொருளாதாரத்தில் வெவ்வேறு துறைகளுக்கும் இடையே சரிசம வளர்ச்சி அமைதல்வேண்டும். அப்போதுதான் மொத்த தேசிய ஆக்கத்தின் அளவு அதிகமாக அமையும். எனவே, வெவ் வேறு துறைகளுக்கும் இடையே சரிசம வளர்ச்சியைப் பெறுவதும் திட்டத்தின் நோக்கமாகிறது.

## III. திட்டமிடுதலின் இன்றியமையாமை

திட்டமிடப்படாத பொருளாதாரம் ஒழுங்காகச் செயல் படாது. பொருளாதார வளர்ச்சியை அதனுடைய இயல்பான போக்கிலேயே பெற மிக நீண்ட காலம் தேவைப்படுகிறது. ஆனால், திட்டங்களின்மூலம் மிகக் குறுகிய காலத்திலேயே பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம். அறிவியல் கண்டுபிடிப்புகளின்மூலம் விளையக்கூடிய நன்மைகளைப் பெறத் திட்டமிடுதல் அவசியமாகும்.

பின்வரும் காரணங்களுக்காகத் திட்டமிடுதல் பரிந்துரைக்கப் படுகிறது :

1. பொருளாதார நன்மைகளை மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கத் திட்டமிடுதல் தேவைப்படுகிறது. திட்டத்தின் மூலமே நாட்டிலுள்ள எல்லா வளங்களையும், மக்கள் யாவருடைய நலனுக்கும் உகந்த வகையில் பயன்படுத்தமுடியும்.

2. சந்தையில் தேவை-அளிப்புச் சக்திகளை அவற்றின் போக்கிற்கு விட்டுவிடுதல் மக்களின் நலனைப் பாதிக்கிறது. பொருள்களின் விலை நிலைபேறுக்கத்தைப் பெற அரசு தேவை-அளிப்புச் சக்திகளைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. உழைப்பாளர்கள் நியாயமான கூலியைப் பெறவும் அரசு வகை செய்கிறது.

3. தனி மனிதர்கள் சுயநலம் மிக்கவர்களாவர். எதையும் இலாப நோக்கிலேயே செய்வது மனித இயல்பு. அரசு பொதுநல நோக்கைக் கொண்டுள்ளதால், அது திட்டமிட்டு மக்களுடைய வருமானத்தை உயர்த்துகிறது.

4. வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்த அரசு அதிகளவு மூலதனத்தையும் எளிதாகத் திரட்ட இயலும்.

5. திட்டமிடுதலின் மூலமே வளர்ச்சியடையாத பொருளாதாரத்தில் உள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

6. செல்வ நாடுகள் வளர்ச்சி நிலையை நீடிக்கச் செய்யத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன.

7. பின்தங்கிய நாடுகளில் தொழில்துறை வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவும், மக்களுடைய நலனைக் கூட்டவும், நாட்டு வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## IV. பின்தங்கிய நாடுகளில் திட்டமிடுதலில் உள்ள சிக்கல்கள்

வளர்ச்சியடைந்த நாடுகளைக் காட்டிலும் பின்தங்கிய நாடுகளில் திட்டமிடுதலும், திட்டங்களை நிறைவேற்றுவதும் பல காரணங்களால் கடினமாக உள்ளன.

1. 'திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிக அதிகாரங்களைக் கொண்ட, திறமையான, ஊழலற்ற நிர்வாகம் தேவை' என்று ஆர்தர் லூயிஸ் குறிப்பிடுகின்றார். ஆனால், பல பின்தங்கிய நாடுகளில் வலுவான அரசியல் அமைப்பு அமைந்திருப்ப

தில்லை. அரசியல்வாதிகளும் நிர்வாகிகளும் திறமை குறைந்தவர் களாகவும், ஊழல் மிக்கவர்களாகவும் இருக்கின்றனர்.

2. வளரும் நாடுகளில் மக்கள்தொகைப் பிரச்சினை பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது.

3. அரசு வரிவிதிப்பின்மூலம் போதுமான நிதி வசதியைத் திரட்ட முடிவதில்லை. அதிகக் காகிதப் பண வெளியீடு பண வீக்கத்தைத் தோற்றுவிக்கிறது. குறைந்த மூலதனத் திரட்சியால் குறைவான முதலீட்டையே செய்ய முடிகிறது.

4. பின்தங்கிய நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தின் முதல் சில நிலைகளில் அதிக மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. ஆனால், இறக்குமதியைவிட எற்றுமதி மதிப்புக் குறைவாக இருப்பதால், பாதக அயல்நாட்டு வாணிகச் செலுத்துநிலை தோன்றுகிறது.

5. பல வளரும் நாடுகள் ஜன்நாயகச் சமதர்ம முறையைப் பின்பற்றுகின்றன. எனவே, சோவியத் ரஷ்யா போன்று அல்லா மல், இவை திட்டமிடுதலில் முடிவுகளை விரைவாக எடுக்க முடிவ தில்லை.

6. தேக்க நிலையில் உள்ள வேளாண்மைத் துறை பொரு ளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்படாமையால், வேளாண்மை உற்பத்தி மழைப் பொழிவுக்கேற்ப அமைகிறது. வேளாண்மையின் பின்தங்கிய நிலை தொழில்துறை வளர்ச்சியையும் பாதிக்கிறது.

7. போதுமான அளவுக்கு வெளிநாட்டுக் கடன் வசதிகளை யும் உதவிகளையும் வளராத நாடுகள் பெற முடிவதில்லை.

## V. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள்

1934ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற 'இந்தியாவிற்கான திட்டமிட்ட பொருளாதாரம்' (Planned Economy of India) என்னும் தன்னுடைய நூலில், கீர்த்தி பெற்ற பொருளியலறிஞ ராகிய சர் விஸ்வேசரய்யா திட்டமிடுதலின் தேவையை அறி வுறுத்தினர். 1937-ல் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஜவ ஹர்லால் நேரு தலைமையில் தேசியத் திட்டக் கமிட்டியை அமைத் தது. 1943-ல் பம்பாயின் முதன்மையான தொழிலதிபர்கள் எட்டுப் பேர்கள் சேர்ந்து 'பம்பாய்த் திட்டத்தை' (Bombay Plan)

வெளியிட்டனர். அதே சமயத்திலேயே எம். என். ரே என்பவரின் 'மக்களுக்கான திட்டம்' (People's Plan) வெளியிடப்பெற்றது. இந்திய அரசு 1944ல் திட்ட — வளர்ச்சித் துறையை ஏற்படுத்தியது. எனினும், இந்தியா விடுதலை அடையும் வரை திட்டமிடுதலில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

1950ஆம் ஆண்டு இந்திய அரசு ஜவஹர்லால் நேருவின் தலைமையில் இந்தியத் திட்டக் குழுவை அமைத்தது. அதன் பிறகு வளர்ச்சிக்கான திட்டங்களை அரசு செயல்படுத்தத் தொடங்கியது.

## முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951—1956)

வேளாண்மை, போக்குவரத்து, மின்சார உற்பத்தி ஆகியவற்றில் மேம்பாட்டைப் பெறுவதன்மூலம் இத் திட்டம் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கருதியது. உயரும் விலைகளை நிலைப்படுத்துவது, மூலப் பொருள்களின் பற்றுக்குறையைத் தவிர்ப்பது, அவசியமான நுகர் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது, வாழ வகையற்றவர்களுக்குப் புனர் வாழ்வளிப்பது போன்றவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இரண்டாவது உலகப் போரினாலும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தமையாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சீர்குலைவுகளைச் சீரமைக்கவும் கருதப்பட்டது. திட்டக்காலத்தில் தேசிய வருமானத்தை 11 சதவீதம் அதிகரிப்பது, வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது போன்றவையும் பிற நோக்கங்களாக அமைந்தன.

## திட்டச் செலவீடு

முதல் திட்டத்தில் பொதுத் துறையில் செலவிட ரூ. 2,069 கோடி ஒதுக்கப்பட்டது. பிறகு, அது ரூ. 2,356 கோடியாக உயர்த்தப்பட்டாலும், உண்மையில் செலவிடப்பட்டது ரூ. 1,960 கோடியே ஆகும். வேளாண்மைத்துறையின் மேம்பாட்டிற்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன் மேம்பாட்டிற்கு உதவக்கூடிய மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற வசதிகளும் பெருக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சித் திட்டத்தாலும் வேளாண்மைத் துறை பயனடைந்தது. இவற்றிற்காக ரூ. 861 கோடி (மொத்தச் செலவீட்டில் 44 சதவீதம்) ஒதுக்கப்பட்டது. இரண்டாவது முக்கியத்துவம் பெற்றவை போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளாகும். மொத்த ஒதுக்கீட்டில் இதற்கான செலவு 27 சதவீதம் ஆகும். கல்வி, ஆரோக்கியம், வீட்டு வசதி ஆகியவற்றிற்காக 22 சதவீதம், பெரிய தொழில்களின் வளர்ச்சிக்காக 5.8 சதவீதம், சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்காக 2.1 சதவீதம் செலவிடப்பட்டது.

**சாதனைகள்**

பின்பு நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது முதல் ஐந்தாண்டுத் திட்டமேயாகும். தட்பவெப்ப நிலைகள் சாதகமாக இருந்தமையால் வேளாண்மை உற்பத்தி சிறப்பாகப் பெருகியது. வெளிநாட்டு வாணிக நிலையும் சாதகமாகவே இருந்தது. இத் திட்டக் காலத்தில் தேசிய வருமானம் 18 சதவீதம் கூடியது. இதன் மூலம் சமுதாய வளர்ச்சித் திட்டமும் (Community Development Programme), தேசிய விரிவாக்கப் பணியும் (National Extension Service) கைக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

முதல் திட்டக் காலத்தில் முதலீட்டு வீதம் தேசிய வருமானத்தின் 5 சதவீதத்திலிருந்து 7.3 சதவீதமாக உயர்ந்தது; தலா வருமானம் 11 சதவீதம் அதிகரித்தது ; வேளாண்மை உற்பத்தி 19 சதவீதம் கூடியது. திட்டம் முடிவடையும்போது, கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகள் 25 சதவீத கிராம மக்களுக்குக் கிடைத்தன. உணவுப் பற்றுக்குறை குறைக்கப்பட்டது. விலைகள் 13 சதவீதம் குறைந்தன. பருத்தி உற்பத்தி 45 சதவீதம் கூடியது குறிப்பிடத் தக்கதாகும்.

சமூக நீதியை நிலைநாட்ட ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டுக் குத்தகைச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. 1951–52-ல் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறை ரூ. 162.6 கோடியாக இருந்தது. ஏற்றுமதிப் பெருக்கத்தினால், 1955–56-ல் அயல் நாட்டுச் செலுத்து நிலை இருப்பில் ரூ. 6.7 கோடி உபரி தோன்றியது.

**மதிப்பீடு**

முதல் திட்டத்தை நிறைவேற்றுவதில் சில குறைபாடுகள் அமைந்திருந்தன. எல்லாத் துறைகளிலும் சிறப்பான வளர்ச்சி ஏற்படவில்லை. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவில்லை. நிலச் சீர்திருத்தங்களைச் செய்வதில் பல குறைகள் இருந்தன. சில குறைபாடுகளைப் பெற்றிருந்தாலும், முதல் திட்டத்தைப் பல காரணங்களால் வெற்றிகரமான திட்டம் என்றே கருதவேண்டும். வேளாண்மை, சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான கடன் வசதிகள் பெருகின. பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அரசின் பல துறைகளிலும் நிர்வாகத் திறமை வளர்ந்தது. முதல் திட்டம் பொருளாதாரத்தில் இயக்க நிலையான போக்கை ஏற்படுத்தியது.

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—1961)

முதல் திட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றி, நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டுமென்ற இலட்சியமான நோக்கத்தைத் தோற்றுவித்தது. இத் திட்டக் காலத்தில்தான் சமதர்மபாணிச் சமுதாயத்தை (Socialistic Pattern of Society) அமைக்கும் கொள்கையை அரசு ஏற்றது. பல பெரிய எஃகுத் தொழிற்சாலைகள் பொதுத் துறையில் அமைக்கப்பட்டன. இத் திட்டம் தொழில் துறை வளர்ச்சிக்கான திட்டமாக இருந்தது.

இரண்டாவது திட்டத்தின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமைந்திருந்தன :

1. அடிப்படைத் தொழில்களுக்கும், பேரளவுத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளித்து நாட்டைத் தொழில் மயமாக்குவது;

2. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தேசிய வருமானத்தைக் கணிசமான அளவுக்குப் பெருக்குவது ;

3. வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது ;

4. செல்வத்திலும் வருமானப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது.

### திட்டச் செலவீடு

இரண்டாவது திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ. 7,200 கோடியாகும். இதில் பொதுத் துறைக்கு ரூ. 4,800 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 2,400 கோடியும் ஒதுக்கப் பட்டது. பின்பு அந்நியச் செலாவணிக் பற்றுக்குறையால், பொதுத் துறை முதலீடு ரூ. 4,572 கோடியாகக் குறைக்கப் பட்டது. புதிய வரிகளின் விதிப்பு, அயல் நாட்டு உதவி, பற்றுக் குறை நிதியாக்கம் (deficit financing) ஆகியவற்றின் மூலம் அரசு நிதி வசதியைப் பெருக்கக் கருதியது.

முதல் திட்டத்தை விட இரண்டாவது திட்டத்தில் எல்லாத் துறைகளிலும் முதலீட்டின் அளவு கூடியது. தொழில் துறை வளர்ச்சிக்குத் தலையாய முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அடிப்படைத் தொழில்கள், பேரளவுத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான முதலீடு மொத்த முதலீட்டில் 24 சதவீதமாக இருந்தது. போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளுக்கு 29 சதவீதம், மின்சாரம்-நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கு 18 சத

வீதம், வேளாண்மை வளர்ச்சிக்கு 12 சதவீதம் ஒதுக்கீடு செய்யப் பட்டது.

**சாதனைகள்**

இரண்டாவது திட்டக் காலத்தில் தேசிய வருமானம் 20 சத வீதம் அதிகரித்தது; நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 25 சத வீதம் ஆகும். நீண்ட காலத்தில் பலன் அளிக்கக்கூடிய துறைகளில் அதிக முதலீடு செய்யப்பட்டது. மூலதனச் செறிவுள்ள தொழில் களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கம் 10.3 சதவீதம் ஆக இருந்ததால், தலா வருமானம் 8 சதவீதம் மட்டுமே கூடியது.

பல முக்கியமான துறைகளிலும் உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரித்தது. எடுத்துக் காட்டாக உணவுத் தானியங் களின் உற்பத்தி 65.8 மில்லியன் டன்னிலிருந்து 76.0 மில்லியன் டன்னாகவும், கரும்பு உற்பத்தி 6 மில்லியன் டன்னிலிருந்து 8 மில்லியன் டன்னாகவும், எண்ணெய் வித்துகளின் உற்பத்தி 5.6 மில்லியன் டன்னிலிருந்து 7.1 மில்லியன் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 4 மில்லியன் பேல்களிலிருந்து 5.1 மில்லியன் பேல்களா கவும் உயர்ந்தன. நீர்ப்பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு 56.2 மில்லியன் ஏக்கரிலிருந்து 70 மில்லியன் ஏக்கராகக் கூடியது.

தொழில் துறை உற்பத்தி ஆண்டொன்றுக்கு 7 சதவீதம் அதிகரித்தது. பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா ஆகிய இடங் களில் பொதுத் துறையின் கீழ் இரும்பு-எஃகு உருக்காலைகள் அமைக்கப்பட்டன.

இரயில், சாலை, கப்பல், விமானப் போக்குவரத்துக்கள் விரிவாக்கம் பெற்றன. சமூக நலப் பணிகளும் அதிகரிக்கப் பெற்றன.

இரசாயன-பொறியியற் தொழில்களோடு சிறு தொழில் களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்பட்டது. சிமென்ட், நிலக்கரி, அலுமினியம் ஆகியவற்றின் உற்பத்தி கூடியதோடு கார்கள், சைக்கிள்கள், சர்க்கரை, பருத்தித் துணிகள் போன்ற நுகர் பொருள்களின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்தது.

இரண்டாவது திட்டக் காலத்தில் 8 மில்லியன் பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்குமென இலக்கிடப் பெற்றது. ஆனால், வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் 6.5 மில்லியன் பேர்கள் மட்டுமேயாகும்.

### மதிப்பீடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்குத் தேவையான 'உள் ளமைப்பு' (infra-structure) வசதிகள் பெருகின. 1950–51-ல் 1.3 மில்லியன் டன்னாக இருந்த எஃகு உற்பத்தி 1960–61-ல் 2.6 மில்லியன் டன்னாக உயர்ந்தது. இத்திட்டத்தின் தொடக்கத் திலிருந்தே பின்வரும் பலவகையான சிக்கல்கள் உருவெடுத்தன; (1) அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ; (2) வேளாண்மையிலும் தொழில் துறையிலும் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி பெரு காமை; (3) பணவீக்கத்தால் பொருள்களின் விலை உயர்வு: (4) கடன்கள் மற்றும் சிறு சேமிப்புகளின் அளவில் குறைவு; (5) போதுமான அளவுக்கு நிதி வசதிகள் பெருகாமை; (6) திட்டச் செலவுகளின் அதிகரிப்பு.

இத்திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தப்படாமையால்தான் பல பிரச்சினைகள் உருவாயின என்று பலர் கருதுகின்றனர். இரண்டாவது திட்டம் வெற்றியைப் பெறுமைக்குக் குறைந்த மழைப்பொழிவும் முக்கியக் காரண மாகும்.

## மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—1966)

இந்தியப் பொருளாதாரத்தைச் சுயமாக வளரும் தன்மை கொண்டதாக மாற்ற வேண்டுமென்று இத் திட்டம் கருதியது. உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது, பிற வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியைக் கூட்டுவது, ஆதாரத் தொழில்களை விரிவுபடுத்துவது, தேசிய வருமானத்தை ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் அதிகரிப்பது, வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது, ஏற்றுமதியைப் பெருக்குவது, மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவது, வேலை வாய்ப்புகளை உயர்த்துவது ஆகியவை இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்தன.

### திட்டச் செலவீடு

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 10,400 கோடியாகும். அதில் பொதுத் துறைக்காக ரூ. 6,300 கோடியும், தனியார் துறைக்காக ரூ. 4,100 கோடியும் ஒதுக்கப் பட்டது. இரண்டாவது திட்டம் அளித்த படிப்பினையால், மூன்றா வது திட்டம் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்து வத்தைத் தந்தது. மொத்த நிதிச் செலவீட்டில் வேளாண்மை,

நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி ஆகியவற்றிற்கு 36 சத வீதமும், போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளுக்கு 20 சத வீதமும் ஒதுக்கீடு செய்யப்பெற்றது.

**சாதனைகள்**

இத்திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் ஓரளவுக்குப் பல துறைகளின் வளர்ச்சியும் அமைந்திருந்தது. 1965–66-ல் இந்திய-பாகிஸ்தான் போரினால் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. 1962-ல் சீனர்களின் ஊடுருவலாலும் பாதுகாப்புச் செலவு உயர்ந்தது.

உணவு உற்பத்தி அளவுகள் 1960–61-ல் 82 மில்லியன் டன்னாகவும், 1962–63-ல் 78.5 மில்லியன் டன்னாகவும், 1964–65-ல் 89 மில்லியன் டன்னாகவும், 1965–66-ல் 72 மில்லியன் டன்னாகவும் அமைந்திருந்தன. உணவு உற்பத்தியில் இருந்த அதிக ஏற்றத் தாழ்வுகளை இப்புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. தொழில் துறை உற்பத்தி ஆண்டொன்றுக்கு 14 சதவீதம் உயரவேண்டுமென்று குறியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது; ஆனால், உண்மையான உற்பத்தி ஆண்டொன்றுக்கு 5.7 சதவீதம் ஆக மட்டுமே அதிகரித்தது.

வேளாண்மை உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 5.4 சத வீதம் கூட்ட வேண்டுமெனக் கருதப்பட்டது. ஆனால், முதல் நான்கு ஆண்டுகளுக்குமான சராசரி உற்பத்தி உயர்வு 2.8 சத வீதமாக மட்டுமே அமைந்தது.

தொழில் துறையின் வளர்ச்சி இலக்கிடப்பட்ட அளவுக்குக் குறைவாகவே இருந்தாலும், சர்க்கரை, சிமென்ட், நெசவு, மற்றும் பொறியியற் தொழில்களின் உற்பத்தித் திறன் கூடியது. செயற்கை இழைத் துணிகளின் நெசவும் அதிகளவில் மேற் கொள்ளப்பட்டது. மின்சார உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. இருப்புப் பாதைகளின் நீளம் 7,800 கிலோ மீட்டரிலிருந்து 9,600 கிலோ மீட்டராக நீட்டிக்கப்பெற்றது. தார் சாலைகளின் நீளம் 2,35,000 கிலோ மீட்டரிலிருந்து 2,84,000 கிலோ மீட்டராகக் கூடியது.

கல்வி, பொது ஆரோக்கியம், மருத்துவ உதவி போன்ற சமுதாயப் பணிகள் கணிசமாகப் பெருகின.

**மதிப்பீடு**

மூன்றாவது திட்டம் சிறப்பான வெற்றியைப் பெறவில்லை என்பதைத் திட்டக் குழுவே ஏற்றுக் கொண்டுள்ளது. இத் திட்டக்

காலத்தில் உணவுப் பிரச்சினை தீவிரமடைந்தது. அயலகச் செலாவணிப் பற்றுக்குறை மிகுந்தது. நெசவுத் தொழில், சர்க்கரைத் தொழில் போன்றவை மூலப்பொருள் பற்றுக்குறையால் பாதிக்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சி குறைந்த வேகத்திலேயே அமைந்தது. பண வீக்கத்தாலும் உற்பத்திக் குறைவாலும் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. விலைகளின் உயர்வுக்குப் பண வருமானப் பெருக்கமும் காரணமாக அமைந்தது. வேலை வாய்ப்புகளும் குறைந்த அளவுக்கே பெருகின.

## ஆண்டுத் திட்டங்கள் (Annual Plans)

இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் தோல்வியாலும், பிற காரணங்களாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அரசு மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்தது. இதன் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பிறகு, மூன்றாண்டுக் காலத்திற்கு வருடாந்திரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முதல் ஆண்டுத் திட்டம் (1966—67)

முதல் ஆண்டுத் திட்டத்திற்காக ரூ. 2,081 கோடி நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டது. எனினும், 1966—67-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 2,221 கோடியாக அமைந்தது. 1965—66-ஆம் ஆண்டைப் போலவே 1966—67-ஆம் ஆண்டிலும் வேளாண்மை உற்பத்திக்குப் பாதகமான பருவச் சூழ்நிலை அமைந்திருந்தது. இத் திட்ட ஆண்டில் உணவு உற்பத்திக் குறியிலக்கு 97 மில்லியன் டன்னாக நிர்ணயிக்கப்பட்டிருந்தபோது, உண்மை உற்பத்தி 76 மில்லியன் டன்னாக மட்டுமே இருந்தது. இதனால், வேளாண்மைப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை ஏற்பட்டமையால் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டது. இது மேலும் விலைகள் உயர்வதற்குக் காரணமானது.

## இரண்டாவது ஆண்டுத் திட்டம் (1967—68)

இத் திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ. 2,246 கோடியாகும். முதல் ஆண்டுத் திட்டத்தைப் போலவே, இத்திட்டத்திலும் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப் பெற்றது. சமூகப் பணிகளுக்குக் குறைவான நிதியே ஒதுக்கப்பட்டது. சாதகமான பருவச் சூழ்நிலையால், உணவுத் தானியங்களின் உற்பத்தி 95 மில்லியன் டன்னாக உயர்ந்தது. தேசிய வருமானத்தில் 12 சதவீத உயர்வு ஏற்படுமெனத் திட்டமிடப்

பட்டது. எனினும், தேசிய வருமானம் 9 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. ஏற்றுமதி மதிப்பின் இலக்களவு ரூ. 1,275 கோடியாகும். ஆனால், உண்மையான ஏற்றுமதி மதிப்பு ரூ. 1,197 கோடியாக அமைந்தது.

## மூன்றாவது ஆண்டுத் திட்டம் (1968—69)

இத்திட்டத்திற்கு ரூ. 2,337 கோடி நிதி ஒதுக்கீடாக நிர்ணயிக்கப்பட்டது. உணவுத் தானியங்களின் உற்பத்திப் பெருக்கத்தால், அவற்றின் விலைகள் சிறிது குறைந்தன. வெளிநாட்டு வாணிகமும் வளர்ச்சியடைந்தது. 1968—69-ல் ஏற்றுமதி 17.5 சதவீதம் உயர்ந்தது. ஆயினும், இறக்குமதிகள் குறைக்கப் பட்டன.

பொதுவாக, ஆண்டுத் திட்டங்களால் பொருளாதாரத்தில் நல்ல விளைவுகளே தோன்றின. அவை வீழ்ச்சியடைந்த இந்தியப் பொருளாதாரத்தை ஓரளவு மீட்சியடையச் செய்தன.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969—1974)

இத்திட்டம் 1966-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு இருக்கவேண்டும். திட்டமிடுதலில் கண்ட தோல்வியால்தான் இதை மேற்கொள்வதற்குக் கால தாமதம் ஏற்பட்டது என்று சிலர் கருதுகின்றனர். திட்டமிடுதலைத் தள்ளி வைப்பது தவிர்க்க முடியாதது என்று வேறு சிலர் குறிப்பிடுகின்றனர்.

## திட்டச் செலவீடு

மே 18, 1970 அன்று பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட நான்காவது திட்ட ஆவணத்தின்படி, திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ. 24,882 கோடியாகும். அதில் பொதுத் துறைக்கு ரூ. 15,902 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 8,980 கோடியும் ஒதுக்கப்பெற்றது.

பொதுத் துறைக்கான ரூ. 15,902 கோடிப் பணத்தில் வேளாண்மைக்கும் அதைச் சார்ந்த துறைகளுக்கும் 17.2 சத வீதமும், நீர்ப்பாசனம்—வெள்ளத் தடுப்பிற்கு 15.4 சதவீதமும், தொழில் துறை—சுரங்கத் தொழிலுக்கு 21 சதவீதமும், போக்கு வரத்து—தகவல் தொடர்பு வசதிகளுக்கு 20.4 சதவீதமும் ஒதுக் கீடுகள் செய்யப்பட்டன. செலவீட்டுத் தொகைகள் மூன்றாவது திட்டத்தைப் போன்று இரண்டு மடங்குக்கும் அதிகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**நோக்கங்கள்**

'உறுதிப்பாட்டோடு வளர்ச்சியைப் பெறுவது', 'தன்னைத் தானே சார்ந்திருக்கும் நிலையைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்துவது' ஆகியவை நான்காவது திட்டத்தின் இலட்சியக் குறிக்கோள்களாக இருந்தன. இத்திட்டத்தின் பிற நோக்கங்களாவன:

1. 1980–81-ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீத வளர்ச்சியைப் பெறுவது;

2. உணவுத் தானியங்கள் மற்றும் அவசியப் பொருள்களின் விலை மட்டத்தை நிலைப்படுத்துவது ;

3. வேளாண்மை உற்பத்தியை ஆண்டொன்றுக்குச் சுமார் 5 சதவீதம் உயர்த்துவது;

4. வளர்ச்சிப் பணிகளில் கிராம மக்களைப் பங்கு பெறச் செய்து, அவற்றின் நன்மைகளை அவர்கள் பெறுமாறு செய்வது;

5. பி.எல். 480 திட்டத்தின் கீழ் பெறப்படும் உணவுத் தானியங்களின் இறக்குமதியை நிறுத்துவது;

6. விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது;

7. வட்டார வளர்ச்சி நிலைகளில் உள்ள சரிசமனற்ற தன்மையை நீக்குவது;

8. கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக் கூட்டுறவுகள், நுகர்வோர் கூட்டுறவுகள் ஆகியவற்றை வளர்ப்பது;

9. ஏற்றுமதியை ஆண்டொன்றுக்கு 7 சதவீதமாகப் பெருக்கி, உணவல்லாத பிற பொருள்களின் இறக்குமதியை ஆண்டொன்றுக்கு 5 சதவீதமாகக் குறைப்பது.

**நிதியாக்க முறைகள்**

நான்காவது திட்டத்தில் பொதுத் துறை முதலீட்டிற்கான நிதி வசதி கீழ்வரும் முக்கியமான ஆறு வழிகளில் பெறப்பட்டது:

(1) நடப்பு வரி வருவாயின் உபரி இருப்பு ;

(2) பொதுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபம்;

(3) வருங்கால சேம நிதிகளில் (Provident Funds) இருந்து கடன்;

(4) புதிய வரி விதிப்பு;

(5) வெளிநாட்டு உதவி;

(6) பற்றுக்குறை நிதியாக்கம்.

**வளர்ச்சி முறை**

நீர்ப்பாசன வசதிகள் உள்ள இடங்களில் வேளாண்மை வளர்ச்சிக்காக அதிக முதலீடுகள் செய்யப்பட்டன. தொழில் வளர்ச்சிக் கொள்கை, கனரக–ஆதாரத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் தந்தது. இத் திட்டக் காலத்தில் ரூ. 110 கோடி முதலீட்டில் தமிழ் நாட்டில் சேலத்திலும், கர்னாடகத்தில் ஹோஸ்பெட்டிலும், ஆந்திரப் பிரதேசத்தில் விசாகப்பட்டினத்திலும் மூன்று இரும்பு-எஃகு உருக்காலைகள் அமைக்க இருப்பதாக ஏப்ரல் 17, 1970 அன்று பிரதம மந்திரி அறிவித்தார்.

இத் திட்டத்தில் வேளாண்மை உற்பத்தியிலும், வெளிநாட்டு உதவியைப் பெறுவதிலும் உள்ள உறுதியற்ற நிலையை நீக்கக் கருதப்பட்டது. வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் வரி விதிப்பு முறை அமைந்தது. நான்காவது திட்டக் காலத்தில் தேசிய வருமானம் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீதமும், தலா வருமானம் ஆண்டொன்றுக்கு 3 சதவீதமும் உயருமென மதிப்பிடப்பெற்றது.

**மதிப்பீடு**

நான்காவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மொத்த நிதி ஒதுக்கீடாகிய ரூ. 15,902 கோடியில் 50.1 சதவீதம் (ரூ. 7,930 கோடி) செலவிடப்பட்டது. அந்த ஆண்டுகளில் தேசிய வருமான வளர்ச்சி குறியிலக்கிற்குக் குறைவாகவே இருந்தது. எனினும், முதல் இரண்டு ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்தியின் அளவு எதிர்பார்த்ததை விட உயர்வாக அமைந்தது. ஆனால், 1971–72-ல் வேளாண்மை உற்பத்தி 3.8 சதவீதம் குறைந்தது. இதைப் போன்றே உணவுத் தானியங்களின் உற்பத்தி வீதம் முதல் இரண்டு ஆண்டுகளிலும் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீதத்தை விட அதிகமாக இருந்தாலும், மூன்றாவது ஆண்டில் உற்பத்தி தாழ்வடைந்தது.

பல துறைகளிலும் உற்பத்தியானது குறியளவுகளை எட்டவில்லை. இதற்கான நான்கு முக்கியக் காரணங்களாவன : (1) இந்திய–பாகிஸ்தான் போர்; (2) பங்களா தேஷ் அகதிகளின் வருகை; (3) வெளிநாட்டு உதவியைப் பெறுவதில் இருந்த

உறுதியற்ற நிலை; (4) பருவச் சூழ்நிலைகள் வேளாண்மை உற்பத்திக்குச் சாதகமாக அமையாமை.

இவ்விதமான பல சிக்கல்கள் 1971–72-ஆம் ஆண்டில் உருவாயின. இச் சிக்கல்களை அரசு திறமையாகச் சமாளித்தது. நிதி வசதிகள் அதிக வரி விதிப்பின் மூலம் பெருகின. இத் திட்டம் முடிவடையும்போது வேளாண்மை உற்பத்தி சிறப்பாக உயர்ந்திருந்தது. எனினும், தொழில் துறை வளர்ச்சி திருப்திகரமாக அமையவில்லை. நான்காவது திட்டத்தின் சராசரி வளர்ச்சி 5.7 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

## ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974—1979)

நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும், இந்திய மக்கள் தொகையில் பெருமளவினர் வறுமையிலேயே உழல்வதைத் திட்டக் குழுவே குறிப்பிட்டுள்ளது. இதனால், வறுமையோடு போரிட புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டிலிருந்து வறுமையை விரட்டுவதற்கு மக்களுடைய சிந்தனையிலும் செயல்பாட்டிலும் புரட்சி தேவை என்று பிரதம மந்திரி கூறியுள்ளார்.

## திட்டச் செலவீடு

இத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதிச் செலவீட்டைப் போன்று இரு மடங்குக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. திட்டத்திற்கான மொத்த நிதி வசதி ரூ. 51,165 கோடியாக அமையுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் பொதுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 35,595 கோடியாக அமையும். இத்தொகையில் வேளாண்மைக்காக ரூ. 7,000 கோடியும், தொழிற் துறைச் சுரங்கத் தொழிலுக்காக ரூ. 7,700 கோடியும், மின்சார உற்பத்திக்காக ரூ. 5,700 கோடியும், போக்குவரத்து–தகவல் தொடர்பு வசதிகளுக்காக ரூ. 6,850 கோடியும், கல்விக்காக ரூ. 2,250 கோடியும், நகர்ப்புற மேம்பாடு – குடிநீர் அளிப்புக்காக ரூ. 1,100 கோடியும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டுமானப் பணி, வாணிகம்–தானியச் சேமிப்புக் கிடங்குகள், வீட்டு வசதி, வங்கி–காப்பீட்டு வசதிகள், பொது நிர்வாகம், விஞ்ஞான ஆராய்ச்சி, சுகாதாரத் திட்டம், குடும்ப நலத் திட்டம், சத்துணவுத் திட்டம், மக்கள் நலத் திட்டம் போன்றவற்றிற்கும் நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

**நோக்கங்கள்**

ஐந்தாவது திட்டம் பின்வரும் முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது :

1. வறுமையையும் வேலையின்மையையும் எதிர்த்துப் போரிடுதல்;

2. பொருள்களின் உற்பத்தியை உச்சநிலைக்குப் பெருக்குதல்;

3. கல்வி, ஆரோக்கியம், மருத்துவம், குடிநீர், சத்துணவு, வீட்டு வசதி போன்ற சமூகநலப் பணிகளை மேம்படுத்துதல்;

4. வறியவர்களுக்குச் சாதகமாக உற்பத்திச் சாதனங்களைப் பங்கிடுதல்;

5. தீவிர முறையில் நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல்;

6. ஆடம்பர நுகர்வைக் கட்டுப்படுத்துதல்;

7. தொழில் துறையில் அமைதியைக் காத்தல்;

8. அவசியப் பொருள்களின் விலைகளை நிலைப்படுத்துதல்;

9. சமூக நீதியோடு வளர்ச்சியைப் பெறுதல்;

10. பொருளாதாரத்தைத் தன்னைச் சார்ந்து தானே வளரும் நிலைக்கு மாற்றுதல்.

இத் திட்டம் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீத வளர்ச்சியைப் பெறக் கருதியுள்ளது. வெளிநாட்டு உதவியின் அளவு குறைக்கப் படும். தற்பொழுது இந்தியாவில் 220 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் (poverty line) கீழ் வாழ்கின்றனர். அவர்களுடைய சராசரி மாத வருமானம் 25 ரூபாய்க்கும் குறைவானதாகும். வேலையின்மை, குறை வேலையுடைமை (under-employment) ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு செயல்படுத்தி வருகிறது. வேளாண்மையில் தேவைக்கு அதிகமான உழைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அதைக் குறைக்கச் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பின்வரும் வழிகளில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது : (1) சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள்; (2) நில வளப் பாதுகாப்பு; (3) கால்நடை வளர்ப்பு; (4) காடுகள்,

மீனளம் ஆகியவற்றின் மேம்பாடு; (5) விற்பனைக் கிடங்கு வசதிகளின் பெருக்கம்; (6) சிறுதொழில்களின் முன்னேற்றம்; (7) சமூகப் போக்குவரத்தின் வளர்ச்சி. ஐந்தாவது திட்டம் 1978–79ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளிநாட்டு உதவியைப் பெறுவதற்கான தேவை இராது எனக் கருதுகிறது.

## VI. நிறைவுரை

நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களும், மூன்று வருடாந்தரத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்ட பிறகுங்கூட வறுமை நீங்க வில்லை. கலப்புப் பொருளாதார முறையின் மூலம் நாம் முதலா ளித்துவம், பொதுவுடைமை ஆகிய இரு முறைகளின் நன்மை களையும் பெற விழைகிறோம். ஆனால், நமக்குக் கிடைத்துள்ளமை, அவ்விரு முறைகளின் பெரும்பாலான தீமைகளேயாகும். இந்தியப் பொருளாதாரம் குறைவான வேகத்திலேயே வளர்ந்து வருகிறது. பொதுத் துறை நிறுவனங்களில் ஊழல்கள் மலிந்துவிட்டமை யாலும், திட்டங்களின் குறியிலக்குகளுக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. திட்டங்களின் தோல்விக்கு, நிறைவேற்று வதில் இருந்த குறைபாடுகளே முக்கியக் காரணமாக அமைந்தன.

குறைபாடுகள் இருப்பினும், இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் திட்டங்களை நிறைவேற்றுதல் இன்றியமையாததாகும். திட்டங்களின்றி இன்று நாம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது. தற்பொழுது திட்டங்களின் விளைவால் ஏற்பட்டுள்ள 'பசுமைப் புரட்சி' (Green Revolution) பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமாக அமையுமென்று நம்பலாம். எனினும், 'மின்சார வெட்டினால்' தொழில்துறை உற்பத்தி பாதிக்கப்பட்டமை, நிலக்கரிப் பற்றாக் குறையால் இரயில்வே போக்குவரத்துப் பாதிக்கப்பட்டமை, நீர்ப்பாசன வசதிக் குறைவால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டமை ஆகிய யாவும் திட்டங்களைத் தீட்டுவதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள குறைபாடுகளைத் தெளிவாக விளக்குகின்றன.

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Ability to save | — | சேமிக்கும் திறன் |
| Abstinence | — | துய்ப்புத் தவிர்ப்பு |
| Acquired advantages | — | உருவாக்கப்பெற்ற நன்மைகள் |
| Active partner | — | உழைக்கும் பங்குதாரர்கள் |
| Actual price | — | உண்மையில் கொடுக்க நேர்ந்த விலை |
| Agent | — | பதிலாளர் |
| Agricultural stage | — | வேளாண்மை நிலை |
| Arithmetic method | — | கணித மார்க்கம் |
| Arithmetical ratio | — | கூட்டெண் வீதம் |
| Assumption | — | எடுகோள், அனுமானம் |
| Auxiliary capital | — | துணை மூலதனம் |

## B

| | | |
|---|---|---|
| Balance of payments | — | வெளிநாட்டுச் செலுத்துநிலை |
| Balance of trade | — | வாணிக நிலை |
| Bank | — | வங்கி |
| Bank draft | — | வங்கிப் பேற்றுரிமைச் சீட்டு |
| Bankers | — | வங்கியாளர்கள் |
| Bank money | — | வங்கிப் பணம் |
| Barter system | — | பண்டமாற்று முறை |
| Base year | — | அடிப்படை ஆண்டு |
| Bilateral trade agreements | — | இருமுக வாணிக ஒப்பந்தங்கள் |
| Bill of exchange | — | மாற்று உண்டியல் |

| | | |
|---|---|---|
| Bimetallism | — | இரு உலோக முறை |
| Board of directors | — | இயக்குநர் குழு |
| Bonus | — | மிகையூதியம் |
| Business organisation | — | வாணிக (தொழில்) அமைப்பு |

## C

| | | |
|---|---|---|
| Canons | — | விதிகள் |
| Capital | — | மூலதனம் |
| Capital formation | — | மூலதனத் திரட்சி |
| Capital goods | — | மூலதனப் பொருள்கள் |
| Capital intensive | — | மூலதனம் செறிந்த |
| Capitalism | — | முதலாளித்துவம் |
| Captain of industry | — | தொழில் தலைவர் |
| Cash | — | பணம் |
| Caste panchayats | — | சாதிப் பஞ்சாயத்துகள் |
| Central bank | — | மத்திய வங்கி |
| Changes in demand | — | தேவை மாற்றங்கள் |
| Characteristics | — | இயல்புகள் |
| Cheque | — | காசோலை |
| Circulating capital | — | சுழலும் மூலதனம் |
| Classical economists | — | தொன்மைப் பொருளியலாளர்கள் |
| Clearing house | — | வங்கிகளின் தீர்வகம் |
| Collective wants | — | கூட்டு விருப்பங்கள் |
| Comforts | — | வசதிக்குரியவை |
| Commerce | — | வாணிகவியல் |
| Commercial banks | — | வாணிக வங்கிகள் |
| Commercial services | — | வாணிகப் பணிகள் |
| Commercial stage | — | வாணிக நிலை |
| Commodity money | — | பண்டப் பணம் |
| Communism | — | பொதுவுடைமை |
| Community Development Programme | — | சமுதாய வளர்ச்சித் திட்டம் |
| Comparative advantages | — | ஒப்பீட்டு நன்மைகள் |
| Complex division of labour | — | கலப்புமுறை வேலைப் பகுப்பு |
| Composite demand | — | கலவைத் தேவை |
| Composite supply | — | கலவை அளிப்பு |

| | | |
|---|---|---|
| Consumers' co-operatives | — | நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் |
| Consumers' goods | — | நுகர்வோர் பொருள்கள் |
| Consumers' surplus | — | நுகர்வோர் உபரி, துய்ப்போர் உபரி |
| Consumption | — | நுகர்வு, நுகர்ச்சி, துய்ப்பு |
| Contract | — | ஒப்பந்தம் |
| Contraction of demand | — | தேவைச் சுருக்கம் |
| Conventional necessaries | — | மரபுவழி இன்றியமையாதவை |
| Co-operative Credit Societies | — | கூட்டுறவுக் கடன் சங்கங்கள் |
| Co-operative Farming | — | கூட்டுறவுப் பண்ணை |
| Co-operative Organisation | — | கூட்டுறவு அமைப்பு |
| Corn Law | — | தானியச் சட்டம் |
| Corporation tax | — | தொழில் நிறுவன வரி |
| Cosmopolitan or International Wealth | — | பன்னாட்டுச் செல்வம் |
| Creation of utility | — | பயன்பாட்டை உருவாக்குவது |
| Credit control | — | கடன் கட்டுப்பாடு |
| Credit instruments | — | கடன் கருவிகள் |
| Credit money | — | கடன் பணம் |
| Cross demand | — | குறுக்குத் தேவை |
| Crossed cheque | — | கோடிட்ட காசோலை |
| Cumulative advantages | — | கூட்டு வளர்ச்சி நன்மைகள் |
| Cumulative preference shares | — | குவியும் சலுகைப் பங்குகள் |
| Current deposit | — | நடப்பு வைப்பு |
| Customs duties | — | சுங்கத் தீர்வைகள் |

## D

| | | |
|---|---|---|
| Debenture | — | கடன்பத்திரம் |
| Decentralisation | — | பரவலாக்குதல் |
| Decrease in demand | — | தேவைக் குறைவு |
| Deductive method | — | பகுத்தறி முறை |
| Deferred shares | — | ஒதுக்கப்பட்ட பங்குகள் |
| Deficit financing | — | பற்றுக்குறை நிதியாக்கம் |
| Definition | — | இலக்கணம் |
| Deflation | — | பணவாட்டம், பணவடிப்பு |
| Degree of maladjustment | — | பொருத்தமின்மை வீதம் |

| | | |
|---|---|---|
| Demand | — | தேவை |
| Demand curve | — | தேவை வளைகோடு |
| Demand schedule | — | தேவைப் பட்டியல் |
| Deposits | — | வைப்புநிதிகள் |
| Depreciation | — | மதிப்புக் குறைப்பு |
| Derived demand | — | பிறப்பிக்கப்பட்ட தேவை |
| Desire | — | ஆர்வம், விருப்பம் |
| Devaluation | — | பண மதிப்புக் குறைப்பு |
| Direct demand | — | நேர்முகத் தேவை |
| Direct services | — | நேர்முகப் பணிகள் |
| Discriminating monopoly | — | விலை வேறுபாடு காட்டும் முற்றுரிமை |
| Dismal economist | — | திகைப்பூட்டும் பொருளியலாளர் |
| Disposable income | — | செலவிடத்தக்க வருமானம் |
| Distribution | — | பகிர்வு, பங்கீடு |
| Disutility | — | பயன்பாடின்மை |
| Division of labour | — | வேலைப் பகுப்பு |
| Domestic system | — | இல்ல முறை |
| Double coincidence of wants | — | இருமுனை தேவைப் பொருத்தம் |
| Dumping | — | குவித்தல் |
| Durable goods | — | உறுதியான பொருள்கள் |
| Dynamic economy | — | இயக்கநிலைப் பொருளாதாரம் |

## E

| | | |
|---|---|---|
| Economic goods | — | செல்வப் பொருள்கள் |
| Economic Laws | — | பொருளியல் விதிகள் |
| Economic terms | — | பொருளியற் கலைச்சொற்கள் |
| Economics | — | பொருளியல், பொருளாதாரம் |
| Economist | — | பொருளியலாளர், பொருளிய லறிஞர் |
| Economy | — | சிக்கனம் |
| Effective demand | — | செயல் விளைவுடைய தேவை |
| Efficiency of labour | — | உழைப்பின் திறன் |
| Efforts | — | முயற்சிகள் |
| Elastic demand | — | நெகிழ்ச்சியுடைய தேவை |
| Elasticity greater than unity | — | ஒன்றுக்கு அதிகமான நெகிழ்ச்சி யுள்ள தேவை |

| | | |
|---|---|---|
| Elasticity less than unity | — | ஒன்றுக்குக் குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை |
| Elasticity of demand | — | தேவை நெகிழ்ச்சி |
| Engel's Law of Family Expenditure | — | எங்கெலின் குடும்பச் செலவீட்டு விதி |
| Entrepreneur | — | தொழில் முயல்வோர், தொழில் அமைப்பாளர் |
| Equilibrium | — | சமநிலை |
| Ethics | — | அறநெறியியல் |
| Exceptional demand curves | — | விதிவிலக்குத் தேவை வளை கோடுகள் |
| Exchange | — | மாற்று |
| Excise duty | — | ஆயத் தீர்வை |
| Extension of demand | — | தேவை விரிவு |
| Extensive cultivation | — | பரந்த சாகுபடி முறை |
| External economies | — | புறச் சிக்கனங்கள் |
| Externality | — | பிரிக்கக்கூடிய நிலை |
| Extracting industries | — | எடுப்புத் தொழில்கள், விளைபறி தொழில்கள் |

## F

| | | |
|---|---|---|
| Factory system | — | தொழிற்கூட முறை |
| Fees | — | கட்டணங்கள் |
| Finished products | — | விளை முடிந்த பொருள்கள் |
| Fixed capital | — | நிரந்தர மூலதனம் |
| Fixed deposit | — | நிலை வைப்பு |
| Floating capital | — | அசையும் மூலதனம் |
| Food Corporation of India | — | இந்திய உணவுக் கழகம் |
| Foreign exchange | — | அந்நியச் செலாவணி, அயலகச் செலாவணி |
| Form utility | — | உருவப் பயன்பாடு |
| Free goods | — | இலவசப் பொருள்கள் |
| Free Trade Policy | — | தடையிலா வாணிகக் கொள்கை |
| Functions of money | — | பணத்தின் பணிகள் |

## G

General Theory of Distribution — பகிர்வுப் பொதுக் கோட்பாடு
Geography — புவியியல்
Geometrical ratio — மடிப்பெண் வீதம்
Giffen's paradox — கிஃபெனின் முரண்பாடு
Gloomy prophet — இருட்டுத் தீர்க்கதரிசி
Gold Bullion Standard — பொன்கட்டித் திட்டம்
Gold standard — பொன் திட்டம்
Goods — பண்டங்கள், பொருள்கள்
Grants — கொடைகள், மானியங்கள்
Graphical method — வரைபட மார்க்கம்
Gresham's Law — கிரஷாம் விதி
Great Economic Depression — பொருளாதாரப் பெருமந்தம்
Gross national product — மொத்த தேசிய உற்பத்தி
Guild system — கூட்டுச் சங்க முறை

## H

Handicraft system — கைவினைத் தொழில் முறை
Homogeneous — ஒரே மாதிரியான, ஓரியல்பான
Human welfare — மனித நலன்
Hunting stage — வேட்டை நிலை

## I

Imperfect competition — நிறைகுறைப் போட்டி
Imperfect market — நிறைகுறைச் சந்தை
Income — வருமானம், வருவாய்
Income demand — வருமானத் தேவை
Increase in demand — தேவைப் பெருக்கம்
Index numbers — குறியீட்டு எண்கள்
Indirect taxes — மறைமுக வரிகள்
Individual capital — தனியார் மூலதனம்
Individual demand schedule — தனிநபர் தேவைப் பட்டியல்
ndividual wealth — தனி மனிதனின் செல்வம்
Inductive method — தொகுத்தறி முறை

| | | |
|---|---|---|
| Industrialists | — | தொழிலதிபர்கள் |
| Industrial problems | — | தொழிற் பிரச்சினைகள் |
| Industrial revolution | — | தொழிற்புரட்சி |
| Industrial stage | — | தொழில் நிலை |
| Inelastic demand | — | நெகிழ்ச்சியற்ற தேவை |
| Inflation | — | பணவீக்கம் |
| Innovation | — | புத்தாக்கம் |
| Insurance Company | — | காப்புறுதி நிறுவனம், ஈட்டுறுதி நிறுவனம் |
| Intellectual religion | — | அறிவாற்றல் பெற்ற சமயம் |
| Intensive cultivation | — | செறிந்த சாகுபடி முறை |
| Interest | — | வட்டி |
| Internal economies | — | அகச் சிக்கனங்கள் |
| International division of labour | — | பன்னாட்டு வேலைப் பகுப்பு |
| International market | — | பன்னாட்டுச் சந்தை |
| International trade | — | பன்னாட்டு வாணிகம் |
| Intrinsic value | — | உள்ளார்ந்த மதிப்பு |
| Investment | — | முதலீடு |

## J

| | | |
|---|---|---|
| Joint demand | — | கூட்டுத் தேவை |
| Joint family system | — | கூட்டுக் குடும்ப முறை |
| Joint Stock Company | — | கூட்டுப் பங்கு நிறுவனம் |
| Joint supply | — | கூட்டு அளிப்பு |
| Jurisprudence | — | சட்டவியல் |

## L

| | | |
|---|---|---|
| Labour | — | உழைப்பு |
| Labour economics | — | உழைப்பாளர் பொருளாதாரம் |
| Labour intensive | — | உழைப்புச் செறிந்த |
| Laissez-faire Policy | — | தலையிடாமைக் கொள்கை |
| Land | — | நிலம் |
| Large scale production | — | பேரளவு உற்பத்தி |
| Law of constant returns | — | மாறு வினைவு விதி |
| Law of demands | — | தேவை விதி |

Law of diminishing returns — குறைந்துசெல் விளைவு விதி
Law of diminishing marginal utility — குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
Law of economy of expenditure — செலவுச் சிக்கன விதி
Law of equi-marginal utility — சம இறுதிநிலைப் பயன்பாட்டுவிதி
Law of increasing returns — வளர்ந்துசெல் விளைவு விதி
Law of indifference — சமநோக்கு விதி
Law of maximum satisfaction — உச்சநிலை மொத்தத் திருப்தி விதி
Law of substitution — பதிலீட்டு விதி
Laws of returns — விளைவு விதிகள்
Laws of consumption — நுகர்வு விதிகள்
Legal tender money — சட்டமுறைப் பணம்
Licence — உரிமம்
Limited partner — கடன் பொறுப்பு வரையறுக்கப் பட்ட பங்குதாரர்
Liquidity preference — நீர்மை விருப்பம்
Local market — உள்ளூர்ச் சந்தை
Localisation of industries — தொழில்களின் இடச் செறிவு
Lockout — கதவடைப்பு
Luxuries — ஆடம்பரமானவை

## M

Macro economics — பேரியல் பொருளாதாரம்
Malthusian Theory of Population — மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு
Manager — மேலாளர்
Managing agency system — நிர்வாகப் பதிலாண்மை முறை
Manufacturing industries — தயாரிப்புத் தொழில்கள்
Marginal Productivity Theory — இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு
Marginal unit — இறுதிநிலை அலகு
Marginal utility — இறுதிநிலைப் பயன்பாடு
Market — சந்தை, அங்காடி
Market demand schedule — அங்காடித் தேவைப் பட்டியல்
Material goods — உருவப் பொருள்கள்
Material welfare — பொருள்சார் நலம்

Mathematical economics — கணிதவியல் பொருளாதாரம்
Mathematics — கணிதவியல்
Means — சாதனங்கள்
Medium of exchange — மாற்று இடையீட்டுக் கருவி
Mental labour — மன உழைப்பு, மூளை உழைப்பு
Mercantilists — வாணிகவாதக் கருத்தினர்
Metallic money — உலோகப் பணம்
Middlemen — தரகர்கள், இடைநிலையாளர்கள்
Mixed economy — கலப்புப் பொருளாதாரம்
Mobility of factors of production — ஆக்கக் காரணிகளின் பெயர்ச்சி
Modern Theory of Rent — வாரத்தின் புதுமைக் கோட்பாடு
Monetary standards — நாணயத்திட்டங்கள்
Money income — பண வருமானம்
Money of account — கணக்கீட்டுப் பணம்
Mono-metallism — ஓர் உலோக முறை
Monopolistic competition — முற்றுரிமைப் போட்டி
Monopoly — முற்றுரிமை, சர்வாதீனம்
Museum — அரும்பொருள் காட்சியகம்

## N

National capital — நாட்டு மூலதனம்
National Extension Service — தேசிய விரிவாக்கப் பணி
National income — தேசிய வருமானம், நாட்டு வருமானம்
National market — நாட்டுச் சந்தை
National wealth — நாட்டுச் செல்வம், தேசியச் செல்வம்
Natural advantages — இயற்கை நன்மைகள்
Necessaries of efficiency — திறமைக்கு இன்றியமையாதவை
Necessaries of life — வாழ்க்கைக்கு இன்றியமையாதவை
Negative — எதிர்க்கணியம்
Negotiable — செலாவணித் தன்மையுள்ள
Neo-classical Theory — புதிய தொன்மைக் கோட்பாடு
Net National Income — நிகர தேசிய வருமானம்
Nominal partner — பெயரளவுக் கூட்டாளி
Non-material goods — அருவப் பொருள்கள்

Non-negotiable — செலாவணித் தன்மையற்ற
Non-transferable goods — மாற்ற இயலாத பொருள்கள்
No rent land — வாரம் இல்லாத நிலம்
Normal price — இயல்பு விலை
Normal profit — இயல்பு இலாபம்
Nuclear age — அணு யுகம்

## O

Oligopoly — சிலர் முற்றுரிமை
Optimum Theory of Population — உத்தம அளவு மக்கள்தொகைக் கோட்பாடு
Ordinary shares — சாதாரணப் பங்குகள்
Organisation — அமைப்பு, தொழிலமைப்பு
Other things remaining the same — மற்றவை மாறுமல் இருக்கும் போது
Over population — எச்ச மக்கள்தொகை

## P

Pain economy — கடினநிலைப் பொருளாதாரம்
Paper money — காகிதப் பணம்
Participating preference shares — பங்கு கொள்ளும் சலுகைப் பங்குகள்
Partnership deed — கூட்டு ஒப்பந்தப் பத்திரம்
Partnership firm — கூட்டாளித் தொழில்முறை
Passive factor — செயலற்ற காரணி
Pastoral stage — மேய்ச்சல் நிலை
Patent right — உற்பத்தி செய்யும் உரிமை
Per Capita Income — தலா வருமானம்
Percentage method — சதவீத மார்க்கம்
Perfect competition — நிறைவுப் போட்டி
Perfectly elastic demand — நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவை
Perfectly inelastic demand — முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை
Perfect market — நிறைவுச் சந்தை
Perishable goods — அழியக்கூடிய பொருள்கள்

| | | |
|---|---|---|
| Physical labour | — | உடல் உழைப்பு |
| Place utility | — | இடப் பயன்பாடு |
| Planning | — | திட்டமிடுதல் |
| Pleasure economy | — | மகிழ்வுநிலைப் பொருளாதாரம் |
| Police State | — | காவல் அரசு |
| Political economy | — | அரசியல் பொருளாதாரம் |
| Politics | — | அரசியல் |
| Positive | — | நேர்கணியம் |
| Positive checks | — | இயல்பு தடைகள் |
| Postal order | — | அஞ்சல் ஆணை |
| Potential price | — | தகுவிலை |
| Preference shares | — | சலுகைப் பங்குகள் |
| Preventive checks | — | தவிர்ப்புத் தடைகள் |
| Price demand | — | விலைத் தேவை |
| Price stabilisation | — | விலை நிலைபேறுக்கம் |
| Principles of Economics | — | பொருளாதாரக் கோட்பாடுகள் |
| Private Limited Company | — | பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் |
| Production | — | ஆக்கம், உற்பத்தி |
| Producers' Co-operative Societies | — | உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் |
| Productive labour | — | ஆக்க உழைப்பு |
| Producers' goods | — | உற்பத்தியாளர் பொருள்கள் |
| Profit | — | இலாபம் |
| Progressive taxation | — | வளர்வீத வரிவிதிப்பு |
| Promissory note | — | வாக்குறுதிப் பத்திரம் |
| Proportional taxes | — | வீதாசார வரிகள் |
| Protectionist Policy | — | தொழிற் பாதுகாப்புக் கொள்கை |
| Psychology | — | உளவியல் |
| Public debt | — | பொதுக் கடன் |
| Public expenditure | — | பொதுச் செலவீடு |
| Public finance | — | பொது நிதி |
| Public Limited Company | — | பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் |
| Public revenue | — | பொது வருவாய் |
| Public utility services | — | பொதுப் பயன் பணிகள் |
| Purchasing power | — | வாங்கும் திறன் |
| Pure competition | — | தூய போட்டி |

## Q

| | | |
|---|---|---|
| Quantity Theory of Money | — | பண அளவுக் கோட்பாடு |
| Quasi rent | — | போலி வாரம் |
| Quota | — | பங்களவு |

## R

| | | |
|---|---|---|
| Real income | — | உண்மை வருமானம் |
| Recurring deposit | — | தொடரும் வைப்பு |
| Redeemable preference shares | — | மீட்புச் சலுகைப் பங்குகள் |
| Red tapism | — | சிவப்பு நாடா முறை |
| Reductio ad absurdum | — | தவற்றின் மூலம் உண்மையறிதல் |
| Relative value | — | தராதர மதிப்பு |
| Remunerative capital | — | ஊதியமளிக்கும் மூலதனம் |
| Rent | — | வாரம் |
| Representative money | — | பிரதிப் பணம் |
| Residual Claimant Theory | — | மிச்ச உரிமையர் கோட்பாடு |
| Revenue | — | வருவாய் |
| Risk taker | — | இடர் தாங்குபவர் |

## S

| | | |
|---|---|---|
| Sanction | — | ஒப்பளிப்பு |
| Satisfaction | — | மனநிறைவு |
| Savings bank | — | சேமிப்பு வங்கி |
| Scarcity | — | கிடைப்பருமை |
| Seasonal industry | — | பருவகாலத் தொழில் |
| Selling costs | — | விற்பனைச் செலவுகள் |
| Share holders | — | பங்குதாரர்கள் |
| Share market | — | பங்கு அங்காடி |
| Shares | — | பங்குகள் |
| Silver standard | — | வெள்ளித் திட்டம் |
| Simple division of labour | — | எளிய முறை வேலைப் பகுப்பு |
| Site value | — | இட மதிப்பு |

| | | |
|---|---|---|
| Skilled labour | — | திறமையுடைய உழைப்பு |
| Sleeping partner | — | உழையாப் பங்குதாரர் |
| Small scale production | — | சிற்றளவு உற்பத்தி |
| Socialism | — | சமதர்மம் |
| Social capital | — | சமுதாய மூலதனம் |
| Socialistic Pattern of Society | — | சமதர்ம பாணிச் சமுதாயம் |
| Social wealth | — | சமூகச் செல்வம் |
| Sociology | — | சமூக வாழ்வியல் |
| Sociologist | — | சமூக நலவாதி |
| Sole-proprietorship | — | தனி உரிமைத் தொழில்முறை |
| Special assessments | — | தனித் தீர்வைகள் |
| Speculative trade | — | ஊக வாணிகம் |
| Stages of economic development | — | பொருளாதார வளர்ச்சி நிலைகள் |
| Standard of living | — | வாழ்க்கைத் தரம் |
| State enterprise | — | அரசு நிறுவனம் |
| Statement of tendency | — | போக்குரைக் கூற்று |
| Static economy | — | தேக்க நிலைப் பொருளாதாரம் |
| Statistics | — | புள்ளியியல் |
| Stock | — | இருப்பு |
| Stock market | — | பங்கு அங்காடி |
| Subsistence | — | பராமரிப்பு |
| Substitute | — | பதிலி |
| Sunk capital | — | மீளா மூலதனம் |
| Supply | — | அளிப்பு |
| Surplus | — | எச்சம், உபரி |

## T

| | | |
|---|---|---|
| Tamil Nadu Agro-Industries Corporation | — | தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகம் |
| Tangent method | — | தொடுகோடு மார்க்கம் |
| Tariffs | — | சுங்க வரிகள் |
| Taxation | — | வரிவிதிப்பு |
| Tax holiday | — | வரி விடுமுறை |
| Television | — | தொலைநோக்கி, தொலைக்காட்சி |
| Territorial division of labour | — | வட்டார வேலைப் பகுப்பு |
| Theories of value | — | மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகள் |

| | | |
|---|---|---|
| Theory of comparative cost | — | ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு |
| Time preference | — | கால விருப்பம் |
| Time utility | — | காலப் பயன்பாடு |
| Token money | — | அடையாளப் பணம் |
| Total expenditure (outlay) method | — | மொத்தச் செலவீட்டு மார்க்கம் |
| Total utility | — | மொத்தப் பயன்பாடு |
| Trade cycles | — | வாணிகச் சுழல்கள் |
| Trade depression | — | வாணிக மந்தம் |
| Trade policy | — | வாணிகக் கொள்கை |
| Transaction | — | பேரம் |
| Transferability | — | மாற்றுக்குரிய நிலை |
| Transferable goods | — | மாற்றத்தக்க பொருள்கள் |
| Transfer earning | — | மாற்று வருவாய் |
| Treasury | — | கருவூலம் |

## U

| | | |
|---|---|---|
| Uncertainty-bearing Theory | — | உறுதியின்மை தாங்கு கோட்பாடு |
| Under-population | — | போதா மக்கள்தொகை |
| Unfavourable or adverse balance of trade | — | பாதக வாணிக நிலை |
| Unit elasticity or Unitary elasticity | — | ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவை |
| Unproductive labour | — | ஆக்கமற்ற உழைப்பு |
| Unskilled labour | — | திறமையற்ற உழைப்பு |
| Usefulness | — | பயன் |
| Utility | — | பயன்பாடு |

## V

| | | |
|---|---|---|
| Value | — | மதிப்பு |
| Value-in-exchange | — | மாற்று மதிப்பு |
| Value -in-use | — | பயன் மதிப்பு |
| Vicious circle of poverty | — | வறுமை வட்டம் |

## W

| | | |
|---|---|---|
| Wage | — | கூலி, ஊதியம் |
| Wants | — | விருப்பங்கள் |
| Wealth | — | செல்வம் |
| Wealth of Nations | — | நாடுகளின் செல்வம் |
| Weighted index number | — | நிறையிட்ட குறியீட்டெண் |
| Welfare | — | நலம் |
| Welfare economics | — | நலப் பொருளாதாரம் |
| Welfare State | — | நலம் காக்கும் அரசு |
| Will to save | — | சேமிக்கும் விருப்பம் |
| Working capital | — | பணிசெய் மூலதனம் |
| World Bank | — | உலக வங்கி |